Sri:

Srīmatē Rāmānujāya namaha

Bagavat Vishayam

# TIRUVĀYMOḶI

## ĪṬṬIṆ TAMIḶĀKKAM

VOLUME - V (Hymns 443 - 552)

by

VIDWAN

B. R. PURUSHOTHAMA NAIDU

*Junior Lecturer in Tamil*

UNIVERSITY OF MADRAS.




UNIVERSITY OF MADRAS

1955

Price Rs. 10-0-0

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

பகவத் விஷயம்

# திருவாய்மொழி

## பகுதி - 5. (ஐந்தாம் பத்து)

## ஈட்டின் தமிழாக்கம்

சென்னை

சருவகலாசாலைத் தமிழ் ஜூனியர் லெக்சரர்

வித்வான்

**பு. ரா. புருஷோத்தம நாயடு**

ஆக்கியது.




சென்னைச் சருவகலாசாலை

1955

விலை ரூ. 10-0-0.

ஸ்ரீ:

மாறன் மலரடி வாழ்க.

# இப்புத்தகத்தில் அடங்கியவை

—: o :—


| | | | |
|---|---|---|---|
| 1. | முகவுரை | | |
| 2. | திருவாய்மொழி ஐந்தாம்பத்தின் மூலமும் ஈட்டின் தமிழாக்கமும் | ... | 1 - 458 |
| 3. | முதல் திருவாய்மொழி | ... | 1 - 39 |
| 4. | இரண்டாந் திருவாய்மொழி | ... | 40 - 66 |
| 5. | மூன்றாந் திருவாய்மொழி | ... | 67 - 148 |
| 6. | நான்காந் திருவாய்மொழி | ... | 149 - 196 |
| 7. | ஐந்தாந் திருவாய்மொழி | ... | 197 - 236 |
| 8. | ஆறாந் திருவாய்மொழி | ... | 237 - 267 |
| 9. | ஏழாந் திருவாய்மொழி | ... | 268 - 314 |
| 10. | எட்டாந் திருவாய்மொழி | ... | 315 - 360 |
| 11. | ஒன்பதாந் திருவாய்மொழி | ... | 361 - 407 |
| 12. | பத்தாந் திருவாய்மொழி | ... | 408 - 458 |
| 13. | பிற்சேர்க்கை i. செய்யுள் முதற்குறிப்பகராதி | ... | 459 - 460 |
| 14. | பிற்சேர்க்கை ii. ஐதிஹ்யங்கள் | ... | 461 - 465 |
| 15. | பிற்சேர்க்கை iii. உரைநயங்கள் உள்ள இடங்கள் | ... | 466 - 467 |
| 16. | பிற்சேர்க்கை iv. உவமைகள் | ... | 468 - 476 |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

மாறன் மலரடி வாழ்க

---

# முகவுரை

சித்தர்க்கும் வேதச் சிரந்தெரிக் தோர்கட்கும் செய்தவர்க்கும்
சுத்தர்க்கும் மற்றைத் துறைதுறந் தோர்கட்கும் தொண்டுசெய்யும்
பத்தர்க்கும் ஞானப் பகவர்க்கு மேயன்றிப் பண்டுசென்ற
முத்தர்க்கும் இன்னமு தம் சட கோபன் மொழித்தொகையே.

(கம்பநாடர்.)

திருமகள்கேள்வனை சர்வேசுவரனை மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாருடைய அருளிச்செயலாகிய திருவாய் மொழியின் ஐந்தாம்பத்திற்கு 'ஈட்டின் தமிழாக்கம்' என்னும் பெயரிய உரை எம் குலக்கொழுந்தாகிய ஆழ்வாருடைய திருவருளால் வெளிவருகின்றது. முன்னர் வெளி வந்த முதல் நான்கு பத்துக்களையும் ஏற்ற தமிழுலகம் இதனையும் ஏற்று அடியேற்கு ஊக்கம் அளிக்கும் என்பது அடியேன் எண்ணம்.

இவ்வுரையை எழுதிவந்த காலத்தும் பதிப்பித்த காலத்தும் ஆங்காங்கு வேண்டிய உதவிகளைச் செய்த பெரியார்கட்கும் நண்பர்கட்கும் நன்றி செலுத்துதலையுடையேன்.

இவ்வுரையை, சென்னைப் பல்கலைக் கழகத்தார் அச்சிடுதற்குக் காரணராயிருந்த சொல்லின்செல்வர் தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B.A.,B.L., அவர்கட்கும், தொடர்ச்சியாக வெளியிட்டு உதவிவரும் சென்னைப் பல்கலைக் கழக அதிகாரிகட்கும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

சென்னை,
13-2-1955.

இங்ஙனம்,
பு. ரா. புருஷோத்தம நாயடு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

மாறன் மலரடி வாழ்க.

—(o)—

# திருவாய்மொழி

## ஐந்தாம் பத்து

### முதல் திருவாய்மொழி — "கையார் சக்கரம்"

### முன்னுரை

ஈடு:—[1]முதற் பத்தால், பகவத் கைங்கர்யம் புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால், அந்தக் கைங்கர்யத்தில் களை அறுத்தார்; மூன்றும் பத்தால், களை அறுக்கப் பட்ட அந்தக் கைங்கர்யமானது பாகவத சேஷத்துவ பர்யந்தமான பகவத் கைங்கரியம் என்றார்; நான்காம்பத்தால், இப்படிப்பட்ட கைங்கர்யத்திற்கு விரோதிகள் ஐஸ்வர்ய கைவல்யங்கள் என்றார்; அந்த விரோதிகளைப் போக்குவானும் அவனே என்கிறார் இவ் வைந்தாம் பத்தால்.

[2]"நண்ணாதார் முறுவலிப்ப" என்ற திருவாய்மொழியிலே சம்சாரிகள் படுகிற துக்கத்தை அநுசந்தித்து, அதற்குப் பரிஹாரமாக, 'பகவானுடைய பரத்துவ ஞானத்தை உண்டாக்குவோம்' என்று பகவானுடைய பரத்துவத்தை உபதேசித்தார் மேல் திருவாய்மொழியிலே; இரண்டு கிட்டம் தம்மிலே சேரக் கிடக்க அவற்றிலே ஒன்று பொன்னாய் இருக்குமாறு

---

1. முதல் ஐந்து பத்துக்களுக்கும் பொருள் இயைபு அருளிச்செய்கிறார் 'முதற்பத்தால்' என்று தொடங்கி.

2. மேல் திருவாய்மொழிக்கும், இத் திருவாய்மொழிக்கும் பொருள் இயைபு அருளிச்செய்கிறார் 'நண்ணாதார்' என்றது முதல், 'என்கிறார் இத்திருவாய்மொழியில்' என்றது முடிய, கிட்டம் - உலோகத் தண்டு.

போலே அவர்களிலே ஒருவராக இருக்கிற தாம், அவர்களை யும் திருத்தும்படி தமக்குப் பிறந்த நன்மைக்கு 'அடி என்?' என்று பார்த்து, அதற்குக் காரணம் தம்பக்கல் ஒன்றும் காணுமையாலே தன்னுடைய[1] நிர்ஹேதுகமான கிருபையாலே செய்தானத்தனை என்கிறார் இத் திருவாய்மொழியில். என் றது, [2] 'அநாதிகாலம் பிறந்து இறந்து புத்தி பூர்வம் விரும்பு வது ஐம்புல இன்பங்களையேயாய், தன்பக்கல் எனக்குள்ளது மனத்தொடு படாத வார்த்தைகளேயாயிருக்க, நான் புத்தி பூர்வம் செய்து போந்த பிராதிகூல்யங்களை மறந்து, ஞானம் பிறந்த பின்பு என்னை அறியாமலே செய்து போந்தவற்றில் அஜ்ஞனாய், என்னை இவ்வளவாக அங்கீகரித்தான்; பிறரை யும் யான் திருத்த வல்லேனும்படி செய்தான்' என்று தாம் பெற்ற பேற்றின் கனத்தைச் சொல்லி ஈடுபட்டு அநுபவிக் கிறார் என்றபடி.

[3] பகவானுடைய பரத்துவ ஞானத்தைத் தம் நெஞ்சிலே படுத்தினபடியையும், அதற்கு உறுப்பாய் இருப்பது ஒரு நன்மை தமக்கு இன்றிக்கே இருந்தபடியையும், அநாதிகாலம் தாம் விபரீதங்களையே செய்து போந்தபடியையும், புருஷார்த்

---

1. இத்திருவாய்மொழியில் வருகின்ற "விதிவாய்க்கின்று காப்பார் ஆர்?" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'நிர்ஹேதுகமான' என்கிறார்.

2. 'நிர்ஹேதுகம்' என்றால், எல்லார்க்கும் இத் திருவருள் கூட வேண்டுமே யன்றோ? அங்ஙனம் இல்லை ஆதலின், ஒரு காரணம் பற்றியே கிருபை செய்தான் என்று கொண்டால் என்னை? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநாதி காலம்' என்று தொடங்கி. "பொய்யே கைம்மை சொல்லி" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தன் பக்கல் எனக்குள்ளது மனத்தொடு படாத வார்த்தைகளேயாயிருக்க என்றும், "அவன் என்னுகி ஒழிந்தான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நான் புத்தி பூர்வம்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். 'ஞானம் பிறந்த பின்பு என்னை அறியா மலே செய்து போந்தவற்றில் அஜ்ஞனாய்' என்றது, "காப்பாரார்" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி. "மெய்யே பெற்றொழிந்தேன்" என்றத னைத் திருவுள்ளம்பற்றித் 'தாம்பெற்ற பேற்றின் கனத்தைச் சொல்லி' என் கிறார்.

3. இத்திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருள்களை விவரிக்கிறார் 'பகவானுடைய' என்று தொடங்கி. "கையார் சக்கரத்து", "அம்மான் ஆழிப்பிரான்" என்ற பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றிப் 'பகவானுடைய பரத்துவ ஞானத்தை' என்று தொடங்கியும், "பொய்யே கைம்மை சொல்லி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அதற்கு உறுப்பாய்' என்று தொடங்கியும், "புறமே புறமே ஆடி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அநாதிகாலம்' என்று

தத்திற்கு உபாயமாகச் சொல்லுகிறவற்றில் தாம் ஒன்றும் கனக்கண்டு அறியாதே இருக்கிறபடியையும், 'புருஷார்த்தம் வேணும்' என்னும் நினைவும் இன்றிக்கே இருந்த படியையும், சம்சாரத்திலே தரைகாண ஒண்ணாதபடி ஆழ்ந்து நோவுபடாகிறகச் செய்தே 'நோவுபடாநின்றோம்' என்று அறிவிக்கவும் மாட்டாதே உணர்த்தி அற்று இருக்கிறபடியையும், அமுதம் இருக்க விஷத்தை விரும்புவாரைப் போலே ஆராவமுதை விட்டு இனிய அமுதம் என்னும்படி இனியபொருளாகத் தோன்றின ஐம்புல இன்பங்களை விரும்பிப் போந்தபடியையும், அதற்கு மேலே அவன் பக்கல் இச்சை இன்றிக்கே இருக்க அவனை உகந்தார் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லிப் போந்த படிகளையும் நினைத்து, இப்படி எல்லாவகைகளாலும் தண்ணியேனாய் இருக்கிற என்னை, அவற்றுள் ஒன்றனையும் பாராமல், 'தான் சர்வசேஷி' என்னுமிடத்தையும் 'தன் திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம்' என்னுமிடத்தையும் என் நெஞ்சிலே படுத்தி என்பக்கலிலே ஆராக் காதலனாய் என்னோடே வந்து கலந்தான் என்று தாம் பெற்ற பேற்றினைச் சொல்லிப் பேருவகையர் ஆகிறார்.

---

தொடங்கியும், "நின்கண் நெருங்கவைத்தே எனதாவியை நீக்க கில்லேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'புருஷார்த்தத்திற்கு' என்று தொடங்கியும், "நாவாய்போல்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'புருஷார்த்தம் வேணும்' என்று தொடங்கியும், "அலை நீர்த் கடலுள் அழுந்தும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிச் 'சம்சாரத்திலே' என்று தொடங்கியும், "உள்ளன மற்றுளவா" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அமுதம் இருக்க' என்று தொடங்கியும், "போனாய் மாமருது" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அதற்கு மேலே' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். 'தான் சர்வசேஷி' என்றது, "அம்மான் ஆழிப்பிரான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. "உய்ந்தொழிந்தேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தன் திருவடிகளில்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "அடியேனெனும் ஆனேன்", "என்னை முற்றவும் தானனான்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி 'ஆராக் காதலனாய்' என்கிறார்.

'நான் புத்தி பூர்வமாகச் செய்து போந்த பிராதிகூல்யங்களை மறந்து' என்றது, (மேலே, பக்கம் - 2. வரி - 8.) மறக்காவிட்டால், "அடியேனெனும் ஆனேன்" என்னக் கூடாமையாலே, 'மறந்து' என்பது பொருளாற்றலால் போதரும். பிராதி கூல்யங்கள் - தீய செயல்கள்.

## 443.

கையார் சக்கரத்துளென் கருமா ணிக்கமே! என்றென்று
பொய்யே கைம்மை சொல்லிப் புறமேபுற மே ஆடி
மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க் கின்று காப்பார்ஆர்?
ஐயோ! கண்ண பிரா அன்! அறையோ! இனிப் போனலே.

**பொழிப்புரை:**—கையிலே பொருந்திய சக்கரத்தையுடைய என் கருமாணிக்கமே! கண்ணபிரானே! என்று என்று மிக்க பொய்யைச் சொல்லி, புறவிஷயங்களிலே மூழ்கி, உண்மையான பேற்றினைப் பெற்று விட்டேன்; உன்னுடைய திருவருள் கிடைக்கின்ற காலத்தில் அதனைத் தடைசெய்வார் யாவர்? ஐயோ! இனிப் போவாயேயானால் அறையோ! என்கிறார்.

**விசேடக் குறிப்பு:**—கைம்மை - பொய். ஆடி - விளையாடி. மூழ்கி என்ன வுமாம். பெற்றொழிந்தேன்: ஒருசொல். வாய்க்கின்று - வாய்க்குமிடத்து. இது, வினையெச்சம்.

இத்திருவாய்மொழி, கலிநிலைத் துறை.

**ஈடு:**—மூதற்பாட்டு. [1]என் பக்கல் உள்ளது மனத்தொடு படாத வார்த்தையாக இருக்க, இதனை மனத்தொடு பட்டு வந்த வார்த்தையாகக் கொண்டு விரும்பி, 'இனி, இதற்கு அவ்வருகு இல்லை' என்னும்படியான பேற்றினைச் செய்து கொடுத்தான் என்கிறார்.

கையார் சக்கரத்து - [2]வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியான கையிலே திருவாழியைத் தரித்தானயிற்று. [3]இதுதான் ஆபரணமுமாய் வினைத்தலையில் ஆயுதமுமாய் அன்றே இருப்பது. ஒரு கைக்குப் படையாய் இருக்குமே

---

1. திருப்பாசுரத்தில், "பொய்யே கைம்மை சொல்லி", "மெய்யே பெற்றொழிந்தேன்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஆர் கை சக்கரம்" என்று கூட்டி 'வெறும் புறத்திலே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். ஆர் - அழகு.

3. திருவாழி, மனத்தினைக் கவரக் கூடியதாக இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. வினைத் தலை - போர் செய்யுமிடம். கை என்பது, சிலேடை: கையும், போரும். படை என்பதும், சிலேடை: ஆபரணமும், சேனையும், ஆயுதமும். திருவாழி,

யன்றே. "கூரார் ஆழி வெண்சங்கு ஏந்தி, வாராய்" என்று அநுகூலர்க்கு ஆசைப்படுகைக்கு உடலாய், விரோதிகளைத் துணிக்கைக்கும் உடலாய் ஆயிற்று இருப்பது. [1] 'சக்கரத்து' என்றவிடத்து 'அத்து' என்பது, சாரியை இடைச்சொல். மேல் வரும் இடங்களில் எல்லாம் இப்படியே கண்டுகொள்வது. என் கரு மாணிக்கமே - சிரமஹரமாய் நீலரத்தினம்போலே பெருவிலையனை வடிவழகை எனக்கு முற்றூட்டு ஆக்கினவனே! [2] கையும் திருவாழியுமான அழகை நினைத்தால் அடைவே ஸ்ரீ பாஞ்சஜன்யத்தை நினைக்கவல்லர் அல்லரே, பின்னர் வடிவழகிலே கால்தாழ்ந்தார். [3] படி கடந்து அவ்வருகு போமவர் அல்லரே. என்று என்று - இதனை ஒருகால் சொல்லித்தான் விட்டேனே. [4] பகவத் விஷயத்தில் உட்புக்கது எல்லாம் குற்றமாய்த் தோற்றுகிறதாயிற்று; 'போராது' என்று இருக்கையாலே. இது பொல்லாததாய் இருந்தது இல்லையே! என்ன, அழகேயன்றே, பாவபந்தத்தோடு சொன்னேனுகில். பொய்யே கைம்மை சொல்லி - பொய் என்பதும், கைம்மை என்பதும் ஒருபொருட்சொற்கள். இதனால் என் சொல்லிய வாறே? எனின், பிறரை வஞ்சித்தல் அன்றிக்கே, முற்றறிவினனை சர்வேசுவரனும் '**இது மெய்**' என்று பிரமிக்கும்படி பெரும் பொய்யை அன்றே சொல்லிற்று என்றபடி. பொய்யும் மெய்யுமாகக் கலந்துதான் சொன்னேனே என்பார் '**பொய்யே**' எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்து ஓதுகிறார்.

---

ஆபரணமுமாய் ஆயுதமுமாய் இருப்பதற்கு மேற்கோள், "கூரார்" என்று தொடங்கும் பாசுரம். இது, திருவாய்மொழி. 6. 9 : 1.

1. "மலீகான் புள்ளிமுன் அத்தே சாரியை" என்பது, தொல்காப்பியம்.

2. திருவாழியாழ்வானைக் கூறியபின், ஸ்ரீ பாஞ்ச சன்னியத்தைக் கூறுது ஒழிந்தது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கையும் திருவாழியுமான' என்று தொடங்கி. என்றது, "சக்கரத் தண்ணலே" என்றல், தாழுமவர் ஆகையாலே என்றபடி.

3. படி என்றது, சிலேடை : திருமேனியும், வாசற்படியும்.

4. பகவானைப் பலகாலும் சொல்லுவது நல்லது அன்றே? அப்படியிருக்க, 'இதனை ஒருகால் சொல்லித்தான் விட்டேனே?' என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகவத் விஷயத்தில்' என்று தொடங்கி. 'போராது' என்றது, அன்பு போராது என்றபடி.

புறமே புறமே ஆடி - இப்போது 'புறம்' என்கிறது, ஐம்புல இன்பங்களை.[1] 'பகவத் விஷயத்தில் இறங்கியது போராது' என்று இதனைப் 'பொய்' என்னுமிற்கச் செய்தே யும், ஐம்புல இன்பங்கள் புறம்பாய்த் தோற்றுகின்றன ஆயிற்று இவர்க்கு; "பாவியேனைப் பல நீ காட்டிப் படுப் பாயோ" என்னுமவரேயன்றே.[2] ஜாதி, உருவங்கள்தோறும் நிறைந்து இருக்குமாறுபோலே ஆயிற்று விஷயங்கள்தோ றும் தனித்தனியே கால்தாழ்ந்தபடி.[3] இது தான் எப்பொ ழுதை நிலையைப் பற்றச் சொல்லுகிறார்? என்னில், முக்கா லத்தில் உள்ளவையும் சம காலத்தில் போலே தோற்றுகை யாலே, சென்ற பிறவிகளில் நிகழ்ந்தனவற்றை நோக்கிச் சொல்லுகிறார் என்னவுமாம்; மயர்வு அற மதிநலம் பெற்ற பின்பும் தமக்கு விஷயத்திற்குத் தகுதியாகப் போராமை யாலே சொல்லுகிறார் ஆகவுமாம். 'உம்முடைய நிலை இதுவா கில் பேறு இருந்தபடி என்?' என்ன, அருளிச்செய்கிறார் மேல்: மெய்யே - என்பக்கல் உள்ளவை பொய்யே ஆயினும் போலே, அவன் அடியாக வந்தது ஆகையாலே மெய்யேயாய் இருக்குமே அன்றே. பேற்றில் கண்ணழிவு சொல்லலாவது இல்லை என்றபடி. பெற்றெழிந்தேன் -[4] பரமபதத்து ஏறப் போனாலும் இப்பேற்றினை அசையிட்டு இருக்குமத்தனை. என் றது, இனி, இதனைக்காட்டிலும் ஏற்றம் செய்யலாவது இல்லை

---

1. 'பகவத் விஷயத்தில் இறங்கியது போராது என்று' என்று தம் முடைய தோஷத்தைச் சொல்லா நிற்க, "புறமே புறமே" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகவத் விஷயத்தில்' என்று தொடங்கி. 'இவர்க்கு' என்றதன் கருத்தை அருளிச்செய்கிறார் 'பாவியேனை' என்று தொடங்கி. இது, திருவாய். 6. 9: 9. இங்ஙனம் கூறுதற்குக் காரண ணம், இவர்தம் தன்மையே எனக் கொள்க.

2. "புறமே புறமே" என்ற ஏகாரத்தோடு கூடிய அடுக்குத் தொட ருக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஜாதி' என்று தொடங்கி.

3. இதுதான் இப்போது இல்லையே? என்னுமதனைச் சங்கித்து, அதற்கு இரண்டு வகையாக விடை அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. 'இதுதான்' என்றது, புறமே புறமே ஆடுதலை. 'போராமை யாலே' என்றது, அன்பு போராமையாலே என்றபடி.

4. "பெற்றெழிந்தேன்" என்பான் என்? பரமபதம் பெறுதல் வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பரமபதத்து ஏறப் போனாலும்' என்று தொடங்கி.

என்றபடி. [1] 'காரணம் இல்லை' என்னுமின்றீர், பேறு கனத் திருந்தது; இதற்கு அடி என்? என்ன, விதிவாய்க்கின்று - பகவானுடைய கிருபை கரைபுரளப் பெருகாநின்றால் நம்மாற் செய்யலாவது உண்டோ? 'விதி' என்கிறது, பகவானுடைய கிருபையை. "கேசவன்தமர்" என்னும் திருவாய்மொழிக்கு [2] இப்பால் எல்லாம் இவர், 'விதி' என்கிறது, பகவானுடைய கிருபையை. [3] கிருபையை 'விதி' என்பதற்கு அடி, அவனால் தப்ப ஒண்ணாதபடி இருக்கையாலே. வாய்க்கின்று - பகவானுடைய கிருபை ஈச்வரனுடைய ஸ்வாதந்திரியமாகிற கரை புரளப் பெருகி வந்து கிட்டுமிடத்தில். காப்பார் ஆர்-இதனைத் தடை செய்வார் ஆவார் உளரோ? [4] இரண்டு சேதநராலும் தடைசெய்யப்போகாது என்பார் 'காப்பது எது?' என்னாமல், 'காப்பார் ஆர்?' என்கிறார். என்றது, பரதந்திரனை இவனாலும் தகைய ஒண்ணாது, ஸ்வதந்திரனை அவனாலும் தகைய ஒண்ணாது; பலத்தை அநுபவிக்கிற இவனாலும் தகைய ஒண்ணாது, பலத்தைக் கொடுக்கிற அவனாலும் தகைய ஒண்ணாது என்றபடி. [5] அன்றிக்கே, காப்பார் ஆர் என்பதற்கு, கிருபை

---

1. 'காரணம் இல்லை' என்றது, "பொய்யே கைம்மை சொல்லி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. 'இப்பால் எல்லாம்' என்றது, "என்று மொன்றுகி" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி. இப்பால் - இப்பக்கம்.

3. பகவத் கிருபையை "விதி" என்றதற்குக் காரணம் என்? என்ன' அதற்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'கிருபையை' என்று தொடங்கி.

4. "காப்பார் ஆர்?" என்றதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். கர்மத்தோடு கூடின சேதநராலும் ஸ்வாதந்திர்யத்தை யுடைய ஈசுவரனாலும் தகையப்போகாது என்பது முதற்பொருள். அதனை அருளிச்செய்கிறார் 'இரண்டு சேதநராலும்' என்று தொடங்கி. 'பரதந்திரனை' என்றது, கர்மங்கட்குப் பாதந்திரப்பட்டவனை என்றபடி. 'ஸ்வதந்திரனை' என்றது, 'கர்மங்கட்குத் தகுதியாகவே நிர்வஹிக்கக் கடவேன்' என்னும் ஸ்வதந்திரத்தை யுடைய ஈசுவரனாலும் என்றபடி. முதற் பொருளுக்குக் கருத்து, அவனுடைய கிருபையை அண்டை கொண்ட பலத்தால் கூறுகிறார் என்பது.

5. "காப்பார் ஆர்" என்றதற்கு, இரண்டாவது பொருள்: இதற்குக் கிருஷி செய்தவர்கள் தகைவர்களோ? என்பது. இதனை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. "நகச்சித் நபராத்யதி - குற்றம் செய்யாதார் ஒருவருமிலர்" என்கிறபடியே, கிருபை புண்டாவதற்குக் காரணா

உண்டாவதற்குக் காரணமான் பிராட்டி காக்கவோ? கிருபைக்குப் பரதந்திரப்பட்டவனை நீ காக்கவோ? கிருபைக்குப் பாத்திரமான நான் காக்கவோ? என்று பொருள்கோடலுமாம். [1] "மித்ரபாவேந" என்கிற சுலோகத்திலே, எம்பார், **'சர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞானமும் மறதியும், சர்வசக்திக்கு ஒரு அசக்தியும் உண்டு'** என்று அருளிச்செய்வர். ஒருவன், தன்னை அடைந்தால், முன்பு புத்தி பூர்வம் பண்ணிப் போந்த குற்றங்களிலே மறதி, ஞானம் பிறந்த பின்பு தன்னை அறியாமலே வரும் குற்றங்களில் அஜ்ஞானம், அவனை விடவேண்டி வருமளவிலே அசக்தி. இப்படி இருக்கைக்குக் காரணம், [2] இயல்பிலே அமைந்த குடல் தொடக்கு.

'ஆர்' என்பான் என்? ஸ்வதந்திரனை என்னல் தகையத் தட்டு என்? என்ன, ஐயோ! - ஆமாகில் செய்து பார்த்துக் காணுய். 'ஐயோ!' என்பது, உவப்பின் மிகுதியினலே சொல்லும் சொல். கண்ணபிரான் - உபகார சீலனை கிருஷ்ணனே! [3] ஒரு தாயினுடைய மெய்க்குப் போகமாட்டாத

---

மான பிராட்டி காக்கவோ? 'தாமரையாளாகிலும் சிதகு உரைக்குமேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்வர்" என்கிறபடியே, கிருபைக்குப் பரதந்திரனை நீ காக்கவோ? "கிருபயா பர்ய பாலயத் - கிருபையாலே காப்பாற்றினன்" என்கிறபடியே, கிருபைக்குப் பாத்திரமான நான் காக்கவோ? என்றபடி.

1. இப்போது கிருபா பரதந்திரனுய் இருந்தானேயாகிலும், சர்வஜ்ஞன் சர்வசக்தி அலனே, அபராதங்கட்குத் தகுதியாக அவற்றின் காரியங்களும் பிறவாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "மித்ரபாவேந" என்று தொடங்கி.

"மித்ரபாவேந சம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் சதாமேத தகர்ஹிதம்"

என்பது, ஸ்ரீராமா. யுத். 18: 3. இந்தச் சுலோகத்தில் உள்ள "தோஷோ யத்யபி" என்றதனை நோக்கி 'அஜ்ஞானமும் மறதியும்' என்றும், "கதஞ்சந நத்யஜேயம்" என்றதனை நோக்கிச் 'சர்வசக்திக்கு ஒரு அசக்தியும் உண்டு' என்றும் அருளிச்செய்கிறார்.

2. 'இயல்பிலே அமைந்த குடல் தொடக்கு' என்றது, நாராயண பதத்தால் கூறப்படுகின்ற சம்பந்தத்தைத் திருவுள்ளம்பற்றி.

3. "கண்ணபிரான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு தாயினுடைய' என்று தொடங்கி. என்றது, ஒரு தாயினுடைய சரீர சம்பந்தம் அடியான அன்புக்கு விட்டுப் போகாத நீயோ என் மனத்தொடு படாத சொற்களுக்கு விட்டுப் போகப் புகுகிறுய் என்றபடி. ஆர்ஜவமான - நேர்மையான,

நீயோ என்னுடைய பொய்க்குப் போகப் புகுகிறாய், ஓர் ஆய்ச்சி கையிலே கட்டுண்ட நிலையிலே அந்தத் தனியினின்றும் தப்ப விரகு அறியாதே சக்தியும் இன்றிக்கே இருந்த நீயோ போகப் புகுகிறாய்? ஆர்ஜவமான கட்டை அவிழ்க்க மாட்டாதவன் பொய்யான பந்தத்தை அவிழ்க்கமாட்டான் என்றபடி. இனிப் போனால் அறையோ - இனிப்போனாயாகில் அறையோ அறை. [1] என்பக்கலிலே 'மெய்' என்று பெயர் இடலாவது ஒரு பொய் பெற்ற பின்பு போனாயாகில் அறையோ அறை. [2] பகவானுடைய திருவையைப் பக்கபலமாகக் கொண்டு ஈசுவரனுடைய ஸ்வாதந்திரியத்தை அறைகூவுகிறார். 'கண்ணபிரான்' என்பது, விளிப்பெயர். அன்றிக்கே, கண்ணபிரானனவன் இனிப்போனால் அறையோ அறை என்று பொருள்கொண்டு முன்னிலைப் படர்க்கையாகக் கோடலுமாம். (1)

**444.**

**போனாய்! மாமருதின் நடுவே என்பொல் லா மணியே!**
**தேனே! இன்னமுதே! என்றேன் றேசில கூத்துச்சொல்லத்**
**தானேல் எம்பெருமான் அவன் என் ஞகி ஒழிந்தான்**
**வானே மாநிலமே மற்றும் முற்றும் என் னுள்ளனவே.**

**பொ - ரை**:—பெரிய இரட்டை மருதமரங்களின் நடுவே போனவனே! தவாரம் செய்யப்படாத என் மாணிக்கமே! தேனே! இனிய அமுதமே! என்று என்று சில கூத்துக்களைச் சொன்னேன்; சொல்ல, எம்பெருமானாகிய அவன்தான் செய்தபடி என்? என்னில், அவன், நான் இட்டவழக்கு ஆனான்; ஆகாயம் என்ன, பூமி என்ன, மற்றுமுள்ள பூதங்கள் என்ன, இவை எல்லாம் என்பக்கலிலே ஆய்விட்டன.

---

1. "இனி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்பக்கலிலே' என்று தொடங்கி. 'மெய் என்று பெயரிடலாவது ஒரு பொய்' என்றது, ஈசுவரன் நினைவாலே. "அறை" என்பது, வென்றவன் சொல்லும் வார்த்தை என்பர் அரும்பத உரைகாரர்.

"நிறையோத நீர் நின்று நீடவமே செய்யினும் வாழி நீலம்
அறையோ அரிவை வரிநெடுங்கண் ஒக்கிலையால் வாழிநீலம்"

என்பது சிந். 2514.

2. ஸ்வதந்திரனை ஈசுவரனை இப்படி அறை கூவுவது எதனைக் கொண்டு? என்ன, 'பகவானுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வி - சூ :—பொல்லல் - தொலைசெய்தல். கூத்து - ஒருவர்செயலை மற்றொருவர் அநுகரித்தல். பொய் என்னலுமாம். பன்னீராயிரப்படி உரைகாரர் 'கூற்று' என்ற பாடத்தைக் கொண்டுள்ளார்.

ஈடு :—இரண்டாம்பாட்டு. [1] அஸ்த்தானே பயசங்கிகள் சொல்லும் வார்த்தையை நான் மனத்தொடு படாமலே சொல்ல, மூற்றறிவினனை சர்வேசுவரன் அதனை மெய்யாகக் கொண்டு தன் விபூதியோடேகூட நான் இட்டவழக்கு ஆனேன் என்கிறார்.

மா மருதின் நடுவே போனாய் - [2] அப்போது கண்டு நின்ற யசோதைப்பிராட்டியானவள், இரட்டைமருதமரங்கள் நடுவே அவன் போனபடியைக் கண்டு பாவபந்தம் தோற்றச் சொன்ன வார்த்தையை அது இல்லாத நான் சொன்னேன். [3] தெளிந்த ஞானத்தாலே, 'இறந்தகாலம்' என்று இவர்க்குத்

---

1. அஸ்த்தானே பயசங்கிகள் - பயப்படவேண்டாத இடத்திலும் அச்சத்தாலே சங்கை கொள்ளுகின்றவர்கள். சங்கை - ஐயம். அஸ்த்தானே பய சங்கை பண்ணுமவர்கள் என்பதற்கு,

> உறகல் உறகல் உறகல் ஒண்சுடர் ஆழியே ! சங்கே !
> அறவெறி நாந்தக வாளே ! அழகிய சார்ங்கமே ! தண்டே !
> இறவு படாமல் இருந்த எண்மர் உலோக பாலீர்காள் !
> பறவை அரையா ! உறகல் பள்ளியறை குறிக்கொண்மின்.

என்ற பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தைப் பிரமாணமாகக் கொள்க. ஈசுவர விஷயத்தில் தமக்கு அன்பு போராமையாலே, பயப்படவேண்டிய இடத்திலே பயத்தால் சங்கை கொண்ட யசோதைப் பிராட்டியை இங்கு 'அஸ்த்தானே பய சங்கியை' என்கிறார்.

"சில கூத்துச் சொல்ல" என்றதனை நோக்கி, 'மனத்தொடு படாமலே சொல்ல' என்றும், "தானேல் எம்பெருமான்" என்றதனை நோக்கி, 'மூற்றறிவினனை சர்வேசுவரன்' என்றும், "வானே மாநிலமே" என்பன முதலானவைகளை நோக்கி, 'தன் விபூதியோடே' என்றும், "என்னுகி" என்றதனை நோக்கி, 'நான் இட்ட வழக்கானேன்' என்றும் அருளிச்செய்கிறார்.

2. அப்போது - மருதின் நடுவே போனபோது.

3. அப்பொழுது அண்மையிலிருந்து கண்ட யசோதைப் பிராட்டி சொன்ன வார்த்தையைப் பிற்காலத்தவரான இவர் "போனாய்" என்று சொல்லுவது எப்படி ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தெளிந்த ஞானத்தாலே' என்று தொடங்கி.

தோற்றுகிறது இல்லையாயிற்று. [1] சர்வேசுவரன் செய்து கொடுத்த தெளிந்த ஞானம் வயிறு எரிகைக்கு உடலாய் விட்டதித்தனே. பெரிய வடிவுகளையுடைய அசுரர்கள் மரங்களாய் நின்றார்கள் ஆதலின் 'மா மருது' என்கிறார். [2] இவனுடைய இளமையை அறிந்து, பெருத்துத் தடித்துக் காட்சிக்கு இனிய வேஷத்தோடே ஆயிற்று இருவரும் கிருதசங்கேதராய்ச் சிறிதும் வெளி இடம் இல்லாதவாறு நின்றபடி. [3] ஒன்றிலே வெளிகண்டு போனற்போலே போனன் ஆதலின் 'நடுவே' என்கிறார். [4] "மருத மருதங்களின் நடுவே சென்றார்" என்ற ஆபத்தை ஆயிற்றுச் சொல்லுகிறது. என் பொல்லா மணியே- [5] "அதன்பின் கடகட என்ற ஓசையைக் கேட்டுப் பரவசத்தை அடைந்த ஆயர்கள் அங்கு வந்தார்கள்", "தாமரைக் கண்ணனை அந்தக் கண்ணபிரானும் சென்றார்" என்கிறபடியே, இவற்றைத் தப்பிப்போய், முறிந்து விழுகிற ஓசையைக்கேட்டு முன்பு இல்லாததனைக் காணும் காட்சியாலே சிவந்து மலர்ந்த

---

1. அங்ஙனமாயின், அநுபவிக்கலாமே? எனின், 'சர்வேசுவரன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஆக, இதனால், தெளிந்த ஞானத்தாலே சமகாலம் போன்று தோற்றி வயிறு எரிகைக்குக் காரணமான தன்மை தமக்கு உண்டாயிருக்கவும், தம்முடைய நைச்சியஅநுசந்தானத்தாலே தமக்கு அன்பு இல்லை என்று அருளிச்செய்கிறார் என்று கொள்க.

2. அசுரர்கள் மருத மரங்களாக நின்றது எதற்கு? என்ன, 'இவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். கிருதசங்கேதர் - தாங்கள் நினைத்த காரியத்தைச் செய்வதில் ஒற்றுமைப்பட்ட உணர்ச்சியை யுடையவர்கள்.

3. "மருது" என்று ஒருமையிலே அருளிச்செய்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஒன்றிலே' என்று தொடங்கி.

4. நடுவே செல்லுதல் ஆபத்திற்குக் காரணம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மருத மரங்கள்' என்று தொடங்கி.

"வியக்ராயாம் அத தஸ்யாம் ஸ கர்ஷமாண உலூகலம்
யமளார்ஜுந யோர்மத்யே ஜகாம கமலேக்ஷண:"

அந்த யசோதை வீட்டுக் காரியத்தில் நினைவுடனிருக்கும்போது தாமரைக் கண்ணனை அந்தக் கிருஷ்ணன் உரலை இழுத்துக்கொண்டு மருத மரங்களின் நடுவே சென்றார் என்பது இதன் பிண்டப் பொருள். இது, விஷ்ணு புரா. 5. 6: 16.

5. "ததஸ்தடதடா சப்த சமாகர்ணந தத்பர:
ஆஜகாம விரஜஜோ தத்ருசே ச மஹாத்ருமௌ"

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 6; 18.

கண்களும் தானுமாய் இருக்கிறபடி. [1] "புணர் மருதம் இற நடந்த பொற்குன்றினே" என்னக்கடவதன்றே. அழகிது என்னில், நாட்டில் உள்ள அழகைப்போன்றது ஆம் என்று நினைத்து, வேறுபாடு தோன்ற **'பொல்லா மணியே!'** என்கிறார் என்னுதல். அன்றிக்கே, நாட்டார் கண்டு கண்ணைச்சில் படாமைக்குக் கரிபூசுகிறார் என்னுதல். அன்றிக்கே, தொலையாதமணி; அதாவது, பிறரால் அநுபவிக்கப்படாத மணி என்னுதல். பொல்லல் - தொலைத்தல். இதுவும் யசோதைப் பிராட்டி, அருகில் நின்று சொன்னவார்த்தை.

தேனே - வந்து எடுத்துக்கொண்ட காலத்தில் ஸ்பரிசத்தாலும் மழலைச்சொற்களாலும் கொண்டாடிச் சொல்லும் வார்த்தை. இன் அமுதே - அப்போதையில் இனிமையாலே சொன்ன வார்த்தை. ஆக, தேனே! இன் அமுதே! என்னும் இவை இரண்டாலும் [2] நிரதிசய போக்யமாய், போன உயிரை மீட்கவற்றாய் இருக்கையைத் தெரிவித்தபடி. "அமுது என்றும் தேன் என்றும் ஆழியான் என்றும்" என்று சொல்லுகிறபடியே, நிரவதிக போக்கியமாயிருக்கை. என்று என்றே - ஒருகால் சொல்லி, 'தப்பச் செய்தோம்' என்று மீளத்தான் செய்தேனே என்பார் **'என்று என்று'** என்கிறார். சில கூத்துச் சொல்ல - பரிவுடைய யாசோதைப் பிராட்டி இவற்றிலே ஈடுபட்டுச் சொல்லும் வார்த்தைகளை அன்றே அப்பரிவு இல்லாத நான் சொன்னேன் என்பார் **'கூத்துச் சொல்ல'** என்கிறார். கூத்தாவது, ஒருவன் நினைவையும் செயலையும் மற்றொருவன் செய்வது. தானேல் எம்பெருமான் - தானுகில், முற்றறிவினனுய் எல்லாப் பொருள்களையும் நியமிக்கின்றவனுய் இருப்பான் ஒருவன். என்றது, அகவாய் அறியாதான் ஒருவன் அல்லன், அறிந்தால் உபேக்ஷிக்கமாட்டாதான் ஒருவன் அல்லன் என்பதனைத் தெரிவித்தபடி. அவன் - அப்படி, ஸர்வஜ்ஞனுய் ஸர்வசக்தியானவன். என்னுகி ஒழிந்

---

1. பெரிய திருமொழி. 2. 5: 1.

2. "தேனே" என்றதனை நோக்கி 'நிரதிசய போக்கியமாய்' என்கிறார். நிரதிசய போக்யம் - தனக்குமேல் ஒன்று இல்லாத இனிமையையுடைய பொருள். "இன்னமுதே" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'போன உயிரை மீட்கவற்றாய்' என்கிறார். அதனைப் பிரமாணத்தோடு விவரிக்கிறார் 'அமுதென்றும்' என்று தொடங்கி. இது, இரண்டாந் திருவர். 85.

தான் - [1] நான் இட்ட வழக்கு ஆனன். என்னையுடையவன் நான் இட்ட வழக்கு ஆனன். உடையவன்தான் உடைமையானன், கீழ் மேல் ஆயிற்று என்றபடி. நன்று; அவன் விபூதி செய்தது என்? என்னில், வானே மாநிலமே மற்றும் முற்றும் என் உள்ளனவே - [2]"மனவி, புத்திரன், வேலைக்காரன் இவர்கள் ஸ்வதந்திரம் இல்லாதவர்கள், பரதந்திரர்கள்; இவர்கள் எவனுக்குஅடிமை ஆவர்களோ அவனுக்கே இவர்கள் செல்வமும் உரியது" என்கிறபடியே, விபூதியையும் நான் இட்ட வழக்கு ஆக்கினன் என்னுதல். [3] அன்றிக்கே, விபூதியையுடையனுய்க் கொண்டு என்னுள்ளே புகுந்தான், என்னுதல், 'வானே மாநிலமே' என்றது, ஐம்பெரும் பூதங்கட்கும் உபலக்ஷணம். 'மற்றும்' என்றது, ஐம்பெரும் பூதங்களின் காரியங்களான அண்டங்களை. 'முற்றும்' என்றது, பரமபதத்தை. 'என்னுள்ளனவே' என்றது, விபூதியும் என்னுள்ளே புகுந்தது என்றபடி. [4] அன்றிக்கே, உபயவிபூதி நிர்வாஹமும் என்பக்கலிலேயிருந்து செய்யுமத்தனையாய்விட்டது என்னுதல். [5] அன்றிக்கே, உபயவிபூதி ஐஸ்வர்யமும் என்பக்கலிலே ஆய்விட்டது என்னுதல். [6] இதனைச் சிற்றின்பத்திலே ஈடுபாடு

---

1. "என்னுகி ஒழிந்தான்" என்பதற்கு நான்கு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். 'நான் இட்ட வழக்கு ஆனன்' என்றது முதல், 'விபூதியையும் நான் இட்ட வழக்கு ஆக்கினன்' என்பது முடிய முதற் பொருள். "எம்பெருமான்" என்றதனைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'என்னை யுடையவன்' என்று தொடங்கி. கருத்து அருளிச்செய்கிறார் 'உடையவன்தான்' என்று தொடங்கி.

2. "த்ரய ஏவாதநா லோகே பார்யா தாஸஸ் ததா சுதஃ
யத்தே சமதி கச்சந்தி யஸ்யை தே தஸ்ய தத் தநம்"

என்பது, பாரதம் உத்யோகபர்வம்.

ஆக, முதற் பொருளுக்குக் கருத்து, உலகத்தோடு கூடினவனுய்க் கொண்டு எனக்குப் பரதந்திரனுனன் என்பது.

3. இரண்டாவது பொருளுக்குக் கருத்து, அவனும் என்னுள்ளே புகுந்தான், விபூதியும் என்னுள்ளே புகுந்தது என்பது.

4. மூன்றுவது பொருளுக்குக் கருத்து, உபய விபூதி நிர்வாகத்தையும் என் பக்கலிலே இருந்துகொண்டு செய்கிறான் என்பது.

5. நான்காவது பொருளுக்குக் கருத்து, "அந்தாமத் தின்பு செய்து" என்கிறபடியே, உபய விபூதியிலும் செய்யும் விருப்பத்தை என்னிடத்திலேயே செய்கிறான் என்பது.

6. உபய விபூதி ஐஸ்வரியங்களும் இவருடைய திருவுள்ளமேயாக இருக்கக் கூடுமோ? என்ன, அதற்கு விடையும் பிரமாணமும் அருளிச்செய்கிறார் 'சிற்றின்பத்திலே' என்று தொடங்கி.

உடைய ஒருவன், தான் உகந்த விஷயத்தையே எல்லா ஐஸ்வரியங்களுமாக நினைத்திருக்குமாறுபோன்று கொள்க. [1]"உன்னை முற்றும் அகத்தடக்கி" என்றதே இவரும். (2)

445.

**உள்ளன மற்றுளவாப் புறமேசில மாயஞ் சொல்லி**
**வள்ளல் மணிவண்ணனே! என்றென்றே உன்னையும் வஞ்சிக்கும்**
**கள்ள மனந்தவிர்ந்தே உன்னைக் கண்டுகொண் டுய்ந்தொழிந்தேன்**
**வெள்ளத் தணைக்கிடந் தாய்! இனி உன்னைவிட் டென்கொள்வனே?**

**பொ - ரை**:—மனத்திலே உள்ளவை உன்னை ஒழிந்த மற்றைய விஷயங்களாக இருக்க, புறத்திலே வள்ளலே! மணிவண்ணனே! என்று என்று சில பொய் வார்த்தைகளைச் சொல்லி உன்னையும் வஞ்சிக்கின்ற மனத்திலே உள்ள வஞ்சனை நீங்கி உன்னைக் கண்டுகொண்டு உய்ந்தேன்; திருப்பாற்கடலிலே ஆதிசேஷசயனத்திலே கிடந்தவனே! இனி, உன்னைவிட்டு வேறு எதனைப் பற்றுவேன்? என்கிறார். என்றது, வேறு ஒன்றனையும் விரும்பேன் என்றபடி.

**வி - சு**:—உள்ளன: வினையாலணையும் பெயர். 'மற்று' என்னும் இடைச்சொல் 'பிறிது' என்னும் பொருளில் வந்தது. சொல்லி வஞ்சிக்கும் மனம் என்க. உய்ந்தொழிந்தேன்: ஒருசொல்.

**ஈடு**:—மூன்றும்பாட்டு. [2]"பொய்யே கைம்மை சொல்லி" என்றும், "சில கூத்துச் சொல்ல" என்றும் சொன்ன வார்த்தைகளை விவரித்துக்கொண்டு, இப்படி வார்த்தைகள் அளவிலேயே உன்னைப் பெற்ற நான் உன்னை ஒழிய வேறு ஒன்றனையும் ஆசைப்படேன் என்கிறார்.

---

1. "உன்னை முற்றும்' என்பது, திருவாய். 4. 3 : 3. என்றது, "கோவை வாயாள்" என்ற திருவாய்மொழியிற் கூறியவாறே பொருந்தும் என்றபடி.

2. முதற் பாசுரத்திலே கூறிய "பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமே ஆடி" என்றதனை, இப்பாசுரத்திலேயுள்ள "உள்ளன மற்றுளவா" என்பதும், இரண்டாம் பாசுரத்திலே கூறிய "சில கூத்துச் சொல்ல" என்றதனை, இப்பாசுரத்திலேயுள்ள "புறமே சிலமாயம் சொல்லி" என்பதும் விவரிக்கின்றன என்று கொள்க. "சிலமாயம் சொல்லி" என்றதனை நோக்கி, 'இப்படி வார்த்தைகள் அளவிலே' என்றும், "உன்னைக்கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேன்" என்றதனை நோக்கி, 'உன்னைப் பெற்ற நான்' என்றும், "உன்னை விட்டு" என்றதனை நோக்கி, 'உன்னை ஒழிய' என்றும், "என் கொள்வன்" என்றதனை நோக்கி 'வேறு ஒன்றனையும் ஆசைப்படேன்' என்றும் அருளிச்செய்கிறார்.

உள்ளன-மனத்தில் உள்ளபொருள்கள். மற்று உளவா-வேறே சிலவாக இருக்க. என்றது, மனமானது உலக விஷயத்திலே ஈடுபாடு உடையதாக இருக்க என்றபடி. புறமே சில மாயம் சொல்லி - புறப்பூச்சாகச் சில பொய்களைச் சொல்லி. இதனால், மேற்பாசுரத்தில் "கூத்துச் சொல்ல" என்ற இடத்தைச் சொல்லுகிறார். வள்ளல் - பரம உதாரனே! மணிவண்ணனே! - [1] பெருவிலையனை இரத்தினம்போலே சிலாக்கியமான வடிவை எனக்கு உபகரித்தவனே! என்று என்றே - [2] மனத்தொடு படாமலே சொல்லாநிற்கச்செய்தேயும் 'மனத்தொடு பட்டுச் சொல்லுகிறான்' என்று தோற்றும்படியாகப் பலகாலும் சொல்லி. உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம் - [3] உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறியும் முற்றறிவினனுய்ச் சர்வாந்தர்யாமியான நீயும் 'மெய்' என்று கருதும்படி உன்னையும் பகட்டும் வஞ்சனை பொருந்திய மனத்தை. தவிர்ந்தே - மனத்தொடுபடாமல் இழிந்தாரையும், மேல்விழும்படி கொண்டு முழுகும் விஷயமே அன்றே.

உன்னை - நட்புத்தன்மையே காரணமாக [4] "விடமாட்டேன்" என்னும் உன்னை. அன்றிக்கே, சம்பந்தமுள்ளவனுமாய் இனியனுமான உன்னை என்னுதல். கண்டுகொண்டு - [5] 'ஒருபடி காண வல்லோமே!' என்ற நான், நிதி எடுத்தாற்

---

1. "வள்ளல்" என்ற பதத்தையும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பெரு விலையனை' என்று தொடங்கி.

2. அடுக்குத் தொடருக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மனத்தொடு படாமலே' என்று தொடங்கி.

3. உள்ளத்தே உறையும் மாலே உள்ளுவான் உணர்வொன் றில்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற் றெல்லாம் உடனிருந் தறிதி என்று
வெள்கிப்போய் என்னுள் ளே நான் விலவறச் சிரித்திட் டேனே.

என்பது, திருமாலை.

4. "மித்ரபாவேந சம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந"
என்பது, ஸ்ரீராமாயணம். யுத். 18 : 3.

"எம்பெருமான்", "மணிவண்ணன்" என்பனவற்றையும் கூட்டி "உன்னை" என்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'சம்பந்தமுள்ளவனுமாய்' என்று தொடங்கி.

5. "உள்ளன மற்றுளவா" என்றது மேலே இருக்க, 'ஒருபடி காண வல்லோமே!' என்னும் இது பொருந்தும்படி எங்ஙனே? என்ன, "கள்ள மனந் தவிர்ந்து" என்றதனால், விஷய வைலக்ஷண்யம் ஈடுபடுத்தின பின்பு அப்படி இருக்கக் குறை இல்லை என்று அருளிச்செய்வர். ஒருபடி: சிலேடை.

போலே அடைந்து. உய்ந்தொழிந்தேன் - [1] "இல்லாதவனுக ஆகிறான்" என்னும்படி இருக்கிற நான் உஜ்ஜீவிக்கப் பெற்றேன். [2] "தேவர்கள், அமுதத்தைப் பார்த்துத் திருப்தி அடைகிறார்கள்" என்றே அன்றே சொல்லப்பட்டிருக்கிறது. நன்று; இனி, நீர் செய்யப் பார்த்தது யாது? என்ன, வெள்ளத்து அணைக் கிடந்தாய்-பரமபதத்தைவிட்டுத் திருப்பாற்கடலிலே இவ் [3] வேலையிலே, என்னைக் காப்பாற்றும் பொருட்டுக் காலத்தை எதிர்நோக்கினவனுய்க் கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே! இனி-உனக்கு ஒத்ததான பரமபதத்தை விட்டு ஒவ்வாததான சம்சாரத்திலே என்னைக் காத்தருளும் பொருட்டுக் கண்வளர்ந்தருளின பின்பு. உன்னைவிட்டு-[4] நான் விட்ட அன்றும் என்னை விடமாட்டாதே இருக்கிற உன்னை ஒழிய. என் கொள்வனே - [5] பச்சை கொண்டு பலவேலையிலே நிஷ்பலங்களாய் இருக்கும் விஷயங்களைப் பற்றவோ? [6] ஆராதிக்குமிடத்தில் வருந்தி ஆராதிக்கத் தக்கவராய் வருந்தி ஆராதித்தாலும் கிடைப்பது ஒன்றும் இல்லாதவர்களாய் இருப்பவர்களைப் பற்றவோ? (3)

---

1. "அஸந்நேவஸ பவதி அசத் பிரஹ்மேதி வேதசேத்" என்பது, தைத்திரீய ஆனந்த உப.

2. கண்ட மாத்திரத்தில் உஜ்ஜீவனமாய் இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தேவர்கள்' என்று தொடங்கி.

"ந வை தேவா அஶ்நந்தி நபிபந்தி ஏதத் ஏவ அமிருதம் திருஷ்ட்வா திருப்யந்தி"

என்பது, சாந்தோக். 3 : 10.

3. வேலை - நிலேடை: காலமும், அலையும்.

4. "வெள்ளத்து அணைக்கிடந்தாய் உன்னைவிட்டு" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் விட்ட அன்றும்' என்று தொடங்கி.

5. மேலே, "மணிவண்ணனே" என்றதற்கு மறுதலையாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'பச்சை கொண்டு' என்று தொடங்கி. பச்சை - காணிக்கை. விஷயங்கள் - பெண்கள்.

6. "வெள்ளத்தணைக் கிடந்தாய்" என்றதற்கு மறுதலையாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'ஆராதிக்கு மிடத்தில்' என்று தொடங்கி, ஒன்று மில்லாதவர்கள் - வேறு தெய்வங்கள்.

446.

என்கொள்வன் உன்னைவிட் டென்னும் வாசகங் கள்சொல்லியும்
வன்கள்வ னேன்மனத்தை வலித்துக் கண்ண நீர்கரந்து
நின்கண் நெருங்க வைத்தே எனதாவியை நீக்கிலேன்
என்கண் மலினமறுத்து என்னைக்கூவி யருளாய் கண்ணனே!

பொ - ரை :—கண்ணனே! உன்னைவிட்டு வேறு என்ன பிரயோஜனத்தைக் கொள்வேன்? என்கிற வார்த்தைகளைச் சொல்லியும் கூட, கொடிய கள்வனேனான நான் விஷயங்களினின்றும் மனத்தை மீட்டுக் கண்ணீரையும் மாற்றி மனத்தை நின்பக்கலிலே செறியச்செய்து என் சரீரத்தினின்றும் என் உயிரைப் பிரிக்கமாட்டுகின்றிலேன்; என்னுடைய சரீர சம்பந்தத்தை நீயே போக்கி என்னைக் கூவி அருள வேண்டும் என்கிறார்.

வி - கு :—உன்னை விட்டு என் கொள்வன் என்னும் வாசகங்கள் என்க. வலித்தல் - மீட்டல். மலினம் - பாவம்

ஈடு:—நான்காம்பாட்டு. [1]"'பொய்யே கைம்மை சொல்லி' என்றும், 'சில கூத்துச் சொல்ல' என்றும், 'உள்ளன மற்றுள வாப்புறமே சில மாயம் சொல்லி' என்றும், பகவத் விஷயத்திலேயும் பொய் சொல்லிப் போந்தேன் என்றார்; இப்படிப் பொய்யன் ஆகைக்குக் காரணம் யாது? என்று பார்த்தார்; சரீரத்தின் சேர்க்கையாய் இருந்தது; 'மெய்யே பெற்றொழிந்தேன்', 'கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேன்' என்றவற்றை மறந்தார்; இந்தப் பிரகிருதி சம்பந்தத்தால் இகர விஷயங்களிலே ஈடுபட்டுள்ள மனத்தினை அவற்றில் நின்றும் மீட்டு உன் பக்கலிலே ஈடுபடும்படிசெய்து, தேகத்திற் காட்டில் ஆத்மாவைப் பிரிய அநுசந்திக்கைக்கு ஆற்றல் இல்லாதவனாக இருக்கிறேன், நீயே என் விரோதியைப் போக்கி உன் திருவடி

---

1. "பெற்றொழிந்தேன்", "கண்டுகொண்டொழிந்தேன்" என்று முன்னும் பின்னும் பிரீதியாக இருக்க, இப்பாசுரத்திலும் மேற்பாசுரத்திலும் தக்கமாயிருக்கைக்கு அடி என்? என்ன, அதற்குப் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த இருவகை நிர்வாஹங்களையும் அருளிச்செய்கிறார் "பொய்யே கைம்மை சொல்லி" என்று தொடங்கி. 'சரீரத்தின் சேர்க்கையா யிருந்தது' என்றது, "மலினம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'எப்படியாகிலும் பல சித்தி உண்டாயிற்று' என்றாரே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "மெய்யே பெற்றொழிந்தேன்" என்று தொடங்கி. 'அவற்றில் நின்றும் மீட்டு' என்றது, "வலித்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. "நின் கண் நெருங்கவைத்தே" என்றதனை நோக்கி 'உன் பக்கலிலே ஈடுபடும்படி செய்து' என்கிறார். "அறுத்துக் கூவியருளாய்" என்றதனை நோக்கி 'நீயே என்

களிலே அழைத்துக் கொண்டருளவேணும் என்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்வர்.

[1] அன்றிக்கே, "'கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேன்' என்றார்; அது அகக்கண்ணிற்கு மட்டும் தோன்றக் கூடிய தான காட்சியாக இருந்தது; காட்சிக்குப் பின்பு புறக் கலவியிலே அபேக்ஷை பிறந்து கையை நீட்டினார், கைக்குள் அகப்படக் கண்டிலர், அதனாலே தளர்ந்து; இதற்குக் காரணம் தேக சம்பந்தமாய் இருந்தது, இதனைக் கழித்துக் கொள்ளுவதற்குத் தகுதியாக இருப்பது ஒரு சாதனத்தைச் செய்வதற்கு ஆற்றல் இல்லாதவனாக இருக்கிறேன் பக்தி பாரவஶ்யத்தாலே; ஆனபின்பு, நீயே என் விரோதியைப் போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக் கொண்டருளவேணும் என்கிறார்" என்று நிர்வஹிப்பாரும் உளர். முறைப்படி வரும் பக்தி தமக்கு உண்டாக நினைத்திராரே அன்றே.

உன்னை விட்டு என் கொள்வன் என்னும் வாசகங்கள் சொல்லியும் - [2] பரமைகாந்திகளைப்போலே, உன்னை ஒழிய நான் எதனைக் கொள்வன்? என்று இங்ஙனே வாயாலே சொல்லாநிற்கச்செய்தேயும். வன்கள்வனேன் - களவாவது - பிறருடைய பொருளை அவர் அறியாமலே கொள்ளுவது. வன்களவாவது, பகவானுக்குரியதான ஆத்மாவை என்னது என்று இருத்தல். [3] "ஆத்மாவை அபகரித்த திருடனல்" என்

---

விரோதியைப் போக்கி' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். பட்டர் நிர்வாகத்திலே 'அஜ்ஞானத்தாலே பிரபந்நர் ஆழ்வார்' என்ற அர்த்தம் போதரும்.

1. 'அன்றிக்கே' என்றது முதல், 'உண்டார்க நினைத்திராரே அன்றே' என்றது முடிய, பூர்வர்கள் நிர்வாகம். இவர்கள் நிர்வாகத்திலே 'பக்தி பாரவஶ்யத்தாலே பிரபந்நர்' என்ற அர்த்தம் போதரும். தம்முடைய இந்தப் பக்தி சாதனமாகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முறைப்படி வரும்' என்று தொடங்கி. 'முறைப்படி வரும் பக்தி' என்றது, கர்ம ஞானங்களை அநுஷ்டித்து அந்த அடைவிலே வரும் பக்தி.

2. 'பரமை காந்திகள்' என்றது, உபாய உபேயங்கள் இரண்டும் எம்பெருமானே யாவன் என்று நினைத்திருக்கும் பெரியோர்கள்.

3. "யோன்யதா சந்தம் ஆத்மானம் அன்யதா பிரதிபத்யதே
கிம்தேந நகிருதம் பாபம் சோரேண ஆத்மாபஹாரிணு"

என்பது, பாரதம் உத்யோகபர்வம். திருதராட்டிரனைப் பார்த்துச் சனத்சுஜாதர் கூறியது.

கிறபடியே, பகவானுக்கு உரிமைப்பட்ட ஆத்ம வஸ்துவை அன்றே நான், 'என்னது' என்று இருந்தது. [1] விறகினைக் களவு கண்டாரளவு அல்லவே அன்றே, இரத்தினத்தை அபகரித்தலைச் செய்தாரளவிலே உள்ள தோஷம். [2] திரவியங்களை எடுத்துப் பேசுகிற இடத்தில் ஆத்ம வஸ்துவைப் பிரதானமாகச் சொல்லிப் போந்தார்களேயன்றே. [3] திரவியம் விலக்ஷண மானது, உடையவன் சர்வேசுவரன் ஆவான், இனிச் சொல்ல வேண்டாவே அன்றே. மனத்தை வலித்து - இதர விஷயங்களிலே ஈடுபட்டுள்ளதான மனத்தை அவற்றினின்றும் மீட்டு. அவற்றிலே நெஞ்சு பட்ட உறுதியை நினைத்து 'மனத்தை மீட்டு' என்னுமல், '**மனத்தை வலித்து**' என்கிறார். நான் இந்திரியங்களை வெல்ல நினைக்கையாவது [4] "கெடுக்கும் தன்மை வாய்ந்த இந்திரியங்கள் மனத்தைப் பலாத்காரமாக இழுக்கின்றன" என்கிறபடியே, அவை என்னை மேலிடுகையேயாம்.

கண்ணநீர் கரந்து - அவை கிடைக்கப் பெறுமையாலே பாய்கிற கண்ணநீரையும் மாற்றி. நின்கண் நெருங்க வைத்து - அம் மனத்தினை உன்பக்கலிலே கொண்டுவந்து மூட்டி. எப்பொழுதும் நினைத்து. எனது ஆவியை நீக்ககில்லேன் - இந்தத் தேகத்தினின்றும் ஆத்மாவைப் பிரிய அநுசந்திக்க ஆற்றல் உடையவன் அல்லேன். என்கண் மலினம் அறுத்து - இதற்குக் காரணம் என்னிடத்தில் உண்டான மாலின்யமே அன்றே. மலினம் - மாலிந்யம். அதாவது, பிரகிருதி சம்பந்தம். [5] மெய்யனுய்க் கெட்டேன் என்கிறார். அதனை அறுத்து உன்

---

1. ஆத்மாவைத் திருடுதல் கொடியதோ? என்ன, 'விறகினை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இவ்வாத்ம வஸ்து அப்படி உயர்ந்ததோ? என்ன, 'திரவியங்களை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"ஆத்மாநம் அஸ்ய ஜகதோ நிர்லேபம் அகுணமலம்
பிபர்த்தி கௌஸ்துபமணி ஸ்வரூபம் பகவான் ஹரி:"

என்றதனைத் திருவுள்ளம்பற்றிச் 'சொல்லிப் போந்தார்களே அன்றே' என்கிறார். 'சொல்லிப் போந்தார்கள்' என்றது, பராசராதிகளை.

3. திரவிய சொரூப வைலக்ஷண்யத்தாலும், உடையவன் வைலக்ஷண்யத்தாலும் மிக்க தோஷம் என்கிறார் 'திரவியம்' என்று தொடங்கி.

4. "இந்த்ரியாணிப்ரமாதீனி ஹரந்தி ப்ரசபம் மந:" இது, ஸ்ரீ கீதை. 2: 60.

5. 'மெய்யனுய்' என்றது, சிலேடை: சரீரத்தை யுடையவன், சத்தியத்தை யுடையவன்.

திருவடிகளிலே என்னை அழைத்துக் கொண்டருளவேணும். கண்ணனே - [1] சோகத்தை நீக்குகின்றவன் அன்றே நீ. எனக்குச் செய்தருளவேண்டுவது, அழகிய வடிவைக் காட்டி "மாசுசः—துக்கப்படாதே" என்னுமத்தனை அன்றே. அவ் வடிவைக்கண்டால் மற்றொன்றினைக் காணவே என்னும்படியா யன்றே இருப்பது.

அப்படி அன்றிக்கே, உன்னைவிட்டு என்கொள்வன் என்னும் வாசகங்கள் சொல்லியும் - ஸ்வரூபத்துக்குத் தகுதியான வார்த்தைகளை வாயாலே சொல்லி நிற்கச்செய்தேயும். வன்கள்வனேன் - [2] உத்தேசிய வஸ்துவைக் கடுக அடையப் பெறுத இன்னுப்பாலே 'மஹாபாபி' என்பாரைப்போலே சொல்லுகிறார். மனத்தை வலித்துக் கண்ணநீர் கரந்து - பக்தி பாரவஸ்யத்தாலே தன் நிலைகுலைகிற மனத்தைத் திண்ணி தாக்கித் [3] "தன கேழில் ஒண் கண்ணநீர் கொண்டாள்" என்கிற கண்ணநீரையும் மாற்றி. நின்கண் நெருங்க வைத்து - [4] "காலாழும் நெஞ்சழியும்" என்கிறபடியே, உன்னைக் கிட்டினவாறே உடைகுலைப்படுகிற மனத்தைத் தரித்து நின்று உன்னை அநுசந்திக்கும்படி செய்து, இச்சரீரத்தினின்றும் ஆத்மாவைப் பிரிய அநுசந்திக்க ஆற்றலையுடையேன் அல்லேன். கண்ணனே - 'இவன் தான், தன் விரோதியைப் போக்கிக்கொண்டு கிரமத்திலே வந்து கிட்டுகிறான்' என்று ஆறி இராமல், [5] நினைத்த காரியம் தலைக்கட்டவல்ல நீயே என்

---

1. "கண்ணன்" என்பதற்கு இரு பொருள்: ஒன்று, சோகத்தை நீக்குமவன் என்பது. மற்றொன்று, 'எனக்குச் செய்தருள வேண்டுவது' என்று தொடங்கும் வாக்கியத்தின் பொருள். இரண்டாவது பொருளில், கண்ணன்=கண்களுக்கு விஷயமானவன் என்பது. வடிவைக் காட்டினால் போதுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவ்வடிவைக் கண்டால்' என்று தொடங்கி. "மற்று ஒன்றினைக் காணவே" என்றது, அமலனாதிபிரான். 11.

2. பக்தி பாரவஸ்யத்தாலே சாதநாநுஷ்டானத்தைச் செய்வதற்குத் தகுதி இல்லாமையைச் சொல்லுகிறவர் "வன்கள்வனேன்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உத்தேஸ்ய வஸ்துவை' என்று தொடங்கி. சொல்லுகிறார் - "வன்கள்வனேன்" என்று சொல்லுகிறார்.

3. திருவாய்மொழி. 2. 4: 10.

4. பெரிய திருவந். 34.

5. கண்ணன் = நிர்வாஹகன். இப்பொருள் தன்னையே 'நினைத்த காரியம்' என்று தொடங்கி அருளிச் செய்கிறார்.

விரோதியைப் போக்கி என்னை அழைத்துக் கொண்டருள வேணும். அன்றிக்கே, - [1]"பக்தி உபாயம் அன்று" என்று சோகித்தவனுக்கு நல்விரகு சொல்லிக் கொடுத்தவன் அன்றே நீ என்னுதல். (4)

## 447.

கண்ண பிரானை விண்ணோர் கருமாணிக்கத் தை அமுதை நண்ணியும் நண்ணகில்லேன் நடுவே ஓர் உடம்பி லிட்டுத் [2]திண்ணம் அழுந்தக் கட்டிப்பல செய்வினை வன் கயிற்றால் புண்ணை மறையவரிந்து என்னைப் போரவைத் தாய் புறமே.

**பொ - ரை:**—கண்ணபிரானாக அவதரித்தவனும், விண்ணோர்கட்குக் கருமாணிக்கம் போன்றவனும் அமுதமயமானவனுமான உன்னைச் சேர்ந்தும் சேராதவனாக இருக்கின்றேன்; என்னை? எனின், என்னை நடுவே ஓர் உடம்பிலே சேர்த்து, செய்யப்பட்டவைகளான கொடிய பல வினைகளாகிற கயிற்றால் இறுக அழுந்தக் கட்டிப் புண்கள் தோன்றுதவாறு வரிந்து புறத்திலே போர வைத்திட்டாயே! என்கிறார்.

**வி - கு:**—இட்டு அழுந்தக் கட்டி மறைய வரிந்து புறமே வைத்தாய் என்க. வரிந்து - மேல்பூச்சுப்பூசி. போர - மிகவும்.

**ஈடு:**—ஐந்தாம்பாட்டு. நீர் "மலினம்" என்கிறது எதனை? என்ன, [3]இன்னதனை என்கிறார்.

விண்ணோர் கருமாணிக்கத்தைக் கண்ணபிரானை-[4]"அந்தப் பரமபதத்தில் மேதாவிகளும், துதித்துக் கொண்டிருத்தலையே இயல்பாகவுடையவர்களும், எப்பொழுதும் ஜாக்கிரதையோடு

---

1. சோகித்தவன் - அருச்சுனன், 'சொல்லிக் கொடுத்தவன் அன்றே நீ' என்றது, கிருஷ்ணனை.

2. என்பினை நரம்பிற்பின்னி உதிரம் தோய்த்து இறைச்சி மெத்திப்
புன்புறந் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட்டு
ஒன்பது வாயி லாக்கி ஊன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்சன் நல்லன் மயங்கினர் மருள என்றான்.
என்பது, சிந். 1577.

3. 'இன்னதனை' என்றது, "நடுவே ஓர் உடம்பில் இட்டு" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து.

4. "தத்விப்ராஸோ விபன்யவோ ஜாக்ருவாம் ஸஸ்ஸமிந்ததே" இது, இருக்குவேதம்.

கூடினவர்களாய்க் கொண்டு பிரகாசிக்கிறார்கள்" என்கிற படியே, நித்தியசூரிகளுக்கு அநுபவிக்கக் கூடியதான வடிவ ழகை எனக்குக் கொடுப்பதற்காகக் கிருஷ்ணனாய் வந்து அவதரித்தவனே. அழகை-இப்படி அவதரித்துத் தன்னுடைய இனிமையை ஆயிற்று இவரை அநுபவிப்பித்தது. நண்ணியும் நண்ணகில்லேன் - பெற்று வைத்தே பெறுதார் கணக்கானேன். [1]பிறந்த ஞானலாபத்தை நினைத்து **'நண்ணியும்'** என்கிறார். சரீர சம்பந்தத்தோடே இருக்கிற இருப்பை நினைத்து **'நண்ணகில்லேன்'** என்கிறார். நடுவே ஓர் உடம்பில் இட்டு - [2]ஆத்மாவுக்குச் சரீரத்தின் சேர்க்கை அநாதியாக இருக்கச் செய்தேயும், அது ஔபாதிகமாய்த் தோற்றுகையாலே **'நடுவே ஓர் உடம்பு'** என்கிறார். [3]சலகில் கிடந்த முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கு ஏறின காள் அறிவார் இல்லை, பின்பு கழியக் காண்கையாலே **'இது வந்தேறி'** என்று தோற்றுகின்றதே அன்றே; அப்படியே, பகவானே அடைவதனாலே கழியக் காண்கையாலே **'இது வந்தேறி'** என்று தோற்றுமே அன்றே. [4]இராஜபுத்திரன் வழியிலே போகாநிற்கச் செய்தே வேடர் கையிலே அகப்பட்டுத் தன்னை வேடனாகவே எண்ணுமாறுபோலே இருப்பது ஒன்றே அன்றே, சேதனன் தேகத்திலே அஹம் புத்திபண்ணி "**நான் தேவன்**" என்று இருக்கும் இருப்பு.

திண்ணம் அழுந்தக்கட்டி-அவித்யை முதலியவைகளாலே உறுதியாகக் கட்டி. பல செய் வினை வன் கயிற்றால் - தாம் பலவாய்ச் செய்யப்பட்டிருந்துள்ள வினைகளாகிற வலிய கயிறு

---

1. 'பிறந்த ஞான லாபம்' என்றது, மானச அநுபவத்தை. 'சரீர சம்பந்தத்தோடே' என்றது, "நடுவே ஓர் உடம்பிலிட்டு" என்றதனைப் பற்றி.

2. சரீரத்தின் சேர்க்கை அநாதியாக இருக்க, "நடுவே" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆத்மாவுக்கு' என்று தொடங்கி. ஔபாதிகம் - உபாதியடியாக வந்தது; உபாதி - காரணம்.

3. அநாதியான இதனை 'ஔபாதிகம்' என்று அறியலாம்படி எங்ஙனம்? என்ன, 'சலகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சலகு - முத்துச் சிப்பி.

4. வந்தேறியாகில் ஸ்வாபாவிகமாய்த் தோற்றும்படி யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராஜபுத்திரன்' என்று தொடங்கி.

களால் உறுதியாகக் கட்டி. புண்ணை மறைய வரிந்து - தோலை மேவிக் [1] கைப்பாணி இட்டு மெழுக்கு வாசியிலே மயங்கும்படி பண்ணின இத்தனை ஒழிய, [2] அகவாய் புறவாயாயிற்றுகில் காக்கை நோக்கப் பணிபோருமித்தனையே அன்றே. என்னை - என்னைக் காப்பாற்றிக் கொள்வதில் அசக்தனுய்ச் சம்பந்தம் இல்லாதவனுமாய் இருக்கிற என்னை. போர வைத்தாய் புறமே - [3] ஏகாந்த போகத்துக்காகப் போந்த பிராட்டி அசோக வனத்திலே இருந்தாற்போலே தோற்றுகின்றதா யிற்று, ஸ்வரூபஜ்ஞானம் பிறந்த பிறகு தேகத்திலே இருக்கிற இருப்பு. புறம்பே - உன் குணங்கள் நடையாடாத சம்சாரத் திலே வைத்தாய். [4] தம்முடைய ஸ்வரூபத்தைப் போன்று **'கர்மங்களும் அவனைக் குறித்தபோது பரதந்திரங்கள்'** என்று இருக்கும் பரமவைதிகர் ஆகையாலே, **'போரவைத்தாய்'** என்று அவன் செய்தானகச் சொல்லுகிறரிறே. (5)

## 448.

**புறமறக் கட்டிக்கொண்டு இருவல் வினையார் குமைக்கும்**
**முறைமுறை யாக்கை புகல்ஒழியக் கண்டுகொண் டோழிந்தேன்**
**நிறமுடை நால்தடந்தோள் செய்யவாய் செய்ய தாமரைக்கண்**
**அறமுயல் ஆழி அங்கைக் கருமேனி அம்மான் தன்னையே.**

---

1. கைப்பாணி - மணியாசகம். மெழுக்குவாசி - பூச்சுவாசி.

2. மாக்கேழ் மடநல்லாய்! என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் புக்கிலை—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

என்பது, நாலடியார்.

"மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்"

என்பது, மணிமேக. பளிக்கறை. 113-121.

"பெண் என்பது எற்புச் சட்டகம், மூடைக் குரம்பை, புழுப் பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகைமைத்து" என்பது, இறையனூர் களவியலுரை.

3. எல்லாரும் இதனை உள்ளாக விரும்பாநிற்க, இவர் "புறமே" என்பான்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஏகாந்த போகத்துக் காக' என்று தொடங்கி,

4. தம்முடைய கர்மங்களுக்குத் தகுதியாக வந்ததனை அவன் செய்தா னகச் சொல்லுவான் என்? என்ன, 'தம்முடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**பொ - ரை:**—புறத்திலே ஒன்றும் தோன்றுதவாறு கலமுறக் கட்டிக்கொண்டு வருத்துகின்ற கொடிய இரண்டு வினைகளாலே சரீரத்தில் முறை முறையாகப் புகுதல் தவிரும்படியாக, நிறத்தையுடைய விசாலமான நான்கு திருத்தோள்களையும் சிவந்த திருவாயினையும் சிவந்த தாமரைபோன்ற திருக்கண்களையும் அறத்தையே செய்கின்ற சக்கரத்தைத் தரித்த அழகிய திருக்கையையும் கரியமேனியையுமுடைய சுவாமியைக் கண்டுகொண்டேன் என்கிறார்.

**வி - கு:**—கட்டிக்கொண்டு குமைக்கும் வினையார் என்க. 'வினையார்' என்பதில் ஆர் விகுதி, இழித்தற்கண் வந்தது. யாக்கையிலே முறை முறை புகல் ஒழிய அம்மான் தன்னைக் கண்டுகொண்டொழிந்தேன் என்க. 'கண்டுகொண்டொழிந்தேன்' என்பது, ஒரு சொல்.

**ஈடு:**—ஆரும்பாட்டு. [1]"போரவைத்தாய் புறமே" என்று இவர் நொந்தவாறே, 'இவருடைய இழவை மறப்பித்து உளராக்கி நடத்தவேணும்' என்று பார்த்துத் தன் வடிவழகைக் காட்ட, அவ்வடிவழகைக் கண்டவாறே தம்மூடம்பை மறந்து பிரீதராய், கண்டுகொண்டேன் என்கிறார். இவரை மெய்ம் மறக்கப் பண்ணிற்று அவன் வடிவு.

புறம் அறக் கட்டிக்கொண்டு - பிணைத்த இடம் அறிந்து இவனுல் அவிழ்த்துக்கொள்ள ஒண்ணுதபடியாக, புச்சம் தோன்றுதபடி உள்முடியாக முடிந்து. [2]"என்னுடைய மாயையானது தாண்டமுடியாது" என்கிறபடியே, சர்வசக்தியான தான் பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்க ஒண்ணுது என்றேனே அன்றே. இரு வல்வினையார் குமைக்கும் - இருவகைப்பட்ட மஹாபாவங்கள் தகர்க்கும். குமைக்கும் முறை முறை

---

1. "நிறமுடை நால் தடந்தோள்" என்பது போன்றவைகளால், இறைவன் தன்னுடைய வடிவழகைக் காட்டுகையாலே 'இவருடைய இழவை மறப்பித்தல்' பொருள் ஆற்றலால் போதரும். 'வடிவழகை' என்றது, "நிறமுடை நால் தடம் தோள்" என்பது போன்றவைகளால் பெறுதும். "கண்டுகொண்டு" என்றதனுல், அவன் 'காட்ட' என்பது போதரும். 'உடம்பை மறந்து' என்றது, தம்முடைய பிரகிருதி சம்பந்தத்தை அநுசந்தித்தபடியால் வந்த துக்கத்தை மறந்து என்றபடி. 'மெய்' என்றது இலேடை: சரீரமும், சத்தியமும் என்பன பொருள். மெய்ம்மறக்கப் பண்ணிற்று - சரீரம் காரணமாக வந்த துக்கத்தை மறக்கப் பண்ணிற்று.

2. அவிழ்த்துக்கொள்ள முடியாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'என்னுடைய' என்று தொடங்கி, "டிடி மாயா துரத்யயா" இது, ஸ்ரீ கீதை, 7 : 14.

யாக்கை - [1]புண்ணியங் காரணமாகத் தேவசரீரத்தை அடைந்தும், பாவம் காரணமாக விலங்கு முதலான சரீரங்களை அடைந்தும், இவ்விரண்டு வினைகளும் காரணமாக மனித சரீரத்தை அடைந்தும் படும் பாட்டுக்கு ஒரு முடிவு இல்லை அன்றே. [2]திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பொருள்போலே, கர்மங்களுக்குத் தகுதியாகத் தேவர்கள் முதலான சரீரங்கள்தோறும் பிரவேசித்துத் திரியும். புகல் ஒழிய - புகுதல் தவிர. [3]ஞான ஆனந்த லக்ஷணமான ஆத்மாவே அன்றே தோன்றுதல் வளர்தல் முதலான தொழில்களையுடையதாய், நிலை இல்லாத சரீரத்திலே அகப்பட்டு நோவு படுகிறது, அது தவிர. கண்டுகொண்டொழிந்தேன் - உத்தேசிய வஸ்துவைக் கண்டு அநுபவிக்கப் பெற்றேன். பிறவி நீங்கினேன் என்றபடி.

நிறமுடை நால் தடம் தோள் - [4]"எல்லா ஆபரணங்களையும் அலங்கரிக்கைக்குத் தகுதியாக இருக்கிற திருத்தோள்கள்" என்கிறபடியே, ஆபரணத்திற்கு ஆபரணமாய், நான்காய், சுற்றுடைத்தான திருத்தோள்களையுடையனாய். செய்ய வாய் செய்ய தாமரைக்கண் - [5]"விலாசத்தோடு கூடிய திருமுறுவலுக்கு ஆதாரமான திருமுக மண்டலத்தையுடையவர்" என்கிறபடியே, "முறுவல் எடுத்த கலம்" என்னும்படி திருமுகத்தைச் செவ்வி பெறுத்தாநின்றுள்ள புன்சிரிப்பையும், இழவு மறக்கும்படி குளிரக் கடாக்ஷிக்கிற திருக்கண்களையுமுடையனாய், அறம் முயல் ஆழி அம் கை-அடியார்களைக் காப்பாற்றுதலாகிற

---

1. குமைத்தலை விளக்குகிறார் 'புண்ணியம் காரணமாக' என்று தொடங்கி. குமைத்தல் - தகர்த்தல்.

2. "முறை முறை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'திறந்து கிடந்த' என்று தொடங்கி. திரியும் பொருள் - நாய்.

3. தேவ சரீரம் முதலான சரீரங்களை மேற்கொள்ளுவது சுகம் அன்றே, அதனைத் தவிர வேண்டுவது என்? என்ன, விடை அருளிச்செய்கிறார் 'ஞான ஆனந்த' என்று தொடங்கி.

4. "சர்வபூஷண பூஷார்ஹா:" இது, ஸ்ரீராமா. சுந். 3: 14.

"பூணுக்கு அழகளிக்கும் பொற்றொடி" என்றார் பிறரும்.

5. "ஸவிலாச ஸ்மிதாதாரம் பிப்ராணம் முக பங்கஜம்" இது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 17: 21. இந்தச் சுலோகத்திலுள்ள "ஸ்மித ஆதாரம்" என்ற பதங்களுக்குப் பொருள், 'முறுவல் எடுத்த கலம்' என்பது. 'இழவு' என்றது, மேற் பாசுரத்திற் கூறிய இழவினை.

ப்ரமதர்மத்திலே தன்னிலும் முயலர்கின்றுள்ள திருவாழியையுடைய அழகிய திருக்கையையும், கருமேனி - அதற்குத் தப்பிலும் தப்ப ஒண்ணுத குளிர்ந்த வடிவழகையும், அம்மான் தன்னை - 'இவை எல்லாம் எனக்கு' என்று அநுபவிக்கும் படியான சம்பந்தத்தையுமுடையவனைக் காணப்பெற்றேன் என்க. [1] "அந்தத் துவாரத்தின் மத்தியில் பரமாத்மாவினது அப்ராகிருதமான சரீரமானது மெல்லியதாயும் மேல் நோக்கின பிரகாசத்தையுடையதாகவும் இருக்கிறது; அத்திருமேனி எங்ஙனேம் இருக்கிறது? எனின், கரியமேகத்தை நடுவிலுடையதான மின்னற்கொடி போன்று மெல்லியதாகவும் உருக்கின தங்கம் போன்ற காந்தியையுடையதாயுமிருக்கிற ஒரு சிகை இருந்தால் அதுபோன்று இருக்கிறது" என்கிறபடியே, இருதயத்திலே இருக்கிற படி. முன்பு [2] இவ்வுடம்பு அவ்வுடம்பை மறப்பித்தாற்போலே, இப்போது அவ்வுடம்பு இவ்வுடம்பை மறப்பித்தது. (6)

## 449.

**அம்மான் ஆழிப்பிரான் அவன்எவ் விடத்தான்?யான் ஆர்?**
**எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங் கண்டீர்**
**கைம்மா துன்பொழித்தாய்! என்று கைதலை பூசலிட்டே**
**மெய்ம்மா லாய் ஒழிந்தேன் எம்பி ரானும் என் மேலானே.**

**பொ - ரை:**—எல்லார்க்கும் சுவாமியும் திருவாழியைத் தரித்திருக்கின்ற உபகாரகனுமான அந்தச் சர்வேசுவரன் எவ்விடத்திலே உள்ளவன், யான் எங்கே உள்ளவன், தாழ்க்கையையுடைய யானையினது துன்பத்தை நீக்கினவனே! என்று சொல்லிக் கைகளைத் தலையிலே வைத்துக்கொண்டு மனத்தொடு படாமலே கூப்பிட, அது உண்மையான பக்தியாக மாறும்படி நின்றேன்; எம்பிரானும் என்மேலே காதல் உள்ளவன் ஆனன்; ஆதலால், எத்தகைய பெரிய பாவங்களைச்

---

1. ஆயின், இவர் கண்டாரோ? எனின், 'அந்தத் துவாரத்தின் மத்தியில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

தஸ்யமத்யே வஹ்நிசிகா அணீய ஊர்த்வா வ்யவஸ்திதா:
நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா
நீவார சூகவத் தன்வீ பீதாபா ஸ்யாத் தனூபமா.

இது, தைத்திரீய நாராயண உபநிடதம்.

2. இவ்வுடம்பு - ஆழ்வாருடைய திருமேனி. அவ்வுடம்பு - இறைவனுடைய திருமேனி.

செய்தவர்கட்கும் புண்ணியம் வாய்க்குமிடத்தில் வாய்த்தேவிடும் என்கிறார்.

**வி - கு :**—'எவ்விடத்தான்' என்பது, பரம பதத்திலே உள்ள தன்மையைக் காட்டுகிறது. பாவியர்க்கும், உம்மை, இழிவு சிறப்பு. வாய்க்கின்று என்பது, கின்று விகுதிபெற்ற விணையெச்சம்.

**ஈடு :**—ஏழாம்பாட்டு. [1] அவன் கிருபையாலே தாம் பெற்ற பேற்றினைக் கண்டு ஆச்சரியத்தை அடைந்தவராய்ப் பகவானுடைய கிருபை நடையாடாகிற்க, சிலர்க்கு 'நான் தீவினையேன்' என்று இழக்கவேண்டா என்கிறார்.

அம்மான் - சர்வேசுவரன். ஆழிப்பிரான் - கையும் திருவாழியுமான அழகை [2]நித்தியசூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்குமவன். அவன் எவ்விடத்தான் - அவன் எத்தகைய பெருமை பொருந்திய நித்தியசூரிகளால் ஆராதிக்கப் படுமவன். யான் ஆர் - நித்தியசம்சாரிகளுக்கும் இவ்வருகாய் இருந்தேன் யான். [3] **பிள்ளையமுதனார்**, 'அம்மான் ஆழிப்பிரான்' என்று மேலே காட்டி, 'யான் ஆர்' என்று குறையச் சொல்லிக் காட்டுவர். எம் மா பாவியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் - எல்லா வழியாலும் மஹாபாவத்தைப் பண்ணினவர்கள் பக்கலிலும் பகவானுடைய கிருபை பெருகப் புக்கால் தடை இல்லை கண்டீர். பகவானுடைய கிருபை பெருகப் புக்கால் [4] 'கரையிலே நின்றேம்' என்னத் தப்ப விரகு இல்லை. [5]நீர் கிட்டினபடி என்? என்ன, கைம்மா துன்பு

---

1. "விதி வாய்க்கின்று" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'அவன் கிருபையாலே' என்கிறார். 'தாம் பெற்ற பேற்றினை' என்றது, "என்மேலானே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. "எம் மா பாவியர்க்கும்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்துப் 'பகவானுடைய கிருபை' என்று தொடங்கி அருளிச் செய்கிறார்.

2. "அவன் எவ்விடத்தான்" என்றதனை நோக்கி, 'நித்தியசூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்குமவன்' என்கிறார். "பிரான்" என்பதனால், காட்சி கொடுத்துக் கொண்டிருத்தல் பெறுதும்.

3. மேலே அருளிச்செய்த பொருளுக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பிள்ளையமுதனார்' என்று தொடங்கி.

4. 'கரையிலே நின்றேம்' என்றது, கர்மமாகிய கரையிலே நின்றேம் என்று தப்ப விரகு இல்லை என்றபடி.

5. 'நீர் கிட்டினபடி என்?' என்றது, பகவானுடைய கிருபை எங்கும் பெருகுகிறபடியை நீர் அறிந்தபடி என்? என்னில் என்றபடி.

ஒழித்தாய் என்று - உயர்ந்த பிறவி ஆசாரம் ஞானம் இவைகள் ஒன்றும் இன்றிக்கே இருக்கின்ற யானையானது [1]மூற் பிறவியின் வாசனையாலே, மூட்பாய்ந்தவாறே, 'அம்மே!' என்பாரைப்போலே, நோவுபட்டவாறே திருவடிகளை நினைக்க, சர்வாதிகனை தான் தன் மேன்மை பாராமல் மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து காப்பாற்றிய நீர்மையை நினைத்து, 'இது ஓர் உபகாரம் இருக்கும்படியே!' என்று அந்த உபகாரத்தின் நினைவாலே அன்புள்ளவர்கள் சொல்லும் பாசுரத்தை அன்பு இல்லாத நான் சொன்னேன்.

கை தலை பூசல் இட்டே - [2]தலையிலே கையை வைத்து, வாயாலே கூப்பிட்டு என்னுதல்; மாறுதே அஞ்சலி செய்து என்னுதல்; தலையிலே வைத்த கை மாறாமல் என்னுதல். மெய்ம் மாலாய் ஒழிந்தேன் - [3]யானைக்கு உதவினது தங்களுக்கு உதவி செய்தது என்று இருக்கும் பரசம்ருத்தியேகப் பிரயோஜநர், அந்த உபகாரத்திற்குத் தோற்று உபகாரத்தின் நினைவாலே அஞ்சலிசெய்து சொல்லும் பாசுரத்தை, மனத்தொடு படாமலே சொல்லி அது நெஞ்சிலே ஊற்றிருந்து பொய்ம் மால் போய் மெய்ம் மாலாய் விழுந்தது. நன்று; அவன் உம்மளவில் செய்தது என்? என்ன, அருளிச்செய்கிறார் மேல்: எம்பிரானும் என் மேலானே-எனக்கு உபகாரகனேவனும், கலியர் சோறு கண்டாற்போலே என் பக்கலிலே வந்து மேல் விழுந்தான். என்றது, நான் மெய் சொன்ன

---

1. விலங்கு நினைத்தல் கூடுமோ? என்னும் விஞ்விற்கு விடை அருளிச் செய்கிறார் 'மூற் பிறவியின்' என்று தொடங்கி.

2. "கை தலை பூசல் இட்டே" என்றதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச் செய்கிறார். முதற் பொருள், பூசலிடுதல் - கூப்பிடுதல். இரண்டாவது பொருள், பூசலிடுதல் என்பது, கூட்டுகையாய், தலையிலே கையையும் கையையும் கூட்டி அஞ்சலி செய்து என்றபடி. மூன்றாவது பொருள், தம் எளிமை தோன்றக் கையைத் தலைமேலே கூட்டி வைத்து என்றபடி. "இட்டே" என்ற ஏகாரத்திலே நோக்காக 'மாறாமல்' என்கிறார்.

3. "கைம் மா துன்பொழித்தாய்" என்றதனைக் கடாகூடித்து "மெய்ம் மாலாய் ஒழிந்தேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'யானைக்கு' என்று தொடங்கி. பரசம்ருத்தியேகப் பிரயோஜநர் - பிறருக்கு வந்த நன்மைகளையே தமக்கு வந்ததாக நினைப்பவர்கள்; நித்தியசூரிகள். 'மனத்தொடு படாமலே சொல்லி' என்றது, இத்திருப்பதிகத்தின் முதற் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி.

அன்றேடு பொய் சொன்ன அன்றேடு வாசி அற என்றும் ஒக்க மெய்ம்மாலாய்ப் போருகின்றவன் விடுவானே என்றபடி. [1] இது இருந்த படியால், எம் மா பாவியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் - எவ்வளவு மஹாபாவத்தைப் பண்ணினார்க்கும் பகவானுடைய கிருபை பெருகாநின்றுள்ள இடத்தில் தப்ப விரகு இல்லை அன்றே. பூசல் இடுதல் - பிரசித்தமாகக் கூப்பிடுகைக்கும், ஒன்றேடு ஒன்று சம்பந்திக்கிறதற்கும் பேர். (7)

## 450.

மேலாத் தேவர்களும் நிலத்தேவரும் மேவித் தொழுஉம்
மாலார் வந்தினநாள் அடியேன் மனத்தே மன்னினார்
சேலேய் கண்ணி யரும்பெருஞ் செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய் தந்தையும் அவ ரேஇனி ஆவாரே.

பொ - ரை :—மேன்மை பொருந்திய நித்தியசூரிகளாலும் நிலத்தேவர்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்களாலும் பொருந்தி வணங்கப்படுகின்ற திருமால் ஆனவர், இப்பொழுது அடியேன் மனத்திலே வந்து நிலை நின்றார்; இனிமேல், சேல்போன்ற கண்களையுடைய பெண்களும் பெரிய செல்வமும் சிறந்த புத்திரர்களும் மேலான தாயும் தமப்பனும் அவரே ஆவார் என்க.

வி - கு :—நிலத்தேவர் - திருமாலடியார். மன்னுதல் - நிலை பெறுதல். 'சேல் ஏய்' என்பதில் 'ஏய்' உவம உருபு.

ஈடு :—எட்டாம்பாட்டு. [2] உபயவிபூதி நாதனானவன் என் பக்கலிலே மேல்விழுந்து என்னை விடாதே மனத்திலே புகுந்திருந்தான்; நானும், இனி நித்தியசூரிகளைப்போலே நித்திய சம்சாரத்தை விட்டு, அவனையே எல்லா உறவு முறையுமாகப் பற்றப் பார்த்தேன் என்கிறார்.

மேலாத் தேவர்களும் - நித்தியசூரிகளும். நிலத்தேவரும் - பூசுராரான ஸ்ரீவைஷ்ணவர்களும். மேவித் தொழுஉம் மாலார்-

---

1. "என்மேலானே" என்றதனைக் காரணமாகக் கொண்டு, "எம் மா பாவியர்க்கும்" என்றதனை, தொடங்கியதற்கு ஏற்ப முடிக்கிறார் 'இது இருந்தபடியால்' என்று தொடங்கி.

2. மேலாத் தேவர்களும், அடியேன் மனத்தே மன்னினார், சேலேய் கண்ணியரும் என்பன போன்றவைகளைக் கடாகூடித்து அவதாரிகை அருளிச் செய்கிறார். இடையிலே யுள்ள 'நானும், இனி நித்திய சூரிகளைப் போலே நித்தியசம்சாரத்தை விட்டு' என்பது, பொருளாற்றலால் பெறப்பட்ட பொருள்.

[1] இளையபெருமாளும், இடக்கை வலக்கை அறியாத குரங்கு களும் ஒக்க அடிமைசெய்தாற் போலே, இரண்டு உலகங்களில் உள்ளவர்களும் ஒருமிடறாகச் சேர்ந்து அடிமை செய்யும் சர் வாதிகளனவன். வந்து - தான் இருக்குமிடத்தே நான் செல் லுதல் தகுதியாக இருக்க, நான் இருந்த இடத்திலே தானே வந்து. இனநாள் - இப்போது. என்றது, முன்கணத்தில் அறி யாது இருக்க, இங்ஙனே விடிந்துகொண்டு நிற்கக் கண்டேன் என்றபடி. இப்படி வருகைக்குக் காரணம் என்? என்னில், அடியேன் - விட ஒண்ணுத சம்பந்தத்தை இட்டு வந்தான். வந்து செய்தது என்? என்னில், மனத்தே மன்னினார். [2] "மன்த்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள் தனத்துள் ளான்" என்கிறபடியே, பரமயோகிகள் நெஞ்சிலும், திருப்பாற் கடலிலும், பெரிய பிராட்டியார் திருமூலத்தடங்களிலும் இருக் கக்கூடிய அவன், நித்திய சம்சாரியாய்ப் போந்த என் நெஞ் சிலே தாவரத்தைப் போன்று நிலைபெற்று நின்றான்.

இனி, நீர் செய்யப் பார்த்தது என்? என்ன, இனி, இவனை ஒழிய எனக்கு ஒரு செயல் உண்டோ? என்கிறார் மேல்: சேல் ஏய் கண்ணியரும் - தங்கள் நோக்காலே துவக்கவல்ல பெண் களும். பெரும் செல்வமும் - நிரவதிகமான செல்வங்களும். நன் மக்களும் - குணங்களால் மேம்பட்ட புத்திரர்களும். [3]மேலாத் தாய் தந்தையும் - தங்கள் தங்களை அழித்து மாறியாகிலும் குழந்தைகளை நோக்கும் தாய் தந்தையர்களும் எல்லாம். இனி அவரே ஆவார் - இனி, அவரையே எனக்காகப் பற்றப் பார்த்தேன் என்கிறார். துக்கங்களைக் கொடுக்கக்கூடிய அவர் அவர்களுடைய சம்பந்தத்தால் துக்கப்படவேண்டா என்பார் '**அவரே** ஆவார்' எனப் பிரிநிலை ஏகாரங் கொடுத்து ஓதுகிறார். [4]"தாயும் தந்தையும் உடன் பிறந்தவனும் இருப்பிடமும் காப் பவனும் சிநேகிதனும் மோக்ஷ உலகமும் ஸ்ரீமந் நாராயண

---

1. நித்திய சூரிகளோடு சம்சாரிகளும் கலந்து தொழுகின்றமைக்கு எடுத் துக் காட்டு 'இளைய பெருமாளும்' என்று தொடங்கும் வாக்கியம்.

2. மூன்றாந் திருவந். 3.

3. புத்திரர்களை அழிய மாறி ஜீவிக்கும் தாய் தந்தையர்களை விலக்கு கிறது 'மேலாத் தாய் தந்தை' என்ற அடைமொழி.

4. சுபால உபநிடதம்.

ஞகவே இருக்கிறான்" என்பது உபநிடதம். [1] "யானே தசரத சக்கரவர்த்தியிடத்தில் தகப்பன் என்ற முறையைப் பார்க்கிறேன் இல்லை; எனக்கு ஸ்ரீ ராமபிரானே தமையனும் சுவாமியும் உறவினர்களும் தமப்பனுமாக இருக்கிறார்" என்றார் இளைய பெருமாள். (8)

## 451.

ஆவார் ஆர் துணை? என்று அலைநீர்க் கடலுள் எழுந்தும்
நாவாய் போல் பிற விக்கட லுள்நின்று நான்துளங்கத்
தேவார் கோலத் தொடும் திருச் சக்கரம் சங்கினொடும்
ஆஆ! என்று அருள் செய்து அடி யேனெடும் ஆனானே.

பொ - ரை :—துணை ஆவார் யார்? என்று, அலைகளையுடைய நீரையுடைய கடலிலே அழுந்துகின்ற கப்பலைப்போன்று, பிறவியாகிய பெருங்கடலுள் நின்று நான் நடுங்கிக் கொண்டிருக்க, தெய்வத் தன்மை பொருந்திய திருமேனியோடும் திருச்சக்கரத்தோடும் திருச்சங்கினோடும் அந்தோ! அந்தோ!! என்று இரங்கி வந்து அடியேனோடும் கலந்தான் என்கிறார்.

வி - கு :—நாவாய் என்றது, நாவாயிலுள்ளவர்களைக் குறித்தது. ஆகுபெயர். நான் துளங்க அருள்செய்து ஆனான் என்க. ஆஆ என்பன : இரக்கத்தைக் காட்டுகின்ற குறிப்பு இடைச்சொல்.

ஈடு :—ஒன்பதாம்பாட்டு. [2] பலசொல்வதனால் பயன் என்? நான் சம்சாரத்தில் பட்ட கிலேசம் எல்லாம் தீரும்படி தன் கிருபையால் பிரகிருதி சம்பந்தம் இல்லாத வடிவோடே வந்து கலந்தான் என்கிறார்.

துணை ஆவார் ஆர் என்று - துணை ஆவார் யார்? என்று. அலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக் கடலுள்

---

1. "அஹம் தாவத் மஹாராஜே பித்ருத்வம் நோபல க்ஷயே
பிராதா பர்த்தாச பந்துஸ்ச பிதாச மம ராகவ:"

இது, ஸ்ரீராமா. அயோத். 58 : 31.

நற்ரு தை நீ தனிநா யகன் நீ வயிற்றிற்
பெற்ரூயும் நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்ரு யீது கா ணுதி இன் றெனக் கை மறித்தான்
முற்ரு மதியம் மிலஞ்தான் முனிந்தா னே அனான்.

என்பது கம்ப ராமாயணம்.

2. நான்கும் ஐந்துமாகிய இரண்டு திருப்பாசுரங்கள் தவிர, மற்றைத் திருப்பாசுரங்களில் எல்லாம் தம்மோடே கலந்தமை சொல்லுகையாலே 'பல சொல்வதனால் பயன் என்?' என்கிறார். திருப்பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

நின்று நான் துளங்க - கொந்தளிப்பையுடைய கடலுக்குள்ளே அழுந்துகிற நாவாய்போலே, பிறவிப் பெருங்கடலிலே நின்று நான் நடுங்க. 'நாவாய் போல்' என்கிற இடத்தில், நாவாய் மாத்திரத்தை நினைத்தபோது, 'ஆவார் ஆர் துணை' என்ற தனைக் கரையிலே நின்றவர்களுடைய வார்த்தை ஆக்குக. [1] அதற்குக் கருத்து, நோவுபடாநிற்கவும் உணர்த்தி அற்று இருந்தபடியைத் தெரிவித்தபடி. நடுங்குகையாவது, அசைந்து வருகை. அன்றிக்கே, 'நாவாய்போல்' என்பதனைக் 'கட்டில் கத்துகிறது' என்பது போன்று ஆகுபெயராகக் கொண்டு, 'நாவாய்' என்பதற்கு, நாவாயிலே இருக்கின்ற மக்கள் என்று பொருள் கோடலுமாம். இவ்விதமான நடுக்கத்தில் சர்வேசுவரன் செய்தது என்? என்னில், தேவார் கோலத் தொடும் திருச்சக்கரம் சங்கினொடும் ஆஆ என்று அருள்செய்து அடியேனொடும் ஆனானே - [2] பிரகிருதி சம்பந்தம் இல்லாத திவ்விய உறுப்புக்களோடும் அவ்வுறுப்புக்களிற் சேர்ந்த திவ்விய ஆயுதங்களோடும்கூட வந்து, ஐயோ! ஐயோ! என்று என் பக்கலிலே கிருபையைச் செய்து என்னொடே வந்து கலந்தான்.

பின் இரண்டு அடிகட்கு, [3] "கையில் ஆழ்வார்களோடு பொருந்தினற்போலே என்னொடே வந்து கலந்தான்" என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான்

---

1. 'அதற்குக் கருத்து' என்றது, கரையிலுள்ளார் 'இதற்குத் துணை ஆவார் யார்' என்று நோவுபட வேண்டும்படி அசேதனமான நாவாய்போல் என்றதற்குக் கருத்து என்? என்றபடி. கரையிலே உள்ளார் வார்த்தை ஆக்குகின்ற காலத்தில் தம்முடைய நிலையைத் தாம் சொல்ல மாட்டாமையைக் கருத்தாகக் கொள்க. அசேதனத்துக்குத் "துளக்கம்" எது? என்ன, 'நடுங்குகையாவது, அசைந்து வருகை' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார். கப்பலிலே யுள்ள மக்களைச் சொல்லும்போது "துளக்கம்" என்றது, மன நடுக்கத்தை.

2. பின் இரண்டு அடிகட்கு இருவகையான நிர்வாஹங்கள்: எம்பெருமானார் நிர்வாகத்திலே நோக்காகப் பொருள் அருளிச்செய்கிறார் 'பிரகிருதி' என்று தொடங்கி.

3. அப்ராகிருதமாய் அழகிதான திருமேனியோடே திருவாழியோடும் ஸ்ரீ பாஞ்ச சன்னியத்தோடும் பொருந்தினற்போலே, அப்ராகிருத விக்கிரகத்தோடே என்னொடே வந்து கலந்தான் என்பது, ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளக் கருத்து. "அடியேனொடும்" என்ற உம்மையாலே, கையில் ஆழ்வார்களோடு சேர்ந்தாற் போலே என்னொடும் சேர்ந்தான் என்றபடி. "கோலத்தோடும்" என்ற உம்மை, அசை நிலை.

பணிப்பர். [1] இதனை எம்பெருமானுர் கேட்டருளி "இங்ஙனே யாக அடுக்கும், 'கூராரா ஆழி வெண்சங்கு ஏந்தி வாராய்' என்றுயிற்று இவர் ஆசைப்பட்டிருப்பது; ஆசைப்பட்டபடியே திவ்விய ஆயுதங்களோடே வந்து கலந்தான்" என்று அருளிச் செய்தார். இவர் தாம் [2] பூவேலைக்காரரைப் போலே, இவை காணுதபோது கைமேலே முடிவார் ஒருவரேயன்றே. [3] "கேச வன் தமர்" என்ற திருவாய்மொழி தொடங்கி லோபத்தாலே, கிருபையை, 'விதி' என்ற சொல்லால் சொல்லிப் போந்தவர், இப்பாசுரத்தில் அதனை 'அருள்' என்று வெளியிடுகிறார். [4] ஸ்வரூபத்திற்குத் தகுதியாகச் சேஷியாகவே வந்து கலந்தான் என்பார் 'அடியேனெடும் ஆனனே' என்கிறார். (9)

---

1. 'இதனை' என்றது, "திருச்சக்கரம் சங்கினெடும்" என்றதனைத் திருஷ்டாந்தமாக யோஜித்த ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகத்தைக் குறித்தபடி. எம் பெருமானுர் நிர்வாஹத்தில் "அடியேனெடும்" என்ற உம்மை, இழிவு சிறப்பு. "கூராராழி வெண்சங்கு" என்பது, திருவாய். 6. 9: 1.

2. பூ வேலைக்காரர் - அரசர்களுக்கு அவ்வக் காலங்களில் பூ இடாவிடில் குத்திக்கொண்டு முடியுமவர்கள். 'இவை காணுதபோது' என்றது, இவற் றைக் கைமேலே காணுதபோது என்றபடி. கைமேலே முடிவார் - என்ப தற்குப் போரிலே முடிவார் என்பது வேறும் ஒரு பொருள்.

3. "அருள்செய்து" என்ற இடத்தில் "விதி" என்ற சொல்லே அமைக்காததற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிறார் 'கேசவன்தமர்' என்று தொடங்கி. 'கேசவன்தமர்...தொடங்கி' என்றது, "கேசவன்தமர்" என்ற திருப்பதிகத்திலுள்ள "மதுசூதனே" என்கிற திருப்பாசுரம் தொடங்கி என்றபடி. 'தொடங்கி' என்றது, பின்னே வருகின்ற "என்றும் ஒன்றுகி", "கையார் சக்கரம்", "அம்மான் ஆழிப் பிரான்" என்ற திருப்பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றி. லோபத்தாலே - கிருபையை வெளியிட ஒண்ணுது என்ற லோபத்தாலே.

4. "அருள்செய்து" என்னும் வினையெச்சம், "அடியேனெடும் ஆனன்" என்பதில் "ஆனன்" என்ற வினையைக் கொண்டு முடிகிறது என்று தோன்றுவதற்காக "அருள்செய்து அடியேனெடும் ஆனன்" என்று மேலே அருளிச்செய்தார். இப்போது, "அடியேன்" என்ற பதத்திலே நோக்காக, அதற்கு மறுதலைப் பொருளாயுள்ள 'சேஷி' என்ற சொல்லைக் கொணர்ந்து கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஸ்வரூபத்திற்கு' என்று தொடங்கி.

## 452.

**ஆனன் ஆளுடையான் என்றஃ தேகொண் டுகந்துவந்து தானே இன்னருள்செய்து என்னை முற்றவும் தானனன் மீனுய் ஆமையு மாய் நர சிங்கமு மாய்க்குறளாய்க் கானுர் ஏனமுமாய்க் கற்கி யாம்இன்னம் கார்வண்ணனே.**

**பொ - ரை:**—மீனுகியும் ஆமையுமாகியும் நரசிங்கமுமாகியும் குட்டையனுகியும் காட்டில் வசிக்கும் பன்றியுமாகியும் இன்னம் கற்கியும் ஆகின்ற கார்வண்ணன், என்னை அடிமைகொண்டவன் ஆனன் என்றேன்; என்ற அந்த வார்த்தையை மட்டும் கொண்டு மகிழ்ந்து வந்து தானுகவே இனிய திருவருளைச்செய்து எனக்கு எல்லா உறவு முறையும் தானே ஆனன் என்கிறார்.

**வி - சு:**—என்ற அஃதே என்பது, 'என்றவஃதே' என்று வரல் வேண்டும், 'என்றஃதே' என வந்தது, தொகுத்தல் விகாரம். வந்து செய்த முற்றவும் ஆனன் என்க. என்னை: வேற்றுமை மயக்கம். எனக்கு என்பது பொருள். மீன் - மச்சம். ஆமை - கூர்மம். குறள் - வாமனம். ஏனம் - வராகம். கற்கி - கற்கி அவதாரம்; கற்கி - குதிரை.

**ஈடு:**—பத்தாம்பாட்டு. [1]சர்வேசுவரன் தன் கிருபையாலே ஐம்புல இன்பங்களில் ஈடுபாட்டை அறுத்துத் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பித்த மஹோபகாரத்தை நினைத்த க்ருதஜ்ஞதையே பற்ருசாக வந்து, என்னேடே நிரவதிக சம்ஶ்லேஷத்தைச் செய்தான் என்கிறார்.

ஆளுடையான் ஆனன் - என்னை அடிமை கொள்வான் ஆனன் என்று, அறியாதே இங்ஙனே ஒருவார்த்தை சொன்னேன். [2]என்ற அஃதே கொண்டு - என்று கூறிய இந்த வார்த்தை மாத்திரத்தையே கொண்டு. [3]நான் இப்படிச் சொல்லுகைக்குத் தான் செய்த கிருஷி முழுதையும் மறந்

---

1. மேல் திருப்பாசுரத்தையும் கடாக்ஷித்து, இத்திருப்பாசுரத்தில் முதல் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். க்ருதஜ்ஞதை - செய்ந்நன்றியறிதல். பற்ருசு - காரணம்.

2. "ஆனன் ஆளுடையான் என்று அஃதே கொண்டு" என்று பிரித்துப் பதிப்பித்துள்ள முன்னைய பாடம் சரியன்று.

3. "அஃதே" என்ற ஏகாரத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நான் இப்படிச் சொல்லுகைக்கு' என்று தொடங்கி. 'கிருஷி' என்றது, பின் இரண்டு அடிகளிற் கூறிய அவதாரங்களைத் திருவுள்ளம்பற்றி.

தான், [1] இந்த வார்த்தையையே குவாலாக நினைத்தான். உகந்து - பலத்தை அநுபவிக்கின்ற என்னது அன்றிக்கே, [2] சந்தோஷமும் தன்னதே ஆயிற்று. வந்து - [3] வருதலும் மாறுடிற்று. தானே இன் அருள் செய்து - [4] நான் வேண்டிக் கொள்ளாதிருக்கத் தானே தன்பேறாகத் திருவருளைச் செய்து. என்னை முற்றவும் தானானன் - [5] உள்ளோடு புறம்போடு வேற்றுமை அறக் கலந்தான் என்னுதல்; எனக்கு எல்லாவிதமான இனிய பொருள்களும் ஆனான் என்னுதல். அன்றிக்கே, என்னைத் தனக்கு எல்லாவிதமான இனிய பொருள்களாகவும் கொண்டான் என்னுதல். "ஆக முற்றும் அகத்து அடக்கி" என்றாரே அன்றோ முன்னரும்.

[6] மீனுய் - உலகில் உள்ள சாதிகட்கு எல்லாம் வேறுபட்டவனை தான், [7] ஞானத்தைக் கொடுக்கும் பொருட்டுத் தண்

---

1. 'இந்த வார்த்தையையே குவாலாக நினைத்தான்' என்றது, "கொண்டு" என்ற சொல்லுக்குக் கருத்து.

2. 'சந்தோஷமும்' என்ற உம்மையாலே, திருவுள்ளத்தானது அன்றிக்கே என்றபடி.

3. 'வருதலும் மாறுடிற்று' என்றது, சந்தோஷம் மாறுடினற்போலே, வருதலும் மாறுடிற்று என்றபடி.

4. 'நான் வேண்டிக் கொள்ளாது இருக்க' என்றது, "தானே" என்ற ஏகாரத்தின் பொருள். "இன்னருள்" என்றதனை நோக்கித் 'தன்பேறாக' என்கிறார்.

5. "என்னை முற்றவும் தானானன்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருள், என்னை - என்னோடு, முற்றவும் - உள்ளும்புறம்புமான எல்லாவிடத்திலும், தான் ஆனான் - தான் என்னோடு கலந்தான் என்பது. இரண்டாவது, என்னை - எனக்கு, முற்றவும் - எல்லாவிதமான இனிய பொருள்களும் தானானன் என்பது. மூன்றாவது, என்னைத் தனக்கு எல்லாவிதமான இனிய பொருள்களுமாகக் கொண்டான் என்பது. ஈற்றிலே கூறிய பொருளுக்குப் பிரமாணம், "ஆக முற்றும்" என்பது. இது, திருவாய்மொழி. 4. 3 : 3.

6. இந்த வார்த்தை மாத்திரத்தையே கொண்டு தன்பேறாக விரும்பக் கூடுமோ? என்ன, என்னைப் பெறுகைக்குப் பல காலம் எதிர் சூழல் புக்குத் திரிந்தவத ஞதலின், கூடும் என்கிறார் "மீனுய்" என்று தொடங்கி.

7. 'ஞானத்தைக் கொடுக்கும் பொருட்டு' என்றது, மச்சாவதாரமாகிப் பிரஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்த தன்மையைத் தெரிவித்தபடி.

> சூழிக் களிறுய்ய வெவ்வாய் முதலை துணித்தவுக்ர
> பாழித் திகிரிப் படையரங் கேசர் படைப்பவன்தன்
> ஊழிப் பொழுதொரு சேலாய் ஒருசெல் வுட்கரந்த
> ஆழிப் பெரும்புனல் காணுது தேடுவர் அவ்விடத்தே.

என்றார். திவ்ய கவியும்.

ணீரில் சஞ்சரிக்கின்ற சாதியன் ஆனன். ஆமையும் ஆய் - [1] எல்லாவற்றையும் தாங்கும் பொருட்டுக் கூர்மத்தின் வடிவை யுடையவன் ஆனன். நரசிங்கமும் ஆய் - உடனே விரோதி யைப் போக்குகைக்காக இரண்டு வடிவுகளைச் சேர்த்துக் கொண்டு வந்து பிறந்தான். குறள் ஆய் - கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு இரப்பாளன் ஆனன். கான் ஆர் ஏனமும் ஆய் - [2] பிறவிப் பெருங்கடலில் நின்றும் என்னை எடுக்கைக்கு வராகத்தினது உருவத்தைக் கொண்டான். [3] "ஸ்ரீ ராம பிரான் தன் திருமேனியின் ஒளியாலே தண்டகாரண்யத்தை விளங்கச் செய்துகொண்டு அப்போது தோன்றிய இளஞ் சந்திரனைப் போன்று காணப்பட்டார்" என்கிறபடியே, காடு

---

அருமறையார் இருக்கெசுர் சா மத்தி னேடும்
அதர்வணமா கிய சதுர்வே தங்கள் தம்மைத்
திருடிஎடுத் துக் கொண்டே உததி சேரும்
தீயனுக்கா மச்சாவ தார மாய்நீ
ஒருசெலுவிற் சமுத்திரத்தைச் சுருக்கி யே வைத்து
உக்கிரத்தாற் சோமுகா சுரனைக் கொன்றிட்டு
இருளறவே விதி படைக்க அவ்வே தத்தை
இரங்கி அளித் தனை அரியே! எம்பி ரானே!

என்னூர் பிறரும்.

1. திரிக்கின்ற பொற்குன் றழுந்தாமல் ஆமைத் திருவுருவாய்ப்
பரிக்கின்ற திற்பெரும் பாரமுண் டே பண்டு நான்மறைநூல்
விரிக்கின்ற உந்தி அரங்கேசர் தந்திரு மேனியின்மேல்
தரிக்கின் றது மகரக் கட லாடைத் தராதலமே.

என்பது, திருவரங்கத்துமாலை. 24.

2. இங்கே,

"தீசெங் கனலியும் கூற்றமும் ஞமனும்
மாசிலா யிரங்கதிர் ஞாயிறும் தொகூஉம்
ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு
கேழலாய் மருப்பின் உழுதோய் எனவும்"

என்ற பரிபாடற் பகுதியையும்,

'இவை கூடும் ஊழி முடிவினுள் ஏழும் ஒன்றுகிய ஆழிக்கண் அழுந்துகிற நிலமகளை அழகிய வராகமாகி மருப்பாற் பெயர்த்தெடுத்தோய்' என்ற அதன் உரையையும் நினைவு கூர்க.

3. "சேரபயன் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா
அத்ருஸ்யத ததாராமோ பாலசந்த்ர இவோதிதஃ"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 38: 15.

அடங்க மயிற்கழுத்துச் சாயல் ஆக்கும்படியான வடிவை யுடையவன் என்பார் 'கானுர் ஏனம்' என்கிறார். [1]காடு அடங்கக் கோலம் செய்தலைக் குறித்தபடி. அன்றிக்கே, மனித சஞ்சாரம் இல்லாத காட்டிலே வாழ்கின்ற ஏனம் என்பார் 'கானுர் ஏனம்' என்கிறார் என்னலுமாம்.

இன்னம் கற்கி ஆம் - [2]மேல் வரும் விரோதத்தைப் போக்குகைக்கும் இன்னம் கற்கியாக இருந்தான். என்றது, என் காரியம் சமைந்த பின்பும் "சம்சாரத்தில் நின்றும் கால் வாங்குந்தனையும் இவர்க்கு என் வருகிறதோ?" என்று கொண்ட குதை மாறுகின்றிலன் என்றபடி. [3]நான் தப்புகைக்குப் பிறந்த பிறவிகளைப் போலவே போரும் அவன் என்னைக் காப்பாற்றுவதற்காகப் பிறந்த பிறவிகளும். [4]நான் கர்மத்தாலே பிறந்த பிறவிகள் அடையத் தானும் அநுக்கிரஹத்தாலே பிறந்தான். கார் வண்ணனே - நீர்கொண்ட மேகம் போலே இருக்கின்றனத்தனை. மழை பெய்தானுய் இருக்கின்றிலன். வண்ணம் - ஸ்வபாவம். மீனுய் என்று தொடங்கி, என்னை முற்றவும் தான் ஆனன் என முடிக்க. (10)

## 453.

**கார்வண்ணன் கண்ணபிரான் கமலத்தடங் கண்ணன் தன்னை**
**ஏர்வள வொண்கழனிக் குருகூர்ச் சட கோபன் சொன்ன**
**சீர்வண்ண வொண்தமிழ்கள் இவையா யிரத்துள் இப்பத்தும்**
**ஆர்வண்ணத் தாலுரைப்பார் அடிக்கீழ்ப் புகுவார் போலிந்தே.**

**பொ - ரை:**—மேகம்போன்ற நிறத்தையுடையவனும், தாமரை போன்ற விசாலமான திருக்கண்களையுடையவனுமான கண்ணபிரானை,

---

1. 'காடு அடங்கக் கோலம் செய்தலைக் குறித்தபடி' என்றதில், 'கோலம்' என்பது, சிலேடை: அழகு என்றும், வராகம் என்றும் பொருள்.

2. 'மேல் வரும் விரோதத்தைப் போக்குகைக்கும்' என்ற உம்மை, மேலே கூறிய 'விரோதியைப் போக்குகைக்காக இரண்டு வடிவுகளைக் கொண்டான்' என்றதனைத் தழுவுகின்றது. கொண்ட குதை - கொண்ட உத்யோகம்.

3. பல அவதாரங்களைக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நான் தப்புகைக்கு' என்று தொடங்கி.

4. இருவர் பிறவிகட்கும் காரணம் யாது? என்ன, 'நான் கர்மத்தாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

ஏர்களையுடைய வளம்பொருந்திய அழகியனவான வயல்களாற் சூழப் பட்ட திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப் பட்ட சீர்களோடும் வண்ணங்களோடும் கூடின தமிழ்ப்பாசுரங்கள் இவை ஆயிரத்துள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களையும் அமிருத பானம் பண்ணுவாரைப்போன்று விருப்பத்துடன் சொல்லுகின்றவர் கள், பொலிந்து இறைவன் திருவடிகளை அடைவார்கள் என்றவாறு.

**வி - கு:**—கமலத் தடங் கண்ணனுகிய கண்ணபிரான் என்க. கண்ணபிரானைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன தமிழ்கள் என்க. தமிழ்கள் - தமிழ்ப் பாசுரங்கள். இப்பத்தையும் உரைப்பார் பொலிந்து அடிக் கீழ்ப் புகுவார் என்க. அடிக் கீழ் - திருவடிகளிலே. கீழ்: ஏழாம் வேற்றுமை உருபு. ஆர் வண்ணம் - பருகுகிற வண்ணம். ஆர்தல் - பருகுதல்; அல்லது, புசித்தல். வண்ணம் - வகை. "பருகுவன் அன்ன ஆர்வத்தனுகி" என்றார் நன்னூலார்.

**ஈடு:**—முடிவில், [1] இந்தப் பத்தையும் கற்கவல்லவர்கள், தனக்குமேல் ஒன்று இல்லாததான ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை யுடையராய் அவன் திருவடிக் கீழே புகப்பெறுவர் என்கிறார்.

கார்வண்ணன் - காளமேகம் போலே சிரமஹரமான வடிவையுடையவன். கண்ணபிரான் - கிருஷ்ணனுய் வந்து அவதரித்து அவ்வடிவை என்னை அநுபவிப்பித்தவன். கமலத் தடங்கண்ணன்தன்னை - [2] மலர்ந்த தாமரைத் தடாகம்போலே குளிர்ந்து செவ்வியையுடைத்தான திருக்கண்களையுடையவன். அன்றிக்கே, வடிவு முழுதும் கண்களாய் இருக்கிறபடி. [3]மேலே "நிறமுடை நால்தடந்தோள்" என்று தமக்குக் காட்டிச் சமா தானம் செய்த வடிவைக் கூறியபடி. ஆக, இவர் சரீரத்தின் சம்பந்தத்தை நினைத்து அஞ்சினபோது, சிரமஹரமான வடி வைக் காட்டித் தன்னை [4] முழுக்கக் கொடுத்துத் திருக்கண்க ளாலே குளிர நோக்கி நின்ற நிலையைத் தெரிவித்தவாறு.

---

1. "உரைப்பார் பொலிந்து அடிக்கீழ்ப் புகுவார்" என்றதனைக் கடாகூவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கமலத்தடம்" என்பதற்கு, இருவகையான பொருள் அருளிச் செய்கிறார். ஒன்று, மலர்ந்த தாமரைகளையுடைய தடாகம் என்பது. மற் றொன்று, தடம் - விரிவு. கமலம் - தாமரை.

3. இப்போது வடிவழகையும் கண்ணழகையும் அருளிச்செய்வதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி.

4. 'முழுக்கக் கொடுத்து' என்றது, "பிரான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

ஏர்வளம் ஒண் கழனிக் குருகூர்-நிறைந்த ஏர்களையுடைய தாய் அழகியதான வயலோடே கூடின திருநகரி. 'வளம்' என்று மிகுதிக்கும் அழகுக்கும் பேர். இங்கு மிகுதியைச் சொல்லுகிறது. சீர் வண்ணம் ஒண் தமிழ்கள் - [1] சீரியதான பிரகாரத்தையுடைய அழகிய தமிழ் என்னுதல்; கவிக்கு உறுப்பான [2] சீரையும் வண்ணத்தையுமுடைய அழகிய தமிழ் என்னுதல். 'சீர்' என்பது, செய்யுளில் ஏகதேசம். வண்ணம் - ஓசை. ஆர் வண்ணத்தால் - நிறைவாக என்னுதல். ஆர்தல் - பருகுதலாய், [3] "தொண்டர்க்கு அமுது உண்ண" என்கிறபடியே, பருகுவாரைப் போலே என்னுதல். என்றது, மிக்க ஆசையோடு உரைத்தலைக் குறித்தபடி. பொலிந்தே அடிக்கீழ்ப் புகுவார் - [4] நம்பிக்கை மாத்திரமேயாய் ருசி இன்றிக்கே இருக்கப் போய்ப் புகுதல் அன்றிக்கே, எம்பெருமானரைப் போலே நூறு ஆண்டுகள் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயோடே இருந்து, பின்பு தாய் நிழலிலே ஒதுங்குவாரைப் போலே அவன் திருவடிகளிலே புகப் பெறுவர். (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக் கேஇருக்கப்
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றை உபகரித்த பேரருளின் தன்மைதனைப்
போற்றினனே மாறன் பொலிந்து. (41)

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'சீரியதான பிரகாரம்' என்றது, ஆழ்வார், பிரபந்தம், பிரபந்தத்தில் சொல்லப்பட்ட பொருள் இவற்றினுடைய சீர்மையைக் குறித்தபடி.

2. 'சீர்' என்றது, ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் என்பனவற்றை. 'வண்ணம்' என்றது, "தாஅவண்ணம்" முதலான இருபது வண்ணங்களை.

3. திருவாய். 9. 4: 9.

4. "பொலிந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நம்பிக்கை மாத்திரமேயாய்' என்று தொடங்கி. 'நம்பிக்கை மாத்திரமேயாய்' என்றது, 'பேறு தப்பாது' என்ற நம்பிக்கை மாத்திரமேயாய் என்றபடி.

# இரண்டாந் திருவாய்மொழி — "பொலிக பொலிக"

## முன்னுரை

ஈடு :—[1] "ஆழ்வாருடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயைக் காண்கைக்காக நித்தியசூரிகள் இங்கே வர, அவர்களைக் கண்டு மங்களாசாசனம் செய்கிறார் இத்திருவாய்மொழியால்" என்று, ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிப்பர். அங்ஙன் அன்றிக்கே, "'நண்ணுதார் முறுவலிப்ப' என்ற திருவாய்மொழியிலே, சம்சாரிகள் படுகிற கிலேசத்தை நினைத்து, அதற்குப் பரிஹாரமாக, 'ஒன்றும் தேவும்' என்ற திருவாய்மொழியிலே பகவானுடைய பரத்துவத்தை எடுத்துப் பேசித் திருத்த, அதனாலே திருந்திச் சம்சாரம் பரமபதம் என்ற வேறுபாடு இல்லாமல் அங்குள்ளாரும் இங்கே வரலாம்படி இருக்கிற இருப்பைக் கண்டு மங்களாசாசனம் செய்கிறார்" என்று, இங்குள்ளார் பக்கலிலே பிராதாந்யம் தோற்ற எம்பெருமானார் அருளிச்செய்வர்.

[2]தாம் பகவானுடைய பரத்துவத்தை எடுத்துப் பேச அதனாலே திருந்தின சத்துவகுணமுடையார் அடங்கலும் எங்கும் பரந்திருக்கிறபடியையும், குறிக்கோளின்மையாலும் அறிவின்மையாலும் இராஜசராயும் தாமசராயுமுள்ளார் குறைந்தவர்களாயிருக்கிற படியையும், சத்துவகுணமுடையார் மேற்

---

1. இத் திருவாய்மொழிக்கு இரண்டுவகையாக அவதாரிகை அருளிச் செய்கிறார். 'ஆழ்வாருடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை' என்றது, ஆழ்வார் உபதேசத்தாலே திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கூட்டத்தைத் தெரிவித்தபடி. 'நித்தியசூரிகள் இங்கே வர' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "தேவர்கள் தாமும் புகுந்து", "நேமிப்பிரான் தமர் போந்தார்" என்னும் பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்திலே நித்தியசூரிகளுக்குப் பிராதாந்யம் தோற்றும். இதனால், "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழிக்கும், இத்திருவாய்மொழிக்கும் நேரே பொருள் இயைபு தோன்றும். இடையேயுள்ள "கையார் சக்கரம்" என்ற திருவாய்மொழி, பிராசங்கிகம். (இடைப்பிறவரல்.)

2. பாசுரங்களிற் கூறப்படும் பொருள்களை உட்கொண்டு அவற்றை விவரணம் செய்கிறார் 'தாம் பகவானுடைய' என்று தொடங்கி. "கடல் வண்ணன் பூதங்கள்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிச் 'சத்துவ குணமுடையார்' என்றும், "மலியப் புகுந்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'எங்கும் பரந்திருக்கிறபடியையும்' என்றும், "உள்ளீரேல்" என்றதனை நோக்கிக் 'குறைந்தவர்களாயிருக்கிறபடியை' என்றும், அருளிச்செய்கிறார். 'சத்துவகுணமுடையார் மேற்கொண்டதாகையாலே' என்றது, "மேவித்

கொண்டதாகையாலே 'உத்தம தர்மமான ஸ்ரீவைஷ்ணவ தர்மமே பிரசித்தமாய்ப் போருகிறபடியையும், அதற்கு மாறு பட்ட தர்மங்கள் மறைந்தவைகளாய்ப் போருகிற படியையும், தேச காலங்கள் அதிகாரிகள் அங்கங்கள் என்கிறவற்றுக்கு உண்டான நன்மைகள் [1] "எல்லாத் தர்மங்களுக்குள்ளே வைஷ்ணவ தர்மம் உத்தமமானது" என்கிறபடியே, [2] பகவானுடைய பரிசத்தாலேயாயிருக்கிறபடியையும், [3] அது இல்லையாகில் எல்லா நன்மைகளும் உண்டானாலும் அவை அடையத் தண்ணியனவாயிருக்கிறபடியையும் சொல்லி, தம்மாலே திருந்தின [4] ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவடிகளிலே விழுந்தும், திருந்

---

தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகே" என்றதனைத் திருவுள்ளம் பற்றி. "பெரியதிருமொழி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'உத்தம தர்மமான ஸ்ரீவைஷ்ணவ தர்மமே பிரசித்தமாய்ப் போருகிறபடியையும்' என்கிறார். 'அதற்கு மாறுபட்ட தர்மங்கள் மறைந்தவைகளாய்ப் போருகிறபடியையும்' என்றது, "திரியும் கலியுகம் நீங்கி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. அன்றி, "சமயத்தை எல்லாம் எடுத்துக் களைவன போலே" என்றதனைத் திருவுள்ளம் பற்றி எனலுமாம். 'தேச காலங்கள்' என்றது "மண்மேல், கலியும் கெடும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. இவை இரண்டும், அதிகாரி அங்கங்களுக்கும் உபலக்ஷணம்.

1. சர்வேஷாம் இவ தர்மாணாம் உத்தமோ வைஷ்ணவோ விதிஃ
ரக்ஷதே பகவாந் விஷ்ணுஃ பக்தாந் ஆத்ம சரீரவத்"

என்பது, பாரதம் மோக்ஷதர்மம். ஸ்ரீவைஷ்ணவ தர்மம் உத்தமமான தர்ம மானபடி என்? என்னில், ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சர்வேசுவரன் "ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்" (பகவத்கீ. 7: 18.) என்று, தனக்குத் தாரகமாகக் கொள்ளுகையாலே என்க.

2. பாகவதர்களுடைய பரிசத்தாலே என்னவேண்டியிருக்க, அங்ஙனம் கூறுது, பாகவதர்களுக்குப் பகவானோடு உண்டான அழிதலில்லாத சம்பந்தத் தைத் திருவுள்ளம்பற்றிப் 'பகவானுடைய பரிசத்தாலே' என்கிறார்.

3. பகவானுடைய சம்பந்தம் உண்டாலல் தேச காலங்களுக்கு நன்மை உண்டு என்று சொல்லுகையாலே, இந்தச் சம்பந்தம் இல்லாதபோது அவற்றால் பயன் இல்லை என்ற பொருளும் தோன்றுகையாலே, அதனை அருளிச்செய் கிறார் 'அது இல்லையாகில்' என்று தொடங்கி. அது - பகவானுடைய சம்பந்தம். அவை - தேச காலங்கள்.

4. 'ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவடிகளிலே விழுந்தும்' என்றது, "தொழுது தொழுது நின்று ஆர்த்தும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. "தொழுதுய்மினீரே", "உய்யும் வகை இல்லை" என்பனவற்றைத் திரு வுள்ளம்பற்றித் 'திருந்துகைக்குத் தகுதியுடையாரை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

துகைக்குத் தகுதியுடையாரைத் திருத்தியும், திருந்தாதாரை உபேக்ஷித்தும், இப்படி, கூட்டங் கூட்டமாக நிறைந்திருக்கும் பாகவதர்களைக் கண்டு மங்களாசாசனம் செய்கிறார்.

---

## 454.

**பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்**
**தலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்று மில்லை**
**கலியுங் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்**
**மலியப் புகுந்திசை பாடி ஆடி உழிதரக் கண்டோம்.**

**பொ - ரை:**—கடல்போன்ற நிறத்தையுடைய சர்வேசுவரனுடைய அடியார்கள் பூமியின்மேலே கூட்டம் கூட்டமாகப் புகுந்து இசையோடு பாடி ஆடிச் சஞ்சரிக்கக் கண்டோம்; ஆதலால், உயிரைப் பற்றியுள்ள வலிய பாபங்கள் அழிந்தன, எல்லாரையும் வருத்துகின்ற நரகலோகமும் கட்டு அழிந்துபோயிற்று, யமனுக்கு இந்த உலகத்தில் ஒரு வேலையும் இல்லை, இவற்றிற்கெல்லாம் காரணமான கலிகால தோஷமும் கெடும், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கோள்; பொலிக! பொலிக!! பொலிக!!!

**வி - சே:**—பொலிதல் - நீடுவாழ்தல். உயிர் வல் சாபம் போயிற்று என்க. பூதங்கள் - பாகவதர்கள். உழிதரல் - சஞ்சரித்தல்.

இத் திருவாய்மொழி, அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

**ஈடு:**—முதற்பாட்டு. [1] ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கூட்டத்தைக் கண்டு மங்களாசாசனம் செய்கிறார்.

பொலிக பொலிக பொலிக - நீடுழி வாழவேண்டும், நீடுழி வாழவேண்டும், நீடுழி வாழவேண்டும். "சாந்திः சாந்திः சாந்திः" என்று வைதிகமான மங்களாசாசனங்கள் மும்முறை சொல்லக்கடவதாயிருக்குமேயன்றே? ஆதலால், '**பொலிக பொலிக பொலிக**' என்கிறார். "பெரியாழ்வாரைப்போலே முற்படப் பகவானுடைய நிறைவிற்கு மங்களாசாசனம் செய்து, பின்பு பாகவதர்களுடைய கூட்டத்திற்கு மங்களாசாசனம் செய்ய வேண்டாவோ?" என்ன, அப்படியே யன்றே செய்தது,

---

1. "கடல் வண்ணன் பூதங்கள்", "பொலிக பொலிக பொலிக" என்பனவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

[1] "வீற்றிருந்தேழுலகு" என்ற திருவாய்மொழியில் பகவானுடைய நிறைவிற்கு மங்களாசாசனம் செய்தார்கண்டீரே; பின்னை இத்திருவாய்மொழியிலே பாகவதர்களுடைய கூட்டத்திற்கு மங்களாசாசனம் செய்கிறார்" என்று நஞ்சீயர் அருளிச்செய்தார். [2] **பரமாசாரியரான இவரைப் பின் சென்றுரித்தனை காணும் பெரியாழ்வாரும்.** உயிர் வல் சாபம் போயிற்று - உயிரினுடைய வலிய சாபம் போயிற்றது. [3] சாபத்தாலே பற்றப்பட்டவரைப்போலே அநுபவித்தால் அல்லது அழியாதது ஆகையாலே, பாபத்தைச் '**சாபம்**' என்கிறார். அன்றிக்கே, [4] ஆத்மாவைப் பற்றிக் கிடக்கிற அவித்யை முதலானவைகள் போயிற்றன என்னுதலுமாம். நலியும் நரகமும் நைந்த - கர்மங்களுக்குத் தகுதியாகச் சேதனர்களைக் கொண்டுபோய் வருத்துகின்ற [5] நரகங்களும் சிதிலமாயின. [6] நரக அநுபவத்திற்கு ஆள் இல்லாமையாலே, நரகங்களும் கட்டி மேய்க்கை தவிர்ந்து கோப்புக் குலைந்தன. ஆயின், அவ்விடங்கட்கு அதிகாரிகளாயிருக்குமவர்கள் செய்வன என்? என்னில், இங்கு நமனுக்கு யாது ஒன்றும் இல்லை - யமனும் தனக்கு அடைத்த இந்நிலத்தில் ஆராயலாவது ஒன்று இல்லை; இனிப் பரமபதத்தில் சென்று ஆராயில் ஆராயுமத்தனை என்பார் "இங்கு" என்கிறார். தர்ம புத்திரனுக்கும் ஒருகால் நரகலோகத்தைக் காணு

---

1. "வீற்றிருந்தேழுலகும்" என்ற திருவாய்மொழியில் "போற்றி என்றே" என்று பகவானுடைய நிறைவிற்கு மங்களாசாசனம் செய்தமையை உளங்கோடல் தரும்.

2. 'பெரியாழ்வாரைப் போலே' என்று, அவரை நம்மாழ்வார்க்குத் திருஷ்டாந்தமாக்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பரமாசாரியரான' என்று தொடங்கி.

3. பாவத்தைச் "சாபம்" என்ற சொல்லால் கூறல் பொருந்துமோ? என்னும் வினவிற்கு விடை அருளிச்செய்கிறார் 'சாபத்தாலே' என்று தொடங்கி.

4. இரண்டாவது பொருளில் "சாபம்" என்பது தொகுதி ஒருமை. சாபங்கள் என்பது பொருள்.

5. "நரகம்" என்றதனைத் தொகுதி ஒருமையாகக் கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'நரகங்கள்' என்று.

6. பாவங்கள் போன மாத்திரத்திலே, நரகங்கள் அழியக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நரக அநுபவத்திற்கு' என்று தொடங்கி.

தல் செய்யவேண்டியிருந்ததே யன்றே, [1] அதற்கும் ஆள் இல்லை என்பார் 'யாது ஒன்றும் இல்லை' என்கிறார்.

இவை எல்லாம் உண்டாவன கிருத யுகத்திலே அன்றே, கலியுகத்திலே உண்டாவன ஆமோ? என்னில், கலியும்கெடும்- அந்தக் கலிகாலமும் அழிந்து போகும். மேலே சொல்லிக் கொண்டு போந்தவற்றை இறந்த காலத்திலே ஆக்கி, 'கலியும் கெடும்' என்ற இதனை எதிர்காலத்திலே ஆக்கி நிர்வஹிக்கவு மாம். அன்றிக்கே, இவையும் எல்லாம் போயிற்றன, 'கலியும்' நசித்தது என்றே இருக்க அமையும் என்று, இங்ஙனே [2] ஒரே நீதியாகச் சொல்லவுமாம். நன்று; கலிக்கு அடைத்த காலமாய் இருக்கச் செய்தே, 'கெடும்' என்பது என்? என்னில், கண்டு கொண்மின் - அநுபவத்தாலே அறியுமதற்கு உபதேசம் வேணுமோ? நீர் 'இது கெடும்' என்று சொல்லுகிறது என் கொண்டு? என்னில், 'கடல் வண்ணன்' என்று தொடங்கி, விடை அருளிச்செய்கிறார் மேல்: [3] "எந்தத் தேசத்தில் திரு வட்டாக்ஷர மந்திர சித்தியையுடைய பெருமை பொருந்திய பாகவதர்கள் வசிக்கின்றார்களோ அங்கு வியாதி துர்பிக்ஷம் களவு முதலானவை நடமாடுகின்றன இல்லை" என்கிறபடியே, பாகவத சஞ்சாரம் இல்லாமையே யன்றே இப்பொல்லாங்கு கள் உண்டாவதற்குக் காரணம், அவர்கள் சஞ்சாரம் உண் டான பின்பு இவை நிற்குமோ? கடல் வண்ணன் பூதங்கள் - அவனுடைய சிரமஹரமான வடிவழகை அநுசந்தித்து அத னாலே தங்கள் சத்தையாம்படி இருக்குமவர்கள். "பூ ஸத்தா

---

1. 'அதற்கும்' என்றது, தர்மபுத்திரனைப்போல் ஒருகால் நர தரிசனம் செய்கைக்கும் என்றபடி.

2. 'ஒரே நீதியாக' என்றது, மேலே உள்ள "போயிற்று, நைந்த" என்ற பதங்களோடே சேரும்படி இதனையும் இறந்த காலமாகவே கொண்டு பொருள் கூறுதல் என்றபடி. கெடும் - கெட்டது என்றபடி.

3. பாகவதர்களுடைய சஞ்சாரம் உண்டானால் பொல்லாங்குகள் போமோ? என்ன, 'போகும்' என்பதனைப் பிரமாணத்தோடு எடுத்துக் காட்டுகிறார் 'எந்தத் தேசத்தில்' என்று தொடங்கி.

"யத்ர அஷ்டாக்ஷர சம்சித்தோ மஹாபாகோ மஹீயதே
ந தத்ர சஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கராஃ"

என்பது சுலோகம்.

யாம்" என்று தாதுவாகையாலே, அவன் சத்தையே சத்தை யாய் அறுகையாலே 'பூதம்' என்ற சொல் அடியார்களைக் காட்டுகிறது. மண் மேல் - அவன் அழகிலே தோற்றிருப்பவர் கள் உள்ளது பரமபதத்திலே அன்றோ? என்ன, இங்கே என்று படி எடுத்துக் காட்டுகிறார்.[1] பகவானுடைய அநுபவத் திற்கு மேட்டுமடையான சம்சாரத்திலே மருபூமியில் தண்ணீர் போலே எங்கேனும் ஒருவர் இருவர் உண்டாமத்தனையன்றோ? என்ன, மலியப் புகுந்து -[2] "அடியார்கள் குழாங்கள்" என் கிறபடியே, நெருங்கப் புகுந்து. இசை பாடி ஆடி உழிதரக் கண்டோம் - சந்தோஷத்தின் மிகுதியாலே பாடுவது, உடம்பு இருந்த இடத்திலே இராமல் ஆடுவதாய்க் கொண்டு, [3]யமன் முதலானோர்கள் தலைமேலே அடியிட்டுச் சஞ்சரிக்கக் கண் டோம். உழிதருகை - பயம் இல்லாமல் எங்கும் சஞ்சரித்தல்.

கடல் வண்ணன் என்று தொடங்கி, உழிதரக் கண்டோம், வல்வுயிர்ச் சாபம் போயிற்று, நலியும் நரகமும் நைந்த, நம னுக்கு இங்கு யாது ஒன்றும் இல்லை, கலியும் கெடும், கண்டு கொண்மின், பொலிக பொலிக பொலிக என்று கூட்டுக. (1)

## 455.

**கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்**
**தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின் றுர்த்தும்**
**வண்டார் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்**
**பண்தாம் பாடிநின்று ஆடிப் பரந்து திரிகின் றனவே.**

**பொ - ரை:**—கண்டோம் கண்டோம் கண்டோம், கண்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய கூட்டங்களைக் கண்டோம்; தொண்டீர்! எல்லீரும் வாருங்கோள்; தொழுது தொழுது ஆரவாரிப்போம்; வண்டு

---

1. "மலியப் புகுந்து" என்பதற்கு, அவதாரிகை, 'பகவானுடைய' என்று தொடங்கும் வாக்கியம்.

மருபூமி - நீரும் நிழலும் அற்ற நிலம். "மலையும் மறிகடலும் வனமும் மருநிலமும்" என்பது, கம்பராமா. மூலபல. 158. "நீரும் நிழலும் இல்லா மரு நிலம் என்பார், 'மண்' என்றார்" என்பது, பரிமேலழகருரை. (குறள். 742.)

2. திருவாய். 2. 3 : 10.

3. "காவலில் புலனே வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட் டுழிதரு கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே"
என்பது, திருமாலை.

கள் படிந்திருக்கின்ற குளிர்ந்த அழகிய திருத்துழாயைத் தரித்தவனை சர்வேசுவரனுடைய அடியார்கள் இந்த உலகத்திலே பண்ணோடு பாக்களைப் பாடிக்கொண்டு நின்று ஆடிக்கொண்டு எங்கும் பரந்தவர்களாய்த் திரிகின்றார்கள்.

வி - கு:—'பூதங்கள்' என்பது சொல்லால் அஃறிணையாதலின், 'திரிகின்றன' என அஃறிணைச்சொல்லால் முடிந்தது.

ஈடு:—இரண்டாம்பாட்டு. [1] இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கூட்டத்தை அநுபவிப்பதற்கு அநுகூலர் எல்லாரும் வாருங்கோள் என்கிறார்.

கண்டோம் கண்டோம் கண்டோம் - காணப்பெற்றோம். பிரீதியின் மிகுதியாலே, பலகாலும் சொல்லுகிறார். கண்ணுக்கு இனியன கண்டோம் - [2] "கொடு உலகம் காட்டேலே" என்கிறபடியே, பாகவதர் அல்லாதாரைக் கண்ட இன்னற்புத் தீர, பாகவதர்களுடைய கூட்டத்தைக் காணப்பெற்றோம். தொண்டீர் எல்லீரும் வாரீர் - பாகவதர்கள் விஷயத்தில் ஆசையுள்ளவர்களாய், [3] "பேராளன் பேர் ஒதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே" என்று இருப்பார் அடையத் திரளுங்கோள். 'வாருங்கோள்' என்பது, என்ன பிரயோஜனத்துக்கு? என்னில், தொழுது தொழுது நின்று ஆர்த்தும்-பிரயோஜனத்துக்குப் பிரயோஜனம் தேடவேணுமோ? கைமேலே பிரயோஜனமன்றோ. 'தொழுது தொழுது' என்ற அடுக்குத் தொடரால், அதுதானே பிரயோஜனமாயிருக்கிறது என்பதனைத் தெரிவித்தபடி. ஆர்த்தும் என்றது, ஆர்த்துக் கொள்ளுவோம்; சந்தோஷத்தோடு கூட ஆரவாரம் செய்வோம் என்றபடி.

வண்டு ஆர் தண் அம் துழாயான் மாதவன் பூதங்கள் - வண்டுகள் மாறுதபடியான செவ்வித் துழாய் மாலையையுடையனுய், திருமகள் கேள்வன் ஆகையாலே வந்த ஏற்றத்தையுடை

---

1. "மாதவன் பூதங்கள், தொண்டீர் எல்லீரும் வாரீர்" என்பனவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. திருவாய். 4. 9 : 7,

[3] 'பாகவதர்களுடைய கூட்டம்' என்றது, "இனியன" என்ற பன்மையைத் திருவுள்ளம்பற்றி.

3. பெரிய திருமொழி. 7. 4 : 4.

யனுய் இருக்கிறவனுடைய [1] ஸ்ரீயஃபதித்வத்திலும் ஒப்பனேயிலும் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். மண்மேல் பண்தாம் பாடி நின்று ஆடிப் பரந்து திரிகின்றனவே - [2] "ஒண் தொடியாள் திருமகளும் நீயுமே" என்னும் தேசம் ஒழிய, அதற்கு மாறுபட்ட பூமியிலே, வேறு ஒன்றனலே தாண்டப் பட்டவர்களாய் அன்றிக்கே தங்கள் பிரீதிக்குப் போக்கு விட்டு, பண்மிகும்படி நின்று [3] தாங்களே பாடி, அது இருந்த இடத்தில் இருக்க ஒட்டாமையாலே ஆடி, பரந்து திரிகின்றார்கள்.

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம் தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்று ஆர்த்தும் எனக் கூட்டுக. (2)

## 456.

திரியுங் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருகக்
கரிய முகில்வண்ணன் எம்மான் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்திசை பாடி எங்கும் இடம்கொண் டனவே.

**பொ - ரை:**—பொருள்களின் தன்மையை மாற்றுகின்ற கலியுகம் நீங்கும்படியாகவும், பெருமை பொருந்திய கிருதயுகத்தின் தன்மையை யுடைத்தாய்ப் பேரின்ப வெள்ளம் பெருகும்படியாகவும், நித்தியசூரிகளும் புகும்படியாகவும், கரிய முகில்வண்ணனும் கடல்வண்ணனும் எம்மானுமாகிய சர்வேசுவரனுடைய அடியார்கள் இந்த உலகத்தின் மேலே ஆவாரம் உண்டாகும் படியர்கப் புகுந்து இசையோடு பாடி எல்லா இடங்களேயும் தங்களுக்குரிய இடங்களாகக் கொண்டார்கள்.

**வி - சூ:**—நீங்கி, தேவர்கள் தாமும் புகுந்து என்னும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களேச் செய என்னும் வாய்பாட்டு எச்சமாகத் திரித்துக்கொள்க. நீங்கப் புகப் பெருகக் கடல் வண்ணன்

---

1. "மாதவன்" என்ற பதத்தை நோக்கி 'ஸ்ரீயஃபதித்வத்திலும்' என்றும், "வண்டார் தண்ணம் துழாயான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஒப்பனேயிலும்' என்றும் அருளிச்செய்கிறார்.

2. திருவாய். 4. 9 : 10.

3. 'தாங்களே பாடி' என்று பொருள் அருளிச்செய்வதனால், "பண் தாம் பாடி" என்ற பாடமே எற்புடைத்து. "பண்தான் பாடி" என்பது, இப் பொழுதுள்ள பாடம்.

பூதங்கள் மண்மேல் எங்கும் இடம் கொண்டன என்க. பூதங்கள் கொண்டன என்க.

ஈடு:—மூன்றும்பாட்டு. [1] நித்தியசூரிகளும் புகுந்து பரிமாறும்படி சம்சாரம் அடைய ஸ்ரீ-வைஷ்ணவர்களேயானார்கள் என்கிறார்.

திரியும் கலியுகம் நீங்கி - [2] "கலியுகத்தில் தந்தையின் வார்த்தையைப் புத்திரன் கேட்கமாட்டான், மருமகளும் மாமியார் வார்த்தையைக் கேட்கமாட்டாள், உடன் பிறந்தவர்களும் மூத்தவன் வார்த்தையைக் கேட்கமாட்டார்கள், வேலைக்காரர்கள் யஜமானன் வார்த்தையைக் கேட்கமாட்டார்கள், மனைவி கணவன் வார்த்தையைக் கேட்கமாட்டாள், இப்படிக் கீழ் மேலாக மாறும்படி ஆகப்போகிறது" என்கிறபடியே, பொருள்களின் ஸ்வபாவமானது மாறுடும்படியான கலிகாலமானது கழிந்தது. அன்றிக்கே, போவது வருவதாகத் திரிகின்ற கலிகாலம் என்னலுமாம். தேவர்கள் தாமும் புகுந்து - இவ்வருகில் உண்டாக்கப்பட்டவர்களான இந்திரன் முதலான தேவர்கள்; அன்றிக்கே, அவர்கள் சம்பந்தம் சிறிதும் பொறுக்கமாட்டாமல் [3] வாந்தி பண்ணும் நித்தியசூரிகளும் அகப்பட 'இவ்விடம் சம்சாரம்' என்று பாராமல் புகுந்து. பெரிய கிதயுகம் பற்றி - கலிகாலம் முதலிய காலங்களால் மறைக்கப்படுதல் இல்லாத

---

1. "தேவர்கள் தாமும் புகுந்து, எங்கும் இடம் கொண்டன" என்பன வற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ந ச்ருண்வந்தி பிதுஃ புத்ரா ந ஸ்நுஷா ந சகோதராஃ
ந ப்ருத்யா ந களத்ராணி பவிஷ்யதி அதர உத்தரம்"

என்பது, பாரதம் மோக்ஷ தர்மம்.

முதற்பெருந் தேவெனும் முகுந்தன் பூசனை
அதர்ப்பட ஆற்றிடார் அரிய மாமறை
விதத்தொடு முரணிய விரியும் ஆகம
மதத்தொடு மருவுவர் மாக்கள் என்பவே.
மைந்தர்தம் மாமியர் மாம னுர்சொலச்
சிந்தைஉண் மகிழ்ந்துதீங் கெனினும் செய்குவர்
தந்தையர் தாயர்சொற் சார்ந்து கேட்கலர்
நிந்தனை புரிகுவர் நிலத்தின் என்பவே.

என்பன, பாகவதம் பன்னிரண்டாங் கந்தம் கலிதன்மம் உரைத்த அத்.செய். 15. 20.

3. 'வாந்தி பண்ணும்' என்றது, தாழ்வினை நோக்கி.

[1] ஒரு போகியான கிருதயுகத்தையுடையராய். பற்றி - பற்றின வராய்; இது, தேவர்களுக்கு அடைமொழி. [2] அன்றிக்கே, ஆப்பான் 'ஆதி கிருஷ்டியில் கிருதயுகத்தைக் காண் சொல்லு கிறது' என்பராம். இங்கு, பற்றி என்பதற்குத் தொடங்கி என் பது பொருள். பேர் இன்ப வெள்ளம் பெருக-அந்தம் இல்லாத பேரின்ப வெள்ளம் இங்கே உண்டாகும்படி. பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக - ஆதிகிருதயுகம் தொடங்கி நடுவுள்ள கலிகாலத்தின் தோஷங்கள் தெரியாதபடி பேரின்ப வெள்ளம் பெருகிற்று. [3] 'கிண்ணகம் இத்தைப் பற்றிப் பெரு கிற்று' என்னக் கடவதன்றே. [4] அன்றிக்கே, பற்றி என்ப தற்கு, கலியைப் போகப்பற்றி என்றும், கிருதயுகத்தைப் புகுரப்பற்றி என்றும் பொருள் கூறலுமாம். கரிய முகில் வண் ணன் எம்மான் கடல் வண்ணன் பூதங்கள் - [5] "மேகஸ்யாமம் - நீருண்டமேகம்போல் கரிய" என்கிற வடிவைக் காட்டி என்னை

---

1. 'ஒரு போகியான கிருதயுகத்தை யுடையராய்' என்பது முடிய, ஒரு கருத்து. இக் கருத்திற்கு, "தேவர்கள் தாமும் புகுரலாம்படியாகவும், பேரின்ப வெள்ளம் பெருகலாம்படியாகவும், திரியும் கலியுகம் நீங்க, பெரிய கிதயுகத்தையுடையரான கரியமுகில் வண்ணன் எம்மான் கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல் இரியப் புகுந்து இசைபாடி எங்கும் இடம் கொண்டன" என்று சொற்களைப் பிரித்துக் கூட்டிப் பொருள் காண்க.

2. 'அன்றிக்கே' என்று தொடங்குவது, வேறு ஒரு கருத்து, இக் கருத்திற்கு 'திரியும் கலியுகம் நீங்க; பெரிய கிதயுகம் தொடங்கிப் பேரின்ப வெள்ளம் பெருகலாம்படியாகவும், தேவர்கள் தாமும் புகுரலாம்படியாகவும், கரிய முகில் வண்ணன் பூதங்கள் எங்கும் இடம் கொண்டன' என்று கூட்டிப் பொருள் காண்க.

3. "பற்றி" என்ற சொல் 'தொடங்கி' என்ற பொருளில் வருவதற்கு மேற்கோள், 'கிண்ணகம்' என்று தொடங்கும் வாக்கியம். கிண்ணகம் - ஆற்றுப் பெருக்கு.

4. "பற்றி' என்பதற்கு, மூன்றாவதாக ஒரு பொருள் அருளிச்செய் கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'கலியைப் போகப் பற்றி' என்றது, கலியுகம் போய் என்றபடியாய் 'கலியுகம் நீங்கி' என்றதனைக் காட்டியபடி. 'கிருத யுகத்தைப் புகுரப் பற்றி' என்றது, கிருதயுகம் வந்து என்றபடி. ஆக, "பற்றி" என்றதற்கு, உடையராய் என்றும், தொடங்கி என்றும், வந்து என்றும் மூன்று பொருள்கள் அருளிச்செய்தவாறு.

5. திருமேனிக்கு உவமை சொல்லுமிடத்து இரண்டனுள் ஒன்றனைக் கூறாது, முகில், கடல் என்னும் இரண்டனையும் சொல்லுவான் என்? என்னும் சங்கையிலே முன்னையதைத் திருஷ்டாந்தமாக்கி அருளிச்செய்கிறார் 'மேகஸ் யாமம்' என்று தொடங்கி.

"மேகஸ்யாமம் மஹாபாஹும் ஸ்திரசத்வம் த்ருடவ்ரதம்
கதா த்ரக்ஷ்யா மஹேராமம் ஜகதஃ சோகநாசனம்"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 83 : 8.

எழுதிக்கொண்டாற் போன்று, எழுதிக்கொள்ளும் சிரமஹர மான வடிவிலே தோற்று இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். மண்மேல் இரியப் புகுந்து -[1] பெரிய ஆரவாரத்தோடே சஞ் சரிப்பது நித்திய விபூதியிலே யன்றே; சம்சாரத்திலே ஆரவா ரத்தோடே புகுந்து. இசை பாடி - பகவானை அநுபவிப்பத னால் உண்டாகும் பிரீதியாலே பாடி. எங்கும் இடம் கொண்ட னவே - எங்கும் தங்களுக்கு இடமாக்கக் கொண்டார்கள். புறச் சமயத்தாருக்கும் குத்ருஷ்டிகளுக்கும் இடம் இல்லாதபடி. [2] சிஷ்யர்களும் சிஷ்யர்களுக்குச் சிஷ்யர்களுமாக எங்கும் பரந்தார்கள். [3] "வானரங்களால் சூழப்பட்டுள்ள மதில் அகழி இவற்றின் பிரதேசங்களை, வானரங்களால் செய்யப்பட்டது போல் இருக்கிற பிராகாரமாக அரக்கர்கள் கண்டார்கள்" என்கிறபடியே, பிரதிகூலர்க்கு இடம் இல்லாதபடி ஆயிற்று என்றபடி. (3)

## 457.

**இடங்கொள் சமயத்தை எல்லாம் எடுத்துக் கலவன போலே**
**தடங்கடற் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்க ளேயாய்க்**
**கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பலபல பாடி**
**நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின் றனவே.**

**பொ - ரை:**—எல்லா இடங்களையும் தமக்கு உரிய இடமாகக் கொண்டுள்ள புறச்சமயங்களை எல்லாம் பறித்துப் போகடுமாறு போன்று, விசாலமான கடலிலே யோக நித்திரை செய்கின்ற சர்வேசு வரனுடைய அடியார்களேயாகிக் கிடந்தும் இருந்தும் எழுந்தும் பலப் பல இசைகளைப் பாடிக்கொண்டு நடந்தும் பறந்தும் ஆடியும் நாடகம் செய்யாகின்றார்கள்.

---

1. "மண்மேல்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பெரிய ஆரவாரம்' என்று தொடங்கி.

2. "கொண்டன" என்ற பன்மையின் பொருளை விரிக்கிறார் 'சிஷ்யர் களும்' என்று தொடங்கி.

3. பரந்ததற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'வானரங்களால்' என்று தொடங்கி.

"கிருத்ஸ்நம் ஹி கபிபிஃ வியாப்தம் பிராகார பரிகாந்தரம்
தத்ருஶுஶ் ராக்ஷசா தீநாஃ பிராகாரம் வாநரீகிருதம்"

என்பது, ஸ்ரீராமா. யுத்.141 ; 97.

வி - கு :—தடம் கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்கள் இடங்கொள் சமயத்தை எல்லாம் எடுத்துக் களைவனபோலே ஆய் காடகம் செய்கின்றன என முடிக்க. பூதங்கள் செய்கின்றன என்க.

ஈடு :—நான்காம்பாட்டு. [1] அசைக்க முடியாதவாறு வேர் ஊன்றியிருக்கின்ற புறச் சமயங்களை எல்லாம் வேரோடே அறுப்பாரைப்போன்று எங்கும் வைஷ்ணவர்களேயாகி, பகவானுடைய குணங்களை அநுபவிப்பதனால் உண்டாகின்ற சந்தோஷத்தாலே களித்துத் திரியாநின்றார்கள் என்கிறார்.

இடம் கொள் சமயத்தை எல்லாம் எடுத்துக் களைவன போலே - பயிர் தேயும்படி களை வளருமாறு போலே, சத்துவ குணத்தையுடைய பெரியோர்கள் ஒதுங்கும்படி வளருகின்ற புறச் சமயங்களை எல்லாம் பறித்துப் போகடுவாரைப்போலே. 'போலே' என்பான் என்? என்னில், சத்துவ குணமுடைய பெரியோர்கட்குப் 'பிறரை நலியவேணும்' என்ற ஓர் எண்ணம் இல்லையேயன்றே; [2] நெற்செய்யப் புற்றேயுமா போலே, இவர்கள் ஊன்ற ஊன்ற அவர்கள் தாமாகவே தேய்வார்கள் அத்தனை. தடம் கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய் - [3] தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பிக் கண் வளர்ந்தருளுகைக்கு ஈடான பரப்பையுடைய திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற அழகை நினைத்து, [4] "பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும், காலாழும் நெஞ்சு அழியும் கண்சுழலும்" என்று அதிலே ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களேயாய். கிடந்தும் இருந்தும் எழுந்தும் நீதம் பல பல பாடி நடந்தும் பறந்தும் குனித்தும் - தங்களுக்கு விருப்பமான எல்லாக் காரியங்களுக்கும் தகுதியாம்படி பூமியைக் கைக்கொண்டு, ஒவ்வோர் இடத்திலே கிடந்தும், ஒவ்வோர் இடத்திலே இருந்தும், ஒவ்வோர் இடத்திலே நின்றும், பகவானுடைய அநுபவத்தின் மிகுதியால் வந்த களிப்

---

1. பாசுர முழுதினையும் கடாகூடித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "இடம் கொள்" என்றதனை நோக்கி 'அசைக்க முடியாதபடி' என்கிறார்.

2. "நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்"

என்பது, பழமொழி நானூறு. 83.

3. திருவாய். 8. 10 : 8.

4. பெரிய திருவந். 34.

பிஞல் பலப்பல பாட்டுக்களைப் பாடியும், மனத்தைக் கொள்ளை கொள்ளும்படியாக உலாவியும், கால் தரையிலே பாவாதபடி பரபரப்போடு நிருத்தம் செய்தும். நாடகம் செய்கின்றன - இவர்கள் செய்யும் காரியம் இவர்க்கு வல்லார் ஆடினற்போலே இருக்கை. [1]"எம்பெருமானுடைய நிற்றல் நடத்தல் படுத்தல் முதலியவைகளை நாம் கொண்டாடுமாறுபோலேயும், ஆளவந்தாருடைய நடையை அரசன் கொண்டாடினற் போலேயும் இவர் கொண்டாடுகிறபடி" என்று அருளிச்செய்வர் நஞ்சீயர். (4)

## 458.

**செய்கின்ற தென்கண் ணுக் கொன்றே ஒக்கின்ற திவ்வுல கத்து வைகுந்தன் பூதங்க ளேயாய் மாயத்தி னுல்எங்கும் மன்னி ஐயமொன் றில்லை அரக்கர் அசுரர் பிறந்தீர்உள் ளீரேல் உய்யும் வகைஇல்லை தொண்டீர் ஊழி பெயர்த்திடுங் கொன்றே.**

**பொ - ரை :**—இதர விஷயங்களில் தொண்டு பூண்டு இருப்பவர்களே! இவர்கள் செய்கின்றது என்னுடைய கண்களுக்கு ஒரு காரியத்தைச் செய்வதுபோன்று இருக்கின்றது; அது யாது? எனின், இந்த உலகத்திலே ஸ்ரீ வைகுண்டநாதனுடைய அடியார்களேயாகித் தங்கள் இச்சையாலே எங்கும் நிலைபெற்று உங்களையும் கொன்று இந்தக்காலத்தையும் மாற்றி விடுவார்கள்போலே இருக்கின்றது; இதில் சந்தேகம் இல்லை; ஆதலால், அரக்கர்களாயும் அசுரர்களாயும் பிறந்தவர்களாய் இருப்பீர்களேயானல், உங்களுக்குப் பிழைத்தற்குரிய வழியில்லை என்றவாறு.

**வி - கு :**—தொண்டீர்! செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே ஒக்கின்றது; இவ்வுலகத்து, வைகுந்தன் பூதங்களேயாய் மாயத்தினுல் எங்கும் மன்னிக் கொன்று ஊழி பெயர்த்திடும்; ஐயம் ஒன்று இல்லை; அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல் (உங்களுக்கு) உய்யும் வகை இல்லை என்று கூட்டுக. மன்னி - மன்னுதலால். கொன்று ஊழி பெயர்த்திடுவார்கள் என்க.

---

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய செயல்கள் இவர்க்கு மனக் கவர்ச்சியாக இருப்பதற்குத் திருஷ்டாந்தங்கள் காட்டுகிறார் 'எம்பெருமானுடைய' என்று தொடங்கி.

ஈடு :—ஐந்தாம்பாட்டு. [1] ஸ்ரீ வைஷ்ணவர்கள், அசுர இராக்ஷசரான உங்களையும் முடித்து யுகத்தையும் பேர்ப்பர்கள் என்கிறார்.

செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே ஒக்கின்றது - செய்கிறபடி. [2] பார்த்தேனுக்கு என் கண்களுக்கு ஒன்று போலே இராநின்றது. என்போலே இராநின்றது? என்றால், இவ் வுலகத்து வைகுந்தன் பூதங்களேயாய் - பகவானுடைய குணங்களுக்கு மேட்டுமடையான சம்சாரத்தில், நித்தியவிபூதியில் இருப்புக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களேயாய். மாயத்தினால் எங்கும் மன்னி - [3] "மாயா வயுநம் ஞானம்" என்கிறபடியே, இச்சை என்ற பொருளைக் குறிக்கிற ஞானத்தாலே. இச்சையாலே எங்கும் புகுந்திருந்து. ஐயம் ஒன்று இல்லை - 'இங்கே இருந்தே அவ்விருப்புக்குத் தோற்றிருப்பார்கள்' என்றதில் ஒரு சந்தேகம் இல்லை. அன்றிக்கே, 'பேர்த்திடும்' என்னுமதில் ஒரு சந்தேகம் இல்லை என்னலுமாம். அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல் உய்யும்வகை இல்லை - இராக்கதத்தன்மை வாய்ந்தவர்களாயும் ஆசுரத்தன்மை வாய்ந்தவர்களாயும் இருப்பார் மனித சரீரத்தை ஏறிட்டுக் கொண்டு, [4] 'ஸ்ரீ வானர சேனையின் நடுவே சுக ஸாரணர்கள்

---

1. "வைகுந்தன் பூதங்கள், அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல் உய்யும் வகை இல்லை ஊழி பெயர்த்திடும் கொன்றே" என்பனவற்றைக் கடாகூடித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பார்த்தேனுக்கு என் கண்களுக்கு - பார்க்கின்றேனான என்னுடைய கண்களுக்கு. 'ஒன்று போலே இராநின்றது' என்றது, "ஒன்றே ஒக்கின்றது" என்றதற்குப் பொருள். 'என் போலே இராநின்றது' என்பதனை, பின்னே வருகின்ற "ஊழி பெயர்த்திடும்" என்றதனோடு கூட்டுக. என்றது, ஸ்ரீ வைஷ்ணவர்கள் உங்களையும் கொன்று ஊழியையும் பெயர்ப்பார்கள் போன்று இராநின்றது என்றபடி. "வைகுந்தன்" என்றதனை நோக்கி 'நித்திய விபூதியில் இருப்புக்கு' என்கிறார்.

3. மாயை என்பதற்கு, இச்சை என்பது பொருள். அச்சொல் அப் பொருளில் வருவதற்கு மேற்கோள், 'மாயா வயுனம் ஞானம்' என்பது. இது, நிகண்டு. இம்மூன்று சொற்களும் ஒரு பொருளன. இச்சையாலே - எங்கும் பரந்து சென்று திருத்தவேணும் என்னும் இச்சையாலே.

4. 'ஸ்ரீ வானர சேனையின் நடுவே சுக சாரணர்கள் புகுந்தாற் போலே' என்றது, இராவணனுடைய ஒற்றர்களான சுகன் சாரணன் என்னும் இருவரும் குரங்கு உருக்கொண்டு குரங்குகளின் நடுவே புகுந்தாற்போலே என்றபடி.

புகுந்தாற்போலே புகுரப் பார்த்தீர் உளராகில் உங்களுக்கு உஜ்ஜீவிக்க விரகு இல்லை. என்றது, "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழியைக் கேட்டுச் சம்சாரம் திருந்தினபடி. [1] "வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல்" என்று தேடவேண்டாதே, எல்லாரும் வாழாட்பட்டு, 'அரக்கர் அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்' என்று தேடவேண்டும்படியாயிற்று என்றபடி. தொண்டீர் ஊழி பெயர்த்திடும் கொன்றே - [2] "பிறர்க்குத் தொண்டு செய்தல் நாய்த்தொழிலாகும்" என்கிற மற்றை விஷயங்களிலே தொண்டு பட்டிருக்க உங்களைக் கல்பந்தானே வருத்திக் கொண்டு தானும் பேரும் என்னுதல்; அன்றிக்கே, வைகுந்தன் பூதங்கள் உங்களையும் கொன்று ஊழியையும் பேர்ப்பர் என்னுதல். (5)

## 459.

**கொன்றுயிர் உண்ணும் விசாதி பகைபசி தீயன எல்லாம்**
**நின்றிவ் வுலகில் கடிவான் நேமிப் பிரான்தமர் போந்தார்**
**நன்றிசை பாடியும் துள்ளி ஆடியும் ஞாலம் பரந்தார்**
**சென்று தொழுதுய்ம்மின் தொண்டீர்! சிந்தையைச் செந்நிறுத் தீயே.**

**பொ - ரை:**—உயிரைக் கொன்று உண்ணுகின்ற நோய் என்ன, பகை என்ன, பசி என்ன, மற்றும் தீயனவாயுள்ளன எவை எவை உள்ளனவோ அவை எல்லாவற்றையும் இவ்வுலகத்தில் விடாமல் நின்று போக்குவதற்காக, சக்கரத்தைத் தரித்த சர்வேசுவரனுடைய அடியார்கள் வந்தார்கள்; வந்து செய்த காரியம் யாது? எனின், இசை பாடியும் துள்ளி ஆடியும் இவ்வுலகத்திலே பெரிதும் பரந்தார்கள்; தொண்டீர்! மனத்தைச் செந்நெறியிலே நிறுத்திச் சென்று தொழுது உஜ்ஜீவிப்பீர்களாக என்கிறார்.

**வி - சூ:**—இவ்வுலகில் நின்று கடிவான் என்று மாற்றுக. போந்தார் பரந்தார் - போந்தார்களாகிப் பரந்தார்கள். போந்தார்: முற்றெச்சம். நன்று பரந்தார் எனக் கூட்டுக. "நன்று பெரிது" என்பது தொல்காப்பியம். தொண்டீர் சிந்தையைச் செந்நிறுத்தித் தொழுது உய்ம்மின் என்க.

**ஈடு:**—ஆரும்பாட்டு. [3] எல்லாத் துக்கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீ வைஷ்ணவர்கள் உலகமடையப் பரந்தார்கள்;

---

1. திருப்பல்லாண்டு. 2.
2. "சேவா ஸ்வ விருத்திஃ"
3. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அவர்க்ளோடே நீங்களும் அவனை அடைந்து உஜ்ஜீவியுங் கோள் என்கிறார்.

கொன்று [1]உயிர் உண்ணும் விசாதி - சரீரத்தின் பிரிவினைப் பிறப்பித்துப் பிராணன்களைக் கொள்ளை கொள்ளும்படியான வியாதி. அன்றிக்கே, பிராணனைப் பிரித்துச் சரீரத்தை முடிக்கும் வியாதி என்னுதல். இப்பொருளில், உயிர் என்பதற்குச் சரீரம் என்பது பொருள். பகை பசி - [2]அப்படிச் செய்யும் பகையும் பசியும். இப்படிப் பிரித்துச் சொல்லுகிறது என்? தீயன எல்லாம் - [3]தண்ணியவை எல்லாம். நின்று இவ்வுலகில் கடிவான் - இவ்வுலகில் விடாமல் நின்று போக்குகைக்காக. [4]நேமிப் பிரான் தமர் போந்தார் - கையும் திருவாழியுமான அழகிலே தோற்றிருக்குமவர்கள் வந்தார்கள். போந்த நேமிப் பிரான் தமர், நன்று இசை பாடியும் துள்ளி ஆடியும் ஞாலம் பரந்தார் - நன்றான இசை பாடியும், பரபரப்போடு நிருத்தம் பண்ணியும், இப்படிப் பூமி அடையப் பரந்தார்கள். சென்று தொழுது உய்ம்மின் - [5]அவர்கள் பாடே சென்று அவர்களைத் தொழுது உஜ்ஜீவித்துப் போங்கோள் என்னுதல். அவர்களோடே சென்று சர்வேசுவரனை அடைந்து உஜ்ஜீவித்துப் போங்கோள் என்னுதல். தொண்டீர் - தக்க தல்லாத விஷயத்தில் தொண்டுபட்டிருக்கிற நீங்கள். என்றது, [6]திருந்துகைக்கு யோக்கியதையுடைய நீங்கள் என்றபடி.[7]அது செய்யுமிடத்தில்,

---

1. "உயிர்" என்பதற்கு, இரண்டு பொருள்: ஒன்று, பிராணன். மற்றொன்று, சரீரம்.

2. "கொன்று உயிர் உண்ணும்" என்பதனைப் "பகை பசி" கட்டும் அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்கிறார் 'அப்படிச் செய்யும்' என்று தொடங்கி.

3. தண்ணியவை - தாழ்ந்தவை.

4. நேமிப் பிரான் தமர் - ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹத்திலே நித்திய சூரிகள். எம்பெருமானார் நிர்வாஹத்திலே ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

5. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாஹம், 'அவர்கள் பாடே சென்று' என்று தொடங்கும் வாக்கியம். எம்பெருமானார் நிர்வாஹம், 'அவர்களோடே சென்று' என்று தொடங்கும் வாக்கியம். பாடு - பக்கம்.

6. 'திருந்துகைக்கு யோக்கியதையுடைய நீங்கள்' என்றது, சிற்றின்ப விஷயத்திலே யாகிலும் சேஷத்வத்துக்கு இசைகையாலே, திருந்துகைக்கு யோக்கியதையுடைய நீங்கள் என்றபடி.

7. அது செய்யுமிடத்தில் - அந்த ஆஸ்ரயணத்தைச் செய்யுமிடத்தில்.

சிந்தையைச் [1]செந்நிறுத்தியே-தொழுத பின்னர் "எனக்கு ஒன்று தா, உனக்கு ஒன்று தருகிறேன்" என்னுமல் வணங்குங்கோள் என்கிறார். (6)

## 460.

நிறுத்திநும் உள்ளத்துக்கோள்ளும் தெய்வங்கள் உம்மைக் உய்யக்கோள்
மறுத்தும் அவனெடே கண்டீர் மார்க்கண் டேயனும் கரியே
கறுத்த மனம்ஒன்றும் வேண்டா கண்ணன்அல் லால்தெய்வம் இல்லை
இறுப்பதெல் லாம்அவன் மூர்த்தி யாயவர்க் கேஇறு மீனே.

**பொ - ரை:**—உங்கள் உள்ளத்திலே நிறுத்திக் கொள்ளுகின்ற தெய்வங்கள் உங்களை உஜ்ஜீவிப்பித்துக் கொள்ளுவதும் மீண்டும் அவன் திருவருளாலே யாகும்; அதற்கு மார்க்கண்டேயனே சான்று ஆவான்; தண்ணிய மனம் சிறிதும் வேண்டாம்; கண்ணபிரானைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லை; ஆதலால், உங்களால் செய்யப்படுகின்ற நித்திய நைமித்திக கர்மங்கள் எல்லாவற்றையும் சர்வேசுவரனுக்குச் சரீரமாக இருப்பவர்கள் இந்தத் தேவர்கள் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு இடுங்கோள் என்கிறார்.

**வி - கு:**—நிறுத்திக் கொள்ளும் தெய்வங்கள் உம்மை உய்யக் கொள்வது அவனெடே கண்டீர் என்க. 'அவனெடே' என்றதி, அவன் திருவருளாலே யாகும் என்றபடி. கரி - சான்று. 'கறுத்த' என்பது, ஈண்டுக் குற்றத்தைக் காட்டுகின்றது. இறுத்தல் - கொடுத்தல். அவன் மூர்த்தியாயவர் - அவனுக்குச் சரீரமாக இருப்பவர்கள்.

**ஈடு:**—ஏழாம்பாட்டு. [2]நாங்கள் பலநாள் தேவதைகளுக்குப் பச்சை இட்டு ஆராதித்துப் போந்தோம்; அதன் முடிவு கண்டு, பின்பு பகவானைப் பற்றுகிறோம் என்ன, நீங்கள் ஆராதிக்கின்ற தேவதைகள் உங்களைக் காப்பாற்றுவதும் அவன் பக்கலிலே கொடு சென்று காட்டிக் கொடுத்தாயிற்று, ஆன

---

1. செந்நிறுத்தி - செவ்வையாக நிறுத்தி. சிந்தைக்குச் செவ்வையாவது, வேறு பிரயோஜனங்களை விரும்பாமை என்று கொண்டு, அதனை அருளிச் செய்கிறார் 'தொழுத பின்னர்' என்று தொடங்கி. "தேஹி மே ததாமி தே."

2. "அவனெடே கண்டீர்" என்கையாலே, விஞ்ஞும் விடையுமாக அருளிச்செய்கிறார் 'நாங்கள்' என்று தொடங்கி. இந்தப் பொருள், "ஓடி ஓடி" என்ற பாசுரத்திலும் சொல்லிற்றே? என்னில், அங்கு, அவர்களை ஆஸ்ரயித்தால் பலம் இல்லை என்றது; இங்கு, தேவர்கள் சர்வேசுவரன் பக்கலிலே கொடுபோய்ச் சேர்ப்பர்கள் என்கையாலே கூறியது கூறல் இல்லை.

பின்பு, [1]அவனையே ஆராதிக்கப்பெறில் அழகிது; அதுவும் மாட்டீர்கோளாகில், நீங்கள் அவர்களுக்கு இடுகிறவற்றை 'இவர்கள் அவனுக்குச் சரீரமாயுள்ளவர்கள், இவர்கள் முகத்தாலே நாம் பகவானை ஆராதிக்கிறோம்' என்று புத்தி பண்ணியாகிலும் இடுதற்குப் பாருங்கோள் என்கிறார்.

நிறுத்தி - [2]தியானம் செய்தற்குரிய பொருளை நிலைத்திருக்கச் செய்கையும் தியானம் செய்கிறவனுக்கே பாரமாயிற்று. தியானம் செய்கிற இவன் எடுத்த நிறுத்த, நிற்கின்றவையே யன்றோ அந்தத் தெய்வங்கள். நும் உள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள் - உங்களுடைய இருதயங்களிலே கொள்ளுகின்ற தேவதைகள். 'புறம்பே சிலர் அறியில் பரிஹசிப்பர்கள்' என்று தாங்களே அறிந்ததாக உபாசிப்பவர்கள் என்பார் 'உள்ளத்துக் கொள்ளும்' என்கிறார். உம்மை உய்யக்கொள் - உங்களை உஜ்ஜீவிப்பித்துக் கொண்டார்கள் ஆகிறபடி. மறுத்தும் அவனையே கண்டீர் - நீங்கள் 'அவனிலும் இவர்கள் அடையத் தக்கவர்கள்' என்று பற்ற, இவர்கள் உங்களை அவன் பக்கலிலே கொண்டுபோய் அன்றோ காப்பாற்றுவது. [3]"காப்பாற்றுவதில் நிலைநிற்கின்றவரும் எல்லா ஆதீமாக்களுக்கும் ஈசுவரனும் மஹாத்மாவாயும் இருக்கிற விஷ்ணுவைத் தவிர, காப்பாற்றும் திறன் வேறு ஒருவர்க்கும்

---

1. 'அவனையே ஆராதிக்கப் பெறில் அழகிது' என்றது, மேற்பாசுரத்தில் "சென்று தொழுதுய்மின்" என்றதனைக் கடாகூடித்து. 'அவனுக்குச் சரீரமாயுள்ளவர்கள்' என்றது, "அவன் மூர்த்தியாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. இவன் நிறுத்தவேண்டுமோ? தாங்களாகவே நிற்க மாட்டார்களோ? என்ன, 'தியானம் செய்தற்குரிய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. ரக்ஷணதர்மம் மற்றைத் தேவர்கட்கு இல்லையோ? என்ன, 'இல்லை' என்பதனைப் பிரமாணத்தோடு காட்டுகிறார் 'காப்பாற்றுவதில்' என்று தொடங்கி.

"நஹிபாலன சாமர்த்யம் ருதே சர்வேஸ்வரம் ஹரிம்
ஸ்திதெள ஸ்திதம் மஹாத்மாநம் பவதி அந்யஸ்ய கஸ்யசித்"

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 22: 19.

"அருள்குடை யாக அறங்கோ லாக
இருநிழல் படாமை மூவே முலகமும்
ஒருநிழ லாக்கிய ஏமத்தை மாதோ."

என்பது, பரிபாடல். 3. 74-76.

இல்லை என்பது பிரசித்தம்" என்கிறபடியே, என்றும் ரக்ஷண தர்மம் கிடப்பது அவன் பக்கலிலேயாம்.

வேறு சிலரை ஆராதிக்க, அவனே பலத்தைக் கொடுக்கிறவன் ஆவான் என்பது என்? என்ன, மார்க்கண்டேயனும் கரியே - இவ்வர்த்தத்திற்குச் சாக்ஷி மார்க்கண்டேயன். அம் மார்க்கண்டேயன் பலநாள் தேவனை ஆராதிக்க, அவனைப் பார்த்து, 'பலநாள் நீ நம்மை ஆஸ்ரயித்தாய், இந்த ஆஸ்ரயணம் பாழே போக ஒண்ணாது, உன்னைத் தவிர வேற்றுமை இல்லை, உனக்கு ஒரு புகல் காட்டித் தருகிறேன் போதரு' என்று சர்வேசுவரன் பக்கலிலே கொண்டு சென்று, அவனுடைய விருப்பத்தைத் தலைக்கட்டிக் கொடுத்தான்; ஆனபின்னர், இதற்குச் சான்று அவனே என்றபடி. கறுத்த மனம் ஒன்றும் வேண்டா - புன்சிறு தெய்வங்களைப் பரம்பொருளாக நினைத்து இருக்கும் தண்ணிய மனம் உங்களுக்கு வேண்டா. கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை - [1] "வேதங்களும் மூன்று அக்நிகளும் ஐந்து ஆஹுதிகளும் எல்லாத் தேவர்களும் தேவகியின் புத்திரனை கண்ணபிரானே" என்கிறபடியே, அவனுக்குச் சரீரமாய் அல்லது ஸ்வதந்திரமாயிருப்பது ஒரு தேவதை இல்லை. "எந்த எந்த பக்தன் எந்த எந்தச் சரீரத்தைச் சிரத்தையுடன் அருச்சிப்பதற்கு விரும்புகிறானோ அவன் அவனுக்கு அந்த அந்தச் சிரத்தையையே நிலைநிற்கும்படி செய்கிறேன்" என்கிறபடியே, அக்கண்ணபிரானுக்குச் சரீரமாக உளராகில் ஆயித்தனை. இறுப்பது எல்லாம் அவன் மூர்த்தியாயவர்க்கே இறுமின் - ஆனபின்பு, நீங்கள் அவ்வத் தேவர்கட்குக் கொடுக்கும் சமாராதனத் திரவியங்களை எல்லாம்

---

1. "கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை" என்றதனால், வேறு தெய்வங்களே இல்லை என்கிறாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வேதங்களும்' என்று தொடங்கி.

"ஜோதிம்ஷி சுக்ராணிசயாநி லோகேத்ரயோ லோகாஃ லோகபாலாஃ த்ரயீச, த்ரயஃ அக்நயஃ ச ஆஹுதயஃச பஞ்ச ஸர்வே தேவா தேவகீ புத்ர ஏவ"
என்பது, மஹாபாரதம் வீடுமபர்வம்.

"யோ யோ யாம் யாம் தநும் பக்தஃ சிரத்தயா அர்ச்சிதும் இச்சதி
தஸ்ய தஸ்ய அசலாம் சிரத்தாம் தாமேவ விததாமி அஹம்"
என்பது, ஸ்ரீ கீதை. 7 : 21.

இவற்றால், மற்றைத் தேவர்கள் சர்வேசுவரனுக்குச் சரீரமாகையாலே பரதந்திரப் பட்டவர்கள் என்பதனைத் தெரிவித்தவாறு.

'இவர்கள் அவனுக்குச் சரீரமாக இருப்பவர்கள்' என்று புத்திபண்ணி, அவர்களுக்குக் கொடுக்கப் பாருங்கோள்.'இறுப்பது எல்லாம்' என்றது, "தேவதாந்தராய - பிற தேவதையின் பொருட்டு" என்று தோற்றுகிற நித்திய நைமித்திகக் கர்மங்களையெல்லாம் என்றபடி. 'அவன் மூர்த்தியாயவர்க்கே' என்றது, அவனுக்குச் சரீரமாக இருக்கிற அவர்களுக்கே என்றபடி. ஆக, "அந்தராத்மா சர்வேசுவரன்' என்று புத்திபண்ணி அவனுக்குச் சாமாராதனம் செய்கிறோம் என்ற எண்ணத்தோடு செய்யுங்கோள் என்றபடி. (7)

## 461.

**இறுக்கும் இறைஇறுத் துண்ண எவ்வுல குக்குந்தன் மூர்த்தி[1]**
**நிறுத்தினன் தெய்வங்க ளாக அத்தெய்வ நாயகன் தானே**
**மறுத்திரு மார்வன் அவன்தன் பூதங்கள் கீதங்கள் பாடி**
**வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார் மேவித் தொழுதுய்ம்மி னீரே.**

**பொ - ரை:**—தெய்வங்களுக்கு எல்லாம் நாயகனான அந்தச் சர்வேசுவரன் தானே, நீங்கள் கொடுக்க வேண்டிய பொருள்களைக் கொடுத்து, அவர்கள் அருளைப் பெற்று உஜ்ஜீவிக்கும்படி, தன் சரீரத்தையே எல்லா உலகங்கட்கும் தெய்வங்களாக நிறுத்தினன்; ஸ்ரீவத்சம் என்னும் மறுவும் பிராட்டியும் தங்கியிருக்கின்ற திருமார்வையுடையவனான அவ்வெம்பெருமானுடைய அடியார்கள் இசைகளைப் பாடிக்கொண்டு இந்த உலகத்திலே வெறுப்பு இல்லாமல் நிறைந்து வசிக்கின்றார்கள்; நீங்களும் அவர்களை அடைந்து வணங்கி உய்ந்துபோங்கோள் என்கிறார்.

**வி - சு:**—உண்ண நிறுத்தினன்; தன்மூர்த்தியை எல்லா உலகுக்கும் தெய்வங்களாக நிறுத்தினன் என்க. பூதங்கள் மிக்கார் என

---

1. "அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை
ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுகிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!
எவ்வயி னோயும் நீயேநின் னர்வலர்
தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே
அவரவர் எவ லாளனும் நீயே
அவரவர் செய்பொருட் காரணமும் நீயே"
என்பது, பரிபாடல். 4. 66-73.

முடிக்க. பொருளை நோக்கி 'மிக்கார்' என உயர்திணை முடிபு கொடுத்த ஒதுகிறார். நீர் மேவித் தொழுது உய்ம்மின் என்க.

ஈடு:—எட்டாம்பாட்டு. [1]இராஜசராயும் தாமசராயும் உள்ள சேதநர் குணங்களுக்குத் தகுதியாக அடையலாம்படி இதர தெய்வங்களை உலகம் அடங்கப் பரப்பிவைத்தான்; ஆகையாலே, அவனுடைய அசாதாரண விக்கிரஹத்தில் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் உலகம் அடங்கப் பரந்தார்கள்; நீங்களும் அவர்களைப்போன்று அவனை ஆஸ்ரயிக்கப் பாருங்கோள் என்கிறார்.

இறுக்கும் இறை இறுத்து உண்ண தன்மூர்த்தி தெய்வங்களாக் எவ்வுலகுக்கும் நிறுத்தினன் - செய்த பயிருக்குக் [2]கடமை இறுக்குமாறுபோன்று, உங்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தகுதியாக அவ்வவ் தேவதைகளுக்குக் கொடுக்கும் திரவியங்களைக் கொடுத்து ஜீவிக்கைக்காக, எல்லா உலகங்களிலும் தனக்குச் சரீரமாக இருக்கிற தேவதைகளை நிறுத்தினன். என்றது, இராஜாக்கள் ஊர்தோறும் [3]கூறு செய்வார்களை வைக்குமாறுபோன்று நிறுத்தி வைத்தான் என்பார் 'நிறுத்தினன்' என்கிறார். அத்தெய்வ நாயகன் தானே - [4]இவ்வுலகிலுள்ளாரோடு அந்தத் தேவர்களோடு வேற்றுமை யற எல்லார்க்கும் ஒக்க நியமிக்கின்றவனுயிருக்கிற தானே. மறுத்திரு மார்வன் - ஸ்ரீவத்சத்தையும் பிராட்டியையுமுடைய மார்வன் என்னுதல்; ஸ்ரீவத்சத்தையுடைய அழகிய மார்வையுடையவன் என்னுதல். அவன் பூதங்கள் - அவனுடைய அசாதாரண விக்கிரஹத்தில் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். கீதங்கள் பாடி வெறுப்பு இன்றி ஞாலத்து மிக்கார் - பிரீதி

---

1. ஆயின், இத்தகைய தேவர்களைச் சர்வேசுவரன் படைப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராஜசராயும்' என்று தொடங்கி. "மறுத்திருமார்வன்" என்றதிலே நோக்காக 'அவனுடைய அசாதாரண' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. கடமை = கடனும் வரியும். 'புண்ணிய பாவங்கட்குத் தகுதியாக' என்றது, புண்ணியம் பெருகுவதற்கும், பாவம் குறைவதற்கும் தகுதியாக என்றபடி.

3. கூறு செய்வார்களை - வரி வசூலிக்கும் மணியக்காரர்களை.

4. "அத்தெய்வ நாயகன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவ்வுலகிலுள்ளாரோடு' என்று தொடங்கி.

யின் மிகுதியாலே கீதங்களைப் பாடி, 'சம்சாரத்தில் வசிக்க வேண்டியிருந்ததே!' என்கிற வெறுப்பு இன்றிக்கே பூமி எங்கும் பரந்தார்கள். நீர் மேவித் தொழுது உய்ம்மின் - [1] ஆனபின்பு, நீங்கள் சென்று அவர்களை அடைந்து உஜ்ஜீவியுங்கோள் என்னுதல்; அந்தச் சத்துவ குணத்திலே நிலைநின்ற பெரியோர்களைப் போன்று நீங்களும் வேறு ஒரு பயனைக் கருதாதவர்களாய்ச் சர்வேசுவரனை அடைந்து உஜ்ஜீவித்துப் போங்கோள் என்னுதல். (8)

## 462.

**மேவித் தொழுதுய்ம்மின் நீர்கள் வேதப் புனித இருக்கை**
**நாவிற் கொண்டச்சு தன்தன்னை ஞான விதிபிழை யாமே**
**பூவிற் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து**
**மேவித் தொழும்அடி யாரும் பகவரும் மிக்கது உலகே.**

**பொ - ரை:**—வேதங்களிலேயுள்ள பரிசுத்தமான ஸ்ரீ புருஷ சூக்தங்களை நாக்கினாலே உச்சரித்துக் கொண்டு, பக்திமார்க்கத்தினின்றும் வழுவாமல், பூவும் புகையும் விளக்கும் சாந்தமும் தண்ணீரும் ஆகிய இவற்றாலே நிறைந்தவர்களாய்க்கொண்டு பொருந்தி, அடியார்களை நழுவவிடாதவனான சர்வேசுவரனைத் தொழுகின்ற அடியார்களாலும் பகவர்களாலும் உலகமானது நிறைந்திருக்கின்றது; ஆதலால், நீங்கள் அவர்களை அடைந்து வணங்கி உய்ந்து போங்கோள் என்றபடி.

**வி - கு:**—உலகு அடியாரும் பகவரும் மிக்கது; நீர் மேவித் தொழுது உய்ம்மின் என்க. 'நீர்கள்' என்பதில் 'கள்' அசைநிலை. "பிரிந்தவற் கிரங்கிப் பேதுற்று அழுதகம் கண்ணினீர்கள்" (சிந். 1391.) என்றவிடத்துக் 'கள்' என்பதனை அசைநிலை என்றார் நச்சினார்க்கினியர். மலிந்து - மலிய; எச்சத்திரிபு. அடியார் என்பதற்கு, இல்லறத்தார் என்றும், பகவர் என்பதற்குத் துறவறத்தார் என்றும் பொருள் கூறுவதும் உண்டு.

**ஈடு:**—ஒன்பதாம் பாட்டு. [2] பகவத்குண நிஷ்டரும் கைங்கர்ய நிஷ்டருமான ஸ்ரீ வைஷ்ணவர்கள், பூமி எங்கும் பரந்

---

1. "மேவித் தொழுது உய்ம்மின்" என்பதற்கு, இருவகை நிர்வாஹங்கள்: முதல் நிர்வாஹம், ஸ்ரீ ஆளவந்தாருடையது. இங்கே தொழுதல், பகவதர்களைத் தொழுதல். இரண்டாவது, எம்பெருமானாருடையது. இங்கே 'தொழுதல்' என்றது, பகவானைத் தொழுதல்.

2. 'பகவத் குணநிஷ்டரும்' என்றது, "பகவரும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'பகவத் குண நிஷ்டர்' என்றது, ஸ்ரீ பராசர்வானைப்

தார்கள்; நீங்களும் அவர்களோடு ஒக்க வேறு பயன்களைக் கருதாதவர்களாய் ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

நீர் மேவித் தொழுது உய்ம்மின் - நீங்கள் வேறு பயன் ஒன்றினையும் கருதாதவர்களாய்க் கொண்டு ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். வேதப் புனித இருக்கை நாவிற் கொண்டு - [1] வேதத்தில் அவன் விபூதி விஷயமாகப் பரக்கு மவற்றை அன்றிக்கே, அசாதாரண விக்கிரஹத்திலும் குணங்களிலும் ஸ்வரூபத்திலுமாகப் பரந்திருக்கிற ஸ்ரீ புருஷசூக்தாதிகளை நாக்கிலே கொண்டு. அச்சுதன் தன்னை - [2] இவர்கள் நாவிலே கொண்டு மனத்தொடு படாமற் சொன்னால் அதனை மனத்தொடு பட்டதாகக் கொண்டு [3] "அவர்களை விடமாட்டேன்" என்னுமவன். ஞானவிதி பிழையாமே - பக்தியினுலே தூண்டப்பட்டுச் செய்கின்ற காரியங்களில் ஒன்றும் தப்பாமல். 'ஞானம்' என்கிறது, ஞான விசேஷமான பக்தியை. பூவின் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து - பூவோடே கூடின புகை தொடக்கமான சமாராதந உபகரணங்களை மிகுத்துக் கொண்டு. மேவித் தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகம் - அவனை விடாமல் நின்று அடிமை செய்யுமவர்களாலும், குணங்களை அநுசந்தானம் செய்வதற்கு அவ்வருகு ஒன்றுக்கும் ஆற்றல் இல்லாதே இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் மிக்கது உலகம். என்றது, தொடர்ந்து அடிமை செய்யும் இளைய பெருமாளையும், கிடந்த இடத்தே கிடந்து

---

போன்றவர்களை. 'கைங்கரிய நிஷ்டரும்' என்றது, "அடியாரும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'கைங்கர்ய நிஷ்டர்' என்றது, இளையபெருமாளைப் போல்வாரை என்க.

1. "புனிதம்" என்றதன் பொருளைக் காட்டுகிறார் 'வேதத்தில்' என்று தொடங்கி.

2. நாவிற்கொண்டு என்பதற்கு, மனத்தொடு படாமல் நாக்கில் மாத்திரமே கொண்டு என்று வியாக்கியானம் செய்திருப்பதால், வேதப் புனித இருக்கை நாவிற்கொண்டு அச்சுதன் தன்னை மேவித் தொழுது உய்ம்மினீர்கள் என்று கூட்டி, "நாவிற்கொண்டு" என்பதனை, உபதேசிக்கப்படுகின்றவர்களுக்கு அடைமொழி ஆக்குக. நாவிற்கொண்டு ஞானவிதி பிழையாமே மலிந்து மேவித் தொழும் அடியாரும் பகவரும் என்று கூட்டற்க. என்னை? எனின், பிழையாமல் மேவித் தொழும் அடியார்க்கு, "நாவிற் கொண்டு" தொழுதல் குற்றமாதல் காண்க.

3. ஸ்ரீராமா. யுத்.

குணநுபவம் செய்யும் ஸ்ரீ பரதாழ்வானையும் போலே இருப் பாரே ஆயிற்று உலகம் அடைய என்றபடி. ஆகலால், நீங் களும் மேவித் தொழுது உய்ம்மின் என்க. (9)

## 463.

மிக்க உலகுகள் தோறும் மேவிக் கண்ணன்திரு மூர்த்தி
நக்க பிராஞ்ஞெடு அயனும் இந்திர னும் முத லாகத்
தொக்க அமரர் குழாங்கள் எங்கும் பரந்தன தொண்டீர்!
ஒக்கத் தொழுகிற்றி ராகில் கலியுகம் ஒன்றும் இலையே.

**பொ - ரை:**—சிவனும் பிரமனும் இந்திரனும் முதலாகத் திரண்ட அமரர் கூட்டங்கள் கண்ணபிரானுடைய விக்கிரஹத்தைப் பொருந்திப் பற்றிக்கொண்டு மிக்க உலகங்கள்தோறும் எல்லாவிடங்களிலும் பரந் திருக்கின்றன; தொண்டீர்! நீங்களும் அவர்களோப்போன்று தொழுவீர் களேயானால் கலியுகத்தின் தோஷங்கள் ஒன்றும் இல்லையேயாம் என்ற வாறு.

**வி - கு:**—குழாங்கள் மேவிப் பரந்தன என்க. அன்றிக்கே, மேவித் தொக்க அமரர் எனக் கூட்டலுமாம்.

**ஈடு:**—பத்தாம்பாட்டு. [1] நீங்கள் அடைகின்ற தேவதை கள் செய்கிற இதனை நீங்களும் செய்தீர்கோளாகில், யுகம் காரணமாகப் பொருந்தி வருகின்ற தோஷங்களும் போம் என் கிறார்.

மிக்க உலகுகள் தோறும் கண்ணன் திருமூர்த்தி மேவி - பரந்திருக்கின்ற உலகங்கள் எங்கும் கிருஷ்ணனுடைய அசா தாரண விக்கிரஹத்தைப் பற்றுக்கோடாகப் பற்றி. நக்க பிராஞ்ஞெடு அயனும் இந்திரனும் முதலாகத் தொக்க அமரர் குழாங்கள் எங்கும் பரந்தன - உருத்திரனேடே பிரஹ்மாவும் இந்திரனும் இவர்கள் தொடக்கமாகத் திரண்ட தேவ கூட்டங் கள் எங்கும் ஒக்கப் பரந்து விரிந்த செல்வத்தையுடையன ஆயின; தொண்டீர் ஒக்கத் தொழ கிற்றிராகில் கலியுகம்

---

1. "நக்கபிராஞ்ஞெடு அயனும் இந்திரனும் முதலாகத் தொக்க அமரர் குழாங்கள் கண்ணன் திருமூர்த்தியை மேவி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நீங்கள் அடைகிற தேவதைகள்' என்று தொடங்கியும், "ஒக்கத் தொழுகிற்றி ராகில்" என்றதனை நோக்கி 'நீங்களும் செய்தீர்கோளாகில்' என்றும், "கலியுகம் ஒன்றும் இல்லையே" என்றதனை நோக்கி 'யுகம் காரணமாக' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

ஒன்றும் இலை - வகுத்தது அல்லாத விஷயத்திலே தொண்டு பட்டுத் திரிகிற நீங்கள், அவர்களோடு ஒக்கச் சர்வேசுவரனை அடைந்து வணங்கப் பெறில், உங்கள் தோஷம் போகையே அன்றிக்கே, யுகம் காரணமாகப் பொருந்தி வருகின்ற தோஷமும் போம் என்கிறார். (10)

464.

கலியுகம் ஒன்றுமின் றிக்கே தன்னடி யார்க்கருள் செய்யும்
மலியும் சுடரொளி மூர்த்தி மாயப் பிரான்கண்ணன் தன்னைக்
கலிவயல் தென்னன் குருகூர்க் காரிமா றன் சட கோபன்
ஒலிபுக ழாயிரத் திப்பத்து உள்ளத்தை மாசறுக் கும்மே.

**பொ - ரை:**—கலியுகம் காரணமாக வருகின்ற தோஷங்கள் ஒரு சிறிதும் இன்றிக்கே, தன் அடியார்களுக்குத் திருவருள் புரிகின்ற, நிறைந்த மிக்க சுடரையுடைய திவ்விய மங்கள விக்கிரஹத்தையுடைய வனும் மாயப்பிரானும் கண்ணனுமான சர்வேசுவரன் விஷயமாக, வளப் பம் பொருந்திய வயல்களாற் சூழப்பட்ட தெற்கேயுள்ள சிறந்த திருக் குருகூரிலே அவதரித்த காரிமாறனாகிய ஸ்ரீ சடகோபராலே அருளிச் செய்யப்பட்ட தழைத்த புகழோடு கூடின ஆயிரம் திருப்பாசுரங்களுள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களும் உள்ளத்திலேயுள்ள குற்றங்களை நீக்கும் என்றபடி.

**வி - கு:**—இன்றிக்கே, அருள்செய்யும் மாயப்பிரான் என்க. கண்ணன் தன்னை சடகோபன் (சொன்ன) ஆயிரம் என்க. தென்-அழகுமாம்.

**ஈடு:**—முடிவில், [1] இத்திருவாய்மொழி கற்றூர்க்கு, மற்றைத் தேவர்கள் பக்கல் உண்டான பரத்துவ சங்கையும், எம்பெருமான் பக்கல் வேறு பிரயோஜனங்களை விரும்புகின்ற தன்மையுமான மனத்தின் தோஷங்கள் எல்லாம் போகும் என்கிறார்.

கலியுகம் ஒன்றும் இன்றிக்கே - [2] "எவனுடைய மனத்தில் கோவிந்தன் இருக்கிறானே அவனுக்குக் கலியுகம் கிருத யுகமாக இருக்கிறது; எவனுடைய மனத்தில் கிருஷ்ணன் இல்

---

1. "உள்ளத்தை மாசு அறுக்கும்" என்றதனை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. கலி இல்லாமல் போகுமோ? என்ன, 'எவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"கலெள கிருதயுகம் தஸ்ய கலிஸ் தஸ்ய கிருதே யுகே
யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய ந அச்யுதஃ"

லையோ அவனுக்குக் கிருதயுகம் கலியுகம் ஆகிறது" என்கிற படியே, கலிதோஷங்கள் ஒன்றும் வாராதபடி தன் அடியார்க்கு அருள் செய்யும். [1] நாட்டுக்கு இட்ட அஃகம் அல்லவே யன்றே அந்தப் புரத்துக்கு இடுவது. மலியும் சுடர் ஒளி மூர்த்தி - சுடர் என்றும் ஒளி என்றும் பரியாயமாய், இரண்டாலும் மிகுதியைச் சொல்லுகிறது. மலிதல் - நிறைதலாய், மிக்க ஒளியாலே நிறைந்த வடிவு என்றபடி. இதனால், அருள்செய்யாது ஒழிந்தாலும் விட ஒண்ணாத வடிவழகைக் கூறியபடி. மாயம் பிரான் கண்ணன்தன்னை - ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடைய கண்ணனை ஆயிற்றுக் கவிபாடிற்று. கலி வயல் தென்னன் குருகூர்க் காரிமாறன் சடகோபன் - கலி என்று, மிடுக்குக்கும் ஆரவாரத்துக்கும் பெயர். இவற்றால், பூசாரத்தைச் சொல்லுதல்; நடுவது, அறுப்பது, உழுவதாகச் செல்லும் ஆரவாரத்தைச் சொல்லுதல். இப்படிப்பட்ட வயல்களையுடைத்தாயிருந்துள்ள திருநகரியில் ஆழ்வார் அருளிச்செய்த. ஒலி புகழ் ஆயிரத்து இப் பத்து உள்ளத்தை மாசு அறுக்கும் - பிரசித்தமான புகழையுடைத்தான ஆயிரத்திலும், இந்தப் பத்தும், [2] வேறு தேவர்கள் பக்கல் பரத்துவ சங்கை பண்ணுதல், ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்கல் ஸஜாதீய புத்தி பண்ணுதல், பாகவதரல்லாதாருடைய சகவாசம் நன்று

---

1. எல்லார்க்கும் கலியுகமாக இருக்க, அடியார்க்கு அந்தத் தோஷம் ஒன்றும் வாராதபடி அருள் செய்யும்படி எப்படி? என்ன, 'நாட்டுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அஃகம் - முறைமை.

"ஒழிக இக் காமம் ஒரூர் இரண்டஃகம் ஆயிற் றென்றுங்
கழுதகண் ணீர்கள் மைத்தன் ஆவிபோழ்ந் திட்ட வன்றே"

என்றவிடத்து, 'ஒருரிடத்தே இரண்டு முறைமை நிகழ்ந்ததாதலால், ஈண்டு நிகழ்த்துகின்ற காமத்தை ஒழிக என்று அழுத கண்ணீர்கள் மைத்தன் உயிரைக் கெடுத்த என்க' என்று உரை கூறினார் நச்சினார்க்கினியர். (சிந். 2087.)

"ஒரூர் இரண்டஃகம் காட்டினையால்" என்பது, பதிற்றுப்பத்து முறை. பொன்வண்ணத்தந். 73.

"அஃகம் சுருக்கேல்" என்பது, ஆத்திசூடி.

2. இத் திருவாய்மொழியிலுள்ள "கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை", "தொழுது தொழுது நின்று ஆர்த்தும்", "ஊழிபெயர்த்திடும் கொன்றே", "சிந்தையைச் செந் நிறுத்தியே" என்பன போன்றவைகளைக் கடாகவித்து 'வேறு தேவர்கள் பக்கல்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

என்று இருத்தல், வேறு பிரயோஜனங்களை விரும்புதலாகிற [1] மானச தோஷங்களைப் போக்கும். (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

பொலிக பொலிகஎன்று பூமகள்கோன் தொண்டர்
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி—உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல்
மருந்தாகப் போகுமன மாசு.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

"கறுத்த மனம் ஒன்றும் வேண்டா" என்றதனால், பிரணவத்தின் அர்த்தமான அநந்யார்ஹ சேஷத்வத்தையும், அவர்களை, "சென்று தொழுது உய்ம்மின்" என்றதனால், நமஃ(ச்) சப்தார்த்தமான ததீய சேஷத்வத்தையும், "சிந்தையைச் செந்நிறுத்தி" என்றதனால், நாராயண பத சித்தமான ஐச்வர்ய கைவல்ய வியாவிருத்தமான புருஷார்த்தத்தையும் சொல்லுகையாலே, 'மாசு அறுக்கும்" என்ற இடத்தில், மூன்று பதங்களின் பொருள்களும் சொல்லப் படுகின்றன என்பர் பெரியோர்,

# மூன்றாந் திருவாய்மொழி—"மாசறு சோதி"
## முன்னுரை

ஈடு :—[1] "மலியும் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை" என்று, வடிவழகையும் குணங்களையும் சௌலப்யத்தையும் அநுசந்தித்தார்; இப்படி அநுசந்தித்து, சுலபனுமாய் ஆச்சரியமான குணங்களையும் செயல்களையு முடையவனுமாய் அவை இல்லையேயாகிலும் விட ஒண்ணாத வடிவழகையுமுடையனான இவனெடு மெய்யுறு புணர்ச்சியை விரும்பி அவனை அணைக்கக் கோலிக் கையை நீட்ட, அவன் அகப்படாமல் கைகழிந்து நிற்க, அதனாலே கலங்கி ஒரு பிராட்டி தசையை அடைந்து மடல் எடுக்கையிலே புகுகிறார் இத்திருவாய்மொழியில். [2] **மடல் எடுக்கையாவது, போர்சூட்டுப் பொறி கொறிக்கையைப் போன்றது ஒன்றும்.** [3] 'அநீதி செய்யாதே கொள்ளுங்கோள்' என்று பிறரைத் திருத்தினவர், 'நீர் செய்யப் பார்க்கிற இது அநீதி, அதனைத் தவிரும்' என்று பிறர் திருத்தவும் திருந்தாதபடி ஆனார். பகவத் விஷயத்தில்

---

1. மேல், தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மங்களாசாசனத்தைச் செய்த இவர்க்கு, இத்திருவாய்மொழியில் மடல் எடுக்கும்படியான ஆற்றுமை வருகைக்குக் காரணம் என்? என்னும் வினாவிற்கு விடை இறுக்கும் மூலமாக, மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார் "மலியும்" என்று தொடங்கி. இம் மூன்றிலும், "பும்ஸாம் திருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே, வடிவழகே மனக் கவர்ச்சியைச் செய்வதாகையாலும், "காந்தனது பேரழகு தான் விரும்பும் பெண்" என்பவாதலானும், இவரும் "மாசறு சோதி" என்று முதலில் வடிவழகையே அருளிச் செய்கையாலும், அவ்வடிவழகிலே பர்யவஸிப்பிக்கைக் காக, மேலே கூறிய மூன்று குணங்களையும் அவரோகணக் கிரமத்திலே விரிக்கிறார் 'இப்படி அநுசந்தித்து' என்று தொடங்கி. பர்யவசித்தல் - சென்று முடிவு பெறுதல்.

2. மடல் எடுத்தல் என்பது, துணிவுள்ள காரியமுமாய், மிகச் சிறிய பலமுமாயிருக்கும் என்பதனைக் காட்டுகிறார் 'மடல் எடுக்கையாவது' என்று தொடங்கி.

3. "என்னை அழைத்துக்கொண்டு சேறல் அவருக்குத் தக்கதாம்" என்று இருக்க வேண்டிய இவர், நீதியல்லாத காரியத்தைச் செய்யத் தொடங்குவது என்? என்ன, அதற்குச் சுவாபதேசத்திலே விடை அருளிச்செய்கிறார் 'அநீதி செய்யாதே' என்று தொடங்கி. சுவாபதேசம்-தன் பேச்சு; உள்ளுறை.

ஈடுபடும்படியாகப் பிறரைத் திருத்துகிற இவரை, 'பகவானிடத்தில் ஈடுபாடு ஆகாது' என்று திருத்தப் பார்த்தால் திருந்தாரே அன்றே.

[1] அன்றிக்கே, "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில், அவனுக்கு உறுப்பு அல்லாத யானும் என்னுடைமையும் வேண்டா என்று அலாபத்தாலே கூப்பிடும் தம்மோடு ஒக்கக் கூப்பிடுகைக்குத் தூண தேடி உலக ஒழுக்கத்தை நினைத்த இடத்து, தாம் பகவத் விஷயத்திலே ஈடுபாடுடையவராய் இருக்குமாறுபோலே அவர்கள் இதர விஷயங்களிலே ஈடுபாடுடையவராய் இருக்கிறபடியைக் கண்டு, அவர்கள் கேட்டிற்கு நொந்து அவர்களுக்குப் பகவானுடைய பரத்துவத்தை எடுத்துக் கூறித் திருத்தி, 'இவர்களிலே ஒருவனுக இருக்கிற என்னை, இவர்களையும் திருத்தும்படி ஆக்குவதே சர்வேசுவரன்!' என்று அவன் தமக்குச் செய்த உபகாரத்தை நினைத்து, தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மங்களாசாசனம் செய்து, இப்படிப் பிறருடைய நலத்துக்கு வேண்டுவன எல்லாம் செய்து [2] கைஒழிந்த பின்பு பழைய தம் இழவே தலை எடுத்து, 'வழி அல்லா வழியேயாகிலும் கிட்டுமத்தனை' என்னும்படியான விடாய் பிறந்து

---

1. "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியிலிருந்து இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, வேறும் ஒரு வகையில் இயைபு அருளிச் செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. என்றது, "மலியும் சுடரொளிமூர்த்தி, மாயப்பிரான், கண்ணன் தன்னை" என்ற மூன்று விசேஷணங்களை 'மாசறுசோதி, ஆசறு சீலனை, ஆதி மூர்த்தியை' என்ற பெயர்களாலே எடுத்து அருளிச்செய்த காரணத்தாலே, மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்தார் மேல். இத் திருவாய்மொழியில் வருகின்ற "நாடி, ஏனை நாளையம்", "முன் செய்ய மாமை இழந்து" என்பன போன்ற பகுதிகளைக் கடாகூடித்து "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியிலிருந்து இயைபு அருளிச்செய்கிறார் எனக் கொள்க. 'தம்மோடு ஒக்க' என்று தொடங்கும் வாக்கியம், "நண்ணுதார் முறுவலிப்ப" என்ற திருவாய்மொழியின் கருத்து. 'அவர்களுக்குப் பகவானுடைய' என்று தொடங்கும் வாக்கியம், "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழியின் கருத்து. 'இவர்களிலே' என்று தொடங்கும் வாக்கியம், "கையார் சக்கரத்து" என்ற திருவாய்மொழியின் கருத்து. 'தாம் திருத்தத் திருந்தின' என்று தொடங்கும் வாக்கியம், "பொலிக பொலிக" என்ற திருவாய்மொழியின் கருத்து.

2. கை ஒழிந்த பின்பு - திருத்துகிற காரியம் முடிந்த பின்பு. 'பழைய தம் இழவே' என்றது, "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியின் இழவே என்றபடி. 'வழி அல்லா வழியே யாகிலும்' என்றது, ஈசுவரனுலேயே பெறுகை அன்றிக்கே, வேறு சாதனங்களைச் செய்தேயாகிலும் பெறுதலைச் குறித்தபடி.

மடல் எடுக்கையிலே ஒருப்பட்டுப் பேசுகிறார் இத்திருவாய் மொழியில் என்னுதல். [1] ஒவ்வொரு விஷயத்திலே ஒவ்வொரு வருக்குப் பற்று உண்டானால் அவ்விஷயங்கள் கிடையாவிட்டால் 'அவற்றை அப்போதே பெறவேணும்' என்னும்படியான மனோவேகம் பிறந்தால், பின்பு அவ்விஷயங்கள் இருந்த இடங்களிலே புகை சூழ்ந்து புறப்படவேண்டி இருப்பது ஒரு சாகசத்தைச் செய்து புறப்பட விடுவித்து முகத்திலே விழிப் பாரைப் போலே, 'அத்தலைக்குப் பழியை விளைத்தாகிலும் முகத்திலே விழிக்குமத்தனை' என்று சாகசத்திலே ஒருப்பட்டு, தமக்கு இவ்வளவாகப் பிறந்த நிலையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

[2]"அபிமத விஷயத்தைப் பிரிந்து ஆற்றமாட்டாதார் மடல் எடுக்கக்கடவர்கள்' என்று ஒன்று உண்டு தமிழர் சொல்லிப் போருவது. அதாவது, [3]"ஒத்த சீலம் வயது ஒழுக்கம் உடைய வரை" என்கிறபடியே, சீலத்தாலும் வயதாலும் குடிப்பிறப்பா

---

1. மடல் எடுத்தல் என்பதனை, மேலே ஒரு திருவந்தாந்தத்தைக்கொண்டு விளக்கி அருளிச் செய்தார். இங்கு, வேறும் ஒரு திருவந்தாந்தத்தால் அதனை விளக்குகிறார் 'ஒவ்வொரு விஷயத்திலே' என்று தொடங்கி. 'ஒரு சாகசத்தைச்செய்து' என்றது, நெருப்பைவைத்தலைக்குறித்தபடி.'முகத்திலே விழிக்குமத்தனை' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "னமுறுவல் தொண்டைவாய்ப் பிரானை" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி. அந்யாபதேசம் - பிறர் பேச்சு; வேறு வகையாலே பேசுதல்.

2. மடல் எடுத்தல் என்பது, புனைந்துரையாகச் சொல்லப்படுதலே அன்றி, சாஸ்திர சித்தம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அபிமத விஷயத்தை' என்று தொடங்கி. என்றது, சமயசித்தம் என்றபடி. அபிமத விஷயம் - தம் காதலுக்குரிய பொருள்; என்றது, தலைவியை.

3. "துல்யசீல வயோ வ்ருத்தாம் துல்யாபிஜனலக்ஷணாம்
ராகவஃ அர்ஹதி வைதேஹீம் தம்சேயம் அபிதேக்ஷ்ணு"

என்பது, ஸ்ரீராமா. சுந். 16 : 5.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ ஞ்யினும் கடிவரை யின்றே."

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன."

லும் வடிவழகாலும் செல்வத்தாலும் குறைவற்று இருப்பவர் களான இருவர், அவர்களில் [1] 'அறிவு நிறை ஓர்ப்புக் கடைப் பிடி' என்பன போன்று சொல்லுகிற நாயகனுடைய இலக்ஷ ணங்கள் நாயகனும் உடையவனாய், 'நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு' என்பன போன்று சொல்லுகிற நாயகியுடைய இலக்ஷணங்கள் நாயகியும் உடையவளாய், இப்படி இருவரும் குறைவற்று இவர்கள் தாமும் தக்க யௌவனப் பருவத்தை யுடையவர்களுமாய் இருக்க; இவர்களைப் புறம்பே கூட்டுவார் ஒருவரும் இன்றிக்கே இருக்க, இவனும் தெய்வாதீனமாக 'வேட்டைக்கு' என்று புறப்பட, இவளும் 'பூக்கொய்து விளை யாட' என்று உத்தியானத்திற்குப் புறப்பட, அவ்விடத்திலே தெய்வம் கூட்டுவிக்க இருவர்க்கும் [2] கண் கலவி உண்டாக, சிலர் காரணமாக வந்த கலவி அல்லாமையாலே பிரிவோடே முடிவுற்றுப் பிரிய, குணதிகர்களாகையாலே [3] இருவர்க்கும் ஆற்றுமை விஞ்சி, ஒருவரை ஒழிய ஒருவர்க்குச் செல்லாமை பிறக்க, இரண்டு தலையையும் அழித்தாகிலும் பெறப் பார்ப் பது.

[4] மடல் ஊர்தல் என்பதுதான், தலைவியைப் பிரிந்த ஆற் றுமையாலே தலைவன் தலைவியை ஒரு படத்திலே எழுதி, வைத்த கண் வாங்காதே அவ்வுருவைப் பார்த்துக்கொண்டு பனைமடலைக் குதிரையாகக் கொண்டு, தலைவியைப் பிரிந்த

---

"அச்சமும் நாணும் மடனுமுந் துறத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப."

என்பன தொல்காப்பியம்.

1. "தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். நிறை என்பது, காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பு என்பது, ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல். கடைப்பிடி என்பது, கொண்ட பொருள் மறவாமை. இனித் தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன குணம். நாண் என்பது, பெண்டிர்க்கு இயல்பாகவே உள்ளதொரு தன்மை. மடம் என்பது, கொஞ்சத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சம் என்பது, பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பு என்பது, பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை" என்பது இறையனார் களவியலுரை.

2. கண்கலவி = காந்தர்வ புணர்ச்சி; அல்லது, இயற்கைப் புணர்ச்சி.

3. ஆற்றுமை விஞ்சுதல் இரண்டு தலைக்கும் ஒக்குமாயினும், செல்லாமை ஒருதலைக்கே விஞ்சி இருக்கும் என்று கொள்க.

4. இங்கு, கலித்தொகை நெய்தற்கலியில் 21-முதல் 24-முடியவுள்ள நான்கு செய்யுட்களையும், அவற்றின் உரைகளையும் படித்து அறிதல் தகும்.

போது தொடங்கிக் கண்ட போகஉபகரணங்கள் எல்லாம் நெருப்பினாலே கல்பிக்கப்பட்டதாகத் தோற்ற, ஊணும் உறக்கமும் இன்றிக்கே, உடம்பிலே துளிநீரும் ஏறிட்டுக் கொள்ளாதே, தலைமயிரை விரித்துக்கொண்டு திரியாநின்றால், இத்தீச்செயலைக் கண்ட அரசர் முதலானோர் 'கெட்டோம் இவளுக்கு ஒரு பெண்ணினிடத்தில் இத்தனை அன்பு இருப்பதே!' என்று அவர்கள் அவனை அத்தலைவியோடு கூட்டக் கூடுதல், இல்லையாகில், இதுவே காரணமாக இரண்டு தலையிலுள்ள உறவினர்களும் கைவிட, அலக்குப்போர் போலே ஒருவர்க்கு ஒருவர் புகலாய் அங்ஙனம் கூடுதல், தோழிமார் கூட்டக் கூடுதல், ஆற்றுமை கூட்டக் கூடுதல், தலைவியானவள் குணங்களாற் சிறந்தவளாயிருப்பாளேயாகில் பழிக்கு அஞ்சிக் கூடக் கூடுதல், இவை இத்தனையும் இல்லையாகில், முடிந்து போதல் செய்கையாகிற சாகசமானதொரு தொழில் விசேடமாயிற்று.

இது தன்னை, [2] "கடலன்ன காமத்த ராகிலும் மாதர், மடலூரார் மற்றையார் மேல்" என்று உயிரின் அளவல்லாத படி ஆற்றுமை கரைபுரண்டாலும் பெண்கள் மடல் ஊரக்கடவர்கள் அல்லர்; நாயகன்தன் ஆற்றுமையாலே மடல் எடுக்க உலகின்மேல் வைத்துச் சொல்லுவான், பின் 'நான் வரைபாயப் புகாநின்றேன், மடல் எடுக்கப் புகாநின்றேன்' என்று தோழிக்கு வந்து அறிவிப்பான், அறிவித்த பின்னரும் அவள் கூட்டிற்றிலளாகில் பின்பு அவன் இது செய்யக்கடவன்; இத்தனை அல்லது, [3] பெண்கள் மடல் எடுக்கக் கடவர்கள் அல்லர்

---

1. 'உறவினர்களும் கைவிட' என்றது, இவள், எங்கள் வார்த்தையைக் கடவாதிருக்க வேண்டியிருக்க, தானுகவே சில செயல்களைச் செய்யாநின்றாள்; இது, நம் குடிக்குச் சோறாது என்று அவர்கள் கைவிடுதலைக் குறித்தபடி. அலக்குப் போராவது, சேவர்கள் ஈட்டிகளை ஒன்றோடு ஒன்று எதிர்த்து வைத்தல்.

2. கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலேறார் மைந்தர்மேல் என்ப — மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேற்கொண்ட போழ்து

என்பது, நச்சினார்க்கினியர் மேற்கோள். (தொல். பொருள்.)

கடலென்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். என்பது, திருக்குறள்.

3. "எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான"

என்பது, இலக்கணம். தொல். பொருள்.

என்று இங்ஙனே ஒரு மரியாதை கட்டினர்கள் தமிழர்கள்; இங்கு அங்ஙன் அன்றிக்கே, பிராட்டிதான் மடல் எடுப்பதாக இராநின்றது; தமிழர் 'பெண்கள் மடல் எடுக்கக்கடவர் அல்லர்' என்று சொன்ன இது, சேரும்படி என்? என்னில், [1] அவர்கள் ஒரு தலையிலேதான் அதனை இசைந்தார்களே, அப்படி இசைகைக்குக் காரணம், ஆற்றுமையே; அவ்வாற்றுமை இரு வர்க்கும் ஒத்தபின்பு ஒருவர்க்கு மாத்திரம் ஒதுக்குவார் யார்? [2] இதற்கு ஒரு மரியாதை கட்டுகையாவது, ஆசைக்கு ஒரு வரம்பு இட்டார்களாமித்தனை. அப்போது பின்னை அரசர் ஆணைக்கு நிற்கவேணும், இன்றேல் வேலியடைத்தால் நிற்க வேணும், ஆகையால், அவர்கள் அன்பின் தன்மையை அறிந் திலர்களாமித்தனை. [3] வரம்பு அழியவாகிலும் முகங்காட்டி வைத்துக்கொண்டு தரிக்கவேண்டும்படியாய் இருப்பது ஒரு விஷயம் புறம்பு இல்லையே; [4] இங்ஙனம் இருப்பார் சிலரைக் கல்பித்துக் கொண்டார்கள் இத்தனையே.

---

1. ஆடவர்கள் மடல் ஊர்கைக்குக் காரணம் எதுவோ, அந்தக் காரணம் பெண்களுக்கும் உண்டு ஆகையாலே, பெண்கள் மடல் ஊரத் தடை இல்லை என்று மறுக்கிறார் 'அவர்கள்' என்றது முதல், 'அறிந்திலர்களாமித்தனை' என்றது முடிய.

2. 'இதற்கு ஒரு மரியாதை' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, அன்பின் தன்மையை அறியாமையே அன்றோ இங்ஙனம் வரம்பு கட்டுதற்குக் காரணம் என்பது. 'அப்போது' என்றது, ஆசை காரணமாக வருவதன்றிக்கே, 'ஆடவர்களே மடல் எடுக்கக் கடவர்கள்' என்று விதி மூலமாகக் கல்பித்தபோது என்றபடி. 'வேலி யடைத்தால் நிற்கவேணும்' என்றதன் பின்னர், இப்படி நில்லாமல் பெண்கள் மடல் எடுப்பதில் ஈடுபடுகை யாலும், ஆற்றுமை இரண்டு தலைக்கும் சமம் ஆகையாலும் பெண்கள் மடல் ஊரத் தட்டு இல்லை என்பதனைச் சேர்த்துக் கொள்க.

3. ஆயின், பெண் மடல் உலகத்தில் இல்லையே? என்ன, 'வரம்பு அழியவாகிலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். வரம் பாவது - பெண்மைக் குரிய குணங்கள். 'விஷயம் புறம்பில்லையே' என்ற விடத்தில், 'ஈசுவரனைப் போலே' என்பது எஞ்சி நிற்கிறது. ஈசுவரனை ஒழியப் புறம்பு இல்லை என்றபடி. ஆகையாலே, இவள் பகவத் விஷயத்தில் மடல் ஊரத் தட்டு இல்லை என்பதனைத் தெரிவித்தபடி.

> "மடன்மாப் பெண்டிர் எருர் ஏறுவர்
> கடவுளர் தலைவ ராய்வருங் காலே"

என்பது, பன்னிருபாட்டியல்.

இச் சூத்திரத்தால், கடவுளரைத் தலைவராக வைத்துப் பாடுமிடத்து மகளிரும் மடல் ஏறுவர் என்பது பெறப்படுதல் காணலாகும்.

4. புறம்பு விஷயம் உண்டாய் வாசவதத்தை முதலாயினர் மடல் ஏறுத்தாய் இருக்கிறதே? என்ன, 'இங்ஙனம் இருப்பார்' என்று தொடங்கி

இனி, [1] இவர்தாம், "வளவேழ் உலகு" என்ற திருவாய்மொழியில், நாம் அவனேடே கலத்தலாகிற இது அவனுக்குத் தாழ்வினை விளைவிப்பதாம், நம் பேற்றுக்காக அவனேடே கலந்து அவனுக்குத் தாழ்வினை விளைப்பதிற்காட்டில் நாம் அகன்று முடிந்தாகிலும் அவனுக்கு அதிசயத்தைச் செய்ய அமையும் என்று இருக்குமதனேடும் சேராது; இனி, "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில், அவனுக்கு உறுப்பு அல்லாத ஆத்மாவும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களும் நசித்துப்போக அமையும் என்று சொன்ன அதனேடும் சேராது; ஆக, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது. ஆசையற்றவர்களாய் இருப்பவர்களும் செய்வது ஒன்று அன்று. ஞானிகராய் இருப்பவர்களும் செய்வது ஒன்று அன்று. ஆனால், இது இருந்தபடி என்? என்னில், இவற்றிற்கெல்லாம் சமாதானம், பட்டர் திருமடல் வியாக்கியானம் அருளிச்செய்கிறபோது அருளிச்செய்தருளினார்; இங்குத்தைக்கும் வேண்டுவன சொல்லவேணுமே அன்றே.

[2] ஞானத்தால் மேம்பட்டவர்களாய் இருப்பவர்கள் ஜனககுலத்தில் பிறந்தவர்களாயுள்ளவர்களுக்கு மேல் இலரே

---

அதற்கு விடை அருளிச்செய்கிறார். இங்ஙனம் கல்பித்துக் கொள்ளுகையாலே, அர்த்த ஸ்திதியைப் பார்த்தால் ஆண் மடலும் இல்லை, பெண் மடலும் இல்லை என்பது கருத்து.

1. மேலே, மடல் எடுத்தல் அந்யாபதேச சமாதிக்குச் சேராது என்று சங்கித்துப் பரிகரித்து, ஸ்வாபதேசத்திலும் இது சேராது என்று மூன்று வகையாகச் சங்கித்துப் பரிஹரிக்கிறார் 'இவர்தாம்' என்றது முதல், 'அவனும் அவனுடைமையும் வேண்டா என்கிறார்' (பக். 78.) என்றது முடிய.

'இவர்தாம்' என்றது முதல், 'ஆக, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது' என்றது முடிய, முதல் சங்கை. 'ஆசையற்றவர்களாயிருப்பவர்களும் செய்வது ஒன்று அன்று' என்பது, இரண்டாவது சங்கை. 'ஞானிகராய் இருப்பவர்களும் செய்வது ஒன்று அன்று' என்பது, மூன்றுவது சங்கை.

'ஸ்வரூபத்தோடும் சேராது' என்றது, "வளவேழுலகின்" என்ற திருவாய்மொழியாலும், "ஏழுலு மிறையோனும்" என்ற திருவாய்மொழியாலும் சொன்ன சேஷத்வ பாரதந்திரியத்தோடு கூடின ஸ்வரூபத்தோடும் சேராது என்றபடி. ஞானிகர் - சிஷ்டர். ஆனால் - இப்படியானால். இங்குத்தைக்கும் - இவ்விடத்திற்கும். வேண்டுவன - வேண்டும் பரிஹாரங்கள்.

2. மூன்று சங்கைகளையும் அவரோகணக் கிரமத்திலே பரிகரிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, அவற்றில், ஈற்றிற் கூறிய 'ஞானிகராய் இருப்பவர்களும்

அன்றே; அக்குடியிலே பிறந்த பிராட்டியானவள், [1] "எந்தப் பிராட்டி முன்பு ஆகாசத்தில் சஞ்சரிக்கின்றவைகளான பூதங்களாலும் பார்ப்பதற்கு முடியாதவளோ அந்தப் பிராட்டியை இப்பொழுது இராஜ வீதியிலுள்ள மக்கள் எல்லாரும் பார்க்கின்றார்கள்" என்கிறபடியே, பெருமாள் காட்டிற்கு எழுந்தருளுகிறகாலத்தில் [2] "மன்னன் இராமன்பின் வைதேகி என்றுரைக்கும், அன்ன நடைய அணங்கு நடந்திலளே" என்கிறபடியே, அவர் பின்னே புறப்பட்டுப்போகையாலே சிஷ்டாசாரம் உண்டாயிருந்தது; [3] மேலும், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற இவர் அநுஷ்டிக்கையாலே இதுதானே பிரமாணமாகத் தட்டு இல்லையே அன்றே. [4] "பெரியவன் எது எதனைச் செய்கிறானே அது அதனையே மற்ற ஜனங்களும் செய்கிறார்கள்; அந்தப் பெரியவன் எதைப் பிரமாணமாகச் செய்கிறானே அதனையே உலகமும் அநுசரிக்கின்றது" என்கிறபடியே, சத்துக்களுடைய அநுஷ்டானத்தைப் பிரமாணமாகக் கொள்ளக்கடவதன்றே. [5] ஆனாலும், காமம் விலக்கப்பட்டிருக்கிறதே? என்னில், அவை நிலைநில்லாமையாலே சிற்றின் பத்தில் காமமேயன்றே விலக்கப்பட்டிருக்கிறது. பகவத்

---

செய்வது ஒன்று அன்று' (சிஷ்ட அநுஷ்டானம் இல்லை) என்ற சங்கைக்கு, சிஷ்ட அநுஷ்டானம் உண்டு என்று கூறி அதனைப் பரிகரிக்கிறார் 'ஞானத்தால்' என்றது முதல், 'பிரமாணமாகக் கொள்ளக்கடவதன்றே' என்றது முடிய.

1. "யாஸசக்யா புரா த்ருஷ்டும் பூதைஃ ஆகாசகைரபி
தாம் அத்ய சீதாம் பஶ்யந்தி ராஜமார்கதா ஜநாஃ
என்பது, ஸ்ரீராமா. அயோத். 38. 8.

2. பெரிய திருமடல். 51.

3. இவ் வாழ்வார்க்கு ஒரு சிஷ்டாசாரம் வேண்டுமோ, இவருடைய ஆசாரமே நமக்குப் பிரமாண தமம் அன்றே என்கிறார் 'மேலும்' என்று தொடங்கி.

4. ஞானாதிகர் செய்தது பிரமாணம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பெரியவன்' என்று தொடங்கி.

"யத்யத் ஆசரதி ஶ்ரேஷ்டஃ தத் ததேவ இதரோ ஜநஃ
ஸ யத் பிரமாணம் குருதே லோகஃ தத் அநுவர்த்ததே"
என்பது, ஸ்ரீ கீதை. 3: 21.

5. 'ஆசை அற்றவர்களாய் இருப்பவர்களும் செய்வது ஒன்று அன்று' என்ற இரண்டாவது சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'ஆனாலும்' என்றதுமுதல், 'பக்தியை அன்றே இங்குக் காமம் என்கிறது' என்றது முடிய.

விஷயத்தில் காமத்தை [1]"தியானம் செய்யத்தக்கவன்" என்கிறபடியே, விதியாநின்றதே அன்றோ. வேதாந்தங்களிலே விதிக்கப்பட்ட பக்தியை அன்றோ இங்குக் காமம் என்கிறது. [2]"வளவேழ் உலகு" என்ற திருவாய்மொழியில், நாம் கிட்டுகை அவனுக்குத் தாழ்வினைத் தருவதாம் என்று அகன்ற இவர், அத்தலையை அழித்து முகங் காட்டுவித்துக் கொள்ளப் பார்க்கிற இது இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ? என்னவும் வேண்டா; அங்கு அகலநினைத்ததும் அத்தலைக்கு வரும் தாழ்வினை நீக்குகைக்காக அன்றோ; தமக்கு ஆற்றுமை கரைபுரண்டு இருந்தது, 'தன்னை ஆசைப்பட்டார் பெறுமலே முடிய, முகங்காட்டாமலே இருந்தான்' என்கிற தாழ்வினை நீக்குகைக்குச் செய்கிறராகையாலே. [3]அங்கு அகன்றது ஞானகாரியம்; இங்கு மேல் விழுகிறது பக்தியின் காரியம். [4]இத்தனை கலங்கப்

---

1. "ஆத்மாவா அரே த்ரஷ்டவ்யஃ ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாசிதவ்யஃ"

என்பது, பிரு. உப. 6 : 5.

"இனிக் காமம் நன்றுமாறு உண்டு: 'சுவர்க்கத்தின்கண் சென்று போகம் துய்ப்பல்' என்றும், 'உத்தர குருவின்கண் சென்று போகம் துய்ப்பல்' என்றும், 'நன் ஞானம் கற்று வீடு பெறுவல்' என்றும், தெய்வத்தை வழிபடுவல்' என்றும் எழுந்த காமம் கண்டாயன்றே? மேன்மக்களாலும் புகழப்பட்டு, மறுமைக்கும் உறுதி பயக்குமாதலின், இக் காமம் பெரிதும் உறுதியுடைத்து என்பது" என்பது, இறையனார் களவியலுரை.

2. 'இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது' என்ற முதல் சங்கையை அநுவதித்து, அதற்கு ஆறுவகையாகப் பரிஹாரம் சொல்லுவதாகத் திருவுள்ளம்பற்றி, முதலில் 'மடல் எடுத்தல்' அதிசயத்தை உண்டுபண்ணுவது என்று பரிஹரிக்கிறார் "வளவேழுலகு" என்றது முதல், 'செய்கிறார் ஆகையாலே' என்றது முடிய.

'செய்கிறார் ஆகையாலே' என்றதனை, மேலேயுள்ள 'இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ? என்னவும் வேண்டா' என்றதனோடு முடித்துக் கொள்க. 'இவர் ஸ்வரூபத்தோடு' என்றது, ஈஸ்வரனுக்கு உயர்வினை விளக்கக் கூடியதான சொரூபத்தோடு என்றபடி.

3. இரண்டாவது பரிஹாரத்தை அருளிச்செய்கிறார் 'அங்கு அகன்றது' என்றது முதல், 'பக்தியின் காரியம் இது' என்றது முடிய. என்றது, பக்தி காரியமான கலக்கத்தாலே உண்டாகும் காரியங்கள் ஸ்வரூபத்திற்கு மாறுபட்டனவாஞலும் தவிரப் போகா என்றபடி.

4. இப்படி ஈசுவரனுக்குத் தாழ்வினை விளைத்தாகிலும் கிட்டப் பார்க்கிற இது கலக்கத்தாலே அன்றோ, அப்படிக் கலங்குகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இத்தனை' என்று

பண்ணிற்றில்லையாகில், அத்தலையில் வைலக்ஷண்யத்துக்குத் தாழ்வாம்; இவர்தாம் இப்படிக் கலங்கிற்றிலராகில் இவருடைய பிரேமத்துக்குத் தாழ்வாம். [1] அவன் அருளியதும் மதி நலமே அன்றே, அவை படுத்துகிற பாடே அன்றே இவை எல்லாம். [2] மதியின் காரியம் அது; பக்தியின் காரியம் இது.

[3] இனித்தான் சித்தோபாயத்தை மேற்கொண்டு அது பலியாவிட்டால் ஸ்வரூபத்தை வேறுவகையாகச் செய்யுமித்தனை அன்றே; [4] அவன் ஸ்வரூபம் வேறுபட்டால் இத்தலை சொல்லவேண்டாவே அன்றே. [5] இத்தலையில் கர்த்தவ்யம் இல்லையாகில் அவனுக்கு அசக்தி இல்லையாகில் நடுவில் விளம்பத்துக்குக் காரணம் என்? என்று தோற்றுமே அன்றே.

---

தொடங்கி. 'கலங்கப் பண்ணிற்றில்லையாகில்' என்றது, எல்லே கடந்த ஈடு பாட்டினை விளைத்தில்லையாகில் என்றபடி. 'பிரேமத்திற்குத் தாழ்வாம்' என்றது, மற்றையோருடைய காதலைக் காட்டிலும் இவர் காதலுக்கு வேறுபாடு இல்லாமையாலே காதலுக்குத் தாழ்வாம் என்றபடி. ஆக, சர்வேசுவரனுடைய வைலக்ஷண்யத்தாலும், இவர் காதலே உருவாகவுடையராதலாலும் கலங்கினர் என்றபடி.

1. 'வளவேழுலகு என்ற திருவாய்மொழியில் அகன்றது, ஞான காரியம்; இது, பக்தி காரியம்' என்பதற்கு, இவர்க்கு ஞான பக்திகள் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் அருளியதும்' என்று தொடங்கி.

2. 'அங்கு அகன்றது ஞானகாரியம்' என்று மேலே கூறிய வாக்கியத்தின் விவரணம், 'மதியின் காரியம் அது' என்று தொடங்கும் வாக்கியம்.

3. மூன்றாவது பரிஹாரத்தை அருளிச்செய்கிறார் 'இனித் தான்' என்றது முதல், 'என்று தோற்றுமே யன்றே' என்றது முடிய. 'ஸ்வரூபத்தை வேறுவகையாகச் செய்யுமித்தனே' என்றது, சர்வேசுவரனே ரக்ஷகன் என்றிருக்கும் தன்மை நெகிழும் என்றபடி. ஸ்வரூபம் - அநந்ய சரணத்வம். சித்தோபாயம்—சர்வேசுவரன்.

4. "அழைத்துக்கொண்டு செல்லுதல் அவனுக்குத் தக்க காரியம்" என்று இராமல், மாறுபட இப்படிச் செய்யலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் ஸ்வரூபம்' என்று தொடங்கி. அவன் ஸ்வரூபம் - அவனுடைய காப்பாற்றுகின்ற தன்மை.

5. அவனுடைய ரக்ஷிக்குந்தன்மை இப்போது வேறுபட்டது என் கைக்குக் காரணம் யாது? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இத்தலையில்' என்று தொடங்கி. கர்த்தவ்யம் - செய்யத்தக்கது. விளம்பம் - தாமதம்.

[1] இவர்தாம் 'மடல் எடுக்கக்கடவேன்' என்று துணிந்த துணிவுக்கு மேற்பட அநுஷ்டிக்க வேண்டுவது இல்லையே யன்றே குணதிக விஷயம் ஆகையாலே. ஆற்றமையையும் உண்டாக்கி அம்பும் தொடுக்கவேண்டும்படியான விஷயத்தை அன்றே இவர் பற்றியது. [2] கடலைப் பெருமாள் சரணம்புக்க இடத்தில் அக்கடல் தாளை வந்து முகங்காட்டாமையாலே நாலு மூன்று அம்பை விட, உடம்பிலே பாதி வெந்த பின்பேயன்றே வந்து முகங்காட்டியது; இங்கு அது வேண்டாமையாலே, [3] "ஓ இலக்குமணா! வில்லைக் கொண்டு வா, ஆசீ விஷத்திற்கு ஒப்பான பாணங்களைக் கொண்டு வா, சமுத்திரத்தை வற்றச்செய்யப்போகிறேன், வானர வீரர்கள் கால்களால் நடந்து செல்லட்டும்" என்றதைப் போன்று, 'மடல் ஊர்வேன்' என்று அச்சம் உறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளப் பார்க்கிறார். [4] தம்முடைய ஸ்வரூபத்தில் கலக்கம் தொடர்ந்து நிற்கச் செய்

---

1. ஆக, மடல் எடுக்கையை உடன்பட்டு அதற்குப் பரிஹாரத்தை அருளிச்செய்தார் இதுகாறும். இனி, இங்ஙனம் பரிஹாரம் கூறவேண்டுவது இவர் தாம் மடல் எடுத்தால் அன்றே, "ஊர்ந்தும்" என்கையாலே, மடல் எடுக்க இல்லையே என்று உடன்படாமலே நாலாம் பரிஹாரத்தை அருளிச்செய்கிறார் 'இவர் தாம்' என்றது முதல், 'கலக்கம் இன்றிக்கே இருக்கிறது காணும் இவர்க்கு' என்றது முடிய.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் விசேட உரையில், நச்சினார்க்கினியர்

'கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடல்வரூர் மைந்தர்மேல் என்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேற்கொண்ட போழ்து.

என்றாராலோ? எனின், இது மடல் ஏற்றன்று; ஏறுவல் எனக் கூறிய துணையேயாம்' என்பர். இதனால், மகளிர் 'மடல் ஏறுவேன்' என்று கூறும் வழக்கு உண்டு என்பது தெளிதல் தரும். இத் திருப்பதிகத்தின் 8-வது திருப்பாசுரத்தின் வியாக்கியானத்தைப் பார்க்கவும்.

2. குணதிக விஷயம் ஆனால் முயற்சி மாத்திரம் போதியதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடலை' என்று தொடங்கி.

3. "சாபமாநய சௌமித்ரே சராம்ஶ்ச ஆசீவிஷோபமாந்
சாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமாஃ"

என்பது, ஸ்ரீராமா. யுத். 21 : 22. ஆசீவிஷம் - பாம்பு.

4. மடல் எடுக்கும்படி கலங்குகிற தசையிலே 'குணதிகன்' என்று குண ஜ்ஞானம் உண்டாகக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தம்முடைய' என்று தொடங்கி.

தேயும் அவனுடைய குணஞானத்தில் கலக்கம் இன்றிக்கே இருக்கிறது காணும் இவர்க்கு.

[1] "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில், அவனுக்கு உறுப்பு அல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்று முடித்துக் கொள்ளப் பார்த்த இடத்தில், அது தம் கையது அன்றிக்கே, அவன் உளனாக இது அழியாத தாய் இருந்தது; இனி அத்தலையே பிடித்து வேர்ப்பற்றோடே அழிக்கப் பார்க்கிறார்; [2] உண்டாம் போதும் அத்தலையாலே உண்டாய், இல்லையாம் போதும் ஒன்றும் இல்லையாம்படி அன்றே வஸ்துவின் ஸ்வரூபந்தான் இருப்பது. [3] "உயிரினுற் குறை இலம்" என்றார் அங்கு; இங்கு, உயிர்க்கு உயிரினால் குறை இலம் என்கிறார். "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில், அவனுக்கு உறுப்பு அல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்றார்; இதில், எனக்கு உறுப்பு அல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டா என்கிறார். [4] "இராவணன் மாயா சிரசைக் காட்டினபோது, மற்றைய

---

1. மேலே, (பக். 73.) 'இனி, ஏழுலும் இறையோனும்' என்று தொடங்கும் வாக்கியத்தாற் கூறிய சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'ஏழுலும் இறையோனும்' என்றது முதல், 'வஸ்துவின் ஸ்வரூபந்தான் இருப்பது' என்றது முடிய. இது, ஐந்தாம் பரிஹாரம். என்றது, சர்வேசுவரனுடைய உபயோகத்துக்கு உறுப்பு அல்லாத தம் ஸ்வரூப நாசத்துக்கு உடலாக அவனே அழிக்கப் பார்க்கிறார் ஆகையாலே, சர்வேசுவரனுக்கு உயர்வினை உண்டு பண்ணக் கூடியதான ஸ்வரூபத்திற்கு விரோதம் இல்லையே என்றபடி. 'அத்தலையே பிடித்து வேர்ப்பற்றோடே அழிக்க' என்றது, அவனுக்கு நிரூபகமான ரக்ஷணதர்மம் இவர் மடல் எடுத்தால் அழியுமாகையாலே, நிரூபகம் அழிந்த அளவில் நிரூபிக்கப்படுகின்ற பொருளும் அழியும் என்றபடி.

2. அவனை அழித்தால் தம்முடைய சொரூபம் அழியுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உண்டாம் போதும்' என்று தொடங்கி.

3. மேற்கூறிய சங்கையை (ஐந்தாம் சங்கை) வேறு ஒரு வகையிலும் பரிஹரிக்கிறார் 'உயிரினுற் குறை இலம்' என்று தொடங்கி. இது, ஆறும் பரிஹாரம். என்றது, ஸ்வரூபத்திற்கு விரோதம் ஆனாலும், ஆற்றுமையின் மூறுகுதலாலே ஸ்வரூபத்தை மீறி அவனை அழிக்கப் பார்க்கிறார் என்றபடி. இதனால், "ஏழுலும் இறையோனும்" என்ற திருவாய்மொழியைக் காட்டிலும் இங்கு ஆற்றுமை அதிகம் என்பது கருத்து. உயிரினால் - சர்வேசுவரனால்.

4. 'உண்டாம்போதும் அத்தலையாலே உண்டாய்' என்பதற்கு, அவன் சத்தை காரணமாக இத்தலையில் சத்தை உண்டாதலை எங்கே கண்டோம்? என்ன, அதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இராவணன்' என்று தொடங்கி. இவ்விடத்தில் நாலாம்பத்து ஈட்டின் தமிழாக்கம். பக். 203, 204 காண்க.

பெண்களுக்கு மனத்தொடு படாமலே அழுமாறு போன்று, தன் ஆற்றுமையாலே கூப்பிட்டு, சத்தையோடே இருந்தாள், இவ் வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பான் என்?' என்று பட்டரைச் சிலர் கேட்க, 'ஜீவனத்திற்கும் முடிதலுக்கும் நிமித்தம், ஞான அஜ்ஞானங்கள் அல்ல; அத்தலையில் சத்தை யும் அது இல்லாமையும் ஆயிற்று; அதற்கு அழிவில்லாமை யாலே இருந்தாள்' என்று அருளிச்செய்தார்.

[1] இப்படி அத்தலையை அழித்தாகிலும் முகங்காட்டு வித்துக் கொள்ளவேண்டும்படி தமக்குப் பிறந்த நிலை விசே டத்தை; எம்பெருமானேடே கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி ஆற்றுமை மீதூர்ந்திருக்கச் செய்தே இவள் தரித்திருந்த இருப் பைக் கண்டு, தோழியானவள், 'முன்புத்தை அளவுகள் அன் றிக்கே, இவள் தேறி இருந்தாள், அவன் வாராதிருக்க இவ ளுக்கு இத்தனை தேற்றம் உண்டாம்போது, சாகசங்களிலே துணிந்தாளாகவேணும்' என்று பார்த்து, 'நீ செய்ய நினைக் கிற இது, [2] உன் தலைமைக்கும் அவன் தலைமைக்கும் உன் மதிப்புக்கும் உன் பிறப்புக்கும் உன்னுடைய மர்யாதைகளுக் கும் தகாது கண்டாய்' என்ன, 'என் ஸ்வரூபத்தை அழித்தா கிலும் மடல் எடுக்கை தவிரேன்' என்று துணிந்த துணிவைத் தோழிக்கு அறிவிக்க; இதனைக் கேட்டு அஞ்சி, சர்வேசுவரன், இருந்த இடத்தில் இருக்கமாட்டாமை வந்து முகங்காட்டித் தானும் சத்தைபெற்று இவளையும் தரிப்பித்தானுய்த் தலைக் கட்டுகிறது.

---

1. ஆக, இதுகாறும் பிராசங்கிகமாகச் சங்கைகளையும், அவற்றிற்குச் சமாதானங்களையும் அருளிச்செய்து, இனி, இத்திருப்பதிகத்தில் சொல்லப் பட்ட பொருளை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

2. "யாம் மடல் ஊர்ந்தும்", "யாம் மடம் இன்றி" என்பன வற்றைத் திருவுள்ளம்பற்றி 'உன் தலைமைக்கும்' என்கிறார். தலைமை வைலக்ஷண்யம். "ஆதிமூர்த்தி" என்பதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன் தலைமைக்கும்' என்கிறார். "என்னை நிறை கொண்டான்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'உன் மதிப்புக்கும்' என்கிறார். "குதிரியாய் மடலூர்தும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'உன் பிறப்புக்கும்' என்கிறார். "என்னை நிறைகொண்டான்" என்பதனை நோக்கி 'உன்னுடைய மர்யாதைகளுக்கும்' என்கிறார். 'என் ஸ்வரூபத்தை அழித்தாகிலும்' என்றது, "யாம் மட லூர்ந்தும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'தோழிக்கு அறிவிக்க' என்றது, தோழிக்கு அறிவிக்கும் வியாஜத்தாலே ஈசுவரனுக்கு அறிவிக்க என்றபடி. "இரைக்கும் கருங்கடல் வண்ணன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'முகங் காட்டித் தானும் சத்தை பெற்று' என்கிறார்.

[1] இவர் மடலிலே துணிந்தால் கடுக வந்து முகங்காட்டிப் பிழைக்கில் பிழைக்குமித்தனை போக்கி, இல்லையாகில் சத்தை கிடக்க விரகு இல்லை அன்றே அவனுக்கு; பிரஹ்மாஸ்திரத்துக்குத் தப்ப ஒண்ணுதே அன்றே அவனுக்கு. [2] இதற்கு முன்னர், '**அவனுலே பேறு**' என்று போந்தாரேயாகிலும், அடையத்தக்கதான கைங்கர்யத்துக்கு முன்பு உள்ளனவாய் இருப்பன பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகள் என்பன சில உளவே அன்றே, அவை தவிர ஒண்ணுதே. [3] இனி, பக்திமானுக்கும் பக்தி உண்டு, பிரபந்நனுக்கும் பக்தி உண்டு, ருசியை ஒழியப் பிரபத்தி பண்ணக்கூடாதே. [4] பக்திமானு

---

1. முகம் காட்டாவிடில், இவளுக்குச் சத்தை இல்லையாமது ஒழிய, அவனுக்குச் சத்தை இல்லையாமோ? என்ன, 'இவர் மடலிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, பரம காதலன் ஆகையாலே, இவளைத் தரிப்பியாவிடில் அவனுக்கும் சத்தை கிடவாது என்றபடி. விரகு இல்லாமை எப்படி? என்ன, 'பிரஹ்மாஸ்திரத்துக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். பிரஹ்மாஸ்திரத்துக்கு - பிரஹ்மாஸ்திரத்தைப்போன்ற கடக்கமுடியாததுக்கு.

2. இத்திருவாய்மொழியில், '**மடலி**' என்று சொல்லுகிறது, ஸ்வாப தேசத்தில் பக்தியை அன்றே; அங்ஙனம் இருக்க, அவனையே உபாயமாகப் பற்றியிருக்கிற இவர்க்கு அது உண்டாகலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இதற்கு முன்னர்' என்று தொடங்கி. என்றது, இவருடைய பக்தி, சாதன பக்தியன்று; சாத்திய பக்தி என்றபடி. பரபக்தி - சம்ஸ்லேஷ விஸ்லேஷைக சுகதுக்கத்வம்; சேர்க்கையாலே இன்புறுதலும், பிரிவிலே துக்கித்தலும். பரஜ்ஞானம் - ஸ்புட சாக்ஷாத்காரம்; மிகத் தெளிந்த ஞானம் என்றபடி. பரம பக்தி - விஸ்லேஷத்தில் சத்தைக்கு ஹானி பிறத்தல்; பிரிவிலே முடியும்படியான நிலையை அடைதல். இவற்றை முறையே, விஸ்ரத விஸ்ரததர விஸ்ரததம என்பர்கள்.

3. இவர்தாம் ஆர்த்தப் பிரபந்நர் ஆகையாலே, பிரபத்தி செய்வதற்கு முன்னேயும் பக்தி உண்டு என்கிறார் 'இனி பக்திமானுக்கும்' என்று தொடங்கி. பிரபந்நன் - பிரபத்தியைச் செய்தவன் பிரபந்நன். பிரபத்தியாவது, பகவத் பிரவ்ருத்தி விரோதி ஸ்வப் பிரவ்ருத்தி நிவ்ருத்தி சாத்யஃ பிரபத்தி. என்றது, பகவானுடைய ரக்ஷணத்துக்கு விரோதியான தன் செயல்களின் இன்மையால் சாதிக்கப்படுவது.

4. பக்தி பிரபத்தி நிஷ்டர்களுடைய பக்தி தாரதம்மியத்தை அருளிச்செய்கிறார் 'பக்திமானுடைய' என்று தொடங்கி. 'விதிரூபமாய் வரும்'

டைய பக்தி, விதி ரூபமாய் வரும்; பிரபந்நனுடைய பக்தி, ருசி காரியமாயிருக்கும். பக்திமானுக்குச் சாதனரூபமாயிருக்கும், பிரபந்நனுக்குத் தேக யாத்திரைக்கு உறுப்பாக இருக்கும். [1]பக்திமானுக்குப்பலத்திலே சிரத்தை இல்லாதபோது அந்தப் பக்தி தவிரலாயிருக்கும், பிரபந்நனுக்கு ஸ்வரூபத்தோடு கூடியதாய் வருமதாகையாலே ஒருகாலும் தவிராததாயிருக்கும்.

---

## 465.

மாசறு சோதிஎன் செய்யவாய் மணிக்குன் றத்தை
ஆசறு சீலனை ஆதி மூர்த்தியை நாடியே
பாசற வெய்தி அறிவி ழந்துஎனை நாளையம்
ஏசறும் ஊரவர் கவ்வை தோழி! என் செய்யுமே?

**பொ - ரை**:—தோழீ! அழுக்கு நீங்கிய ஜோதி சொரூபமானவனும் சிவந்த வாயினையுடைய மாணிக்கமலைபோன்றவனும் குற்றம் நீங்கிய சீலத்தையுடையவனும் காரணனுமிருக்கின்ற மூர்த்தியுமான எம்பெருமானை விரும்பியதனால், சரீரத்திலுள்ள பசுமைநிறம் நீங்கப் பெற்று அறிவும் நீங்கி எத்தனை காலத்தேமாயினும்; ஊராருடைய பழிச்சொல் நம்மை என் செய்யும்? என்கிறாள்.

**வி - கு**:—சோதியும் குன்றமும் சீலனும் மூர்த்தியுமான எம்பெருமான் என்க. நாடி - நாடியதனால். எனை - எத்தனை. நாளையம் - நாட்களையுடையேம். கவ்வை - ஒலி; பழிச்சொல்.

இத்திருவாய்மொழி, கலி நிலைத்துறை.

---

என்றது, "நித்யாசித்தவ்யஃ" என்கிற விதி மூலமாய் வரும் என்றபடி. என்றது, விதிரூபமாய் வருவது ஆகையாலே பக்திநிஷ்டனுக்குச் சாதனரூபமாய் இருக்கும். தேகயாத்திரைக்கு உறுப்பாகையாலே பிரபந்நனுக்கு ருசிகார்யமாய் இருக்கும் என்றபடி. 'பக்திமானுக்குப் பலத்திலே சிரத்தை இல்லாதபோது' என்ற வாக்கியத்திற்குக் கருத்து, சாதனரூபமா யிருக்கையாலே பக்திமானுக்கு விடக் கூடியதா யிருக்கும் என்பது. 'பிரபந்நனுக்கு' என்று தொடங்கும் வாக்கியத்தின் கருத்து, அநுபவ கைங்கர்யமான தேகயாத்திரைக்கு உறுப்பாகையாலே, கைங்கர்யத்துக்கு ஆஸ்ரயமான ஆத்மாவினுடைய சேஷத்வமாகிற சொரூபமடியாக வந்ததாகையாலே விடக்கூடாததாய் இருக்கும் என்பது.

ஈடு:—முதற்பாட்டு. [1]"அழகாலும் சீலத்தாலும் மதிப் பாலும் பழிப்பு அற்றது ஒரு விஷயம் ஆயிற்று அது, நீ செய் யப் புகுகிற இதனில் அவ்விஷயத்துக்குப் பழிப்பை உண்டாக் கப் புகுகிறாயே" என்று தோழி சொல்ல, நான் அவ்விஷ யத்துக்குப் பழிப்பை உண்டாக்கப் புகுகிறேன் அல்லேன், பழிப்பை அறுக்கப் புகுகிறேன் காண் என்கிறாள்.

மாசு அறு சோதி - [2]கலந்து பிரிந்தவள் ஆற்றாமை இன் றிக்கே மர்யாதைகளை நோக்கிக் கொண்டிருத்தலானது அத்

---

1. "மாசறுசோதி என் செய்யவாய் மணிக் குன்றத்தை ஆசறுசீலனை ஆதி மூர்த்தியை" என்றதனைக் கடாகூத்து 'அழகாலும் சீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றது ஒரு விஷயத்தை' என்கிறார். அழகால் பழிப்பற்ற ஒரு விஷயத்திற்குப் பழிப்பை உண்டாக்குதலாவது, 'தலைவனுனவன் தலைவி பக்கலிலே மிக்க காதலையுடையவனுகையாலே, தானே மேல் வீழ்ந்து தன் அழகினைத் தலைவி அநுபவிக்கும்படி செய்யவேண்டி இருக்க, அது செய் யாதே, தலைவியானவள் மடல் எடுக்கப் புகுகிறேன் என்று கூறும் அளவு தாழ்த்தபோதே அழகு பயன் அற்றதாய்விட்டது' என்று நாட்டார் சொல்லு வர்கள் அன்றே, அவ் வழியாலே அழகிற்குப் பழிப்பினை உண்டாக்கியவாறு காண்க. ஏனை இரண்டினையும் இங்ஙனமே விரித்துக் கொள்க. 'பழிப்பை அறுக்கப் புகுகிறேன் காண்' என்றது, "மாசறு", "ஆசறு" என்று விசே டிக்கையாலே, சித்தம். மடல் எடுத்தால் அழகு முதலானவைகள் பழிப்பு அறுதல் யாங்ஙனம் எனின், எல்லாவகையிலும் சிறந்தவளான இவள் மடல் எடுக்கப் போகிறேன் என்று சொன்னபோதே அவனுடைய அழகு அள விடற்கு அரியது என்று நாட்டார் எண்ணுவராதலானும், மடல் எடுப்பேன் என்று கூறியவுடனேயே அவன் வந்து முகம் காட்டுகை நிச்சயமாகையாலே 'தன்னை ஆசைப்பட்டு மடல் எடுக்க ஒருப்பட்டபோதே, தன் பெருமை பாராதே வந்து முகங் காட்டுவதே! இவன் சீலம் இருந்தபடி என்!' என்று கூறுபவாதலானும், 'பெண்டிரிற்றிலகமன்ன இவள் மடல் எடுக்க நினைத்த தனுல் அவன் ஆண்நாயகன் ஆவான்' என்பது புலப்படுமாதலானும் எனக் கொள்க.

2. "மாசறு சோதி" என்றதற்கு, மடல் எடுக்கையாலே 'மாசறு சோதி ஆனுன்' என்றும், 'மாசறுசோதி' ஆகையாலே மடல் எடுக்கச் செய்தான் என் றும் இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். அவற்றுள், மடல் எடுக்கையாலே மாசறு சோதி ஆனுன் என்று சொன்னபோதே, மடல் எடாது ஒழிதல், சோதிக்கு மாசு என்று தோன்றுகையாலே, அங்ஙனம் தோன்றுகிற பொருளை அருளிச்செய்கிறார் 'கலந்து பிரிந்தவள்' என்று தொடங்கி. மர் யாதை - பெண்மைக்குரிய குணங்கள். அத்தலைக்கு - அழகோடு கூடின அவ னுக்கு.

தலைக்குத் தாழ்வு போலே காணும்; [1] பிரிந்தால், இப்படிச் செய்யாத அன்று குற்றமே அன்றே அழகிற்கு. [2] நான் என்னுடைய மர்யாதைகளைக் குலத்தாகிலும் அவன் முகத்திலே விழித்தல் தவிரேன் என்கிறாள்; [3] வடிவு அதுவாயிருக்க, நான் மடல் எடாது ஒழியும்படி எங்ஙனேயோ. [4] கெடுவாய், அவ் வடிவு குற்றங்கட்கு எல்லாம் எதிர்த்தட்டானது காண், ஆதலால், நான் மடல் எடாது இருக்கை அவ்வடிவிற்குக் குற்றத்தை உண்டாக்குகை காண். [5] 'அவன் அவ்வடிவை உகந்தார்க்குக் கொடான்' என்னும் பழியைத் துடைக்கக் காண் நான் பார்ப்பது; [6] "பக்தர்களுக்காகவே" என்கிற உடம்பைத் 'தனக்கு' என்று இருக்கையாகிற இது அவ்வடிவிற்குக் குற்றமே அன்றே. [7] **'மடல் எடுத்தல் மாசு'** என்று இருக்

---

1. பெண்மைக்குரிய குணங்களை நோக்கிக் கொண்டிருந்தால் அவன் அழகிற்குத் தாழ்வாமாறு யாங்ஙனம்? என்ன, 'பிரிந்தால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இப்படிச் செய்யாத அன்று - மடல் எடுப்பேன் என்று இப்படிச் சொல்லச் செய்யாதிருந்தபோது.

2. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'நான் என்னுடைய' என்று தொடங்கி.

3. தவிரேன் என்கைக்குக் காரணம் யாது? என்ன, 'வடிவு அதுவாயிருக்க' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "மாசறுசோதி" என்றதற்கு அருளிச்செய்யும் இருவகைப் பொருள்களுள், முதற் பொருளில் "சோதி" என்பதற்கு அழகு என்று பொருள் அருளிச்செய்தார். இப்பொழுது "சோதி" என்பதற்கு, விக்கிரஹம் என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அவ் விக்கிரஹத்துக்கு மாசு இன்னது என்று காட்டுகிறார். 'கெடுவாய்' என்று தொடங்கி. கெடுவாய் என்பது, வார்த்தைப்பாடு.

5. மடல் எடுக்கிறேன் என்று கூறுவதால் வடிவிற்கு மிக்க பெருமையே ஒழிய, தாழ்வு அன்று காண் என்கிறாள் 'அவன் அவ்வடிவை' என்று தொடங்கி.

6. விரும்பினவர்கட்குக் கொடாதொழிகை தாழ்வோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "பக்தர்களுக்காகவே" என்று தொடங்கி.

"ந தே ரூபம் ந ச ஆகாரோ ந ஆயுதானி ந ச ஆஸ்பதம்
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் பிரகாஶஸே"

இது, ஜிதந்தா. 5.

7. 'மடல் எடுக்க ஒண்ணாது' என்று விலக்குகிற தோழியைக் குறித்து, 'மடல் எடாது இரேன்' என்று சொல்லுகிற தலைவி, "மாசறு சோதி" என்றபோதே, 'மடல் எடாது ஒழிகை மாசு' என்பது அவள் கருத்து என்று தோற்றுகையாலும், விலக்குகிற தோழிக்கும் 'மடல் எடுக்கை மாசு' என்பது கருத்து என்று தோற்றுகையாலும், இரண்டாளையும் அருளிச்செய்கிறார் 'மடல் எடுத்தல்' என்று தொடங்கி.

கிறாள் தோழி; 'மடல் எடாது ஒழிகை மாசு' என்று இருக்கிறாள் இவள்.[1] பிரிவில் இப்படி ஆற்றாமை விளையாதாகில் நாம் காண்கிற விஷயங்களைப் போன்றது ஆகுமே. [2] வடிவிலே அழிந்தவள் ஆகையாலே முற்பட வடிவிலே மண்டுகிறாள். அன்றிக்கே, மேல், 'ஆசு அறு சீலனே' என்னுநிற்கச் செய்தே, குணத்திலும் விக்கிரஹம் மனக் கவர்ச்சியைச் செய்கையாலே 'மாசு அறு சோதி' என்று முற்பட வடிவழகைச் சொல்லுகிறாள் என்னுதல். [3] நான் மடல் எடுக்க நினைத்த அளவிலே மாசு அற்றுவருகிறபடி பாராய் என்கிறாள்.

என் செய்ய வாய்- [4] "அவாக்யநாதரः" என்கிறபடியே, வேறுபாடு இல்லாமல் இருக்கக்கூடிய பரம்பொருள், என்னோடே கலந்து அதனால் வந்த பிரீதிக்குப் போக்கு விட்டுப் புன்முறுவல் செய்து வேறுபாட்டினை அடையக் கூடிய பொருள்போலே வேறுபட்டவன் ஆகாநிற்க, நான் அவனைப் பிரிந்து வேறுபடாதவளாய் இருக்கவோ. [5] ஒரு வார்த்தை சொல்லக்கூடியவன் அன்றிக்கே, முகம் பார்த்து வார்த்தை சொல்லுகைக்குத் தன்னோடு ஒப்பது ஒரு வேறுபொருள் இல்லாமையாலே அநாதரித்திருக்குமவன். [6] 'கர்மங் காரணமாக வருகின்ற வேறுபாடு இல்லை' என்ற இத்தனை போக்கி, அடியார்களோடு கலத்தலாலும் பிரிதலாலும் வருகின்ற வேறு

---

1. 'மடல் எடாது ஒழிகை' மாசு ஆனபடி எப்படி? என்ன, 'பிரிவில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "ஆசறு சீலனே" என, குணத்தை முற் கூறுது, "மாசறுசோதி" என வடிவை முற் கூறியதற்குக் காரணம் என்? என்ன, 'வடிவிலே அழிந்தவள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "மாசறுசோதி" என்பதனை நிகழ்கால வினைத்தொகையாகக் கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'நான் மடல் எடுக்க நினைத்த' என்று தொடங்கி.

4. இது, சாந்தோக்யம். 3: 14. "செய்யவாய்" என்பதனால், சிவப்புத் தோற்றுவது புன்முறுவல் செய்யும்போது ஆதலின், 'புன்முறுவல் செய்து' என்கிறார்.

5. "அவாக்யநாதரः" என்று மேற்காட்டிய சுருதிக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஒரு வார்த்தை' என்று தொடங்கி.

6. ஆயின், "அவிகாராய" என்ற சுருதியோடு முரண் ஆதாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கர்மங் காரணமாக' என்று தொடங்கி.

பாடு இல்லை எனில், ஒரு சேதனனோடு கலந்தது அன்றிக்கே ஒழியுமே அன்றோ. [1] அவன் கலந்தபோது செய்த புன்மூறுவல் அன்றோ என்னை மறைவு அற்ற வழியாகிய மடல் எடுக்கையிலே மூட்டிற்று. [2] சம்சாரி முக்தன் ஆவானே ஆனால் அவனுக்குப் பிறக்கும் உவகைபோலே காணும் இத்தலையைப் பெற்று அவன் புன்மூறுவல் பூத்து நின்ற நிலை. என் செய்ய வாய் மணிக் குன்றத்தை - [3] இவளுடனே கலந்ததனால் உண்டான பிரீதியாலே புன்மூறுவல் பூத்து வடிவிலே வேறுபாடு தோற்ற நின்ற நிலை ஆயிற்று இவளைக் கையும் மடலுமாம்படி தொட்டு விட்டது. வாய்க்கரையிலே நின்று மடல் எடுக்கிறாள்; கழுத்துக்கு மேலே அன்றோ இவள் மடல் எடுக்கப் பார்க்கிறது. மணிக்குன்றத்தை - மாணிக்க மலை போன்று இனியன் ஆனவனை. அதாவது, [4] கழுத்துக்கு மேலே அன்றிக்கே, மெய்யே மடல் எடுக்கச் செய்துவிட்டது என்கிறாள். என்றது, [5] என்னோடே வந்து கலந்ததனாலே வடிவில் வைவர்ண்யம் போய்ப் புகர்த்துக் குளிர்ந்து நிலைபெற்ற படியும், பிரிவை நினைத்துக் கால் வாங்க மாட்டாதே நின்ற நிலையுங் காண் என்னை மடலிலே துணியப் பண்ணிற்று என்கிறாள் என்றபடி.

---

1. நன்று; பிரிவுக் காலத்திலே புன்மூறுவல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'அவன் கலந்தபோது' என்று தொடங்கி.

2. மேலே, 'வேறுபடாதவன் புன்மூறுவல் செய்து வேறுபட்டவனோன்' என்றதனை, ஒரு திருஷ்டாந்தமூலம் விளக்குகிறார் 'சம்சாரி முக்தன் ஆவானே ஆனால்' என்று தொடங்கி.

3. "என் செய்ய வாய்" என்றதனோடு "மணிக்குன்றத்தை" என்றதனையும் கூட்டி, "செய்யவாய்" என்பதற்கு, வேறும் ஒரு பாவம் அருளிச் செய்கிறார் 'இவளுடனே' என்று தொடங்கி. தொட்டுவிட்டது - ஈடுபடுத்திற்று. 'வாய்க்கரையிலே' என்றது, சிலேடை: எல்லைக்கரை என்றும், திருவதரத்திலே என்றும் பொருள். 'கழுத்துக்குமேலே' என்றதும் சிலேடை: கழுத்துக்கு மேலே இருக்கிற திருவதரம் என்றும், மனத்தொடு படாமல் என்றும் பொருள்.

4. 'கழுத்துக்குமேலே' என்றது, சிலேடை. 'மெய்யே' என்றதும், சிலேடை: திருமேனி என்றும், சத்தியம் என்றும் பொருள்.

5. "மணிக்குன்றம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்னோடே' என்று தொடங்கி. வைவர்ணயம் - பிரிவுக்காலத்தில் உண்டாகும் நிறவேறுபாடு. "குன்றம்" என்றதனை நோக்கி 'நிலைபெற்றபடியும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

**ஆசு அறு சீலனே** - குற்றம் அற்ற சீலத்தையுடையவனே. என்றது, [1]அவன் கலக்கிறபோது என்பேறாகக் கலந்தாலுகில் அன்றே நானும் பிரிவில் என்பேற்றுக்கு வேண்டுமதனைச் செய்திருக்கலாவது; அம்மேன்மையுடையவன் இப்படித் தாழ நின்று என்னைப் பெற்ற இது பெரும் பேறாகத் தான் நினைத்திருக்க, நான் அவனைப் பிரிந்து வைத்து, 'வரில் போகடேன், கெடில் தேடேன்' என்று நினைத்திருக்கலாமோ? [2]அவன் தன் குணம் பரிஹரித்துப்போக, என்னைப் பழி பரிஹரித்திருக்கச் சொல்லுகிறதோ? ஆக, '**ஆசறு சீலனே**' என்றதனால், வெறும் வடிவழகு கண்டு அன்று காண் நான் துவக்குண்டது, அகவாயில் சீலத்தையும் கண்டு காண் என்பதனைத் தெரிவித்தபடி. ஆதி மூர்த்தியை - [3]'ஒப்பற்ற குடியிலே பிறந்த உனக்கு, அவன்தானே வர இருக்குமது ஒழிய நீ பதறுகிற இதனால் உன் மதிப்பை அறுத்துக் கொள்ளப் பார்க்கிறாயே' என்ன, நான் மதிப்பை அறுத்துக் கொள்ளப் பார்க்கிறேன் அல்லேன், மதிப்பை உண்டாக்கிக் கொள்ளப் பார்க்கிறேன் என்கிறாள்; [4]"காரணப் பொருளே தியானம் செய்யத்தக்கது" என்று சாஸ்திரங்கள் ஒருமிடறு செய்கிற விஷயத்தை அன்றே நான் ஆசைப்பட்டது, இவ்விஷயத்தை ஆசைப்பட்டுப் பெறுதே முடிந்தாலும் அதுதானே மதிப்பாம்படியான

---

1. சீலத்துக்குக் குற்றமாவது, பிறர் பொருட்டுச் சேர்தல். குற்றம் இன்மையாவது, தன் பேறாகச் சேர்வது. இதனை விரித்து அருளிச்செய்கிறார் 'அவன் கலக்கிறபோது' என்று தொடங்கி. 'என்பேற்றுக்கு வேண்டுமதனைச் செய்திருக்கலாவது' என்றது, என்னுடைய பெண் தன்மையாகிற பரம லாபத்தைப் பெறுகைக்கு உறுப்பாக மடல் எடாது இருக்கலாவது என்றபடி.

2. "ஆசறு" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'அவன்தன்' என்று தொடங்கி. குணம் பரிஹரித்து - தன்பேறாகக் கலந்து சில குணத்துக்குத் தாழ்வு வாராமல் நீக்கி என்றபடி.

3. "ஆதிமூர்த்தி" என்றதிலே "ஆதி" என்பதற்கு, இரண்டு பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, உலக காரணன் என்பது; மற்றொன்று, தம்முடைய ஈடுபாட்டிற்குக் காரணன் என்பது. மூர்த்தி - சுவாமி. உலக காரணன் என்ற பொருளை அருளிச்செய்கிறார் 'ஒப்பற்ற குடியிலே' என்று தொடங்கி. மதிப்பை யுண்டாக்கிக் கொள்ளும் வகை எது? என்ன, 'காரணப் பொருளே" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "காரணம்து த்யேயஃ" இது, அதர்வசிகை.

விஷயம் அன்றே. [1] வியாக்கியானம் செய்வதற்கு முன்பே யும் ஒருபொருள் உண்டு இதற்கு அருளிச்செய்வது: [2]"ஆத் மாக்கள் உஜ்ஜீவிப்பதற்கு முற்பாடனுய்க் கிருஷி செய்யு மவன்" என்கிறபடியே, நம்முடைய கலவிக்கு அவன் முற்பாட் னுகச்செய்தே, பிரிவில் ஆற்றுமைக்கு நான் பிற்பட்டவள் ஆக வோ என்பது.

'ஆனலும், காதலனைப் பிரிந்தாள், உடனே மடல் ஊர்ந் தாள்' என்னுமே, 'சிலநாள் ஆற்றுமையோடே பாடு ஆற் றிக் கிடந்தாள், பின்பு தன்னுல் பொறுக்க ஒண்ணுமையான அளவு ஆனவாறே மடல் எடுத்தாள்' என்னும் வார்த்தை படைக்கவேணுங்காண்' என்ன, நாடியே பாசற வெய்தி-பக வத் தத்துவம் உள்ள இடம் எங்கும் புக்குத் தேடிக் காணு மையால் நசை அற்றுத் துக்கத்தையுடையேனுய்ப் பின்பே அன்றே மடல் எடுத்தது; பாசறவு - துக்கம். அன்றிக்கே, பாசு என்று பசுமையாய், அது அறுகையாவது, வைவர்ண்யமாய், வைவர்ண்யத்தை மேற்கொண்டு என்னுதல். அன்றிக்கே, பாசு என்று பாசமாய், அதாவது, பற்றுய், உற

---

1. "ஆதி என்பதற்கு, தம்முடைய ஈடுபாட்டிற்குக் காரணன் என்று கூறிய இரண்டாவது பொருளே அருளிச்செய்கிறார் 'வியாக்கியானம்' என்று தொடங்கி. 'வியாக்கியானம் செய்வதற்கு முன்னே' என்றது, ஒன்பதி னுயிரப்படி என்ற வியாக்கியானம் செய்வதற்கு முன்பே என்றபடி. அன் றிக்கே, பாசுரத்திற்குத் தாத்பர்யம் அருளிச்செய்யும்போது என்ற படியுமாம்.

2. அந்தப் பொருள் தான் எது? என்ன, அதனை அருளிச்செய்கிறார் "ஆத்மாக்கள்" என்று தொடங்கி.

"ஜிதந்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபாவந
நமஸ்தேஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ"

இங்கே, 'ஜிதந்தே புண்டரீகாக்ஷ' என்றதனுல், பிரணவத்தால் சொல்லப் பட்ட சேஷத்துவமும், 'நமஸ்தே' என்றதனுல், நமஸ் சப்தத்தால் சொல்லப் பட்ட பாரதந்திரியமும், 'விஶ்வபாவந' என்றதனுல், நாராயண சப்தத்தால் சொல்லப்பட்ட காரணத்வமும், 'நமஸ்தேஸ்து' என்றதனுல், கைங்கர்யப் பிரார்த்தனையும், 'ஹ்ருஷீகேச' என்றதனுல், 'உனக்கே நாமாட்செய்வோம்' என்கிறபடியே, கைங்கர்யத்தால் தனக்குப் பலன் இல்லாமையும் சொல்லுகிறது' இந்தச் சுலோகத்தில் 'விஶ்வபாவந' என்றதனுல், ஜகத்காரணத்வம் சொல்லி இருப்பதனுல், 'பூர்வஜ' என்பதற்கு, சேதந உஜ்ஜீவனத்திற்கு முற்பாட னுய்க் கிருஷிபண்ணுமவன் என்ற பொருள் கொண்டு 'நம்முடைய கலவிக்கு அவன் முற்பாடனுய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். இது, ஜிதந்தே பாடு ஆற்றி-என்பதைப் பொறுத்து.

வினர்கள்பக்கல் பற்று அற்று என்னுதல்; அன்றிக்கே, நிநேகம் அடைய அவன் பக்கலிலே எய்தி என்னுதல். இன்றே, நான் எத்தனை காலம் உண்டு இப்படிக் கிலேசப்படுகிறது என்பாள் 'எனை நாளையம்' என்கிறாள். என்றது, அவன் என்னைப் பெறுகைக்குப்பட்ட காலம் எல்லாம் போராவோ நான் அவனைப் பிரிந்து பட்டவை என்றபடி. [1] காலம் எல்லாம் தேடிக் காணப் பெறாமல் துக்கப்பட்டுத் திரிந்த தத்தனையாகாதே தான்; சிறைக் கூடத்திலே பிறந்து அங்கே வளருமாறு போலே. [2] பிரிவிலுலே ஊகிக்கப்படுமித்தனை காணும் புணர்ச்சி.

எல்லாம் செய்தாலும் இது அறிவுடையார் செய்வது ஒன்று அன்று என்ன, அறிவு இழந்து எனை நாளையம் - அறிவு குடிபோய் எத்தனையோர் காலத்தோம். [3] மயர்வற மதிநலம் அருளின அன்றே போயிற்று இல்லையோ நம்முடைய அறிவு. [4] பறவை முதலானவற்றின் காலிலே விழுந்து தூது விட்ட அன்று, 'அது ஞான கார்யம்' என்று இருந்தாயோ இன்று இருந்து கற்பிக்கைக்கு; அன்றே மதி எல்லாம் உள் கலங்கிற்று இல்லையோ. [5] தன்பக்கல் கைவைத்தால் மற்றொன்று அறியாதபடி செய்யும் விஷயமே அன்றே, "பேரின்பமெல்

---

1. "எனை நாளையம் நாடியே பாசறவெய்தி" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'காலம் எல்லாம்' என்று தொடங்கி. காலமெல்லாம் துக்கம் அடைந்தமைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'சிறைக் கூடத்திலே' என்று தொடங்கி. இதனால், துக்கத்தின் மிகுதியாலே எல்லாக் காலமும் துக்கப்பட்டதாகத் தோற்றுகிறது என்பது கருத்து.

2. ஆனால், புணர்ச்சி எப்பொழுதுமே இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிவிலுலே' என்று தொடங்கி.

3. அப்படிப் பலகாலம் ஆயிற்றே? என்ன, "மயர்வற" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செயகிறார்.

4. "அஞ்சிறைய மடநாராய்" என்ற திருப்பதிகத்தைத் திருவுள்ளம் பற்றி, 'பறவை முதலானவற்றின்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். கற்பிக்கைக்கு - 'மடல் எடுக்கவேண்டா' என்று கற்பிக்கைக்கு. "மதி எல்லாம் உன் கலங்கி மயங்குமால் என்னீரே" என்பது, திருவாய். 1. 4. 3.

5. மதி கலங்கினால், "ஆசறு சீலனை, ஆதி மூர்த்தியை" என்னும்படி என்? என்ன, 'தன் பக்கல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். தன்பக்கல் - சர்வேசுவரனுடைய தன்பக்கல். இதனால், உலக ஞானம் இல்லை என்றதித்தனை போக்கி, பகவத்விஷயஞானம் இல்லை என்கிறது அன்று என்பது கருத்து. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "பேரின்பம் எல்லாம்" என்று தொடங்கி. இது, இரண்டாந் திருவந். 42.

லாம் துறந்தார் தொழுதார் அத்தோள்" என்னக்கடவ தன்றே. [1] "ஜனங்களின் மத்தியில் இருக்கிற இந்தச் சரீரத்தை நினையாமலே சஞ்சரிக்கிறன்" என்கிறபடியே, பேற்றினைப்பெறுகிற சமயத்திலே இவ்வருகுள்ளவற்றை நினையாதபடி செய்கையே அன்றிக்கே, ஞானம் பிறந்த சமயமே பிடித்தும் இவ்வருகுள்ளவற்றை நினையாமலே செய்யவல்ல விஷயம் அன்றே? [2] தன்னை அநுசந்தித்து உலக யாத்திரையையும் அநுசந்திக்கும்படியோ அவன்படி. நன்று; நீ எல்லாம் சொன்னாலும் பழிக்கு அஞ்சவேண்டுங் காண் என்ன, ஏசு அறும் ஊரவர் - 'இவளோ ஒரு பழி சொன்னோமாய் விட வல்லோமே' என்று அதிலே துணிந்திருக்கிற ஊரார் என்னுதல்; என்றது, ஏசுகையில் துணிந்திருக்கிற ஊரார் என்றபடி. இதனால், மடல் எடுக்கை நமக்குக் குற்றமாகில் அன்றே அவர்களுக்கும் பழி சொல்லுகையும் குற்றமாவது என்கிறாள் என்றபடி. அன்றிக்கே, 'பகவத் விஷயத்தில் கைவைத்தவர்களுக்கு ஒரு பழி சொன்னோமாய் விடவல்லோமே' என்று தூக்கப்பட்டிருக்கிற ஊரார் என்னுதல்; ஏசறும் - தூக்கப்பட்டிருக்கின்ற. அன்றிக்கே, ஏசற்று இருக்கிற நமக்கு. அதாவது, ஏசும் எல்லையைக் கடந்திருக்கிற நமக்கு என்னுதல்; என்றது, அறிவுடையார்க்கு வரக்கூடியதான பழி, அது வாசனையோடே குடிபோன நமக்கு வாராதுகாண்; இதற்கு அஞ்சவேண்டா என்கிறாள் என்றபடி.

ஊரவர் கவ்வை - பகவத் விஷயத்திலே கைவைத்தார் 'இது பழி' என்னில் அன்றே பழியாவது, இதற்குப் புறம்பாய் நின்ற ஊரார்கள் சொல்லுமது நமக்குப் பழியோ. தோழி - சமானமான துக்கத்தையும் சுகத்தையுமுடைய உனக்கு 'இது பழி' என்று தோற்றில் அன்றே எனக்கு மீள வேண்டுவது. என்செய்யுமே- [3] ஏசு அறும் எல்லையிலே நிற்கிற

---

1. உலகவிஷய ஞானம் இல்லாமற்போதல் பேற்று நிலையில் அன்றே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "ஜனங்களின் மத்தியில்" என்று தொடங்கி.

"நோபஜனம் ஸ்மரன் இதம் சரீரம்"

இது, சாந்தோக்யம். 8. 12: 3.

2. அப்படி விலக்ஷண விஷயமோ? என்ன, 'தன்னை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். படி: நிலேடை.

3. "ஏசறும் ஊரவர்" என்றதற்கு அருளிச்செய்த மூன்றாவது பொருளைத் திருவுளத்தே கொண்டு "என் செய்யும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஏசறும் எல்லையிலே' என்று தொடங்கி. இது - மடல்.

எனக்கு, இது ஏசாம்படி இருப்பார் சொல்லும் வார்த்தை கொண்டு கார்யம் என்? ஊரார் பழி புகழாம் எல்லியிலே அன்றே நாம் நிற்கிறது. [1] அவர்கள் சொல்லுகிற இது நமக்குத் தாழ்வேயோ, தாரகமாமித்தனை அன்றே? "அலர் எழ ஆருயிர் நிற்கும்" என்னக்கடவதன்றே. "அலர் தூற்றிற்று அது முதலாக் கொண்ட என் காதல்" என்கிறபடியே, அவர்கள் பழி தாரகமாக அன்றே மடல் எடுக்க இருக்கிறது. (1)

466.

என்செய்யும் ஊரவர் கவ்வை? தோழீ! இனிநம்மை
என்செய்ய தாமரைக் கண்ணன் என்னை நிறைகொண்டான்
முன்செய்ய மாமை இழந்து மேனி மெலிவெய்தி
என்செய்ய வாயும் கருங்கண் ணும்பயப் பூர்ந்தவே.

**பொ - ரை**:—தோழீ! என்னுடைய செந்தாமரைக் கண்ணன், என்னுடைய நிறையைக் கொண்டான்; முன்பு இருந்த சிறந்த மாமை நிறமும் நீங்கிச் சரீரமும் மெலிவை அடைந்து என்னுடைய செவ்வாயும் கருங்கண்களும் பசலை நிறத்தை அடைந்தன; ஆதலால், இனி, ஊரவர் கூறுகின்ற பழிச்சொற்கள் நம்மை என்செய்யும்? என்கிறாள்.

**வி - கு**:—இழக்க எய்த பயப்பு ஊர்ந்த என்க. பயப்பு - பசப்பு. ஊரவர் கவ்வை இனி நம்மை என் செய்யும் என்க. மாமை - அழகு. நிற விசேடமுமாம்.

**ஈடு**:— [2] மேல் திருவாய்மொழியில் நின்றும் இத்திருவாய்மொழிக்குப் புகுருகைக்கு வழி இரண்டாக இருக்கும். "சீலம்

---

1. "என்செய்யும்" என்ற ஸ்வரத்துக்கு, எதிர்மறையிலே கோக்காக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அவர்கள் சொல்லுகிற இது' என்று தொடங்கி. பழி தாரகம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "அலர் எழ" என்று தொடங்கி.

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்

என்பது, திருக்குறள்.

"அலர் தூற்றிற்றது முதலா"

என்பது, திருவாய். 7. 3: 8.

2. முதற்பாசுரத்திற்கு வியாக்கியானம் அருளிச்செய்த பின்னர், நடுவில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் அங்கு வந்து, 'முன்னுரையையும் முதற்பாசுரத்திற்கு வியாக்கியானத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவருக்காக அருளிச்செய்கிறார் 'மேல் திருவாய்மொழியில்' என்றது முதல் 'என்று அருளிச்செய்வர்' என்பது முடிய.

இல்லாச் சிறியன்" என்ற திருவாய்மொழியிலே கூப்பிட்டார்; கூப்பிடச் செய்தேயும் வந்து முகங்காட்டாமையாலே, அவனுக்கு உறுப்பு அல்லாத ஆத்மாவையும் [1]ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களையும் எனக்கு வேண்டா என்றார்; இப்படி ஒழியப் புறம்பே பேறு இழவுமாயிருக்கிற சம்சாரிகள்படியைக் கண்டு வெறுத்தார்; 'ஈசுவரனும் கைவாங்கிய இவர்களை நான் திருத்துவேன்' என்று, பகவானுடைய பரத்துவத்தை எடுத்துச் சொல்லித் திருத்தினார்; 'இவர்களிலே ஒருவனாக இருக்கிற எனக்கு இவ்வாசி உண்டாவதே!' என்று பகவானுடைய கிருபையைக் கொண்டாடினார்; தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கூட்டத்திற்கு மங்களாசாசனம் செய்தார்; தொடங்கின காரியம் முடிந்தவாறே பழைய இழவே தலை எடுத்து, தம் ஆற்றுமையாலே மடல் ஊர்ந்தாகிலும் பெறப் பார்க்கிறார் என்னுதல். அன்றிக்கே, மேலே, "மலியும் சுடர் ஒளி மூர்த்தி" என்று வடிவழகை அநுசந்தித்தார், பின்பு புறக் கலவியை விரும்பினார், அப்போதே பெருமையாலே, [2]வழி அல்லா வழியே மடல் ஊர்ந்தாகிலும் பெறப் பார்க்கிறார் என்னுதல்.

மாசறு சோதி.....என் செய்யுமே - [3]என் செய்ய வாய் மாசறு சோதி மணிக் குன்றத்தை என்று சேர்த்துக் கொள்வது, 'இனி, விசேஷஞ்தோறும் ஒரு பொருள் சொல்ல

---

1. 'ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களையும் எனக்கு வேண்டா' என்றது, "எருளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில். 'வெறுத்தார்' என்றது, "நண்ணுதார்" என்ற திருவாய்மொழியில். 'திருத்தினார்' என்றது, "ஒன்றும் தேவும்" என்ற திருவாய்மொழியில். 'கிருபையைக் கொண்டாடினார்' என்றது, "கையார் சக்கரத்து" என்ற திருவாய்மொழியில். 'மங்களாசாசனம் செய்தார்' என்றது, "பொலிக பொலிக" என்ற திருவாய்மொழியில். தொடங்கின காரியம் - சம்சாரிகளைத் திருத்துதல். 'பழைய இழவே' என்றது, "எருளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில் கூறிய இழவு.

2. வழியல்லா வழி - தம்முடைய முயற்சி.

3. "என் செய்ய வாய்" என்றது, அவயவ சோபையை. "மாசறு சோதி" என்றது, சமுதாய சோபையை. "மணிக்குன்றத்தை" என்றது, இவ்விரண்டற்கும் ஆஸ்ரயமான விக்கிரஹத்தை என்னும் பொருள் விசேடம் தோற்றுகைக்காகச் 'சேர்த்துக்கொள்வது' என்கிறார். இது, போதிய தாமோ? பதப்பொருள் அருளிச்செய்ய வேண்டாவோ? என்ன, 'இனி, விசேஷணந்தோறும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வேணும்' என்னுமதனுலே சொன்னேம்" என்று அருளிச் செய்வர்.

இரண்டாம்பாட்டு. [1] ஊரவர் சொல்லும் பழி நம்மை என் செய்யப் புகுகிறது என்று நின்றுள் மேல்; இது என்ன வார்த்தை சொன்னாய் ஆனாய், எல்லாம் செய்தாலும் பழி நீக்கப் படவேண்டுங்காண் என்ன, நான் 'பழி நீக்கப்படவேண்டா' என்றேன் அல்லேன், பழி நீக்கப்படுதற்கு உரிய எல்லை கடந் தது காண் என்கிறேன் என்கிறாள்.

'ஊரவர் கவ்வை [2] இனி நம்மை என் செய்யும் தோழீ' என்று, தன் வடிவழகைக் காட்டுகிறாள். இம்முதலடியில் உள்ள 'இனி' என்ற சொல்லின் பொருளைப் பாசுரத்தில் மேல் உள்ள மூன்று அடிகளும் விரிக்கின்றன. என் செய்ய தாம ரைக் கண்ணன் என்னை நிறை கொண்டான், முன் செய்ய மாமை இழந்து மேனி மெலிவு எய்தி என் செய்ய வாயும் கரும் கண்ணும் பயப்பு ஊர்ந்த; ஊரவர் கவ்வை இனி நம்மை என் செய்யும் தோழீ என்று கூட்டுக. [3] தோழி, தன் வாயாலே 'மடல் ஊரக் கடவதன்று' என்று விலக்கவும்கூட, உடம்பு வெளுத்தல் அவளுக்கும் ஒத்திருக்கையாலே, 'இனி என்னை' என்னுமல், 'இனி நம்மை' என்கிறாள். "தோழிமாரும் எம் மின் முன் அவனுக்கு மாய்வராலோ" என்னக்கடவதன்றே. "எனக்கு அவன் வேணும்' என்னும் தலைவி; 'இவளுக்கு அவன் வேணும்' என்னும் தோழி என்னும் இதுவேயாயிற்று

1. இரண்டாம் பாசுரத்திற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஊரவர்' என்று தொடங்கி. 'எல்லாம் செய்தாலும்' என்றது, ஆற்றுமையாலே எத்தனை காலம் பாடு ஆற்றி இருந்தாலும் என்றபடி. 'பழி நீக்கப்படுதற்குரிய எல்லை கடந்தது காண்' என்றது, "என்செய்யும் ஊரவர் கவ்வை" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. "இனி" என்று தன் வடிவைக் காட்டுகிறாள் என்றபடி. "இனி" என்றால், வடிவைக் காட்டினதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிறார் 'இம் முதலடியில்' என்று தொடங்கி. என்றது, மேல் உள்ள வைவர் ணியம் முதலியவைகளை "இனி" என்பது சுட்டுகிறது ஆகையாலே, பொரு ளாற்றலால், "இனி" என்பது, வடிவைக் காட்டுகிறது என்றபடி.

3. "நம்மை" என்றதனை, உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'தோழி' என்று தொடங்கி. அங்ஙனம் உளப்படுத்திக் கூறுவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "தோழிமாரும்" என்று தொடங்கி. இது, திருவாய். 9. 9: 5.

4. உடம்பு வெளுத்தல் இருவர்க்கும் ஒத்திருத்தல் வாசி எது? என்ன 'எனக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்ரசி. [1] தலைவியைக் காட்டிலும் தோழிக்கு ஆற்றுமை விஞ்சி இருக்கும்; அதற்குக் காரணம், தலைவனைப் பிரிகையால் உண்டான ஆற்றுமை மாத்திரமே தலைவிக்கு உள்ளது, தலைவி நோவுபடக் காண்கையாலும், தலைவியும் தலைவனுமாகச் சேர இருக்குமது காணப் பெறுமையாலும் தோழிக்கு இரட்டித் திருக்குமே அன்றே.

[2] 'பெருமாளும் பிராட்டியுமான இருப்பிலே பிரிவு விளைந்தது' என்று இளையபெருமாள் மஹாராஜர்க்கு அறிவிக்க, அவ்வார்த்தை செவியிலே படப்பட, பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் இவர் உடம்பிலே மாறிற்றுயிற்று; "அத்யர்த்தம் நிஷ்பிரபः— இழந்திருந்த தன்மை வாசா மகோசரம்" பிராட்டியைப் பிரிகையில் உண்டான ஆற்றுமை அன்றே பெருமாளுக்கு உள்ளது, பெருமாளுடைய ஆற்றுமையைக் காண்கையாலும், பிராட்டியும் பெருமாளுமாகச் சேர இருக்கக் காணப் பெறுமையாலும் மஹாராஜர்க்கு அவ்வளவன்றிக்கே, மிக்கிருக்குமே அன்றே. 'அர்த்தம்' என்ற சொல் பொருளை உணர்த்தும் சொல்லாயிற்று. அதி அர்த்தமாவது, சொற்களைக் கடந்தது. என்கிறது, வாசா மகோசரம் என்றபடி. [3] "நம் இருவர்க்கும் சுகதுக்கங்கள் ஒன்றே" என்கிறபடியே, தனக்கும் தோழிக்கும் உள்ள சம்பந்தத்தை முன்னிட்டுக்கொண்டு 'தோழி இனி நம்மை' என்கி

---

1. மேற்கோள்காட்டிய பாசுரத்திலுள்ள "எம்மில்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தலைவியைக் காட்டிலும்' என்று தொடங்கி.

2. தோழிமார்க்கு ஆற்றுமை இரட்டித்திருப்பதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'பெருமாளும்' என்று தொடங்கி.

"ஸ ப்ரஸ்துத்வா வாநரேந்த்ரஸ்து லக்ஷ்மணேந ஈரிதம்வசः
ததாஸீத் நிஷ்பிரபः அத்யர்த்தம் ராகு க்ரஸ்த இவ அம்சுமான்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 35 : 36. இச் சுலோகத்திற்குப் பொருள், 'பெருமாளும்' என்று தொடங்குவது. மாறிற்றுயிற்று - இங்கும் உண்டாயிற்று என்றபடி. சுலோகத்திலுள்ள "அத்யர்த்தம்" என்ற சொல்லின் பொருளை விளக்குகிறார் 'அர்த்தம்' என்று தொடங்கி.

3. அவள் உடம்பு வெளுப்பது தனக்காக என்று இவள் எப்படி அறிந்தாள்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "நம் இருவர்க்கும்" என்று தொடங்கி. என்றது, சமானமான சுகதுக்கங்களையுடையவர்கள் ஆகையாலே உடம்பு வெளுக்கக்கூடும் என்றபடி.

"த்வம் வயஸ்யः அஸி ஸ்ருத்யः மே ஸ்ரீ ஏகம் துக்கம் சுகஞ்சஎள" என்பது, ஸ்ரீராமா. கிஷ். 5 : 35. இது, சுக்கிரீவன் கூற்று.

ரூள். என்றது, 'பழி' என்று நீக்குதற்குப் பார்க்கிறவள் தன்னையும் பழி சொல்லுகிறாள் அன்றே, "நம்மிருவர்க்கும் சுகதுக்கங்கள் ஒன்றே" என்றிருக்குமது அவளுக்கும் உண்டாகையாலே.

பழிக்கு அஞ்சவேண்டாமல் இருப்பதற்கு நமக்கு இப்போது வந்தது என்? என்ன, என் செய்ய தாமரைக் கண்ணன் என்னை நிறைகொண்டான் - [1] 'என்னுடைய ஆத்மாவும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களும் நீ இட்ட வழக்கு அன்றே' என்கிற அகவாயில் தண்ணளி தோற்றும் படி வாத்சல்யத்தாலே குதறிச் சிவந்த தாமரையைப்போன்ற திருக்கண்களாலே குளிர நோக்கி 'நானும் என்னுடைமையும் உன்னது' என்று சொல்லுவாரைப் போலே வந்து இத்தலையிலுள்ள எல்லாச் செல்வத்தையும் கொள்ளைகொண்டு போனான். என்றது, எனக்குக் கொடுப்பவனைப்போலே இருக்க நோக்கி, என்னை உரி கூறை கொண்டு போனான் என்றபடி. [2] சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாய் இருந்தன; "தூதுசெய் கண்கள் கொண்டு ஒன்று பேசி" என்னக்கடவதன்றே. [3] என்னை நிறைகொண்டான் - அவன் புருஷோத்தமனுய் இருக்கும் தன்

---

1. "என்செய்ய தாமரைக் கண்ணன் என்னை நிறை கொண்டான்" என்பதற்கு, 'தான் என்னுடையவன்' என்னும் ஆகாரம் தோற்றும்படி கண்களாலே குளிர நோக்கி என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் கொள்ளை கொண்டான் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி. இப்பொருளில், "நிறை" என்ற சொல்லுக்கு, 'நிறைய' என்றாய், எல்லாவற்றையும் என்பது பொருள். "செய்ய தாமரைக் கண்ணன்" என்றது, இப்போது, வாத்சல்ய குணத்திலே நோக்கு. உரி கூறை கொண்டு - கூறையை உரிஞ்சிக்கொண்டு. கூறை - புடவை.

2. இதனால், அவனுடைய கொடுமையைக் காட்டுகிறார் 'சொல் ஒன்றும்' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "தூது செய்" என்று. இது, திருவாய். 9. 9 : 9.

3. "செய்ய தாமரைக் கண்ணன்" என்பதற்கு, பரத்துவ பரமாகப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதனையே திருஷ்டாந்தமாக்கி, "நிறை" என்பதற்கு, அடக்கம் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் "என்னை நிறைகொண்டான்" என்று தொடங்கி. என்றது, விலக்ஷணமான இந்தத் தலைவியை அபஹரிக்க நினைத்தவன், தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி அபஹரித்தான் என்றபடி. இங்கு "என்" என்பதற்கு, எனக்கு என்பது பொருள். என்றது, தாமரைக் கண்ணனுனை ஆகாரத்தை எனக்குக் காட்டி என்பது பொருள். ஆக, "என்" என்பதற்கு, 'என்னுடைய' என்பதாகவும், 'எனக்கு' என்பதாகவும்; "செய்ய தாமரைக் கண்ணன்" என்பதற்கு, வாத்சல்யகுணபரமாகவும், பரத்துவபரமாகவும்; "நிறை" என்பதற்கு, 'எல்லாம்' என்பதாகவும், 'அடக்கம்' என்பதாகவும் பொருள் அருளிச்செய்துள்ளமை அறியலாகும்.

மைக்குத் தாமரைக் கண்ணனுய் இருத்தல் எல்லையாய் இருக்கு மாறுபோலே ஆயிற்று இவள் பெண் தன்மைக்கு நிறை எல் லையாயிருக்கும்படி. அவன் புருஷோத்தமன் ஆனாற்போலே ஆயிற்று, இவள்பெண்களுக்குள்ளே உத்தமியாயிருக்கும்படி. [1] பிரிவோடே இருந்து மடல் ஊர்ந்து பழி விளையாநிற்கச் செய்தேயும் '**என்னுடையவன்**' என்னலாம்படி காணும் அவன் கிட்டினால் இருக்கும்படி; ஆதலின், '**என் தாமரைக் கண்ணன்**' என்கிறாள். [2] 'நூறாயிரம் புருஷோத்தமர்கள் கூடினாலும் தோற்றுப்போமிதற்கு மேற்படச் செய்யலாவது இல்லை' என்றாயிற்று, இவளுடைய பெண் தன்மைக்குரிய அபிமானந்தான் இருப்பது; ஆதலின், '**என்னை நிறை கொண் டான்**' என்கிறாள். என்றது, கடலைத் தறை காணுமாறு செய் வது போன்று, என்னைச் செய்தான் என்றபடி. [3] தன்னு டைய ஆண் தன்மை முழுதையும் அழிய மாறி என்னுடைய பெண் தன்மையைக் கொண்டான் என்பாள் '**என் செய்ய தாமரைக் கண்ணன் என்னை நிறைகொண்டான்**' என்கிறாள். என்றது, தான் தோற்றுப் போலே காணும் இவளைத் தோற் பித்தது என்றபடி. [4] '**என்னை நிறை கொண்டான்**' என்று இவள் தான் தோழிக்குச் சொல்லும்படி அன்றே பண்ணிற்று.

---

1. பிரிவு சமயத்திலே "என்" என்கிறது என்? என்ன, அவன் கலந்தபோது 'நான் உன் சரக்கு அன்றே' என்று கண்வழியாலே சொன்னது கொண்டு, "என்" என்கிறாள் என்று மேலே ஒரு கருத்து அருளிச்செய்து, அவன் கிட்டினபோது தாழ நின்று பரிமாறினமையைப் பற்ற "என்" என்று சொல்லுகிறாள் என்று வேறு ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'பிரிவோடே' என்று தொடங்கி.

2. "நிறைகொண்டான்" என்றபோதே 'என்னுடைய' என்பது தானே போதருமாதலின் "என்னை" எனல் வேண்டா அன்றே? அங்ஙன மிருக்க, "என்னை" என விசேடித்துக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய் கிறார் 'நூறாயிரம்' என்று தொடங்கி. என்றது, அவனுடைய ஆண் தன்மைக் கும் மேற்பட்டிருக்கும் இவளுடைய பெண் தன்மை என்றபடி.

3. இப்படி மேற்பட்டிருந்தால், நிறை கொள்ளக் கூடுமோ? என்ன, மேலேயுள்ள பதங்களையும் கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார் 'தன்னுடைய' என்று தொடங்கி. என்றது, எனக்குத் தாழ நின்று என்னை நிறைகொண்டான் என்றபடி. இதனையே விவரணம் செய்கிறார் 'தான் தோற்றுப்போலே' என்று தொடங்கி. 'தோற்றுப்போலே' என்றது, 'யானும் என்னுடைய பொருளும்' என் இட்ட வழக்கு என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

4. துக்கத்தின் மிகுதியினாலும் இப்படிச் சொல்லக்கூடுமே? இது உண்மை என்று இவள் அறியும்படி எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'என்னை நிறைகொண்டான்' என்று தொடங்கி.

நிறையாவது, அடக்கம். அகவாயில் ஒடுகிற இது பிறர்க்குத் தெரியாதபடி மறைத்துக் கொண்டிருக்கை அன்றே. நான் எனக்கு ஒடுகிற நிலையை உனக்கு வாய்விட்டுச் சொல்லும்படி அன்றே செய்தது.[1] தோழி தானும் இவள் வடிவிலே வேறு பாடு கொண்டு **"உற்ற நன்னோய் இது தேறினேம்"** என்று இவள் அகப்பட்டபடி அறியுமித்தனை போக்கி, இவள் தான் தோழிக்கும் வாய்விட்டுச் சொல்லாதபடி அன்றே பெண்மை தான் இருப்பது. [2]"என்னைப் பார்த்து ஒன்றும் வார்த்தை சொல்லவில்லை" என்னக்கடவதன்றே. **'நிறை கொண்டான்'** என்கிற இதனை விரித்துப் பேசுகின்றாள் மேல்:

உன்னிடத்தில் அவன் கொண்டவைதாம் எவை? என்ன, 'நிறைகொண்டான்' என்ற சொல்லுக்குள் அடங்கிக் கிடக்கு மவற்றை எண்ணுகிறாள்: **'மடல் ஊர்வேன்'** என்கிற என் வாயை நீ புதைத்தால், என் வடிவு மடல் எடுக்கிற இதனை என்கொண்டு மறைப்பாய் என்கிறாள். முன் செய்ய மாமை இழந்து - இதற்கு, மூன்று விதமாகப் பொருள் அருளிச் செய்வர்: தன்பக்கல் கைவைப்பதற்கு முன்னே, அதாவது, பிறந்தபோதே உண்டான நிறத்தை இழந்து என்னுதல். அன்றிக்கே, மற்றையவற்றை இழப்பதற்கு முன்னே நிறத்தை இழந்து என்னுதல்; [3]முன்பு தோற்றினவற்றைப் பறித்துக்கொண்டு, பின்பே அன்றே கிழிச்சீரையை அறுத்துக்கொள்வது; அவன் தானும் முந்துற விரும்பியது இந்நிறத்தைக் காணும். அன்றிக்கே, முன்னே காணக் காண

---

1. ஆயின், இதற்கு முன்பு தோழிக்குத் தன் நிலையைச் சொல்லியறியாளோ? என்ன, தோழி தானும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "உற்ற நன்னோய்" என்பது, திருவாய். 4. 6: 1.

2. அப்படி அந்தரங்கர்க்கும் வாய்விட்டுச் சொல்லாதபடி செய்யுமோ பெண் தன்மை? என்ன, 'என்னைப் பார்த்து' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> "அத்ருஷ்ட பூர்வ வ்யஸநா ராஜபுத்ரீ யஸ்விநீ
> தேந துக்கேந ருததீ நைவ மாம் கிஞ்சித் அப்ரவீத்"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 58: 35. மீண்டு வந்த சுமந்திரன் தசரதசக்கரவர்த்தியைப் பார்த்துக்கூறுவது.

3. மேனி மெலிவு எய்தல் தொடக்கமான இழவுகளுக்கு முன்னே நிறம் இழந்தற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முன்பு தோற்றினவற்றை' என்று தொடங்கி. மேலதற்கே, வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவன் தானும்' என்று தொடங்கி. என்றது, தான் முதல் முன்னம் விரும்பினதாகையாலே முற்பட அபகரித்தான் என்றபடி.

நிறத்தை இழந்து என்னுதல். இப்பாசுரத்தில் 'செய்யமாமை' என்கிறாள்;[1] முன்னே " மணிமாமை " என்றாள்; இவ்விரண்டாலும் சிவப்பும் கறுப்பும் அல்ல இங்குச் சொல்லுகிறது; இரண்டிலும் ஒரு சேர ஏறின பிரயோஜனம், 'விரும்பத் தக்க தன்மை' என்பதேயாம். அவனோடு கலந்து பெற்ற நிறத்தைத் தனமாக நினைத்திருந்தபடியால் 'மாமை இழந்து' என்கிறாள். மேனி மெலிவு எய்தி-நீர்ப்பண்டம்போலே காணக் காணச் சரீரம் சருகு ஆகாநின்றதாயிற்று.[2] ஆஶ்ரயம் உண்டானால் அன்றே தொங்குவது; ஆதலால், இனி அவன் வந்தாலும் நிறம் வந்தாலும் தொங்குகைக்கு ஆஶ்ரயம் இல்லை என்பதனைத் தெரிவித்தபடி. என் செய்ய வாயும் கருங்கண்ணும் பயப்பு ஊர்ந்த -[3] அவயவியாகத் தேடுகிறேனே, அவயவங்கள் தோறும் வற்றி வருகிறபடி பாராயோ? என்கிறாள். இப்போது 'செய்ய வாயும் கருங்கண்ணும்' என்று தன்னுடைய அவயவங்களைத் தானே புனைந்துரைக்கிறாள் அல்லள்; அவன் வந்து கிட்டினபோது அவனுடைய ஸ்ரீ சகஸ்ரநாமங்களுக்கு விஷயம் இவையே அன்றே, அதனைச் செவியாலே கேட்டிருக்குமே, அதனாலே சொல்லுகிறாள். என்றது, தான் இழந்த முறை சொல்லாநிற்கச்செய்தே, அவன் உகந்த முறை தோற்றாநின்றது காணும் இவளுக்கு என்றபடி.[5] அவன், தனக்கு இவற்றை எல்லாச் செல்வங்களுமாக நினைத்திருந்தபடியால், இவளும் 'உன்னது என்னது' என்று ஒருதலை பற்றுகிறாள்

---

1. 'முன்னே' என்றது, " எழுலும் இறையோனும் " என்ற திருவாய்மொழியில் " மணிமாமை குறையிலமே " என்றதனைத் திருவுள்ளம் பற்றி.

2. ஆஶ்ரயம் - சரீரம். தொங்குவது - தங்குவது.

3. அவயவி - சரீரி.

4. " செய்யவாய், கருங்கண் " என்று தன்னுடைய அவயவங்களைத் தானே வர்ணிக்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் " செய்ய வாயும் " என்று தொடங்கி. 'சகஸ்ர நாமங்களுக்கு' என்றது, அவன் செய்யும் தோத்திரங்களுக்கு என்றபடி.

5. " என் " என்று மமகாரம் தோற்றச் சொல்லலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன், தனக்கு' என்று தொடங்கி. இவற்றை - அவயவங்களை. 'எல்லாச் செல்வங்களுமாக நினைத்திருந்தபடியால்' என்றது, " செங்கனிவாய் நுகர்ந்தானை ", " மணஞோக்கம் உண்டான் " என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி. 'உன்னது என்னது என்று' என்றது,

'என்வாய்' என்று. [1] ஆத்ம ஸ்வரூபமும் பிராப்பிய அந்தர்க்கதமாயன்றே உத்தேச்யமாவது, இங்கன் அன்றாகில், "மம என்ற இரண்டு எழுத்துக்கள் நாசத்திற்குக் காரணமாகின்றன. நமம என்ற மூன்று எழுத்துக்கள் மோக்ஷ பதவிக்குக் காரணமாகின்றன" என்கிற வழியாலே பற்றுகிறாள் அன்றே என்றபடி. [2] அவன்வாய்புகு சோறு பறியுண்ணுகின்றது என்பாள் 'செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த" என்கிறாள். "செங்கனிவாய் நுகர்ந்தான்", "மணநோக்கம் உண்டான்" என்னக்கடவதன்றே. செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பு ஊர்ந்த - [3] கடலும் மலையும் குடியிருப்புமான இடங்கள் எல்லாம் பிரளய காலத்தில் ஒரே வெள்ளமாயிருக்குமாறு போலே எங்கும் ஒக்க வைவர்ண்யமேயாயிற்று. ஒரே வெளுப்பு ஆயிற்று. [4] விஷம் பரந்தாற்போலே காணக்காண வண்டல் இட்டு வைவர்ண்யமானது பரப்பு மாறிற்று. (2)

---

உன்னுடையதாகையாலே என்னுடையது என்றபடி. ஒரு தலை - தத்தியத்வ ஆகாரம்.

1. மேலதற்கு, ஸ்வாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஆத்ம ஸ்வரூபம்' என்று தொடங்கி. 'ஆத்ம ஸ்வரூபமும் பிராப்பிய அந்தர்க்கதமாயன்றே உத்தேச்யமாவது' என்றது, பிராப்பியபூதனான ஈசுவரனுடைய "மதீயம் - எனக்குரியது" என்கிற அபிமானத்தில் அடங்கியதான வழியாலே அன்றே ஆத்மஸ்வரூபத்தானும் "ஸ்வேதரூபேண" - என்றதிற் சொல்லுகிறபடியே பிராப்பியமாயிற்று; ஆகையாலே, ஆத்ம தர்மமான ஞானம் பக்தி முதலியவைகளும் அவனுக்கு உறுப்பான வழியாலே ஆதரிக்கத் தக்கனவாம் என்றபடி.

"த்வயக்ஷரஸ்து பவேத் ம்ருத்யுஃ த்ர்யக்ஷரம் ப்ரஹ்மணஃ பதம்
மமேதி த்வயக்ஷரோ ம்ருத்யுஃ நமமேதி ச சாஸ்வதம்"

இது, பகவச் சாஸ்திரம்.

2. மற்றை அவயவங்கட்கும் கிற வேறுபாடு ஒத்திருக்க, கண்களையும் வாயினையும் விசேடித்துக் கூறுவதற்குக் கருத்து என்? என்ன, 'அவன் வாய் புகு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'வாய் புகு சோறு' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "செங்கனிவாய்" என்று தொடங்கி. இவ்விரண்டும், பெரிய திருமொழியில் முறையே, 3. 7 : 2. 8. 10 : 1. பாசுரங்களாகும்.

3. "முன்செய்யமாமை" என்றதனையும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'கடலும் மலையும்' என்று தொடங்கி. "பயப்பு" என்றதனை நோக்கி 'ஒரே வெளுப்பாயிற்று' என்கிறார். 'வெளுப்பு' என்றது சிலேடை: வெள்ளம் என்றும், வெளுத்தது என்றும் பொருள்.

4. "ஊர்ந்த" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'விஷம் பரந்தாற்போலே' என்று தொடங்கி. பரப்பு மாறிற்று - இடமில்லாதபடி பரம்பிற்று,

## 467.

ஊர்ந்த-சகடம் உதைத்த பாதத்தன் பேய்முலை
சார்ந்து சுவைத்தசெவ் வாயன் என்னை நிறைகொண்டான்
பேர்ந்தும்பெயர்ந்தும் அவனொடன்றிஓர் சொல்லில்லேன்
தீர்ந்தனன் தோழி! என்செய்யும் ஊரவர் கவ்வையே ?

**பொ - ரை :**—ஊர்ந்து வந்த சகடாசுரனை உதைத்துக் கொன்ற திருவடிகளையுடையவனும், சார்ந்து பூதனையின் முலையைச் சுவைத்த சிவந்த வாயினையுடையவனுமான கண்ணபிரான் என் நிறையைக் கொள்ளைகொண்டான் ; சென்றும் வந்தும் அவன் சம்பந்தமான வார்த்தைகளை ஒழிய வேறு வார்த்தைகளையுடையேன் அல்லேன் ; அறிவையுடைய என் தோழீ! ஊராருடைய பழிச்சொல் என்ன காரியத்தைச் செய்யும் என்கிறாள்.

**வி - கு :**—தீர்ந்த - எல்லாவற்றையும் விட்டு நீங்கிய. "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம். தோழி ஊரவர் கவ்வை என் செய்யும் என்க.

**ஈடு :**—மூன்றும்பாட்டு. [1] "என்செய்யும் ஊரவர் கவ்வை" என்றாள் ; 'எல்லாம் செய்தாலும் பழி நீக்கவேண்டாவோ' என்று இருப்பாளே அன்றே இவள் ; [2] 'இது பழி' என்று நீக்க ஒண்ணாதபடி எனக்கு ஈடுபாட்டினை விளைத்தவன் எவ்

---

1. மேற்பாசுரத்திலே, பழியை நீக்குவதற்குரிய காலம் கடந்தது என்று சொல்லியிருக்க, இப்பாசுரத்திலே மீளவும் "ஊரவர் கவ்வை என்செய்யும்" என்கிறதற்கும், மடல் ஊருகிற சமயத்திலே பழி சொல்ல வேண்டியிருக்க, அவன் செய்த உபகாரம் முதலானவற்றைச் சொல்லுகிறதற்கும் தகுதியாக அவதாரிகை அருளிச்செய்கிறார் 'என் செய்யும் ஊரவர் கவ்வை' என்று தொடங்கி. மேற்பாசுரத்தில் "ஊரவர் கவ்வை என் செய்யும்" என்றவள், இப்பாசுரத்திலும் "ஊரவர்கவ்வை என்செய்யும்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லாம் செய்தாலும்' என்று தொடங்கி. எல்லாம் செய்தாலும் - எத்தனை ஆற்றுமை உண்டானாலும். 'இவள்' என்றது, தோழியை.

2. பழிக்கிற சமயத்திலே உபகாரங்களைச் சொல்லுதல், மிக்க ஈடுபாட்டினை உண்டாக்குவதற்குக் காரணங்கள் என்கிறார் 'இது பழி' என்று தொடங்கி. "ஊர்ந்த சகடம் உதைத்த பாதத்தன்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'ஈடுபாட்டினை விளைத்தவன் எவ்வளவிலே நிற்பவன்' என்கிறார்.

வளவிலே நிற்பவன், [1]'இது பழி' என்று மீளாதபடி இவ் விஷயத்தில் ஈடுபட்டவளாய் இருக்கிற நான் எவ்வளவிலே நிற்கிறேன், [2]'இது பழி' என்று சொல்லுகிறவர்கள்தாம் எவ்வளவிலே நிற்கிறார்கள், [3]அவர்கள் சொல்லுகிறவற்றைச் சொல்லுகிற நீதான் எவ்வளவிலே நிற்கிறாய் என்கிறாள்.

ஊர்ந்த சகடம் உதைத்த பாதத்தன் - ஊருகிற சகடம் அன்று; அது செய்வது எல்லாம் செய்து முடிந்தது, இவன் ஜீவன அதிருஷ்டத்தாலே தப்பின இத்தனை. [4]இரண்டு சகடத்தை இரண்டு அருகும் இழுத்து நடுவே தொட்டிலே இட்டு வளர்த்திப்போனாள் தாயார்; பாடிகாப்பாரே களவு காணுமாறுபோலே, காவலாக வைத்த சகடமே அசுர ஆவேசத்தாலே ஊர்ந்து வந்ததாயிற்று. அசேதனமான சகடத்தில் அசுரர்கள் ஆவேசித்து நலிவதாக ஊர்ந்து வந்ததித்தனை அன்றோ. அதுவும் செய்வது எல்லாம் செய்து, இவனும் அகப்படுவது எல்லாம் அகப்பட்டு நின்றான்; திருவடிகளினுடைய செயலாலே தப்பின இத்தனை ஆதலின் 'உதைத்த பாதத்தன்' என்கிறாள். இவனை அடிகாத்துத் திரிந்ததித்தனை. மூலை வரவு தாழ்க்கச் சீறி நிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய்த் துகளாய்ப் போயின இத்தனை ஆதலின் 'உதைத்த பாதத்தன்'

---

1. "பேர்த்தும் பெயர்த்தும் அவளோடு அன்றி ஓர் சொல் இல்லேன்?" என்றதனை நோக்கி 'இது பழி என்று' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'எவ்வளவிலே நிற்கிறேன்' என்றது, ஊரார் பழி புகழாம் எல்லையிலே நிற்கிற என் நிலை எது? என்றபடி.

2. "ஊரவர்" என்றதனை நோக்கி, 'இது பழி என்று' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'எவ்வளவிலே நிற்கிறார்கள்' என்றது, பகவத் விஷயத்தில் இறங்குதலையே 'தோஷம்' என்று சொல்லுகிறவர்கள் நிற்கிற நிலை எது? என்றபடி.

3. "தீர்ந்த என் தோழி" என்றதனை நோக்கி, 'அவர்கள் சொல்லுகிற' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'நீதான் எவ்வளவிலே நிற்கிறாய்' என்றது, சமானமான சுக துக்கங்களையுடைய உன் நிலை எது? என்றபடி.

4. புறத்தே இருக்கக்கூடிய சகடம் உள்ளே இருப்பதற்குக் காரணம்? யாது? அது ஊருகைக்குப் பிரசக்தி யாது? அசேதனமான அது ஊரக் கூடுமோ? என்ன, அவற்றிற்கு விடை அருளிச்செய்கிறார் 'இரண்டு சகடத்தை' என்று தொடங்கி. வளர்த்திப்போனாள் - கண் வளர்த்திப்போனாள். பாடி காப்பார் - கிராமங்களைப் பாதுகாப்பவர்கள்; தலையாரிகள்.

என்கிறாள். [1] "கிருஷ்ணன் முலைப்பாலை விரும்பினவனாய்க் கொண்டு திருவடிகளை மேலே நிமிர்த்தான், அழுதான்" என்பது விஷ்ணு புராணம். [2] நமக்குப் புகலான திருவடிகள்தாமே நமக்கு விருப்பம் இல்லாதவைகளையும் போக்கித் தருமாயிற்று.

[3] சகடாசுரனைக் கொன்ற இது, பருவம் நிரம்பிக் கம்சனைக் கொன்ற செயலோடு ஒக்கச் சொல்லலாம்படியன்றோ இதற்கு முன்பே பூதனையைக் கொன்ற செயல். சகடம் வந்து கிட்டின போது சிலராலே நீக்கப்படலாம்; பூதனை தாய் வடிவு கொண்டு வந்து நலியப்புக்கால் அதற்குப் பரிஹாரம் இல்லையேயன்றோ, ஈன்றாரே நஞ்சு இட்டாற்போலே இருப்பது ஒன்றே அன்றோ. பேய்முலை சார்ந்து சுவைத்த செவ் வாயன் - பிள்ளைகள் முலை உண்ணப்புக்கால் தாய்மார்களுடைய முலைக்கீழே முட்டின வாறே பால் சுரக்கும், பின்னைப் பாலை உண்டு உபகாரத்தின் நினைவாலே முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்வார்கள்; அப்படியே, அவளும் தாயாய் வந்து முலைகொடுக்கையாலே இவனும் பிள்ளையாயே முலைக்கீழே முட்டி முலை உண்டு, உபகாரத்தின் நினைவாலே முகத்தைப் பார்த்து அதரத்தில் பழுப்புத் தோற்றப் புன்முறுவல் செய்தாயிற்று முலை உண்டது.

---

1. முலைவரவு தாழ்க்கச் சீறியதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'கிருஷ்ணன்' என்று தொடங்கி.

"கதாசித் சகடஸ்யாதஃ சயாநோ மதுசூதநஃ
சிக்ஷேப சரணா ஊர்த்வம் ஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ"

என்பது, விஷ்ணு புரா. 5. 6 : 1.

2. திருவடிகள் அவனுடைய பகையைப் போக்கினமையைச் சொன்ன இதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'நமக்குப் புகலான' என்று தொடங்கி.

3. பூதனையைக் கொன்றது முன்னே நடந்த செயலாக இருக்க, அதனை, சகடாசுரனைக் கொன்ற செயலுக்குப் பின் ஈண்டு அருளிச்செய்வதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சகடாசுரனைக் கொன்ற இது' என்று தொடங்கி. என்றது, மேலே மேலே மிகக் கொடிய கம்சன் முதலானவர்களை அழித்து அச்செயல்களிலே ஈடுபடுத்தினபடியாலே, சகடாசுரனைக் கொன்ற செயலை நோக்க, அதிக பாதகமாக இருக்கிற பூதனையைக் கொன்ற செயலைப் பின்னர் அருளிச்செய்கிறார் என்றபடி. பூதனை, மிகக் கொடிய பாதகி என்று தோற்றியிருக்குமளவன்றிக்கே, அவளால் வந்த பாதகச் செயல் மற்றையோரால் நீக்கமுடியாதது என்று அருளிச்செய்கிறார் 'சகடம் வந்து' என்று தொடங்கி.

[1] "மழலை மென்னகை இடை இடை அருளா வாயிலே முலை இருக்க என் முகத்தே" என்னக் கடவதன்றே. [2] "உயிரை வற்ற வாங்கி உண்ட வாயான்" என்கிறபடியே, முலைப்பாலோடே இரங்கி உயிரையும் சுரக்கும்படியாக ஆயிற்று முலை உண்டது.

[3] ஆக, இதற்கு முன்பெல்லாம், சகடாசுரனைக் கொன்றதும், பூதனையின் பாலைக் குடித்து அவளை அழித்ததும், 'கம்சன் வரவிட்டனவற்றைப் போக்கினன்' என்று இருந்தாள் அவள்; 'எனக்குத் தன்பக்கலிலே ஈடுபாட்டினை உண்டாக்குகைக் காகச் செய்தான்' என்று இருக்கிறாளாயிற்று இவள். பருவம் நிரம்பிக் காதலனுய் அதில் வல்லவனான பின்பு செய்தவை அலவோ இவளுக்குத் தன்பக்கல் ஈடுபாடு மிகுகைக்குச் செய்தவையாவது, பால்யத்திலே செய்தவை இவளுக்கு உடலாம்

---

1. புன்முறுவல் செய்து முலை உண்டமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் "மழலை மென்னகை" என்று தொடங்கி.

குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்!
கோவிந்தா! என்குடங் கையில் மன்னி
ஒழுகு பேரொழில் இளம்சிறு தளிர்போல்
ஒருகை யால்ஒரு முலைமுகம் நெருடா
மழலை மென்னகை இடை இடை அருளா
வாயி லேமுலை இருக்கஎன் முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணினை நோக்கம்
தன்னையும் இழந்தேன் இழந்தேனே.

இது, பெருமாள் திருமொழி.

2. "சுவைத்த" என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "உயிரை" என்று தொடங்கி.

முற்ற மூத்துக் கோல்தூணியா முன்னடி நோக்கி வளைந்து
இற்ற கால்போல் தள்ளி மெள்ள இருந்துஅங்கு இளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடுஉயிரை
வற்ற வாங்கி உண்ட வாயான் வதரி வணங்குதுமே.

இது, பெரிய திருமொழி.

3. "ஊர்ந்த" என்று தொடங்கி, அவன் செய்த செயல்களைச் சொல்லி, "என்னை நிறைகொண்டான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி. 'இதற்கு முன்பெல்லாம்' என்றது, இறைவன் செய்த செயல்களனைத்தும் 'தனக்காகச் செய்தவை' என்று இவள் கூறுவதற்கு முன்பெல்லாம் என்றபடி. அவள்: தோழி.

படி எங்ஙனே? என்னில், [1] இவளுக்குத் தன்பக்கல் ஈடுபாட்டினை உண்டாக்குதல் அவனுக்குச் சத்தாப்பிரயுக்தம் என்கை. [2] "எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்று அவற்றை ஒழியவேயும் பின்பு செய்த காரியங்கள் எல்லாம் தனக்காகச் செய்தான் என்று இருக்கிறாள் ஆயிற்று இவள்.

என்னை நிறைகொண்டான் - [3] ஒரு செயலாலே இரண்டு பெண்களைக் கொன்றான். [4] தன்னை ஆசைப்பட்டாரில் உகவாதார்க்கே நன்றாயிற்று; அவளை நற்கொலையாகக்கொன்றான், என்னை உயிர்க்கொலையாகக் கொன்றான். [5] அவனுடைய செயல்களிலே ஒன்று குறைதல், நான் இழந்தவற்

---

1. 'இவளுக்குத் தன் பக்கல்' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, அவன், (மூன்றாம்பத்து ஈட்டின் தமிழாக்கம் ஈண்டுக் காண்க.) தன் சத்தையை (உயிரை) நோக்கித் தந்ததே காரணமாகப் பிராவண்யத்தையுடையவளாகிறாள் இவள் ஆகையாலே, பால்யத்தில் செய்த செயல்களும் பிராவண்யத்துக்குக் காரணமாகலாம் என்பது. 'சத்தாப் பிரயுக்தம்' என்றது, பால்யம் யௌவனம் என்கிற இவை வேறுபாடுகள் இன்றிக்கே ஸ்வரூபத்தைப் பற்றி நிற்பது என்றபடி. சத்தாப்பிரயுக்தம் - ஆத்மாவைப்பற்றி நிற்கும் தன்மை.

2. மேற்கூறிப் போந்தவற்றுள் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் "எங்கின்ற" என்று தொடங்கி. "எங்கின்ற" என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, அவதாரம் தொடங்கிப் பின்பு உண்டான செயல்கள் எல்லாம் அடியார்களை வசீகரிக்கும் பொருட்டாக இருக்கும் என்பது. அவற்றை ஒழியவேயும் - அவதாரங்களை ஒழியவேயும்.

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியா முறுமை உயிரளிப்பான்
எங்கின்ற யோனியு மாய்ப் பிறந் தாய் இமை யோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டரு ளாய்அடி யேன்செய்யும் விண்ணப்பமே.

என்பது, திருவிருத்தம்.

3. "நிறை" என்று அடக்கமாய், அது பெண்களுக்கு அசாதாரண தர்மமாகையாலே, அதனைக் கொள்ளுதல் பெண் தன்மையை முடித்தல் என்று கொண்டு, அதனை அருளிச்செய்கிறார் 'ஒரு செயலாலே' என்று தொடங்கி. ஒரு செயல் - பூதனையைக் கொன்ற செயல்.

4. பூதனையைக் கொன்றாற் போன்று தன்னைக் கொல்லவில்லையே, அடக்கத்தை அன்றே கொண்டான்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தன்னை ஆசைப்பட்டாரில்' என்று தொடங்கி.

5. "ஊர்ந்த சகடம்' என்பது போன்றவைகளையும் கூட்டிக்கொண்டு, "நிறை" என்பதற்கு, நிறைய அதாவது, முழுதினையும் என்று பொருள் கூறித் திருவுள்ளம்பற்றி, அதனை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

நிலே ஒன்று குறைய இழத்தல் செய்யில் அன்றே நீ சொல்லுகிற நல்வார்த்தையைக் கேட்கவல்லேனவது. ஆகில், இத்தகையநிலைகள் உளவானால் அவ்விஷயத்தை மறந்து உலகயாத்திரையிலே புகுந்து புறம்பு ஏதேனும் ஒன்றைக்கொண்டு போது போக்கிக்கொண்டு இருக்கவேண்டாவோ, எல்லாம் செய்தாலும் இழக்கலாவது ஒன்றே நிறை? என்ன, [1]பேர்ந்தும் பெயர்ந்தும்-போயும் வந்தும். என்றது, பிரிந்தும் கலந்தும் என்றபடி. அவனேடு அன்றி ஓர் சொல் இல்லேன் - அவன் சம்பந்தத்தையுடைய வார்த்தை யல்லது வேறு ஒரு வார்த்தையையுடையேன் அல்லேன். [2]மறக்கையாவது, நினைப்பனவற்றிலே ஒன்றாகவேணுமே நான் ஆறி இருக்கைக்கு. [3]"ஏது செய்தால் மறக்கேன்" என்னக்கடவதன்றே. [4]நாட்டார், தங்கள் தங்கள் காதலர் காதலிகளோடு கலந்தபோது அவர்களை நினைத்து, பெயர இருந்தபோது அவர்களை மறந்திருப்பர்கள், கலந்து பிரிந்த விஷயத்தினுடைய தண்மையாலே; நான் பிரிந்த இது உலகத்தில் வேறுபட்ட பொருளாகையாலே, பிரிந்தபோது மறக்கலாய் இருந்தது இல்லை, இனிக் கூடித்தான் பார்ப்போமோ மறக்கலாமாகில் என்கிறாள்.

---

1. "பேர்ந்தும் பெயர்ந்தும் அவனேடு அன்றி ஓர் சொல் இல்லேன்" என்றதன் கருத்து, பிரிந்தபோதொடு கலந்தபோதொடு வாசி அற அவனை ஒழிய, ஒரு வார்த்தை எனக்கு இல்லை என்பது. இதனால் பலித்த பொருள், புணர்ச்சிக் காலத்தும் பிரிவுக் காலத்தும் அவனை மறக்கப் போகாது என்பது.

2. மறக்கும்படி சொல்லுகிற தோழியைப் பார்த்து, 'பிரிவுக்காலத்தில் மறக்கப்போகாது' என்னும் இத்தனையே சொல்ல அமைந்திருக்க, "பெயர்ந்தும் அவனேடு அன்றி ஓர் சொல் இல்லேன்" என்று புணர்ச்சிக்காலத்தும் மறக்கப் போகாது என்று சொல்லுதற்குக் காரணம் யாது? என்ன, திருஷ்டாந்தார்த்தம் என்கிறார் 'மறக்கையாவது' என்று தொடங்கி. என்றது, மறக்கையாவது, மற்றைய விஷயங்களை நினைத்தல் ஆகையாலே, அநுபவிக்கிற விஷயத்தை மறக்கையும், மற்றைய விஷயங்களை நினைப்பதிலே ஒன்றாக வேண்டும்; அப்படி மற்றைய விஷயங்களை நினைத்தல் உருவமான மறதி, புணர்ச்சிக் காலத்தில் இல்லாதது போன்று, பிரிவுக் காலத்தும் இல்லை; ஆகையாலே, அது உண்டாகவேண்டுமே நான் ஆறியிருப்பதற்கு என்கிறாள் என்றபடி.

3. அப்படிப் புணர்ச்சிக் காலத்தில் மறக்க ஒண்ணுமையைப் போன்று பிரிவுக்காலத்திலும் மறக்க ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் "ஏது செய்தால் மறக்கேன்" என்று. இது, பெரிய திருமொழி. 9. 3 : 3.

4. பிரிவுக் காலத்தில் மறக்கப்போகாது என்னுமல் "ஏது செய்தால் மறக்கேன்?" என்று விசேடித்ததற்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'நாட்டார் தங்கள்' என்று தொடங்கி.

[1] கூடினாலும் மறக்கலாமோ? என்னில், கூடின் காலத்தில் மறப்பது செய்யலாமாயின் பிரிந்தபோது மறக்கலாவதென்று வியதிரேக உக்தி. அன்றிக்கே, அவனோடு அன்றி ஓர் சொல் இல்லேன் என்பதற்கு, - [2] 'அவனை மற, அவனை நினை! என்றே நீ சொல்லுவது, ஆகையாலே, அவனை ஒழிய எனக்கு வேறு ஒரு சொல் இன்றிக்கே இருந்தது என்கிறாள் என்னுதல். இவள் இப்படிச் சொன்னவாறே விலக்குகிற தோழி உகந்தாள், யாங்ஙனம்? எனின், 'நாம் இவனை அவனோடு சேர்ப்பதற்குப் பட்ட பாடும், அப்படிச் சேர்ப்பித்த நாமே இவனை மறப்பிக்க முயற்சி செய்தாலும் மறவாதபடி உட்புகுந்த வாறும் என்னே! என்று உகந்தாள்; இவள், விலக்குகிற வார்த்தைகளை விட்டு இவள் மனத்தினைக் கண்டாள் 'தீர்ந்த என் தோழி' என்கிறாள்.

தீர்ந்த என் தோழி - தாய்மார் சொல்லுகிற நல்வார்த்தைகளை நீயும் சொல்லுகையாலே, 'நீயும் அவர்களைப் போன்று விலக்குகிறாய்' என்று இருந்தேன், உன் நினைவு இதுவாகப் பெறுவதே, [3] நீ நீயே யாம்படி இருந்தாய், வர இரு என்கிறாள். [4] "இராவணன் வரவிட்ட ஆள்" என்று ஐயம் உற்று இருந்தவள், "பெருமாள் பக்கல் நின்றும் வந்தவன்" என்று அறிந்த

---

1. பொதுவான சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'கூடினாலும் மறக்கலாமோ' என்று தொடங்கி. வியதிரேக உக்தி - மறுதலைச்சொல்.

2. "பேர்ந்தும் பெயர்ந்தும் அவனோடு அன்றி ஓர் சொல் இல்லேன்" என்பதற்கு, விலக்ஷணமான பொருளாகையாலே புணர்ச்சிக்குரிய காலத்திற் போலவே, பிரிவுக்குரிய காலத்திலும் மறக்க ஒண்ணாது என்று மேலே ஒரு கருத்து அருளிச்செய்து, புணர்ச்சிக்குரிய காலத்தோடு பிரிவுக்குரிய காலத்தோடு வாசி அற நீ அவனை நினைப்பூட்டுகின்றவளா யிருக்கையாலும் அவனை மறக்கப்போகாது என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அவனை மற' என்று தொடங்கி. என்றது, 'கலவியில் அவனை நினை, பிரிவில் அவனை மற' என்றே அன்றோ நீ சொல்லுவது; 'அவனை மற' என்று சொல்வதும் அவனை நினைப்பூட்டுவதாயிருக்கிறது என்றபடி. 'விலக்குகிற வார்த்தைகளை விட்டு இவள் மனத்தினைக் கண்டாள்' என்றது, மனத்தோடு படாத வார்த்தைகள் என்று தோழியின் நெஞ்சை அறிந்தாள் என்றபடி.

3. 'நீ நீயேயாம்படி இருந்தாய்' என்றது, நான் என் நாயகன் விஷயத்தில் ஈடுபட்டிருத்தலைக் கண்டு மகிழ்ச்சி அடைந்திருத்த லன்றோ தோழியாகிய உனக்கு ஸ்வீகரிப்பம், ஆகையாலே, நீ நீயேயாம்படி இருந்தாய் என்றபடி. வர இரு - வந்து இரு.

4. முன்பு வெறுத்தவள், பின்பு ஆப்தகூல்யத்தை அறிந்து கொண்டாடுவதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'இராவணன் வரவிட்ட ஆள்'

பின்பு அவனைக் கொண்டாடினற்போலே. என்றது, "பெரு மாளால் அநுப்பப்பட்டவனு யிருப்பதனுலே, ஒ வானர உத்த மனே! என்னுடன் இரஹஸ்யமான சமாசாரங்களைச் சொல் லுவதற்கும் தகுதியுள்ளவன் ஆகிறாய்" என்றாள் என்றபடி. [1]"தோழிமாருடனே சுகமாக இருப்பாய்" என்கிற அவர்கள் படியாய் இருந்தாயே நீ என்கிறாள் என்றபடி. [2]"நான் அங்கு ஸ்ரீ ராமபிரானுடைய திருமாளிகையில் பன்னிரண்டு வருடங் கள் முடிய, மனிதர்களுக்குரிய போகங்களை அநுபவித்துக் கொண்டு எல்லா விருப்பமும் முற்றுப்பெற்றவளாய் இருந் தேன்" என்கிறதும் உன்னுடனே சொல்லக்கூடியதாய் இருந் தது. [3]அத்தோழி தானும், 'பிறர் கூறுகின்ற நல்வார்த்தை களும் இவள் செவியிற்படும்படியோ இவள்தான் நின்ற நிலை' என்று அறிகைக்காகச் சொன்னளித்தனை அன்றே. ஊரார் பழிக்கு அஞ்சி அன்றே நான் விலக்குகிறது என்ன, [4]'என்

---

என்று தொடங்கி. பிராட்டி கொண்டாடின படியைக் காட்டுகிறார் 'பெருமா ளால் அநுப்பப்பட்டவனு யிருப்பதனுலே' என்று தொடங்கி.

"அர்ஹஸேச கபிஸ்ரேஷ்ட மயா ஸம்அபிபாஷிதும்
யத்யபி ப்ரேஷிதஸ்தேந ராமேண வீதிதாத்மநா"

என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 10. பிராட்டி, திருவடியைப் பார்த்துக் கூறியது.

1. மேற்காட்டிய சுலோகத்தில், "மயாஸம்அபிபாஷிதும், அர்ஹஸே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார்"தோழிமாருடனே" என்று தொடங்கி. என்றது, பெருமாள், 'தோழிமாரோடே இரு' என்று அருளிச்செய்த தோழி மாரைப்போலே இருந்தாய் நீ என்றபடி. அவர்கள்படி - தோழிமார்படி.

2. "சம்அபிபாஷிதும்" என்றதிலேயுள்ள "சம், அபி" என்ற உப சர்க்கத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் "நான் அங்கு" என்று தொடங்கி. என்கிறதும் - என்கிற இரஹஸ்யமும். உன்னுடனே - திருவடியோடே.

"சமா த்வாதஸ தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் சர்வகாம சமிருத்திநீ"

என்பது, ஸ்ரீராமா. சுந். 33 : 17.

3. "தீர்ந்த என்தோழி" என்னும்படியான இவள், 'பழிக்கு அஞ்ச வேண்டும்' என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அத்தோழி தானும்' என்று தொடங்கி.

4. "தீர்ந்த என் தோழி" என்று இவள் இப்படிக் கொண்டாடின வாறே, 'என்னைக் கொண்டாடுவதனுல் காரியம் என்? ஊரார் பழி சொல்லு கிறார்களே' என்று இவ்வளவும் அவதாரிகையாகக் கொண்டு, அவள் சொன்ன தற்கு விடை அருளிச்செய்கிறார் "என் செய்யும் ஊரவர்கவ்வையே" என்று,

செய்யும் ஊரவர் கவ்வையே- [1]ஆகில், உனக்கு வார்த்தை சொல்ல அடுப்பது இப்படியே காண், 'நாட்டார் பழி சொல்லுவர்கள்' என்று சொல்லாமல் 'என் நினைவு இருந்தபடி இது' என்று செல்லலாவதுண்டாகில் சொல்லிக்காணாய் என்கிறாள். ஊரார் பழி கொண்டு காரியம் என்? உன் நெஞ்சிற் குறை இல்லாமையே அன்றே எனக்கு வேண்டுவது என்கிறாள். (3)

## 468.

[2]ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல்பு ரைய விளைவித்த
காரமர் மேனிநம் கண்ணன் தோழீ! கடியனே?

**பொ - ரை:**—ஊரிலுள்ளவர்களால் பேசப்படுகின்ற அலராகிய எருவை இட்டு, தாயினால் பேசப்படுகின்ற நல்வார்த்தைகளாகிற தண்ணீரைப் பாய்ச்சி, அன்பாகிய நெல்லை விதைத்து அதனை முளைப்பித்த நெஞ்சமாகிய பெரிய வயலிலே, பொருந்திய பெரிய காதலைக் கடலைப் போல உண்டாக்கிய மேகம் போன்ற திருமேனியையுடைய நம் கண்ணபிரான் கடியன் ஆவானே? என்கிறாள்.

**வி - சு:**—முளைத்த - முளைப்பித்த. காதலைக் கடல் புரைய விளைவித்த கண்ணன் என்க. கடியனே என்ற ஏகாரம், கடியன் ஆகான் என்னும் பொருளையுடையது; எதிர்மறை.

**ஈடு:**— நாலாம்பாட்டு. [3]"என்செய்யும் ஊரவர் கவ்வை" என்றாள்; ஊரார் சொல்லும் பழியேயாய், அவன் தான்

---

1. "ஊரவர்கவ்வை என்செய்யும்" என்கையாலே, பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'ஆகில், உனக்கு' என்று தொடங்கி. 'ஊரார் பழிகொண்டு காரியம் என்?' என்பது, "ஊரவர் கவ்வை என்செய்யும்?" என்பதன் பொருள்.

2. ஊரவர் கவ்வை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.
என்ற திருக்குறளை இங்கு ஒப்பு நோக்குக.

3. "என்செய்யு மூரவர் கவ்வை" என்று, மேற்பாசுரத்தில் சொன்ன பின்பு, "கடியனே" என்ற எதிர்மறை ஏகாரத்தால் அவன் கடியன் அல்லன் என்று சொல்லுகைக்குக் காரணம் யாது? அது தோழி சொன்னது கொண்டு என்னில், "தோந்த என் தோழி" என்று இவள் அன்பினைக் கண்டு உகக்குமவள் "கடியன்" என்று சொல்லுகைக்குக் காரணம் யாது? அவன் முகம் காட்டா

நமக்கு உடலானுனே அவர்கள் சொல்லும் பழி பொறுத்திருக்கைக்கு; ஆனபின்பு, அவன் கடியன்காண் என்றாள். ஏதேனும் ஒன்றைச் சொல்லியாகிலும் மீட்கவேணுமே அவளுக்கு, **'அவன் தனை அற்றவன்காண்'** என்ன; 'கெடுவாய், நீ சொல்லும் வார்த்தையே இது, அவன் நமக்கு என்ன குறை செய்தான்' என்ன, 'ஊரவர் பழி சொல்லிலும் மீளாதபடியான ஈடுபாடு உண்டான இடத்திலும் இந்நிலையில் வந்து முகங் காட்டிற்றிலன் கண்டாயே' என்ன; அவன் இப்போது வந்து முகங் காட்டிற்றிலனாகிலும், தான் முகம் காட்டாதபோதும் தன்னை ஒழிய நாம் மற்றொன்றால் பொருந்தாதபடி செய்தானே! அவன் செய்தபடி பொல்லாதோ என்கிறாள்.

ஊரவர்.....விளைவித்த கண்ணன்-[1] இவை எல்லாம் செய்தாய் நீயோ. ஊரவர் கவ்வை எருவாக - [2] அநுகூலம் இல்லாதவர்களை விட்டு நீங்கிய அன்று தொடங்கி ஊரவர் பழி சொல்லத் தொடங்கினார்கள் காணும். தங்களைவிட்டுப் போருவதற்கு முன்னே "விபீஷணஸ்து தர்மாத்மா" என்றார்களே அன்றோ; இவன் இக்குடியில் உள்ளார்படி அல்லன், இவனுக்கு வாசி உண்டு; அந்த வேறுபாட்டினைச் சொல்லுகிறது **"தர்மாத்மா"**

---

திருக்க, 'கடியன் அல்லன்' என்று சொல்லக் கூடுமோ? கடியன் அல்லனாதலைச் சாதிக்கிற இவள், அவன் முகம்காட்டாதிருக்க, ஊரார் பழி முதலான வற்றாலே தன் பக்கல் பிராவண்யத்தை விளைத்த இவ்வளவு மாத்திரத்தைச் சொல்லுகிறதுக்குக் கருத்து யாது? என்ற சங்கைகளின் மேலே அருளிச்செய்கிறார் '"என்செய்யும் ஊரவர் கவ்வை" என்றாள்' என்று தொடங்கி.

1. "ஊரவர்" என்றது முதல், "விளைவித்த" என்பது முடிய, பாவம் அருளிச்செய்கிறார் 'இவையெல்லாம்' என்று தொடங்கி.

2. விரையாக உருவகம் செய்த அன்பிற்குப் பின்னர் உண்டாகக் கூடிய 'ஊரவர் பழியை' விரைப்பதற்கு முன்னே இடக் கூடிய 'எருவாக' உருவகம் செய்யலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுகூலமில்லாதவர்களை' என்று தொடங்கி. என்றது, சேர்க்கை உண்டானது கண்டு பழி சொல்லுகிறார்கள் அன்று, அவன் பக்கல் அத்வேஷம் உண்டானது கொண்டே பழி சொல்லுகிறார்கள் என்றபடி. அத்வேஷம்-துவேஷம் இன்மை. அநுகூலம் இல்லாதவர்களை விட்டு நீங்கிய மாத்திரத்தில் பழி சொன்னார் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தங்களை விட்டுப் போருவதற்கு முன்னே' என்று தொடங்கி.

"விபீஷணஸ்து தர்மாத்மா நது ராக்ஷஸ சேஷ்டிதஃ"

இது, ஸ்ரீராமா. ஆரண்ய. ஸ்ரீராமனைப் பார்த்துச் சூர்ப்பணகை கூறியது. இங்கு, "தர்மாத்மா" என்றது, கோறல் முதலிய தீயசெயல்கள் இல்லாமை மாத்திரம் சொல்லுகிறது. "து" சப்தார்த்தம், 'இவன் இக்குடியில் உள்ளார்படி அல்லன்' என்பது. "தர்மாத்மா" என்பதற்கு, சநாதன தர்மமான பெருமானை ஆத்மாவாக உடையவன் என்றும் சொல்லுவர்கள்.

என்று. [1] "மறக்குடி அறஞ்செய்யக் கெடும்" என்றதே அன்றோ. "அரக்கர் செயலை உடையவன் அல்லன்" என்பது போன்று, ஜாதி மாத்திரமே இவன்பக்கல் எடுத்துக் கொள்ளலாவது. [2] ஊரார் சொல்லுகிற பழியை இவளுடைய அன்புக்கு எருவாக இட்டான். [3] ஊரார் பழி சொல்லிற்றிலர்களாகில், இவள் தானும் கைவாங்கி இருக்குங்காணும்; என்றது இவள், 'மறப்பேன்' என்னும் அன்றும் மறக்க ஒண்ணுதபடி ஊரார் நிந்தனையை உண்டாக்குகின்றவர்கள் தன்மையிலே நிற்பர்கள் ஆயிற்று என்றபடி. அன்னை சொல் நீர்படுத்து - [4] தாயாரும் இதற்கு முன்பெல்லாம் 'என்மகள்' என்றே இருந்தாள், ஊரார் பழிசொல்லப்புக்க பின்பாயிற்று இவள் அறிந்தது. தாயாரு

---

1. "தர்மாத்மா" என்றால், அது பழியாகுமோ? எனின், அது 'பழியேயாம்' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மறக்குடி' என்று தொடங்கி.

"மறக்குடித் தாயத்து வழிவளம் சுரவாது
அறக்குடி போலவிந் தடங்கினர் எயினரும்
கலையமர் செல்வி கடன்உணின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போள் அல்லள்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்
கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்கு"

என்பது, சிலப். வேட்டுவவரி.

'மறக்குடி அறஞ் செய்யக் கெடும்' என்பது வழக்கு.

2. "ஊரவர் கவ்வை எருவாக" என்பதற்கு, பொருள் அருளிச்செய்கிறார் 'ஊரார் சொல்லுகிற' என்று தொடங்கி.

கவ்வையாற் கவ்வித காமம் அது வின்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து

என்னும் திருக்குறள், ஈண்டு ஒருபுடை ஒப்புமை நோக்கலாகும்.

3. பழி எருவானபடி எங்ஙனே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஊரார் பழி' என்று தொடங்கி. என்றது, பயிர் எருவிலே வேர் ஊன்றுமாறு போன்று, பழியும் பிரேமவண்யத்தை வளர்க்கின்ற வகையாலே சொல்லுகிறார் என்றபடி.

4. தாய் அறிந்த பின்பு ஊரார் அறியவேண்டி இருக்க, ஊரார் பழியை, தாயாருடைய நல்வார்த்தை யாகிற நீர் பாய்ச்சுவதற்கு முன்னே நிகழக் கூடிய தான் எருவாக உருவகம் செய்யலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தாயாரும்' என்று தொடங்கி. 'என்மகள் என்றே இருந்தாள்' என்றது, 'தாயின் குணம் அன்றோ மகளுடைய குணமும், ஆனபின்பு, தன்னைப் போன்றே உலக மரியாதைகளை மீறுள்' என்றே இருந்தாள் என்றபடி.

டைய ஹித வசனத்தை நீராகப் பாய்ச்சி. [1] எருவாவது, அடியிலே ஒருகாலே இட்டு விடுவதே அன்றே, நீர் மாறுமல் பாய்ச்சவேணுமே; ஊரார் ஒருகால் சொல்லிவிடுவர்களித்தனையே, தாயார் வீட்டிற்குள்ளே இருந்து எப்போதும் ஒரே தன்மையாக ஹிதம் சொல்லா நிற்குமே அன்றே; அதனால், அன்னை சொல்லை 'நீர்' என்கிறாள். ஈர நெல் வித்தி - அன்பாகிற நெல்லை வித்தி. [2] இவள், அன்பு இருக்கும்படி ஆராய்ச்சி செய்ததும் இவ்விஷயத்திலே ஆயிற்று; "முலையோ முழுமுற்றும் போந்தில பெருமான் மலையோ திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகம் இவள் பரமே" என்கிறபடியே, இளமைப் பருவம் தொடங்கி வேறு ஒன்றிலையும் அறியாள். [3] புறம்பே சில விஷயங்களிலே பற்று உண்டாய் விரக்தி பிறக்கவேண்டா ஆயிற்று இவளுக்கு. [4] தன் சம்பந்தமான ஞானத்துக்கு உபகாரகமான மூல சுக்ருதமும் அவன்தானே ஆயிற்று. முளைத்த - [5] எருவும் இட்டு நீரும் பாய்ச்சினாலும் முளைக்கும் போதும் முளைப்பிக்கும் சக்தி உண்டாகும்போதும் அவன் உண்டாக்கவேணுமே; ஆதலின், 'முளைத்த' என்கிறது. [6] "சரீர ஆரோக்யம் செல்வம்" என்னும் பொருளைத் தொடக்க

---

1. அன்னை சொல்லை எருவாகவும், ஊரார் பழியை நீராகவும் உருவகம் செய்யாதது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எருவாவது' என்று தொடங்கி.

2. பொதுவிலே "ஈரம்" என்றால், போதியதாமோ? இன்ன விஷயத்தில் ஈரம் என்று விசேடிக்க வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவள்' என்று தொடங்கி, என்றது, "ஈர நெல் வித்தி முளைத்த" என்பது, "காரமர் மேனிக்கு" விசேஷண மாகையாலே, இவ் விஷயத்தில் ஆராய்ச்சி செய்தது வெளிப்படை என்றபடி. மேற் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "முலையோ" என்று தொடங்கி. இது, திருவிருத்தம். 60.

3. இதனால், மற்றையோரைக் காட்டிலும் இவளுக்குள்ள வேறு பாட்டினைக் காட்டுகிறார் 'புறம்பே' என்று தொடங்கி.

4. பகவத் விஷயத்தில் பற்று உண்டாகைக்குக் காரணம், பூர்வஜன்ம புண்ணியமாக இருக்க, "ஈர நெல் வித்தி" என்று அவனைக் காரணமாகச் சொல்லலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தன் சம்பந்தமான' என்று தொடங்கி. என்றது, இவர்க்கு மூல சுக்ருதமும் அவனே என்றபடி. சுக்ருதம் - புண்ணியம்.

5. பாசுரத்தில், முன்னும் பின்னும் அவன் கிருஷியை அருளிச்செய்கையாலே, "முளைத்த" என்பதற்கு, முளைப்பித்த என்பது பொருளாகக் கொள்க. சாதனம் உண்டானால் சாத்தியம் தன்னடையே சித்தியாதோ, இவன் முளைப்பிக்க வேணுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எருவும் இட்டு' என்று தொடங்கி.

6. சாதனம் இருப்பினும் சாத்திய சித்தி அவன் அதினம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சரீர ஆரோக்கியம்' என்று தொடங்கி.

மாகவுடைய [1]சுலோகத்திலே சுகத்திற்குச் சாதனங்களையும் சொல்லி, அவற்றுக்குப் பலமான சுகத்தையும் தனித்துச் சொல்லி, இரண்டற்கும் பகவான் திருவருள் வேணும் என்று சொல்லயிருக்கிறதே அன்றே. [2]சிறியதைப் பெரியது நலியுமாறுபோலே, ஒருவன் செய்த புண்ணியத்தினுடைய பலத்தை வேறு ஒருவன் பறித்துக் கொள்ளாமல், அப் புண்ணியத்தைச் செய்தவனே அநுபவிக்கும்படி செய்யும் போதும் அவன் திருவருள் வேணுமே.

நெஞ்சப் பெருஞ் செய்யுள் - நெஞ்சமாகிற பெரிய செய்யிலே. [3]கலவியும் பிரிவும் என்னும் இவற்றாலே புடைபடுத்திப் பரமபதத்தைப்போன்று பரப்புடைத்தாம்படி பெருக்கினமையாலின் '**நெஞ்சப் பெருஞ் செய்யுள்**' என்கிறாள். ஆக, ஊரார் அலராகிற எருவை இட்டு, தாயாராலே எப்பொழுதும் பேசப்படுகின்ற ஹித வசனமாகிற நீரை நிறுத்தி, ஆசையாகிய நெல்லை வித்தி முளைத்த நெஞ்சமாகிற பெரிய விளை நிலத்துக்குள்ளே என்றபடி. பேர் அமர் காதல் கடல் புரைய விளை வித்த - பெரிதாய் அமர்ந்த காதல் ஆயிற்று. என்றது, ஊரார் சொல்லும் பழிக்கும் தாயாருடைய ஹித வசனத்துக்கும் மீளாதபடி [4]ஆத்மாவோடு கட்டுப்பட்டிருக்கின்ற காதல் என்றபடி. [5]இங்கே '**கடல் புரைய**' என்றது, "**கடலின் மிகப்**

---

1. "சரீர ஆரோக்யம் ஐஶ்வர்யம் அரிபக்ஷ ஜயஸ்ஸுகம்
தேவி த்வத்திருஷ்டி திருஷ்டானாம் புருஷாணாம் ந துர்லபம்"

என்பது, விஷ்ணுபுரா. 1. 9 : 125. இது, திருமகளைப் பார்த்து இந்திரன் துதிப்பது. இது, பிராட்டி விஷயமாயினும், பிராட்டிக்கும் ஈசுவரனுக்கும் உண்டான அபேதத்தைப் பற்ற, பிராட்டி விஷயமான இச்சுலோகம் இவ்விடத்திற்குப் பிரமாணமாகத் தட்டு இல்லை என்க.

2. சுகத்திற்கும் அவன் வேண்டும் என்பதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சிறியதை' என்று தொடங்கி.

3. அணுவான நெஞ்சினை, "பெருஞ்செய்" என்னலாமோ? என்ன: அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கலவியும் பிரிவும்' என்று தொடங்கி. புடை படுத்தி - விரிவாகச் செய்து.

4. 'ஆத்மாவோடு கட்டுப்பட்டிருக்கின்ற காதல்' என்றது, "அமர் காதல்" என்பதற்குப் பொருள். அமர்ந்த காதல் - பொருந்தின காதல் என்றபடி.

5. "கடல் புரைய" என்ற இது, பின்னே வருகின்ற "கடலின் மிகப் பெரிதால்" (7. 3 : 6.) என்பது போன்றவைகளோடு முரணுகாதோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்கே "கடல் புரைய" என்றது' என்று தொடங்கி.

பெரிதால்" என்னுகின்றது, [1]"அதனில் பெரிய என்னவா" என்று, ஈசுவரன் தன்னை விளாக்கொலை கொள்ளும்படியான காதல் என்னுகின்றது; ஆக, "பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி இவ்வளவும் வர விளைத்துக்கொண்ட காரியம் இதுவாயிற்று. [2]கைங்கர்யத்திற்கு முன்கணத்தில் இருப்பதொன்றாய் இருக்குமே அன்றே பரம பக்தி என்பது. [3]அது உண்டாக வேணுமே அன்றே அவ்வருகு போம்போது; [4]அங்கே போன பின்னர் அங்குள்ளாரது ஒருபடியாய் இவரது ஒருபடியாய் இருக்க ஒண்ணுதே. [5]முதலிலே மயர்வற மதிநலம் அருளினது தன்னையே இவ்வளவாகப் பெருக்கினுயிற்று. [6]அன்றிக்கே, பெரிய போரை விளைக்கக் கூடியதான காதல் என்னுதல். என்றது, ஊர்ப்பூசலை விளைத்த காதல் என்பதனைத் தெரிவித்தபடி. [7]அன்றிக்கே, காமவேள் மன்னுஞ் சிலைவாய் மலர்வாளி கோத்து எய்கிற காதல் என்னுதல். நன்று; ஈரம் என்பதற்கும், காதல் என்பதற்கும் வேறுபாடு என்? என்

---

1. "அதனில் பெரிய என்னவா" என்பது, (திருளாய். 10. 10 : 10.) என்றது, "பொய்ந்நின்ற ஞானம்" (திருவிருத்தம். 1.) என்ற திருப்பாசுரம் முதல், "முனியே! நான்முகனே!" (திருவாய். 10. 10 : 1.) என்ற திருப்பாசுரம் முடிய, மேலுக்கு மேல் பக்தி விசேஷமாக விளைகையாலே முரண் ஆகாது என்றபடி. 'இவ்வளவும்' என்றது, "அதனிற் பெரிய என்னவா" என்னுமளவும் என்றபடி. 'இதுவாயிற்று' என்றது, இத்தப் பக்தியை யாயிற்று என்றபடி.

2. அவன் திருபையைச் சாதனமாகப் பற்றின இவர்க்கு, பக்தியை விளைக்கிறது எற்றிற்கு? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கைங்கர்யத்திற்கு' என்று தொடங்கி.

3. மேலதற்கே வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'அது உண்டாகவேணுமே' என்று தொடங்கி.

4. அங்கே போனால் அது ஆவச்யகமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அங்கே போனபின்னர்' என்று தொடங்கி.

5. இப்போது விளைத்தது எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முதலிலே' என்று தொடங்கி.

6. "பேரமர் காதல்" என்பதற்கு இரண்டாவதாக வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. அமர் - அமரை : அதாவது, போரை. 'போர்' என்பது, ஆகுபெயரால் இங்குப் பூசலை உணர்த்திற்று.

7. "பேரமர்காதல்" என்பதற்கு, மூன்றாவதாக வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. இங்கு, அமர் - போர். போரை விளைக்கின்ற காதல் என்றபடி. "காமவேள், மன்னும்" என்பது, பெரிய திருமடல், 43-44.

னில், [1] "விஷயங்களை நினைக்கின்ற ஒரு மனிதனுக்கு அந்த விஷயங்களிலே சங்கம் உண்டாகிறது, அந்தச் சங்கத்தால் காமம் உண்டாகிறது, அந்தக் காமத்தால் குரோதம் உண்டாகிறது" என்கிறபடியே, அதிலே ஓர் அவஸ்தாவிசேடமாம். முன் நிலையைப் பற்ற, மேல் பிறக்கும் நிலை விசேடம் வேறு பொருள் என்னலாம்படி அன்றே இருப்பது.

கார் அமர் மேனி - அடியிலே எருவும் இட்டு நீரும் பாய்ச்சினாலும், மேல் மழை பெய்யாதாகில் அப் பயிர் தலை குளிர்ந்து இராதே அன்றே; வடிவாலே ஆயிற்று மழை பெய்தது. நீர் உண்ட மேகம்போலே குளிர்ந்த வடிவு. நம் கண்ணன்-வடிவையும் தந்து தன்னையும் நமக்குத் தந்த கிருஷ்ணன். வெறும் வடிவில் பசை கண்டு அகப்படுமவள் அன்று, அகவாயில் தண்ணளியும் உண்டாகவேணுமாயிற்று. [2] கிருஷ்ணன் என்றால் **'பெண்களுக்குச் சேஷபூதன்'** என்பது பிரசித்தமே அன்றே. தோழி - நீதான் யாராய் இவ்வார்த்தை சொல்லுகிறாய். இரண்டும் உனக்கே பணியோ; **'நீர்மை யுடையவன்'** என்று பொருந்த விடுகையும் உனக்கே பணியாய், **'அருள் அற்றவன்'** என்று அகற்றப் பார்க்கையும் உனக்கே பணியாயோ இருப்பது! கடியனே - இவ்விஷயத்தில் இப்படிப் பொருந்தவிட்டதே மீட்கப் பார்த்தாலும் மீளாதபடியான ஈடுபாடு உண்டாம்படி செய்தானாகில், [3] இனி அவன் என் செய்வான். முன்பு நீர்மையுடையவனாகச் சொல்லப்பட்டவன், இன்று பழிக்கும்படி கடியன் ஆனானே? (4)

## 469.

**கடியன் கொடியன் நெடியமால் உலகங் கொண்ட**
**அடியன் அறிவரு மேனி மாயத்தன் ஆகிலும்**
**கொடியஎன் நெஞ்சம் அவனென்றே கிடக்கும் எல்லே!**
**துடிகொள் இடைமடத் தோழி! அன்னைஎன் செய்யுமே!**

---

1. *த்யாயதோ விஷயாந் பும்ஸ: ஸங்கஸ்தேஷூ உபஜாயதே*
*ஸங்காத் ஸம்ஜாயதே காம: காமாத் குரோத: அபிஜாயதே"*
என்பது, ஸ்ரீ கீதை. 2: 62.

2. 'கண்ணன்' என்றால், தண்ணளி தோற்றுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கிருஷ்ணன் என்றால்' என்று தொடங்கி.

3. 'இனி அவன் என் செய்வான்' என்றது, இனி அவன் என்ன செய்யவேண்டும் என்றபடி.

**பொ - ரை:**—கடியன், கொடியன், நீண்டமால், உலகத்தைத் தாவி அளந்த திருவடிகளையுடையவன், அறிதற்கு அரிய திருமேனியையுடைய மாயத்தையுடையவன் ஆகிலும், கொடிய என் மனம் அவன் என்றே கிடக்கும்; என்ன ஆச்சரியம்! துடியினது வடிவத்தைக் கொண்ட இடையினையும் மடப்பத்தினையுமுடைய தோழீ! தாய் என்ன செய்ய மாட்டுவாள் என்கிறாள்.

**வி - கு:**—முதல் இரண்டு அடிகளின் பொருள்களை வியாக்கியானத்திற் காணல் தகும். துடி - உடுக்கை.

**ஈடு:**—ஐந்தாம்பாட்டு. [1]நீ 'அவனுக்கு நீர்மை இல்லை, அவன் அருள் அற்றவன்' என்றாயாகிலும், அச்சொலவுக்கு ஒரு பிரயோஜனம் இல்லைகாண், அவன் குணம் இல்லாதவன் என்று நீ சொல்லுவது என்னை மீட்கைக்காக அன்றோ, அதுவும் நான் அவனைப் பற்றுகைக்கு உறுப்பாகச் சொன்னாய் ஆயினுமித்தனை என்கிறாள்.

கடியன் கொடியன் நெடிய மால் உலகம் கொண்ட அடியன் - [2]அவன் குணம் இல்லாதவன் என்று சொல்லும் போதும் நானே சொல்ல வேணுங்காண்; [3]நீ மூட்டிக் கடக்க நின்றாயித்தனை போக்கி, அவனைக் கலந்து உட்புகாநின்ற என்னளவு தெரியுமோ உனக்கு அவனை; ஆனபின்னர், அவை தம்மையும் நான் சொல்லக் கேள் என்கிறாள். [4]கடியன் - கூரியன்; தன் காரியத்திலே நோக்குள்ளவன். என்றது, தனக்கு ஒரு காரியம் உண்டு ஆனால், எதிர்த்தலையின் அளவு

---

1. மேற் பாசுரத்தில் "கடியனே" என்று 'மறுத்தல்' என்னும் மதத்தால், 'அவன் அருளற்றவன்' என்று தோழி கூறியதனை விலக்கினாள்; இங்கே, "கடியன் ஆகிலும்" என்று 'உடன்படல்' என்னும் மதத்தாலே அவள் கூற்றை விலக்குகிறாள் என்கிறார் 'நீ அவனுக்கு' என்று தொடங்கி. பிரயோஜனம் இல்லாமையைக் காட்டுகிறார் 'அவன் குணம் இல்லாதவன்' என்று தொடங்கி.

2. "கடியன்" என்று தோழி சொன்ன மாத்திரத்தை அநுவதியாமல், மேலும், "கொடியன்" என்பது போன்று வேறு சிலவற்றையும் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் குணமில்லாதவன்' என்று தொடங்கி.

3. என்னைக் காட்டிலும் அதிகமாக நீ அறிந்தபடி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீ மூட்டி' என்று தொடங்கி.

4. "கடியன்" என்றது, சுயகாரியப்புலி என்றபடி. 'எதிர்த்தலையின் அளவு' என்றது, எதிர்த் தலையின் மிருதுத் தன்மையைக் குறித்தபடி. எதிர்த் தலை - ஈண்டு, தலைவி.

பாராதே மேல்விழுந்து வந்து கலக்குமவன் என்றபடி. கடுமை-கூர்மை. கொடியன் - [1]தான் மேல் விழுந்து வந்து கலக்கச் செய்தே 'பிரியேன்' என்னவல்லவன். என்றது, [2]கலவியின் மத்தியத்திலே பிரிவினை நினைத்தவன் இனிச் செய்யமாட்டாத தது ஒன்றுஉண்டோ? என்றது, [3]"பேதை நின்னைப் பிரியேன் இனி என்று அகன்றான்" என்கிறபடியே, கலக்கச் செய்தே மற்று ஒன்றினை நினைக்கவல்லவனுக்கு இனிச் செய்ய அரியது ஒன்று உண்டோ? என்றபடி. நெடியமால் - மால் என்பது, பெருமை. நெடிய என்பது, அதன் மிகுதியைக் குறிக்கின்றது. அறப் பெரியவன் என்றபடி. இதனால், கைபுக்கு இருக்கச் செய்தேயும் அளவிட ஒண்ணாதபடி இருக்குமவன் என்கை. "பிரிய நினைக்கின்றான்" என்று அறியா நிற்கச்செய்தேயும்

---

1. "கடியன், கொடியன்" என்னும் இரண்டும் ஒரு பொருளனவாயினும், வேறு வேறாக அருளிச்செய்வதனாலே, "கொடியன்" என்பதற்கு, வெறுப்பிலே நோக்காகப் பொருள் அருளிச்செய்கிறார் 'தான் மேல்விழுந்து' என்று தொடங்கி.

2. 'பிரியேன்' என்றது, குணமாகுமே யன்றிக் குணம் இல்லாமையாகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கலவியின் மத்தியத்திலே' என்று தொடங்கி. 'பிரியேன்' என்றதும், பிரிவை நினைத்தே ஆகையாலே, அது குணம் இன்மையேயாமித்தனை என்றபடி.

3. கலக்கிறபோது பிரியேன் என்று சொன்னானே? என்ன, 'பேதை நின்னை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'மற்று ஒன்றினை' என்றது, பிரிவினை. 'செய்ய அரியது ஒன்று உண்டோ' என்றது, மூகம் காட்டாமலே இருந்து முடித்தே விடுவான் என்றபடி.

> ஏது செய்தால் மறக்கேன்? மனமே! தொழுதும் எழு
> தாதுமல்கு தடம்சூழ் பொழில் தாழ்வர் தொடர்ந்து பின்
> பேதை நின்னைப் பிரியேன் இனி என்று அகன்றான் இடம்
> போது காளும் கமழும் பொழில் சூழ்ந்த புல்லாணியே.

என்பது, பெரிய திரு. 9. 3: 3.

4. தன் மேன்மை அளவிட ஒண்ணாதபடி இருத்தலைத் திருஷ்டாந்த மூலம் காட்டுகிறார் 'பிரிய நினைக்கின்றான்' என்று தொடங்கி.

> காண்கின் றனகளும் கேட்கின் றனகளும் காணில் இக்காள்
> பாண்குன்ற நாடர் பயில்கின் றன இதெல் லாமறிந்தோம்
> மாண்குன்ற மேந்திதண் மாமலை வேங்கடத் தும்பர் நும்பும்
> சேண்குன்றம் சென்று பொருள்படைப் பான்கற்ற தின்னனவே.

என்பது, திருவிருத்தம், 8.

"சேண் குன்றம் சென்று பொருள் படைப்பான் கற்ற திண்ணனவு" என்ன ஒண்ணுதபடியாயிருக்கை. என்றது, [1] மேல் விழுந்து வந்து கலவாநிற்கச்செய்தே பிரிய நினைத்தால், அதனை அறியச் செய்தேயும், 'நீ பிரிய நினைத்தாய்' என்று மடிபிடித்துக் காற்கட்டி விலக்க ஒண்ணுதபடியாய் இருக்கை. உலகம் கொண்ட அடியன் - [2] பிறர் உடைமையைத் தனக்கு ஆக்க நினைத்தால் பின்னையும் அவர்களுக்கு ஓர் அடியும் எஞ்சாதபடி செய்யுமவன். அவர்களைப் பின்னே பாதாளத்திலே தள்ளுமவன். [3] பாதாளங் கலவிருக்கை கொடுக்குமவன். [4] ஒன்றைக் கொள்ளப் பார்த்தால், அவர்களுக்கு ஒன்றும் எஞ்சாதபடி கொள்ளும் திருவடிகளையுடையவன்.

அறிவு அரு மேனி-கிட்டினால், 'இத்தலைக்கு எல்லாச் செல்வத்தையும் தர நினைக்கின்றாயே, எல்லாச் செல்வத்தையும் கொள்ள கொள்ள நினைக்கின்றாயே' என்று அறிய ஒண்ணுதபடியான வடிவையுடையவன். [5] 'என்னுடைய ஆத்மாவும் என்னுடைமைகளும் நீ இட்ட வழக்கு' என்பாரைப்போலே

---

1. "கடியன் கொடியன்" என்ற பதங்களின் அர்த்தங்களை அநுசந்தித்துக்கொண்டு, மேல் வாக்கியத்தை விவரிக்கிறார் 'மேல்விழுந்து' என்று தொடங்கி. என்றது, ஸ்ரீ வைஷ்ணவர்களைத் தலைமகளுக்குச் சொல்லுகிற "காண்கின்றனகளும்" என்ற பாசுரத்திலே, திருமலை உத்தேச்யமாகச் செல்லுகிற ஸ்ரீ வைஷ்ணவர்களைப் 'போக ஒண்ணுது' என்று விலக்க முடியாதது போன்று, பெருமதிப்பன் ஆகையாலே இவனையும் விலக்கமுடியாது என்பது கருத்து. மடிபிடித்து - நிர்ப்பந்தித்து.

2. உலகம் கொண்டது குணமாக இருக்க, குணக்கேடன் என்று சொல்லுகிற இடத்திற்குத் தகுதியாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'பிறர் உடைமையை' என்று தொடங்கி.

3. "குறட்பிரம சாரியாய் மாவலியைக் குறும்பதக்கி அரசுவாங்கி
இறைப்பொழுதில் பாதாளம் கலவிருக்கை கொடுத்துகந்த
[எம்மான் கோயில்"

என்பது, இங்கே அநுசந்தேயம். பெரியாழ்வார் திருமொழி. 4. 9: 7.

4. இடத்திற்குத் தகுதியாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஒன்றைக் கொள்ள' என்ற தொடங்கி. என்றது, தன்பக்கல் நிறம் தொடக்கமான வற்றில் சிறிதும் எஞ்சாதபடி அபகரிக்கையாலே இப்படிச் சொல்லுகிறள் என்பது கருத்து.

'வடிவையுடையவன்' என்றது, ஸ்வபாவத்தையுடையவன் என்றபடி.

5. இங்ஙனம் சொல்லுதற்குக் காரணம் என்? என்ன, விடை அருளிச் செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

சொல்லி ஆயிற்று இத்தலையில் ஆத்மாவையும் மற்றைச் செல்வத்தையும் கொள்ளை கொள்வது. என்றது, தன்னையும் தன்னுடைமையையும் இவள் இட்ட வழக்கு ஆக்கி, பின்னையாயிற்று இவளைத் தனக்கு ஆக்கிற்று என்றபடி. மாயத்தன் - 'நானும் என்னுடைமையும் நீ இட்ட வழக்கு' என்ற இவ்வார்த்தையை நினைத்து அதிலே நெஞ்சு மூழ்கியிருக்க, அவ்வளவிலே கண்களிலே மணலைத் தூவி அகலவல்லவன். ஆகிலும் - [1] நீ சொல்லிச் சொல்லமாட்டாதவையும், சிசுபாலன் முதலானோர் சொல்லமாட்டாதவையும் எல்லாம் நான் சொல்ல வல்லேன் அன்றே அவை விடுகைக்கு உறுப்பாகப் பெற்றேனில். கொடிய என் நெஞ்சம் - [2] உல்லோகமாய் உலகத்திற்கு வேறுபட்டதான என் நெஞ்சு. என்றது, நாட்டாருக்கு, குணம் பற்றுகைக்குப் பற்றுசாயத் தோஷம் விடுகைக்கு உடலாய் இருப்பது; அங்ஙனன்றிக்கே, குணஹாநிதன்னையே பற்றுகைக்கு உடலாகக் கொள்ளும்படியான என் நெஞ்சம் என்றபடி. அவன் என்றே கிடக்கும் - [3] இத்தோஷங்கள் அவன் உடைமைகள் அன்றே என்று ஈடுபட்டுக் கிடக்கும் என்று பிள்ளான் பணிப்பர். என்றது, [4] 'அவன் கடியன் என்றால் அவன் கடுமை இப்போதே காணவேணும்; கொடியன் என்றால், அவன் கொடுமை இப்போதே காணவேணும்; அவன் அடைய முடியாதவன் என்றால், அவன் அடைய முடியாதவனபடியை இப்போதே காணவேணும்; அவன் எல்லாச் செல்வங்களையும் கொள்ளை கொள்பவன் என்றால், அவன் எல்லாச் செல்வங்களையும் கொள்ளை கொள்ள நான் இழந்திருக்கவேணும்; அவன் அறிய முடியாதவன் என்றால், அவன் அறிய முடியாதவனாக இருக்கும் தன்மையை இப்போதே

---

1. "ஆகிலும் என் நெஞ்சம் அவன் என்றே கிடக்கும்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ சொல்லி' என்று தொடங்கி.

2. 'உல்லோகமாய்' என்பதற்கு, உல்லோகம் ஆகையாலே என்று பொருள் உரைத்துக் கொள்க. உல்லோகம் = உலகியலுக்கு வேறுபட்டது.

3. 'இத்தோஷங்கள் அவன் உடைமைகள் அன்றே என்று ஈடுபட்டுக் கிடக்கும்' என்றது, குணங்கள் பற்றுக் கோடாதற்கு உண்டான காரணம் தோஷங்களுக்கும் உண்டே அன்றே என்றபடி.

4. ஈடுபடும்படியை விவரிக்கிறார் 'அவன் கடியன் என்றால்' என்று தொடங்கி.

அறியவேணும் என்றபடியாம். அன்றிக்கே, என் நெஞ்சுக்கு [1] **மாயாவாத ருசி உண்டோ?** அறிகின்றிலேன் என்பர் சீயர். என்றது, விசேஷணம்சத்தில் தாத்பரியம் இன்றிக்கே, விசேஷ்யத்திற்கு அவ்வருகு அறிகின்றது இல்லை என்றபடி. இதனால், அவனுடைய சம்பந்தம் குணம் காரணமாக வந்தது அன்று, ஸ்வரூபத்தோடு கூடியிருப்பது என்கை. எல்லே - என்னே! இஃது ஓர் ஆச்சரியம் இருக்கும்படியே! அன்றிக்கே, 'உன்னை மீட்க நினைத்த நான் சொன்னபடி அன்றிக்கே ஒழிந்த பின்பு, இனி, நீ நினைத்தபடி நினைத்திரு' என்று போகப் புக்காள் தோழி; இங்ஙனே வாராய் என்று அவள் கையைப் பிடித்து 'எல்லே' என்று அழைக்கிறாள் என்னுமாம்.

இவள் இப்படிச் சொன்னவாறே, 'இது ஓர் அன்பின் தன்மை இருந்தபடி என்?' என்று நினைத்தவாறே தோழிக்கு ஒரு விகாரம் பிறந்தது; அதனைக் கண்டு **'துடிகொள் இடை மடம் தோழி'** என்கிறாள். துடியோடு ஒத்திருக்கிற இடையையும், ஆத்ம குணத்தையுமுடைய தோழீ! அன்றிக்கே, [2] உன் வடிவிற்கும் குணத்திற்கும் என்பக்கலுண்டான அன்பிற்கும் ஈடாக வார்த்தை சொல்லப் பாராய் என்கிறாள் என்னுதல். [3] நான் அது அறியாமையாலும் வேண்டாமையாலும் சொல்லுகிறேனே, தாய் சொல்லுமதற்கு அஞ்சிக்காண் நான் இப்படிச் சொல்லுகிறது என்ன, அன்னை என் செய்யுமே - உன் சொல் கேளாத நான், இனி, தாய் சொல்லோ கேட்கப் புகுகிறேன். [4] அநசூயை, பிராட்டியைப் பார்த்துப் 'பெண்களுக்குத் தெய்வம்

---

1. மாயாவாத ருசியாவது, மாயாவாதிகளைப் போன்று விசேஷண அம்சத்தை ஆதரியாமல், விசேஷ்யரூப பிரஹ்ம ஸ்வரூப மாத்திரத்தை ஆதரித்தல்.

2. 'உன் வடிவிற்கும்' என்றது, பிரணய கதைகள் அறியும் உன் வடிவுக்கும் என்றபடி. என்றது, நீயும் உன் நாயகனோடு கூடி அதனுலே துவண்ட இடையை யுடையையா யன்றோ இருக்கிறாய் என்றபடி. 'குணத்திற்கும்' என்றது, பிறர் நோவு கண்டால் ஐயோ! என்று இரங்குதற்குத் தகுதியான குணத்துக்கும் என்றபடி. "தோழி" என்றதனை நோக்கி 'என்பக்கலுண்டான அன்பிற்கும்' என்கிறாள்.

3. 'நான் அது அறியாமையாலும் வேண்டாமையாலும் சொல்லுகிறேனே' என்றது, என் வடிவும் குணமும் அறியாமலும், உன்பக்கல் அன்பு இல்லாமையும் சொல்லுகிறேனே என்றபடி.

4. இங்கே, 'அநசூயை' என்று தொடங்கி அருளிச்செய்யும் இது, 'குணஹானி உண்டானாலும் அது விடுகைக்கு உறுப்பு அன்றிக்கே, பற்றுகைக்கு உறுப்பு' என்னுமதற்குக் காட்டப்படும் சம்வாதமாகும். ஆதலால், இனை,

கணவனே காணும்' என்ன, கேட்ட பிராட்டி நாணமுற்றுக் கவிழ்த்தலை இட்டிருந்தாள்; 'நான் இவர்பக்கல் ஈடுபாடுடைய வளாயிருக்கிற இருப்புக்குக் காரணம், பெருமாள் பக்கல் உண்டான குணங்களாலே என்றே அன்றே நாட்டார் நினைத்திருப்பது; தெய்வ சம்பந்தத்தால் அவருக்குக் குணமுண்டான தித்தனை போக்கி, குணங்கள் இல்லாதவருமாய் அழகு இல்லாதவருமானாலும் நான் அவரை விடமாட்டாதே இருக்கும் இருப்பைக் காட்டலாமே அன்றே அவரைக் குணங்களோடு பிரித்து வைக்கப் பெற்றதாகில்' என்றாளே அன்றே. [1] ஒரு விஷயத்தில் பாவபந்தம் உறைத்திருப்பார் வார்த்தையாயிற்று இது. [2]"வேம்பின் புழு வேம்பன்றி உண்ணுது; என்னக்கடவதன்றே. நன்று; [3]இது, குணதிக விஷயத்தில் சொல்லுகிற வார்த்தையாகில், 'கரும்பின் புழு கரும்பு அன்றி உண்ணுது' என்ன வேண்டாவோ? என்னில், 'அவனுக்கு இந் நன்மைகள் இல்லையேயாகிலும் நான் அவனை விடமாட்டேன்' என்கிற பாவபந்தத்தில் உறைப்புத் தோற்றும்படி மாறுடிச் சொல்லுகிறதல்லது, குணதிக விஷயத்தில் இது இருப்பதாமோ என்க.

---

இத்திருப்பாசுரத்தின் அவதாரிகையில் 'அதுவும் நான் அவனைப் பற்றுகைக்கு உறுப்பாகச் சொன்னாய் ஆயினுமித்தனை' என்ற வாக்கியத்தின் பின் கொண்டு கூட்டிப் பொருள் காணல் தகும். 'நாட்டார் நினைத்திருப்பது' என்றது, 'நீ நினைத்திருப்பது' என்றபடி. பிராட்டி இங்ஙனம் அருளிச்செய்ததனால், பெருமாள் பக்கல் தமக்கு உண்டான பிராவண்யம், அவருடைய குணத்தால் வந்ததன்று; ஸ்வரூபத்தோடு கூடியது என்பது தெளிவாம்.

1. பற்றக்கூடிய விஷயமானாலும் குணஹானி பற்றுகைக்கு உறுப்பாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒரு விஷயத்தில்' என்று தொடங்கி. 'இது' என்றது, மேலே கூறிய பிராட்டியின் திருவார்த்தையை.

2. குணஹானி பற்றுகைக்கு உறுப்பாம் என்பதற்கு வேறு பிரமாணம் காட்டுகிறார் "வேம்பின் புழு" என்று தொடங்கி.

> "வேம்பின் புழு வேம்பன்றி உண்ணுது அடியேன்
> நான் பின்னும் உன் சேவடியன்றி நயவேன்"

என்பது, பெரிய திருமொழி. 11. 8: 7.

3. பொதுவான சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'இது, குணதிக விஷயத்தில்' என்று தொடங்கி. 'அவனுக்கு இந்நன்மைகள் இல்லையே யாகிலும்' என்றது, கடன்மல்லைத் தலசயனத்துக் கிடந்த கரும்பான தான் வேம்பாய் இருந்தானே யாகிலும் என்றபடி. 'மாறுடி' என்றது, இனிமையை மாறுடி விரசமாகச் சொல்லுகிறது என்றபடி.

[1]என் ஸ்வரூபத்தைப் பார்த்தால் நான் உன்னை விடமாட்டேன், நீ நீ அன்றிக்கே இருந்தாலும் என்னால் விடப்போகாது. (5)

## 470.

அன்னை என் செய்யில் என்? ஊரென் சொலில் என்? தோழிமீர்!
என்னை இனி உமக்கு ஆசை இல்லை அகப்பட்டேன்
முன்னை அமரர் முதல்வன் வண்துவ ராபதி
மன்னன் மணிவண்ணன் வாசு தேவன் வலையுளே.

பொ - ரை:—தோழியர்களே! முற்பட்டவர்களான நித்திய சூரிகளுக்குத் தலைவனும் வளம்பொருந்திய துவாரகை என்னும் திவ்விய தேசத்திற்கு அரசனும் மணிவண்ணனுமான வாசுதேவனுடைய வலைக் குள்ளே அகப்பட்டேன்; ஆதலால், இனி, தாயானவள் எந்தக் காரியத்தைச் செய்தால் என்ன? ஊரிலுள்ள மக்கள் எந்தப் பழிச் சொற்களைக் கூறினால் என்ன? என்பக்கல் உங்களுக்கு ஆசை வேண்டாம் என்கிறாள்.

வி - கு:—என்னை, என்பது: வேற்றுமை மயக்கம். வண்ணம் - நிறம். வாசுதேவன் - வசுதேவன் குமரன்; கண்ணபிரான்.

ஈடு:—ஆறாம்பாட்டு. [2]மேல், 'அன்னை, நீ செய்கிற இதனைப் பொறுக்கமாட்டாள்' என்ன, "அன்னை என்செய்யும்" என்று, அவள் பொறுமல் செய்வது என்? என்னுமளவிலே நின்றாள். இப்பாசுரத்தில், நீ இப்படி ஒரு விஷயத்தில் அறுதியிட்டிருப்பதை அறிந்தால், அவள் பிழைக்கமாட்டாள் என்ன, அவள் பிழைத்தால் என்? முடிந்தால் என்? என்கிறாள்.

---

1. "வேம்பின் புழு" என்ற பாசுரத்திலுள்ள "அடியேன் நான்" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'என் ஸ்வரூபத்தை' என்று தொடங்கும் வாக்கியத்தால். "உன் சேவடி அன்றி நயவேன்" என்றதற்கு மறுதலை ரூபமாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'நீ நீ அன்றிக்கே' என்று தொடங்கி. என்றது, நிரசநிசய போக்கியனான நீ விரசனாய் இருந்தாலும் என்றபடி.

2. மேலே, "அன்னை என் செய்யும்" என்றதற்கும், இங்கு "அன்னை என்செய்யில் என்? என்றதற்கும் வேற்றுமை தோன்ற அருளிச்செய்கிறார் 'மேல்' என்று தொடங்கி.

அன்னை என் செய்யில் என் - அவள் பிழைத்தால் என்? முடியில் என்? என்கிறாள். [1] "விரக அக்னியினால் கொளுத்தப் பட்டிருக்கிற நமக்குப் பெரியோர்கள் என்ன செய்வார்கள்" என்கிறபடியே, முடியாதே இருப்பார்க்கு அன்றே இதனை நீக்கவேண்டுவது. கையற்றார்க்கு இது கொண்டு காரியம் என்? நன்று; - 'தாயாருடைய நாசம் ஒரு தலையாகவும் மீளாதபடியாய், இவள் நாயகனுடைய அழகு முதலானவைகளில் ஈடுபட்டவள் ஆனாள்' என்று ஊரார் பழி சொல்லுவர்களே என்ன, ஊர் என் சொல்லில் என் - அவர்கள் பழி சொல்லில் என்? குணங்களைச் சொல்லில் என்? [2] "கொல்லை" என்னுதல், "குணமிக்கனள்" என்னுதல், இத்தனை அன்றே அவர்கள் பழி சொல்லுவது. தோழிமீர் - 'தாய் என் செய்யில் என், ஊர் என் சொல்லில் என்' என்று நீங்கள் மேல் விழுந்து என்னை இவ்விஷயத்தில் ஈடுபாடுடையளாக ஆக்குகை அன்றிக்கே, 'தாய் பிழையாள், ஊரார் பழி சொல்லுவர்கள்' என்று இதனைப் பழியாகச் சொல்லுமளவு உங்களது [3] ஆனபின்பு. என்னை - [4] "தாய்வாயிற் சொற்கேளாள் தன் ஆயத்தோடு அணையாள்" என்கிற 'தாயார் பிழையாள், ஊரார் பழி

---

1. "குரவः கிம் கரிஷ்யந்தி தக்தாநாம் விரஹாக்நிநா" என்பது, விஷ்ணுபுராணம். 5. 18: 22. இச்சுலோகத்தில், "கிம் கரிஷ்யந்தி" என்றதற்கு, பாவம், 'முடியாதே' என்று தொடங்கும் வாக்கியம். "தக்தாநாம்" என்று இறந்த காலமாகச் சொல்லுவதற்கு, பாவம், 'கையற்றார்க்கு' என்று தொடங்கும் வாக்கியம். இந்தச் சுலோகம் இங்குப் பிரமாணமானபடி எப்படி? எனின், "பெரியோர்கள் என்ன செய்வார்கள்" என்ற போதே, 'அவர்கள் இறந்தாலும் அதனையும் நாம் அநாதரித்திருப்போம்' என்று தோற்றுகையாலே, பிரமாணமாகத் தட்டு இல்லை என்க. "வாசுதேவன் வலையுள் அகப்பட்டேன், அன்னை என்செய்யில் என்?" என்றதுவும், "விரஹாக்நிநா தக்தாநாம் குரவः கிம் கரிஷ்யந்தி" என்றதுவும் ஒரு பொருளையே கூறுவனவாம்.

2. பழி சொல்லுதற்கும் குணங்களைச் சொல்லுதற்கும் மேற்கோள், "கொல்லை" என்று தொடங்குவது. இது, திருவாய்மொழி. 6. 7: 4. கொல்லை - வரம்பு அழிந்த செயல்களைச் செய்பவள்.

3. 'ஆனபின்பு' என்ற இதனை, மேல் வருகின்ற 'இனி என் பக்கல் உங்களுக்கு நசை அற அமையும்' என்றதனோடு கூட்டிப் பொருள் காண்க.

4. பெரிய திருமொழி. 5. 5: 4.

சொல்லுவர்கள்' என்றுல் மீளாதபடி இவ்விஷயத்தில் ஈடுபாடுடையவளாய் இருக்கிற என்னை. இனி - உங்கள் சொல்லும் கேளாதபடி கைகழிந்தபின். உமக்கு - 'இது பழி' என்று மீட்கப் பார்க்கிற அளவிலே நிற்கிற உங்களுக்கு. ஆசை இல்லை - இனி என்பக்கல் உங்களுக்கு நசை அற அமையும்.

தோழிமீர் - [1] இதற்கு முன்பு எல்லாம், 'தோழி' என்று உயிர்த்தோழி ஒருத்தியையும் பார்த்து வார்த்தை சொல்லிப் போந்தாள்; இப்போது இவளுடைய துணிவின் மிகுதியைக் கண்டவாறே 'ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்த்தை சொல்லியாகிலும் மீட்கவேணும்' [2] என்று ஆயவெள்ளம் எல்லாம் திரண்டன; அதனாலே, 'தோழிமீர்' என்கிறாள். அகப்பட்டேன்-" இப்போது 'ஹிதம்' என்கிற புத்தியாலே ஒரு வார்த்தை சொன்னேமேயாகிலும், ஊரார்க்கும் தாய்மார்க்கும் இவ்வருகே எங்களிடத்தில் [3] ஒரு வாசி நினைத்திருக்கவேண்டாவோ உனக்கு" என்ன், அது அப்படியே, அதில் குறை இல்லை; என்னைக் கடல் கொண்டது காணுங்கோள், நான் என் செய்வேன் என்கிறாள். முன்னை அமரர் முதல்வன் வண்துவராபதி மன்னன் - [4] 'சிறியார் பெரியார்' என்ற வாசி இன்றிக்கே எல்லாரையும் ஒரு சேர ஆழப்பண்ணும் கடலிலே அன்றே நான் அகப்பட்டது. "ரூப ஔதார்ய குணை:—ரூபம் என்றது, வடிவழகை. ஔதார்யம் என்றது, அதனை எல்லாரும் அநுபவிக்கலாம்படி தன்னை முற்றக் கொடுத்துக் கொண்டிருக்கையை. குணம்

---

1. மேல், "தோழி" என்று ஒருமையாக விளித்தவள் இங்கு, "தோழிமீர்" என்று பன்மையிலே விளிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இதற்கு முன்பெல்லாம்' என்று தொடங்கி.

2. "ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ என்றலும்" என்பது, நம்பியகப் பொருள்.

3. 'ஒருவாசி நினைத்திருக்க வேண்டாவோ' என்றது, மீட்கையில் நசை பண்ணவேண்டா என்னலாமோ? மற்றையோரைக் காட்டிலும் விருப்பத்திற்குரிய எங்கள் வார்த்தைகளைக் கேட்க வேண்டாவோ? என்றபடி.

4. "வண் துவராபதி மன்னன்" என்றதனை நோக்கிச் 'சிறியார்' என்றும், "முன்னை அமரர்" என்றதனை நோக்கிப் 'பெரியார்' என்றும் அருளிச்செய்கிறார். இதனால், யோக்கியதையுடையாரோடு யோக்கியதை இல்லாதாரோடு வேற்றுமை அற ஈடுபடுத்தும் விஷயம் என்பதனைத் தெரிவித்தபடி. இவ்வாறு ஈடுபடுத்துவதற்கு மேற்கோள், "ரூபௌதார்யகுணை: பும்சாம் திருஷ்டி சித்தாபஹாரிணம்" என்பது. இது, ஸ்ரீராமா. அயோத். 3; 29.

என்றது, கொள்ளுகிறவனைக் காட்டிலும் தாம் தாழநின்று கொடுக்கும் சீலத்தை. தன்மேன்மை தோற்ற இருந்து கொடுக்கும் அன்று ஆள்பற்றாதே அன்றே; அதற்காகத் தாழநின்று பிற்றைத் தன்னைக் கொடுப்பது. பும்சாம் - [1]அந்த அழகும் கொடையும் சீலமும் வயிர உருக்காவனவாம்; என்றது, பலம் அற்ற பெண்கள் படிமதனை வன்னெஞ்சரையும் படுத்தவல்லனவாம் என்றபடி. அன்றிக்கே, "**பிரகிருதி புருஷர்களை**" என்றாற்போலேயாய், அசித்துக்கு வேறுபட்டவர்கள் எல்லாரையும் ஈடுபடுத்தவல்லன என்னவுமாம். திருஷ்டி சித்தாபஹாரிணம் - [2]கண்களுக்கு மனத்தின் துணைவேண்டாமலே, கண்களைப் பின்செல்லுமத்தனை நெஞ்சு. தாய் வேறு கன்று வேறு ஆக்கும் விஷயம்" அன்றே என்றபடி. [3]"எந்தப் பிரமபதத்தில் எல்லாவற்றையும் காண்கிறவர்களும், எப்பொழுதும் உள்ளவர்களும், பகவானுடைய அநுபவத்தில் எப்பொழுதும் ஒருபடிப்பட்டவர்களும்" என்னும்படி இருக்கிறவர்கள் ஆகையாலே '**முன்னை அமரர்**' என்கிறது. நித்தியசூரிகளுக்கும் சத்தைக்குக் காரணமாயிருக்கிற மேன்மையுடையவன் ஆதலாலே [4]'**முதல்வன்**' என்கிறது. அன்றிக்கே, எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டிருக்குமவர்களுக்கும் அப்பொழுதைக்கு அப்பொழுது ஆசைப்படக்கூடிய விஷயமானவன் என்னுதல். ஆக, அத்தகைய விஷயத்திலே அன்றே நான்

---

1- மேற்காட்டிய இந்தச் சுலோகத்தில் "பும்சாம்" என்று விசேடித்துக் கூறுவான் என்? பெண்களை ஈடுபடுத்தாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அந்த அழகும்' என்று தொடங்கி. வயிர உருக்கு - வயிரத்தைப் போன்ற கடினமான மனத்தையும் உருக்குவது. வயிரம் - வஜ்ரம்.

2. எல்லா இந்திரியங்களும் பிரதானமான மனத்தினைப் பின் செல்லுவன ஆகையாலே "சித்த த்ருஷ்டி அபஹாரிணம்" என்ன வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி. அதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தாய் வேறு' என்று தொடங்கி. காரணங்களுக்குப் பிரதானமானதாகையாலே மனத்தினைத் 'தாய்' என்றும், மற்றைக் காரணங்கள் மனத்தினைப் பின் செல்லுவன ஆதலின், அவற்றைக் 'கன்று' என்றும் அருளிச்செய்கிறார். ஸ்ரீ பராசரரையும் கைகேசியையும் வேறுக்கின விஷயம் அன்றே இது என்பது, தொனிப் பொருள்.

3. யஜுர்.

4. "முதல்வன்" என்பதற்கு இரு பொருள். ஒன்று, நித்திய சூரிகளுக்கு முன்பில்லாத இனியனாயிருந்து அவர்கள் சத்தையை நிர்வஹிக்குமவன் என்பது. "முதல்வன்" என்றது, ஆதி என்ற பொருளதாய் 'ஆதீயத இதீ ஆதிஃ' என்கிற வியுத்பத்தியால், அப்பொழுதைக்கப்பொழுது ஆசைப்படக்கூடிய விஷயமானவன் என்பது இரண்டாவது பொருள்.

அகப்பட்டது என்பதனைத் தெரிவித்தபடி. 'வண்துவராபதி மன்னன்' என்றதனால், [1]முதன்மை தோற்ற ஓலக்கங் கொடுத்துக்கொண்டிருக்கிற, துறை அல்லாததிலேயோ நான் இழிந்தது, [2]"பதினாறும் ஆயிரவர் தேவிமார் பணிசெய்யத் துவரை என்னுமதில் நாயகராக வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில்" என்கிறபடியே, பெண்களுக்கு உடம்பு கொடுத்துக் கொண்டிருக்கிற நம் துறையிலே அன்றே இழிந்தது என்பதனைத் தெரிவிக்கிறாள். அன்றிக்கே, 'மன்னன்' என்றதனால் [3]மேன்மை தோற்ற ஓலக்கங் கொடுத்துக் கொண்டிருக்கிற இடமே நன்றாய் விட்டது நீர்மை தோற்ற இருக்கிற இடத்தில் விழுகிற பிரம்புகளிற் காட்டில் என்பதனைத் தெரிவிக்கிறாள் ஆகவுமாம்.

மணி வண்ணன்-[4]அவ்விரண்டும் இல்லையேயாகிலும் விட ஒண்ணுததாயிற்று வடிவழகு. காதலி துவக்குண்பது வடிவழகிலே அன்றே. வாசுதேவன்-வடிவழகு இல்லையாகிலும் விட ஒண்ணுததாயிற்றுக் குடிப்பிறப்பு. [5]"நான் தசரத சக்கரவர்த்தியினுடைய மருமகள்" என்கிறபடியே, பிராட்டி, தனக்

---

1. முன்னே அமரர் முதல்வனுயிருந்து வைத்தும், வண் துவராபதியிலே மன்னனுயிருக்கிறான் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிறார் 'முதன்மை தோற்ற' என்று தொடங்கி.

2. பெண்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையால் வந்த வேறு பாட்டினையுடையவன் என்பதற்குப் பிரமாணம், 'பதினாறுமாயிரவர்' என்பது. இது, பெரியாழ்வார் திருமொழி. 4. 9: 4.

3. வண்துவராபதியிலே இருக்கச்செய்தே மன்னனுயிருக்கிறான் என்று வெறுப்பிலே வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'மேன்மை தோற்ற' என்று தொடங்கி.

4. 'அவ்விரண்டும்' என்றது, "முன்னே அமரர் முதல்வன், வண் துவராபதி மன்னன்" என்பனவற்றால் கூறிய மேன்மையையும் நீர்மையையும். அவற்றிலும் வடிவழகு கவர்ச்சியை உண்டாக்குமோ? என்ன, 'காதலி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. குடிப் பிறப்பு விட ஒண்ணுமைக்கு மேற்கோள் அருளிச்செய்கிறார் 'நான் தசரத சக்கரவர்த்தியினுடைய' என்று தொடங்கி.

"ப்ருதிவ்யாம் ராஜசிம்ஹானாம் முக்யஸ்ய விதிதாத்மநः
ஸ்நுஷா தசரதஸ்யாஹம் சத்ருசைந்ய பிரதாபிநः"

என்பது ஸ்ரீராமா. சுந். 33: 15, 16. பிராட்டி திருவடியைப் பார்த்துக் கூறியது. மற்றைய சம்பந்தங்களை இட்டுக் கூறாமல், சக்கரவர்த்தியின் சம்பந்தத்தைக் கொண்டு கூறுவதற்கு, பாவம் 'பிராட்டி' என்று தொடங்கும் வாக்கியம்.

குப் பேற்றுக்கு உடலாக நினைத்திருப்பது 'சக்கரவர்த்தி மருமகள்' என்னும் இதனையே காணும். "எதிரியின் படையினை வருந்தச் செய்யுமவர்" என்கிறபடியே, எங்கள் மாமனார் உளராகில் எனக்கு இவ்விருப்பு இருக்கவேணுமோ? பகைவர்களும் ஜீவிக்க, ஜீவித்தவரோ அவர்.

[1] முன்னை அமரர் முதல்வன் வண் துவராபதி மன்னன் - அவனுடைய [2] தயை அற்ற தன்மையோடு நீர்மையோடு, ஊராருடைய பழியோடு புகழோடு வாசி அற்றாற்போலே, அவன் மேன்மையோடு சௌலப்யத்தோடு வாசி அற இரண்டும் மனக்கவர்ச்சியாய் இருக்கிறதாயிற்று இவளுக்கு. வலியுள்...அகப்பட்டேன் - [3] அந்தப் பொதுவானதில் அன்றிக்கே, அவன் என்னைக் குறித்து நோக்கின நோக்கிலும் புன்முறுவலிலும் அன்றே நான் அகப்பட்டது. [4] ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் வலியாக அபிநயித்துப் பாடாநிற்க, எம்பெருமானார் திருக்கண்களைக் காட்டியருளினார் 'கமலக்கண் என்னும் நெடுங்கயிறு" எனக்கடவதன்றே. அநுகூலம போலே

---

1. "முன்னை அமரர் முதல்வன் வண்துவராபதி மன்னன்" என்பதற்கு, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி மீண்டும் எடுக்கிறார் "முன்னை" என்று. ஈடுபடுத்துவதற்குக் காரணம் நீர்மையேயன்றே? அதனோடு மேன்மையையும் சொல்லக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'அவனுடைய' என்று தொடங்கி.

2. "கடியன் கொடியன்" என்ற திருப்பாசுரத்தையும், "தோழி நம் கண்ணன் கடியனே" என்ற திருப்பாசுரப் பகுதியையும் நோக்கி, 'தயை அற்ற தன்மையோடு நீர்மையோடு' என்றும், "ஊர் என் சொல்லில் என்?" என்றதனை நோக்கி 'ஊராருடைய' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

3. 'அந்தப் பொதுவானது' என்றது, மேலே கூறிய அழகு சௌலப்யம் முதலியவற்றைக் குறித்தபடி. "வண்துவராபதி மன்னன்" என்றதனை நோக்கிப் 'பொதுவானது' என்கிறார்.

4. "வலி" என்பது, நோக்கையும் புன்முறுவலையும் காட்டுவதற்கு இசைந்தபடி காட்டுகிறார் 'ஆழ்வார்' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "கமலக்கண்" என்று தொடங்கி. இது, நாய்ச்சியார் திருமொழி 14: 4.

இருந்து தப்பாதபடி அகப்படுத்திக் கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன். (6)

## 471.

**வலியுள் அகப்படுத்தென்னை நன்நெஞ்சம் கூவிக்கொண்டு**
**அலைகடற் பள்ளி அம்மானை ஆழிப் பிரான்தன்னைக்**
**கலிகொள் அகலல்குல் தோழி! நம் கண்க ளாற்கண்டு**
**தலையில் வணங்கவு மாங்கொலோ? தையலார் முன்பே.**

**பொ - ரை:**—கலியைக் கொண்டிருக்கின்ற அகன்ற அல்குலை யுடைய தோழீ! வலியிலே என்னையும் அகப்படுத்திச் சிறந்த மனத்தையும் அழைத்துக்கொண்டு அலைகளையுடைய கடலிலே பள்ளி கொண்டிருக்கின்ற அம்மானுகிய ஆழிப்பிரான் தன்னை, இத்தப் பெண்களுக்கு முன்பு நம் கண்களாலே கண்டு தலையாலே வணங்கவும் ஆகுங் கொல்லோ என்கிறாள்.

**வி - சு:**—ஆழிப்பிரான் தன்னைக் கண்டு வணங்கவும் ஆகும் கொல்? **என்க. கலி - புடைவை. மேகலாபரணமுமாம். தலையில் - தலையால். வேற்றுமை மயக்கம். தையலார் - பெண்கள்.**

**ஈடு:**—ஏழாம்பாட்டு. [1] அவனிடத்தில் குணம் இன்மையைச் சொல்லுகிறபெண்கள் வாய் அடங்கும்படி நாம் அவனை வரக் கண்டு, அந்த உபகாரத்துக்காகத் தலையாலே வணங்க வல்லோமே என்கிறாள்.

**என்னை வலியுள் அகப்படுத்து-என்னை, தப்பாதபடி புன்முறுவல், கடைக்கண் நோக்கம் முதலியவைகளிலே அகப்படுத்தி. நல்நெஞ்சம் கூவிக்கொண்டு - [2] தான் என்றால், "நெஞ்சே இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று நான் பிற்பாடையாம்படி என்னிற் காட்டிலும் முற்படும்படியான**

---

1. "நம் கண்களால் கண்டு தலையில் வணங்கவும் ஆம் கொல்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. நெஞ்சுக்கு நன்மையாவது ஏது? என்ன, 'தான் என்றால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'தான் என்றால்' என்னுமிதனை, பின் வருகின்ற 'முற்படும்படியான' என்றதனோடு கூட்டுக. "நெஞ்சே" என்ற பாசுரம், பெரிய திருவந். 1. தொடுத்துக் கொண்டு. இங்ஙனமாக அழைத்துக்கொண்டு.

நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக்கொண்டு. அலைகடல் பள்ளி அம்மானை - [1] "ஸ்ரீமத் துவாரகையில் இருக்கில், 'பெண்களுக்கு ஓலக்கங் கொடுத்த இடம்' என்று சம்பந்தம் சொல்லிக் கொண்டு வரக் கூடும்" என்று எட்ட ஒண்ணுத நிலத்திலே பின்னையும் போய்ப் புக்கான். பெண் பிறந்தார்க்கு நினைக்க ஒண்ணுதபடி கொந்தளிக்கிற கடல் என்பாள் 'அலைகடல்' என்கிறாள். [2] பெரிய செல்வம் கைப்பட்டவாறே கடல் ஓடத் தொடங்கினான். ஆழிப்பிரான் தன்னை - 'புக ஒண்ணுத நிலத்திலே புக்கான்' என்று விட ஒண்ணுதபடியாயிற்றுக் கையும் திருவாழியுமான அழகு. [3] கடலோடியாகிலும் பெறவேண்டியாயிற்று இருப்பது.

கலைகொள் அகல் அல்குல் தோழி - நல்ல புடைவையையுடைத்தான அகன்ற நிதம்பப் பிரதேசத்தையுடைய தோழீ! என்றது, [4] உன் வடிவுபோலே அநுகூலமாய் இருக்கவேண்டாவோ உன் வார்த்தையும் என்றபடி. அன்றிக்கே, அவள் மடியிலே கிடந்து சொல்லுகிறாள் ஆகவுமாம். மேல் "தோழிமீர் என்னை இனி உமக்கு ஆசை இல்லை" என்றாள்; இங்கே, 'தோழி நம் கண்களாற் கண்டு' என்று விளிக்கிறாள்; இவை சேரும்படி என்? என்னில், தாய்மார் சொல்லுகிற வார்த்தையை இவர்களும் சொல்லுகையாலே "தோழிமீர் என்னை இனி உமக்கு ஆசை இல்லை" என்றாள். இங்ஙனம் பேசுவாரை விட்டுத் "தீர்ந்த என் தோழி" என்னலாம்படி நெஞ்சு கலந்து ஒரு ரோய் இருக்கிற உயிர்த் தோழியைப் பார்த்து வார்த்தை

---

1, மேல் "துவராபதி மன்னன்" என்றதற்கும், இங்கு "அலைகடற் பள்ளி அம்மான்" என்றதற்கும் கருத்து அருளிச்செய்கிறார் 'ஸ்ரீமத் துவாரகையில்' என்று தொடங்கி.

2. "நன்னெஞ்சம் கூவிக்கொண்டு" என்றதனையும் கூட்டி வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'பெரிய செல்வம்' என்று தொடங்கி. கடல் ஓடத் தொடங்கினான் - கப்பல் வியாபாரத்துக்குத் தொடங்கினான் என்பது தொனி.

3. கடல் ஓடியாகிலும் - கடலிலே விழுந்தாகிலும்; சாகசம்பண்ணியாகிலும்.

4. "கலை கொள் அகல் அல்குல்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன் வடிவுபோலே' என்று தொடங்கி.

சொல்லுகிறாள். நம் கண்களால் கண்டு -[1] இப்போது இவள் ஹிதம் சொன்னாளேயாகிலும், காணும்போது நான்கு கண்களாலே காணும் காண்பது; அல்லது இரண்டு கண்களாலும் காணவேண்டாள். தலையில் வணங்கவும் ஆம் கொலோ தையலார் முன்பே - 'பிரிந்த இடத்தில் தன்னுடைய பெண் தன்மைக்குப் போரும்படி அவன்தானே வரப் பார்த்திருந்திலள், அவனும் வரவு தாழ்த்தான்' என்று பழி சொல்லுகிற இவர்கள் முன்பே அவனும் வந்து, அவன் வந்த உபகாரத்துக்குப் பிரதி உபகாரமாகத் தலையாலே வணங்கப் பெறவல்லேமோ! [2] இத்திருவாய்மொழியை ஆழ்வான், இராஜேந்திரசோழனில் சந்தியா சதஸ்ஸிலே நிர்வஹித்துக் கொண்டிருக்க, **'ஆமருவி நிரை மேய்த்தான் நம்பியார்'** என்பார் நூறு வயது போந்திருப்பார் ஒருவர், நடுங்க நடுங்க எழுந்து நின்று, 'ஆழ்வான்! தலைமகள் தலையாலே வணங்கப் பெறுமோ?' என்ன, 'பெறும், சிஷ்டாசாரம் உண்டு காணும்; ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் [3] "தலையாலே தொழுதலையும் செய்வாய்" என்று அநுஷ்டித்

---

1. ஹிதம் சொல்லுமது இவளுக்கும் உண்டே யன்றோ, அங்ஙனம் இருக்க, "நம் கண்களாற் கண்டு" என்று அவளுக்கும் காட்சியிலே சேர்க்கை யுண்டாகச் சொல்லலாமோ? என்ன, 'இப்போது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, ஹிதம் சொல்லுமது மனத்தொடு படாத தாய், நாயகன் விஷயத்தில் நாயகிக்கு உண்டான ஈடுபாடு தனக்கு உடன்பாடு ஆகையாலே, காட்சியில் இவளுக்கும் சேர்க்கை உண்டாகச் சொல்லலாம் என்றபடி. 'நான்கு கண்களாலே' என்கையாலே, புருஷகாரம் முன்னுகச் சேவிக்கவேண்டும் என்பது ஸ்வாபதேசம். இதனால், 'வேதம் வல்லார்களே' முன்னிட்டே அவனைக் காண்பார் என்றபடி.

2. பிரிவுத் துன்பத்தோடு இருக்கிற தலைமகள் வணங்குவாளோ? என்கிற சங்கையிலே, கூரத்தாழ்வான் அருளிய விடையை அருளிச்செய்கிறார் 'இத்திருவாய்மொழியை' என்று தொடங்கி. சந்தியாசதஸ் - மாலை நேரத்தில் கூடிய சபை.

3. "கௌசல்யா லோகபர்த்தாரம் சுஷ்ரூவேயம் மனஸ்விநீ
தம் மமார்த்தே சுகம் ப்ரூச்ச ஸ்ரஸா ச அபிவாதய"

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 56.

ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னுன்தொழுது என்று விளம்புவாய்.

என்பது, கம்பராமாயணம்.

தாள் காணும்' என்று அருளிச்செய்தார். [1] "கர்மத்தினாலேயே பலசித்தியைப் பெற்றார்கள் ஜநக குலத்திலுள்ளவர்கள்" என்கிறபடியே, ஜநக குலத்திலுள்ளவர்களிலும் ஆசாரத்தில் மேற்பட்டார் இலர் அன்றே.

[2] "மநஸ்விநீ கௌசல்யா லோகபர்த்தாரம் யம் சுஷுவே - நாட்டில் பெண்கள் 'இங்கு இருக்கும் நாட்களுக்கு நமக்கு ரக்ஷகனுய்ப் பின்பு நரகத்தில் புகாதபடி விலக்குவதற்கும் ஒரு பிள்ளைவேணும்' என்று நோன்பு நோற்றுப் பெறுவர்கள்; அங்ஙன் அன்றிக்கே, என் மாமியார் தன் நெஞ்சில் உண்டான பரந்த நோக்கத்தாலே, 'உலகத்துக் கெல்லாம் ரக்ஷகனாக வல்லான் ஒரு பிள்ளையைப் பெறவேணும்' என்று நோன்பு நோற்றுப் பெற்றார்; அவர் நினைவு தப்பலாமோ? அந்த உலகத்துக்குள்ளே இருக்கிற ஒரு பெண் அல்லேனே நான். இனி, 'நாட்டில் பெண்கள், கணவன்மார்கள் சமர்த்தர்களானபோது ஆதரித்தும், சமர்த்தர்கள் அல்லரானபோது உபேக்ஷித்தும், போரக்கடவர்களாய் இருப்பர்கள் என்பது ஒன்று உண்டு; நீ எல்லா நிலைகளிலும் அவரை ஆதரித்துப் போருவாய்' என்று அவர் என்னைக் குறித்துச் சொல்லிவிட்டார்; நானும் அப்படியே செய்து போராநிற்க, நிண்ணகத்தில் குமிழிக்கீழே சாவி போமாறுபோலே, தாம் என்னுடைய ரக்ஷணத்தில் நெஞ்சு நின்றது அவர் நினைவு குறைவுபட்டது ஆகவோ என்று சொன்னேன் என்று சொல்லு. தம மம அர்த்தே சுகம் பிருச்ச - எங்களுடைய ரக்ஷணத்துக்கு நாங்கள் பிரார்த்தித்துப் பெறவேண்டுவது ஒன்று இல்லையே அன்றே, அதுவும் அவர் நினைவில் உண்டு ஆகையாலே, இனி, [3] கிரமப்பிராப்தி பற்றுமையால் உள்ளதே அன்றே இப்போது

---

1. பிராட்டி செய்தது சிஷ்டாசாரமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கர்மத்தினாலே' என்று தொடங்கி.

"கர்மணைவ ஹி சம்சித்திம் ஆஸ்திதா ஜனகாதயஃ
லோகசங்க்ரஹமேவாபி சம்பஶ்யந் கர்தும் அர்ஹஸி"

என்பது, கீதை 3: 20.

2. மேலே எடுத்துக் காட்டிய ஸ்ரீ ராமாயண சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மநஸ்விநீ' என்று தொடங்கி. நிண்ணகம் - வெள்ளப்பெருக்கு. குமிழி - அப்பெருக்கு உண்டாகுமிடம்.

3. தன் பேற்றுக்குக் காரணமாக அஞ்சலிசெய்தல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கிரமப்பிராப்தி' என்று தொடங்கி.

படுகிறது. தாம் உளராக எங்களுடைய ரக்ஷணம் தப்பாதே அன்றே; ஆனபின்பு, தம்முடைய உண்மையை ஆசாசிக்கையன்றே இனி எங்களுக்கு உள்ளது, ஆகையாலே, அங்குத்தைக்கு ஒரு குறையும் இல்லையே என்று கேட்டேன் என்று சொல்லு. சிரசா அபிவாதய ச-நாட்டார் அளவு அன்றிக்கே, தாம் விசேடித்து என்னைக் கைப் பிடிக்கையால் உண்டான வாசியை யான் பெறுத பின்பு, நாட்டாரைப்போலவாகிலும் பெறக் குறை இல்லை அன்றே. இனி, நாட்டார் பெறுவது பெறப் பார்த்தால், அவர்கள் தம்பக்கல் செய்யுமத்தையும் செய்யவேணுமே அன்றே; ஆனபின்பு, நான் என் தலையாலே தம் திருவடிகளிலே வணங்கினேன் என்று நீ எனக்காக அவர் திருவடிகளிலே விழு என்றும் அருளிச்செய்தாள்."

[1]'இதுதான் ஊடுதலால் உண்டாகும் சீற்றம் தலை எடுத்துச் சொல்லுகிற வார்த்தையோ, அபேக்ஷை தோற்றச் சொல்லுகிற வார்த்தையோ' என்ன, 'மேலே, திருவடி வந்த போது பிரணய ரோஷத்தாலே வந்த சிவிட்குத் தோற்றச் சொன்ன வார்த்தைகள் அடைய மாறும்படி குளிர அவன் வார்த்தை சொல்ல, பின்பு திருவுள்ளத்திலே ஓர் ஆறுதல் பிறந்து, பெருமாளைச் சேராமையால் உண்டான குறைபாடும் கிடக்க அருளிச்செய்கிற பாசுரம்' என்று அருளிச்செய்தார். (7)

## 472.

பேய்முலை உண்டு சகடம் பாய்ந்து மருதிடை
போய்முதல் சாய்த்துப் புள்வாய் பிளந்து களிறட்ட
தூமுறு வல்தொண்டை வாய்ப்பி ரானெனத் நாள்கொலோ?
[2]நாமுறு கின்றது தோழீ! அன்னையர் நாணவே.

**பொ - ரை:**—பேயின் முலையை உண்டு சகடத்தின் மேலே பாய்ந்து மருதமரங்களின் அடியே சென்று அவற்றை வேரோடு கீழே

---

கிரமப் பிராப்தி - கிரமத்திலே அடைதல். ஆசாசிக்கை - மங்களாசாசனம் செய்தல்.

1. இதனால், மனைவிக்குரிய பிரணய ரோஷத்தால் அன்றிக்கே, "அஹம் சிஷ்யாச தாஸீச" என்கிறபடியே, சேஷத்வத்துக்குத் தகுதியாகச் சொன்னாள் என்றபடி.

2. "யாழுறுகின்றது" என்பது, இப்பொழுது உள்ள பாடம். "நாழுறு கின்றது" என்ற பாடமே வியாக்கியானத்திற்கும், மோனைக்கும் பொருந்துவதாம்.

தள்ளிப் புள்ளின் வாயைப் பிளக்து யானையைக் கொன்ற, தூய்மை பொருந்திய புன்சிரிப்பையும் கோவைக்கனிபோன்ற திருவாயினையு முடையபிரானே, தோழீ! தாய்மார்கள் நாணுறும்படியாகச் சேர்வது எப்பொழுதோ? என்கிறாள்.

வி - கு:—பேய் - பூதனை. சகடம் - சகடாசுரன். புள் - பகாசுரன். களிறு - குவலயாபீடம். அட்டபிரானே அன்னையர் நாண உறுகின்றது எங்ஙள் கொலோ? என்க. தாய்மார், ஐவாதலின் அன்னையர் என்கிறாள். "ஐவர் கலன் ஓம்ப" என்றார் திருத்தக்கதேவரும். தூ - பரிசுத்தம்.

ஈடு:—எட்டாம்பாட்டு. [1]மஹோபகாரகனே 'குணம் இல்லாதவன்' என்று சொல்லுகிற தாய்மார் 'இவனை யாகாதே நாம் குணம் இல்லாதவன் என்றது' என்று நாணம் உறும்படி அவனைக் காண்பது என்றோ! என்கிறாள். அவன், தன் சத்தையை உண்டாக்கி, நம் சத்தையைத் தந்தான்; நாம் அவன் சத்தையால் உண்டான பலத்தைப் பெறுவது என்றோ என்கிறாள்.

பேய் முலை உண்டு - பூதனையால் வந்த ஆபத்தைத் தப்பி, சகடம் பாய்ந்து - [2]உணர்ந்து நோக்க ஒண்ணாதபடி காவலாக வைத்த சக்கரம் அசுர ஆவேசத்தாலே ஊர்ந்து வர அதனை வருத்தம் இன்றியே முறித்து, மருதிடைபோய் முதல் சாய்த்து - தவழ்ந்து போகாகிற்க, இடைவெளி இல்லாமல் வழியிலே நின்ற மருத மரங்களின் நடுவே போய்த் தான் அவற்றைத் தப்பிப்போன அளவே அன்றிக்கே, அவை தம்மை வேரோடு பறித்து விழவிட்டு, அன்றிக்கே, முதல் சாய்த்து - குருந்தத்தைப் பறித்துப் போகட்டு என்னுதல். புள்வாய் பிளந்து - பகாசுரனை வாயைக் கிழித்து, களிறு அட்ட - குவலயாபீடத்தைக் கொன்ற, தூ முறுவல் தொண்டை வாய்ப் பிராட்டை - தடையாக வந்தவைதாம் பிரபலமாயிருக்கச் செய்தேயும், தன் வீரத்துக்கு அவை [3]பாத்தம் போராமையாலே புன்முறுவல்

---

1. "பேய்முலை உண்டு" என்பது போன்றவைகளைக் கடாவித்து 'மஹோபகாரகன்' என்கிறார். மேலே கூறிய வாக்கியத்தை விவரிக்கிறார் 'அவன், தன் சத்தையை' என்று தொடங்கி.

2. 'உணர்ந்து நோக்க ஒண்ணாதபடி' என்றது, காவலாக வைத்தது தானேயாலே உணர்ந்து நோக்கப் போகாது என்றபடி.

3. பாத்தம் - பாத்திரம்; விஷயம் என்றபடி.

செய்து நின்றபடி. என்றது, [1] வெண்முறுவலையும் சிவந்த அதரத்தையுமுடைய உபகாரகனே என்றபடி. அன்றிக்கே, தூய்தான பற்களின் வரிசைகளையும், தொண்டைக் கனி போன்ற அதரத்தையுமுடையவனே என்னுதல். இப்போது அவனை அழிக்க நினைத்து மடல் எடுக்கிறாளாகில், அவன் உபகாரத்தைச் சொல்லுவான் என்? என்னில், இதுவே யன்றே இவள்தான் அவனை அழிக்க நினைத்தபடி. என்றது, அச்சம் உறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளப் பார்க்கிற இத்தனை போக்கி அவனை அழிக்க உத்தேசியமாகச் செய்கிறாள் அல்லள் என்றபடி. அவ் வுபகாரங்கள் எல்லாம் [2] தனக்காகச் செய்தது என்று இருக்கிறாள் ஆதலின் **'பிரான்'** என்கிறாள்.

[3] பூத்தரு புனர்ச்சி, புனல்தரு புனர்ச்சி, களிறுதரு புனர்ச்சி என்பன சில சங்கேதங்கள் உண்டு தமிழர்க்கு; பூத்தரு புனர்ச்சியாவது, இவள் 'உத்தியான வனத்திலே பூக்கொய்ய' என்று புறப்பட்டுப் பூக்கொய்யாநிற்க, அருங் கொம்பிலே எட்டாதே நின்ற பூவை இவள் ஆசைப்பட்டால், ஒருவன் தன்னைப் பேணாதே மரத்தின்மீது ஏறி அம்மலரைப் பறித்துக்கொடுக்க, 'இவன் தன்னைப் பேணாதே தன் நினைவைத் தலைக்கட்டினான்' என்று அதற்காகத் தன்னைக் கொடுத்தல். புனல்தரு புனர்ச்சியாவது, புதுப்புனல் ஆடப் போய் நீரிலே இழிந்து விளையாடாநிற்க, ஒரு சுழி வந்து இவளைக் கொடுபோக, அதில் நின்றும் எடுத்து ஏறவிட்டதற்காகத் தன்னைக் கொடுத்தல். களிறுதரு புனர்ச்சியாவது, வீதியிலே நின்று விளையாடாநிற்க, யானையின் கையிலே அகப்படப் புக, அதன் கையில் நின்றும் தன்னை மீட்டமைக்குத் தன்னைக் கொடுத்தல் என்று ஒரு மரியாதை கட்டினார்கள்; [4] இவளை நோக்கினதற்காக, இவள், தன்னை அவனுக்கு ஆக்குதல் என்

---

1. "முறுவல்" என்பதற்கு, இருபொருள்: முதலது, புன்முறுவல்; இரண்டாவது, பற்கள்.

2. 'தனக்காகச் செய்தது' என்றது, எனக்குத் தன்னிடத்திலே பிராவண்யம் மிகுவதற்காகச் செய்தது என்றபடி.

3. எம்பெருமான், தன்னைக் காப்பாற்றிக் கொண்டதனையே, இவள், தனக்கு உபகாரமாகச் சொல்லுகையாலே வேறுபாடு காட்டுகிறார் 'பூத்தரு புனர்ச்சி' என்று தொடங்கி.

4. 'இவளை' என்றது, தலைவியை. நோக்குதல் - காப்பாற்றுதல். அவனுக்கு - தலைவனுக்கு.

யதே அன்றே இங்கே சொல்லப்பட்டது; அவ்வளவு அன்றிக்கே, [1] இவள் தலைமை இருந்தபடி; அவன், தன்னைத் தப்புவித்த உபகாரத்துக்கு அநந்யார்ஹமாக இவள் தன்னை அவனுக்கு எழுதிக் கொடுக்கிறாள். [2] அங்கு ஒவ்வொரு உபகாரத்துக்கே அன்றே அப்பெண்கள் தங்களை அவ்வவர்க்கு உரிமையாக்குவது, இங்கு எல்லா உபகாரங்களையும் செய்தால் அவனுக்கு ஆக்காது ஒழிய ஒண்ணாதே அன்றே.

தோழீ நாம் உறுகின்றது எந்நாள் கொல்லோ - தோழீ! அவன், தன்னை உளைக்கி வைத்தான், இனி நாம் அவனைக் கிட்டுவது என்றே? [3] "ஸ்ரீ ராமபிரான் இந்தத் துக்கத்தினுடைய கரையை எப்பொழுது அடையப் போகிறார்?" என்றாற் போலே காணும் தோழிதான் இருப்பது; ஆதலின், 'நாம் உறுகின்றது' என்கிறாள். [4] இப்போது அவனை அடைந்து, நம் பிரயோஜனம் பெற ஆசைப்படுகிறோம் அல்லோம்; பின்னை எற்றிற்கு? என்னின், அன்னையர் நாணவே - 'பிரிந்த பின்பு அவன்தானே வருமளவும் ஆறி இருந்திலள், அவன்தான் வரவு தாழ்த்தான்' என்று இருவர்க்கும் பழி சொல்லுகிற தாய்மார் முன்பே, 'நாம் இத்தலை மடல் எடுக்குமளவாம்படி பிற்பாடராஞ்ஞமே!' என்று, [5] "எனக்கு இது மிகவும் நாணத்தைத் தருகின்றது நீங்கள் என் அபராதத்தைப்

---

1. இவள் - ஆழ்வாராகிய நாயகி. அநந்யார்ஹமாக - எம்பெருமானுகிய தலைவனுக்கே உரிமைப் பட்டவளாக.

2. வேறொரு தன்மையாலும் வேறுபாட்டினைக் காட்டுகிறார் 'அங்கு' என்று தொடங்கி.

3. "நாம்" என்று தோழியையும் கூட்டிச் சொன்னதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'ஸ்ரீராமபிரான்' என்று தொடங்கி. இது, திருவடியைப் பார்த்துப் பிராட்டி கூறியது.

"சோகஸ்ய அஸ்ய கதா பாரம் ராகவஃ அதிகமிஷ்யதி
பிலவமானஃ பரிச்ராந்தஃ ஹதநௌஃ சாகரே யதா"

என்பது, ஸ்ரீராமா. சுந். 37: 5. இதனால், சமமான துக்கத்தையுடையவளாதலின் தோழியையும் கூட்டிச் சொல்லுகிறாள் என்றபடி. "நாம்" உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

4. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்போது' என்று தொடங்கி.

5. "பிரசீதந்து பவந்தோ மே ஹ்ரீஃ ஏஷா ஹி மம அதுலா"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 10: 9. தன்னை அடைந்த முனிவர்களைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

பொறுக்கவேண்டும்" என்கிறபடியே, அவன் நாணமுற்று வந்து நிற்கிறபடியைக் கண்டு, 'இவனையோ நாம் இவ்வார்த்தை சொன்னோம்' என்று தாய்மார்கள் நாணமுற்றுக் கவிழ்ந்தலை இடும்படியாக. (8)

## 473.

நாணும் நிறையும் கவர்ந்துஎன்னை நன்நெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர் வானத் திருக்கும் தேவ பிரான்தன்னை
ஆணை என் தோழீ! உலகு தோறு அலர் தூற்றி ஆம்
கோணைகள் செய்து குதிரி யாய்மடல் ஊர்துமே.

**பொ - ரை:**—என் தோழீ! ஆணை; என்னுடைய நாணத்தையும் நிறையையும் கவர்ந்து, நல்ல நெஞ்சினையும் அழைத்துக்கொண்டு மிக உயர்ந்திருக்கின்ற பரமபதத்திலே சென்று தங்கியிருக்கின்ற தேவபிரானை, உலகுகள்தோறும் அலரைத் தூற்றி என்னால் செய்யக்கூடிய மிறுக்குக்களைச்செய்து அடங்காதவளாய் மடல் ஊர்வேன் என்கிறாள்.

**வி - சு:**—அலர் - பிறர் கூறும் பழிமொழி. தூற்றுதல் - பலர் அறியச் செய்தல். குதிரி - தடையில்லாத பெண்; அடங்காதவள். ஊர்தும்: தனித்தன்மைப்பன்மை.

"மடல் ஊர்ந்தும்" என்றதனால், மடல் ஊராமை உணர்க.

**ஈடு:**—ஒன்பதாம்பாட்டு. [1] நெஞ்சு விம்மல் பொருமலாகா நிற்கவும், தன் பெண்தன்மையாலே இதற்கு முன்பு மறைத்துக்கொண்டு போந்தாள்; இனி, 'அவனை அழிக்கப் புகுகிற நாம், யார்க்கு மறைப்பது' என்று அது தன்னையே சொல்லுகிறாள்.

நாணும் நிறையும் கவர்ந்து-சத்தையோடு கூடிவருகின்ற நாணத்தையும் கொண்டான், [2] களவு கலந்தால் வருமதனையும்

---

1. மேல் திருப்பாசுரங்களில் எல்லாம் மறைத்துப் பேசினவள் இப்போது "மடல் ஊர்தும்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'நெஞ்சு' என்று தொடங்கி. 'விம்மல் பொருமல்' என்பன, ஆற்றுமையால் வந்த மனத்தின் விகாரங்கள். அது தன்னையே - மடல் தன்னையே.

2. களவாகிறது, அகவாயில் ஒடுகிறதனை மறைத்தலாய், அது உள்ளது யௌவனத்திலேயாகையாலே, களவு என்பதனால் யௌவனத்தைச் சொல்லி, 'களவு கலந்தால்' என்றதனால், யௌவனம் குடிபுகுந்தால் என்பதனைத் தெரிவித்தபடி. சத்தை - ஆத்மா; அல்லது, சொரூபம்.

கொண்டான். என்றது, [1] வாசல்விட்டுப் புறப்படச் செய்யக் கூடியதல்லாத நாணத்தையும் கைக்கொண்டு, அகவாயில் ஓட்டம் தாய்மார்க்கும் சொல்லக்கூடியதன்றிக்கே இருக்கும் அடக்கத்தையும் கைக்கொண்டான் என்றபடி. என்னை - அவ்விரண்டினையுமே நிரூபகமாகவுடைய என்னை. நல் நெஞ்சம் கூவிக்கொண்டு - பறித்துக்கொண்ட நாணையும் நிறையையும் தந்தாலும் இட்டு வைப்பதற்குக் கலம் இல்லாதபடி, அவற்றுக்குப் பற்றுக்கோடான, என்னிற் காட்டிலும் தன்பக்கல் அன்பிலே ஊற்றமுடைய மனத்தைத் தன்பக்கலிலே நொடித்துக்கொண்டு. [2] 'இவற்றைக் கொண்டு இன்னம் கடலிலே கிடக்கில், இவள் மனோவேகம் இருந்தபடியால் திரைமேலே நடந்து வந்து கையும் மடலுமாக நிற்கவும் கூடும்' என்று பார்த்து எட்டா நிலத்திலே சென்று இருந்தானுயிற்று என் கிறாள் மேல்: சேண் உயர் வானத்து இருக்கும் - மிக்க ஒக்கத்தையுடைத்தான வானத்திலே இருக்கும். என்றது, [3] அந்தர ஜாதிகளான இந்திரன் முதலாயினோர்கள் குடி இருப்பில் அன்றிக்கே பரமபதத்தில் இருப்பதனைக் குறித்தபடி. சேண் என்றாலும் உயர்வு, உயர் என்றாலும் உயர்வு; ஆக, இரண்டாலும் மிக்க உயர்வினைக் குறித்தபடி. தேவபிரான் தன்னை - [4] இங்கே வந்து கொண்டுபோன நாணும் நிறையுமான ஒடுக்குமாட்டைப் பாரித்துக்கொண்டு, தன் வெற்றியைக் காட்டிக்கொண்டிருக்கிறபடி. [5] அன்றிக்கே, பிரமன் முதலானோர் ஒலக்கம் போல் பேறு இழவு முதலியவைகளில் வருகின்ற துடிப்பு

---

1. மேலே கூறிய இரண்டினையும் முறையே விவரிக்கிறார் 'வாசல் விட்டு' என்று தொடங்கி.

2. மேற்பாசுரத்தில் "அலைகடற்பள்ளி அம்மான்" என்றவள், இப் பாசுரத்தில் "சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்" என்று கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவற்றைக்கொண்டு' என்று தொடங்கி.

3. 'அந்தரஜாதி' என்றது, சிலேடை: ஆகாசத்திலே சஞ்சரிக்கின்ற சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும் பொருள்.

4. "தேவபிரான்" என்பதற்கு, நித்தியசூரிகள் பக்கலிலே வெறுப்புத் தோன்ற பாவம் அருளிச்செய்கிறார் 'இங்கே வந்து' என்று தொடங்கி. ஒடுக்கு மாட்டை - முட்டுக்கோல் கொண்டு அபகரித்த செல்வத்தை. "தன்னை" என்பதற்கு, பாவம் 'தன் வெற்றியை' என்று தொடங்கும் வாக்கியம்.

5. "தேவபிரான்" என்பதற்கு, நித்தியசூரிகள் பக்கல் ஆதரம் தோற்ற, பாவம் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. பேற்றினால் வரும் துடிப்பாவது, ஈடுபாடு. துடிப்பு - ஈடுபாடும், கிலேசமும்.

அறியாத ஓலக்கம் அன்றிக்கே, 'சம்சார மண்டலத்திற் போய் நான் பெற்றுக்கொண்டு வந்தவை இவை' என்று தன்வெற்றியைக் காட்டிக்கொண்டிருக்கிற ஓலக்கம் முதன் முன்னம் [1]அதுவாகப் பெற்றேமே என்பாள் **'தேவபிரானை'** என்கிறாள் என்னலுமாம். [2]பிரிவினால் வரும் வியசனம் அறியார்களேயாகிலும் சேர்க்கையால் வரும் ரசம் அறிவார்களே அன்றே முன்னம்.

சேண் உயர் வானத்து இருக்கும் தேவபிரான் தன்னை – [3]அவன் தானும் **'பிரளயத்துக்கு அழியாத நிலம்'** என்னுமித்தனையாயிற்று அவ்விடத்துக்கு ஏற்றமாக நினைத்திருப்பது; **'விரஜைப் பிரளயம் ஏறிப் பாயாத இடம் இல்லை'** என்று அறிய மாட்டுகின்றிலன்; அறிந்தானாகில் கிடந்த இடத்தே கிடக்குமே! [4]அன்றிக்கே, நீயே பார்ப்பாயாக அவ்வோலக்கமும் அவனும் அவ்விருப்பும் என்கையிலே படப் புகுகிற பாடு; இருந்த இடத்தே இருக்க ஒட்டுவேன் என்று இருக்கிறாயோ? என்பாள் **'தேவபிரான் தன்னை'** என்கிறாள் என்னலுமாம். இப்போது இங்ஙனே ஒருவாய்ப்பகட்டுச் சொல்லுகிறாய், அது செய்து தலைக்கட்டவல்லையாகப் புகுகிறாயோ? என்ன, ஆணை என்கிறாள். இவள் இப்போது அவன்மேல் ஆணை இடுகிறாளோ, தோழிமேல் ஆணை இடுகிறாளோ? என்னில், அழிக்க நினைக்கப்பட்டவன்மேல் ஆணை இடாளே, ஆதலால், தோழிமேல் ஆணையாமத்தனை. [5]இதற்கு உடன்பட்ட தோழியை ஒழிய, 'வேறு ஒரு பரதேவதை உண்டு' என்று இராளே

1. அதுவாக - அந்த நித்தியசூரிகள் ஓலக்கமாக.

2. பேற்றினால் வரும் துடிப்பு ஒழிய, இழவினால் வரும் துடிப்பு அறிவார்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிவினால்' என்று தொடங்கி. என்றது, சேர்க்கையால் வரும் ரசம் அறிந்தபோதே "இம்மகளைப் பெற்ற தாயர்" என்ற பாசுரத்திற் கூறியவாறே பிரிவால் வரும் துக்கமும் பொறுக்கமாட்டார்கள் என்றபடி.

3. "சேணுயர் வானத்திருக்கும்" என்பதற்கு, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அவன் தானும்' என்று தொடங்கி. அவன் அறியான் என்பதனை நீ எப்படி அறிந்தாய்? என்ன, 'அறிந்தானாகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "தேவபிரான் தன்னை" என்பதற்கு, நித்தியசூரிகள் பக்கலில் வெறுப்புத் தோன்ற வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

5. ஆணை இடும்போது ஒரு தெய்வத்தின்மேல் ஆணை இட வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இதற்கு உடன்பட்ட' என்று தொடங்கி.

இவள்தான். 'இது வார்த்தையளவேயாய்ப் போகாமல், இவள் இத்தனையும் செய்து தலைக்கட்டப்பெறுவது காண்' என்னும் தன் நினைவு தோன்ற இருந்தாள் தோழி; அவளைப் பார்த்து 'என் தோழி' என்று அணைத்துக் கொள்ளுகிறாள். அன்றிக்கே, இவள் எண்ணம் கூடப் புகாநின்றதோ என்று இருந்தாள் தோழி; அவளைப் பார்த்து [1] ஆணை என்? என்கிறாள் என்னுதல்; ஆணை என் - தடை என்? ஆணை - தடை. என்றது, அவன் என் சொல் வழியே வருமாகில், நீ என் கருத்திலே ஒழுகுவதியாகில், தாய்மார் தொடக்கமானார் வார்த்தை கொண்டு காரியம் இல்லையாயிற்ற பின்பு, இனித் தடை என்? என்றபடி. [2] அவன் இவள் வழியே வருகையாவது என்? என்னில், சர்வாதிகன் ஆகையாலே அழிய விடானே, இத் தோழிதானும் இவள் கருத்திலே நடப்பாள் ஒருத்தியே. உலகு தோறு அலர் தூற்றி - உலகங்கள் எங்கும் புக்கு [3] அழிக்கக் கடவேன். என்னை ஊரார் பழிசொல்லும்படி செய்தானாகில், தன்னை உலகம் எல்லாம் பழிசொல்லும்படி செய்கிறேன். [4] 'அசாதாரண விபூதியிலுள்ளார் தாம் பிறர் அறியும்படி இராக்களே அன்றே' என்றிருக்கைக்கு, அவ்வோலக்கத்திலே வந்தாலோ நான் சொல்லுவது; என்கையிலே வழியடையப் படப்புகுகிறபாடு பார்ப்பாயாக.

ஆம் கோணைகள் செய்து - என்னாலான மிறுக்குக்களை எல்லாம் செய்யக்கடவேன். கோணைகள் - மிறுக்குக்கள்.

---

1. "என்" என்ற சொல்லை, இடைநிலைத்தீவகமாக "ஆணை" என்ற சொல்லோடும் "தோழி" என்ற சொல்லோடும் கூட்டுக. "ஆணை" என்பதற்கு, இருபொருள்: ஆணை என்றும், தடை என்றும்.

2. மேல் வாக்கிய விவரணம், 'அவன் இவள்' என்று தொடங்கும் வாக்கியம். 'சர்வாதிகன்' என்றது, "தேவபிரான்" என்றதனை நோக்கி.

3. 'அழிக்கக் கடவேன்' என்றது, குணாதிகன் என்ற பெருமையை அழிப்பேன் என்றபடி.

4. தேவபிரானைப் பழி சொல்லுகிறாளாகில், உலகுதோறு அலர் தூற்றுவது எற்றிற்கு? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அசாதாரண' என்று தொடங்கி. என்றது, குணத்தைப் போலவே தோஷத்தையும் எண்ணுகிற அவ்விபூதியிலன்றிக்கே, குணத்தையும் தோஷமாகக் கொள்ளுகிற இவ்வுலகத்திலே என்றபடி. அசாதாரண விபூதி - பரமபதம். 'தாம் பிறர் அறியும்படி இராக்களே அன்றே' என்றது, இவள் செய்கிற செயல் தங்களுக்கு விருப்பமில்லாததாகிலும் பிறர் அறியாதபடி அடக்கிக் கொண்டிருப்பார்களே அன்றே என்றபடி.

[1] என்றது, என் சொல்லியவாறே? எனின், நான் கையும் மடலுமாகப் புறப்பட்டவாறே, 'நம் குணநிஷ்டர்படி இது அன்றே' என்று குணங்கொண்டாடி அதிலே செலவு எழுதக் கடவன்; 'அன்று, நான் உன்னைப் பெறுகைக்குச் சாதந அநுஷ்டானம் பண்ணுகிறேன்' என்னக்கடவேன். அன்றிக்கே, நான் கையும் மடலுமாகச் சென்றவாறே அஞ்சி எதிரே புறப்பட்டு நிற்கக்கடவன், அப்போதாக அவன் காலிலே குனியக்கடவேன். [2] "வட்டிக்குமேல் வட்டி ஏறின கடன்போலே" என்னும்படி தொட்டுவிடக்கடவேன். [3] "தலையாலே வணங்கின அந்தப் பரதாழ்வானுடைய வார்த்தை என்னால் செய்யப்படவில்லை" என்று புண்படும்படி செய்யக்கடவேன். என்றது, பிள்ளை தலையாலே இரந்த காரியத்தை மறுத்துப்போந்தோம் என்னும்படி செய்யக்கடவேன் என்றபடி. [4] நான் இதனைச் செய்தால், அவர் தம் மனிச்சு அழியாமைக்காக, 'தம்மோடு

---

1. "கோணைகள்" என்ற பன்மையின் பொருளினை விவரிக்கிறார் 'என்றது, என் சொல்லியவாறே? எனின்,' என்று தொடங்கி. 'நம் குணநிஷ்டர்படி இது அன்றே' என்றது, அழகு முதலிய குணங்களிலே ஈடுபட்ட நிஷ்டர்கள் கணநேரமும் பிரிவு பொறுக்க மாட்டாதபடி இது அன்றே? என்றபடி.

2. காலிலே குனிந்தால் அது அவனுக்கு மிறுக்காக இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வட்டிக்கு' என்று தொடங்கி.

"கோவிந்தேதி யதாஅக்ரந்தத் கிருஷ்ணோ மாம் தூரவாசிநம்
ருணம் பிரவிருத்தம் இவ மே ஹ்ருதயாத் ந அபசர்பதி"

என்பது, பாரதம்உத்யோகபர். 58: 22. இது, கிருஷ்ணன் கூறியது. தொட்டுவிடுதல் - ஈடுபடுத்துதல்.

3. மேலதற்கே வேறும் ஒரு பிரமாணம் காட்டுகிறார் 'தலையாலே' என்று தொடங்கி.

"மாம் நிவர்த்தயிதும் யஃ அஸௌ சித்ரகூடம் உபாகதஃ
சிரசா யாசதஃ தஸ்ய வசனம் ந க்ருதம் மயா"

என்பது, ஸ்ரீராமா. யுத். 24: 19. ஸ்ரீராமபிரான் திருவார்த்தை.

4. காலிலே குனிந்ததுக்கும் ஈசுவரன் செலவு எழுதினபடியை இரண்டு விதமாகக் காட்டுகிறார் 'நான் இதனைச் செய்தால்' என்றது முதல், 'உடம்பு பெறுகைக்காகச் செய்கிறேன் என்னக்கடவேன்' என்பது முடிய. 'நான் இதனைச் செய்தால்' என்றது, நான் காலிலே குனிந்தால் என்றபடி. மனிச்சு - ஆண் தன்மை, பௌருஷம். அசாதாரண பந்தமுடையார் - சொரூப ஞானமுடையவர்கள். அசாதாரணம் - பொது அல்லாதது. தங்கள் ஆதரத்தாலே - சொரூபத்திற்குத் தக்கது என்னும் ஆசையால்.

அசாதாரண பந்தமுடையார் தங்கள் ஆதரத்தாலே செய்யக் கடவது ஒன்று அன்றே இது' என்னக் கடவன், 'அது அன்று இது, நான் சாதந அநுஷ்டானம் செய்கிறேன்' என்னக் கடவேன். [1] "எக்காலத்திலும் கைகூப்பிக் கொண்டு நிற்பார்கள், அதுவே மிகவும் விருப்பம் என்பது தோன்றும்படியாகச் சந்தோஷத்துடன் இருப்பார்கள்" என்கிற இதிலே செலவு எழுதப் பார்ப்பர் அவர்; 'அங்ஙனம் அன்று, உன் உடம்பு பெறுகைக்காகச் செய்கிறேன்' என்னக்கடவேன்.

[2]குதிரியாய்-குத்ஸிதா ஸ்த்ரீ: குஸ்திரீ. குஸ்திரீ என்கிற பதத்தைக் குதிரி என்கிறதாய், அதாகிறது, அடங்காத பெண்ணுய், தடை இல்லாத பெண் என்றபடியாய், தடையுடையேன் அன்றிக்கே என்னுதல்; அன்றிக்கே, குதிரி என்பது, செப்பு என்ற பொருளதாய், பெண்களுக்குச் செல்வமாவன: நாணும் நிறையுமே யன்றே, அவற்றை இட்டு வைக்கும் கலமே அன்றே சரீரம், அவை போகையாலே வெறும் சரீரமாத்திரமேயாய் என்னுதல்; அன்றிக்கே, பின மடலைக் குதிரையாகச் செய்து கையிலே கொள்ளக்கடவர்கள் மடலூருகின்றவர்கள், அதனை யுடையேனுய் என்னுதல். மடல் ஊர்துமே-[3] 'செய்யக்கடவதாயிற்றபின்பு, இனி, ஒன்றை நினைத்து ஒன்றைச் சொல்லுகிறது என்?' என்று பார்த்து அது தன்னையே சொல்லுகிறாள். (9)

---

1. இரண்டாவது வகையை அருளிச்செய்கிறார் 'எக்காலத்திலும்' என்று தொடங்கி.

"முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ச்வேத்வீப நிவாஸிநாம்
நித்யாஞ்சலிபுடா ஹ்யுஷ்டா நம இத்யேவ வாதிந:"

என்பது, பாரதம் மோக்ஷதர்மம். 'என்கிற இதிலே' என்றது, பேற்றின் தன்மையிலே என்றபடி.

2. "குதிரி" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். அடங்காத பெண் என்பது முதற்பொருள். இப்பொருளுக்கு, குத்ஸித ஸ்திரீ என்பது, "குதிரி" என வந்தாகக் கோடல் வேண்டும். இரண்டாவது பொருள், ஆபரணம் இட்டு வைக்கும் செப்பு என்பது. குதிரையையுடையவள் என்பது, மூன்றாவது பொருள்.

3. "ஊர்துமே" என்ற எகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'செய்யக்கடவதாயிற்ற பின்பு' என்று தொடங்கி. ஒன்றை நினைத்து—மடலை நினைத்து. 'ஒன்றைச் சொல்லுகிறது' என்றது, "உலகு தோறு அலர் தூற்றி" என்று சொல்லுகிறது என்றபடி.

## 474.

**யாமடல் ஊர்ந்தும்எம் ஆழி அங்கைப் பிரானுடைத்**
**தூமடல் தண்ணந் துழாய்மலர் கொண்டு சூடுவோம்**
**யாமடம் இன்றித் தெருவு தோறு அயல் தையலார்**
**நாமடங் காப் பழி தூற்றி நாடும் இரைக்கவே.**

**பொ - ரை :**—மடம் முதலான குணங்கள் ஒரு சிறிதும் இன்றித் தெருக்கள்தோறும் அயல்பெண்கள் நாக்கும் மடங்காமலே பழிகளைத் தூற்ற நாடும் கூப்பிடும்படியாக, யாம் மடலை ஊர்ந்தாயினும் எம்முடைய, சக்கரத்தைத் தரித்த அழகிய கையையுடைய எம்பெருமானுடைய பரிசுத்தமான இதழையுடைய குளிர்ந்த அழகிய திருத்துழாய் மலரைச் சூடக்கடவோம் என்கிறாள்.

**வி - கு :**—எம் ஆழி அங்கைப் பிரானுடைத் தூமடல் தண்ணம் துழாய் மலரை, தையலார் பழிதூற்ற நாடும் இரைக்க மடம் யா இன்றித் தெருவுதோறும் யாம் மடல் ஊர்ந்தும் சூடுவோம் என்க. இனி, தெருவுதோறு தையலார் தூற்ற எனக் கூட்டலுமாம். யா என்பது, அஃறிணைப் பன்மை விளிப்பெயர். யாவை அல்லது, எவை என்பது பொருள்.

"மடல் ஊர்ந்தும்" என்றதனானே, ஊராமை உணர்தல் தகும்.

**ஈடு :**—பத்தாம்பாட்டு. [1] உலகம் எல்லாம் கலக்கம் உறும்படி மடல் ஊர்ந்தாகிலும், தனக்குமேல் ஒன்று இல்லாததான இனிமையையுடையவனைக் காணக்கடவேன் என்கிறாள்.

யாம் மடல் ஊர்ந்தும் - [2] செய்யக்கடவது அல்லாததனைச் செய்தேயாகிலும். என்றது, "என்னை அழைத்துக் கொண்டு போவாராயின் அச்செயல் அவருக்குத் தக்கதாகும்" என்று இருக்கக்கூடிய நாம், மடல் ஊர்ந்தேயாகிலும் என்றபடி.

---

1. "நாடும் இரைக்க, யாம் மடல் ஊர்ந்தும், எம் ஆழி அங்கைப்பிரான்" என்பன போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஊர்ந்தும்" என்ற உம்மையின் பொருளை அருளிச்செய்கிறார் 'செய்யக்கடவது அல்லாததனை' என்று தொடங்கி. "யாம்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னை அழைத்துக் கொண்டு' என்று தொடங்கி.

"சரைஸ்து சங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தஹ:
மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய சத்ருசம் பவேத்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 39: 30.

[1] பெற்று அன்றித் தரியாத உபேயவைலக்ஷண்யம், அதற்கு அடியான உபாய வைலக்ஷண்ய அநுசந்தானம், 'அவ்வுபாயந் தன்னுலே பேறு' என்கிற துணிவு, வேறு ஒன்றினை உபாயமாக நினையாமை, முறையிலே பெறுகிறோம் என்று நினையாமை ஆகிய இவைகளே, இங்கு 'மடல்' என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்றன. [2]"மடல் ஊர்தும்" என்றருள் மேல்; 'இது உனக்கு வார்த்தை அன்று, [3] முதல் தன்னிலே பெண்கள் மடல் ஊர்தல் ஆகாது என்று விலக்கியுள்ளார்கள், அதற்கு மேல், நீயோ எனின், [4]"எப்பொழுதும் உயிரை ஒத்த நாயகன் நன்மையிலேயே நோக்கங்கொண்டவள்" என்கிறபடியே, உன்னை அழிய மாறியும் அவனுக்கு நன்மையையே விரும்புகின்றவளாய் இருப்பவள் ஒருத்தி, அவளே எனின், உன் பக்கல் வருகைக்கு உன்னைக்காட்டிலும் விரைகின்றவனுவான் ஒருவன், முறையிலே பெறுகிறோம் என்று நினையாமையால்

---

1. ஈண்டு 'மடல்' என்றது, முறையிலே பெறுகிறோம் என்று நினையாமையாகிற விரைவினை. ஆகிலும், அதற்குக் காரணங்கள் ஆகையாலே, உபேய வைலக்ஷண்யம் முதலான மற்றை நான்கினையும் சேர்த்து அருளிச்செய்கிறார் 'பெற்று அன்றித் தரியாத' என்று தொடங்கி. உபேய வைலக்ஷண்யம் - சர்வேசுவரனுடைய அழகு முதலிய காரணங்களால் வருகின்ற வைலக்ஷண்யம். 'அதற்கு அடியான' என்றது, பெற்று அன்றித் தரியாமைக்கு அடியான என்றபடி. உபாய வைலக்ஷண்யம் - சர்வேசுவரனுடைய முற்றறிவுடைமை, வரம்பில் ஆற்றலுடைமை முதலியவைகள் காரணமாக வருகின்ற வைலக்ஷண்யம். துணிவு - வேறு ரக்ஷகர் இல்லாமையாலே 'ஈசுவரனுலே பேறு' என்கிற மன உறுதி. 'வேறு ஒன்றை' என்றது, சித்தோபாயத்திற்கு வேறுபட்டவையான இதர உபாயங்களை.

2. "மடல் ஊர்ந்தும்" என்கையாலே, மடல் ஊர்தல் தகாது என்று தோன்றுகையாலே, அங்ஙனம் தோன்றும் பொருளை விவரிக்கிறார் "'மடல் ஊர்தும்' என்றருள்" என்று தொடங்கி.

3. இங்கே,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையும்,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்"

என்ற திருக்குறளையும் நினைவு கூர்தல் தகும்.

4. "ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் பிராணஸமாஹிதா"
என்பது, சங்க்ஷேபராமாயணம் பாலகாண்டம்.

படுகிறபடியே, நீ சாகஸத்திலே ஒருப்படுகிற இது [1] உன் ஸ்வரூபத்தோடு சேராது' என்ன, அது பார்க்க ஒண்ணாதபடி காண் எனக்கு அவன்பக்கல் உண்டான அன்பின் மிகுதி என்கிறாள். யாம் மடல் ஊர்ந்தும் - [2] இப்படி இருக்கிற என் ஸ்வரூபத்தை அழிய மாறியாகிலும் பெறத் தவிரேன். [3] செய்யக்கடவது அல்லாததனைச் செய்தாகிலும் பெறக் கடவேன்- [4] ஆத்மாவோடு சேராத செயலைச்செய்தேயாகிலும் பெறக்கடவேன். [5] பிரணவத்தில் சொல்லப்பட்ட சேஷத்வத்திற்கு உரியதான ஆத்மாவுக்கு வாசகசப்தம் இருக்கிறபடியாயிற்று 'யாம்' என்பது. [6] அத்தலையைக்கொண்டே அன்றே இவனை நிரூபிப்பது.

எம் ஆழி அம் கைப் பிரானுடைத் தாமடல் தண் அம் துழாய் மலர்கொண்டு சூடுவோம் - 'எம் பிரான்' என்றதனால் நாராயண சப்தார்த்தம் சொல்லப்படுகிறது. [7] இவனைக்

---

1. 'உன் ஸ்வரூபத்தோடு சேராது' என்றது, அவனுக்கு அதிசயத்தையே விளைக்கவேண்டும்படியான உன் சொரூபத்தோடு சேராது என்றபடி.

2. "மலர்கொண்டு சூடுவோம்" என்றதனையும் கூட்டி, "நாம்" என்றதிலே கோக்கமாக, பாவம் அருளிச்செய்கிறார் 'இப்படி இருக்கிற' என்று தொடங்கி.

3. "மலர்கொண்டு சூடுவோம்" என்றதனையும் கூட்டி "மடல் ஊர்ந்தும்" என்றதிலே கோக்காகக் கருத்து அருளிச்செய்கிறார் 'செய்யக்கடவதல்லாததனை' என்று தொடங்கி.

4. "யாம் மடலூர்ந்தும்" என்றதற்குச் சுவாபதேசத்திலே கருத்து அருளிச்செய்கிறார் 'ஆத்மாவோடு' என்று தொடங்கி. என்றது, பிரணவத்திலே சொல்லப்பட்டதான சேஷத்வ ஸ்வரூபத்திற்குச் சேராததான தம் முயற்சியைச் செய்தேயாகிலும் என்றபடி.

5. பிரணவத்திற்போலே இங்கு ஆத்மாவைக் காட்டுகிற சொல் யாது? என்ன, 'பிரணவத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "ஓங்காரோ விஷ்ணு வாசகஃ" என்கிறபடியே, பிரணவம் சர்வேசுவரனைக் காட்டும் சொல்லன்றே? என்ன, 'அத்தலையை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, 'இராஜசேவகன்' என்கிற இடத்தில், அரசனைக் கொண்டு சேவகனை நிரூபித்தாற்போலே, ஈசுவரனை இட்டு இவனை நிரூபிக்கிறது ஆகையாலே, சப்தப் பிராதான்யத்தைக் கொண்டு ஆத்மாவைச் சொல்லுகிறது என்னலாம் என்றபடி.

7. "எம்-பிரான்" என்றதனால், நாராயண சப்தார்த்தம் சொல்லப்படுதல் யாங்ஙனம்? எனின், 'இவனைக்கொண்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, என் சொல்லியவாறே? எனின், நாரங்களுக்கு அயனம் என்று ஆத்மாவைக் கொண்டு சர்வேசுவரனை நிரூபித்தாற்போலே, இங்கும், "எம்" என்று இத்தலையைக் கொண்டு அவன் நிரூபிக்கப்படுகிறான் என்றபடி. "எம்" என்றது, "நார" சப்தார்த்தம்.

கொண்டு அன்றே அவனை நிரூபிப்பது.[1] அவன் கையும் திருவாழியுமாகப் புறப்பட்டாற்போலே அன்றே நான், கையும் மடலுமாகப் புறப்பட்டால் இருப்பது என்பாள் '**ஆழி அம் கைப் பிரான்**' என்கிறாள்.[2] நான் கையும் மடலுமாகப் புறப்பட்டால், அஞ்சி எதிரே வந்து தன்கையில் ஆபரணத்தை வாங்கி என்கையிலே இட்டு, தன்தோளில் மாலையை வாங்கி என்தோளிலே இட்டானகில் குடி இருக்கிறான்; இல்லையாகில் எல்லாங்கூட இல்லையாகின்றன. என் தோளில் மாலையைப் பாராய், நான் செவ்விமாலை சூடவேணுங்காண் என்பாள் '**பிரானுடைத் தூமடல்**' என்கிறாள்.[3] விரஹத்தாலே தன் மார்பின் மாலை சருகாய் அன்றே கிடக்கிறது, செவ்விமாலை உள்ளது அவன்பக்கலிலே அன்றே. நன்று; ஒன்றைச் சொல்லுகிறபோகில் செய்து தலைக்கட்டப்புகுகிறபோ, உன் பெண் தன்மை உன்னைக் காற்கட்டுங்காண் என்ன, யாமடம் இன்றி -[4] அதுவோ! பெண்தன்மை இல்லாதார் செய்யும தனை முதலிலே செய்யக்கடவோம். தெருவுதோறு - "உலகு தோறு அலர் தூற்றி" என்றாளே மேல்; அங்ஙனம் உலகமாகத் திரண்டிருக்க உலகத்திற்காக ஒருவார்த்தை சொல்லி விடவேணே, தெருவுகள் தோறும் புக்கு, அறியாதார் எல்லாரும் அறியும்படி அலர் தூற்றக் கடவேன். [5]'**கிருஹ அர்ச்சனைகள்**'.

---

1. "யாம் மடல் ஊர்ந்தும்" என்றதனையும் கடாக்ஷித்து, "ஆழியம் கைப்பிரான்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவன் கையும்' என்று தொடங்கி. என்றது, அவன் கையும் திருவாழியுமாகப் புறப்பட்டால் காரியம் அமோகமாமாறு போன்று, நான் கையும் மடலுமாகப் புறப்பட்டால் காரியம் அமோகமாம் என்றபடி.

2. "தூமடல் தண்ணம் துழாய் சூடுதும்" என்றதனைக் கடாக்ஷித்து, 'ஆழி அம் கை" என்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'நான் கையும் மடலுமாக' என்று தொடங்கி. என்றது, தனக்கு இடுவதற்காகத் திருவாழியைத் தரித்திருக்கிறான் என்று சொல்லுகிறாள் என்றபடி. எல்லாம் கூட - உபாய ஸ்வரூபமும்கூட.

3. தனக்குச் செவ்விமாலை இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விரஹத்தாலே' என்று தொடங்கி.

4. 'அதுவோ' என்றது, பெண்தன்மையோ காற்காட்டுவது என்றபடி. பெண்தன்மை இல்லாதார் - ஸ்வதந்திரராக இருப்பவர்.

5. "தெருவுதோறு அலர் தூற்றி" என்றதற்குச் சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார் 'கிருஹ அர்ச்சனைகள்' என்று தொடங்கி. என்றது, அர்ச்சாவதாரத்தில் ஈடுபாட்டினைப் போக்கி நாஸ்திகராம்படி செய்யக்கடவேன் என்றபடி.

**அர்ச்சகபராதீனம்**' என்று ஒரு மூலையிலே புக்கு இருக்க ஒட்டு வேனே. அயல் தையலார் நா மடங்காப் பழி தூற்றி - வேற்றுப் பெண்கள் [1]நாக்குப் புரளாதபடியான பழிகளை எல்லாம் சொல்ல. சிசுபாலன் முதலானுர் வாயில் கேளாதவற்றை எல்லாம் என்வாயிலே கேட்க அன்றே புகுகிறுன். அன்றிக்கே, அவர்கள் நா, மீளாமல் உருவப் பழி சொன்னபடியே இருக்கும்படியான பழிகளைத் தூற்ற என்றுமாம். அன்றிக்கே, நாம் [2]தங்களுக்கு அடங்காமல் மடல்கொண்டு புறப்பட்ட பழியைத் தூற்ற என்ன வுமாம்.

நாடும் இரைக்கவே-அவன் என்னுடைய ஊரவர் கவ்வை நீக்கிலனுகில், நான், [3]தன்னை நாடாக இரைக்கும்படி பண்ணுகிறேன். என்றது, உலகமெல்லாம் கலங்கும்படி செய்கிறேன். 'ஒருத்தி ஒருவனைப்படுத்திற்றே! ஒருவன் முகங்காட்டிற்றிலன்' என்னும்படி செய்கிறேன் என்றபடி. [4]அவனைப்பற்றி அறிவிக்கும் வாக்கியங்களும் அவனை அடையும் சாதனங்களைப் பற்றி அறிவிக்கும் வாக்கியங்களும் எல்லாம் அழிய அன்றே புகுகின்றன; [5]'ஒருவன் உளனுகில் ஆசைப்பட்டவள் இப்படிப்பட இருக்குமோ, ஆனபின்னர் நிரீச்வரங்காண்உலகம்' என்னும்படி செய்கிறேன். [6]அவனுடே கலந்த என் வார்த்தை ஒழிய, அடி இல்லாத வேதம் சொன்ன வார்த்தை

---

1. நாக்குப்புரளாதபடியான - சொல்லுதற்குக் கூசும்படியான. "அயல் தையலார்" என்றதற்குச் சுவாபதேசம், 'சிசுபாலன் முதலானுர்' என்று தொடங்கும் வாக்கியம்.

2. தங்களுக்கு - வேற்றுப் பெண்களான அவர்களுக்கு.

3. 'தன்னை நாடாக இரைக்கும்படி பண்ணுகிறேன்' என்றது, நானும் பழியைத் தூற்றி, நாடும் இரைக்கும்படி செய்கிறேன் என்றபடி.

4. "நாடும் இரைக்க" என்றதற்கு, சுவாபதேசம் அருளிச்செய்கிறார் 'அவனைப்பற்றி' என்று தொடங்கி. 'அவனைப்பற்றி அறிவிக்கும் வாக்கியங்கள்' என்றது, "நாராயண பரம்பிரஹ்ம" என்பதுபோன்ற வாக்கியங்களை. 'அவனை அடையும் சாதனங்களைப் பற்றி அறிவிக்கும் வாக்கியங்கள்' என்றது, "நிதித்யாவிதவ்ய:" என்பது போன்ற வாக்கியங்களை. வாச்யலுக உள்ள சர்வேசுவரன் இல்லாமையாலே அழிய அன்றே புகுகின்றன என்றபடி.

5. அழியும்படி எப்படி? என்ன, 'ஒருவன் உளனுகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. வேதம் சொல்லுவதை விட்டு, தம் வார்த்தையைப் பிரமாணமாகக் கொள்ளுவர்களோ உலகத்தார்? என்ன, 'அவனுடே கலந்த' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

கனைக் கேட்பர்களோ? [1] பிரமேய சிரேஷ்டமானதத்தை அழித்தேன், இனிப் பிரமாண சிரேஷ்டமானது தானே நில்லாதே அன்றே. [2] 'ஆசைப்பட்டார்க்குப் பலம் இதுவான பின்பு இனி உபாசனத்துக்குப் பலம் இல்லை' என்று கைவாங்கி நாஸ்திகராம்படி உலகினரனைவரையும் செய்கிறேன். நாடும் இரைக்க யாம் மடல் ஊர்ந்தும் - [3] நாட்டார் சொல்லும் பழி தானே தாரகமே அன்றே. "ஊரவர் கவ்வை எருவாக" என்றாளே, அதிலே அன்றே வேர் ஊன்றித் தரிப்பது. (10)

## 475.

**இரைக்குங் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான் தன்னை**
**விரைக்கொள் பொழில் குருகூர்ச் சடகோபன் சொன்ன**
**நிரைக்கொள் அந்தாதி ஓராயிரத்துள் இப்பத்தும்**
**உரைக்க வல்லார்க்கு வைகுந்த மாகுந்தம் மூரெல்லாம்.**

**பொ - ரை:**—ஒலிக்கின்ற கரிய கடல்போன்ற நிறத்தையுடைய வனை கண்ணபிரானை, வாசனை பொருந்திய சோலைகளாற் சூழப்பட்ட திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபர் அருளிச்செய்த நிரை நிரையாக அமைந்திருக்கின்ற அந்தாதியான ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் சொல்ல வல்லவர்களுக்குத்

---

1. வேதவாக்கியங்களை அழிக்கப்போமோ? என்ன, 'பிரமேய சிரேஷ்டம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். பிரமேயம் - பிரமாணங்களால் அறியப்படுகின்ற பொருள். பிரமேய சிரேஷ்டம் - சர்வேசுவரன். பிரமாண சிரேஷ்டம் - வேதம். என்றது, அந்தரங்கையான நான் இப்படிப் பிரமேய வஸ்துவை அழிக்கையாலே, அவனைப் பற்றிக் கூறுகின்ற பிரமாணங்களும் அப்பிரமாணங்களாகிவிடும் என்பது கருத்து.

2. உபாசனங்களைப் பற்றிக் கூறுகின்ற வாக்கியங்களை அழிக்கும்படி எப்படி? என்ன, 'ஆசைப்பட்டார்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "நாடும் இரைக்க" என்பதற்கு, ஈசுவர விஷயமாகப் பழிசொல்லுவர்கள் என்று, இதுகாறும் அருளிச்செய்து, இனி, நாயகி விஷயமாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'நாட்டார்' என்று தொடங்கி. இவ்வாக்யத்துக்கு, "அயல்தையலார் நா மடங்காப் பழி என்னைத் தூற்றவும், நாடும் என்னை இரைக்கவும், அதுவே தாரகமாக மடல் ஊர்தும் என்பது கருத்து. நாட்டார் பழி தாரகமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "ஊரவர் கவ்வை" என்று தொடங்கி. இது, இத்திருப்பதிகத்தில் நான்காவது திருப்பாசுரம்.

தாங்கள் தாங்கள் இருக்கின்ற ஊர்கள் எல்லாம் வைகுந்த மா நகரமே யாகும் என்றவாறு.

வி - கு:—இரைத்தல் - ஒலித்தல். விரை - வாசனை. நிரை - வரிசை. அந்தாதி - முதற் செய்யுளின் அந்தமானது, அடுத்த செய் யுளின் ஆதியில் அமையும்படி பாடுவது. அந்தம் - ஈறு. ஆதி-முதல். "அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி" என்பது, இலக்கணம். வைகுந்தம் - அழிவில்லாதது; பரமபதம்.

ஈடு:—முடிவில், [1] இந்தத் திருவாய்மொழி கற்கவல்லார் கள் இருந்த தேசத்தே அவ் வெம்பெருமான்தானே வந்து எப்பொழுதும் சேர்ந்திருப்பான் என்கிறார்.

இரைக்கும் கருங்கடல் வண்ணன் - [2] அனந்தாழ்வான் பணித்தாராக நஞ்சீயர் வந்து பட்டரிடத்தில் [3] "'வில்லைக் கொண்டு வா, ஆசீவிஷத்திற்கு ஒத்த பாணங்களையும் கொண்டு வா' என்றபோது கடல் கீழ்மண்கொண்டு மேல்மண் எறிந்தாற் போலேயாயிற்று, இவள் 'மடல் ஊர்வன்' என்ற துணிவைக் கேட்டு அவன்தன் சர்வாதிகத்வம் கலங்கினபடி" என்று அருளிச்செய்தார். வண்ணன் - ஸ்வபாவத்தையுடையவன் என்றபடி. இரைக்குங் கருங்கடல் வண்ணன் - ஓதம் கிளர்ந்த கடல்போலே சிரமஹரமான வடிவையுடையவன். [4]மடல் ஊர்ந்தாகிலும் பெறவேண்டும்படியான வடிவைச் சொன்ன படி. வண்ணன் - வடிவையுடையவன். கண்ணபிரான்தன்னை - அவ் வடிவை, அவதரித்து எனக்கு உபகரித்த கிருஷ்ணனை.

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "நாடும் இரைக்க யாம் மடல் ஊர்ந்தும்" என்று மேலே கூறியவர், இங்கு, "இரைக்கும் கருங்கடல் வண்ணன்" என்று அருளிச்செய்வதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அனந்தாழ்வான்' என்று தொடங்கி. வந்து - திருநாராயணபுரத்தில்நின்றும் வந்து.

3. "சாபம் ஆஶய ஸௌமித்ரே சராந் ச ஆஶீவிஷோபமாந்
சாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து பிலவங்கமாஃ"
என்பது, ஸ்ரீராமா. யுத். 21: 22.

4. பட்டர் நிர்வாஹம், 'மடல் ஊர்ந்தாகிலும்' என்று தொடங்குவது. பட்டர் நிர்வாகத்திலே "இரைக்கும்" என்ற அடைமொழிக்கு, பாவம் 'ஓதம் கிளர்ந்த கடல்போலே' என்பது. ஓதம் - திரை. "இரைக்கும் கருங்கடல் வண்ணன்" என்றது, "மாசறு சோதி" என்றதனைச் சொல்லுகிறது. "கண்ணபிரான்" என்றது, "ஆசறு சீலனை" என்றதனைச் சொல்லுகிறது.

வடிவழகு இது. ஸ்வபாவம் இது. இங்ஙனம் இருக்க, நான் மடல் ஊராது ஒழிவது எங்ஙனேயோ? விரைக்கொள் பொழில் குருகூர்-[1] இவர் கையும் மடலுமாகப் புறப்பட்டவாறே, 'அவன் வரவு அணித்து' என்று ஊரானது உண்டான பரிமளத்தால் நிறைவுபெற்றபடி. நிரைக்கொள் அந்தாதி - இவர் முன்னடி தோற்றுதே மடல் ஊரச்செய்தேயும், பிரபந்தமானது, எழுத்தும் அசையும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேர விழுந்தபடி. [2] இவர் முன்னடி தோற்றுதபடி கலங்கிச் சொல்லச் செய்தேயும் பகவானுடைய திருவருள் காரணமாகப் பிறந்த பிரபந்தம் ஆகையாலே, இலக்கணங்கள் ஒரு சேர விழுத் தட்டு இல்லையே அன்றே. [3] "சுலோகத்திற்குரிய எல்லா இலக்கணங்களும் அமைந்த ஸ்ரீ ராமாயணமானது சோகத்திற்குப் பின்பு சொல்லப்பட்ட காரணத்தால் சோக வேகத்தால் சொல்லியதாம்" என்கிறபடியே, சோக வேகத்தால் சொல்லச் செய்தேயும் பிரஹ்மாவினுடைய திருவருளால் எல்லா இலக்கணங்களோடு கூடி இருந்தாற்போலே.

உரைக்க வல்லார்க்கு - மடல் எடுக்க வேண்டா, இப்பாசுர மாத்திரத்தைச் சொல்ல அமையும். தம் ஊர் எல்லாம் வைகுந்த மாகும் - அவர்களுக்கு உத்தேசிய பூமி பரமபதமாம். அன்றிக்கே, நாடு அறிய மடல் எடுத்துக்கொண்டு இவர்கள் புறப்பட வேண்டாமல், இவர்கள் இருந்த இடங்களிலே அவன்தானே வந்து எப்பொழுதும் சேர்ந்தே இருக்கையாலே, இவர்கள் இருந்த இடம்தானே பரமபதமாம் என்னுதல். [4] அவன் சந்நிதி உள்ள இடம் ஸ்ரீ வைகுண்டமாகக் குறை இல்லை அன்றே.

---

1. ஆழ்வார் நோவுபடாநிற்க, ஊரில் நிறைவிற்குக் காரணம் யாது? என்ன, 'இவர் கையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இவர், முன்னடி தோற்றுமலே மடல் ஊரச்செய்தே, சொன்ன இப்பத்து, இலக்கணங்களோடு கூடியிருந்தது என்பது பொருந்தியதாரோ? என்ன, 'இவர் முன்னடி' என்று தொடங்கி அதற்கு விடையும் பிரமாணமும் அருளிச்செய்கிறார்.

3. சமாக்ஷரைஃ சதுர்பிஃ யுக்தை பாதைஃ கீதோ மஹர்ஷிணா
ஸஃ அநுவ்யாஹரணாத் பூயஃ சோகஃ ச்லோகத்வமாகதஃ"

என்பது, ஸ்ரீராமா. பால. 2: 40.

4. இவர்கள் இருந்த இடத்தை வைகுந்தமாகச் சொல்லலாமோ? என்னி, 'அவன் சந்நிதி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] இப் பாசுரங்களைச் சொன்ன அளவிலே இது கூடுமோ? என்ன ஒண்ணுது; இப்பாசுரங்களிற் சொல்லுகிற பகவானுடைய குணங்களைப் பார்த்தால், 'இந்த வார்த்தை தானும் மிகை' என்னலாம்படி இருக்கும்; இது கூடாதாகில், பரிபூர்ண சமாஶ்ரயணத்துக்கும் பலம் இல்லையாம்; [2] இங்ஙன் அன்றாகில், புருடோத்தமன் இதர சஜாதியன் ஆனன் ஆமே. (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

மாசறு சோதிகண்ணன் வந்துகல வாமையால்
ஆசை மிகுந்துபழிக்கு அஞ்சாமல்—ஏசறவே
மண்ணில் மடலூர மாறன் ஒருமித்தான்
உண்ணடுங்கத் தான்பிறந்த ஊர். (43)

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. மடல் எடுக்க வேண்டும்படி அரிதிற்பெறக்கூடிய பலம், இப்பாசுர மாத்திரத்தாலே பெறலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இப்பாசுரங்களே' என்று தொடங்கி. 'பகவானுடைய குணங்களே' என்றது, "ஆசறுசீலனே", "வாசுதேவன்" என்பன போன்ற பாசுரப் பகுதிகளில் சொல்லப்படுகின்ற குணங்களே. 'இது கூடாதாகில்' என்றது, பகவானுடைய குணதிக்யத்தாலே பல சித்தி கூடாதாகில் என்றபடி. பரிபூர்ண சமாஶ்ரயணமாவது, பரமபக்தியை யுடையவர்களாய் அவனை அடைதல். 'பலம் இல்லையாம்' என்றது, பலத்தின் கௌரவத்தைப் பார்த்தால், பரிபூர்ண சமாஶ்ரயணமும் அதற்குத் தகுதியாகாது; ஆகையாலே, அதற்குப் பலம் இல்லை என்றபடி.

2. அவன்தான் இதனை வியாஜமாகக்கொண்டு மஹா பலத்தைக் கொடுப்பான் என்று சொல்லலாமோ? என்ன, 'இங்ஙன் அன்றாகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

# நான்காந் திருவாய்மொழி — "ஊரெல்லாம்"

## முன்னுரை

ஈடு :—[1] "நாடும் இரைக்கவே - யாம் மடல் ஊர்ந்தும்" என்று பெரியதொரு மனோவேக ரசமாய் அன்றே மேலே சென்றது,[2] மடல் ஊரப்பெறுகைதான் அவனைப் பெறுவதைப் போன்று தேட்டமாம்படி பலக்குறைவு அதிகரித்தது;[3] இனித் தான், மடல் ஊரும்போது தன்னை காதலிக்கப்பட்ட பொருளைப் படத்திலே எழுதவேணுமே, அதற்கு நேரம் இல்லாத படி "ஆழிகொண்டு அன்று இரவி மறைப்ப" என்கிற படியே, சூரியனை மறைத்தானதல், இயல்பாகவே சூரியன் மறைந்ததாதல் செய்ய, அதனால், இராத்திரியாய், அதுதான் மாலைநேரம் அளவு அன்றிக்கே சராசரங்கள் முற்றும் அடங்கிய[5] நடு இரவாய், பழிசொல்லுவாரோடு, அநுகூலராய் ஹிதம் சொல்லி விலக்குவாரோடு வாசி அற, எல்லாரும் ஒரு சேர

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச் செய்கிறார் 'நாடும் இரைக்கவே' என்று தொடங்கி.

2. இப்படி மனோவேகம் அதிகரித்தால், பின்னர் மடல் ஊராது ஒழிவான் என்? என்னில், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மடல் ஊரப் பெறுகைதான்' என்று தொடங்கி.

3. மடல் ஊராது ஒழிந்ததற்கு, மற்றும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'இனித்தான்' என்று தொடங்கி.

4. நாழிகை கூறிட்டுக் காத்துநின்ற அரசர்கள் தம்முகப்பே
நாழிகை போகப் படைபொருதவன் தேவகி தன்சிறுவன்
ஆழிகொண்டு அன்று இரவி மறைப்பச் சயத்திர தன்தலையைப்
பாழி லருளப் படைபொருதவன் பக்கமே கண்டாருளர்.

என்பது, பெரியாழ்வார் திருமொழி.

'சூரியனை மறைத்தானதல்' என்றது, 'இவள் மடல் எடுத்தால் தனக்குத் தாழ்வாம்' என்னுமதனாலே சூரியனை மறைத்தானதல் என்றபடி.

5. இத்திருவாய்மொழியில் வருகின்ற "நள்ளிருளாய்' என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'நடு இரவாய்' என்றும், "ஊரெல்லாம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'பழி சொல்லுவாரோடு' என்றும், "அன்னையரும் தோழியரும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'அநுகூலராய்' என்று தொடங்கியும், "பாரெல்லாம் உண்ட" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'பிரளய ஆபத்திலே' என்று தொடங்கியும், "இம் மண்ணளந்த" என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'எல்லாரையும்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

உறங்குகையாலே ஓர் உசாத்துணையும் இன்றிக்கே, இவ்வள விலே, பிரளய ஆபத்திலே உதவும் தன்மையனுமாய் எல்லா ரையும் காப்பாற்றுகின்றவனுன புருஷோத்தமனுடைய குணங்களே நினைக்க, அவைதாம் பிரிவிலே நினைக்கையாலே மிகவும் ஆற்ருமைக்கு உறுப்பாய், சடையினல் தூக்கிட்டுக் கொள்ளுதல் முதலியவைகளிலே [1]ஒருப்பட்டவரைப்போன்று முடிந்து பிழைக்கவேண்டுமளவாய், அது தன்னைப் பெறுகை மடல் ஊரப்பெறுகையைப்போன்று தேட்டமாய்; [2]"விஷஸ்ய தாதா - இத்தனே நற்சரக்குத் தரும் உதாரர் இவ்வூரில் கிடைப் பாரோ? மே-கிடைத்தால்தான் எனக்கு இது சம்பவிக்குமோ? சஸ்த்ரஸ்யவா - விஷம்போன்று சிறிதுபோது நின்று கொல் லுமதன்றியே கடுக முடிக்கும் ஆயுதத்தைத்தான் தருவார் உண்டோ? வேஸ்மனி ராக்ஷஸஸ்ய - பிரித்துவைத்து உயிர்க் கொலையாக நலிகிறவனுடைய ஊரிலே, நற்கொலைக்குச் சாதனமானதைத்தான் தருவார் உண்டோ?" [3]இப்படி முடி கை தேட்டமாம்படி இருக்கிற அளவிலே, [4]"நாம் சர்வ ரக்ஷக ராகையாலே எல்லாருடைய ரக்ஷணத்துக்குமாகத் திருப்பாற் கடலிலே வந்து சாய்ந்தோம், உம்முடைய ரக்ஷணத்திலே மிக்க முயற்சியுள்ளவராய் இருந்தோம், கிரமப்பிராப்தி பற்ருமை

---

1. ஒருப்பட்டவர் - சீதாபிராட்டி. 'அது தன்னைப் பெறுகை' என்றது, "மாயும் வகை அறியேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. பிராட்டி அப்படி முடியத் தேடினளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விஷஸ்யதாதா' என்று தொடங்கி.

"ஸா ஜீவிதம் க்ஷிப்ரம் அஹம் த்யஜேயம் விஷேண ஸஸ்த்ரேண
[ஸிதேநவாபி
விஷஸ்யதாதா நஹிமே அஸ்தி கஸ்சித் சஸ்த்ரஸ்யவா வேஸ்மனி ராக்ஷ ஸஸ்ய" என்பது, ஸ்ரீராமா. சுந். 28: 25.

விஷஸ்ய தாதா - விஷத்தையாவது கொடுப்பவர். 'கிடைத்தால்தான் எனக்கு இது சம்பவிக்குமோ' என்றது, உதாரர் இருந்தாலும் பாபியான எனக்குத் தரமாட்டார் என்றபடி. அன்றி, எனக்குப் பலியாது என்னுதல். சஸ்த்ரஸ்ய வா - ஆயுதத்தையாவது. வேஸ்மனி ராக்ஷஸஸ்ய-இராக்ஷசனுடைய வீட்டில்.

3. மேலே, 'மடல் ஊரப் பெறுகையைப் போன்று தேட்டமாய்' என்ற வாக்கியத்தோடு, 'இப்படி முடிகை' என்று தொடங்கும் வாக்கியத்தைச் சேர்த்துப் பொருள் காண்க.

4. "யோகு செய்த பெருமானே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'நாம் சர்வ ரக்ஷகர் ஆகையாலே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

பதறுகிறீரித்தனை' என்கிற இதனை நினைப்பிக்க; அவன் சர்வரக்ஷகனுகில், நம்முடைய ரக்ஷணத்திலே மிக்க முயற்சியுள்ளவனுகில், கிரமப்பிராப்தி பற்றுமல் பதறுகிறோமித்தனை, நம் அம்சத்தால் உள்ள ரக்ஷணம் நம்க்குச் சித்தியாதோ என்று அவன் குணஞானத்தாலே தரித்தாராகச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

---

## 476.

**ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்**
**நீரெல்லாம் தேறிஓர் நீளிரவாய் நீண்டதால்**
**பாரெல்லாம் உண்டநம் பாம்பணையான் வாராஞல்**
**ஆர்? எல்லே! வல்வினையேன் ஆவிகாப் பார்இனியே.**

**பொ - ரை:**—ஊரிலேயுள்ள மக்கள் எல்லாரும் உறங்கி, உலகம் எல்லாம் செறிந்த இருளாகி, நீர் என்று பேர் பெற்றவை எல்லாம் தெளிந்து ஓரே நீண்ட இரவாகி நீண்டுவிட்டது; உலகங்கள் எல்லாவற்றையும் பிரளயகாலத்தில் புசித்த நம் பாம்பணையான் வருகின்றிலன்; தோழீ! வலிய வினைகளைச் செய்த என்னுடைய உயிரை இனிக் காப்பவர்கள் யார்? என்கிறாள்.

**வி - கு:**—துஞ்சவும் இருளாகவும் தேறவும் இக்காலம் நீள் இரவாக நீண்டது என்க. துஞ்சுதல் - உறங்குதல். ஆல்: அசைநிலை. அன்றி, ஆகையாலே, என்று பொருள் கோடலுமாம்.

இத் திருவாய்மொழி, தாவு கொச்சகக் கலிப்பா.

**ஈடு:**—முதற்பாட்டு. [1] பிரளய ஆபத்திலே வந்து உதவினவன், என்னை விரஹநோயாகிய பிரளயம் கோக்க, வந்து உதவாத பின்னர், இனி, நான் பிழைத்திருத்தல் என்பது ஒரு பொருள் உண்டோ? என்று தன் ஜீவனத்திலே நசை அறுகிறாள்.

ஊர் எல்லாம் துஞ்சி - [2] ஊரவர் கவ்வை தாரகமாக மடல் ஊர இருந்தோம், இனி யார் பழி தாரகமாக நாம் மடல் ஊர்

1. "பார் எல்லாம் உண்ட" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ஊர் எல்லாம் உறங்குவது தனக்கு வந்தது யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஊரவர் கவ்வை' என்று தொடங்கி,

வது என்கிறாள். [1]சிலர் உறங்கச் சிலர் உணர்ந்திருக்கை அன்றிக்கே, எல்லாரும் ஒருசேர உறங்கினர்கள். [2]திருவடி செல்லுகிற கணத்திலே அரக்கியர்கள் முழுதும் உறங்கினற்போன்று பழிசொல்லுவார் முழுதும் உறங்கினர்களாயிற்று. [3]அன்றிக்கே, இவள் பிறந்த ஊராகையாலே இவள் நிலையைக் கண்டு சோகித்து, கோரை சாய்ந்தாற்போன்று எல்லாரும் ஒருசேர உறங்கினபடியைச் சொல்லிற்று ஆகவுமாம். நாக பாசத்தால் கட்டுண்ட அன்று ஒரு ஜாம்பவான், மஹாராஜர், திருவடி தொடக்கமானர் தாம் உணர்ந்திருந்தமை உண்டே அன்றே; இங்கு அங்ஙனம் ஒருவர் இலராயிற்று. ஆக, பழி சொல்லுவாரோடு ஹிதம்சொல்லுவாரோடு உசாத்துணையாவாரோடு வாசி அற, எல்லாரும் ஒருசேர உறங்கினர்கள் என்கை. இதனால், என் சொல்லியவாறே? எனின், பழி சொல்லி அலைப்பாருங்கூட இல்லாதபடி எல்லாரும்கூட உறங்குகையாலே, சிலருடன் உசாவிக் காலத்தைக் கழிக்க ஒண்ணாத படியான நிலை பிறந்தபடி சொல்லுகிறது. ஊர் எல்லாம் உறங்கிற்றாகில், புறம்பேயுள்ள உலகத்திலே சென்றாகிலும் உசாத்துணையாவார் உளராகில் பார்த்தாலோ? என்னில், உலகு எல்லாம் நள் இருளாய் - பிரளயம் கோத்தாற் போலே உலக மடைய இருளே ஆயிற்று. நள் என்று, நடுவாதல், செறிவாதல்; நடுவான இருள், செறிவான இருள் என்றபடி. அன்றிக்கே, எல்லாப்பொருள்களினுடையவும் ஒலி அடங்கினால் இராத்திரி தனக்கெனவே ஓர் ஒலி உண்டு; அதனைச் சொல்லுகிறதாதல். ஆக, கண்களுக்குப் புலப்படுவது ஒன்றும் இல்லாதபடி ஆயிற்று என்றபடி.

நீர் எல்லாம் தேறி - தண்ணீரில் வசிக்கும் பிராணிகள் முழுதும் ஆழ இழிந்து, அங்குள்ள ஒலியும் அடங்கிற்று.

---

1. "எல்லாம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சிலர் உறங்க' என்று தொடங்கி.

2. பிரதிகூலர் அடைய உறங்கினதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'திருவடி செல்லுகிற' என்று தொடங்கி.

3. "ஊர் எல்லாம்" என்றதற்கு, தாய்மார் தோழிமார் ஆகிய எல்லாரையும் சொல்லுகிறது என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி, எல்லாரும் ஒருசேர உறங்கக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. ஆக, "ஊர் எல்லாம்" என்றதற்கு, இரு பொருள்: ஒன்று, பிரதிகூலர் எல்லாரும் என்பது. மற்றொன்று, தாய்மார், தோழிமார் முதலிய எல்லாரும் என்பது. இரண்டாவது பொருளுக்கு ஒரு வேறுபாடு காட்டுகிறார் 'நாகபாசத்தால்' என்று தொடங்கி. நாகபாசத்தால் கட்டுண்ட - பிரஹ்மாஸ்திரத்தால் கட்டுப்பட்ட. இது, ஸ்ரீராமாயண சரிதை.

'ஊர் எல்லாம் துஞ்சி' என்கையாலே, சிலர் வார்த்தை கேட்டுப் போதுபோக்குமது இல்லை என்கை. 'உலகெல்லாம் நள்ளிருள்ளாய்' என்கையாலே, கண்களுக்குப் புலப்படும் பொருள் ஒன்று இல்லாமையாலே ஒன்றைக்கண்டு போதுபோக்குமது இல்லை என்கை. 'நீர் எல்லாம் தேறி' என்கையாலே, மூதலிலே, காதுகட்கு விஷயம் இல்லை என்கை. இவைகாம், மற்றைய இந்திரியங்களின் காரியங்கட்கும் உபலக்ஷணமாய் இருக்கின்றன. [1] பகலிலே ஆனால் இந்திரியங்கள் தனது தனது விஷயங்களிலே பல்லி பற்றுகையாலே ஆற்றுமை அரையாறுபட்டு இருக்கும், இராத்திரியில் எல்லா இந்திரியங்களுக்கும் பிரிந்த விஷயம் ஒன்றுமே இலக்கு ஆகையாலே, ஆற்றுமை கரை புரண்டு இருக்கும். ஓர் நீள் இரவாய் நீண்டதால் - [2] பண்டும் இராத்திரி நெடுகாநிற்கச் செய்தே பகலும் இரவுமாக வருமே அன்றே, இப்பொழுது பகல் விரவாத இரவு ஆயிற்று. மனிதர்களுடைய இரவினைக் காட்டிலும் தேவர்களுடைய இரவு நீண்டிருக்குமானாலும் அதற்கு எல்லை உண்டு, அங்ஙனமும் ஓர் எல்லை இல்லையாயிருந்தது என்பாள் 'நீண்டதால்' என்கிறாள். பார் எல்லாம் உண்ட-பிரளய ஆபத்திலே இன்னார் இனியார் என்னாதே எல்லாரையும் ஒருசேரக் காப்பாற்றியவன். [3] பிரளய ஆபத்தில் அகப்பட்டார் எல்லார்க்கும் உண்டான ஆபத்து இவள் ஒருத்திக்கும் உண்டுபோலேகாணும். [4] பிரளயத்தில் சிலர் மடல் எடுக்கப் புக்கு அதுவும் மாட்டாத நிலை உண்டாகி அன்று, உதவிசெய்தது. என்றது, தங்கள்தங்களால் போக்கிக் கொள்ள ஒண்ணாதபடியான ஆபத்து வந்தால் உதவுமவன் என்றபடி. நம் பாம்பு அணையான் - திருவனந்தாழ்வானைப்

---

1. பிரிவுத் துன்பம் இரவில் மிகுவதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகலிலே' என்று தொடங்கி. 'பல்லி பற்றுகை' என்றது, பல்லி பற்றினாற் போலே, தனது தனது விஷயங்களை விடாமல் பற்றுதல் என்றபடி.

2. 'பண்டும் இராத்திரி நெடுகா நிற்க' என்றது, "சேட்பட்ட யாமங்கள்" (2. 1 : 2.) என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'பகலும் இரவுமாக' என்றது, "சுடர்கொள் இராப்பகல்" (2. 1 : 4.) என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

3. எல்லார்க்கும் வந்த ஆபத்தைக் காப்பாற்றினேனும், உமக்கு ஒருவர்க்காகச் செய்யப்போமோ? என்ன, இதற்கு விடை இறுக்கும் மூலமாக வியாக்யாதாவின் ஈடுபாடு, 'பிரளயாபத்தில்' என்று தொடங்கும் வாக்கியம்.

4. "பார்" என்று அஃறிணைச்சொல்லால் அருளிச்செய்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரளயத்தில்' என்று தொடங்கி.

படுக்கையாகவுடையவன். என்றது, உகந்தார்க்கு உடம்பு கொடுக்குமவன் என்றபடி. [1] ஆக, சம்சாரசம்பந்தம் சிறிதும் இல்லாதவரான நித்தியசூரிகள்படியும் இல்லையாயிற்று, சம்சாரிகள்படியும் இல்லையாயிற்றே நமக்கு! என்கிறாள். [2] நித்தியசூரிகளே நித்தியஅநுபவம் செய்விக்கும்; சம்சாரிகளுக்கு விருப்பம் இல்லாதிருக்கவும் தான் அறிந்ததாக ஆபத்தையுடையரானவாறே வந்து ஆபத்தைப் போக்குவான், தன்னுடைய சம்பந்தத்தாலே. [3] தன்னோடு கலந்து, கூப்பிடுகைக்கு வேண்டுவது கொடுத்தபடியாலே 'நம்' என்கிறாள்.

வாராஞல் - வயிற்றிலே வைத்துக் காக்கவேண்டா, உடம்போடே அணையவேண்டா, வந்து முகம்காட்ட அமையுமே அன்றே. [4] "உதிக்கின்ற சூரியன் ஆனவன், உலகம் எல்லாவற்றிலுமுள்ள இருளைப் போக்குவதைப் போன்று, பெருமாள் பார்க்கப்பட்டவுடனேயே நமது வருத்தத்தைப் போக்குவார்" என்னக்கடவதன்றே. இனி - இவ்வளவில். ஆவி காப்பார் ஆர் - பிரளய ஆபத்தில் அகப்பட்டாரைப்போன்று ஆபத்தோடுகூடி இருக்கிற நான் காக்கவோ? [5] "எம்மின் முன் அவனுக்கு மாய்வராலோ" என்கிறபடியே, 'இவளுக்கு அவன் வேணும்' என்று என்பேற்றுக்கு எனக்கு முன்னே நோவுபடுகிற தோழி காக்கவோ, ஹிதம் சொல்லுகிற தாயார் காக்கவோ, பழிசொல்லுகிற ஊரார் காக்கவோ? எல்லே - என்னே ஆச்சரியம்! அன்றிக்கே, 'எல்லே' என்று தோழியை விளிக்

---

1. "பார் எல்லாம் உண்டவன், நம் பாம்பணையான்" என்ற இரண்டு விசேஷணங்கட்கும், பாவம் அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

2. அவர்கட்கு இவன் செய்வன யாவை? என்ன, செய்வனவற்றை அருளிச்செய்கிறார் 'நித்தியசூரிகளே' என்று தொடங்கி.

3. இந்த நிலையிலும் முகம் காட்டாதிருக்க 'நம்' என்பான் என்? என்ன, 'தன்னோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'கூப்பிடுகைக்கு வேண்டுவது' என்றது, அன்பினை. அல்லது, ஈடுபாட்டினையுமாம்.

4. முகம் காட்டினவாறே துக்கம் போமோ? என்ன, அதற்குப் பிரமாணத்தோடு விடை அருளிச்செய்கிறார் 'உதிக்கின்ற' என்று தொடங்கி.

"தத்ருஷ்ட ஏவஹி நஸ்ஸோகம் அபநேஷ்யதி ராகவஃ
தமஸ் ஸர்வஸ்ய லோகஸ்ய ஸமுத்யந் இவ பாஸ்கரஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 83 : 9.

5. திருவாய். 9. 9 : 5.

கிறாள் ஆதல். [1] மேலே, "அன்னையரும் தோழியரும்" என்று அவர்களும் உறங்கினார்கள் என்னுமிற்கச் செய்தேயும், தன் ஆபத்தே செப்பேடாக 'இவ்வளவில் அவள் உணர்ந்திருக்கச் சம்பாவனை உண்டு' என்று நினைத்து 'எல்லே' என்கிறாள். வல்வினையேன் - எல்லாரையும் காப்பாற்றுகின்றவனுமாய், உடம்போடு அணைந்தாரைப் பிரியாதவனுமாய் இருக்கிற அவன் வந்து உதவாதபடியாய் இருக்கிற மஹாபாவத்தைச் செய்தேன். [2] வல்வினையேன் ஆவி-பிரிவே காரணமாக நூறே பிராயமாயிருக்கிற என்னுடைய உயிரை. [3] 'பிரிவிற்குச் சிலையாத இது இனி முடியப் புகுகிறதோ' என்று இருக்கிறாள். [4] ரக்ஷகனவன் வந்திலன், எனக்கு முன்னே தோழி கோவுபட்டுக்கிடந்தாள், இனி வேண்டாதவர்கள் ரக்ஷகர் ஆகவோ. (1)

## 477.

**ஆவிகாப் பார்இனியார்? ஆழ்கடல்மண் விண்மூடி**
**மாவிகார மாய் ஓர் வல்லிரவாய் நீண்டதால்**
**காவிசேர் வண்ணன்என் கண்ணனும் வாராஞல்**
**பாவியேன் நெஞ்சமே! நீயும்பாங் கல்லையே.**

**பொ - ரை:**—ஆழ்ந்த கடலையும் பூமியையும் ஆகாயத்தையும் மூடிக்கொண்டு பெரிய விகாரத்தையுடையதாய் ஒப்பற்ற வலிய இருள் மயமான இரவாயே நீண்டுவிட்டது; நீலோற்பலமலர்போன்ற நிறத்தையுடையவனுகிய என் கண்ணபிரானும் வருகின்றிலன்; பாவியேனுகிய என்னுடைய நெஞ்சமே! நீயும் அதுகூலமாய் இருக்கின்றாய் இல்லை; ஆதலால், இனி என் உயிரைக் காப்பவர் யார்? என்கிறாள்.

**வி - கு:**—காலம் மூடி விகாரமாகி இரவாய் நீண்டது என்க. வண்ணனுகிய கண்ணன் என்க.

---

1. மேலே, "அன்னையரும் தோழியரும் துஞ்சுவரால்" என்றிருக்க, இங்கே, தோழியை விளித்தல் யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி.

2. வல்வினையேன் ஆகையாலே நூறே பிராயமாய் இருக்கிற என்னுடைய என்றபடி.

3. நூறே பிராயம் என்று நிச்சயித்தல் எப்படி? என்ன, 'பிரிவிற்குச் சிலையாத' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சிலையாத = இலையாத.

4 "இனி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ரக்ஷகனவன்' என்று தொடங்கி.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [1]இங்கிலேயில் ஸ்ரீ கிருஷ்ணனும் வருகின்றிலன்; என்னுடைய சம்பந்தத்தாலே, நெஞ்சமே! நீயும் அவனைப் போன்று பாங்கு அன்றிக்கே ஒழிந்தாய் என்கிறாள்.

கண்ணனும் வாரான், நெஞ்சமே! நீயும் பாங்கு அல்லை, ஆவி காப்பார் இனியார் - உதவுமவன் உதவிற்றிலன், நெஞ்சும் பாங்கு அன்றிக்கே ஒழிந்தது, இனி, காப்பவர் யார்? ஆழ் கடல் மண் விண் மூடி - அளவிட முடியாததான கடல், எல்லாப் பொருள்களுக்கும் இடம் கொடுக்கக்கூடியதான பூமி, அந்தப் பூமிக்கும் இடம் கொடுக்கக்கூடியதான ஆகாசம் இவற்றை முழுதும் மறைத்து. [2]காரணப் பொருள்களைக் காரியப் பொருள்களிலே ஒன்று மறைத்தது. மா விகாரமாய் - பின்னரும் அவ்வளவில் முடிவு பெறுவதாய் இருக்கிறது இல்லை, மஹா விகாரத்தையுடைத்தாய்ப் பரமபதத்தையும் கணிசிக்கிறாப்போலே இராநின்றது. [3]விஶ்வரூபத்தைக் காட்டின சர்வசக்தி செய்வன எல்லாம் செய்யா நின்றது என்றபடி. ஓர் வல் இரவாய்-[4]திருவாழியை இட்டுத் துண்டித்து உதவவரிலும் வர ஒண்ணுதபடி செறிந்திருக்கை. [5]இரவுக்கும் இருளுக்கும் வேற்றுமையை நினையாமையாலே, இருளை 'இரவு' என்கிறாள். நீண்டதால் - ஒரு முடிவு காண ஒண்ணாது.

---

1. "ஆழ்கடல் மண்விண்மூடி...நீண்டதால்" என்றதனைக் கடாக்ஷித்து 'இங்கிலேயில்' என்கிறார். 'நெஞ்சமே! நீயும்...பாங்கு அன்றிக்கே ஒழிந்தாய்' என்றது, அவனை நினைத்துத் தரித்துக்கொண்டிருக்கைக்கு, நீ என்னதுவாய் இருக்கிறாய் இல்லை; "என் நெஞ்சிலரும் அங்கே ஒழிந்தார்" என்கிறபடியே, நீயும் அங்கே ஒழிந்தாய் என்றபடி.

2. காரணப்பொருள் - ஐம்பெரும்பூதங்கள். காரியப் பொருள்களிலே ஒன்று - இருள்.

3. "காரணப்பொருள்களைக் காரியப்பொருள்களிலே ஒன்று மறைத்ததற்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'விஶ்வரூபத்தை' என்று தொடங்கி. சர்வசக்தி - ஸ்ரீ கிருஷ்ணன்.

4. "வல்" என்பதன் பொருளை விளக்குகிறார் 'திருவாழியை' என்று தொடங்கி.

5. இப்படிச் செய்வது இருள் ஆகையாலே, 'ஓர் வல் இருள்' என்ன வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இரவுக்கும்' என்று தொடங்கி.

காவி சேர் வண்ணன் - [1] "அலர்ந்த கருநெய்தல் இதழ் போன்ற நிறத்தையுடையவர்" என்கிறபடியான நிறத்தை யுடையவன். என்றது, இருளோடு ஒரு கோவையான நிறம் என்றபடி. [2] இருள் அன்ன மா மேனி அன்றே. [3] கறுப்பு உடுத்து வருவாரைப் போன்று வரலாமே அன்றே. என் கண் ணன்-கம்சன் காவலாக வைத்த தீயோர் கண் படாதபடி இரு ளிலேவந்து உதவினவன். [4] நள்ளிருட்கண் வந்த எந்தை பெரு மானரே அன்றே. வாராஞல்-[5] தாமசப் பிரகிருதிகளை அழிக்க வருமவன் தமஸ்ஸுதன்னையே அழிக்கவந்தால் ஆகாதோ? [6] "வந்தாஞகில் அப்போதே விடியும் இவளுக்கு, பகற்கண் டேன் நாரணனைக் கண்டேன் என்பதன்றே பெரியார் திரு வாக்கு. பாவியேன் நெஞ்சமே-[7] உனக்கும் அவனோடு ஒத்த சம் பந்தமே அன்றே. அவன் உதவும் தன்மையன் அல்லாதவனு யன்றே உதவாது விட்டது, என்னுடைய சம்பந்தமே அன்றே.

---

1. "புல்லேந்தீவர பத்ராபம் சதுர்பாஹும் உதீக்ஷ்யதம்
ஸ்ரீவத்ஸவக்ஷ ஸம்ஜாதம் துஷ்டாவ ஆகதுந்துபிः"

என்பது, விஷ்ணுபுரா. 5. 3 : 8.

2. யானும்என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம் வல்வினையைக்
காணும் மலையும் புகக்கடிவான் - தாணுர்
இருளன்ன மாமேனி எம்மிறையார் தந்த
அருளென்னும் தண்டால் அடித்து.

என்பது, பெரிய திருவந். 26.

3. "காவிசேர் வண்ணன்" என்று இப்படிச் சொல்லுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கறுப்புடுத்து' என்று தொடங்கி. கறுப்பு உடுத்து வரு வார் - நகரிசோதனைக்காக மாறுவேடம் பூண்டு இரவில் வருகின்ற அரசர்கள்.

4. தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானர் மருவினின்ற ஊர்போலும்
மூந்தி வானம் மழைபொழியும் மூவாஉருவின் மறையாளர்
அந்தி மூன்றும் அனலோம்பும் அணியார்வீதி அழுந்தூரே.

என்பது, பெரிய திருமொழி.

5. தாமசப் பிரகிருதிகள் - கம்சன் முதலானேர். தமஸ்ஸு - இருள்.

6. வந்தால் பலம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வந்தாஞகில்' என்றுதொடங்கி. அதற்குக் காரணம் யாது? என்ன, 'பகற் கண்டேன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "பகற் கண்டேன்" என்பது, இரண்டாந் திருவந். 81.

7. "என் கண்ணன்", "பாவியேன் நெஞ்சம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உனக்கும்' என்று தொடங்கி.

[1] என் மார்விலே அணைக்கை அன்றே அவன் உதவாது ஒழிகிறது, அது உனக்கும் ஒக்குமே அன்றே. நீயும் பாங்கு அல்லையே - [2] ஒரு தன்மையாலே ஒற்றுமை உண்டானால் வேறு ஒரு தன்மையாலே வேறுபாடு உண்டானால் ஆகாதோ? [3] ஸ்வதந்திரனுய்ப் பரதந்திரனை அவனைப்போன்று ஆக வேணுமோ பாரதந்திரியமே ஸ்வரூபமான நீயும். [4] அவனுக்குக் காதலனும் தன்மை தவிர்ந்தது என்றால் ஸ்வாதந்திரியமே ஜீவிக்கும், உனக்கு அங்ஙன் ஒன்று இல்லையே. இருவர் பவ்யராக இருந்தால், அவர்களிலே ஒருவன் பவ்யன் அன்றிக்கே ஒழியில் மற்றையவனும் பவ்யனுகாது ஒழியவேணுமோ. [5] 'என் கண்ணனும் வாரானால்', 'என் நெஞ்சமே' என்று ஒருசேரச் சொல்லலாய் இருக்கிறதே அன்றே. (2)

## 478.

நீயும்பாங் கல்லைகாண் நெஞ்சமே! நீளிரவும்
ஓயும் பொழுதின்றி ஊழியாய் நீண்டதால்
காயும் கடுஞ்சிலைஎன் காகுத்தன் வாரானால்
மாயும் வகைஅறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே.

**பொ - ரை :**—நெஞ்சமே! நீயும் அதுகூலமாய் இருக்கின்றாய் இல்லை, நீண்ட இரவும் குறையும் காலமாயிராமல் கல்பமாக நீண்டுவிட்டது; பகைவர்களை வருத்துகின்ற கொடிய வில்லையுடைய என்காகுத்தனும் வருகின்றான் இலன்; வல்வினையேனுகிய யான் பெண்ணுகப் பிறந்ததனால் இறப்பதற்குரிய வகையை அறிகின்றிலேன் என்கிறாள்.

---

1. சம்பந்தம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என் மார்விலே' என்று தொடங்கி.

2. "நீயும்" என்ற உம்மையை, சமுச்சய உம்மையாகக் கொண்டு மேலே அருளிச்செய்த கருத்தே அன்றி, வேறும் ஒரு கருத்து அருளிச் செய்கிறார் 'ஒரு தன்மையாலே' என்று தொடங்கி. என்றது, மார்பிலே அணைந்த ஆகாரத்தாலே ஒத்திருந்தாலும், என்னைப் பிரியாதிருக்கிற தன்மையாலே வேறுபட்டதாயிருத்தல் ஆகாதோ? என்றபடி.

3. "நீயும்" என்ற உம்மைக்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'ஸ்வதந்திரனுய்' என்று தொடங்கி.

4. பரதந்திரனை யான், ஸ்வதந்திரனுய்ப் பரதந்திரனானைப் போலே இருந்தால் வரும் கேடு யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனுக்கு' என்று தொடங்கி.

5. 'இருவரும் பவ்யர்' என்றதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என் கண்ணனும்' என்று தொடங்கி. பவ்யர் - பணிவுள்ளவர்.

**வி - கு :**—நெஞ்சமே பாங்கு அல்லை, இரவும் நீண்டது, காகுத்தன் வாரான், வல்வினையேன் பெண் பிறந்து மாயும் வகை அறியேன் என்க. பிறந்து - பிறந்ததனால். காகுத்தன் - ஸ்ரீ ராமபிரான். ககுத்தன் வம்சத்தில் பிறந்தவன்.

**ஈடு :**—மூன்றும் பாட்டு. [1] எல்லாத் துக்கங்களையும் போக்குந் தன்மையனை ஸ்ரீ ராமபிரானும் வருகின்றிலன், பரதந்திரப்பட்டவள் ஆகையாலே முடியவும் விரகு அறிகின்றிலேன் என்கிறாள்.

நெஞ்சமே! நீயும் பாங்கு அல்லை காண் - [2] கங்கையின் அக்கரையைச் சேர்ந்த அன்று, இளைய பெருமாளைப் பார்த்து, 'பிள்ளாய், நீயும் படைவீடு ஏறப் போ' என்றாரே அன்றே, 'வனவாசம் இவரை ஒழியவும் தலைக்கட்டலாம் என்று மயங்கி;' அப்படியே, இவரும் தம் திருவுள்ளத்தைப் பார்த்து, '**நீயும் பாங்கல்லை காண்**' என்கிறார். [3] "இம்மை மறுமைகளுக்குக் காரணம் மனமே" என்கிறபடியே, நெஞ்சைக்கொண்டே அன்றே எல்லாம் பெற இருக்கிறது, அப்படி இருக்கச் செய்தேயும், இன்னுப்பாலே சொல்லுகிறார். நீள் இரவும் ஓயும் பொழுது இன்றி ஊழியாய் நீண்டது - [4] முதலிலே நெடிதான இரவானது, அதற்குமேலே, ஒரு முடிவு காண ஒண்ணாதபடி இராநின்றது. என்றது, அடி காண ஒண்ணாதபடியுமாய், முடி

---

1. "காயும் கடுஞ்சிலை காகுத்தன்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மீண்டும் "நீயும் பாங்கல்லை காண்" என்றதற்கு, ஒரு திருஷ்டாந்தத்தோடு பாவம் அருளிச்செய்கிறார் 'கங்கையின்' என்று தொடங்கி. படைவீடு - அயோத்யாநகரம். "பாங்கல்லைகாண்" என்றது, பாங்கு அன்றிக்கே ஒழிந்தாய் காண் என்றபடியாய், இதனால், உன்னைக்கொண்டு காரியம் இல்லை என்று உபேக்ஷிக்கின்றாள் என்றபடி.

3. "பாங்கு அல்லை காண்" என்கிறது என்? மனத்தினை ஒழிய ஒரு காரியம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இம்மை' என்று தொடங்கி.

> "மனஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோஃ
> பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மநஃ"

என்பது, விஷ்ணுபுரா. 6. 7 : 28.

4. "நீள்" என்றும், "ஓயும் பொழுதின்றி" என்றும் விசேடித்தற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'முதலிலே' என்று தொடங்கி.

வுக்குப் ஓர் எல்லை காண ஒண்ணாதபடி இராநின்றது.[1] முடிவு காண ஒண்ணாதிருக்கச் செய்தேயும் அடியற்று இருப்பன உண்டே அன்றே, இது அப்படி இருக்கிறது இல்லை. நின்ற விடத்தில் நின்றும் கால் வாங்கக் கூடியதன்றிக்கே இருத்தலின் 'ஓயும் பொழுதின்றி' என்கிறாள். 'சாத்தன், கூத்தன்' என்பன போன்று சில பெயர்களையுடையவர்களாய், அவர்கள் தாங்கள் ஜீவிக்கப் புக்கவாறே சிறுபேர் தவிர்ந்து 'சோழக்கோனார், தொண்டைமானார்' என்று பட்டப்பெயர் பெற்று வாழுமாறு போன்று, இரவு என்ற பெயர் நீங்கிக் 'கல்பம்' என்னும் பெயரையுடைத்தாகாகின்றது என்பாள் 'ஊழியாய்' என்கிறாள். அது தனக்கும் ஓர் முடிவு உண்டே அன்றே, அதுவும் இல்லையாயிற்று இதற்கு என்பாள் 'நீண்ட கால்' என்கிறாள்.

காயும் கடுஞ்சிலை என் காகுத்தன் வாராலை - ஒருத்தியுடைய[2] நெடிதான இரவைப் போக்குவதற்காக வில்லைவளைத்துப் பிடித்த வில்வலியையுடையவனும் வருகின்றிலன். பகைவர்கள்மேல் காயாநிற்பதாய், பகைவர்பக்கல் பெருமாள் கண் பார்க்கிலும் தான் கண் பாராதபடியான வில் ஆதலின் 'காயும் கடும் சிலை' என்கிறாள். அவனது[3] சாங்கம் என்னளவிற் கண்டிலேன். பிராட்டிக்கு உதவினதும் 'தனக்கு உதவிற்று' என்றிருக்கிறளாதலின் 'என் காகுத்தன்' என்கிறாள். "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்று இலேன் தஞ்சம்" என்று நான் தஞ்சமாக நினைத்திருக்குமவனும் வருகின்றி

---

1. முடிவில்லாமை சொன்னபோதே, அடி காண ஒண்ணுமையும் பெறப்படும் அன்றே? அங்ஙனமிருக்க, "நீள் இரவு" என்று விசேடிக்க வேண்டுமோ? என்ன, "முடிவுகாண" என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, பிரத்வம்சாபாவத்திற்கு (அழிவுபாட்டபாவம்) முடிவின்றிக்கே இருக்கச்செய்தேயும் அடி உண்டாயிருக்குமே அன்றே, அதனை நோக்கி விசேடிக்கிறது என்றபடி. அடியற்றிருப்பன - அடி உண்டாயிருப்பன. "நீளிரவு" என்று, 'அடிகாண ஒண்ணாது' என்றபோதே, முடிவு காண ஒண்ணுமையும் பெறப்படுமே அன்றே? அங்ஙனம் இருக்க, "ஓயும் பொழுதின்றி" என்று விசேடிக்கவேண்டுமோ? எனின், பிராகபாவ (முன் இன்மை) வேறுபாட்டின் பொருட்டு விசேடிக்கிறார் என்க.

2. 'நெடிதான இரவை' என்றது, நெடிதான பிரிவாகிய வியசனத்தை என்றபடி.

3. சாங்கம் - அன்பும், வில்லும்.

4. திருவாய், 3. 6 ; 8.

லன். [1] "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்" என்கிறபடியே, பிராட்டியுடைய விராதியைப் போக்கியது அவளுக்குக் காரியம் செய்தானாக நினைத்திருக்கை அன்றிக்கே, தன்சினம் தீர்ந்தானுமிருக்குமவன். மேலே, "கண்ணனும் வாரானால்" என்றருள்; முடிசூடிய அரசபுத்திரர் அல்லாதார்தாம் தவிருகிறார்கள், முடிசூடி நோக்கும் குடியிலே பிறந்தவனுக்கு வரத் தட்டு என்? [2] ககுஸ்த குலத்தில் பிறந்தவனும் வாராது ஒழிவதே! என்பாள் '**காகுத்தன் வாரானால்**' என்கிறாள். அன்றிக்கே, பகைவர்கள் வரப் போர்செய்ய இருக்கை அன்றிக்கே, தானே எடுத்துவிட்டுச் சென்று பொருமவனும் வருகின்றிலன் என்பாள் '**காகுத்தன் வாரானால்**' என்கிறாள் என்னலுமாம். [3] "அபியாதா - முன்செல்பவர்;" பகைவர்கள் வரப் பொர இருக்கை அன்றிக்கே, எடுத்துவிட்டுப் பொருகையும் தமக்கே பணியாயிருக்கும். "பிரஹர்த்தாச - அடிப்பவர்;" தூசித்தலையில் நின்று, '**முதல் வெட்டு யாரது**' என்றருள், அதில் முற்பாடும் தம்மதாயிருக்கும். "சேநாநய விசாரதஃ-சேனையை நடத்துவதில் சமர்த்தர்;" தாம்போகாமல், தூசியும் அணியும் பேரணியுமாக வகுத்துவிட்டால், ஒருசேர நின்று பொருவித்தாற்போலே வென்று மீளும்படி படைகோக்க வல்லவர். மாயும் வகை அறியேன் - இவன் வாராமை அறிந்தால் இனி முடிந்துபோதல் அன்றோ சுகம், முடியும் விரகு அறிகின்றிலேன். வல்வினையேன் - முடிந்துபோதல் சுகமாய்த் தேட்டமானால் அதுவும் கிடையாத

---

1. பெண்களுக்குத் தஞ்சமாக இருப்பவன் கிருஷ்ணன் அன்றோ, ஸ்ரீ ராமபிரான் தஞ்சமாக இருப்பாரோ? என்ன, பெண்களுடைய காரியத்தைத் தன் பேறுகச் செய்யுமவராகையாலே தஞ்சம் என்கிறார் 'சினத்தினால்' என்று தொடங்கி. இது, திருப்பாவை. 12. இப்பாசுரத்திற்கு, கருத்து அருளிச்செய்கிறார் 'பிராட்டியுடைய' என்று தொடங்கி.

2. தான்தனக்கு வெலற்கரிய தானவரைத் தலைதுமித்து என்
வான்தரக்கிற் றிகொல் என்று குறை இரப்ப வரம்கொடுத்தாங்கு
என்றெடுத்த சிலையினையும் இகல்புரிந்த இவர் குலத்தோர்
தோன்றலைப் பண் டிந்திரன்காண் விடைஎழுப்ச் சுமந்தானும்.

என்பது, கம்பராமாயணம்.

3. தானே எடுத்துவிட்டுச் சென்று பொருமவர் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "அபியாதா" என்று.

"அபியாதா பிரஹர்தா ச ஸேநாநய விஸாரதஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 1; 29.

படியான பாவத்தைச் செய்தேன். என்றது, பாபமானது, அழிவிற்குக் காரணமாகை அன்றிக்கே ஜீவித்தற்குக் காரணம் ஆவதே! என்றபடி. [1] ஜீவிக்கை தேட்டமானபோது அரிதாம், முடிந்துபோதல் தேட்டமானபோது அரிதாம், ஏதேனுமாக வேண்டாததைக் கொடுப்பது பாபமாமித்தனை அன்றோ. பெண் பிறந்தே - [2] பரதந்திர ஜன்மத்திலே பிறந்தார்க்கு நினைத்தபோது முடியப்போமோ. பிறர்க்காகஜீவிக்க வேண்டும் பரதந்திரமான பிறவியிலே பிறத்தற்குத் தகுதியான மஹாபாவத்தைச் செய்தேன். [3] "பெண்கள் பாவங்களுக்குக் காரணமானவர்கள், பாவத்தால் வந்தவர்கள்" என்னக்கடவதன்றோ.

[4] "நசாஸ்ய மாதா" - பிராட்டி திருவடியைக் கண்டபின்னர், பெருமாள்பக்கல் பிரணய ரோஷத்தாலே '**இவன் அவர் வரவிட்ட ஆள்**' என்று சீறிச் சில வார்த்தைகள் அருளிச் செய்ய, 'தேவரீர் எழுந்தருளி இருந்த இடம் அறியாமல் இருந்

---

1. புண்ணியமே ஜீவித்தற்குக் காரணமாகும், பாவமும் ஜீவிப்பதற்குக் காரணம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஜீவிக்கை தேட்டமானபோது' என்று தொடங்கி.

2. "வல்வினையேன்" ஆகையாலே, "மாயும் வகை அறியேன்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்து, இப்பொழுது, "பெண் பிறந்தே மாயும் வகையறியேன் வல்வினையேன்" என்று கூட்டி வேறும் ஒரு கருத்து அருளிச் செய்கிறார் 'பரதந்திர ஜன்மத்திலே' என்று தொடங்கி.

3. பெண்பிறவி அப்படிப் பாவத்தின் பலமாகுமோ; என்ன, 'ஆம்' என்று கூறத் திருவுள்ளம்பற்றி அதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'பெண்கள்' என்று தொடங்கி.

"நாஶாநாம் ஆகரஃ க்ரோதஃ ஆஶா பரிபவாகரஃ
வியாதீநாம் ஆகரஃ தோயம் பாபாநாம் ஆகரஃ ஸ்திரியஃ"

என்பது, மஹாபாரதம்.

4. பரதந்திரப் பிறவியிலே பிறந்தார்க்கு நினைத்தபோது முடியப் போகாது என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'நசாஸ்ய மாதா' என்று தொடங்கி.

"ந ச அஸ்ய மாதா ந பிதா நச அந்யஃ ஸ்நேஹாத் விஶிஷ்டோஸ்தி [மயா ஸமோ வா
தாவத் ஹி அஹம் தூத ஜிஜீவிஷேயம் யாவத் ப்ரவ்ருத்திம்
ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய"

என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 30.

இந்தச் சுலோகத்தில் "தாவத் ஜிஜீவிஷேயம்" என்று ஜீவனத்திற்கு எல்லை சொன்னதற்குத் தகுதியாகச் சுலோகத்திற்கு அவதாரிகை அருளிச் செய்கிறார் 'பிராட்டி' என்று தொடங்கி.

தாரித்தனை அல்லது அன்பின் திறத்தில் ஊற்றம் போரா மையோ, அறிந்த பின்பு இனித் தாழ்த்தாராகிலன்றோ குற்ற மாவது' என்று, அந்தச் சிவிட்கு ஆறும்படி சிலவார்த்தைகளை விண்ணப்பம்செய்து, பின்னையும்தான், 'அவரைப் பிரிந்து பத்து மாதங்கள் ஆயினவே, இவ்வளவும் முடிந்து போகாமல் தரித்திருந்ததன்றோ தேவரும்' என்பது தனக்குக் கருத்து என்னுமிடம் தோற்ற இருந்தான் திருவடி; அதுவோ உனக்கு நினைவு! வாராய், நாட்டார்க்கு, மாதா என்றும் பிதா என்றும் உடன் பிறந்தார் என்றும் பந்துக்கள் என்றும் பலதலையாக இருக்கையாலே அன்பானது எங்கும் பாலிபாய்ந்திருக்கும்; பெருமாள் அங்ஙன் அன்றிக்கே, எல்லார்பக்கல் செய்யும் அன்பையும் என்பக்கலிலே ஒருமடையாகச் செய்து வைக்கை யாலே, எல்லாம் செய்தாலும், கடலை அணைசெய்து பகைவர் கூட்டத்தைக் கிழங்கு எடுத்துத் '**தண்ணீர் தண்ணீர்**' என்று வருகை தவிரார்; தாபத்தாலே வருந்தினவன் விடாய்ப்பட்டுப் பந்தல் ஏறவரக்கொண்டு தண்ணீர்ச்சால் உருண்டு கிடந்தால் பிழையாதாமாறு போன்று, அவர் இப்படி வரக்கொண்டு நான் இன்றிக்கே இருப்பேனாகில் பின்னை அவரைக் கிடை யாது என்று, அவருக்காக என்னை நோக்கிக் கொண்டிருந் தேன். [1] அவரைக்கண்ட பிற்றைநாள் நான் இருந்தேனாகிற் காண் நீ இவ்வார்த்தை சொல்லுவது என்றாளே அன்றோ. "**தூத**" - முன்பு, "**வாநர**" என்பதுபோன்று சொல்லிப்போந் தவள், இப்போது அவர்பக்கல் உண்டான சிவிட்கு இவ்வள வும் ஏறிப் பாய்ந்து, அவர் வரவிட வந்தவன் அன்றோ நீயும் என்றாளே அன்றோ.

வல் வினையேன் பெண்பிறந்தே மாயும்வகை அறியேன் - தன் இச்சைக்கு வசப்பட்ட மரணமாம்போது ஆண்பிறந்த சக்கரவர்த்தி வீடுமன் முதலானோர்களாக வேணுமாகாதே; [2] ஞானமுடையவர்களாதல் ஸ்வதந்திரர்களாதல் செய்யவே ணும், அறிவிலிகளான பெண் பிறந்தார்க்கு நினைத்தபடி முடியப் போமோ. (3)

---

1. 'அவரைக் கண்ட பிற்றைநாள்' என்றது, என்னை உபேக்ஷிக் கைக்கு உடலான அவருடைய மானச வியாபாரத்தை அறிந்த பிற்றைநாள் என்றபடி.

2. ஞானமுடையவர்கள் - வீடுமன் முதலானோர். ஸ்வதந்திரமுடைய வர்கள் - தசரத சக்கரவர்த்தி முதலானோர்.

## 479.

பெண்பிறந்தார் எய்தும் பெருந்துயர் காண் கிலேன்என்று
ஒண்சுடரோன் வாரா தொளித்தான் இம் மண்ணளந்த
கண்பெரிய செவ்வாய் நம் காரேறு வாராஞல்
எண்பெரிய சிந்தைநோய் தீர்ப்பார்ஆர் என்னையே ?

**பொ - ரை :**—பெண்ணைப் பிறந்தவர்கள் அடைகின்ற பெரிய துன்பத்தைக் காணமாட்டேன் என்று சூரியன் வாராமல் ஒளித்துக் கொண்டான்; இந்தப் பூவுலகத்தைத் தன் திருவடியால் அளவிட்ட, பெரிய கண்களையும் சிவந்த வாயினையுமுடைய நம் கார் ஏறு வருகின்றிலன்; எண்ணுதற்கும் முக்கதாயுள்ள மனத்தின் நோயை என்னைத் தீர்ப்பார் யார்? என்கிறாள்.

**வி - கு :**—என்று ஒளித்தான் என்க. அளந்த காரேறு என்க. பசுவைப் பாலைக் கறந்தான் என்பது போன்று, நோயை என்னைத் தீர்ப்பார் யார் என இரண்டு செயப்படுபொருள் வந்தது. அன்றி, என்னுடைய நோயைத் தீர்ப்பார் யார்? என வேற்றுமை மயக்கமாகக் கோடலுமாம்.

**ஈடு :**—நான்காம் பாட்டு. [1] கண்டார்க்குப் பொறுக்க ஒண்ணுதபடி வியசனம் செல்லாநிற்க, வரையாதே காப்பாற்றும் ஸ்ரீ வாமநனும் வருகின்றிலன்; என்னுடைய மனத்தின் துன்பத்தைப் போக்குவார் யார்? என்கிறாள்.

பெண் பிறந்தார் எய்தும் பெருந் துயர் காண்கிலேன் என்று - பரதந்திர ஜன்மம் ஆகையாலே முடிந்துபோகவும் பெறுமல், மிருதுத் தன்மையையுடையவர்களாகையாலே பிரிவும் பொறுக்கமாட்டாமல் இருக்கிற பெண்கள் அநுபவிக்கிற மஹா துக்கத்தைக் காண்கின்றிலேன் என்று. [2] சர்வரக்ஷகன் பொறுக்கு மித்தனைபோக்கிப் பாதுகாத்தலிலே ஏகதேசம் சேர்ந்தவர்களுக்குப் பொறுக்கப்போமோ? புருஷோத்த

---

1. "ஒண்சுடரோன் வாரா தொளித்தான்" என்றதனை நோக்கி, 'கண்டார்க்கு' என்று தொடங்கியும், "இம்மண்ணளந்த" என்றதனை நோக்கி 'வரையாதே' என்று தொடங்கியும், "எண்பெரிய சிந்தை நோய்" என்றதனை நோக்கி 'என்னுடைய' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

2. "இம்மண்ணளந்த" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, குறிப்புப் பொருளாக வெறுப்பிலே பாவம் அருளிச்செய்கிறார் 'சர்வரக்ஷகன்' என்று தொடங்கி. "கண்பெரிய செவ்வாய் நம் காரேறு" என்றதனைத் திருவுள்ளம் பற்றி, பாவம் அருளிச்செய்கிறார் 'புருஷோத்தமன்' என்று தொடங்கி. என்றது, பாதுகாத்தலிலே ஏகதேசம் சேர்ந்தவனுமாய், 'பலருள் ஒருவன்

மன் பொறுக்குமித்தனை போக்கிப் புருஷர்களால் பொறுக்கப் போமோ? ஒண்சுடரோன் வாராது ஒளித்தான் - [1] தன் தோற் றரவிலே எல்லாக் கிலேசங்களும் போகும்படியான பிரகாசத்தையுடையவனும் வாராதே மறைந்தான். [2] "அந்தப் பரம் பொருளிடமிருந்து உண்டான ஆணைக்குப் பயந்து காற்றானது வீசுகிறது" என்கிறபடியே, பகவானுடைய கட்டளையாலே மூப்பதுவட்டம் வரவேணுமே யன்றே, அதுவும் செய்திலன் என்பாள் 'வாராதே' என்கிறாள். இங்ஙனமிருப்பவன், 'ஈசுவரன் ஆணையை மறுத்தால் வேணுமாகில் தலையை அறுத்துவைக்குமித்தனை அன்றே, இக்கொடுமை என் கண்களால் காணப் போகாது' என்று ஈசுவரபடர் தேடி வந்தாலும் காணுதபடி மறைந்தான் என்பாள் 'ஒளித்தான்' என்கிறாள். [3] "ஒளியவன் விசும்பு இயங்கும் தேரும் போயிற்று" என்னக் கடவதன்றே. [4] அன்றிக்கே, "சுழன்றிலங்கு வெங்கதி

---

என்றுசொல்லப்படுமவனுமான சூரியனும் கூடப் பொறுக்கமாட்டாதே இருக்க, சர்வரக்ஷகனுமாய், புருஷோத்தமனுமாய் இருப்பவன் இதனைப் பொறுத்திருப்பதே! என்றபடி.

1. "ஒண்" என்ற சொல்லிற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தன் தோற்றரவிலே எல்லாக் கிலேசங்களும் போகும்படியான பிரகாசம்' என்று.

2. "பீஷா அஸ்மாத் வாதஃ பவதே"
என்பது, தைத்திரீயகோபநிடதம். 8.

நெடுங்கடல் நிற்பதும் ஞாயிறு காய்வதும் நிற்றலுங்கால்
ஒடுங்கி நடப்பதும் தண்கார் பொழிவதும் ஊழிதனில்
சுடுங்தனல் பற்றிச் சுடாதே இருப்பதும் தும்பை புனைந்து
அடுங்கன லாழி அரங்கேசர் தம்திரு ஆணையினே.

என்பது, திருவரங்கத்து மாலை.

மூப்பது வட்டம் - மூப்பது நாழிகைக்கு ஒரு வட்டம்.

3. "ஒளித்தான்" என்பதற்கு, தான் ஒளிக்கும்போது தேர் முதலான சின்னங்களை வைத்துப் போகாமல் அவற்றோடே ஒளித்தான் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி, அதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'ஒளியவன்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி. 8. 5: 2. என்றது, 'சின்னங்களை வைத்துப் போனால் மீளவும் அவற்றிற்காக வரவேண்டி இருக்கும், அப்போது பெண் பிறந்தார் தன்பத்தைக் காணவேண்டி வரும்' என்று அவற்றையும் கொண்டு ஒளித்தான் என்றபடி.

4. "ஒளித்தான்" என்பதற்கு, வேறும் ஒரு கருத்தும், அதற்குப் பிரமாணமும் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. "சுழன்றிலங்கு" என்பது, பெரிய திருமொழி. 9. 4: 6.

ரோன் தேரோடும் போய்மறைந்தான்", [1] "அந்தத் தூசியும் காணப்படவில்லை" என்பனபோன்று, வரவுக்கு அறிகுறியும் காண ஒண்ணாதபடி மறைந்தான் என்னுதல்.

இம் மண்அளந்த - [2] இந்தப் பூமிக்கு என்ன துயர் உண்டாக அளந்து கொண்டான். [3] பூமிக்கு மஹாபலியால் உண்டான இடரினளவோ எனக்கு இரவால் உண்டான இடர்? [4] வரையாமல் எல்லாரையும் காக்குமவன். கண் பெரிய செவ்வாய் நம் கார் ஏறு வாரானால் - கிருபையால் பெரியனாய்ப் பூமியை அளந்து, பூமியிலுள்ளார் இடர் போகும்படி குளிரக் கடாக்ஷித்து, அதனால் உண்டான பிரீதியின் மிகுதி தோற்றப் புன்முறுவல் செய்கையாலே சிவந்த அதரத்தை யுடையவனான நம் கார்ஏறு வருகின்றிலன். எல்லார் விஷயமாகச் செய்யும் ரக்ஷணத்தையே இயல்பாகவுடையவன்என்பாள்"நம்"என்கிறாள். சர்வரக்ஷகனுடைய காக்கப்படும் பொருள்களில் தானும் சேர்ந்தவள் ஆகையாலே[5] 'நம்' என்கிறாள் என்பது கருத்து. இவற்றைக் காப்பாற்றுகையாலே தன் நிறம் பெற்றிருப்பவன் என்பாள் 'கார்' என்கிறாள். 'அது தன் பேறு' என்னுமிடம் தோற்ற மேனாணித்திருப்பவனாதலின் 'ஏறு' என்கிறாள். இரக்கவேண்டா, அளக்கவேண்டா, வடிவைக் காட்ட அமையும் என்பாள். 'வாரானால்' என்கிறாள். இனி, 'என் கார் ஏறு' என்று பாடமானபோது, பண்டு என்னோடே கலந்ததனாலே தன்நிறம்பெற்று மேனாணித்திருந்தவன்என்று பொருள் கூறுக. [6] எண் பெரிய சிந்தை நோய் - "எவன் அறியாதவனாக எண்ணுகிறானோ அவன் அறிந்தவன், எவன் அறிந்தவனாக எண்ணுகிறானோ அவன் அறியாதவன்" என்கிற

---

1. "தூரீபூதோ ஹரிஃ யேந ஸஃ அபி ரேணுஃ ந லக்ஷ்யதே" என்பது, விஷ்ணுபுரா. 5. 18 : 31.

என்றது, வருவதற்குச் சூசகமும் காண ஒண்ணாதபடி மறைந்துவிட்டான் என்றபடி.

2. "இ" என்ற சுட்டுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இந்தப் பூமிக்கு' என்று தொடங்கி.

3. மஹாபலியால் பூமிக்குத் துயர் உண்டே? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பூமிக்கு' என்று தொடங்கி.

4. "மண்ணளந்த" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வரையாமல்' என்று தொடங்கி.

5. "நம்" என்பது, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

6. "எண்பெரிய" என்றது, எண்ணுக்கு அகப்படாத என்றபடி.

"யஸ்யஅமதம் தஸ்ய மதம்...அவிஜ்ஞாதம் விஜாநதாம்"
இது, கேநஉபநிடதம்.

ப்படியே, வேதாந்தங்கள், நிலம் அன்று என்று மீண்ட பகவத் விஷயத்தை, [1]இத்தனை போதும் பேசினார்; தம்முடைய சிந்தை யின் வியாகுலம் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஞானத் துக்கும் அறிய முடியாததாயிருந்தது. 'எண் பெரியது' என்னு மித்தனை, 'இவ்வளவு' என்னப் போகாது. [2]பிரிந்த விஷயத் துக்குத் தக்கதாய் அன்றே சிந்தையின் வியாகுலம்தான் இருப்பது, அதற்கு ஒரு முடிவு இல்லையே. [3]"கண்ணனை அடையப் பெறுமையால் பெருந் துன்பத்தை அடைந்தவளாய் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கினவள்" என்றாற்போலே.

சிந்தை நோய் தீர்ப்பார் ஆர்-[4]மனத்தின் துன்பம் போமித் தனையே வேண்டுவது, அவனை மறக்கவும் அமையும். [5]"ஏது செய்தால் மறக்கேன்" என்னுமவர்கள் அலரோ இவர்கள் தாம், [6]அவனை மறக்கவுமாம் நினைக்கவுமாம், துன்பம் போமித் தனையே வேண்டுவது. இப்போது 'மறக்கவும் அமையும்' என் றது, மறத்தல் உத்தேச்யமாகச் சொன்ன வார்த்தை அன்று; ஒடுகிற துன்பத்தின் மிகுதியைச் சொன்னபடியேயாம். [7]பிரிவு நிலையில் நினைவுதான் மிகுந்த ஆற்றுமைக்குக் காரணமாய்

---

1. 'இத்தனைபோதும் பேசினார்' என்றது, "இம்மண்ணளந்த" என் பது முதலாகப் பேசினார் என்றபடி.

2. "எண்பெரியது" என்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிந்த விஷயத்துக்கு' என்று தொடங்கி. 'அதற்கு' என்றது, எல்லாப் பிரகாரத்தாலும் வேறுபட்டதான பகவத் விஷயத்துக்கு என்றபடி.

3. விஷயத்துக்குத் தகுதியாக இருக்கும் துன்பம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கண்ணனை' என்று தொடங்கி.

"தச்சித்த விமலாஹ்லாத கூநீண புண்ய சயா ததா
ததப்ராப்தி மஹாதுக்க விலீநா ஸோஷ பாதகா."
"சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம்
நிருச்வாஸதயா முக்திம் கதா அந்யா கோபகந்யகா."

என்பன, விஷ்ணுபுரா. 5. 13: 21-22.

4. மனத்தின் துன்பம் அவனை மறந்தால் ஒழியத் தீராதே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மனத்தின் துன்பம்' என்று தொடங்கி.

5. மறத்தல் உத்தேசியமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிறார் 'ஏது செய்தால்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி.

6. "ஏது செய்தால் மறக்கேன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய் கிறார் 'அவனை மறக்கவுமாம்' என்று தொடங்கி.

7. மறத்தல் தேட்டமாகைக்கு, நினைவுதான் அப்படித் தக்கரூபமாய் இருக்குமோ? என்ன, 'பிரிவு நிலையில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இருக்குமே அன்றே. [1]"கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்", "காட்டேன்மின் நும்முரு என் உயிர்க்கு அது காலன்", என்னக்கடவ வன்றே. என்னையே - [2]இவள் ஒருத்திக்குமே உள்ளது ஒரு வியசனமாயிற்று; ஆதலின், 'என்னையே' என்கிறாள். நாட்டார் நினைத்துத் துக்கங்களைப் போக்கிக்கொண்டு போகாநின்றார்களே அன்றே, [3]சாதன புத்தியாக இழிந்தவர்கட்கு அது செய்யலாமிறே, [4]"தியானிக்கக் கடவன்" என்று நினைவு தன்னையே விதியாகின்றதே அன்றே; [5]அவனுடைய படியிலே இழிந்தார்க்கே அன்றே இது உள்ளது. (4)

## 480.

**ஆர்என்னை ஆராய்வார்? அன்னையரும் தோழியரும்**
**நீர்என்னை என்னுதே நீளிரவும் துஞ்சுவரால்**
**கார்அன்ன மேனிநம் கண்ணனும் வாராஎல்**
**பேர்என்னை மாயாதால் வல்வினையேன் பின்நின்றே.**

**பொ - ரை:**—தாய்மார்களும் தோழிமார்களும் இவள் தன்மையாதாக இருக்கின்றது என்று ஆராயாமல், நீண்ட இரவு முழுதும் தூங்குகின்றார்கள்; மேகம்போன்ற நிறத்தையுடைய நம் கண்ணபிரானும் வருகின்றான் இலன்; என்னை ஆராய்கின்றவர்கள் யாவர்? கொடிய தீவினையேனைப் எனக்குப் பின்னே நின்று பெயரானது என்னை முடிய ஒட்டுகின்றது இல்லை என்கிறாள்.

---

1. பிரிவு நிலையில் நினைவு ஆற்றுமைக்குக் காரணம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "கண்ணன்" என்று தொடங்கி. இது, திருவாய். 9. 5: 8. "காட்டேன்மின்" என்பது, திருவாய். 9. 5: 7.

2. "என்னையே" என்ற ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவன்' என்று தொடங்கி. அல்லாதார்க்கு அது இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாட்டார்' என்று தொடங்கி.

3. தமக்கும் அப்படிச் செய்ய ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சாதன புத்தியாக' என்று தொடங்கி.

4. நினைவிற்குச் சாதனத்வம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தியானிக்க' என்று தொடங்கி.

5. 'அவனுடைய' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, பிராப்பிய புத்தியாக இழிந்தவர்கட்குத் தரித்திருக்கப் போகாது என்றபடி. அவனுடைய படி - அவனுடைய திவ்வியமங்கள விக்கிரஹம். விக்கிரஹ அநுபவம் செய்பவர்களுக்கு என்றபடி. இது உள்ளது - நினைவு துன்பத்துக்குக் காரணமாகிற தன்மை உள்ளது.

வி-சு :—தீர் - நீர்மை ; தன்மை. தஞ்சுவர் வாரான் ஆதலால், என்னை ஆராய்வார் ஆர்? என்க. வல்வினையேன் பின் நின்று பேர் என்னை மாயாது என்க. மாய்தல் - மறைதல், அழிதல்.

ஈடு :—ஐந்தாம்பாட்டு. ஆபத்தில் உதவும் அன்னையரும் தோழியரும் ஆராயகின்றிலர்கள் ; அவர்கள் உதவாதபோது உதவும் கிருஷ்ணனும் வருகின்றிலன் ; பெயரளவில் நிற்கின்ற வள் ஆனேன் என்கிறாள்.

என்னை ஆராய்வார் ஆர் - [1] "பலம் இல்லாத நான் இங்கு இராவணனுடைய வேலைக்காரிகளுடைய குற்றங்களைப் பொறுக்கிறேன்" என்கிறபடியே, திருவடி சென்று அரக்கியர்களை நலியப்புக, இவர்கள் இராவணன் சோறுண்டு வாழ்ந்து பரதந்திரப்பட்டவர்களாகையாலே என்னை நலிந்தார்களாகில், தங்களாலே வந்தது ஒன்று அன்றாகில், அதுதனக்கு நாமும் 'பொறுத்தோம்' என்று நேர்த்தரவு கொடுத்தபின்பு இனி இவர்களை நலிகிறது என்? என்ன, 'இராவணனும் பட்டானாகில் நம்மை பலநாட்கள் நலிந்துபோந்த இப் பெண்பையல்களை இப்போது பொறுக்கவேண்டுகிறது என்?' என்ன, "துர்பலா - 'சிலர் நம்மை நலிந்தார்கள்' என்று நாம் அவர்களை நலியப்புக்கால், அப்போதே அவர்கள் கண்குழிவு காணமாட்டாதார் பின்பு செய்வது என் பொறுக்காமல்." [2] இராவணனும் பட்டு, பெருமாளும் வெற்றியினையுடையரான பின்பு, இனி இது ஒழிய வேறு ஒரு தெளர்பல்யம் இல்லையே அன்றே. ஆக, இப்படித் தன்னை நலிந்த அரக்கியர்களையும், நீங்கள்

---

1. வியாக்யாதாவின் ஈடுபாடு, 'பலம் இல்லாத நான்' என்றது முதல், "'ஆர் என்னை ஆராய்வார்' என்கிறாளே அன்றே" என்றது முடிய.

"பிராப்தவ்யம் து தத்தாயோகம் மயாஏதத் இதி நிஸ்சிதம்
தாஸீநாம் ராவணஸ்ய அஹம் மர்ஷயாமி இஹ துர்பலா"

என்பது, ஸ்ரீராமா. யுத். 116 : 40.

கம்பராமாயணம் யுத்தகாண்டம் மீட்சிப்படலம் 32-முதல் 37-முடிய உள்ள செய்யுட்களை இங்குக் காணல் தகும். நேர்த்தரவு-செல்லுச்சீட்டு. 'இராவணனும் பட்டானாகில்' என்றது, இராவணனாலே தேவரீருக்கு நலிவுவாராமல் இருப்பதற்காக முன்பு இவர்களை நலியாமல் விட்டேன் என்றபடி.

2. "துர்பலா" என்றால், மனோபலம் இல்லாமை என்று ஆகவேண்டுமோ? சரீரவலி இன்மையைச் சொன்னதாகக் கொண்டால் என்னை, எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராவணனும்' என்று தொடங்கி. 'இது' என்றது, மனவலி இன்மையை.

அஞ்சாதே கொள்ளுங்கோள் என்று [1] "உங்களை நான் காப் பாற்றுகிறேன்" என்னக்கூடிய அவள், இப்போது, தன்னை ஆராய்வார் தேட்டமாய், 'ஆர் என்னை ஆராய்வார்' என்கி றாளே அன்றே. அன்னையரும் தோழியரும் - என் நிலையைக் கண்டு என்னைப் போன்றே [2] உறக்கத்தைத் துறந்தவர்க ளோடு, 'உறக்கம் துறக்கக்கூடாது' என்று விலக்குகின்றவர் களோடு வாசி அற ஒக்க எடுக்கும்படியாய் வந்து விழுந்தது. என்றது, என் நினைவே நினைவாய் இருக்குமவர்களோடு தங்களுக்கு என்ன ஒரு நினைவுண்டாய் நியமிக்கத் தக்கவர்க ளோடு வாசி அற்றது என்றபடி. அன்னையரும் தோழியரும் நீர் என்னை என்னுதே நீள் இரவும் துஞ்சுவர் - [3] அன்னையரும் தோழியருமான நீங்கள், என்பட்டாய் என்னுதே, நீள் இரவும் துஞ்சுதிர் என்று சொல்லுவாரும் உளர். அன்றிக்கே, அன்னை யரும் தோழியரும் இது ஒரு நீர்மை இருக்கும்படியே! என்னே! என்னுமல், நீள் இரவும் துஞ்சுவார்கள் என்னுதல். என்றது, அவன், தன்னைப் போகட்டுப்போய் வேறு சிலவற்றில் போது போக்கித் தன்னை நினையாமலே இருக்கச் செய்தேயும், தான் அவனை ஒழியப் போது போக்கமாட்டாதே இருப்பதே! இது ஒரு நீர்மையே! என்னே ஆச்சரியம்! என்று இப்படிச் சொல் லாமல் தூங்குவர்கள் என்றபடி. [4] "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" என்புழிப் போன்று,

---

1. "ததஃஸா ஹ்ரீமதீ பாலா பர்த்துஃ விஜயஹர்ஷிதா
அவோசத் யதி தத்தத்யம் பவேயம் ஶரணம் ஹி வஃ"
என்பது, ஸ்ரீராமா. சுந். 58 : 90.

2. உறக்கத்தைத் துறந்தவர்கள் - தோழிமார்கள். விலக்குகின்றவர்கள் - தாய்மார்.

3. "அன்னையரும் தோழியரும் நீர் என்னை என்னுதே துஞ்சுவர்" என்பதற்கு, இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருள், அன்னையரும் தோழியருமான நீங்கள் என்னே என்னுமல் நீள் இரவும் தூங்கு கின்றீர்கள் என்பது. நீர் - நீங்கள். என்னை - என்னே! இரண்டாவது பொருள், அன்னையரும் தோழியருமான அவர்கள் இது ஒரு நீர்மையே! இது ஒரு நல்ல சுபாவம் இருக்கும்படியே! என்னுமல், நீள் இரவும் தூங்குவார்கள் என்பது. நீர்-நீர்மை. முதற்பொருளில், முன்னிலைப்பெயர். இரண்டாவது பொருளில், பண் புப்பெயர். இவ்விருவகைப் பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'அன்னையரும்' என்று தொடங்கி.

4. "நீர்" என்பது, நீர்மை என்ற பொருளில் வருவதற்கு மேற்கோள் காட்டுகிறார் "நிறைநீர" என்று தொடங்கி. இது, திருக்குறள். 782.

ஈண்டும் 'நீர்' என்பது, நீர்மை என்ற பொருளில் வந்தது. எனக்கு உறங்காமையே தன்மையாம்படி, நெடிதான இரவு முழுதும் அவர்களுக்கு உறங்குகையே தன்மையாய்விட்டது என்பாள் 'நீள் இரவும் துஞ்சுவர்' என்கிறாள்.

கார் அன்ன மேனி நம் கண்ணனும் வாரானால் - ஒரு நீர்ச் சாவியிலே ஒருபாட்டம் மழைபெய்தாற்போலே குளிரும்படியான வடிவையுடையனுமாய், [1] "அந்தக் கோப ஸ்திரீகளுக்கு மத்தியில் வந்து தோன்றினன்" என்கிறபடியே, முன்பு உதவிப்போந்தவனும் வருகின்றிலன். [2] "தாஸாம் - அந்தப்பெண்களுக்கு" என்றது, அவர்கள் பூர்வ அவஸ்தையைப் பற்றியே அன்றே. பெண்களுக்கு உதவிப் போந்தவனும் வருகின்றிலன் என்பாள் 'நம் கண்ணனும் வாரானால்' என்கிறாள். பேர் என்னை மாயாதால் - அவனோடு ஒத்திருக்கின்றதே! பேரும். [3] அவன் வருகின்றிலன், இது போகிறதில்லை. [4] நான் காரியத்திலே முடிந்தேனுயிருக்கச்செய்தேயும் 'இன்னுள், இன்னுள்' என்கிற இப் பெயர் என்னை முடிந்தேனாக ஒட்டுகிறது இல்லை. [5] ஆழ்வாருடைய திருநாமம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் சத்தைக்குக் காரணமாக இருப்பது போன்று அவர் தமக்கும் சத்தைக்கு ஏதுவானபடி. [6] அடியுடைய பெயர் ஆகையாலே

---

1. "நம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அந்தக் கோப ஸ்திரீகளுக்கு' என்று தொடங்கி.

"தாஸாம் ஆவிரபூத் சௌரிஃ ஸ்மயமான முகாம்புஜஃ
பீதாம்பரதரஃ ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மன்மத மன்மதஃ"

என்பது, ஸ்ரீ பாகவதம். 10 : 32.

2. அவன் உதவும்படி அவர்களுக்குத் துன்பம் உண்டோ? என்ன, 'தாஸாம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. அவனோடு ஒத்திருக்கையாவது எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் வருகின்றிலன்' என்று தொடங்கி.

4. போகாமல் செய்கிறது தான் யாது? என்ன, 'நான் காரியத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "பேர் என்னை மாயாதால்" என்றதற்கு, சுவாபதேசப்பொருள் அருளிச்செய்கிறார் 'ஆழ்வாருடைய திருநாமம்' என்று தொடங்கி.

6. தம்முடைய திருநாமம் தம்முடைய சத்தைக்கும் காரணமாயினவாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியுடைய' என்று தொடங்கி. அடியுடைய பெயர் - திருவடிகளினுடைய பெயர்; சடகோபன் என்பது, பாக்கியமுடைய பெயர் என்பது வேறும் ஒருபொருள். இதனுடைய - ஆழ்வார் திருநாமத்தினுடைய.

எல்லார்க்கும் தாரகமாக இருக்குமே. இதனுடைய அடியுடை மையே அன்றே எல்லாரும் தலைமேல் தாங்குவது. பேர் என்னே மாயாதால் - பெயர் அளவில் நிற்கின்றவள் ஆனேன் என்றபடி. வல்வினையேன் - நான் முடியச்செய்தேயும் என்னே முடிந்தேன் ஆகாதபடி செய்யும்படியான பெயரைப் படைக் கக்கூடிய மஹாபாவத்தைச் செய்தேன். பின் நின்று - நான் முடியச் செய்தேயும் இப்பெயரானது எனக்குப் பின்னும் நின்று முடிந்தேனாக ஒட்டுகிறது இல்லை. [1] வருகிறபோது ஒருசேர வந்தால், போகிறபோதும் ஒருசேரப் போகவேண் டாவோ. [2] "பெயர்களையும் உருவங்களையும் உண்டுபண்ணக் கடவேன்" என்றும், "தேவர்கள் முதலான எல்லாப் பிராணி களுக்கும் பெயர்களையும் உருவங்களையும் அந்தப் பரமாத்மா முதலில் செய்தருளினர்" என்றும் ஒக்கச் சொல்லக்கடவ தன்றே. [3] முற்பட வந்தார்க்கு முற்படப் போகவேண்டி இருக்க, பிற்படவும் போகலாகாதோ? (5)

## 481.

**பின்நின்ற காதல்நோய் நெஞ்சம் பெரிதடுமால்**
**முன்நின்று இராஊழி கண்புதைய மூடிற்றால்**
**மன்நின்ற சக்கரத்தெம் மாயவனும் வாராஞல்**
**இந்நின்ற நீளாவி காப்பார்ஆர் இவ்விடத்தே?**

**பொ - ரை:**—விடாது பின்தொடர்ந்து நிற்கின்ற காதலாகிய நோயானது என்மனத்தினே மிகவும் வருத்தாநிற்கின்றது, இரவாகிய ஊழிக்காலமானது முன்னே நின்று கண்களின் ஒளி மறையும்படி மூடி விட்டது, நிலைத்து நிற்கின்ற சக்கரத்தையுடைய எம் மாயவனும் வரு

---

1. தான்போனால் பெயர் நிற்க ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வருகிறபோது' என்று தொடங்கி.

2. வருகிறபோது ஒருசேர வந்ததோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பெயர்களையும்' என்று தொடங்கி.

"அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" என்பது, சாந்தோக். 6 : 3.

"நாம ரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம்
வேத ஶப்தேப்ய ஏவ ஆதௌ தேவாதீநாம் சகார ஸஃ"

என்பது, விஷ்ணுபுரா. 1. 5 : 63.

3. "பின்நின்றே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'முற்பட வந்தார்க்கு' என்று தொடங்கி.

கின்றிலன்; இந்த நிலையில் நிற்கின்ற நீண்ட உயிரை இவ்விடத்திலே காப்பவர்கள் யாவர்? என்கிறாள்.

**வி - கு:**—இரா ஊழி முன்நின்று புதைய மூடிற்று என்க. இவ்விடத்து நீள் ஆவியைக் காப்பவர் ஆர்? என்க.

**ஈடு:**—ஆரும்பாட்டு. [1]விரஹத்துன்பமும் செல்லாநிற்க, இரவுமாய் ரக்ஷகனுனவனும் வாராது ஒழிந்தால் முடியப் பெறுத உயிரைக் காப்பார் ஆர்? என்கிறாள்.

பின் நின்ற காதல் நோய்-[2]புக்க இடம் புக்கு வடிம்பிட்டு நலி கிற காதல் நோயானது. இடைந்து ஒதுங்குகைக்கு ஒரு நிழல் இல்லாதபடி இருக்கை. நெஞ்சம் பெரிது அடும் - நெஞ்சினை மிகவும் நோவுபடுத்தாநின்றது. [3]நெருப்பானது சுருணையை வேவச்செய்து, பின்பே அன்றே புறம்பே சென்று சுடுவது; அப்படியே, தான் கிடக்கும் இடத்தை மிகவும் நலியாநின்றதா யிற்று. இராஊழி முன்நின்று கண்புதைய மூடிற்று - [4]காதல் நோயும் இரவாகிய கல்பமும் தம்மிலே சங்கேதித்துக்கொண்டு வந்தாற்போலே இராநின்றது. [5]'நான் பின்னிட்டு வருகி றேன், நீ முன்னே தப்பாமல் சூழ்ந்துகொள்' என்று வரு வாரைப் போன்று வந்தன என்றபடி. [6]எதிரிகள் எளியரா னால் அவர்கள்கைகளில் விற்களைப்பறிப்பது பரிகசிப்பதாய்க்

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "பின்நின்ற" என்பதற்கு, போன இடம் எங்கும் பின்தொடர்ந்து நிற்கிற என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச் செய்கிறார் 'புக்க இடம்' என்று தொடங்கி. வடிம்பிடுதல் - அடிமேல் அடி இடுதல். "நின்ற" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் "இடைந்து" என்று தொடங்கி. இடைதல் - விலகுதல்.

3. நோயானுல் சரீரத்தை வருத்திப் பின்பன்றே நெஞ்சை வருத்த வேண்டும்? என்ன, 'நெருப்பானது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "பின்னின்ற காதல்நோய்" என்றதனையும் சேர்த்துக்கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'காதல் நோயும்' என்று தொடங்கி.

5. சங்கேதம் எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நான் பின்னிட்டு' என்று தொடங்கி.

6. கிரஹிக்கின்ற கண்களாகிய இந்திரியத்தைக் கிரஹிக்கப்படுகின்ற பொருள் மறைத்தல் என்பது எப்படி? என்ன, ஒரு திருஷ்டாந்த முகத்தால் அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எதிரிகள்' என்று தொடங்கி.

கொண்டு பரிபவஞ்செய்வாரைப் போன்று [1] இத்தலையில் எளிமை கண்டு இரவாகிய ஊழி, முன்னே நின்று கண்களை மறையாநின்றது. [2] உட்கண்ணினைக் காதல் மறையாநின்றது, கட்கண்ணை இரவு மறைத்தது. அறிகின்றதுமாய்ப் பிரகாசமுமாய் இருக்கின்ற கண் இந்திரியத்தை, அறியப்படுகின்ற பொருளான இருள் வந்து மூடாநின்றது என்பாள் '**கண் புதைய மூடிற்றுல்**' என்கிறாள். அன்றிக்கே, இருளினை ஒத்த நிறத்தினையுடையவன் வந்து முன்னே நின்றாலும் காண ஒண்ணாத படி, இரவாகிற ஊழி கண்களை மறையாநின்றது என்னலுமாம்.

மன் நின்ற சக்கரத்து எம் மாயவனும் வாராஞல் - [3] "எப்போதும் கைகழலா நேமியான்" என்கிறபடியே, அடியார்கட்குப் பகைவர்கள் உண்டான போதாக ஆயுதம் எடுக்கப் பார்த்திராமல், எப்போதும் ஒக்கக் கையிலே விடாதே கொண்டிருப்பவனுதலின், '**மன் நின்ற சக்கரம்**' என்கிறது. [4] பிரகாசத்தையுடைய பொருளை இட்டு இருளை அழைக்கவல்ல ஆச்சரியத்தையுடையவனுதலின் '**மாயவன்**' என்கிறது. இதனால், போக்குகின்ற பொருளைக் கொண்டு, போக்கப்படுகின்ற பொருளை அழைக்குமவனுக்கு, போக்குகின்றபொருளைக்கொண்டு போக்கப்படுகின்ற பொருளைப் போக்குவிக்கத் தடை உண்டோ? என்பதனைத் தெரிவித்தபடி. [5] இங்குச் சங்கல்பம் அழிய

---

1. 'இத்தலையில் எளிமை' என்றது, தலைவனைப் பிரிந்து துக்கத்தோடுகூடி இருக்கின்ற எளிமையைத் தெரிவித்தபடி.

2. "நெஞ்சம் பெரிதடுமால்", "கண்புதைய மூடிற்றுல்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'உட்கண்ணினை' என்று தொடங்கி.

3. "எப்போதும் கை கழலா" என்பது, பெரிய திருவந்தாதி. 87.

4. பிரகாசத்தையுடைய பொருளை இட்டு இருளை அழைத்தது, பாரதத்தில் பதினுன்காம் போரில்.

> பாராழி அவலமறப் பாண்டவர்தம் இடர்தீரப் பார்த்தன் வாழப்
> போராழி அறிதுயிலும் பெருமிதமும் உடன்மறந்து பிறந்த மாயோன்
> ஓராழி எழுபரித்தே ருடையானை மாயையினுல் ஒழிக்கத் தன்கைக்
> கூராழி பணித்தலுமக் களம்போலச் சிவந்தனவக் குடபால் எங்கும்.

என்பது, வில்லிபாரதம்.

5. "மன்னின்ற சக்கரத்து எம் மாயவன்" என்பதற்கு, பிரகாசத்தையுடைய பொருளைக்கொண்டு இருளை அழைக்கவல்ல ஆச்சரிய பூதன் என்று மேலே ஒரு கருத்து அருளிச்செய்தார். இப்பொழுது, 'ஆயுதம் எடேன்' என்று கூறிவைத்துப் பின்னர் வீடுமனை அழிப்பதற்காக ஆயுதத்தை எடுத்த ஆச்சரியத்தையுடையவன் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்யத்

வேண்டா; வருவதாக நினைக்க அமையும்.[1] "என்னுடைய இச்சையினாலே அவதரிக்கிறேன்" என்கிறபடியே, வருவதாக நினைக்க அமையும் என்றபடி. [2] 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுக்கையும், பிரகாசத்தையுடைய பொருளை இட்டு இருளைப் போக்கக்கடவது என்கிற மர்யாதையைக் குலைக்கையுமாகிற இவை வேண்டா, தான் வர அமையும்; போக்குகின்ற பொருளின் தன்மையினாலே போகின்ற பொருள் தன்னடையே போகும். [3] இவ்விடத்தே இந் நின்ற நீள் ஆவி காப்பார் ஆர்-முடிய வேண்டுமளவிலே நாறேபிராயமாக இருக்கிற இவ்வாத்மாவை முடித்து நோக்குவார் ஆர்? [4] "இவன் வெட்டத்தகாதவன், இவன் கொளுத்தத்தகாதவன், நினைக்கத்தகாதவன், வாட்டத்தகாதவன்" என்கிற வசனத்தைக்கொண்டு நின்று வழக்குப்பேசாநின்றதாயிற்று ஆத்மவஸ்து. [5] இதனை முடித்து நம்மை நோக்குவார் ஆர்? என்கிறது என்று இப்படி முறுகச்

---

திருவுள்ளம்பற்றி, "வாராஞால்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இங்கு' என்று தொடங்கி. 'சங்கல்பம் அழியவேண்டா' என்றது, சங்கல்பத்தையும் அழித்து ஆயுதத்தை எடுத்தலாகிற முயற்சியும் வேண்டா என்றபடி. 'நினைக்க அமையும்' என்றது, வருவதற்குத் தன் இச்சையே ஒழிய வேறு ஒரு வருத்தமும் இல்லாமையைத் தெரிவித்தபடி.

1. இச்சை காரணமாக அவன் வருவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

"அஜோபிஸந் அவ்யயாத்மா பூதாநாம் ஈஸ்வரோபி ஸந்
ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா"

என்பது, ஸ்ரீ கீதை. 4: 6.

2. "மன்னின்ற சக்கரத்து எம்மாயவன்" என்பதற்கு, மேலே அருளிச்செய்த இரண்டு கருத்துக்களையும் நிகமிக்கிறார் 'ஆயுதம் எடேன்' என்று தொடங்கி. வந்தால் போதியதாமோ? இருளைப் போக்கவேண்டாவோ? என்ன, 'போக்குகின்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "இவ்விடத்தே" என்பது, இந்த நிலையிலே என்றபடி. "நீள்" என்பதற்குப் பொருள், 'நாறே பிராயமாக இருக்கிற' என்பது.

4. "நீள் ஆவியாய்க் கொண்டு நின்ற" என்றதனால், பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இவன் வெட்டத் தகாதவன்' என்று தொடங்கி.

"அச்சேத்யோ அயம் அதாஹ்யோ அயம் அக்லேத்யோ
[அஶோஷ்ய ஏவச
நித்யஸ் ஸர்வகதஸ் ஸ்தாணுர் அசலோ அயம் ஸநாதநஸ்"

இது, ஸ்ரீ கீதை. 2: 24.

5. "நீள் ஆவி காப்பார் ஆர்" என்பது, இதனை முடித்து நோக்குவார் யார் என்னும் பொருளைக் காட்டுமோ? என்ன, பொருளாற்றலால் இப் பொருள், சித்திப்பதாம் என்று கொண்டு அதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இதனை முடித்து' என்று தொடங்கி. உயிர்ப்பதை - பிழைத்திருக்கிற பதை.

சொன்னது தன்னை, இச்சொல்லுக்குக் கருத்துரையாக ஒரு தமிழ்ப் புலவன் இட்டு வைக்கிறான் 'பிரிவிலும் முடியாத என்னுயிர்ப் பகையை நீக்கி, என்னை நோக்குவார் ஆர்' என்று. இவ்விடத்தே - [1] சர்வரக்ஷகனுனவனும் உதவாத இந்த நிலையிலே இனி முடிந்து பிழைத்தலே அன்றே சுகம். (6)

## 482.

காப்பார் ஆர் இவ்விடத்து? கங்கிருளின் நுண் துளியாய்ச்
சேட்பால தூழியாய்ச் செல்கின்ற கங்குல்வாய்த்
தூப்பால வெண்சங்கு சக்கரத்தன் தோன்றுலால்
தீப்பால வல்வினையேன் தெய்வங்காள்! என்செய்கேனே?

பொ - ரை:—இத்தச்சமயத்தில் காப்பவர்கள் யார்தாம்? செறிந்த இருளோடும் நுண்ணிய துளிகளோடும் நெடுமையினையே இயல்பாகவுடைய ஊழிக்காலமாகிச் செல்கின்ற இந்த இரவுக்காலத்தில், பரிசுத்தமான தன்மையுடைய வெண்மை நிறம் பொருந்திய சங்கையும் சக்கரத்தையுமுடைய என்தலைவன் தோன்றுனல்; தீயின் தன்மையையுடைய கொடிய வினைகளைச் செய்த என்னுடைய தெய்வங்களே! நான் என் செய்வேன்? என்கிறாள்.

வி - கு:—கங்கு - கரை. இருளோடும் பனித்துளியோடும் ஊழியாகச் செல்கின்ற கங்குல் என்க. தூ - பரிசுத்தம். தீ - நெருப்பு. பால - தன்மையையுடைய. பால் - தன்மை.

ஈடு:—ஏழாம்பாட்டு. [2] இரவுப்பொழுதாகிற யுகம் செல்லாநிற்க அவன் வந்து தோற்றுமையாலே, கண் மூடாதவர்கள் ஆகையாலே உறங்காத தெய்வங்களைக் குறித்து, நான் என் செய்வேன்? என்கிறாள்.

இவ்விடத்துக் காப்பார் ஆர் - [3] எல்லாரையுங் காக்கின்றவனை வன் காவாதிருக்க, இவ்வளவில் பாதகர் ஆனர் காக்கின்

---

1. இப்படியாகிலும் ஆத்மாவை முடிக்கத் தேடுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வரக்ஷகனுனவனும்' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. சக்கரத்தன் தோன்றுனல், செல்கின்ற கங்குல்வாய் இவ்விடத்துக் காப்பார் ஆர் என்று கூட்டி க்ஷேபம் தோன்ற, பாவம் அருளிச்செய்கிறார் 'எல்லாரையும்' என்று தொடங்கி.

றவர் ஆகவோ. [1] பாதுகாக்கின்றவன் வரவு தாழ்த்தாலும் இப்புத்தி பிறவாதிருக்கக்கூடிய இவள் இப்போது 'காப்பார் ஆர்' என்று இவ்வார்த்தை சொல்லும்படி காணும் இவளுக்குப் பிறந்த நிலைமை. [2]" சரைஸ்து ஸங்குலாம் கிருத்வா லங்காம்-திருவடி, பிராட்டியைப் பார்த்து 'பெருமாள்பக்கல் இனி எழுந்தருள அமையாதோ?' என்ன, இராக்ஷசர்கள் நெருங்கியிருக்கிற இதனை இராமசரம்நிறைவுற்றதாக்கிக்காண்கம் போவது, வேற்றுமனிதர் முகத்தில் விழித்துப்போகவோ? பரபுரார்த்தஸ்-அவரோடே பகைகொண்டு இதற்குமுன்னர் உய்ந்துபோனதும் ஒரு படைவீடு உண்டோ? மாம் நயேத்யதி -[3] " நயாமி பரமாம் கதிம்-மேல்கதிக்குக் கொண்டுபோகிறேன்" என்கிறவர் இரண்டு வார்த்தை சொல்லுவரோ? காகுஸ்த்த:— இந்திரனுடைய பகைவர்களையும் போக்குங்குடியிலே பிறந்தவர் தம் காரியத்தில் சோர நிற்பரோ? தத் தஸ்ய சத்ருசம் பவேத்-[4] அவர்க்குத் தகுதியாகவுள்ளவற்றைச்செய்து

---

1. சர்வேசுவரன் ரக்ஷகனாக இருக்க, "காப்பார் ஆர்" என்னலாமோ? என்ற சங்கையிலே அருளிச்செய்கிறார் 'பாதுகாக்கின்றவன்' என்று தொடங்கி. 'இப்புத்தி' என்றது, "காப்பார் ஆர்" என்கிற புத்தியை.

2. ரக்ஷகன் வரவு தாழ்த்தாலும் இந்தப் புத்தி பிறவாமல், 'அவனே ரக்ஷகன்' என்று அறுதியிட்டிருந்தாளோ? என்ன, 'இருந்தாள்' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சரைஸ்து சங்குலாம்' என்று தொடங்கி.

ஸரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபுரார்த்தஸ:
மாம் நயேத் யதி காகுஸ்த்த: தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 39 : 30. பிராட்டி திருவடியைப் பார்த்துக் கூறியது.

'இனி எழுந்தருள அமையாதோ' என்றவிடத்தில், 'இனி' என்றதற்குக் கருத்து, திருவடி, சிறிய உருவத்தோடு நின்று 'பெருமாள்பாடு ஏற வாரும்' என்ன, 'நீ இருக்கிற இவ் வாகாரத்தாலே எப்படிக் கொண்டு போவாய்' என்ன, விஸ்வரூபத்தைக் காட்டி 'இனி, எழுந்தருள அமையாதோ? என்கிறான் என்பது.

3. "மாம் நயேத்யதி - என்னைக்கொண்டுபோவாராகில்" என்கைக்குக் கொண்டுபோதல் நிச்சயமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "நயாமி பரமாம் கதிம்" என்று. இது, வராகசரமஸ்லோகம்.

4. "என்னை அழைத்துக்கொண்டுபோதல் அவர்க்குத் தக்கது" என்ற போதே, நாம் நம்மை நோக்குதல் அவர்க்குத் தாழ்வாம் என்ற பொருள் தோன்றுமே அன்றோ, அங்ஙனம் தோன்றும் பொருளை அருளிச்செய்கிறார் 'அவர்க்கு' என்று தொடங்கி.

போகவேண்டிய நாம், நம்முடைய ஆற்றாமையை நீக்குவதற் காக அவர்க்கு நிறக்கேடானவற்றைச் செய்யவோ?" [1]'இராமன் தேவியை ஓர் அரக்கன் பிரிக்க, அவள் சபித்துப் போனாள்' என்னுதல், 'ஒரு குரங்கு மீட்டது' என்னுதல் செய்கையாகிற இது, அவர் வில்வலிக்கு வசையாம் காண்; [2] அவர் வம்சத்துக் குக் கொத்தையாம் காண்; [3] அவர் விஷயத்தில் இராவணன் செய்ததனே நாமும் செய்யவோ? [4] இராம தனத்தை 'என்னது' என்றாரோடு ஒப்பர்கள் ஆவரே அன்றே அவருடைய காத் தலைத் தம் தலையிலே ஏறிட்டுக்கொள்ளுமவர்கள். எவையே னும் அச்சத்திற்குக் காரணங்கள்உள ஆனாலும் அஞ்சாதே இருக்கக்கூடிய இவள் பிரிவாற்றாமைக்கு அஞ்சினபடியாலே அன்றே 'காப்பார் ஆர்' என்ற இவ்வார்த்தை சொல்லியது.

---

1. நிறக்கேடாம்பிரகாரத்தைக் காட்டுகிறார் 'இராமன் தேவியை' என்று தொடங்கி. இங்கு,

அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லே நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லி னுற்சுடு வேன்அது தூயவன்
வில்லி னுற்றற்கு மாசுஎன்று வீசினேன்.

அன்றி யும்பிறி துள்ளதொன் றுரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி என்பதம் வஞ்சித்த காய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ.

வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்!
ஏறு சேவகன் மேனியல் லால்இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண் எனக்
கூறு மீவ்வுருத் தீண்டுதல் கூடுமோ.

என்ற கம்பராமாயணச் செய்புட்கள் நினைவு கூர்தல் தகும்.

2. மேற்காட்டிய சுலோகத்திலேயுள்ள "காகுஸ்த்தஃ" என்ற பதத்தைக் கடாகூத்துச் சிலேடையாக அருளிச்செய்கிறார் 'அவர் வம்சத்துக்கு' என்று தொடங்கி. 'வம்சம்' என்பது, மூங்கில்; அது, ஆருபெயராய் வில்லினைக் காட்டுகிறது.

3. மேலே கூறிய 'அவருக்குத் தகுதியாக வுள்ளனவற்றை' என்ற வாக்கியத்தின் விவரணம் 'அவர் விஷயத்தில்' என்று தொடங்கும் வாக்கியம்.

4. தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளுதல், இராவணன் செயலைப் போன்று கொடியதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராம தனத்தை' என்று தொடங்கி.

[1] "ஸ்ரீராமபிரானுடைய திருக்கைகளை அடைந்திருந்தாளாகையாலே யானைக்கூட்டங்களையும் சிங்கக்கூட்டங்களையும் புலிக்கூட்டங்களையும் கண்டு அச்சத்தை அடையவில்லை." ஸ்வரூபத்தோடு கூடியிருக்கின்ற பெண்தன்மை போயிற்று, கணையத்துக்குள் இருப்பவர்கள் அச்சத்திற்குக் காரணமான பொருள்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள் என்றபடி. யானைக்கூட்டங்கள் சிங்கக்கூட்டங்கள் அல்லவே, அன்றே இது. காப்பார் ஆர் இவ்விடத்து-[2] **'காக்கப்படுகின்றபொருள்கள் இவை, காக்கின்றவன் அவன்'** என்றுதெளிந்து அறுதியிட்டு, **'அம்ம'** என்று அப்புத்தட்டி இருந்தவளே அன்றே இப்போது **'காப்பார் ஆர்'** என்கிறாள்; பிறந்த ஆற்றுமையின் மிகுதியாலே. அவனுடைய சர்வரக்ஷகத்வம் [3] ஓர் **அச்சாய்** அன்றே இருப்பது. இவர் **அல்லிலே** கிடந்து நோவுபடுகிறாரே அன்றே.

---

1. அச்சத்திற்குக் காரணங்கள் உளவானாலும் அஞ்சாதிருந்தாளோ? என்ன, 'அஞ்சாதிருந்தாள்' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஸ்ரீராம பிரானுடைய' என்று தொடங்கி-

> "கஜம் வா வீக்ஷ்ய விம்ஹம் வா வியாக்ரம் வா வனம் ஆஸ்ரிதா
> நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹுராமஸ்ய ஸம்ஸ்ரிதா"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 60 : 20.

கணையம் - கோட்டை. இது - தோள்வலி.

2. பிரணவத்தில், அகாரத்திலே சொல்லுகிற அவனுடைய ரக்ஷகத்வத்தையும், மகாரத்தில் சொல்லுகிற தன்னுடைய ரக்ஷ்யத்வத்தையும் நினைத்து அச்சம் அற்று இருக்குமவள் கண்டீர் கலங்கினாள் என்று சுவாபதேசத்திலே அருளிச்செய்கிறார் 'காக்கப்படுகின்ற பொருள்கள்' என்று தொடங்கி. 'அம்ம' என்பது, சிலேடை: அம்மா என்று மகிழ்ச்சியினால் சொல்லும் வார்த்தை என்றும், அகாரவாச்சியனான சர்வேசுவரனுக்கு மகாரவாச்சியனான ஆத்மா காக்கப்படுகின்ற பொருள் என்றும் பொருளாம். அப்புத்தட்டி - துடை தட்டி. என்றும், நினைத்து என்றும் பொருளாம்.

3. 'ஓர் அச்சாய்' என்றது, சிலேடை: அச்சிலே அந்தர்ப்பூதமான அகாரத்தாலே சொல்லப்படுகின்ற பொருளாய் என்பது நேர்பொருள். ஏகரூபமாய் என்பது வேறும் ஒருபொருள். 'அல்லிலே' என்றதும், சிலேடை: ஹல்லான மகாரத்தாற் சொல்லப்படுகின்ற ஆத்ம ஸ்வரூபத்தை நினைத்து என்பது நேர்பொருள். இரவிலே என்பது வேறும் ஒருபொருள். ஆக, 'ஓர் அச்சாயன்றே' என்று தொடங்கும் வாக்கியத்திற்கு, அகாரவாச்சியனான சர்வேசுவரனே நினைத்து பாரம் அற்றவனாய் இருக்கவேண்டியவளாக இருக்க, மகாரவாச்சியனான ஆத்மாவை அநுசந்தித்து, 'நம்மை நாம் எங்கே காத்துக்கொள்ளப்போகிறோம்' என்று நோவுபடுகிறாள் என்பது கருத்து. அச்சு - உயிர். அல் - மெய்.

[1] அவன் உண்டாயிருக்க, முதலிலே ஒருவர்க்கும் வருத்தம் இல்லையே அன்றே.

கங்கு இருளில் - எல்லையான இருள் என்னுதல்; தடித்த இருள் என்றபடி. கங்கு - எல்லை. அன்றிக்கே, கங்குலில் இருள் என்னுதல்; 'தசராத்ரம், சப்தராத்ரம்' என்றால், பத்து நாள், ஏழுநாள் என்று நாட்களைக் காட்டுவது போன்று, இங்குக் 'கங்குல்' என்பதும் இரவாகிற காலத்தைக் காட்டுகிறது. இரவிடத்தில் என்பது பொருள். 'மருங்குல்' என்பது, 'மருங்கு' என வருமாறு போன்று, கங்குல் என்பது, கங்கு எனக் கடைக்குறைந்து வந்த விகாரம். நுண் துளியாய்-நுண்ணிய துளியுமாய். சேண்பாலது ஊழியாய்ச் செல்கின்ற கங்குல்வாய் - மிக்க நெடுமையை ஸ்வபாவமாக வுடைத்தான கல்பமாய்க்கொண்டு செல்லுகிற இரவிடத்து. [2] தமிழர்க்கு அகத்தியரைப் போன்று இருப்பான் தமிழாசிரியன் ஒருவன், செல்கின்ற கங்குல்வாய் என்பதற்குச் செல்கின்ற நாளகத்து என்று உரை எழுதிவைத்தான். தூப்பால வெண்சங்கு சக்கரத்தன் தோன்றலால்-இருளைப் போக்கும்போது சந்திர சூரியர்கள் சேர உதித்தாற்போன்று இருக்கின்ற திவ்விய ஆயுதங்களையுடையவன் வருகின்றிலன். [3] அந்தச் சந்திரசூரியர்கள் வேணுங்காணும் இந்த இருளைப் போக்கும்போது. [4]"ஆங்கத், திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானில், பகரும் மதி என்றும் பார்த்து" என்று சொல்லக் கடவதன்றே.

---

1. அவனுடைய ரக்ஷகத்வத்தை நினைத்தால் வருந்தாமல் இருக்கக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் உண்டாயிருக்க' என்று தொடங்கி.

2. "கங்குல்வாய்" என்பதற்கு, இரவாகிய காலத்தில் என்று தாம் அருளிச்செய்த பொருளுக்கு, சம்வாதம் காட்டுகிறார் 'தமிழர்க்கு' என்று தொடங்கி.

3. தோன்றி மறைகின்ற சந்திர சூரியர்கள் இவ் விருளைப் போக்க மாட்டார்களோ? என்ன, 'அந்த' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

4. சங்கு சக்கரங்களே, சந்திர சூரியர்களாகக் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆங்கத்திகிரி' என்று தொடங்கி. இது, மூன்றாந்திருவந். 67. இங்கு, சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம் காடுகாண் காதையில் 41-முதல் 51-வரி முடிய உள்ள பகுதியை ஒப்புநோக்கல் தகும்.

[1] பண்டே இவள் கைகண்டு வைத்தமையன்றே இவை தாம். [2] இருளோடே சீறுபாறு என்று போக்குவான் ஒருவனும், இருளோடே கண்கலந்து நின்று போக்குவான் ஒருவனுமாயிற்று. தூய்மையை ஸ்வபாவமாகவுடைத்தான வெண்சங்கு ஆதலின் [3] 'தூப்பால வெண்சங்கு' என்கிறாள். அன்றிக்கே, பால் என்பது, இடமாய், குறைவற்ற இடத்தையுடைத்தான [4] வெண்சங்கு என்னுதல்; [5] "பெருமுழக்கு" என்றும், [5] "நன்றாக நிரம்பின மத்தியினின்றும் வெளிக்கிளம்பின ஒலியையுடைய ஸ்ரீ பாஞ்சசன்னியம்" என்றும் சொல்லப்படுவது அன்றே. ஆயின், 'தூய்மை' என்ற சொல் குறைவறுதல் என்ற பொருளைக் காட்டுமோ? எனின், 'அவன் இவ்வர்த்தத்தில் குறைவற்றவன்' என்று சொல்லவேண்டுவதனை 'அவன் இவ்வர்த்தத்திலே தூயன்காண்' என்று வழங்கும் வழக்கு உண்டே அன்றே. இலக்ஷணை இருக்கிறபடி. அன்றிக்கே, தூய்மையாலும் வெண்மையாலும், வெளுப்பின் மிகுதியைச் சொல்லுகிறதாகவுமாம்; அப்போது [7] வேறுசொல் இடையில்

---

1. இந்தச் சந்திர சூரியர்கள் வந்தால் இருள் போமோ? என்ன, 'பண்டே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'கைகண்டு' என்பதற்கு, கையிலே கண்டு என்றும், அநுபவித்து என்றும் இரண்டு பொருள்.

2. உலகத்தில் சந்திர சூரியர்கள் இருளைப் போக்கும் விதம் எப்படி? என்ன, 'இருளோடே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சீறுபாறு என்று போக்குமவன் - சூரியன். கண்கலந்து போக்குமவன் - சந்திரன்.

3. இப்பொருளில் "வெண்சங்கு" என்பதில், வெண்மை என்பது, அடைமொழி அன்று. சங்கு என்ற மாத்திரையாய் நின்றது.

4. இங்கு, வெண்மையையுடைய சங்கு என்பது பொருள்.

5. இரண்டாவது பொருளில் 'குறைவற்ற இடத்தையுடைத்தான வெண்சங்கு' என்று கூறியதற்குப் பயன் யாது? என்ன, 'பெருமுழக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "ஸ பாஞ்சஜந்யꣳ அச்யுத வக்த்ரவாயுநா ப்ருசம்
ஸ-பூர்ண உதர நிஸ்ஸ்ருத த்வநிꣳ"
என்பது, பாரதம் துரோணபர்வம்.

7. 'வேறு சொல் இடையில் வரலாகாது' என்றது, "தூ" என்ற சொல்லிற்கும், "வெண்" என்ற சொல்லிற்கும் இடையில் "பால" என்ற சொல் வந்திருப்பதனால் என்றபடி. "தூ, வெண்" என்ற இரண்டினையும் ஒரு பொருட்இளவிகளாகக்கொண்டு பொருள் கூறுமிடத்து, அவ்விரண்டும் சேர்ந்தே வரல்வேண்டும்; இடையில் "பால" என்ற சொல் வரலாகாது என்றபடி.

வரலாகாது, வந்திருப்பதனால், அவ்வாறு பொருள் கூறுதல் பொருத்தம் அன்று.

தீப்பால வல்வினையேன் - தீயதன்மையையுடைத்தாய், பேர்க்கப் பேராதபடி மிகுந்த பாவத்தைச் செய்த நான். என்றது, [1] காப்பாற்றுதலிலேயே தனக்குச் சங்கல்பமாகக்கொண்டு, காப்பாற்றுதற்குச் சம்பந்தமுள்ளவனுய், அதற்காகவே கருவி பிடித்திருக்கிறவனுங்கூட உதவாதபடியான பாபம் என்றதனைத் தெரிவித்தபடி. தெய்வங்காள் என்செய்கேனே - [2] தெய்வங்களோடு இவளுக்கு ஓர் ஒப்புமை உண்டு; அவர்கள் பிறப்புத் தொடங்கியே உறங்காதவர்கள், இவளோ எனின், "உண்டோ கண்கள் துஞ்சுதல்" என்றிருப்பவள். அதற்குமேல் இப்போது இருளுக்கு அஞ்சியும் உறங்காள். தன் நிலையைக் கண்டு அதற்கு அவர்கள் உறங்காதே இருக்கிறார்களாகக் கொண்டு, அவர்களைத் தஞ்சமாக நினைத்துக் கேட்கிறுள்; சிறை உறவு போன்று. தோழிமாருங்கூட உறங்கா நிற்கச் செய்தே அவர்கள் உறங்காதிருக்கையாலே, அவர்களைக் காட்டிலும் இவர்களை அண்ணிய உறவாக நினைத்துச் சொல்லுகிறுள். "ஆயும் அமருலகுந் துஞ்சிலும்" என்று தாய்மாரோடு ஒருசேர எடுத்துப் பேசப்படுகிறதே அன்றே தேவர்களையும். துன்பம் மிக்கால் 'அம்மே! என்செய்வேன்' என்றாற்போலே இருக்கிறது காணும். (7)

---

1. "சங்கு சக்கரத்தன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'காப்பாற்றுதலிலேயே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாத இவள், "தெய்வங்காள் என் செய்கேனே" என்னலாமோ? எனின், இதற்கு மூன்று வகையாகப் பரிஹாரம் அருளிச்செய்கிறார் 'தெய்வங்களோடு' என்று தொடங்கி. 'தெய்வங்களோடு' என்றது முதல், 'இருளுக்கு அஞ்சியும் உறங்காள்' என்றது முடிய, முதல் விடை. "உண்டோ கண்கள் துஞ்சுதல்" என்பது, திருவாய். 'தன்நிலையைக் கண்டு அதற்கு' என்றது முதல், 'ஒருசேர எடுத்துப் பேசப்படுகிறதே அன்றே தேவர்களையும்' என்றது முடிய, இரண்டாவது சமாதானம். தோழிமாரைப்பற்ற இவர்கள் தஞ்சமாகைக்குக் காரணம் என்? என்ன, 'தோழிமாருங்கூட' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். தோழிகளைக் காட்டிலும் இவர்கள் நெருங்கிய உறவினர் ஆவர்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆயும் அமருலகும்' என்று தொடங்கி. இது, திருவாய். 2. 1: 1. 'துன்பம் மிக்கால்' என்று தொடங்கும் வாக்கியம், மூன்றாவது சமாதானம்.

## 483.

தெய்வங்காள் என்செய்கேன் ? ஓர்இரவுஏழ் ஊழியாய்
மெய்வந்து நின்று எனதாவி மெலிவிக்கும்
கைவந்த சக்கரத்துஎன் கண்ணனும் வாராஞல்
தைவந்த தண்தென்றல் வெம்சுடரில் தான்அடுமே.

**பொ - ரை :**—தெய்வங்களே ! என்ன செய்வேன் ? ஓர் இரவானது ஏழு ஊழிக்காலமாக நீண்டு மெய்யாகவே என்முன்னே வந்து நின்று என்னுடைய உயிரை வருத்துகின்றது ; கையிலே வந்திருக்கின்ற சக்கரத்தையுடைய என் கண்ணபிரானும் வருகின்றிலன் ; தடவுகின்ற குளிர்ந்த தென்றலானது கொடிய நெருப்பைக் காட்டிலும் கொடிதாக வருத்தாநின்றது.

**வி - கு :**—இரவு மெலிவிக்கும் என்க. கைவருதல் - கையிலே வந்திருத்தல். அன்றிக்கே, அடக்கமான என்னலுமாம். தைவந்த - தை மாதத்தில் வந்த. அன்றிக்கே, தடவுதலுமாம். சுடரில் : ஐந்தாம் வேற்றுமை உறழ்பொரு. ஒப்புப்பொருவுமாம்.

**ஈடு :**—எட்டாம் பாட்டு. [1] ஓர் இரவே பலயுகமாய் மிகவும் நலியாநின்றது, எம்பெருமானும் வருகின்றிலன், அதற்கு மேலே தென்றலும் நலியாநின்றது என்கிறாள்.

தெய்வங்காள் என்செய்கேன் - [2] மற்றும் உறங்காதிருப்பவர்கள் உளராகில் அன்றே அவர்களைப் பார்த்துச் சொல்லலாவது. ஓர் இரவு ஏழ் ஊழியாய்-மேலே, 'ஊழியாய்' என்றது, இராத்திரி மாத்திரமேயாய் நின்று நலிந்தது என்னும்படி, இது பல கல்பமாக நலியாநின்றது. [3] சௌபரி, இன்பத்தை அனுபவிப்பதற்குப் பல வடிவுகள் கொண்டாற் போன்று, இதுவும் துன்புறுத்துவதற்குப் பலவடிவுகள் கொள்ளாநின்

---

1. "ஓர் இரவு ஏழ் ஊழியாய்" என்பது முதலானவற்றைக் கடாவுகித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இப் பாசுரத்திலும் "தெய்வங்காள் என் செய்கேன்?" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மற்றும்' என்று தொடங்கி,

3. பல கல்பமாய் நலிவதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'சௌபரி' என்று தொடங்கி. முதல் பத்து ஈட்டின் தமிழாக்கம் பக். 42. குறிப்புப் பார்க்கவும்.

றது என்றபடி. மெய் வந்து நின்று - [1] ஈசுவரன் கட்டின மர்யாதை குலைக்க ஒண்ணுமை வந்த மாத்திரம் அன்றிக்கே, தனக்கே சீற்ற முடையாரைப்போலே மெய்யே முன்னே வந்து நின்று, [2] இராவணன் இடம் பார்த்து வந்தாற்போன்று, விரகிலே என்று அறிந்து நலியாநின்றது என்பாள் 'வந்து நின்று' என்கிறாள். எனது ஆவி மெலிவிக்கும் - [3] மோர்க் குழம்பு கொடுத்துத் தேற்றி, விடுநகம் கட்டி நலிவாரைப் போன்று, 'சென்றற்றது' என்னும்படி இருக்கிற என்னுடைய உயிரை உண்டாக்கி நலியாநின்றது. என்றது, போன உயிரை மீளக்கொடுத்து நலியாநின்றது என்றபடி.

கைவந்த சக்கரத்து - [4] இந்தத் துன்பத்தைப் போக்குவதற்குச் சாதனம் இல்லாமல்தான் இருக்கிறானே? [5] அழையாதிருக்கச்செய்தேயும் நினைவறிந்து கையிலே வந்திருக்கும் திருவாழியையுடையவன். கருத்து அறிந்து காரியம் செய்யும் சாதனத்தையுடையவன் என்றபடி. [6]"பாவஜ்ஞேந - இளைய பெருமாள் பர்ணசாலை சமைக்கும்போது, இருடிகளுக்கு ஓலக்கங் கொடுத்திருக்குமிடம் செய்யும்படியும், அக்நிசாலை சமைக்குமிடமும், இவையேயன்றே பெருமாள் அருளிச்செய்தது; பிராட்டி

---

1. "மெய்வந்து" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஈசுவரன் கட்டின' என்று தொடங்கி.

2. "வந்து நின்று" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இராவணன்' என்று தொடங்கி.

3. "பேர் என்னை மாயாதால்" என்று மேலே இருக்க, இங்கே "மெலிவிக்கும்" என்கைக்கு 'ஆவிதான்' உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மோர்க்குழம்பு கொடுத்து' என்று தொடங்கி. விடுநகம் கட்டி - கிட்டியைக் கட்டி.

4. "சக்கரத்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இந்தத் துன்பத்தை' என்று தொடங்கி.

5. "கைவந்த" என்பதற்கு, இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார். 'அழையாதிருக்கச் செய்தேயும்' என்றது முதல், 'இழந்தீரானீரித்தனை' என்றது முடிய, முதல் கருத்து.

6. அப்படி அவன் பரிகரங்களில் நினைவறிந்து செய்த பேர் உண்டோ என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாவஜ்ஞேந' என்று தொடங்கி.

"பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந ச லக்ஷ்மண
த்வயா புத்ரேண தர்மாத்மா ந ஸம்வ்ருத்தஃ பிதா மம"

இது, ஸ்ரீராமா. ஆரண். 15: 29. பர்ணசாலையை அமைத்த இளையபெருமாளைப் பார்த்துப் பெருமாள் கூறியது,

யும் தாமும் ஏகாந்தமாக இருப்பதற்குரிய இடத்தைச் சமைக்கும்படியை இவருடன் தாம் அருளிச்செய்யாரே, அவை முழுதும் கருத்து அறிந்து செய்தாராயிற்று.[1] அவர் தூதுசெய் கண்கள் கொண்டு ஒன்று பேசினால், இவரும் செவிகண்ணாகக் கேட்டுச் சமைப்பாரித்தனர். கிருதஜ்ஞை - [2] வருந்தி இவர் நினைவைப் பின் சென்ற மாத்திரம் அன்றிக்கே, அறுபதினாயிரம் ஆண்டு மலடு நின்று பிள்ளை பெற்ற சக்கரவர்த்தி, பெருமாளுக்குப்பொருந்துமிடம் பார்த்து மாளிகை சமைத்து முன்பு செய்து போந்த கட்டளைகள் அறிந்து, அப்படியே செய்தாராயிற்று. தர்மஜ்ஞை - இதுதான் 'தம்பியாய் இருந்து இப்படிச் செய்தார்' என்று குணமாகை அன்றிக்கே, '**இது செய்யத் தக்கது**' என்று செய்தார். என்றது, '**உஜ்ஜீவனத்திற்குக்காரணமாகச் செய்யவேண்டிய தர்மம் இது**' என்று செய்தார் என்றபடி. த்வயா புத்ரேண - போன ஐயர்க்கு நரகத்தைப் போக்குதற்குரிய புத்திரர் நீரே ஆவீர். என்றது, [3] 'நாம்உள்ளதனையும் இவருடைய ரக்ஷணம் இப்படிச் செல்லுகிறது, நமக்குப் பின்னர் இவர்க்கு ரக்ஷகர் யார்? என் செய்யக் கடவது' என்று இதுவே ஆயிற்று ஐயர்க்கு எப்போதும் நெஞ்சாறல்; ஐயர் செய்யுமவற்றை நீர் செய்கையாலே அவர்க்குத் துக்கத்தைப் போக்கினவர் நீரே அன்றோ. தர்மாத்மா - ஐயரும் ஒருவரே! தாம் பரமதார்மிகர் கண்டீர்; தாம் இருந்த நாளும் நமக்கு

---

1. அவர் அருளிச்செய்யாதிருக்க நினைவறிந்து காரியம்செய்யும்படி எப்படி? என்ன, 'அவர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "தூதுசெய் கண்கள்கொண்டு" என்பது, திருவாய்மொழி. 9. 9: 9. 'இவரும் செவி கண்ணாகக் கேட்டுச் சமைப்பாரித்தனர்' என்றது, 'கட்செவி' என்ற பெயரின் பொருளைத் திருவுளத்தேகொண்டு. இளையபெருமாள் ஆதிசேஷன் அவதாரமாதலை நினைவுகூர்தல் தகும்.

2. "க்ருதஜ்ஞை" என்றதனை, கீருதம்ஜாநாதீதி - கீருதஜ்ஞஃ என்று கொண்டு, அதற்கு, பாவம், அருளிச்செய்கிறார் 'வருந்தி' என்று தொடங்கி. 'அறுபதினாயிரம்' என்று தொடங்கும் இவ்விடத்தில்,

அறுபதி னாயிரம் ஆண்டும் ஆண்டுற
உறுபகை ஒடுக்கிஇவ் வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறைஇலை எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்க முண்டரோ.

என்ற செய்யுள் நினைவு கூர்க.

3. சக்கரவர்த்திக்கு நிரயமாவது எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாம் உள்ளதனையும்' என்று தொடங்கி.

வேண்டும் ரக்ஷணங்களைச்செய்து, தாம் சென்ற பின்னரும் தண்ணீர்ப் பந்தலை வைப்பாரைப் போன்று உம்மை வைத்துப்போவதே! ந ஸம்விருத்தः பிதா மம - நாம் ஐயரை இழந்தோம் அல்லோம், நீர் இழந்தீரானீரித்தனை அன்றே."

[1] ஸ்ரீ வீடுமரைத் தொடருகிறபோது கையிலே வந்திருந்ததே அன்றே திருவாழி. ஸ்ரீ வீடுமர் நெடும்போது பொருதபடியால் அருச்சுனன் இளைத்தான், அவன் இளைத்தவாறே சர்வேசுவரன் தன் சூளுறவை மறந்தான், தேரில் நின்றும் குதித்துத் திருவாழியைக் கொண்டு தொடர்ந்தான், வந்து கொன்றருளீர் என்கிறான்[2] "ஏஹி ஏஹி புல்லாம்புஜ பத்ரநேத்ர-என்றும் ஆணை மறுத்தாலும் சேதம் இல்லையே! இச் சீறிச் சிவந்த கண்ணழகை அநுபவிக்கப்பெற்றோம். ப்ரஸஹ்ய - தேவர்க்கும் வீரத்துக்கும் தோலேன், என்கையில் ஆயுதத்தைப் போகடச் சொல்லித் தலையை அறுத்தருளீர். லோகநாத - வீரத்துக்குத் தோலேனெகிலும் முதன்மைக்குத் தோற்பனே அன்றே. [3] அன்றிக்கே, கைவந்த சக்கரத்து என்பதற்கு, அறவிதேயமான சாதனத்தையுடையவன் என்னலுமாம். [4] "ஸ்ரீராம பிராணுக்கு வலதுகை போன்றவர்" என்கிறபடியே, விதேயமாய்க் காரியம் செய்யும் சாதனத்தையுடையவர் என்றபடி.

---

1. அப்படித் திருவாழியானது நினைவறிந்து கைவந்த இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ வீடுமரை' என்று தொடங்கி.

2. "ஏஹ்யேஹி புல்லாம்புஜபத்ர நேத்ர
நமோஸ்துதே தேவவர அப்ரமேய
ப்ரஸஹ்ய மாம் பாதய லோகநாத
ரதோத்தமாத் பூதசரண்ய சங்க்யே"
என்பது, பாரதம் வீடுமபருவம். 59: 98.

'ஆணை மறுத்தாலும்' என்றது, 'ஆயுதம் எடேன்' என்ற கிருஷ்ணனை ஆயுதத்தை எடுப்பித்துச் சேஷியினுடைய சூளுறவை அழித்தல் என்றபடி. சேதம் இல்லை - தவறு இல்லை.

3. "கைவந்த சக்கரத்து" என்பதற்குக் கூறத் திருவுள்ளம்பற்றிய இருவகைப் பொருள்களுள் முதற்பொருளை இதுகாறும் அருளிச்செய்து, இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. விதேயம் - அடக்கம். விதேயன் - சொன்னபடி செய்கிறவன்.

4. "அமர்ஷீ தூர்ஜயோ ஜேதா விக்ராந்தோ புத்திமாந் பலீ
ராமஸ்ய தக்ஷிணே பாஹுः நித்யம் ப்ராணே பஹிஸ் சரः"
என்பது, ஸ்ரீராமா. யுத். 28: 25. இராவணனைப் பார்த்துச் சுகன் கூறியது.

என் கண்ணன் - [1] அடியார்கட்காகத் தன் சூளுறவை யும் அழிய மாறுமவன் அலனே. அடியார்களுள் ஒருவர்க்குச் செய்தது எல்லார்க்குமாக இருக்குமே. [2] 'அடியார்கட்காகத் தன் சூளுறவை அழியமாறும்' என்னுமிது தஞ்சமாக அன்றே இவனைப் பற்றுகிறார் பற்றுவது. தனக்கு என்னவும் நியதமா யிருப்பன சில உளவாகில் இவனைப் பற்றுவார்க்குப் பலம் இல்லை. தை வந்த தண் தென்றல் - [3] குளிர்ந்த காலத்திலே வந்த குளிர்ந்த தென்றல் என்னுதல். தடவிக்கொண்டு வரு கின்ற குளிர்ந்த தென்றல் என்னுதல்; என்றது, கணவன் கைகளால் தன்னைத் தீண்டுவதனை நினைப்பூட்டுவதாய் இரா நின்றதாயிற்றுக் குளிர்ந்த தென்றல் என்றபடி. "தான் சென்று மண்மகளைத் தைவந்தான்" என்ற இடத்துத் தை வருதல் என்பது, தடவுதல் என்ற பொருளதாதல் காண்க. வெம் சுடரில் தான் அடுமே - வெவ்விய சுடரைக் காட்டிலும் அடும் என்னுதல். சுடரைப்போன்று நலியாநின்றது என்னு தல். [4] உலகத்திலே உள்ள நெருப்பைக் காட்டிலும் நரகாக்நிக் குள்ள வாசி போருமே அன்றே, நரக அக்நியைக் காட்டிலும் பிரிந்த சமயத்தில், அநுகூலமான பொருள்களுக்கு. (8)

---

1. "என்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அடியார்கட்காக' என்று தொடங்கி. அடியார்களுக்காகச் செய்தால் தமக்கு என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியார்களுள்' என்று தொடங்கி.

2. சூளுறவைக் காப்பாற்றுதல் அன்றே தஞ்சம், அதனை அழிப்பது தஞ்சமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியார்கட்காக' என்று தொடங்கி. 'அடியார்கட்காக' என்றது, அருச்சுனனைக் காப்பாற்று தற்காக என்னுதல்; வீடுமனுடைய சூளுறவை முடித்துவைத்தற்காக என்னு தல். கிருஷ்ணனுடைய பொய்யும், ஸ்ரீராமபிரானுடைய மெய்யும் அடியார் கட்குத் தஞ்சம் என்பது.

3. "தைவந்த" என்பதற்கு, இரண்டு பொருள்: ஒன்று, தை மாதத் திலே வந்த என்பது. அதனையே, 'குளிர்ந்த காலத்திலே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். மற்றொன்று, தடவுகின்ற என்பது. தடவுதல் என்ற பொருளுக்கு மேற்கோள் காட்டுகிறார் 'தான் சென்று மண்மகளை' என்று தொடங்கி.

4. "வெஞ்சுடரில்" என்றதற்கு, அருளிச்செய்த இருவகைப்பொருள் களுள், முதற்பொருளை நோக்கி அருளிச்செய்கிறார் 'உலகத்திலேயுள்ள' என்று தொடங்கி.

## 484.

**வெஞ்சுடரில் தானடுமால் வீங்கிருளின் நுண்துளியாய்**
**அஞ்சுடர வெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றுதால்**
**செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வனும் வாராஞல்**
**நெஞ்சிடர்தீர்ப் பாரினியார்? நின்றுருகு கின்றேனே.**

**பொ - ரை:**—இந்த இரவானது, செறிந்த இருளோடும் நுண்ணிய துளிகளோடும் சேர்ந்து கொடிய கெருப்பினைக் காட்டிலும் மிக அதிகமாக எரித்து வருத்தா நின்றது, அழகிய பிரகாசத்தையுடைய சூரியனது அழகிய பெரியதேரும் தோன்றுகிறதில்லை, சிவந்த பிரகாசம் பொருந்திய தாமரைபோன்ற கண்களையுடைய செல்வனும் வருகின்றான் இலன்; நிலைபெற்று உருகிக்கொண்டிருக்கின்ற என்னுடைய மனத்துன்பத்தை நீக்குகின்றவர்கள் யார்? என்கிறாள்.

**வி - சு:**—சுடரில்: ஐந்தாம்வேற்றுமை உறழ்பொரு. ஒப்புப் பொருளுமாம். தான் - இரவு. உருகுகின்றேன்: வினையாலணையும் பெயர்.

**ஈடு:**—ஒன்பதாம் பாட்டு. [1]இரவும் நலியாகின்றது, சூரியோதயமும் 'நமக்கு' என்றவாறே வேண்டத்தக்கதாய் விட்டது, காக்கின்றவனும் தோன்றுகின்றிலன், என் மனத்தின் துன்பத்தை இனிப் போக்குவார் யார்? என்கிறாள்.

வெம்சுடரில் தான் அடுமால் வீங்கு இருளின் நுண் துளியாய் - இராவணன் மாரீசனைத் துணையாகக் கொண்டு வந்து தோற்றினைப் போலே ஆயிற்று, நுண்ணிய துளியோடே செறிந்த இருள் வந்து தோன்றினபடி. [2]இரண்டும் இன்பத்திற்கு ஏகாந்தமாய் இருப்பன அன்றே. "ஒழுகு நுண் பனி"

---

1. "வெஞ்சுடரில் தான் அடுமால்" என்றதனைக் கடாக்ஷித்து 'இரவும் நலியாகின்றது' என்கிறாள். இருளுக்கும் இரவுக்கும் உள்ள அபேதத்தைத் திருவுள்ளத்தே கொண்டு 'இரவும்' என்கிறாள்.

2. போகத்தை வளர்ப்பது ஆகையாலே "இருள்" பாதகமாம்; "துளி" பாதகம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறாள் 'இரண்டும்' என்று தொடங்கி. துளியும் போகத்தை வளர்ப்பது என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறாள் 'ஒழுகு நுண்பனி' என்று தொடங்கி.

> முழுதிவ் வையகம் முறைகெட மறைதலும் முனிவனும் முனிவெய்தி
> மழுவினுல் மன்னர் ஆருயிர் வவ்விய மைந்தனும் வாராஞல்
> ஒழுகு நுண்பனிக் கொடுங்கிய பேடையை அடங்கஅம் சிறைகோலித்
> தழுவு நள்ளிருள் தனிமையின் கடியதொர் கொடுவினை அறியேனே.

என்பது, பெரிய திருமொழி. 8. 5: 8. இத் திருப்பாசுரத்திற்குக் கருத்து, 'கார்காலத்தில்' என்று தொடங்கும் வாக்கியம்.

என்கிறபடியே, கார்காலத்தில் கைக்குள்ளே அடங்க அணைக்க வேணும். இருள்தானே போகத்தை வளர்ப்பதே அன்றே. அதற்கு மேலே, வளர்ந்த [1]இருளும் நுண்ணிய பனியும், வெவ்விய சுடரிற் காட்டில் அடாநின்றது என்னுதல். வெவ்விய சுடர் போலே அடாநின்றது என்னுதல். [2]இவற்றில் பிரதானம் யாது? என்னில், அதுவேணுமோ, 'பாதகங்கள் இரண்டு உண்டு' என்ன அமையாதோ. இனி, இத் திருவாய்மொழியில் சொல்லுவது, இரவின் துன்பமே அன்றே; ஆனபின்னர், இருளுக்கே முதன்மை சொல்லிற்றுக் கோடலும் அமையும். அம் சுடர வெய்யோன் அணி நெடும் தேர் தோன்றுதால்-தன்னுடைய தோற்றரவிலே துன்பங்களை எல்லாம் போக்குதலையுடைய அழகிய சுடர் பொருந்திய சூரியனும் வருகின்றிலன். [3]இது, இளையபெருமாள் அகல நின்றுற்போலே ஆயிற்று. [4]பிரளயத்தில் சிறிதுதூரம் எஞ்சி இருக்க நீந்தி, 'கரையைக் கிட்டினேமோ, கிட்டினேமோ!' என்று பார்ப்பாரைப் போலே காணும், இரவுமுழுதும் நோவுபட்டு 'விடிந்ததோ, விடிந்ததோ' என்று பார்க்கிறபடி.

செம்சுடர்த் தாமரைக்கண் செல்வனும் வாராஞல்-சிவந்த சுடரையுடைய தாமரை போன்ற திருக்கண்களையுடைய செல்வத் திருமாலும் வருகின்றிலன். [5]சூரியன் வந்தாலும் இருள் வருவதற்குச் சம்பாவனை உண்டே அன்றே, மறையாத சூரிய

---

1. "இருளின்" என்பதில், 'இன்' சாரியை. "சுடரில்" என்பதில், இல் என்பது, ஐந்தாம் வேற்றுமை உறழ்பொரு. 'சுடர்போல' என்ற பொருளில், ஒப்புப் பொருள்.

2. இரண்டு பொருள்களைச் சொல்லுகையாலே, 'இவற்றில் பிரதானம் இன்னது' என்கைக்காகப் பொதுவான சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'இவற்றில்' என்று தொடங்கி.

3. மேலே, 'இராவணன் மாரீசனைத் துணையாகக்கொண்டு' என்று அருளிச்செய்ததற்குத் தகுதியாக அருளிச்செய்கிறார் 'இது, இளையபெருமாள்' என்று தொடங்கி. 'இது' என்றது, அணிநெடுந்தேர் தோன்றுதே அகல நின்றதனை. அன்றி, சூரியன் மறைந்ததனை என்னலுமாம்.

4. 'வாராது' என்னுமல், "தோன்றுதால்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பிரளயத்தில்' என்று தொடங்கி.

5. "அஞ்சுடரவெய்யோன்" என்றதனை அடுத்து, "செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வன்" என்றது, சூரியனைக்காட்டிலும் இவனுக்குள்ள வேறுபாட்டினைக் காட்டுவதற்காக என்று, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிறார் 'சூரியன் வந்தாலும்' என்று தொடங்கி.

னும் வருகின்றிலன் என்னுதல். [1] அந்தச் சூரியனுடைய பிரகாசமும் எல்லா இடங்களிலும் இராதே அன்றே, உபய விபூதிகட்கும் பிரகாசத்தைச் செய்யுமவன் அன்றே இவன். [2]"பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன்" என்னக்கடவதன்றே. [3]"காலையில் சூரியனுடைய ஒளியால் மலர்ந்த தாமரைமலர் எவ்வண்ணம் இருக்குமோ அவ்வண்ணமே அந்தப் பரப் பிரஹ்மமான ஸ்ரீமந் நாராயணனுடைய திருக்கண்களும்" என்கிறபடியே, சூரியமண்டலத்திலே எழுந்தருளியிருக்கிறவனும் வருகின்றிலன். என்றது, [4]சூரியனுடைய வரவுக்கு அருணோதயம் போலே இருப்பது ஒன்றே அன்றே, அந்தச் செல்வத் திருமாலுடைய வரவுக்குச் சூரியனுடைய தோற்றரவு என்றபடி. நெஞ்சு இடர் தீர்ப்பார் இனி யார் - [5]மனத்திலே உள்ள துன்ப இருளைப் போக்குவார் யார்? புற இருளைப் போக்குமவனன்றே அந்தச் சூரியன்; மனத்திலே உள்ள இருளானது வயிரம்பற்றின இடரே அன்றே; அதனைப்போக்கும் போது நிலவனுமாய் அந்தரங்கமானவனுமே வேணுமே.

---

1. வேறும் ஓர் ஆகாரத்தாலே வேறுபாட்டினைக் காட்டுகிறார் 'அந்தச் சூரியனுடைய' என்று தொடங்கி.

2. உபய விபூதிகட்கும் பிரகாசத்தைச் செய்வதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'பகற்கண்டேன்' என்று தொடங்கி. என்றது, 'நாரணனைக் கண்டேன்' என்றதனால், உபய விபூதிகட்கும் நாதனும் தன்மையைச் சொல்லி, 'பகற்கண்டேன்' என்கையாலே, உபய விபூதிகட்கும் பிரகாசத்தைச் செய்கின்றவன் என்பது போதரும் என்றபடி. இது, இரண்டாந்திருவந். 81.

3. "அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றுதால்" என்றதன்பின், "செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வனும் வாராஞல்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'காலையில்' என்று தொடங்கி.

"தஸ்யயதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ"

என்பது, சாந்தோக்யம். 1: 6.

4. 'சூரியனுடைய வரவுக்கு' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, தன் மண்டலத்திலே வசிக்கின்ற ஈசுவரனுடைய வரவுக்குத் தான் சூசகமான தன்மையாலே சூரியனாகிய தன்னுடைய வரவும் வேண்டத்தக்கதாயிருக்கும் என்பது.

5. "வாராஞல்" என்ற பதத்தையும் கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'மனத்திலேயுள்ள' என்று தொடங்கி. மன இருளைச் சூரியன் போக்காஞே? என்ன, 'புற இருளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அந்தரங்கமானவனுகையாலே நிலவன் என்றபடி. நிலவன் - தேசிகன்.

[1] "ஞானமாகி ஞாயிறாகி" என்னக் கடவதன்றே. நின்று உருகுகின்றேனே - [2] விலக்ஷண விஷயத்தில் உண்டான பிரிவானது, உருகிற்றாய் தர்மிலோபம் பிறக்கவும் ஒட்டாது, தரிக்கவும் ஒட்டாது, முடிய உருகினபடியே நிற்குமித்தனை. [3] 'இன்னம் ஒருகால் காணலாமோ' என்னும் நசை முடிய ஒட்டாது, அப்போதைய இழவு பிழைத்திருக்க ஒட்டாது. (9)

485.

நின்றுருகு கின்றேனே போல நெடுவானம்
சென்றுருகி நுண்துளியாய்ச் செல்கின்ற கங்குல்வாய்
அன்றொருகால் வையம் அளந்தபிரான் வாரான்என்று
ஒன்றொருகாற் சொல்லாது உலகோ உறங்குமே.

பொ - ரை :—நின்று உருகுகின்றவளான என்னைப் போன்று, பரந்த ஆகாசமானது, தேய்ந்துசென்று உருகி நுண்ணிய துளியாகிச் செல்கின்ற இந்த இரவிடத்து, மஹாபலி பூமியைக் கவர்ந்த அக்காலத்தில் ஒருதடவை பூலோகத்தைத் தன் திருவடிகளால் அளந்த உபகாரகன் வாரான் என்று ஒரு வார்த்தையை ஒரு தடவை சொல்லாமல் இந்த உலகமானது உறங்காநிற்கும்; இது என்னே! என்கிறாள்.

வி - சூ :—வானம் சென்று உருகித் துளியாகிச் செல்கின்ற கங்குல் என்க. என்று ஒருகால் சொல்லாது உலகு உறங்கும் என்க.

ஈடு :—பத்தாம் பாட்டு. [4] இந்த இரவில் என்னுடைய துன்பத்தைக் கண்டுவைத்து அவன் திறமாக ஒரு வார்த்தை சொல்லாதே உலகமாக உறங்குவதே! என்கிறாள்.

---

1. மன இருளே இவன் போக்கும் விதம் யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஞானமாகி' என்று தொடங்கி. என்றது, மன இருளைப்போக்கும் ஞானமுமாய்ப் புற இருளைப்போக்கும் சூரியனுமாய் என்றபடி.

ஈனமாய எட்டும் நீக்கி ஏதமின்றி மீதுபோய்
வானமாள வல்லையேல் வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே!
ஞானமாகி ஞாயிறாகி ஞால முற்றும் ஓர்எயிற்று
ஏனமா யிடந்த மூர்த்தி எந்தை பாதம் எண்ணியே.

என்பது, திருச்சந். 114.

2. "உருகுகின்றேனே" என்று நிகழ்காலத்தால் அருளிச்செய்வதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'விலக்ஷண விஷயத்தில்' என்று தொடங்கி. தர்மி - ஆத்மா.

3. உருகுகிறது என்? முடிந்து பிழைத்தாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இன்னம் ஒருகால்' என்று தொடங்கி.

4. "சென்று உருகி நுண் துளியாய்ச் செல்கின்ற கங்குல்" என்றதனைக் கடாக்ஷித்து 'இந்த இரவில்' என்கிறார். ஒருவார்த்தை - எனக்கு ஒரு வார்த்தையை.

நெடுவானம் சென்று உருகி நுண் துளியாய்ச் செல்கின்ற-எல்லாப் பொருள்கட்கும் இடம் கொடுக்கின்ற பரப்பையுடைய ஆகாசமானது, [1]சென்றற்று நுண்ணிய துளியாய் இற்று விழாகின்றது. யாரைப் போன்று எனின், நின்று உருகுகின்றேனே போலே - [2]கண்கூடாகக் கண்டதனை அன்றே உபமானமாகச் சொல்லுவது, ஆதலால், தன்னையே சொல்லுகிறாள். [3]"எவருக்கு, ஜனககுலத்தில் பிறந்த அந்தப் பிராட்டி மனைவியாக இருக்கின்றாளோ அந்தப் புருஷோத்தமனுடைய பராக்கிரமம் அளவிட்டு அறியமுடியாததாக இருக்கிறது" என்கிறபடியே, பெரியவர்களுடைய பெருமையும் தன் சம்பந்தத்தாலேயாம்படி இருக்குமவளன்றே. 'திருமகள் கேள்வனுகையாலே சர்வாதிகன்' என்னக்கடவதன்றே. கங்குல்வாய் - இப்படிச் செல்லுகிற இரவிடத்து.

அன்று ஒருகால் வையம் அளந்தபிரான் வாரான் என்று சொல்லாது - [4]"'பிரிவாற்றாமையிலும் பிழைத்திருத்தலுக்கு நிமித்தம் அவனுடைய அடிப்பாடு. என்றது, வரையாதே எல்லாரையும் ஒருசேரக் காப்பாற்றியவன், தன்னிலே வந்த ஆற்

---

1. "சென்று" என்றது, சென்றற்று என்றாய், துக்கித்து என்றபடி.

2. தன்னை ஒழிய வேறு திருஷ்டாந்தம் இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கண்கூடாக' என்று தொடங்கி.

3. பெரிய பொருளான ஆகாசத்துக்கு, அணுப்பொருளாக இருக்கும் தன்னை உபமானமாகச் சொல்லுதல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எவருக்கு' என்று தொடங்கி.

"அப்ரமேயம் ஹி தத்தேஜஃ யஸ்ய ஸா ஜநகாத்மஜா
நத்வம் ஸமர்த்தஃதாம் ஹர்த்தும் ராமசாபாஸ்ரயாம் வநே"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 37 : 18.

'தன்' என்றது, பிராட்டியை. அதனையே விளக்குகிறார் 'திருமகள் கேள்வனுகையாலே' என்று தொடங்கி.

4. "வையம் அளந்தபிரான்" என்பதும், "வாரான்" என்பதும், ஒன்றற்கொன்று பொருளால் முரண் ஆகையாலும், இவை இரண்டும் ஜீவனத்தில் கசை அறுகைக்குக் காரணமான உலகினர் வார்த்தையாகக் கூடாமையாலும், "வையம் அளந்தபிரான்" என்றதனைத் தலைவியின் வார்த்தையாக்கி, "அன்றொருகால்" என்ற பதத்தை அநுசந்தித்துக்கொண்டு, "வாரான்" என்ற பதத்தை உலகினர் வார்த்தையாக்கி, அதற்கு பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிவாற்றாமையிலும்' என்றது, முதல், 'அது அவனுக்கு என்றைக்குமுள்ள தொரு தன்மை அன்று காண் என்று சொல்லுகிறார் இலர்' என்றது முடிய. அடிப்பாடு - திருவடிகளின் சாந்நித்யமும், கீழே விழுதலும்.

ரூமையைப் போக்காது இருப்பனே' என்னுமதே அன்றே ஜீவித்திருக்கைக்குக் காரணம், அதுவும் அவனுக்கு, [1] புழுக்குறியிட்டது எழுத்தானற் போன்று எதுவோ ஒரு காலத்தில் வந்தது ஒன்று, அது அவனுக்கு என்றைக்கும் உள்ளது ஒரு தன்மை அன்றுகாண்" என்று சொல்லுகிறார் இலர். [2] **'அன்று ஒருகால்'** என்றது, அன்று அங்ஙனே ஒருகால் செய்தானித்தனை, அவனுக்கு எற்றைக்கும் நியதமாய் இருப்பது ஒரு தன்மைஅன்றுகாண் என்கிறார் இலர். [3] **'பிரான்'** என்னுமிற்கச்செய்தே அன்றே **'வாரான்'** என்கிறது. என்றது, "உலகமுழுதினையும் அளந்துகொண்டஉபகாரகன் அன்றே' என்று நினைக்கிறுயாகில், பெருக்காறு பெருகினற்போலே அது அங்ஙனே ஒருகால் செய்துபோன இத்தனை, வாராமையே காண் ஸ்வபாவம்" என்கிறார் இலர் என்றபடி. ஒன்று-'வரும்' என்ன வேண்டா, 'வாரான்' என்ன அமையும். [4] 'இன்னம் வருவான்' என்னும் நசைகொண்டு ஜீவிக்க இருப்பார்க்கே அன்றே 'வரும்' என்றே சொல்லவேண்டுவது. 'வரும்' என்னவுமாம், 'வாரான்'என்னவுமாம். [5] ஒருகால்-ஒருகால் சொன்னல் பின்னையும் ஜீவிப்பார்க்கே அன்றே இருகால் மட்டுச் சொல்லவேண்டு

---

1. 'புழுக்குறியிட்டது எழுத்தானற்போன்று' என்ற இவ்விடத்தில்,

மானத்து வண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத்து வண்ட. வினையாள ராயினும் மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாவரினும்
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

என்ற திவ்வியகவி திருவாக்கு நினைவுகூர்தல் தகும்.

2. மேலே தொகுத்து அருளிச்செய்ததனைப் பதங்களிலே ஏறிட்டுக் காட்டுகிறார் 'அன்றொரு கால்' என்று தொடங்கி, 'வாராமையே காண் ஸ்வபாவம் என்கிறார் இலர்' என்பது முடிய.

3. "பிரான்" என்னுமிற்கச்செய்தே, "வாரான்" என்றல், கூடுமோ? என்கிற விரோதத்தை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'பிரான் என்னுமிற்கச் செய்தே' என்று தொடங்கி.

4. 'வரும்' என்று சொல்லுகையே அபேக்ஷிதமாயிருக்க, "வாரான்" என்றும், "ஒன்று" என்றும் இரண்டினையும் சொல்லுவான் என்? என்ற சங்கையிலே அருளிச்செய்கிறார் 'இன்னம் வருவான்' என்று தொடங்கி.

5. மேலே "ஒன்று" என்பதற்கு, 'வாரான் என்ன அமையும்' என்று பொருள் அருளிச்செய்தார். இங்கு, "ஒன்று" என்பதனை "வாரான்" என்ற சொல்லோடு சேர்த்து, வாரான் என்ற ஒன்று - வாரான் என்ற ஒருவார்த்தையை என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி "ஒருகால்" என்பதற்கு, பொருள் அருளிச்செய்கிறார் 'ஒருகால் சொன்னல்' என்று தொடங்கி.

வது. 'அவன் இனி வாராான்' என்று அறிந்தபோதே மூச்சு அடங்குமே அன்றே. உலகு ஒ உறங்குமே - [1]" அன்னையரும் தோழியரும் துஞ்சுவர்" என்று இன்னதானுள் முன்னர், உலகத்தை அடைய இன்னதாம்படி காணும் அதற்குப் பின்பு பிறந்த தசாவிசேடம். [2] பிரிந்தவனோடு ஒத்ததே! இந்த உலகம். (10)

## 486.

**உறங்கு வான்போல் யோகுசெய்த பெருமானைச்**
**சிறந்த பொழில்சூழ் குருகூர்ச்சட கோபன்சொல்**
**நிறங்கிளர்ந்த அந்தாதி ஆயிரத்துள் இப்பத்தால்**
**இறந்துபோய் வைகுந்தம் சேராவாறு எங்ஙனேயோ?**

**பொ-ரை :—** உறங்குவான் போன்று யோகு செய்த பெருமானை, சிறந்த சோலைகளாற் சூழப்பட்ட திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட பண்ணோடு விளங்குகின்ற அந்தாதி ஆயிரத்துள் இப்பத்துப் பாசுரங்களால் இச்சரீரத்தைவிட்டு நீங்கி அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்று பரமபதத்தில் சேராமல் இருப்பது எப்படி? என்கிறாள்.

**ஈடு :—**முடிவில், [3] இவர் பாசுரம் கேட்டார், இவர் தசையை அநுசந்தித்தார் பிழையார்கள் என்கிறார். முடிந்தார் புகலிடம் அதுவாகையாலே சொன்ன இத்தனை.

உறங்குவான்போல் யோகு செய்த பெருமானை - [4] அவன் வரவு தாழ்க்கையாலே 'நம்மை மறந்து உறங்குகிறானே'

---

1. வேண்டியவர்களே அன்றே வெறுப்பது, உலகத்தாரை வெறுப்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'அன்னையரும்' என்று தொடங்கி.

2. "உலகோ" என்றதிலுள்ள ஓகாரத்திற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிந்தவனோடு' என்று தொடங்கி.

3. "இப்பத்தால் இறந்துபோய் வைகுந்தம் சேராவாறு எங்ஙனேயோ" என்றதற்குக் கூறும் இருவகைப் பொருள்களில், முதற்பொருளிலே நோக்காக அவதாரிகை அருளிச்செய்கிறார். இவர் தசையை அநுசந்திப்பர்களே, ஆகையாலே, 'பிழையார்கள்' என்கிறார். ஆனால், பரமபதம் அடைதலேப் பலமாகச் சொல்லுவான் என்? என்னில், 'முடிந்தார்புகலிடம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இங்கு, "உறங்குவான்போல்" என்று உறங்காமையைச் சொல்லுகிற இது, மேல் "பாம்பணையான்" என்று தம்மை மறந்து உறங்கினதைச் சொன்னதோடு மாறு ஆகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் வரவு தாழ்க்கையாலே' என்று தொடங்கி.

என்று சொன்ன இத்தனை, அவன் உறங்குகின்றிலன்; நம்மைக் காப்பதற்குரிய விதத்தைச் சிந்தனை செய்கிறனித்தனை. [1]"உலகத்தையெல்லாம் காத்தல்வேண்டும் என்ற சிந்தனையோடு கூடின ஜாகரண ரூபமாகத் திருக்கண் வளர்ந்தருளுகின்றீர்" என்கிறபடியே, வேறு ஒன்றிலும் நோக்கு இல்லாமல் நம்முடைய ரக்ஷண சிந்தனை செய்கிறனித்தனையல்லது, மறந்து உறங்குகின்றனல்லன் என்பார் '**உறங்குவான்போல்**' என்கிறார். மேல் உஜ்ஜீவிப்பிக்க இருக்கிற சர்வேசுவரன், இவ்வளவிலே தன்படிகளை நினைப்பித்தான். சிறந்த பொழில் குருகூர் - சர்வேசுவரன் ரக்ஷண சிந்தை செய்துகொண்டு கண் வளர்ந்தருளுகிறபடியை நினைத்து இவர் தரித்தவாறே ஊரும் தரித்தது, ஆதலின், '**சிறந்த பொழில் குருகூர்**' என்கிறது. [2]பிரிந்த விரஹதாபத்தால் "மரங்களும் ஸ்ரீ ராமபிரானுடைய பிரிவினாலே உண்டான சோகத்தால் பீடிக்கப்பட்டனவாகி, மலர் அரும்பு இவைகளோடு கருகி உலர்ந்தன" என்றும், ஸ்ரீ ராமபிரானுடைய வரவு அணித்தாயினவாறே "வழியில் உள்ள எல்லா மரங்களும் காலமல்லாத காலத்திலும் பழங்களையுடையனவாகவும் தேன் களைச் சிந்துகின்றனவாகவும் ஆயின" என்றும் சொல்லலாம்படி அன்றே இருப்பது.

நிறம் களர்ந்த அந்தாதி - பண்களிலே களர்ந்த அந்தாதி. இப் பத்தால் இறந்து போய் வைகுந்தம் சேராவாறு எங்ங

---

1. "ஸ்ரீரங்கதாமனி.....ஆர்த்ரயந்(த்வம்) விச்வத்ராண விமர்சன ஸ்கலிதயா நித்ராவி ஜாகர்யயா" இது, ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவம். உத்தரசதகம். 75. நினைப்பித்தான், ஆதலாலே சொல்லுகிறார் என்றபடி.

2. இவர் தரித்தவாறே ஊரும் தரித்ததற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பிரிந்த விரஹதாபத்தால்' என்று தொடங்கி.

"விஷயே தே மஹாராஜ ராமவ்யஸன கர்ஶிதாஃ
அபிவ்ருக்ஷாஃ பரிம்லாநாஃ ஸ்புஷ்பாங்குர கோரகாஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 59: 4.

"அகால பலிநோ வ்ருக்ஷாஃ ஸர்வே சாபி மதுஸ்ரவாஃ
பவந்து மார்க்கே பகவந் அயோத்யாம் ப்ரதி கச்சதஃ"

என்பது, ஸ்ரீராமா. யுத். 127: 19.

அரிஇனம் சென்ற சென்ற அடவிக ளனைத்தும் வானம்
சொரிதரு பருவம் போன்று கிழங்கொடு கனிகாய் தன்றி
விரிபுனல் செழுந்தேன் மிக்கு விளங்கென விளம்பு கென்றான்
புரியுமா தவனு மஃதே யாகெனப் புகன்றிட் டானால்.

என்பது, கம்பராமாயணம்.

னேயோ - இப்பத்தையும் சொன்னவர்களுக்கு, பகவானைப் பிரிந்த விரகத்தாலே இவரைப்போன்று, "பேர் என்னைமாயா தால்" என்று முடிவு தேட்டமாய் நோவுபடுமது வேண்டா; இதனைச் சொன்னவர்கள் பிழையார்கள். இப்பாசுரங்களைக் கேட்டுப் பிழைக்கமாட்டாதவர்கள் புகும் தேசம் பரமபதம் ஆகையாலே '**வைகுந்தம் சேராவாறு எங்ஙனேயோ**' என்று சொன்ன இத்தனை இவ்விடம். இத்திருப்பாசுரத்தால் ஒருபலம் சொல்லிற்றாகவும் வேணுமே அன்றே, இது என் சொல்லிற்று? என்னில், பகவத் விஷயத்தில் மூழ்கினவர்களுடைய பாசுரம் கேட்டவர்களுக்கு, சரீரம் நீங்கிய பின்னர், அவர்கள் பேராக நினைத்திருக்கும் தேசத்தின் சம்பந்தம் தப்பாது என்கை. [1]பகவானிடத்தில் ஈடுபாடுடையவர்களுடைய பாசுரம் கேட்டுப் பொறுக்கமாட்டாதே ஈடுபட்டு இந்தச் சரீரம் நீங்கப் பெற்றவர்கள், அவர்களுக்கு உத்தேச்யமான தேசத்தைக் கிட்டாது ஒழிய விரகு உண்டோ என்பார் '**எங்ஙனேயோ**' என்கிறார். [2]"நீள் இரவாய் நீண்டதால்", "ஒண்சுடரோன் வாராது ஒளித்தான்" என்று இந்த உலகத்தில் இருந்து வருந்தாமல் மறைதலில்லாத சூரியனும் மறைதலில்லாத பகலுமான தேசத்திலே புகப்பெறுவர் என்பார் '**வைகுந்தம் சேராவாறு**' என்கிறார். (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

ஊர நினைந்தமடல் ஊரவும்ஒண் ணுதபடி
கூரிருள்சேர் கங்குலுடன் கூடி நின்று—பேராமல்
நீதுசெய்ய மாறன் திருவுளத்துச் சென்றதுயர்
ஓதுவதுஇங்கு எங்ஙனே யோ.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. "எங்ஙனேயோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பகவானிடத்தில்' என்று தொடங்கி.

2. "வைகுந்தம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீளிரவாய்' என்று தொடங்கி.

# ஐந்தாந் திருவாய்மொழி "எங்ஙனேயோ"

## முன்னுரை

ஈடு :—[1] "மாசறு சோதி" என்ற திருவாய்மொழியில் "நாடும் இரைக்கவே, யாம் மடல் ஊர்ந்தும்" என்று மடல் ஊரப் பாரித்தாள்; பாரித்தபடியே தலைக்கட்டப் பெறுமையாலே [2] "ஊரெல்லாம் துஞ்சி" என்ற திருவாய்மொழியில் 'ஊரெல்லாம் துஞ்சி உலகு எல்லாம் நள்இருளாய் என்று, முதலிலே மடல் ஊருகைக்கு விஷயந்தான் இல்லாதபடி பழி சொல்லுவாருங்கூட உறங்கினார்கள்' என்று வெறுத்தாள்; [3] "அம் சுடர வெய்யோன் அணி நெடும் தேர் தோன்றுதால்" என்று, 'சூரியோதயத்திற்குச் சூசகமும்கூட இல்லையாயிற்று' என்று வெறுத்தாள்; "நீயும் பாங்கு அல்லைகாண் நெஞ்சே" என்று, 'ஒன்றை நினைத்துத் தரிக்கைக்கு விரகு அற்றது' என்

---

1. மேல் திருவாய்மொழியில் கூறப்பட்ட துக்கமெல்லாம் தீர்ந்தன இத் திருவாய்மொழியில் என்று கூறத் திருவுள்ளம்பற்றி, மேல் திருவாய்மொழியில் உண்டான துக்கத்திற்குக் காரணங்கள் மூன்று என்கிறார் 'மாசறுசோதி' என்றது முதல், 'விரகு அற்றது என்றும் வெறுத்தாள்' என்றது முடிய. 'தலைக்கட்டப் பெறுமையாலே' என்ற இடத்தில், 'தலைக்கட்டப் பெறுதபடி இருள்வந்து மூடி நின்றமையாலே' என்பது, எஞ்சி நிற்கிறது.

2. 'ஊரெல்லாம் துஞ்சி' என்றது முதல் 'உறங்கினார்கள் என்று வெறுத்தாள்' என்றது முடிய, முதல்காரணம். 'முதலிலே மடல் ஊருகைக்கு விஷயந்தான் இல்லாதபடி' என்றது, இவர்கள் பழி சொல்லுமது, அவ் விஷயத்தை நினைப்பூட்டுமதாய், அவ்வழியாலே மடல் ஊருகைக்கு விஷயத் தைக் காட்டிக் கொடுக்குமது ஒன்றுகையாலே மடல் ஊருகைக்கு விஷயம் உண்டு; இவர்கள் பழி சொல்லாதே உறங்குகையாலே மடல் ஊருகைக்கு விஷயம் இல்லை என்றபடி.

3. 'அம்சுடர வெய்யோன்' என்றது முதல் 'இல்லையாயிற்று என்று வெறுத்தாள்' என்றது முடிய, இரண்டாவது காரணம். 'நீயும் பாங்கல்லை' என்றது முதல், 'விரகு அற்றது என்றும் வெறுத்தாள்' என்றது முடிய, மூன் றாவது காரணம். 'ஒன்றை நினைத்துத் தரிக்கைக்கு விரகு அற்றது' என்றது, மனம் அவன்பக்கலிலே ஈடுபட்டிருக்கையாலே வேறு ஒன்றினை நினைத்துத் தரிக்கைக்கும் உடல் அன்றிக்கே, அலாபதசையாகையாலே அவனை நினைத் துத் தரிக்கைக்கும் உடல் அன்றிக்கே விரகு அற்றது என்றபடி. ஆக, பழி சொல்லுவாருங்கூட இல்லாதபடி உறங்குகையாலும், சூரியஉதயத்துக்குச் சூசகமும் இன்றிக்கே இருக்கின்ற இராப்பொழுதின் தன்பமாகையாலும், நெஞ்சு பாங்கு அல்லாமையாலும் வெறுத்தாள் என்று துக்கத்திற்குக் காரணம் என் மூன்று என்றபடி.

றும் வெறுத்தாள். [1] இந்தக் குறைகள் எல்லாம் தீரும்படி போதும் விடியப்பெற்று, "அன்னையரும் தோழியரும் துஞ்சுவர்" என்கிற [2] இழவுதீர, உகப்பாளும் பொடிவாரும் ஹிதம் சொல்லுவாருமாகப் பெற்றது இத்திருவாய்மொழியில். என்றது, [3] பின்னர், உறவினர்கள் அனைவரும் உணர்ந்து, "தீர்ந்த என் தோழி" என்னவேண்டும்படி இவளுடைய துணிவுகண்டு உகப்பாளும், "எங்ஙனயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர்" என்னவேண்டும்படி பொடிவாரும், "தோழிமீர் என்னை இனி உமக்கு ஆசை இல்லை" என்னவேண்டும்படி ஹிதம் சொல்லி அலைப்பாருமாகப் பெற்றது; [4] அவ்வழியாலே அவர்கள்தாம் இவ்விஷயத்தினை நினைப்பூட்டுகின்றவர்கள் ஆவர்களே அன்றே. [5] சூரியனும் உதித்துப் பொருள்களைக் காணவும் பெறுகையாலே வியசனமும் பாலிபாயப் பெற்றது. இவ்வளவு ஆஸ்வாசம் உண்டானவாறே, நெஞ்சு நினைத்துத் தரிக்கைக்கும் துணையாயிற்று என்றபடி.

[6] இப்படி இரவு வியசனம்போம்படி போது விடியப்பெறுகையாலே ஒரு தரிப்பும் உண்டாய், அவனை அநுபவிக்கப்

---

1. மேல் திருவாய்மொழியில் துக்கத்திற்குக் காரணங்களாகக் கூறப்பட்ட மூன்றும், இத்திருவாய்மொழியில் நீங்கிய விதத்தை அருளிச்செய்கிறார் 'இந்தக்குறைகள் எல்லாம்' என்றது முதல், 'தரிக்கைக்கும் துணையாயிற்று என்றபடி' என்றது முடிய.

2. 'இழவுதீர, உகப்பாளும் பொடிவாரும் ஹிதம்சொல்லுவாருமாகப் பெற்றது' என்றது, இத்திருவாய்மொழியில் வருகின்ற "தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. உகப்பாள் - உயிர்த் தோழி. பொடிவார் - தாய்மார். ஹிதம் சொல்லுவார் - மற்றைத் தோழிகள்.

3. மேல் வாக்கியத்தின் விவரணம், 'பின்னர்' என்று தொடங்கும் வாக்கியம். பின்னர் - போது விடிந்தபின்னர்.

4. ஹிதம் சொல்லி அலைப்பார் உண்டாதல், துக்கத்திற்குக் காரணம் அன்றே, அதனை அநுகூலமாகச் சொல்லுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவ்வழியாலே' என்று தொடங்கி. அவ்வழியாலே - பழிசொல்லுகிற வழியாலே.

5. இரண்டாவது மூன்றாவது வெறுப்புக்களும் தீர்ந்தமையைக் காட்டுகிறார் 'சூரியனும் உதித்து' என்று தொடங்கும் வாக்கியத்தாலும், 'இவ்வளவு ஆஸ்வாசம்' என்று தொடங்கும் வாக்கியத்தாலும். பாலிபாயப் பெறுதல் - பல இடங்களிலும் பரந்து செல்லுதல். ஆஸ்வாசம் - இளைப்பாறுதல்.

6. இத்திருவாய்மொழியில் சொல்லப்படும் பொருளை அருளிச்செய்கிறார் 'இப்படி இரவு' என்று தொடங்கி.

பெருமையாலே ஆற்றுமைக்கும் காரணமாய் நோவுபட்டுச் செல்லாநிற்க, உணர்ந்த உறவினர்கள் அனைவரும், 'நீ இப்படி இவ்விஷயத்தில் எல்லை இல்லாத காதலையுடையவளாயிருத்தலாகிற இது [1] உனக்குக் குடிப்பழி, உன்னுடைய பெண்தன்மைக்குப்போராது, அவன்தலைமைக்கும்போராது' என்று ஹிதம்சொல்லி மீட்கப் பார்க்க, 'இவர்கள் உகந்தருளின நிலங்களின் வாசி அறியார்கள்' என்று இருந்தாள் இவள், [2] 'நீங்கள், சிலர் காட்டக் கண்டூர்கோள் அல்லாமையாலே இவ் விஷயத்தை உள்ளபடி அறிந்திலீர்கோள்; நான் அங்ஙன் அன்றிக்கே, அவன்தானே மயர்வுஅறமதிநலம் அருளித் தன்னைக் காட்டக் காண்கையாலே உள்ளபடி கண்டேன்; ஆகையாலே, நம்பியுடைய [3] வடிவழகிலும் ஒப்பனையழகிலும் ஆபரணச் சேர்த்தியிலும் பெருமையிலும், நான் உங்கள்ஹித வசனத்துக்கு மீளாதபடி அகப்பட்டேன்' என்று இங்ஙனம் தம்படிகளைச் சொல்லாநிற்கச் செய்தே; [4] 'தம் முயற்சி கொண்டு அறிவார்க்கு அறிய ஒண்ணாதபடி பெற்றோமே அன்றோ, [5] இவ் வஸ்துதான் உண்டாகப் பெற்றால் நாம் பெற்ற

---

1. 'உனக்குக் குடிப்பழி' என்றது, "நிறைந்த வன்பழி" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி. "முன்னின்றாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'பெண்தன்மைக்குப் போராது' என்றும், "நிறந்த கீர்த்தி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன் தலைமைக்கும் போராது' என்றும் அருளிச்செய்கிறார்.

2. "என் நெஞ்சினுள் நோக்கிக் காணீர்" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'நீங்கள், சிலர்' என்றது முதல், 'உள்ளபடி கண்டேன்' என்றது முடிய அருளிச்செய்கிறார்.

3. "நீலமேனி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'வடிவழகிலும்' என்றும், "பூந்தண்மாலைத் தண் துழாயும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஒப்பனை அழகிலும்' என்றும், "மின்னுநூலும் குண்டலமும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஆபரணச்சேர்த்தியிலும்' என்றும், "பொன்முடியும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பெருமையிலும்' என்றும் அருளிச்செய்கிறார்.

4. "அறிவரியபிரானே" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தம்முயற்சி கொண்டு' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. மேலே கூறிய வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'இவ்வஸ்துதான்' என்று தொடங்கி.

போது பெறுகிறோம், பிறர் அறியாது ஒழியப் பெற்றோமே யன்றோ' என்னும் பிரீதியோடே தலைக்கட்டுகிறது.[1] ஆக, போதும் விடிந்து ஹிதம்சொல்லி அலைப்பாரும் உண்டாகப் பெறுகையாலே ஒருதரிப்பும், அதுதான் கிடைத்த விடியலாகப் பெறுமையாலே ஒரு பிரீதி இன்மையும்; அவனை நினைக்கப் பெறுகையாலே ஒரு பிரீதியும், அதுதான் அநுபவமாகப் பெறுமையாலே ஒரு பிரீதி இன்மையும்; சூரியன் உதித்துப் பொருள்களைப் பார்க்கப் பெறுகையாலே ஒரு பிரீதியும், அது தான் அவனைக் காணப்பெறுமையாலே ஒரு பிரீதி இன்மையு மாய்; பிரீதியும் பிரீதி இன்மையும் சமமாகச்செல்லுகின்றன.

[2] "மாசறுசோதி" என்ற திருவாய்மொழியில், பிராப்பியத் தைப் பெறவேண்டும் என்னும் மனோவேகத்தாலே உபாய அத்யவசாயம் கலங்கினபடி; "ஊரெல்லாம்" என்ற திருவாய் மொழியில், அந்த மனோவேகமுங்கூடக் கலங்கினபடி; இத் திருவாய்மொழியில், 'ரக்ஷகன் அவன்' என்னும் தெளிவும் செல்லாநிற்க பிராப்பிய ருசி நலிகிறபடி.

[3] நன்று; "ஏழையராவி" என்ற திருவாய்மொழியும், 'உரு வெளிப்பாடு' சொல்லாநின்றதே, அதற்கும் இத்திருவாய் மொழிக்கும் வேற்றுமை என்? என்னில், அதில், "இணைக் கூற்றங்கொலோ" என்றும், "உய்விடம் ஏழையர்க்கும் அசுரர்க் கும் அரக்கர்கட்கும் எவ்விடம்" என்றும் பாதகத்தன்மை உறைத்திருக்கும்; இதில், மேலே உண்டான துக்கம் நீங்குதல் உண்டாம்படி நினைத்துத் தரிக்கவும்பெற்று, அதுதான் அநுப வமாகப் பெறுமையாலே வந்த பிரீதி இன்மையுமாய், இப்படிப்

---

1. அர்ச்சாபதேசமாவது, அப்பீதியை மூலமாகக் கொண்டதாகையாலே, மேலே மூன்று வகையாக அருளிச்செய்த தரிப்பிலே, அப்பீதியும் உண்டு என்று, இப்படிப் பிரீதி அப்பீதிகளின் சாம்யத்தை மூன்று வகையாகக் காட்டு கிறார் 'ஆக' என்று தொடங்கி.

2. மூன்று திருவாய்மொழிகட்கும் சுவாபதேசப் பொருள் அருளிச் செய்கிறார் 'மாசறுசோதி' என்றது முதல், 'பிராப்பியருசி நலிகிறபடி' என்றது முடிய.

3. இத் திருவாய்மொழியில் வருகின்ற "வந்து எங்கும் நின்றிடுமே" என்பது, உருவெளிப்பாடு ஆகையாலே, உருவெளிப்பாட்டினைக் கூறுகின்ற "ஏழையராவியுண்ணும்" என்ற திருவாய்மொழிக்கும், இதற்கும் வேறுபாடு என்னை? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நன்று' என்று தொடங்கி.

பிரீதியும் பிரீதி இன்மையும் சமமாகச் செல்லுகிறதாக இருக்கும். [1] ஜாபாலிபகவானும் வார்த்தைசொல்லி, 'ஸ்ரீ வசிஷ்ட பகவானும் இக்குடியில் போந்தபடிகள் எல்லாவற்றையும் சொல்லி, இனி, மீண்டு திருவபிடேகம் செய்துகொள்ள அமையும் என்ன, பெருமாள் 'அங்ஙனம் செய்வது இல்லை' என்று முடிய நின்றபடியைக் கண்டவாறே, நகரத்து ஜனங்கள் எல்லாம் உகப்பதும் செய்தார்கள், வெறுப்பதும் செய்தார்கள்; 'ரக்ஷகனனவன் தொடங்கின காரியத்திலே இப்படி முடிய நின்ற இடம் நம்முடைய ரக்ஷணத்துக்கும் உண்டே அன்றே' என்று உகப்பதுஞ் செய்தார்கள்; 'அதனாலே நாம் பெற்றது என்? இப்போது பதினான்காண்டு இழந்திருக்கும்படி வேண்டி இருந்ததே!' என்று வெறுப்பதுஞ் செய்தார்களே அன்றே. திருவடி, பிராட்டியைத் திருவடி தொழுதபோது, 'நாம் இலங்கையை அடைவதற்குரிய ஆற்றல் உண்டாகப்பெற்றோமே அன்றே' என்று உகப்பதும் செய்தான், 'இவள் அவரைப் பிரிந்து இந்த நிலையில் இருப்பதே!' என்று வெறுப்பதும் செய்தான். பிராட்டி, திருவடி வார்த்தையைக் கேட்டபோது [2] "வாநர! உன்னால் சொல்லப்பட்ட பெருமாள் என்னை அல்லது அறியார், பிரிவாலே தளர்கின்றார் என்ற இரண்டு வார்த்தைகளும் விஷத்தோடு கூடின அமுதம்போல் இருக்கிறது" என்று, பெருமாள் என்னைப் பிரிந்த இடத்தில் என்னை அல்லது அறிந்திலர் என்று சொன்னது எனக்கு இனியதாயிருந்தது, அவர் பிரிவாலே தளர்கின்றார் என்று சொன்னபடியாலே வெறுப்பாய் இருந்தது என்றாளே அன்றே. [3] அப்படியே, இவர்க்கும் பிரீதி அப்ரீதிகள் சமமாகச் செல்லுகின்றன.

---

1. பிரீதியும் பிரீதி இன்மையுமாகிற மாறுபட்ட இரண்டு தர்மங்களுக்கு ஒரே தர்மியில் ஏகதைவ ஸமாவேசம் கூடுமோ? என்ன, அதற்கு மூன்று உதாரணங்கள் மூலமாக விடை அருளிச்செய்கிறார் 'ஜாபாலி பகவானும்' என்று தொடங்கி. முதல் உதாரணம், 'ஜாபாலி' என்று தொடங்குவது. இரண்டாவது உதாரணம், 'திருவடி' என்று தொடங்குவது. 'பிராட்டி' என்று தொடங்குவது மூன்றாவது உதாரணம்.

2. "அம்ருதம் விஷஸம்ஸ்ருஷ்டம் த்வயா வாநர பாஷிதம்
யச்ச நாம்யமநா ராமோ யச்ச ஶோக பராயணஃ"

என்பது, ஸ்ரீராமா. சுந். 37 : 2.

3. கூறிய விஷயத்தை முடித்துக் காட்டுகிறார் 'அப்படியே' என்று தொடங்கி.

## 487.

**எங்ஙனேயோ அன்னை மீர்காள்! என்னை முனிவது நீர்? நங்கள் கோலத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின் சங்கி லோடும் நேமி யோடும் தாமரைக் கண்களோடும் செங்க னிவாய் ஒன்றி லோடும் செல்கின்றதுஎன் நெஞ்சமே.**

**பொ - ரை:**—தாய்மார்களே! நீங்கள் என்னைக் கோவித்துக் கொள்வது எப்படி? நம்முடைய அழகிய திருக்குறுங்குடியில் எழுந் தருளியிருக்கின்ற நம்பியை நான் பார்த்தபிறகு, என்னுடைய நெஞ்ச மானது, நம்பியின் திருக்கைகளிலேயுள்ள சங்கோடும் சக்காத்தோடும் தாமரைபோன்ற திருக்கண்களோடும் சிவந்த கோவைக்கனிபோன்ற ஒப்பற்றதாயிருக்கிற திருஅதரத்தோடும் செல்கின்றது. நான் என் செய் வேன்?

**வி - கு:**—நங்கள் என்பதில் 'கள்' அசைநிலை. "திங்களும் மறு வும்மெனச் சேர்ந்தது, நங்கள் அன்பென நாட்டி வலிப்புறீஇ" என்ற விடத்து 'நங்கள்: கள், அசை' என்றுர் நச்சினர்க்கினியர். (சிந். 1334.) நம்பி - பூர்ணன்.

இத்திருவாய்மொழி, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

**ஈடு:**—மூதற்பாட்டு. [1] திருக்கைகளில் ஆழ்வார்களோடே சேர்ந்த நம்பி திருமுகத்தில் அழகிலே, என் நெஞ்சமானது மிகவும் ஈடுபடாநின்றது என்கிறாள்.

அன்னைமீர்காள் முனிவது எங்ஙனேயோ-[2] ஹிதம் சொல்லத் தொடங்கினவாறே தந்தாமை மறக்குமித்தனையோ. என்னை முனிவது எங்ஙனேயோ - [3] ஒன்றை நீக்குவதற்குப் பார்த்தால்

---

1. பாசுரத்தின் பின் இரண்டு அடிகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'திருக்கைகளில்' என்பதற்கு முன்னே, "தாய்மார்கள் மகனைப் பார்த்து 'நீ இப்படிச் செய்கிறது பொருத்தமன்று' என்று விலக்க, அவர்களைப் பார்த்து" என்ற சொற்றொடர் எஞ்சி நிற்கின்றது; அதனைக் கூட்டிப் பொருள் கொள்க.

2. "அன்னைமீர்காள்" என்ற சொல்லிலே நோக்காக 'ஹிதம் சொல்லத் தொடங்கினவாறே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'தந்தாமை' என்றது, "பிரான் இருந்தமை காட்டினீர்" என்கிறபடியே, பிராணைக் காட்டி ஈடுபாடு உண்டாவதற்குக் காரணமான தங்கள் தங்களை என்றபடி.

3. "என்னை" என்ற சொல்லிலே நோக்காக, பாவம் அருளிச்செய் கிறார் 'ஒன்றை நீக்குவதற்கு' என்று தொடங்கி. அதனை விவரணம் செய் கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி. பிராவண்யம் - ஈடுபாடு.

அதனுடைய நிதானம் அறிந்து நீக்கவேண்டாவோ. என்றது, என்னுடைய பிராவண்யத்தை நீக்குதற்குப் பார்த்தால், எனக்கு இவ்வளவான பிராவண்யத்தை விளைத்த நம்பியுடைய அழகினை அறிந்து அதனை அன்றே பொடிவது என்ற படி. என்னைநீர் முனிவது எங்ஙனேயோ - [1] என்னுடைய நிலைக்கும் உங்களுடைய ஹிதவசனத்துக்கும் என்ன சேர்த்தி உண்டு. நீர் என்னை முனிவது எங்ஙனேயோ - நம்பியுடைய அழகினை அறிந்து அநுபவித்திருக்கிற நீங்கள், அதிலே துவக்குண்டு இருக்கிற என்னை மீட்கப் பார்க்கிறபடி எங்ஙனேயோ? அன்னைமீர்காள் நம்பியை நான் கண்டபின் - [2] இந்தக் குலதர்மத்துக்கு நான் ஏதேனும் தப்பகின்றது உண்டோ. "பேராளன் பேரோதும் பெரியோரை" என்றும், "யவரேலும் அவர்" என்றும் நீங்கள் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டு வளர்ந்தவள் அன்றே நான். [3] தாம்தாம் செய்வனவற்றை வயிற்றில் பிறந்தார் செய்தவாறே குற்றமாமித்தனையோ. [4] புத்திரர்களாகவுமாம், சிஷ்யர்களாகவுமாம், பகவத் விஷயத்தில் ஓர் அடிவர நின்றவர்கள் சிலாகிக்கத் தக்கவர்களத்தனை அன்றே. கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிசார்ந்தவாறே,

---

1. 'என்னுடைய நிலைக்கும்' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, நான் மிகுந்த ஈடுபாட்டினையுடையவள் ஆகையாலே, கரைமேலே இருக்கிற உங்கள் வார்த்தைகளைக் கொண்டு காரியம் இல்லை என்றபடி. ஆக, "நீர்" என்பதற்கு, இரண்டு வகையான கருத்து அருளிச்செய்தவாறு.

2. 'இந்தக் குலதர்மத்துக்கு' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, பகவானிடத்தில் பிராவண்யம் இந்தக் குலத்துக்குத் தர்மம் ஆகையாலே நான் செய்ததில் தவறு உண்டோ? என்பது. அப்படி, பகவானிடத்தில் பிராவண்யம் இந்தக் குலத்துக்குத் தர்மமோ? என்ன, 'தர்மந்தான்' என்பதற்குப் பிரமாணங் காட்டுகிறார் 'பேராளன்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி. 7. 4: 4. "யவரேலும் அவர் கண்டீர்" என்பது, திருவாய்மொழி. 3. 7: 1. இந்தத் திருப்பாசுரங்களில் பாகவதர்களைச் சிலாகிக்கையாலே குலதர்மம் என்பது சித்தம் என்றபடி.

3. "அன்னைமீர்காள்! நான்" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'தாம் தாம்' என்று தொடங்கி. 'குற்றமா மித்தனையோ' என்றது, குணமா மித்தனை அன்றே என்றபடி.

4. "முனிவது எங்ஙனேயோ" என்று கூட்டி பாவம் அருளிச்செய்கிறார் 'புத்திரர்களாகவுமாம்' என்று தொடங்கி. இதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'கூரத்தாழ்வார்' என்று தொடங்கி. கூரத்தாழ்வார் - கூரத்தாழ்வானுடைய திருத்தந்தையார். நங்கையார் - கூரத்தாழ்வாருடைய திருத்தேவிகள். திருவடி சார்ந்தவாறே - இறந்தவாறே. ஆழ்வான் - கூரத்தாழ்வான்.

'இன்னமும் ஒரு விவாகம் செய்துகொள்வோமோ' என்று ஆராய்ந்து, 'இதுதான் கிரமத்திலே வந்து ஆழ்வானுக்கு விரோதமாகத் தலைக்கட்டும்; இனித்தான், [1]"பிரஹ்மசாரியாகவாவது இல்லறத்தானாகவாவது வானப்பிரஸ்தனாகவாவது சந்நியாசியாகவாவது ஒருவன் இருக்கவேண்டும்; ஆபத்து இல்லாத சமயத்தில் ஒருநாள்கூட ஓர் ஆச்ரமத்திலும் சேராத வனாக இருக்கக்கூடாது" என்று சாஸ்திரம் சொல்லாநின்றது; இந்தச் சாஸ்திரத்தின் அர்த்தத்தை அநுஷ்டிப்போமோ! பாகவத பரிசர்யையைச் செய்வோமோ! என்று ஆராய்ந்து, 'அந்தச் சாமான்ய தர்மத்திற்காட்டில் இந்த விசேஷ தர்மமே பிரபலம்' என்று அதனைத் தவிர்ந்தார்.

நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின் - உங்களை அறியாவிட்டால் அவ்விஷயத்தையும் அறியாது ஒழியவேணுமோ என்கிறாள். இக்குடிக்கு [2]முற்றாட்டுப் போலேகாணும் நம்பியுடைய அழகு என்பாள் **'நங்கள் நம்பி'** என்கிறாள். [3]சர்வேசுவரனை நோக்கிப் பலவிரதங்களை நோற்றுப் பெற்றவர்களைப் போலன்றிக்கே, நம்பியை அடைந்தாயிற்று இவரைப் பெற்றது. **'உடையநங்கையார் நம்பியை அடைந்து ஆழ்வாரைத் திருவயிறு வாய்த்தார்'** என்பது பிரசித்தமே அன்றே. "நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப் பாதம் பரவி" அன்றே பெற்றது. **'கோலம்'** என்கிற இது, நகரத்துக்கு வேண்டும் அலங்காரங்களையுடைத்தாயிருக்கும் என்று, திருக்குறுங்குடிக்கு விசேடணம் ஆதல்; அன்றிக்கே, நம்பியினுடைய அழகினைச் சொல்லுதல். தாம் அகப்படுவதற்கு வேண்டிய கல்யாணகுணங்களால் நிறைவுற்று இருப்ப

---

1. "ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தோ வா வானப்ரஸ்தோத பிக்ஷுகோ
அநாஸ்ரமீ ந திஷ்டேத்து தினமேகம் அநாபதி"

2. முற்றாட்டு - ஏகபோகம்; பூர்ண ஆகாரம்.

3. 'முற்றாட்டு' என்கைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேசுவரனை' என்று தொடங்கி. பல விரதங்களை நோற்றுப் பெற்றவர்கள் - தேவகீ முதலானவர்கள். நம்பி - திருக்குறுங்குடி நம்பி. திருவயிறு வாய்த்தல் - கரு தரித்தல். பிரசித்திமாத்திரமே அன்றி, இவருடைய திருவாக்கும் உண்டு என்கிறார் 'நெடுங்காலமும்' என்று தொடங்கி. இது, திருவிருத்தம். 37. "கண்ணன் குறுங்குடி" என்கிறபடியே, அங்கு நிற்கிறவன் கிருஷ்ணன் ஆகையாலே இது, இங்குப் பிரமாணமாகத் தட்டு இல்லை.

வன் என்பாள் 'நம்பியை' என்கிறாள். அகப்படுத்துகைக்கு அழகு சீலம் முதலிய குணங்களால் அத்தலை குறைவற்றிருக்கு மாறுபோலே ஆயிற்று அகப்படுகைக்குரிய ஆசையால் இத் தலை குறைவற்றிருக்கிறபடி என்பாள் 'நம்பியை நான்' என் கிறாள். [1] நீங்களும் நம்பியைக் கண்டன்றே ஹிதம் சொல்லு கிறது என்பாள் 'கண்ட' என்கிறாள். காண்பதற்குமுன்னே மீட்டீர் அல்லீர்கோளே, இனி மீட்கப்போமோ? என்பாள் 'கண் டபின்' என்கிறாள். தண்ணீர் போனபின்னர் அணையைக்கட்டு தல் அன்றே நீங்கள் செய்கிறது என்றபடி. மீட்கப் போகாத படி இப்போது வந்தது என்? என்ன, [2] கைமேலே ஒருமுகத் தாலே தான் அகப்பட்டபடியைச் சொல்லுகிறாள் மேல்: சங்கி னேடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செம்கனிவாய் ஒன்றினேடும் செல்கின்றது என் நெஞ்சமே - [3] இதனால், நீங் கள் ஹிதம் சொல்லுவது நெஞ்சுடையார்க்கன்றே என்கிறாள் என்றபடி.

சங்கினேடும் - "செங்கமல நாண்மலர்மேல் தேன்நுகரும் அன்னம்போல்" என்கிறபடியே, கருகிறமான திருமேனிக் குப் பரபாகமான வெளுத்த நிறத்தையுடைத்தான ஸ்ரீபாஞ்ச சன்யத்தோடும், நேமியோடும் - இந்தக் கைக்கு இது ஆபரண மானால், வேறு ஒன்று வேண்டாதே தானே ஆபரணமாகப் போரும்படி இருக்கிற திருச்சக்கரத்தோடும், தாமரைக்கண்க ளோடும் - மலர்ச்சி முதலியவைகளால் தாமரைபோன்றிருக் கிற திருக்கண்களோடும், இதனால், [4] கண்காணக் கைவிட்டுப்

---

1. 'நீங்களும்' என்றது, விஷய வைலக்ஷண்யத்தைக் கண்டிருந்தும் மீட்கப் பார்ப்பது பொருந்துவதாமோ? என்றபடி.

2. 'கைமேலே ஒரு முகத்தாலே' என்பன சிலேடை: கைமேலே - திருக்கைகளின் மேலே இருக்கின்ற ஆழ்வாருடைய சேர்த்தி அழகிலே என்பது, நேர்பொருள். பிரத்யக்ஷமாக என்பது, தொனிப்பொருள். ஒரு முகத்தாலே - தாமரைக்கண்கள், செங்கனிவாய் இவற்றினுடைய அழகாலே என்பது, நேர்பொருள். ஒரேமுகமாக என்பது, வேறும் ஒருபொருள்.

3. "செல்கின்றது என்நெஞ்சமே" என்றதிலே நோக்காக, 'இதனால்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "செங்கமல நாண்மலர்" என்பது, நாய்ச்சியார் திருமொழி. பரபாகம் - பலநிறங்கள் கலத்தலால் உண்டாகும் சோபை.

4. 'கண்காணக் கைவிட்டுப் போயிற்று' என்றது, சிலேடை: திருக் கண்களைக் காண என்பது, நேர் பொருள். பிரத்யக்ஷமாக என்பது, தொனிப் பொருள். திருக்கைகளே விட்டுப்போயிற்று என்பது, நேர்பொருள். விட்டுப் போயிற்று என்பது, தொனிப்பொருள்.

போயிற்றுக் காணும். செம்கனிவாய் - கண்டபோது, நான் உன் சரக்கு அன்றே, "தவாஸ்மி-உன்னுடையவனாகிறேன்" என்ற முறுவலோடும், ஒன்றினோடும் - [1] சம்சாரயாத்திரையை மூக்தன் மறக்குமாறுபோலே, இவ்வருகுண்டானவற்றோடு அவ்வருகுள்ளவற்றோடு வேற்றுமை அற எல்லாவற்றையும் மறக்கும்படி செய்யவல்லதான திருஅதரத்தோடும். [2] அன்றிக்கே, சாதி, பொருள்கள்தோறும் நிறைந்து இருக்குமாறு போலே, நெஞ்சு அழகுதோறும் செல்லாநின்றது என்னுதல். [3] சர்வேசுவரனோடு சாம்யம் பெற்றதாகிலும் தெரிகிறது இல்லை. அவன் எங்கும் பரந்திருக்கச்செய்தே ஆகாசத்தினது பரப்புப்போலன்றிக்கே பொருள்கள்தோறும் நிறைந்து இருக்குமாறுபோலே, இதுவும் அழகுகள்தோறும் நிறைந்து இராநின்றது. செல்கின்றது - [4] இன்னமும் தறை கண்டது இல்லை. [5] நாங்களும் எல்லாம் நம்பியுடைய அழகினை அநுபவித்திருக்கிறோம் அன்றே, எங்கள் சொற்களை மறுக்கலாகாதுகாண்; என்ன,உங்கள் சொற்களை மறுத்தேனேயாகிலும் நம்பியுடைய திருமுகம் மறுக்க ஒண்ணாது என்கிறாள். எங்களுக்கு இப்படி இராமல் ஒழிவான் என்? என்ன, என் நெஞ்சமே - உங்களைப்போலன்றிக்கே, அவன்தானே காட்டப் பெறுகையாலே முழுக்க அநுபவித்த என் நெஞ்சமானது.

---

1. "ஒன்றினோடும்" என்பதனை, "செங்கனிவாய்" என்றதனோடு மட்டும் சேர்த்து, பாவம் அருளிச்செய்கிறார் 'சம்சார யாத்திரையை' என்று தொடங்கி. இவ்வருகுண்டானவை - சங்கும் சேமியும். அவ்வருகுண்டானவை - திருவதரத்துக்கு மேலேயுள்ள தாமரைக்கண்கள்.

2. "ஒன்றினோடும்" என்றதனை, சங்கு முதலானவற்றினோடும் கூட்டி வேறும் ஒருகருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

3. அணுவான நெஞ்சுக்கு அழகுகள்தோறும் பரந்து செல்லுதல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேசுவரனோடு' என்று தொடங்கி. சாம்யத்தை விவரிக்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

4. "செல்கின்றது" என்ற நிகழ்காலத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இன்னமும்' என்று தொடங்கி.

5. "தாமரைக்கண்கள், செங்கனிவாய்" என்பனவற்றிற்குத் தனித்தனியே கருத்து அருளிச்செய்தார் இதுகாறும். இனி, எல்லாவற்றையும் சேர்த்து ரசோக்தியாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'நாங்களும்' என்று தொடங்கி.

[1]எங்ஙனேயோ என்னை முனிவது நீர் - [2]காதலுக்குக் காரணமாக இருக்கிற நம்பியினுடைய அழகினைப் பொடியாதே, என்னைப் பொடியக் கூடினபடி எங்ஙனேயோ? [3]பிராவண்யமே ஸ்வபாவமாம்படி வளர்த்துவைத்து, இப்போதாகப் பொடிகிறபடி எங்ஙனேயோ? முன்பு நீங்கள் கற்பித்துப் போந்து, அது பயன்பட்டவாறே பொடியுமத்தனையோ? கோலம்-உங்கள் ஹிதவசனத்துக்கும் மீளாதபடியான அழகு. திருக்குறுங்குடி நம்பியை-பரத்துவத்தில் முதன்மையிலேயோ அகப்பட்டது மீளுகைக்கு. [4]நம்பியை - குணங்களில் நிறைவின்மை உண்டாய்த்தான் மீளுகிறதோ. நான் கண்டபின் - இவ்விஷயத்தில் ஆசை இல்லாமல் மீளுகிறேனே. சங்கினை டும்- [5]ஸ்ரீ பாஞ்சசன்யத்தோடே விசேடித்து ஒரு சம்பந்தம் உண்டுகாணும் இவளுக்கு, திருவாயின் அமிர்த இனிமையை அறிந்திருக்கையாலே; ஒருகலத்திலே ஜீவிப்பாரைப் போலே. (1)

488.

**என்நெஞ் சினல் நோக்கிக் காணீர் என்னை முனியாதே.**
**தென்னன் சோலைத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்**
**மின்னு நூலும் குண்டலமும் மார்பில் திருமறுவும்**
**மன்னு பூணும் நான்கு தோளும் வந்தெங்கும் நின்றிடுமே.**

**பொ - ரை:**—என்னை முனிந்துகொள்ளாமல் என் நெஞ்சினாலே அநுபவித்துக் காண்பீராக; தெற்குத் திக்கிலேயுள்ள சிறந்த சோலைகள் சூழ்ந்த திருக்குறுங்குடி என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியை நான் பார்த்தபின்னர், மின்னுகின்ற பூணுநூலும்

---

1. சிறிதுபோழ்து தாழ்த்துவந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவர்க்கு, திருப்பாசுரத்தின் பொருளைச் சுருக்கமாக மீண்டும் அருளிச்செய்கிறார் 'எங்ஙனேயோ' என்று தொடங்கி.

2. "என்னை முனிவது எங்ஙனேயோ" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'காதலுக்கு' என்று தொடங்கி.

3. "அண்ணாமீர்காள்! நீர் என்னை முனிவது எங்ஙனேயோ" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'பிராவண்யமே' என்று தொடங்கி. மேல் வாக்கியத்தை விவரிக்கிறார் 'முன்பு நீங்கள்' என்று தொடங்கி.

4. நம்பி - பூர்ணன்; நிறைந்தவன்.

5. முன்னே சங்கினை அருளிச்செய்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ பாஞ்சசன்யத்தோடே' என்று தொடங்கி.

குண்டலங்களும் திருமார்பில் எழுந்தருளியிருக்கின்ற பெரியபிராட்டி யாரும் ஸ்ரீவத்சமும் நிலைபெற்ற ஆபரணங்களும் நான்கு திருத்தோள் களும் அங்கு அங்கே வந்து நிற்கின்றன.

வி - கு :— நோக்கிக் காணீர் : நோக்கல்நோக்கம். அநுபவித்து அறிமின் என்பது பொருள். முனியாதே காணீர் என்க. கண்டபின் எங்கும் நின்றிடும் என்க. திருமறு - அழகிய மறுவுமாம்.

ஈடு :—இரண்டாம்பாட்டு. [1] நம்பியுடைய தோள் அழகும் ஆபரணங்களின் அழகும் எல்லாத் திக்குக்களிலும் நின்று நலி கின்றன என்கிறாள்.

நாங்களும் நம்பியை அநுபவித்தே பெண்தன்மை கெடா மல் இருக்கின்றிலேமோ? என்ன, என்நெஞ்சினால் நோக்கிக் காணீர் - [2] நீங்கள் என்னைப் பொடியாதே உங்களையே பொடிந்துகொள்ளும்படி, என்நெஞ்சை இரவலாக வாங்கிப் பார்க்கவல்லீர்கோளே. என்றது, 'இவளையன்றோ நாம் இத் தனை சொல்லிற்று' என்று பின்னை உங்களை நீங்களே பொடிந்துகொள்ளுவீர்கோள் என்றபடி. என்னை முனியாதே - [3] "'கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளை என்று எண் ணப் பெறுவரே' என்னக்கூடியதாக இருக்க, நம்வயிற்றில் பிறந்த இதுவே காரணமாக, இவள் நின்றநிலை பாராமல் நாம் பொடிந்தோமித்தனை அன்றோ" என்று பின்னையும் உங்களை நீங்களே பொடிந்து கொள்ளுவீர்கோள். 'என்நெஞ்சினால் நோக்கிக் காணீர்' என்கையாலே உங்களுக்குப் பக்தி இல்லை

---

1. திருப்பாசுரத்தின் பின் இரண்டு அடிகளையும் கடாகூத்து அவ தாரிகை அருளிச்செய்கிறார். "எங்கும் நின்றிடும்" என்றது, உருவெளிப் பாடு ஆகையாலே, அது பாதகமானமையைப் பற்ற 'நலிகின்றன' என்கிறாள்.

2. உன் நெஞ்சினால் காணின் வரும் வாசி ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி.

3. "என்னை முனியாதே" என்றதற்கு, என்னைக் கொண்டாடும்படி என்றாய், அதனால் பலித்தது, உங்களை முனிந்து கொள்ளும்படியாக்கி, அதனைப் பிரமாண மூலமாக அருளிச்செய்கிறார் 'கணபுரம்' என்று தொடங்கி.

முள்ளெயிறு எய்ந்தில கூழை முடிகொடா
தெள்ளியள் என்பதோர் தேசிலள் என்செய்கேன்?
கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும்
பிள்ளையைப் பிள்ளை என்றெண்ணப் பெறுவரே,

என்பது, பெரிய திருமொழி. 8. 2 : 9.

என்கிறாள் என்றபடி. ஆயின், பக்தியிலுல் அன்றிச் சாஸ்திரங்களின் அறிவைக்கொண்டு அவனை அறியப்போகாதோ? என்ன, "பக்தியா சாஸ்திராத் வேத்மி ஜனார்த்தனம் - பக்தியுடன் சாஸ்திரத்தால் கண்ணனை அறிகிறேன்" என்கிறபடியே, [1] சஞ்சயனை நோக்கித் திருதராட்டிரன், நீயும் நானும் ஒருசேர சாஸ்திரவாசனைகள் செய்து போந்தோம், இங்ஙனமிருக்கவும், நான் உன்பக்கலிலே கேட்டு அறியவேண்டும்படி உனக்கு இவ்வர்த்தத்தில் தெளிவு உண்டானபடி எங்ஙனே? என்ன, எனக்குள்ள வாசி கேளாய், மாயாம் நசேவே - நான் வஞ்சனைகள் செய்யமாட்டேன், அரசனுக்கு ஒரு தாழ்ச்சியும் தனக்கு ஓர் உயர்வும் சொல்லுகிறான் ஆகையாலே, பத்ரந்தே-உனக்கு மங்களம் உண்டாகுக என்கின்றான். நவ்ருதா தர்ம மாசரே - நான் வீண் தர்மங்களை ஒருநாளும் செய்தறியேன். சுத்த பாவம் கதஃ - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருப்பவன். பக்த்யா-வரி அடைவே கற்று அவனை அறிந்தவன் அல்லேன், பக்தியோடுகூடிய சாஸ்திரத்தாலே அவனை அறிந்தவன்"என்றானே அன்றோ. [2] "திருதராட்டிரரே! உமது வித்யையானது வித்யை அன்று, என்னுடைய வித்யையானது அழியாதிருக்கின்றது, வித்யை அற்றவரும் இருளில் தள்ளப்பட்டவருமான நீர் கேசவனை அறியமாட்டீர்" என்று, தங்கள் தங்களுக்கு என்னவும் ஒரு [3] கைம்முதலுடையார்க்கு அவனை அறியப்போகாது என்றதே அன்றோ. [4] அப்படியே, நீங்களும் என்நெஞ்சினையுடையீராய்க்கொண்டு அறியப் பாருங்கோள் என்கிறாள்.

---

1. "பக்தியா" என்ற சுலோகத்துக்குப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'சஞ்சயனை நோக்கி' என்று தொடங்கி. இந்தச் சுலோகம், பாரதம் உத்யோக பர். 68 : 5.

2. பக்தியோடு கூடிய சாஸ்திரத்தால் அன்றி, கேவல சாஸ்திர ஞானத்தால் அறியப்போகாமைக்கு மற்றுமோர் பிரமாணம் காட்டுகிறார் 'திருதராட்டிரரே!' என்று தொடங்கி.

"வித்யா ராஜந் நதே வித்யா மம வித்யா நஹீயதே
வித்யா ஹீநஃ தமோத்வஸ்தஃ நாபிஜாநாஸி கேசவம்"

என்பது, பாரதம் உத்யோகபர். 68 : 2.

3. 'கைம்முதல்' என்றது, பக்தியோடு கூடியதல்லாத கேவல சாஸ்திரத்தை என்றபடி.

4. மேல் வாக்கியத்தில், பக்தியிலுல் ஒழிய அவனை அறியப்போகாது என்றதனை, சித்தவத்கரித்தபடியே, நீங்களும் என் நெஞ்சினையுடையீராய்க் கொண்டு அறியப் பாருங்கோள் என்கிறார் 'அப்படியே' என்று தொடங்கி.

தென்னன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை - [1] நம்பியுடைய வடிவிற்கு ஆபரணம் போலேயாயிற்று ஊருக்குச் சோலை. [2] தெற்குத் திக்கிலேயுள்ள நன்ஞான சோலை என்னுதல். அன்றிக்கே, "தென்னன் கொண்டாடும்" என்னுமாறு போலே, பாண்டியனால் கொண்டாடப்படுகின்ற திருக்குறுங்குடி என்னுதல். நான் கண்டபின் - [3] ஆபரணச் சேர்த்தியையும் சோலையின் சிறப்பையும் அறிந்த நான் கண்டபின். மின்னுநூலும் - மேகத்தில் மின்னியது போன்றிருக்கின்ற திரு யஜ்ஞோபவீதமும். குண்டலமும்-பரந்த மின் ஓரிடத்திலே சுழித்தாற்போலே இருக்கிற திருமகரகுண்டலமும். மார்பில் திருமறுவும் - வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி இருக்கிற ஸ்ரீவத்சமும். மன்னுபூணும் - நாய்ச்சிமாரோடு கலக்கும்போதும் கழற்றவேண்டாதபடி இருக்கிற ஆபரணங்களும். என்றது, மிகுந்த சுகத்தைக் கொடுக்கக்கூடியதாயிருத்தலைக் குறித்தபடி. நான்குதோளும் - [4] "எல்லா ஆபரணங்கட்கும் அழகினைக்கொடுக்கக் கூடியதான" என்கிறபடியே, ஆபரணங்கட்கு ஆபரணமாய்க் கல்பகதரு பணைத்தாற்போலே இருக்கிற திருத்தோள்கள் நான்கும். வந்து எங்கும் நின்றிடும் - 'உங்கள் ஹிதவசனத்தின்படியே செய்யவேணும்' என்று நான் கடக்க நிற்கவும், அங்கேயும் பலவகையாக வாராநின்றன. [5] "மரவுரி, மான்தோல் இவற்றை உடுத்திருப்பவரும்,

---

1. "மின்னுநூலும்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'நம்பியுடைய' என்று தொடங்கி.

2. "தென்னன்" என்பதற்கு, இரண்டுபொருள். முதற்பொருளில், "தென்னன்" என்பது, தொடர்மொழி. இரண்டாவதுபொருளில், ஒரு மொழி.

"கொன்னவில் கூர்வேல் கோன்நெடு மாறன் தென்கூடற்கோன்
தென்னன் கொண்டாடும் தென்திரு மாலிருஞ் சோலையே"

என்பது, பெரியாழ்வார் திருமொழி. 4. 2: 7.

3. பாசுரத்தில் மேலும் கீழும் கடாக்ஷித்து "நான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆபரணச் சேர்த்தியையும்' என்று தொடங்கி.

4. "ஸர்வபூஷண பூஷார்ஹாः கிமர்த்தம் ந விபூஷிதாः"
என்பது, ஸ்ரீராமா. கிஷ். 3: 15.

5. "வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஶ்யாமி சீர கிருஷ்ணாஜிநாம்பரம்
க்ருஹீத தநுஷம் ராமம் பாஶஹஸ்தம் இவ அந்தகம்"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 39: 14. இராவணனைப் பார்த்து மாரீசன் கூறியது. மாரீசன் கூற்றுக்குக் காரணம், அச்சம். இங்கே, "எங்கும் நின்றிடும்" என்பதற்குக் காரணம், ஈடுபாடு.

வில்லைத் தரித்திருப்பவருமான ஸ்ரீ ராமபிரானை, பாசக்கயிற் றைக் கையிலேயுடைய யமனைப்போன்று ஒவ்வொரு மரத்தி லும் பார்க்கிறேன்" என்பதுபோலே, உகப்பார்க்கும் உகவா தார்க்கும் பலம் ஒன்றாய்விட்டது. நான் எங்கே ஒதுங்குவேன், சொல்லிக் காணீர்கோள்.[1] (2)

## 489.

**நின்றிடும் திசைக்கும் நையும் என்று அன்னையரும் முனிதிர் குன்ற மாடத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின் வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும் நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா நெஞ்சுளும் நீங்காவே.**

**பொ-ரை:**—செயல் அற்று நிற்பாள், பின் அறிவு கலங்குவாள், பின் வருந்துவாள் என்று தாய்மாராகிய நீங்களும் முனியாநின்றீர் கள்; மலைகளைப்போன்று மாடங்கள் உயர்ந்து காணப்படுகின்ற திருக் குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்னர், வெற்றி பொருந்திய வில் லும் தண்டமும் வாளும் சக்கரமும் சங்கமும் ஒருபடிப்பட நின்று கண்களுள் தோன்றி நீங்குகின்றன இல்லை; நெஞ்சுக்குள்ளேயும் நீங்கு கின்றன இல்லை என்செய்வேன்?

**வி-கு:**—என்று முனிதிர்; கண்டபின் கண்ணுள் நீங்கா, நெஞ் சுளும் நீங்கா என்க.

**ஈடு:**—மூன்றாம்பாட்டு.[2] நம்பியுடைய திவ்விய ஆயுதங் களின் சேர்த்தி அழகு, உள்ளும் புறம்பும் ஒக்க எப்பொழுதும் தோன்றுகின்றது என்கிறாள்.

நின்றிடும் திசைக்கும் நையும்-[3] "ஸ்ரீ ராமனுடைய பாணங் களால் அரக்கர் சேனை அறுக்கப்பட்டதாகவும் பிளக்கப்பட்ட

---

1. "அன்னைமீர்" என்று, உபாய அத்யவசாய நிஷ்டரைச் சொல்லுகிற தாகையாலே, "அறிவரியபிரானை" என்றவிடத்திற்போலே, த்வராநிஷ்ட ராய் மங்களாசாசனபரரான தம்முடைய நினைவாலே அவர்களை அஜ்ஞராக நினைத்து, "என் நெஞ்சினுள் நோக்கிக் காணீர்" என்கிறார் என்று இப்பாசு ரத்திற்குச் சுவாபதேசப்பொருள் அருளிச்செய்வர்.

2. பாசுரத்தின் பின் இரண்டு அடிகளைக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "சிந்தம்பிந்தம் ஸரைஃ தக்தம் ப்ரபக்தம் ஸஸ்த்ரபீடிதம்
பலம் ராமேண தத்ருஶுஃ ந ராமம் ஸீக்ர காரிணம்"
என்பது, ஸ்ரீராமா. யுத். 94:22.

தாகவும் கொளுத்தப்பட்டதாகவும் முறியடிக்கப்பட்டதாகவும் கண்டார்கள்" என்கிறபடியே, இராமபாணங்கள் ஒன்று செய்தது மற்றொன்று செய்யாதாப்போலே ஆயிற்று, கம்பியுடைய [1]அழகுகளும். [2]ஒன்று செயல் அறுதலைப் பண்ணும், ஒன்று அறிவைக் குடிபோக்கும், ஒன்று அறிவைக்கொடுத்து வருந்தப்பண்ணும். செயல் அற்றவள் ஆகா நின்றாள், அறிவுகெடா நின்றாள், வருந்தா நின்றாள் என்று என்குற்றமாக நினைத்துப் பொடியா நின்றீர்கோள். அன்னையரும் முனிதிர் - [3]தெளிந்திருப்பார்தாம் பொடியப்பெற்றதோ. இவற்றிற்கெல்லாம், தாயாயிருக்கிற நீங்கள் இப்படிச் செய்யக்கடவதோ. [4]தெளிவது கலங்குவதாய் இவைதாமே யாத்திரையாகப் போந்த நீங்களும் முனியா நின்றீர்கோள். "ஆழியொடும் பொன்னர் சார்ங்கமுடைய அடிகளே இன்னர் என்றறியேன்" என்னுமவர்கள் அலரோ. [5]யௌவனத்தில் நீங்கள் செய்து போந்தவற்றை அப்பருவத்தில் நான் செய்தவாறே குற்றமாயினவோ. இந்தக்

---

1. 'அழகுகளும்' என்றது, ஆயுதங்களினுடைய சேர்த்தியால் வந்த அழகுகளும் என்றபடி.

2. அறிவு குடிபோனால் நையும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒன்று' என்று தொடங்கி.

3. "அன்னையரும்" என்ற உம்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தெளிந்திருப்பார்' என்று தொடங்கி. என்றது, முன்னர் நீங்களும் இவ்விஷயத்தில் ஈடுபட்டே அன்றோ கிடந்தீர்கள், ஆகையாலே, 'தெளிந்திருப்பார்' என்கிறாள் என்றபடி. இவற்றிற்கெல்லாம் - இந்த ஈடுபாட்டிற்கெல்லாம்.

4. 'தெளிவது கலங்குவதாய்' என்றது, யௌவன தசையில் தெளிவது கலங்குவதாய் இருந்ததைக் குறித்தபடி. அப்படி இருந்ததற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆழியொடும்' என்று தொடங்கி.

இன்னர் என்றறியேன்
அன்னே! ஆழியொடும்
பொன்னர் சார்ங்கமுடைய அடிகளே
இன்னர் என்றறியேன்.

என்பது, பெரிய திரு. 10. 10 : 9.

இது, பெண்பிள்ளை வார்த்தையாகவும், இங்கு, "அன்னையர்" என்றது, அத்யவசாயநிஷ்டரான ஸ்ரீ வைஷ்ணவர்களே ஆகையாலே, அவர்களுக்கும் தெளிவதும் கலங்குவதும் உண்டு ஆகையாலே, இங்குப் பிரமாணமாகக் குறை இல்லை.

5. 'பகவத்விஷயத்தில் ஈடுபட்டவர்கள் தெளிவது கலங்குவது ஆவர்கள்' என்பதற்கு, ஸ்வாபதேச சம்பந்தமாகப் பிரமாணம் அருளிச்செய்து, இனி, அந்யாபதேச சமாதியாலே அருளிச்செய்கிறார் 'யௌவனத்தில்' என்று தொடங்கி.

குடிக்காகப் பகவத் பிராவண்யமே யாத்திரைபோலேகாணும். குன்றம் மாடம் திருக்குறுங்குடி-மலைகளை நெருங்க வைத்தாற் போலே இருக்கிற மாடங்களையுடைத்தான திருக்குறுங்குடி. நான் கண்டபின்-[1] ஆயுதம் பிடித்த பிடியில் வாசி அறியும்நான் கண்டபின். வீரபத்தினி ஆகையாலே வாசி அறிவாளே அன்றே! [2] பெருமாளுக்கு வில் எடுத்துக்கொடுப்பவள் பிரட்டி அன்றே.

[3] பெருமாள் 'வில்லைத் தா' என்ன, கொடுத்து, அவர்கையும் வில்லுமாய் நின்ற நிலையைக் கண்டவாறே, 'நீர் இப்படி வில்லைத் தரித்தவராய்த் திரியப் புக்கால் உம்மை இருடிகள் வந்து சரணம் புகுவார்கள்; அவர்களுக்குப் பகைவர்களான இராக்கதர்களோடு எதிர்இட வேண்டிவரும், அது பின்னை சாதிப் பகையாம், பின்னை நீரும் நானும் இரண்டு இடத்திலே இருக்க வேண்டிவரும்; ஆனபின்னர், வில்லைப் போகட்டுத் தாபத வேடத்தோடே திரிய அமையும்' என்றளே அன்றே. பெருமாள்பக்கல் சாங்கமே அன்றே இப்படிச் சொல்லுவித்தது. வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும் நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா - [4] திவ்விய ஆயுதங்களுக்கு, ஆயுதங்கள் ஆபரணங்கள் என்னும் இரண்டு இடங்களிலும் மெய்க்காட்டு உண்டுகாணும். [5] போர்த்தலையிலாயிற்று ஆயுதம் என்று அறியலாவது. "இந்திரன் வில்லுக்கு ஒப்பானவை

---

1. "வென்றி வில்லும்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து "நான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆயுதம்' என்று தொடங்கி. வாசி அறிதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'வீரபத்தினி' என்று தொடங்கி.

2. வாசி அறிந்து கொடுத்த இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பெருமாளுக்கு' என்று தொடங்கி.

3. 'பெருமாள்' என்றது முதல், 'இப்படிச் சொல்லுவித்தது' என்றது முடிய, இடைப்பிறவரல். 'சாங்கம்' என்றது, சிலேடை: பஞ்சாதம் என்றும், வில் என்றும் பொருள்.

4. காதலி, பகைவர்களைக் கொல்வதற்குக் காரணமான ஆயுதங்களைச் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திவ்யாயுதங்களுக்கு' என்று தொடங்கி. என்றது, அழகுக்கு உடல் ஆகையாலே சொல்லுகிறாள் என்றபடி. மெய்க்காட்டு - எண்ணிக்கை கொடுத்தல்.

5. அது அறியும்படி எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'போர்த்தலையில்' என்று தொடங்கி.

"ஸக்ர சாப நிபே சாபே க்ருஹீத்வா ஸத்ரு காசனே"

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 3 : 9. இராமலக்ஷ்மணர்களைக் கண்ட திருவடி, அவர்களைப் பார்த்துக் கூறியது.

யும் பகைவர்களைக் கொல்லக்கூடியனவுமான விற்களைப்பிடித்துக்கொண்டு நிற்கின்ற நீங்கள்" என்கிறபடியே, அநுகூலர் கண்டு ஜீவிக்கைக்கும், பகைவர்களுக்குப் பிடித்த பிடியிலே முடிகைக்கும் காரணமாக இருக்குமன்றே. வென்றி வில்லும்-உகப்பாரோடு உகவாதாரோடு வாசி அற வெற்றியே இயல்பாக இருக்கின்ற திருவில்லும். தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும் - அந்த வில்லின் ஸ்வபாவத்தையுடைத்தான மற்றைய திவ்ய ஆயுதங்களும். நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா-கண்வட்டத்தை விடாதேநின்று தோன்றுகின்றன. இவை கண்முகப்பே நின்று நலியப் புக்கவாறே, அஞ்சிக் கண்களைச் [1] செம்பளித்தவாறே நெஞ்சுக்குள்ளே நின்று பிரகாசிக்கத் தொடங்கின. நெஞ்சுள்ளும் நீங்கா - மேலே "வந்து எங்கும் நின்றிடுமே" என்றுள்; இங்கு உள்ளும்புறம்பும் ஒக்க நலியா நின்றன என்கிறுள். இவற்றிற்கு வாசி என்? என்னில், நம்பியுடைய அழகுக்கு உள்ளன எல்லாம் உண்டாயிற்று இவளுக்கும், அவ்வழகு எங்கும் ஒக்க நலிகிறுப்போலே ஆயிற்று, இவளும் கட்கண்ணாலும் உட்கண்ணாலும் அநுபவிக்கிறபடியும். (3)

## 490.

**நீங்க நில்லா கண்ண நீர்கள் என்று அன்னை யரும் முனிதிர்**
**தேன்கொள் சோலைத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்**
**பூந்தண் மாலைத் தண்து ழாயும் பொன்முடி யும்வடிவும்**
**பாங்கு தோன்றும் பட்டும் நாணும் பாவியேன் பக்கத்தவே.**

**பொ - ரை:**—கண்களிலே தண்ணீர் எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கின்றன என்று அன்னையரும் முனிகின்றீர்கள்; தேனைக் கொண்டிருக்கின்ற சோலைகளாற் சூழப்பட்ட திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின், அழகிய குளிர்ந்த திருத்துழாய்மாலையும் பொன்முடியும் திருமேனியும் அழகாகத் தோன்றுகிற பட்டாடையும் அரைநாணும் பாவியேனுகிய என்னுடைய பக்கங்களிலேயே இருக்கின்றன.

**வி - கு:**—நீர்கள் நில்லா என்க. பாங்கு - தகுதி. நாண் - அரைஞாண்.

---

1. செம்பளித்தல் - அச்சத்திற்குக் காரணமான பொருள்களைக் கண்டவாறே கண்களை இடுக்கிக் கொள்ளுதல்.

ஈடு:— நான்காம்பாட்டு. [1] காத்தலுக்குக் கவித்தமுடியும், தனிமாலையும், பரிவட்டப்பண்பும் முதலானவை பக்கங்களிலே நின்று என்னை நலியாநின்றன என்கிறாள்.

நீங்கநில்லா கண்ணநீர்கள் - அவன் நீங்க, கண்களில் நீர் நீங்குகின்றதுஇல்லை. அன்றிக்கே, நீங்க நில்லா-[2] பேரநில்லா என்னுதல். அன்றிக்கே, நீங்கநில்லா என்பதனை மெலித்தல் விகாரமாகக்கொண்டு [3] நீக்க நிற்கின்றன இல்லை என்னுதல். நீக்க - நீங்க என வல்லொற்று மெல்லொற்றாகத் திரிந்தது. அன்னையரும் முனிதிர் - உங்கள் கண்கள் [4] ஆனந்தபாஷ்பமும் பாய்ந்து அறியாவோ. தேன்கொள் சோலைத் திருக்குறுங்குடி - அந்தச்சோலையில் தேனை வற்றச்செய்யமாட்டீர்களோ நான் என் கண்ணநீரையும் மாற்ற. [5] இந்தக் கண்ண நீர்க்கு ஸஹ்யம் அவ்வூரில் இனிமைபோலேகாணும். நான் கண்ட பின் - [6] அவனுடைய ஸ்வாபாவிகமான மேன்மையை அறியும் நான் கண்டபின். பூந் தண் மாலைத் தண் துழாயும் - இரண்டு உலகங்களுக்குமாக முதலியாகவிட்ட, காட்சிக்கு இனியதாய்க் குளிர்ந்த செவ்வித் திருத்துழாய்த் தனிமாலையும். பொன்முடியும்-இரண்டு உலகங்களும் தன்முடியிலே செல்லும்படி கவித்த திருமுடியும். வடிவும் - அம்மாலைக்கும் முடிக்கும் இசைந்த வடிவும். '**இவனே மாலைக்கும் முடிக்கும் உரியான்**' என்று

---

1. பாசுரத்தின் இரண்டு அடிகளையும் கடாகூத்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'பேரநில்லா' என்றது, நீங்குகின்றன இல்லை என்றபடி. இப்பொருளில், "நீங்க நில்லா" என்பது, ஒருசொல் நீர்மைத்து.

3. மூன்றாவது பொருளில், 'நீக்க' என்றது, தாய்மார்கள் நீக்க என்றபடி.

4. 'ஆனந்தபாஷ்பமும் பாய்ந்து அறியாவோ' என்றது, தாய்மாரான உங்கள் கண்கள் பகவானை அநுபவித்தலால் உண்டாகும் ஆனந்தபாஷ்பமும் பாய்ந்து அறியாவோ? என்னை இப்படிச் சொல்லுகைக்கு என்றபடி.

5. 'இந்தக் கண்ணநீர்க்கு' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, சோலையிலுள்ள தேனை தானும் நானும் கூட இருந்து மதுபானம் செய்யவேண்டி இருக்க, அதனை நான் இழந்திருப்பதே! என்னும் ஆற்றாமையாலே கண்ணநீர் பாய்கிறது என்பது. ஸஹ்யம் - பிறப்பிடமான ஸஹ்யமலை.

6. பின் இரண்டு அடிகளையும் கடாகூத்து "நான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

[1]படிஎடுத்துக் காட்டலாமே. [2]"'வடிவும்' என்பதே!" என்று ஈடுபட்டவராய் இருப்பர். பாங்கு தோன்றும் பட்டும்-திருஅரை பூத்தாற்போலே அங்குத்தைக்குப் பாங்காகத் தோற்றுகிற திருப்பீதாம்பரமும். நாணும் - விடுநாணும். பாவியேன் பக்கத் தவே - அநுபவிக்கத் தருதல், உருவெளிப்பாடாய்த் தோன்றுதேஒழிதல்செய்யாதபடியான மஹாபாவத்தைச்செய்தேன். [3]அருகே நின்று பிரகாசித்துக்கொண்டுநின்றன. அநுபவயோக்கியமாகப் பெறுகின்றன இல்லை. [4]அணைக்கத்தருதல், அகலகிற்றல் செய்கின்றன இல்லை. (4)

## 491.

**பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று அன்னை யரும் முனிதிர்**
**தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியைநான் கண்டபின்**
**தொக்க சோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும்**
**தக்க தாமரைக் கண்ணும் பாவியேன் ஆவியின் மேலனவே.**

**பொ - ரை:**—அவன் வருவதற்குரிய பக்கத்தையே நோக்கிக் கொண்டு நிற்பாள், வருந்துவாள் என்று அன்னையாகிய நீங்களும் முனியாநின்றீர்கள்; தக்க கீர்த்தி நிறைந்த திருக்குறுங்குடியிலேயுள்ள நம்பியை நான் பார்த்தபிறகு, கோவைக்கனிபோன்ற பிரகாசம் திரண்டிருக்கிற திருஅதரமும் நீண்ட புருவங்களும் தகுந்ததான தாமரை போன்ற திருக்கண்களும் பாவியேனுகிய என்னுடைய உயிரிடத்திலே தங்கி நலியாநின்றன.

**வி - கு:**—ஆவியின்மேலன: என்பதில், மேல் என்பது, ஏழாம் வேற்றுமையுருபு. ஆவியினிடத்தன என்பது, பொருள்.

---

1. 'படி' என்றது, சிலேடை: திருஷ்டாந்தம் என்றும், திருமேனி என்றும் பொருள்.

2. 'வடிவும்' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, இப்பாசுரத்திலே முன்னும் பின்னும் கூறிய ஆபரணங்களின் மத்தியில் வடிவையும் ஆபரண கோடியிலே சேர்த்து அருளிச்செய்வதே என்பது. 'ஈடுபட்டவராய் இருப்பர்' என்றது, நஞ்சீயரை.

3. "பக்கத்தவே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அருகே நின்று' என்று தொடங்கி.

4. "பக்கத்தவே" என்ற ஏகாரத்தின் பொருளை அருளிச்செய்கிறார் 'அணைக்கத்தருதல்' என்று தொடங்கி.

**ஈடு :**—ஐந்தாம்பாட்டு. [1] ஒன்றற்கொன்று தகுதியான நம்பியுடைய திருமுகத்தில் அழகுகள் என் உயிர்நிலையிலே நலியாகின்றன என்கிறாள்.

பக்கம் நோக்கி நிற்கும் - அவன் வருகைக்குச் சம்பாவனை யுள்ள பக்கத்தைப் பார்த்துக்கொண்டு நிற்குமாயிற்று. [2] "இந்தச் சீதை, அரக்கிமார்களையும் பார்ப்பது இல்லை, இந்தப் பூவும் பழமுமுள்ள மரங்களையும் பார்க்கிறது இல்லை, ஒரே இடத்தில் நிறுத்திய மனத்தையுடையவளாய் இராமனையே நிச்சயமாகப் பார்க்கிறாள்." என்றது, [3] அரக்கியர்களைப் பார்ப்பதோடு புஷ்பங்களையும் பழங்களையுமுடைய மரங்களைப் பார்ப்பதோடு வாசி அற்று இருக்கிறது காணும் இவளுக்கு. அருகிருந்தவர்களையும் பாராளாயிற்று என்றபடி. நையும் - அந்தத் திக்கில் வந்து தோற்றுமையாலே வருந்துவாள். என்று அன்னையரும் முனிதிர்- [4] அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்த படியை அறியும் நீங்களும் முனியாகின்றீர்கோள். "இளமைப்

---

1. திருப்பாசுரத்தின் பின் இரண்டு அடிகளையும் கடாகதித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அப்படிப் பார்த்துக்கொண்டிருந்த பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இந்தச் சீதை' என்று தொடங்கி.

"ந ஏஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபல த்ருமாந்
ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமம்ஏவ அநுபஶ்யதி"

என்பது, ஸ்ரீராமா. சுந். 16: 25.

3. அரக்கியர்களோடு, இன்பத்தைத் தருகின்ற மலர்களையும் சேர்த்துக் கூறுதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அரக்கியர்களைப் பார்ப்பதோடு' என்று தொடங்கி. என்றது, பிரிவாற்றுமையால், மலர்களும் பாதகப் பொருளாகத் தோன்றுகின்ற காரணத்தால், அரக்கியர்களையும் மலர்களையுடைய மரங்களையும் சேர்த்துக் கூறுகிறார் என்றபடி. "ராமம்ஏவ - இராமனையே" என்ற ஏகாரத்தால் கிடைத்த பொருளை அருளிச்செய்கிறார் 'அருகிருந்தவர்களையும்' என்று தொடங்கி.

4. "அன்னையரும்" என்ற உம்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அறியாக்காலத்துள்ளே' என்று தொடங்கி. அதனைத் திருஷ்டாந்தத்தோடு விவரிக்கிறார் 'இளமைப்பருவமே' என்று தொடங்கி.

"அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து
அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்"

என்பது, திருவாய். 3. 3: 3.

"பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தோ லக்ஷ்மணே லக்ஷ்மிவர்த்தநஃ
ராமஸ்ய லோகராமஸ்ய ப்ராதுர் ஜ்யேஷ்டஸ்ய நித்யஶஃ"

என்பது, ஸ்ரீராமா. பால. 18; 27.

பருவமே தொடங்கி பரம சிநேகிதராய் இருந்தார்" என்னும் படி அன்றே இவள் தன்படி. தக்க கீர்த்தித் திருங்குறுங்குடி நம்பியை நான் கண்டபின் - சொன்னபடி எல்லாம் தகும்படி இருக்கிற கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை அக் கீர்த்தியினையே ஜீவனமாக இருக்கும் நான் கண்டபின். தொக்க சோதித் தொண்டை வாயும் - [1]"கோலம் திரள் பவளக் கொழுந்துண்டம்" என்னுமாறுபோன்று, ஒளிப்பொருளே திரண்டாற்போலே இருக்கிற தொண்டைபோன்ற திருவாயும். தொண்டை - கோவை. இதனை, அதரத்துக்கு ஒப்பாகச் சொல்லக்கடவதன்றே. நீண்ட புருவங்களும் - [2]உபமானம் அற்ற தாய், தனக்கு ஓர் அவதி இல்லாமையாலே தன்னேற்றமே சொல்லும்படியிருக்கிற திருப்புருவங்களும். தக்க தாமரைக் கண்ணும் - அதனுடைய நெடுமைக்கு எல்லை இல்லாதது போன்று அளவிட்டு அறியமுடியாததாய், அப்புருவங்களுக்குத் தகுதியாயிருக்கிற தாமரைக்கண்களும். [3]தாமரையை ஒரு போலியாகச் சொல்லில் சொல்லலாமத்தனை. பாவியேன் ஆவியின்மேலனவே - உயிர்நிலையிலே நலியாநின்றன. [4]அக வாயில் வெளிச்சிறப்பு அழகிது, அப்படியே புறம்பேயும் தோற்றப் பெறுகிறது இல்லை என்பாள், தன்னைப் **'பாவியேன்'** என்கிறாள். (5)

## 492.

**மேலும் வன்பழி நங்குடிக்கு இவள் என்று அன்னை காணக்கோடாள்**
**சோலை சூழ்தண் திருக்குறுங்குடி நம்பியைநான் கண்டபின்**
**கோல நீள்கொடி மூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும்**
**நீல மேனியும் நான்கு தோளும் என்நெஞ்சம் நிறைந்தனவே.**

---

1. "கோலந்திரள் பவளக்கொழுந்துண்டங்கொலோ? அறியேன்" என்பது, திருவாய். 7. 7: 3.

2. "தொண்டைவாய்" என்பது போன்று, புருவங்களுக்கு உவமை சொல்லாமையாலே 'உபமானம் அற்றதாய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. இதற்கு உபமானம் உண்டாகச் சொல்லலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தாமரையை' என்று தொடங்கி.

4. அழகுகள் ஈடுபடுத்துவது நல்லதுதானே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அகவாயில்' என்று தொடங்கி. வெளிச்சிறப்பு - பிரகாசம்.

**பொ - ரை :**—இவள், மேலும் நம்குடிக்குக் கொடிய பழியை உண்டாக்குமவள் என்று சொல்லிக்கொண்டு தாயானவள் நம்பியைக் காணுதற்கு இடம் தருகின்றிலள் ; சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின், அழகோடு மிகவும் நீண்டிருக்கின்ற திருமூக்கும் தாமரைபோன்ற திருக்கண்களும் கோவைக்கனி போன்ற திருவாயும் கரியதிருமேனியும் நான்கு திருத்தோள்களும் என் நெஞ்சத்தினிடத்தில் நிறைந்து விட்டன என்கிறாள்.

**வி - சு :**—நீள்கொடி : ஒருபொருட்பன்மொழி.

**ஈடு :**—ஆரும்பாட்டு. [1] நம்பியுடைய திவ்விய அவயவ சோபைகள் என்நெஞ்சு நிறையப் புகுந்து நலியாநின்றன என்கிறாள்.

மேலும் நம் குடிக்கு வன் பழி இவள் என்று - இப்போது சிலர் நான்கு வார்த்தைகள் சொல்லிவிடுகை அன்றிக்கே, மேலும் இக்குடிக்கு உருவ நிலைநின்ற பழியை விளைக்குமவள் இவள் என்று. அன்னை காணக் கொடாள் - [2] தன்னோடு ஒத்தவர்கள் சொல்லுகை அன்றிக்கே, அடியிலே என்னைப் பெறுகைக்கு நோன்பு நோற்ற இவளும் இப்படிச் சொல்லாநின்றாள். சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை - சிரமஹரமான சோலைகள் சூழ்ந்த திருக்குறுங்குடி நம்பியை. நான் கண்டபின் - [3] பழி புகழாம்படி இவ்விஷயத்திலே மூழ்கிய நான் கண்டபின். என்றது, 'பழி' என்று அச்சம் உறுத்தி மீட்க ஒண்ணாதபடி மூழ்கிய நான் கண்டபின் என்றபடி. கோல நீள் கொடி மூக்கும் - அழகுமிக்க கொடிபோலே இருக்கிற திருமூக்கும், தாமரைக் கண்ணும் - [4] அதன்படியேயாயிருக்கிற தாமரை

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. மேல் எல்லாம் "அன்னைமீர்காள்" என்று பன்மைவாய்பாட்டால் சொல்லி, இங்கு, "அன்னை" என்று ஒருமைவாய்பாட்டால் அருளிச்செய்வதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்னோடு ஒத்தவர்கள்' என்று தொடங்கி. 'தன்னோடு ஒத்தவர்கள்' என்றதில், 'தான்' என்றது, நற்றாயை. 'ஒத்தவர்கள்' என்றது, செவிலி முதலிய ஏனையோரை.

3. 'பழி' என்று சொன்னால் மீள ஒண்ணாதோ ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பழிபுகழாம்படி' என்று தொடங்கி.

4. 'அதன்படியேயாய் இருக்கிற' என்றது, "கோலநீள் தாரைக்கண்" என்றபடி. 'அது' என்ற சுட்டு, "கோலநீள்" என்பதனைச் சுட்டுகிறது.

போன்ற திருக்கண்களும், [1] அந்தக்கொடி பூத்தாற்போலே யாயிற்றுத் திருக்கண்கள் இருப்பது. கனிவாயும் - அது ஒரு பலத்தை உண்டாக்கினாற்போலே இருக்கிற கனிவாயும், நீல மேனியும் - அத் தாமரையின் இலைபோலே நீலமாய் இருக்கிற திருமேனியும், நான்குதோளும் - ஒரு பெருவெள்ளம்போலே ஆயிற்றுத் திருமேனி, [2] அதனை நீந்துகைக்குச் சில தெப்பங் கள்போலே இருக்கிற திருத்தோள்கள் நான்கும், என் நெஞ் சம் நிறைந்தனவே - உங்கள் ஹிதவசனங்கட்கெல்லாம் என் நெஞ்சில் இடம் இல்லை. (6)

## 493.

நிறைந்த வன்பழி நம்குடிக்கு இவள் என்று அன்னை காணக்கோடாள்
சிறந்த கீர்த்தித் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்டபோன் மேனியோடும்
நிறைந்தென் னுள்ளே நின்றொ ழிந்தான் நேமி அம் கைஉளதே.

**பொ - ரை:**—இவள் செய்கின்ற காரியம் நம்குடிக்கு நிறைந்த கொடிய பழியைத் தருவதாகும் என்று தாயானவள் நம்பியை நான் காண்பதற்கு விடுகின்றிலள்; சிறந்த கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின், நிறைந்த பிரகாசத்தின் கூட்டத்தாலே சூழப்பட்ட நீண்ட அழகிய திருமேனியோடும் என்மனத்துக்குள்ளே நிறைந்து நின்றுவிட்டான்; திருச்சக்கரமும் அழகிய கையிலே இருக் கின்றது.

**வி - கு:**—சூழ்ந்த மேனி என்க. நின்றொழிந்தான்: ஒருசொல்.

**ஈடு:**—ஏழாம்பாட்டு. [3] நம்பியுடைய திருமேனியில் அழகு வெள்ளம் என்நெஞ்சிலே வேர்வீழ்ந்தது என்கிறாள்.

நிறைந்த வன் பழி நம் குடிக்கு இவள் என்று அன்னை காணக்கொடாள் - [4] ஆண்டாள், ஒருநாள் பட்டரையும் சீராமப்

---

1. முன்னே கூறியதற்கு, ரசோக்தியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'அந்தக்கொடி' என்று தொடங்கி.

2. அதனை - அந்த வெள்ளத்தை.

3. பின் இரண்டு அடிகளைக் கடாகூத்து அவதாரிகை அருளிச் செய்கிறார். "என்னுள்ளே நின்றொழிந்தான்" என்றதனை நோக்கி 'என் நெஞ்சிலே வீர் வீழ்ந்தது' என்கிறார்.

4. இங்கே பழியாகச் சொல்லுகிறது, ஸ்வாபதேசத்திலே, இவ்வுலக இன்பம் அவ்வுலக இன்பம் என்னும் வேறுபாடு அற இரண்டினுக்கும் அவனே கடவன் என்று அவன் கையைப் பார்க்குமது ஒழிய, அவற்றிற்காகத் தான் செய்யும் முயற்சியை என்று கூறத் திருவுள்ளம்பற்றி, 'தன் முயற்சி பழி' என்னுமதற்கு, ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஆண்டாள்' என்று தொடங்கி. ஆண்

பிள்ளையையும் காட்டி, 'இவர்கள் விவாகத்தைச் செய்வதற்குரிய பருவத்தை அடைந்தார்கள், பேசாதே இருக்கிறது என்?' என்ன, 'ஆகில், நாளைப் பெருமாள்பாடே போனவாறே வரக் காட்டு' என்ன, அவர்களையும்கொண்டு திருமுன்பே நிற்கச் செய்தே, பெருமாள் அருளப்பாடிட்டு, 'ஒன்று சொல்லுவாய் போலே இருந்தாயே!' என்று திருவுள்ளமாக, "இவர்கள் விவாகத்தைச் செய்வதற்குரிய பருவத்தினர் ஆனார்கள்' என்று சொல்லாநின்றார்கள்' என்ன, 'நாமே ஒத்ததான இடத்தில் சம்பந்தம்செய்து தருகிறோம்' என்று அருளிச்செய்ய, பிற்றை நாள் மன்னியைக் கொடுவந்து நீர் வார்த்தார்கள். ஆக, 'அத் தலையாலே வருமது ஒழிய, தாம்தாம் ஒன்றை ஆசைப்படுகையும்கூடப் பழி' என்று இருக்குங் குடி காணும். [1] "அதபாதக பீதஃ த்வம் - [2] 'தருமபுத்திரன் ஒரு ஆபாசமான பொய்யினைச் சொல்லி, அதற்கு நரக தரிசனம் செய்தான்' என்பது பிரசித்தமே அன்றோ. அடுத்து அடுத்து இராஜசூயங்களைச் செய்தானித்தனை போக்கி 'விலக்கிய காரியங்களைச் செய்தான்' என்று பிரமாணப் பிரசித்தி இல்லை." "அதபாதக பீதஃ த்வம் - [3] மேலே செய்துபோந்தவை பாதகம் என்று தோற்றி

---

டாள் - கூரத்தாழ்வானுடைய திருத்தேவியார். இதனால், இவ்வுலக இன்பத்திற்காகவும் கூட, ஈசுவரனை ஒழிய, தானுகவே ஒரு முயற்சியைச் செய்தல் ஸ்வரூபத்திற்கு விரோதம் என்று தோற்றுகையாலே, அவ்வுலக இன்பத்திற்குத்தான் முயற்சிசெய்தல் ஸ்வரூபத்திற்கு விரோதமாகின்ற காரணத்தால் தாழ்வாம் என்பது, சொல்லாமலே போதரும். மன்னியை - கன்னியை.

1. இதனால், பிரபந்நனுக்கு இவ்வுலக இன்பத்தின்பொருட்டுச் செய்கின்ற முயற்சியும் பழி என்றபோதே, தன் முயற்சியால் வருகின்ற வேறு உபாயங்கள் பழியாம் என்னுமதனைத் திருவுளத்தேகொண்டு, அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அதபாதக' என்று தொடங்கி.

"அதபாதகபீதஃ த்வம் ஸர்வபாவோ பாரத
விமுக்தாய்ய ஸமாரம்பஃ நாராயண பரோபவ"

என்பது, பாரதம் விஷ்ணுதர்மம். தர்மபுத்திரனைப் பார்த்துத் தருமதேவதை கூறியது.

2. "பாதக" சப்தம், நிஷித்த அநுஷ்டானத்தைச் சொல்லுமது ஒழிய, வேறு உபாயங்களைச் சொல்லுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தருமபுத்திரன்' என்று தொடங்கி. என்றது, ஔசித்யத்தால் இவ்விடத்தில் "பாதக" சப்தம் உபாயாந்தரங்களைக் காட்டுகிறது என்றபடி.

3. 'மேலே செய்து போந்தவை' என்றது, இராயசூயம் முதலான வற்றை.

அச்சச்தை அடைந்தவனுயாகில். [1] அகங்கார மமகாரங்களை மூலமாகக்கொண்ட கிரியாகலாபமடைய, 'கிருஷ்ணனே நம் கார்யத்துக்கடவன்' என்று அறிந்தபின்பு பாதகத்திற்கு ஒத்தனவாய்த் தோற்றின ஆயிற்று. வி முக்தாங்ய சமாரம்பः சர்வபாவேன நாராயணபரः பவ - [2] உப்பைத் தொட்டுப் புளியைத் தொட்டு நீ நின்று சிலவற்றைச் செய்யாமல், புறம்புள்ளவற்றை முழுதையும் போகட்டு, 'உடையவனே நம் காரியத்துக்குக் கடவன்' என்று அவன்பக்கலிலே பாரத்தைப் போகட்டிருக்கப் பார்." [3] இப்போது 'பழி' என்று பரிஹரிக்கப் பார்க்கிறது நம்பியிடத்துள்ள பிராவண்யத்தை அன்றே; [4] 'பழி' என்று பரிஹரிக்கப் பார்க்கிற திருத்தாயாராயும், 'பழி என்று மீளேன்' என்கிற பிராட்டியாயும் ஒடுகிற இந்த இரண்டுநிலைகளும் ஆழ்வார்தமக்குப் பிறந்த அவஸ்தா விசேடங்களே அன்றே; [5] பழி என்று பரிஹரிக்கப் பார்க்கிற திருத்தாயார் வார்த்தையான இடம், சரமஸ்லோகத்துக்கு மேலுள்ளவற்றை அநுபாஷித்தாற்போலே இருக்கிறதா

---

1. மேலே செய்தபோந்த இராயசூயம் முதலானவைகள், பாதக சமமான காரியங்களாகத் தோற்றுகைக்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அகங்காரம்' என்று தொடங்கி. கிரியாகலாபம் - செயல்களின் கூட்டம்; கருமங்களின் கூட்டம்.

2. "வி" என்ற உபசர்க்கத்தின்பொருளை அருளிச்செய்கிறார் 'உப்பைத் தொட்டு' என்று தொடங்கி. என்றது, "வி" என்ற உபசர்க்கமானது, வாசனையோடு துறத்தலைக் கூறுகிறது என்றபடி. "நாராயண" சப்தார்த்தம், 'உடையவனே' என்பது. இது, வேற்றுமைத்தொகையின் பொருள்.

3. தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளுகையாகிற முயற்சியை, "பழி" என்றதாகில், ஆழ்வார்க்கு, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுகையாகிற முயற்சி இல்லையே, ஆனபின்பு, இப்போது ஸ்வாபதேசத்திலே 'நிறைந்த வன் பழி' என்றது, எதனை? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இப்போது' என்று தொடங்கி.

4. பொதுவான சங்கையை அநுவதிக்கிறார் 'பழி என்று' என்று தொடங்கி. 'அவஸ்தா விசேடங்களே அன்றே' என்றதன்பின், இவ்விரண்டு அவஸ்தைகளுக்கும் தகுந்த பிரமாணம் யாது? இவ்விரண்டு அவஸ்தைகளும் ஒருவர்க்கே கூடும்படிதான் யாங்ஙனம்? என்பனவற்றைக் கொணர்ந்து கூட்டிப் பொருள் காணல் தகும்.

5. மேலே கூறியவற்றிற்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார் 'பழி என்று பரிஹரிக்கப் பார்க்கிற' என்று தொடங்கி. 'மேலுள்ளவற்றை' என்றது, பகவத்கீதையில் பதினெட்டாம் அத்தியாயத்திலுள்ள சரமஸ்லோகத்திற்கு முன்னர்க் கூறப்பட்ட மற்றைய உபாயங்களை. 'அநுபாஷித்தாற்போலே' என்றது, அநுபாஷித்து விலக்கிய முன் வாக்கியத்தைப்போலே என்றபடி. என்றது, "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்று அநுவதித்து எடுத்து விலக்கியதைப்போன்று என்றபடி. அநுபாஷித்தல் - ஒருகாரணம்பற்றிப் பின்னும் எடுத்துக்கூறல்.

யிற்று. 'பழி என்று மீளேன்' என்கிற இவள் வார்த்தையான இடம், [1] சரமஸ்லோகத்தில் நிஷ்கர்ஷம்போலே இருக்கிறதாயிற்று. 'பழி' என்று பரிஹரிக்கப் பார்க்கிற இது, [2] உபாயத்தில் கொத்தை அறுக்கிறது; 'பழி என்று மீளேன்' என்கிற இது, உபேயத்தில் கொத்தை அறுக்கிறது, [3] ஸ்வரூபமாய் அந்வயித்ததில் மிகுதியாய்க் கழிவது ஒன்று உண்டோ?

---

1. 'சரமஸ்லோகத்தில் நிஷ்கர்ஷம்போலே இருக்கிறதாயிற்று' என்றது, சர்மஸ்லோகத்தின் பிற்பகுதியில் சொல்லப்படுகின்ற பாவங்களினுடைய நிவர்த்தி இடையிலே வரக்கூடியது; பகவத் அநுபவ கைங்கர்யமே முக்கிய பலம்; ஆகையாலே, கைங்கர்யத்தின் நிஷ்கர்ஷத்திலே நோக்கான சரமஸ்லோகத்தின் பின்வாக்கியத்தின் அர்த்தம்போலே என்றபடி. சரமஸ்லோகத்தில் நிஷ்கர்ஷம் - பகவத் கைங்கர்யம்.

ஆக, சரமஸ்லோகத்தின் முன்வாக்கியத்தின் அர்த்தம்போலே திருத்தாயார் வார்த்தை. சரமஸ்லோகத்தின் பின்வாக்கியத்தின் அர்த்தம்போலே இவளுடைய வார்த்தை என்றபடி.

2. மேலே அருளிச்செய்த இரண்டு வாக்கியங்களாலும் பலித்த பொருளே அருளிச்செய்கிறார் 'உபாயத்தில்' என்றும், 'உபேயத்தில்' என்றும் தொடங்கி. 'உபாயத்தில் கொத்தை அறுக்கிறது' என்றது, ஈசுவரனுகிய சித்தோபாயத்தைப் பற்றியிருக்குமவனுக்கு வேறு உபாயங்களைச் செய்யத் தொடங்குதல் குற்றமாம்; ஆதலால், கூடாது என்று மற்றைய உபாயங்களை விலக்குகிறது என்றபடி. 'உபேயத்தில் கொத்தை அறுக்கிறது' என்றது, 'கைங்கர்யத்தைப் பெற்றபோது பெறுகிறோம்' என்று ஆறியிருத்தல், உபேயமான கைங்கர்யத்திற்குக் குற்றமாம்; ஆகையாலே, அந்தக் கைங்கர்யத்தின் சித்திக்குக் காரணமான செயலுக்கு இன்றியமையாத பிராவண்யம், உபேயத்தில் குற்றத்தை அறுக்கிறது என்றபடி.

ஆக, உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்தை (வேறு ஒன்றினையும் விரும்பாமையை)ப் பார்த்தால், தங்களுடைய முயற்சிகள் அனைத்தும் குற்றமாயிருக்கும்; உபேய வைலக்ஷண்யத்தைப் பார்த்தால், விரையாமல் ஆறியிருத்தல் குற்றமாயிருக்கும்; ஆகையால், இரண்டு குற்றங்களையும் அறுக்கிறது என்றபடி. கொத்தை - குற்றம்.

3. 'பழி என்று மீளேன்' என்கிற இது, கைங்கர்யமான உபேயத்தில் குற்றத்தை அறுத்தாலும், சர்வேசுவரனுகிய சித்தோபாயத்திற்குக் குறைவு அன்றே? என்ன, அதற்கு மீடை அருளிச்செய்கிறார் 'ஸ்வரூபமாய்' என்று தொடங்கி. 'ஸ்வரூபமாய் அந்வயித்ததில்' என்றது, ஸ்வரூபத்திற்குள்ளாகச் சேர்ந்த பரபக்தி முதலானவைகளில் என்றபடி. 'மிகுதியாய்க் கழிவது' என்றது, நியாஜ்யமாய்க் கழிவது என்றபடி. 'என்றபடி' என்றது, 'பழி ஒன்று மீளேன்' என்றதற்கு அபிப்பிராயம் என்றபடி.

என்றபடி; [1]"தன் அசாதாரண ஆகாரத்தைப் பெறுகிறான்" என்கிற இதில், மிகுதியாய்த் தியாஜ்யமாய் இருப்பது ஒன்று இல்லை அன்றே. [2]உபாய அம்சத்தில் வந்தால் 'செய்தே தீர வேண்டும்படியான காரியங்களிலேயும் உபாயபுத்தி பிறக்கிறதோ' என்று அச்சம்கொள்ள வேண்டும்படியாயிருக்கும்; உபேயத்தைப் பார்த்தால், "நான் எல்லா அடிமைகளையும் செய்வேன்" என்கிறபடியே, விடத்தக்கது ஒன்றும் இல்லையாயிருக்கும். [3]பழைய நாஸ்திக்யத்தாலே செய்யவேண்டிய காரியங்களில் சோம்பிக் கைவாங்கினதை 'உபாய விரோதியான ஆகாரத்தாலே விட்டேன்' என்னுமதுவும் வார்த்தை அன்று; உபேய ருசியாலே செய்யுமவற்றை, 'இவை உபாயமாய்ச் சேரின் செய்வது என்?' என்று விடுமதுவும் வார்த்தை அன்று. [4]உலகத்தாரைப் போன்று செய்யவேண்டிய காரியங்கள் முழுதினையும் செய்துகொண்டிருக்கச் செய்தே, அவற்றில் உபாய புத்தி பண்ணுமலேபோரும் நம் முதலிகளுடைய அநுஷ்டானமாய் இருக்கும்படி அன்றே இது.

---

1. நன்று; பரபக்தி முதலானவைகள் ஸ்வரூபத்திற்குள் சேர்ந்தவையாமோ? என்ன, பிரமாணமூலமாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தன்' என்று தொடங்கி.

"பரஞ்ஜ்யோதிஃ உபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே"

என்பது, சாந்தோக்யம். 8 : 12.

இங்கு, 'தன் அசாதாரண ஆகாரத்தைப் பெறுகிறான்' என்றது, அபஹத பாப்மத்வாதிகள், சேஷத்வ பாரதந்திரியாதிகள், பரபக்திகள் இவற்றைப் பெறுகிறான் என்றபடி.

2. மேலே 'உபாயத்தில் கொத்தை அறுக்கிறது, உபேயத்தில் கொத்தை அறுக்கிறது' என்கிற இரண்டு தன்மைகளும், சித்தோபாயநிஷ்டராயிருப்பார்க்கும் ஒத்தது ஆகையாலே, அவர்கள் அநுஷ்டிக்கிற நித்தியநைமித்திக ரூபமான அவஶ்யம் செய்யக்கூடிய காரியங்களில், மேற்கூறிய இரண்டு தன்மைகளுக்கும் தகுதியாக அவர்களுக்கு உண்டாகும் கௌரவ விசேடங்களைக் காட்டுகிறார் 'உபாய அம்சத்தில்' என்று தொடங்கி. 'உபாய அம்சத்தில் வந்தால்' என்றது, உபாய அதிகாரமாகிற தன்மையைப் பார்த்தால் என்றபடி. 'உபேயத்தைப் பார்த்தால்' என்றது, உபேய அதிகாரத்தைப் பார்த்தால் என்றபடி.

3. இப்படி, உபேய அதிகாரத்தைப் பார்த்தால் செய்யவேண்டிய காரியங்களில் விடத்தக்கன இல்லையாகையாலே, நாஸ்திக்ய புத்தி முதலானவைகளால் விடுவது அப்ராமாணிகம் என்று அருளிச்செய்யாநின்றுகொண்டு, உபேய அதிகாரத்துக்குத் தகுதியாகச் சிஷ்டர்களுடைய அநுஷ்டானத்தையும் காட்டுகிறார் 'பழைய நாஸ்திக்யத்தாலே' என்றது முதல் 'அநுஷ்டானமாய் இருக்கும்படி அன்றே இது' என்றது முடிய.

4. ஆயின், தியாகத்தின் வகை யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உலகத்தாரைப்போன்று' என்று தொடங்கி.

[1] ஆக, '**இது பழி**' என்று பரிஹரிக்கப் பார்க்கிற இடம், சரமஸ்லோகத்தில் முன்பாகத்தில் நிஷ்கர்ஷம் இருந்தபடி, '**இது பழி**' என்று மீளாது ஒழிகிற இடம், சரமஸ்லோகத்தில் பின்பாகத்தில் நிஷ்கர்ஷம் இருந்தபடி.

*சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை - தகுதியா யிருந்துள்ள கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை.* **நான் கண்டபின் -** *அக் கீர்த்தியைப் போன்று அங்குத்தைக்குச் சிறந்த நான் கண்டபின்.*[2] *"யாவரொருவருக்கு அந்தச் சானகி மனவியாக இருக்கிறளோ அந்த இராமபிரானுடைய பராக் கிரமம் அளவிட்டு அறியக்கூடாததாய் இருக்கிறது அன்றே" என்கிறபடியே, அவனுக்கு அக்கீர்த்தியைப்போன்று, தன்னு டைய சம்பந்தமும் ஏற்றமாம்படி இருக்குமவளே அன்றே. நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன் மேனியொ டும் - கங்கையின் அலைகளின் நடுவே வசிப்பாரைப்போலே ஒளிகளாகிய அலைகளின் நடுவே ஆயிற்று இருப்பது.* [3] *ஒளி களின் நடுவே வடிவு ஊகிக்கப்படுவதாயாயிற்று இருப்பது. அவ்வடிவுதான் எவ்வளவு போரும் என்னில், அளவிட்டு அறி தற்கு அரியதாய்ச் சிலாக்கியமாய் இருக்கும். நிறைந்து என் னுள்ளே நின்றொழிந்தான் -* [4] *ஒருநாள், சீயர் கோயிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே* **பிள்ளானை**க்கண்டு, *'ஈசுவரனுக்கு*

---

1. ஆக, 'சரமஸ்லோகத்துக்கு மேலுள்ளவற்றை' என்றது முதலாக, 'அன்றே இது' என்றது முடிய, கூறிய அர்த்த விசேடங்களைச் சுருக்கமாகக் காட்டாநின்றுகொண்டு முடித்துக் காட்டுகிறார் "ஆக, 'இது பழி' என்று" என்று தொடங்கி.

2. அந்தக் கீர்த்தியைப் போன்று, இவளும் அவனுக்கு அதிசயத்தை உண்டாக்கக் கூடியவளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'யாவரொருவருக்கு' என்று தொடங்கி. இது, ஸ்ரீராமா. ஆரண்ய. 37: 18. இராவணனைப் பார்த்து மாரீசன் கூறியது. இந்தச் சுலோகத்தை 192-ஆம் பக்கம் பார்க்கவும்.

3, ஆயின், வடிவை அறியும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒளிகளின்' என்று தொடங்கி.

4. "நீண்ட பொன்மேனியொடும் நிறைந்து என்னுள்ளே நின்றொழிந் தான்" என்ற விக்கிரஹ வியாப்திக்கு ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார் 'ஒரு நாள்' என்று தொடங்கி. சீயர் - நஞ்சீயர். இவர் பட்டருடைய மாணாக்கர்; ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத்தை அருளிச்செய்தவர். பிள்ளான் - திருக் குருகைப்பிரான் பிள்ளான்; இவர் எம்பெருமானாருடைய மாணாக்கர்; ஆரா யிரப்படி வியாக்கியானத்தை அருளிச்செய்தவர்.

ஸ்வரூப வியாப்தியேயோ உள்ளது, விக்கிரஹ வியாப்தியும் உண்டோ?' என்று கேட்க, 'சர்வவிஷயமாக ஸ்வரூபவியாப்தியே உள்ளது; உபாசகவிஷயத்தில், அவர்கள்பக்கல் அநுக்ரஹத்தாலே, அவர்கள் பற்றுக்கோடாகப் பாவித்த விக்கிரஹத்தோடே எழுந்தருளியிருக்கும்; இனி, [1] ஸ்வரூப வியாப்திக்குப் பிரமாணம் கண்ட இடம் சாமான்ய விஷயமாகிறது, விக்கிரஹ வியாப்திக்குப் பிரமாணம் கண்ட இடம் விசேஷ விஷயமாகிறது' என்று பணித்தாளும். நேமி அம்கை உளதே- [2] வடிவழகு எல்லாம் ஒருதட்டும், கையுந்திருவாழியுமான அழகு ஒருதட்டுமாயாயிற்று இருப்பது. என்றது, அவன்கையில் திருவாழி பிடித்திலனாகில் நான் பழிபரிஹரித்து மீளேனே? அவன் கையில் திருவாழி இருக்க, என்னாலே பழிக்கு அஞ்சி மீளப் போமோ? என்றபடி. உங்கள் ஹிதவசனங்களைக் கேட்கைக்கு உள்ளே இடம் இல்லாதபடி நிறைந்து நின்றான் என்பாள், **'நிறைந்து என்னுள் நின்றொழிந்தான்'** என்கிறாள். இனி, போக்கிடம் இல்லையாம்படி அவன் வந்து உள்ளே நிற்க, எனக்கு ஒரு போக்கிடம் உண்டோ என்பாள், **'நின்றொழிந்தான்'** என்கிறாள் என்னுதல். அவனை என் மனத்தினின்றும் புறப்படச் சொல்லமாட்டீர்களோ நான் என்பழி நீக்குவதற்கு. வெறும் புறத்திலே ஆழத்தி வழிக்கவேண்டுபடியான கையிலே திருவாழியுமானால் மீளப்போமோ. [3] அவனுடைய நிறைவினைக் குறைக்கவோ, என்பழி நிறைவினைக் குறைக்கவோ. (7)

---

1. ஸ்வரூப வியாப்திக்குப் பிரமாணம்:

"யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மின் த்ருச்யதே ச்ரூயதேபி வா
அந்தர் பஹிச்ச தத்சர்வம் வியாப்ய நாராயணஃ ஸ்திதஃ"

என்பது. இது, தைத்திரீய நாராயண உபநிடதம். 11: 8.
விக்கிரஹ வியாப்திக்குப் பிரமாணம்:

"நீலதோயத" என்பது. இது, தைத்திரீய நாராயண உபநிடதம். 11. இந்தச் சுலோகத்தை 26-ஆம் பக்கத்திற் காணலாகும்.

2. திருவாழியைத் தனித்துச் சொல்வதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வடிவழகு' என்று தொடங்கி.

3. "நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான், நீகூறைந்த வன் பழி" என்னும் இரண்டனையும் கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

## 494.

கையுள் நன்முகம் வைக்கும் நையும் என்று அன்னையரும் முனிதிர்
மைகொள் மாடத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்
செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும் சிற்றிடை யும்வடிவும்
மொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும் பாவியேன் முன்னிற்குமே.

**பெர்-ரை:**—திருத்தன்மை பொருந்திய முகத்தைக் கையுள்ளே வைப்பாள், வருந்துவாள் என்று தாய்மாராகிய நீங்களும் முனியாநின்றீர்கள்; மேகங்கள் தங்கியிருக்கின்ற மாடங்களையுடைய திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியை நான் கண்டபின், செந்தாமரைபோன்ற திருக்கண்களும் அல்குலும் சிறிய இடையும் வடிவும் செறிந்த நீண்ட குழல் தாழ்ந்திருக்கின்ற தோள்களும் பாவியேனுகிய என்முன்னே நிற்கின்றன.

**வி - கு:**—மை - கருமையுமாம். அல்குல் - அரையின் கீழே இருப்பதோர் உறுப்பு; இருபாலார்க்கும் பொதுவானது. "அடியும் கையும் கண்ணும் வாயும், தொடியும் உந்தியும் தோளணி வலயமும், தாளும் தோளும் எருத்தொடு பெரியை, மார்பும் அல்குலும் மனத்தொடு பரியை" என்பது, பரிபாடல். 13. 51-54. மொய்ய நீள் குழலும் தாழ்ந்த தோள்களும் என உம்மைத் தொகையாகக் கோடலுமாம்.

**ஈடு:**—எட்டாம்பாட்டு. [1] எல்லா இடத்திலும் உள்ள அங்கசோபை என்முன்னே நின்று நலியாகின்றது என்கிறாள்.

கையுள் நன்முகம் வைக்கும் - அவனைப்பிரிகையால் வந்த தளர்த்தியாலே கையிலே முகத்தை வையாகின்றாள். [2] இத்தனை சாகஸத்திலே துணியும்படி ஆவதே இவள். [3] தன்முகத்தின் வாசி தான் அறியாது ஒழியவேணுமோ. [4] "உலகநாதனுன

---

1. திருப்பாசுரத்தின் பின் இரண்டு அடிகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'இவள் கையையுங்கூடப் பொறுத இவள் முகத்தின் சௌகுமார்யத்தைத் திருவுள்ளம்பற்றி 'இத்தனை சாகஸத்திலே துணியும்படி ஆவதே இவள்' என்கிறார்.

3. "நன்முகம்" என்று விசேஷித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்முகத்தின் வாசி' என்று தொடங்கி.

4. தன்கையையும்கூடப் பொறுமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உலகநாதனுன' என்று தொடங்கி.

"உபதாயபுஜம் தஸ்ய லோகநாதஸ்ய சத்க்ருதம்
கதம் நாம உபதாஸ்யாமி புஜம் அந்யஸ்ய கஸ்யசித்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 21: 19. இராவணனைப் பார்த்துப் பிராட்டி கூறியது.

அந்த ஸ்ரீராமனுக்குத் தலைக்கு அணையாகக் கொடுத்து உதவப்பட்டது இக்கை, இதனை மற்றொருவனுக்குத் தலைக்கு அணையாக எங்ஙனம் கொடுப்பேன்" என்னக்கடவதன்றே. [1]கணவனுடைய கரத்தின் பரிசமேயாயிற்றுப் பொறுப்பது. [2]இதனால், தன்னெடு தனக்குச் சம்பந்தமில்லாத பாரதந்திரியத்தைச் சொல்லுகிறது. [3]அதுவே அன்றே "நமஃ" என்ற சொல்லின் அர்த்தமாகிறது. [4]இதனுடைய சுருக்கமாக இருக்கின்ற உகாரத்திலேயும் [5]இது உண்டாயிருக்கச் செய்தே இங்கேயும் சொல்லும்போது இதுவே அர்த்தமாகவேணுமே அன்றே. நையும் - தன்கையும் கூடப் பொருமையாலே வருந்துவாள். என்று அன்னையரும் மூனிதிர் - [6]ஊரவர் கவ்வைக்கு நான் வெறுக்கிறது என்? மை கொள் மாடம்-பழைமையாலேயாதல்; [7]"ஸ்ரீராமபிரான் தன்னுடைய திருமேனியின் ஒளியாலே தண்டகாரண்யத்தை விளங்கச் செய்துகொண்டு" என்னுமாறுபோன்று உள்ளே நிற்கின்றவனுடைய நிழலீட்டாலேயா

---

1. பொறுப்பது ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கணவனுடைய' என்று தொடங்கி.

2. தன் கையும்கூடப் பொருமைக்கு, சுவாபதேசப்பொருள் அருளிச் செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. 'இதனால்' என்றது, "நன்முகம்" என்றதனால் என்றபடி.

3. இந்தவிதமான பாரதந்திரியத்திற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'அதுவே அன்றே' என்று தொடங்கி.

4. இது, நமஶ் ஶப்தார்த்தம் என்கைக்குக் காரணம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இதனுடைய' என்று தொடங்கி. என்றது, என்சொல்லியவாறே? எனின், இதனுடைய சுருக்கமான உகாரத்திலேயும், அந்யசேஷத்வநிவ்ருத்தி சொல்லப்பட்டிருக்க, மீளவும் "நமஃ" என்னும்போது ஸ்வசேஷத்வ நிவ்ருத்திரூபமாய், தன்னெடு தனக்கு அந்வயம் இல்லாத பாரதந்திரியமே "நமஃ" என்ற சொல்லால் சொல்லப்பட்ட பொருளாகவேணும் என்றபடி. 'உகாரத்திலே' என்றது, பிரணவத்திலே உள்ள உகாரத்திலே என்றபடி. பிரிநிலையை, உகாரத்திற்குப் பொருளாக அருளிச்செய்வர்.

5. 'இது' என்றது, தன்னெடு தனக்கு அந்வயம் இல்லாமையாகிய தன்மையைக் குறித்தபடி. 'இதுவே' என்றது, தன்னெடு தனக்கு அந்வயம் இல்லாத பாரதந்திரியமே என்றபடி.

6. "அன்னையரும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஊரவர் கவ்வைக்கு' என்று தொடங்கி.

7. "ஸோபயன் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா" என்பது, ஸ்ரீராமா. ஆரண். 38; 15.

தல். நான் கண்டபின்-அம் மாடத்தைப்போன்று [1] நைவுக்குப் பழையேனான நான் கண்டபின்; [2]"நைவாய எம்மேபோல்" என்னக்கடவதன்றே. செய்ய தாமரைக்கண்ணும் - தனக்கே உரிமையாக்குகின்ற திருக்கண்களும், அல்குலும்-அந்த நோக்குக்குத் தோற்றூர் தரித்து இலைப்பாறும் அல்குலும், சிற்றிடையும் - [3] இரண்டும் ஒருதொடையாயிருக்கையாலே ஊஹிக்கப்படும் இடையும், வடிவும் - என்னை மீளஒட்டாத வடிவும், [4] மெய்யே மீள ஒட்டுகிறது இல்லைகாணும் இவளுமொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும் - காட்சிக்கு இனியதாய், கண்டார்க்கு ஒருகாலும் மறக்கவொண்ணாதபடி இருக்கிற திருக்குழலானவை தாழ்ந்து, அணைக்கைக்குத் தகுதியான திருத்தோள்களும், பாவியேன் முன்நிற்குமே - [5] அநுபவத்திற்குத் தகுதியில்லாதவை முன்னே நிற்கையாகிறது மிகுந்த நிலைசத்திற்குக் காரணமாய் இருப்பது ஒன்றேஅன்றே. [6]"முன்நிற்கும்" என்னுநிற்கச்செய்தே அன்றே "பாவியேன்" என்கிறது. [7] கண்களுக்குத் தோற்றுநிற்கச்செய்தே யானைக்குக் குதிரை வையாநின்றது. (8)

---

1. மேலே அருளிச்செய்த 'பழைமையாலே யாதல்' என்றதனைக் கடாகூடித்து, 'நைவுக்குப் பழையேனான' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. நைவுக்குப் பழையளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நைவாய' என்று தொடங்கி. இது, திருவாய். 2. 1: 6.

3. 'இரண்டும் ஒருதொடையா யிருக்கையாலே' என்றது, மேலும் கீழும் சேர்த்திருப்பதனாலே என்றபடி.

நுண்டுகில் அகலல்குல் நொசித்த வெம்மூலை
உண்டிவண் நுசுப்பென உரைப்பி னல்லது
கண்டறி கிலாஇடை காம வல்லியாழ்
கொண்டவர் குழாத்திடைக் கொடியின் ஒல்கிஞள்.

என்ற சிந்தாமணிச் செய்யுள் இங்கு நினைவிற்கு வருகின்றது. (செய். 654.)

4. 'மெய்யே' என்றது, நிலேடை: திருமேனியும், சத்தியமும்.

5. முன்னே நிற்கை நல்லது அன்றே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுபவத்திற்கு' என்று தொடங்கி.

6. அநுபவயோக்கியம் அல்லாமைக்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முன்நிற்கும்' என்று தொடங்கி. என்றது, முன்னே நிற்கச்செய்தேயும் அநுபவத்திற்குத் தகுதியில்லாமையாலே அன்றே "பாவியேன்" என்கிறது என்றபடி.

7. அநுபவத்திற்குத் தகுதியில்லாமைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி. 'யானைக்குக் குதிரை வையாநின்றது' என்றது, பிடிகொடுக்குமாறுபோலே இருந்து பிடிகொடாதிருந்தது என்றபடி. முதிற்பத்து ஈட்டின் தமிழாக்கம் பக். 9. காண்க.

## 495.

முன்னின் ரூய்என்று தோழி மார்களும் அன்னை யரும்முனிதிர்
மன்னு மாடத் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்
சென்னி நீண்முடி ஆதி யாய உலப்பில் அணிகலத்தன்
கன்னல் பால் அமு தாகி வந்துஎன் நெஞ்சம் கழியானே.

**பொ-ரை:**—முன்னேவந்து நிற்கின்றாய் என்று தோழிமார்களும் தாய்மார்களும் முனியாகின்றீர்கள்; நிலைபெற்ற மாடங்களையுடைய திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கின்ற நம்பியை நான் கண்டபின், தலையில் அணிந்திருக்கின்ற நீண்ட திருமுடி முதலான எண்ணில்லாத ஆபரணங்களையுடைய எம்பெருமான், கன்னலாகிப் பாலாகி அமுதாகி வந்து என்நெஞ்சத்தை விட்டு நீங்கமாட்டுகின்றிலன்.

**வி - கு:**—மன்னுதல்-நிலைபெறுதல், பொருந்துதலுமாம். உலப்பு கணக்கு; முடிவு. அணிகலம் - அணிந்திருக்கிற ஆபரணம். அழகிய ஆபரணமுமாம். கன்னல் - கரும்பு.

**ஈடு:**—ஒன்பதாம்பாட்டு. [1]நம்பி, இனிமைகள் எல்லாவற் றோடுங்கூட என்நெஞ்சிலே புகுந்து விடுகின்றிலன் என் கிறாள்.

முன்னின்றாய் என்று தோழிமார்களும் அன்னையரும் முனிதிர் - [2]தோழிமார் முன்புங்கூட நின்று அறியாள்போலே காணும் இவள்தான். [3] "எந்தச் சீதாபிராட்டி முன்பு ஆகாயத் தில் வசிக்கின்ற பூதங்களாலும் பார்ப்பதற்கு முடியாதவளோ" என்று சொல்லப்பட்ட பிராட்டியைப்போலே இருக்குமவள்

---

1. பாசுரத்தின் ஈற்றடியைக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய் கிறார்.

2. "முன்னின்றாய்" என்கையாலே, முன்பு, இவர்கள் முன்பு நின்று அறி யாள் என்பது தோன்றுகையாலே அதனை அருளிச்செய்கிறார் 'தோழிமார்' என்று தொடங்கி.

3. ஒருவர் முன்பும் நின்று அறியாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எந்தச் சீதாபிராட்டி' என்றுதொடங்கி.

"யா நஶக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஶகைரபி
தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்க்ககதா ஜநாஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 33 : 8.

அன்றே இவள்தான். [1]இவள் துணிவைக் கண்டவாறே உகப்பாரோடு, பொடிவாரோடு வேற்றுமைஅறப்பொடியத்தொடங்கினர்கள். மன்னுமாடம்-[2]" கண்ணபிரானுடைய திருமாளிகை ஒன்றினை மட்டும் சமுத்திரராஜன் அழிக்க இல்லை " என்கிறபடியே, பிரளயம் முதலானவற்றிலும்கூட அழியாது என்றிருக்கிறாள். நான் கண்டபின் - [3]பிற்காலியாதபடியான நான் கண்டபின். என்றது, நாணம் நீங்கப் பெற்ற நான் கண்டபின் என்றபடி. சென்னி நீண்முடி ஆதியாய உலப்புஇல் அணிகலத்தன் - தலையான முடிதொடக்கமான முடிவில்லாத ஆபரணங்களையுடையவன். அன்றிக்கே, சென்னியில் தரித்திருக்கிற ஆதிராஜ்ய சூசகமான திருமுடி தொடக்கமான எண்ணிறந்த திவ்விய ஆபரணங்களையுடையவன்என்னுதல். [4]சேர்த்தி இருக்கிறபடியைத் தெரிவிப்பாள் '**அணிகலத்தன்**' என்கிறாள். கன்னல்பால் அமுதாகி - இவை, எல்லா ரசங்களுக்கும் உபலக்ஷணம். வந்து என்நெஞ்சம் கழியானே - வந்து என்நெஞ்சில் நின்றும்போகின்றிலன். [5]முன்னே நிறுத்தினவனைப் பொடிய மாட்டார்கள்; 'பெற்றேம், பிழைத்தோம்' என்று, 'முன்னின்

---

1. இவள் உகப்பைப் பின்செல்கின்ற தோழிமார்கள், தாய்மார்களைப் போன்று பொடியலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவள் துணிவை' என்று தொடங்கி. என்றது, "அதிமாத்ர பிராவண்யம் ஸத்தா ஹானிகரம் - மிக அதிகமான ஈடுபாடானது சத்தையைக் கெடுத்துவிடும்" என்னுமதனாலே பொடிகிறார்கள் என்றபடி.

2. மன்னுதல் என்பதற்குப் பொருள், நிலைத்திருத்தல் என்பது ஆகையாலே, அதனை விரித்து அருளிச்செய்கிறார் 'கண்ணபிரானுடைய' என்று தொடங்கி.

"ப்லாவயாமாஸ தாம் ஶ-ஒந்யாம் த்வாரகாம்ச மஹோததிஃ
வாசுதேவ க்ருஹம் து ஏகம் ந ப்லாவயதி ஸாகரஃ"

என்பது; விஷ்ணுபுரா. 5. 38 : 9.

3. "முன்நின்றுய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிப் 'பிற்காலியாத' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "கலத்தன்" என்னுமல், "அணிகலத்தன்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சேர்த்தி' என்று தொடங்கி. அன்றிக்கே, 'சேர்த்தி' என்று தொடங்கும் வாக்கியம், "கன்னல்பால் அமுதாகி" என்றதற்கு, அவதாரிகையாகக் கோடலுமாம். அவதாரிகையாம்போது, அணிந்திருக்கிற ஆபரணங்களின் சேர்த்தி, கன்னலும் பாலும் அமுதும் கலந்தாற்போலே இனிமையாக இருக்கின்றது என்பது கருத்தாகக் கொள்க.

5. 'முன்னே நிறுத்தினவனை' என்றது, தான் என்நெஞ்சுக்குள்ளே இருந்து இவர்கள்முன்னே நிற்கச்செய்தவனே என்றபடி.

ரூய்' என்று என்னைப்பொடியுமித்தனை காணும் இவர்கள் வல்லது. [1]எனக்கு மறக்கை தேட்டம், முடியாமை இருக்கிறேனத்தனை. (9)

## 496.

**கழிய மிக்கதொர் காத லள்இவள் என்று அன்னை காணக்கோடாள்**
**வழுவில் கீர்த்தித் திருக்கு றுங்குடி நம்பியைநான் கண்டபின்**
**குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதிவேள்ளத் தினுள்ளே**
**எழுவ தோர்உரு என்நெஞ் சுள்எழும் ஆர்க்கும் அறிவரிதே.**

**பொ - ரை:**—மிக அதிகமானதொரு காதலையுடையவள் இவள் என்று, தாயானவள், காண்பதற்கு என்னை விடுகின்றிலள்; குற்றம்இல்லாத கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபிறகு, நித்தியசூரிகள் கூட்டங் கூட்டமாகக் கூடிக் கைகூப்பித் தொழுது வணங்கச் சோதிவெள்ளத்தின் நடுவில் தோற்றுகிற ஒப்பற்ற வடிவம் எனது மனத்துக்குள்ளே தோன்றுகிறது; இதனை, எத்தனையேனும் ஞானமுடையராயிருப்பினும் அறிந்துகோடல் அரிது.

**வி - கு:**—கழி: உரிச்சொல். மிகுதிப்பொருளைக்காட்டும். வழு - குற்றம். தேவர் - நித்தியசூரிகள்.

**ஈடு:**—பத்தாம்பாட்டு. [2]நம்பியுடைய திருமேனி என்நெஞ்சிலே பிரகாசிக்கிறபடி ஒருவர்க்கும் அறியவொண்ணாது என்கிறாள்.

கழிய மிக்கது ஓர்காதலள் இவள்-[3]எல்லாருடைய காதலைக் காட்டிலும் வேறுபட்ட காதல்; அன்றிக்கே, நாள் கழியக்கழியப் பெருகி வருகிற காதல் என்னுதல். நாட்டார், [4]"நாள் செல்

---

1. "கழியானே" என்ற ஏகாரத்தின் பொருள், 'எனக்கு' என்று தொடங்கும் வாக்கியம். முடியாமை - கிடையாமை.

2. திருப்பாசுரத்தின் நான்காவது அடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. 'எல்லாருடைய காதலைக் காட்டிலும் வேறுபட்ட காதல்' என்றது, உலகத்தைக் கடந்த மிகுதியான காதல் என்றபடி.

4. நாள் கழியக் கழியப் பெருகிவருதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'நாள் செல்லச்செல்ல' என்று தொடங்கி.

"ஸோகஸ்ச கில காலேந கச்சதாஹி அபகச்சதி
மமச அபஸ்யதஃ காந்தாம் அஹந்யஹநி வர்ததே"

என்பது, ஸ்ரீராமா. யுத். 5: 4.

லச் செல்லச் சோகத்தை மறந்து போகாநிற்பர்கள்; எனக்கு, அங்ஙன் அன்றிக்கே, நாள் செல்லச்செல்லச் சோகம் பெருகி வாராநின்றது" என்னக்கடவதன்றே. அன்னே காணக் கொடாள் - 'இவள் ஒருவிஷயத்திலே காதலைச் செய்யக் கண்டேனுகவல்லேனே' என்றிருக்குமவளும் காணவேண்டுகின்றிலள். ஆனால், இப்போது [1]இங்ஙனம் படுகிறது என்? என்னில், தர்மிலோபம் வரும்படி பிராவண்யத்திலே மூழ்கினவளாக ஒட்டாளே, சரீரம் உண்டாய் மேல்நடக்கவேணும் என்று இருப்பவள் அன்றே. காண்கையாவது - அநுசந்தித்தல். [2] "நெஞ்சு என்னும் உட்கண்" என்னக்கடவதன்றே. நெஞ்சையும்கூட வாய்கட்டாநின்றாள்.

வழு இல் கீர்த்தி - குறைவற்ற கீர்த்தியையுடைய. நான் - அக்கீர்த்திக்குப் பிரிந்து நிலைபெறுதல் இல்லாததுபோன்று, அவனை ஒழியத் தனித்து நிலைபெறுதல் இல்லாத நான். கண்டபின்-இவர்க்கு இப்போது காட்சியாவதுதான் ஏது? என்னில், அடியில், [3] 'பொய்ந்நின்ற ஞானம்' தொடங்கி [4] 'முனியே நான்முகனே' என்ற பாசுரம் அளவும் செல்ல [5] ஒரேவாக்கியமே அன்றே, நடுவில் உள்ளவை அநுபவப்பிரகாரங்களாலே பிறக்

---

முன் பக்கம் காட்டிய சுலோகத்திலுள்ள "மமச" என்ற சகாரத்தை 'து' சப்தார்த்தமாக்கிப்பொருள் அருளிச்செய்கிறார் 'எனக்கு அங்ஙன் அன்றிக்கே' என்று தொடங்கி.

1. 'இங்ஙனம்படுகிறது என்? என்னில்,' என்றது, காதல்மிக்கால் காண ஒட்டாமல் படுகிறது என்? என்னில், என்றபடி.

2. "காண" என்பதற்கு, அநுசந்தித்தல் என்பது பொருளானால், நினைக்கஒட்டாள் என்னுமல், "காணக்கொடாள்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நெஞ்சென்னும்' என்று தொடங்கி.

அன்றேநம் கண்காணும் ஆழியான் காருருவம்
இன்றேநாம் காணு திருப்பதுவும்—என்றேனும்
கட்கண்ணால் காணுத அவ்வுருவை நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணும் உணர்ந்து.

என்பது, பெரிய திருவந். 28.

3. திருவிருத்தம். 1.

4. திருவாய். 10. 10: 1.

5. 'ஒரேவாக்கியம்' என்றது, 'மானச அநுபவம்' என்ற ஒரேவாக்கியம் என்றபடி. ஆனால், "பெற்றெழிந்தேன்", "கண்டுகொண்டொழிந்தேன்" என்று சொன்னதற்கு, பாவம் எது? என்ன, 'நடுவில் உள்ளவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

கிற விசேடங்களே அன்றே. சூழமித் தேவர் குழாங்கள் கை தொழ - திரள்திரளான நித்தியசூரிகள், கிண்ணகத்தில் இழி வாரைப் போலே கைகோத்துக்கொண்டு இழியும்படி. சோதி வெள்ளத்தினுள்ளே எழுவது ஓர் உரு - [1] "ஒளிகளின் திரள்" என்கிறபடியே, தேஜஸ்ஸின் நடுவே ஊகிக்கப்படுவதாயன்றே வடிவு இருப்பது. என்நெஞ்சுள் எழும் - நித்தியசூரிகள் நடுவே தோன்றுமாறு போலே என் நெஞ்சுக்குள்ளே பிரகாசியா நின்றது. ஆர்க்கும் அறிவு அரிது - [2] எனக்கு மறக்கஒண்ணு தாப்போலே ஆயிற்று, தம்முயற்சியால் அறிவார்க்கும் அறிய ஒண்ணுதிருக்கிறபடியும். (10)

## 497.

**அறிவரிய பிரானே ஆழி அங்கை யனையே அலற்றி நறிய நன்மலர் நாடி நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன குறிகொ ளாயிரத்து ளிவைபத்தும் திருக்கு றுங்குடி யதன்மேல் அறியக் கற்று வல்லார் வைட்ணவர் ஆழ்கடல் ஞா லத்துள்ளே.**

**பொ - ரை :**—தங்கள்தங்கள் முயற்சியால் அறிய ஒண்ணுத பிரானும், சக்கரத்தை அழகிய கையிலே தரித்திருக்கின்றவனுமான சர்வேசுவரனையே பேசி, வாசனைபொருந்திய சிறந்த மலர்களைத் தேடி, நல்ல திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீசடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் திருக்குறுங்குடியதன்மேல் சொன்ன குறிகளைக்கொண்ட இப்பத்துப்பாசுரங்களையும் அறியக்கற்று வல்லவர்கள் ஆழ்ந்த கடலாற் சூழப்பட்ட இந்தப் பூலோகத்திலே வைஷ்ணவர்கள் ஆவார்கள்.

**வி - கு :**—அலற்றி நாடி சொன்ன இவை பத்து என்க. வல்லார் ஞாலத்துள்ளே வைட்ணவர் என்க.

**ஈடு :**—முடிவில், [3] இத்திருவாய்மொழியைக் கற்கவல்லவர்கள் சம்சாரத்தில் இருந்தே வைஷ்ணவர்கள் என்கிறார்.

---

1. "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்"
இது, விஷ்ணுபுரா. 1. 9 : 67.

2. "ஆர்க்கும் அறிவரிதே" என்பதற்கு, அவதாரிகையில் அருளிச்செய்த பொருளேயன்றி வேறும் ஒருபொருள் அருளிச்செய்கிறார் 'எனக்கு மறக்க' என்று தொடங்கி.

3. திருப்பாசுரத்தின் நான்காம் அடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அறிவு அரிய பிராணை - [1]நாம் பெறுதல் இழத்தல் செய்கிறோம், தம் முயற்சியால் சாதித்துக் கொள்ளப்படுவது அன்றிக்கே, ஒழியப்பெற்றோமே முன்னம். [2]வஸ்துதான் உண்டானால் நினைத்தபோது பெற்று அநுபவிக்கலாமே அன்றோ. [3]இவர்கள் பின்னைத் தங்கள் முயற்சியாலே அறியுமவர்களோ? என்னில், ஆகவேணுமே அன்றோ, 'மீட்கலாம்' என்று இருந்தபோதே, 'தங்கள் தங்களாலே அறியவுமாம்' என்று இருந்தார்களாகவேணுமே அன்றோ. ஆழி அம் கையனையே அலற்றி- "சங்கிலேடும் நேமியோடும்" என்று, தொடங்கினபடியே தலைக்கட்டுகிறார். அவனைக் [4]கைவிடாமல் அநுபவிக்கவல்லார் இவரைப் போல்வார் இலர். [5]கையும் திருவாழியுமான அழகினை அல்லாத அழகுகளோடே சேர்த்து அநுபவித்ததித்தனை, இதற்கு முன்பெல்லாம்; இதில், கையும் திருவாழியுமான அழகையாயிற்று உருவச் சொல்லிக் கூப்பிட்டது. நறிய நன்மலர் நாடி - பரிமளத்தையுடைத்தாய் நன்றாயிருக்கிற [6]மலர்களைத் தேடிக்கொண்டு. "அடிசூட்டலாகும் அந்தாமம்" என்னக்கடவதன்றோ. நன்குருகூர்ச் சடகோபன் - [7]இந்தக் காதல்

---

1. தாம் பெறுதிருக்கவும், அறிவரியனுமையைக்கொண்டு "பிரான்" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாம் பெறுதல்' என்று தொடங்கி.

2. தங்கள் தங்கள் முயற்சியால் சாதித்துக்கொள்ளப்படாதவனுக இருப்பின், அதனால் தமக்கு லாபம் ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வஸ்துதான்' என்று தொடங்கி. என்றது, தங்கள் முயற்சியால் சாதித்துக்கொள்ளப்படுமவன் அன்றிக்கே ஒழிந்தால், வஸ்துவின் உண்மைக்கு அழிவில்லாமையாலே, நினைத்தபோது அநுபவிக்கலாம் என்றபடி.

3. 'இவர்கள்' என்றது, தாய்மார்களாகச் சொல்லப்படுகின்ற அத்யவஸாய நிஷ்டரை.

4. 'கைவிடாமல்' என்றது, நிலேடை: கையை விடாமல் என்றும், பிரியாமல் என்றும் பொருள்.

5. "ஆழி யங் கையனை" என்பது என்? "சங்கிலேடும் நேமியோடும்" என்பது போன்றவைகளால் மற்றைய ஆழ்வார்களுடைய சேர்த்தி அழகினையும் இத்திருவாய்மொழியில் அநுபவிக்கவில்லையோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கையும் திருவாழியுமான' என்று தொடங்கி. இதற்கு முன்பெல்லாம் - இத்திருவாய்மொழிக்கு முன்பெல்லாம். அன்றிக்கே, இத்திருப்பாசுரத்திற்கு முன்பெல்லாம் என்னுதல். உருவ - இடையீடில்லாமல்.

6. 'மலர்களை' என்றது, மலர்கள்போன்று இருக்கின்ற சொற்களைக் குறித்தபடி. பாட்டுக்கள் மாலையாய் இருக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "அடிசூட்டலாகும்" என்று தொடங்கி. இது, திருவாய். 2. 4 : 11.

7. "நன்" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இந்தக் காதல்' என்று தொடங்கி.

உண்டாகைக்கு அடி அவ்வூரில் பிறப்பாயிற்று. குறிகொள் ஆயிரத்துள் இவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல் - ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, நம்பியுடைய [1] அழகினை மெய்க் காட்டுக்கொண்ட இப்பத்தும் திருக்குறுங்குடி விஷயம். அன்றிக்கே, [2] திவ்விய ஆயுதங்களும் திவ்விய ஆபரணங்களும் சேர்ந்த சேர்த்தியாலுண்டான நம்பியுடைய அழகைத் திரளச் சொன்ன பத்தும் என்னுதல். அறியக்கற்றுவல்லார் - இதனைக் கற்று அறியவல்லவர். அறியக் கற்கையாவது, 'ஸ்ரீ வைகுண்டத்தில் நித்தியசூரிகள் நடுவே இருக்கிற இருப்பைக் காட்டிலும், திருக்குறுங்குடியில் நிற்கிற நிலையிலே குணதிக்யம் உள்ளது' என்னுமிடத்தை அறிந்து கற்கவல்லவர்கள். [3] வஸ்துவுக்குக் குணத்தாலே அன்றே உயர்வு; அந்தக் குணதிக்யம் எங்கே உண்டு, அங்கே அன்றே ஏற்றம். ஆழ் கடல் ஞாலத்துள்ளே வைட்ணவர் - [4] மருபூமியான சம்சாரத்தில் இருக்கச் செய்தே நித்தியசூரிகளோடு ஒக்கச்சொல்லலாம்படி ஆவர்கள் உகந்தருளின நிலங்களில் வாசி அறியுமவர்கள். (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

எங்ஙனே நீர்முனிவது என்னை இனி நம்பி அழ
கிங்ஙனே தோன்றுகின்ற தென்முன்னே—அங்ஙன்
உருவெளிப் பாடா உரைத்த தமிழ்மாறன்
கருதுமவர்க் கின்பக் கடல்.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. "குறிகொள்" என்பதற்குப் பொருள், 'அழகினை மெய்க்காட்டுக் கொண்ட' என்பது. மெய்க்காட்டுக்கொண்ட - தெளிவாக அறிவித்த.

2. "குறிகொள்" என்பதற்கு, "குறி" என்பது, ஆயுத ஆபரண ரூப சிந்நமாய், அவற்றினுடைய சேர்த்தியால் வந்த அழகினைச் சொன்ன இப்பத்து என்று வேறும் ஒருபொருள் அருளிச்செய்கிறார் 'திவ்ய ஆயுதங்களும்' என்று தொடங்கி.

3. வஸ்துவின் உயர்வுக்குக் காரணம், குணதிக்யமாத்திரம் தானே? மேன்மை வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வஸ்துவுக்கு' என்று தொடங்கி. குணதிக்யம் - சௌலப்யம் முதலான குணங்களின் மிகுதி.

4. மருபூமி - நீரும் நிழலும் அற்ற நிலம்.

# ஆருந் திருவாய்மொழி — "கடல்ஞாலம்"

## முன்னுரை

---

ஈடு :—[1] மேல் திருவாய்மொழியிலே, பிரீதியும் பிரீதிஇன்மையும் சமமாக அன்றே சென்றன ; இரண்டுமாய்க் கலந்து சென்றால் பிரீதியே தலையெடுக்கவும் ஆம் அன்றே, அது செய்யாதே, புண்ணியத்தின் குறைவால் பிரீதிஇன்மை ஒன்றே தலை எடுத்தது ; ஆகையாலே, மேல் உருவெளிப்பாட்டாலே அவனை நினைத்துத் தரித்தது ஒருநிலையும்போய், அலாபத்தால் வரும் துவட்சியே ஆயிற்று ; இப்படித் துவண்ட இவள், பிரிவாற்றுமையாலே அவனை அநுகரித்துத் தரிக்கப் பார்க்கிறாள் இத்திருவாய்மொழியில். ஒவ்வொரு அர்த்தத்தைப்பற்றி உபசாரங்கள்செய்ய இருப்பாரைப்போலே ஞானமுத்திரையும் தானுமாய்க் கீதோபநிடத ஆசாரியனைப்போலே இருந்தாள் ; இதனைக் கண்ட திருத்தாயார், 'இது ஏதேனும் மணிமந்திர ஔஷதம் முதலியவைகளாலே வந்த விகாரமோ' என்று ஐயங்கொண்டு, அத் தன்மைகள் காணுமையாலே '**அவை அல்ல**' என்று அறிந்தாள். இனி, [2]'அவனைப் பிரிகையாலே வந்த ஆற்றுமையாலே அநுகரித்துத் தரிக்கிறாள்' என்று தெளியமாட்டுகின்றிலள் தன்கலக்கத்தாலே. இவ்வளவிலே புகுந்து 'இது தான் என்?' என்று வினவப் புகுந்த [3]உறவினவர்களைப் பார்த்துத் திருத்தாயார், அவனுடைய வார்த்தைகளைப் பேசுகையால் வந்த ஒற்றுமையாலும், ஞானமுத்திரை பார்வை முதலியவைகள் இருந்தபடியாலும், சர்வேசுவரன் இவள்பக்கல் ஆவேசித்தானேகவேணும் என்று சொல்லுகிறாள், '**அநுகரித்**

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார் "மேல் திருவாய்மொழியிலே' என்றது முதல், 'இத் திருவாய்மொழியில்' என்றது முடிய. அநுகரித்தல் - அவன் சொல்லும் வார்த்தைகளைத் தானும் சொல்லுதல். கீதோபநிடத ஆசாரியன் - ஸ்ரீ கிருஷ்ணன்.

2. அநுகரிக்கிறாள் என்று தெளியலாகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனைப் பிரிகையாலே' என்று தொடங்கி.

3. இத் திருவாய்மொழியில் வருகின்ற "உற்றீர்கட்கு" என்றதனை நோக்கி 'உறவினர்களைப் பார்த்து' என்கிறார்.

**துத் தரிக்கிறுள்'** என்று அறியமாட்டாமையாலே. [1] பிரிவாற்றுமை உண்டானால் அநுகரித்துத் தரிக்கக்கடவதன்றே. ஸ்ரீ கிருஷ்ணனை அநுகரித்தார்களே அன்றே திருவாய்ப்பாடியில் பெண்கள்; "கிருஷ்ணோஹம் ஏஷலலிதம் வ்ரஜாமி ஆலோக்ய தாம்கதிः—நான் கிருஷ்ணன், நடைச்சக்ரவத்துப் பிடிக்கவேண்டும்படியாக இங்ஙனம் நடக்கப் புகுகின்றேன்; கண்படைத்தார் முழுதும் கண்டுகொள்ளுங்கோள் என்றாளே அன்றே. துஷ்ட காளீய திஷ்ட அத்ர - ஒருத்தி காளியனுய்க் கிடக்க, ஒருத்தி கிருஷ்ணனுய் ஏறி ஆடினாளே அன்றே;" [2] 'பிரதிகூலனை காளியன் ஆனால் ஆகாதோ கிருஷ்ணனைத் தன்னை அநுகரிக்கிற பெண்ணின் பொடி படப்பெறில்' என்று இருந்தாள்; கிருஷ்ணனவள்தானும் இவளைக் **'காளியன்'** என்றே நினைத்துக் கண்ணறத் துகைத்தாளே அன்றே அநுகாரத்தின் மெய்ப்பாட்டாலே. [3] அவர்கள் ஓர் அவதாரத்திலே அநுபவிக்கையாலே அங்குள்ள செயல்களை அநுகரித்தார்கள், இவள் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவள் ஆகையாலே உபயவிபூதிகளையுமுடையவனை அநுகரிக்கிறாள். [4] இங்கு, கால், நடைதாராமையாலே அங்குப்போலே சரீரத்தால் செய்யப்படுகின்ற அநு

---

1. அநுகரித்துத் தரிக்க வேணுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிவாற்றுமை' என்று தொடங்கி. அதற்கு உதாஹரணம் காட்டுகிறார் 'ஸ்ரீ கிருஷ்ணனை' என்று தொடங்கி.

"கிருஷ்ணோ நிபத்த ஹ்ருதயா இதமூசுः பரஸ்பரம்
க்ருஷ்ணோஅஹம் ஏஷ லலிதம் வ்ரஜாமி ஆலோக்யதாம்கதிः"

"அந்யா ப்ரவீதி க்ருஷ்ணஸ்ய மம கீதிः நிஶம்யதாம்
துஷ்டகாளீய திஷ்ட அத்ர க்ருஷ்ணோ அஹம் இதி ச அபரா"

என்பன, விஷ்ணுபுரா. 5. 13: 26, 27.

'நடைச்சக்கரவத்துப் பிடிக்கவேண்டும்படியாக' என்றது, **நடைச் சக்கரவர்த்தி வந்தான்'** என்று விருது பிடிக்கவேண்டும்படியாக என்றபடி.

2. விரோதியான காளியன் ஆகலாமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரதிகூலனை' என்று தொடங்கி. கிருஷ்ணனைத் தன்னை அநுகரித்த பெண்ணனவள், துகைக்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கிருஷ்ணனவள் தானும்' என்று தொடங்கி.

3. ஆனால், அவர்களைப்போன்று ஓர் அவதாரத்தை அநுகரியாமல் பரத்துவத்தை அநுகரித்தது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்கள் ஓர் அவதாரத்திலே' என்று தொடங்கி. இத் திருவாய்மொழியில் வருகின்ற "கூந்தல் மலர்மங்கைக்கும்" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'உபயவிபூதிகளையுமுடையவனை' என்கிறார்.

4. மற்றும் ஓர் ஆகாரத்தாலே வேறுபாட்டினைக் காட்டுகிறார் 'இங்கு' என்று தொடங்கி.

காரம் அன்று, வாசிகமாத்திரத்தாலே ஆயிற்று அநுகரிக்கிறது.

ஆக, [1]'பிறப்பே பரதந்திர ஜன்மத்திலே பிறந்தவள், பிறப்பே ஸ்வதந்திரனவன் வார்த்தையும் சொல்லாநின்றாள், பெண்தன்மைக்கு எல்லையான இவள், புருஷோத்தமன் சொல்லும் வார்த்தைகளையும் சொல்லாநின்றாள்; அறிவிற்கு [2]விஷயம் வியவஸ்திதமாக இருக்க, சர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லாநின்றாள்' என்று கொண்டு, இவள் செய்கிறபடிகளைத் திருத்தாயார், வினவப் புகுந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

[3]மேல் திருவாய்மொழியிலே, உருவெளிப்பாட்டாலே அநுபவித்தது விக்கிரஹ வைலக்ஷண்யத்தை அன்றே, அந்த விக்கிரஹமே அன்றே பற்றத்தகுந்தது, இதில், அங்ஙனம் பற்றத்தகுந்த விக்கிரஹத்துக்குமுள்ளான ஸ்வரூப வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது; அதனை அன்றே பாவித்தது. [4]பாவனையின் மிகுதியாலே, [5]"சர்வேசுவரனுடைய குணங்களைப் போன்ற குணங்களை அடைந்த ஒருசேதனன் முக்திதசையில்

---

1. மேல், 'அவனுடைய வார்த்தைகளைப் பேசுகையால் வந்த ஒற்றுமையாலும்' என்ற வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'பிறப்பே பரதந்திர ஜன்மத்திலே' என்று தொடங்கி.

2. 'விஷயம் வியவஸ்திதமாக இருக்க' என்றது, 'சர்வேசுவரனே சர்வ நிர்வாஹகன்' என்று அறிவிற்கு விஷயம் முடிவு செய்யப்பட்டதாக இருக்க என்றபடி. வியவஸ்திதம்-முடிவுசெய்யப்பட்டது. 'சர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தைகளை' என்றது, "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகதः பிரபவः" என்பது போன்ற வார்த்தைகளைத் திருவுள்ளம்பற்றி.

3. சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார் 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி. 'அதனை' என்றது, அந்த ஸ்வரூபத்தை என்றபடி.

4. அதனைப் பாவித்தால் அவன் சொல்லும் வார்த்தைகளைச் சொல்ல வேணுமோ? என்ன, தேஹாத்மஅபிமானிக்கு, தேஹாத்மஅபிமானம் முற்றிஞல், வேறு ஒன்று தோற்றுதது போன்று, சரீரி அளவும் செல்லத் தன்னை அநுசந்திக்கும்படி பாவனை முற்றிஞல், அவன் சொல்லும் வார்த்தைகளையும் சொல்லலாம் என்கிறார் 'பாவனையின் மிகுதியாலே' என்று தொடங்கி.

5. "தத்பாவ பாவம் ஆபந்நः ததாஸௌ பரமாத்மநா
பவத்யபேதீ பேதஸ்ச தஸ்யா ஜ்ஞாந க்ருதோபவேத்"

என்பது, விஷ்ணுபுரா. 6. 7; 95.

பரமாத்வோடு பேதம் அற்றவனுகிறான்" என்றும், [1] "பிரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்த வாமதேவ ருஷியானவர், நான் மநுவாக ஆனேன், சூரியனுகவும் ஆனேன் என்று எண்ணினார்" என்றும், "என்னிடத்திலிருந்து எல்லாப்பொருள்களும் உண்டாயின, அநாதியான என்னிடத்திலேயே எல்லாம் லயம் அடைகின்றன" என்றும், அவனுகப் பாவித்தால் பின்னே அவன் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லலாய் இருக்குமே அன்றே. அப்படியே, [2] விபூதி அத்தியாயத்தில் அவன்சொன்ன படிகளை பெரும்பாலும் அநுகரிக்கிறாள். [3] அதர்வசிரஸ்ஸிலே, சிவன் தன் வைபவத்தைப் பரக்க நின்று பேசினன், தனக்கு அடங்காத ஐஸ்வர்யமாயிருந்தது, இவன் இப்படிப் பேசுகைக்கு அடி என்? என்று சுருதிதானே சங்கித்து, "ஸோந்தராத் அந்தரம் பிராவிசத்" என்று, பரமாத்ம பிரவேசத்தாலே சொன்னன் என்னநின்றதே அன்றே. அந்தப் பாவம் வந்தால் அப்படியே சொல்லலாய் இருக்குமே.

ஆக, 'இப்படிப் பிரிவாற்றுமையாலே அவனை அநுகரித்துத் தரிக்கிறாள்' என்று அறியமாட்டாமல், 'சர்வேசுவரன் ஆவேசித்தாற்போலே இராநின்றது' என்று, திருத்தாயார் வினவ வந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

---

1. அவனுகப் பாவித்தால் அவன் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லலாயிருக்கும் என்பதற்கு, வேறு பிரமாணங்களையும் அருளிச்செய்கிறார் 'பிரஹ்மத்தை' என்று தொடங்கியும், 'என்னிடத்திலிருந்து' என்று தொடங்கியும்.

"தத் ஹிதத் பஸ்யந் ருஷிः வாமதேவः ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யஶ் ச"

என்பது, பிரு. உபநிட. 3: 4.

"மத்தஸ் ஸர்வம் அஹம்ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே அஹமேவ அவ்யயः அநந்தः பரமாத்ம ஆத்ம ஸம்ஶ்ரயः"

என்பது, விஷ்ணுபுரா. 1. 19: 85.

2. 'விபூதி அத்தியாயத்தில் அவன்சொன்ன படிகளை' என்றது, பகவத்கீதையில் பத்தாம் அத்தியாயத்தில் 19-வது சுலோகம் முதல் 40-வது சுலோகம் முடிய உள்ளனவற்றைத் திருவுள்ளம்பற்றி.

3. அவனுகப் பாவித்தால் அவன் சொல்லும் வார்த்தையைச் சொல்லலாயிருக்கும் என்பதற்கு, மற்றும் ஒரு பிரமாணம் காட்டுகிறார் 'அதர்வசிரஸ்வியிலே' என்று தொடங்கி. இங்கே, நாலாம்பத்து ஈட்டின் தமிழாக்கம் 417-ஆம் பக்கம் காணல் தகும்.

## 498.

கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்
கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும்
கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும்
கடல்ஞாலம் உண்டேனும் யானே என்னும்
கடல்ஞாலத் தீசன் வந்து ஏறக்கொலோ?
கடல்ஞாலத் தீர்க்கிலை என்சொல் லுகேன்?
கடல்ஞா லத்து என்மகள் கற்கின்றவே.

**பொ - ரை:**—கடலோடுகூடின உலகத்தைப் படைத்தவனும் யானே என்பாள், இந்த உலகமாக இருப்பவனும் யானே என்பாள், இந்த உலகத்தை அளந்துகொண்டவனும் யானே என்பாள், இந்த உலகத்தைப் பிரளயத்தினின்றும் ஓட்டு விடுவித்து மேலே கொண்டுவந்தவனும் யானே என்பாள், இந்த உலகத்தை எல்லாம் பிரளயகாலத்தில் புசித்தவனும் யானே என்பாள், உலகத்திற்கெல்லாம் தலைவனான சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? இந்த உலகத்திலே என்மகள் சொல்லுகின்றவற்றை, இந்த உலகத்தீரான உங்களுக்கு எதனைச் சொல்லுவேன்? என்கிறாள்.

**வி - சூ:**—'கடல்ஞாலம் செய்தேன்' என்பதில், ஞாலம் என்பது, ஆகுபெயர். ஏறுதல் - ஆவேசித்தல். கொலோ என்பது, ஐயப்பொருள். 'கொலோ என்பது, சம்சய உக்தி அன்று, காணுங்கோள் என்று நிர்ணயித்துச் சொல்லுகிறாள்' என்பர் வியாக்யாதா. "கொல்லே ஐயம்" என்பது, தொல்காப்பியம்.

இத்திருவாய்மொழி, எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

**ஈடு:**—முதற்பாட்டு. [1] என்மகள், உலகத்தைப்படைத்தல் முதலான செயல்களை எல்லாம் செய்தேன் நானே என்ஞானின்றாள்; எம்பெருமான் தன்பக்கல் ஆவேசித்துச் சொல்லுகிறாள்போலே இராநின்றது என்கிறாள்.

கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும் - [2] "நான் உலகம் அனைத்துக்கும் காரணபூதன்" என்ஞானின்றாள். [3] கட

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: பிரபவ: பிரளய ஸ்ததா"
என்பது, ஸ்ரீ கீதை. 7: 6.

3. அழிந்தபின்னரே படைத்தல் செய்யவேண்டுமாதலின், படைப்புக்கு முன்னே நிகழ்கின்ற அழித்தலையும் சேர்த்துக்கொண்டு அருளிச்செய்கிறார்

லோடுகூடின உலகத்திலே எல்லாப்பொருள்களும், கண்க ளுக்கு இட ஒருதுரும்பு இல்லாதபடி அழிந்து, "சதேவ-சத்து ஒன்றே இருந்தது" என்கிறபடியே, தனக்கு என்ன ஒருபெய ரும் உருவமும் இல்லாதபடி அழிந்தஅன்று, இதனை உண் டாக்கினேன் நான் என்னுநின்ருள். [1]சூக்ஷ்மமான சித்து அசித்துக்களோடுகூடின பிரஹ்மமே காரணமாய், அது தானே ஸ்தூல அவஸ்தையை அடைதலே அன்றே காரிய மாகிறது. [2]சித்துஅசித்துக்களோடு கூடிய பொருளே காரண மூமாய் இருக்கையாலே, புறம்பு ஒரு காரணம் இல்லாமை யாலே, தானே முதற்காரணமும் நிமித்தகாரணமும் துணைக் காரணமுமாய் அன்றே இருப்பது. இப்படி மூன்றுவித கார ணங்களும் தானேயாய் இதனை உண்டாக்கினேன் நான்என்னு நின்ருள். 'யானே' என்ற பிரிநிலை ஏகாரத்தால், வேறு கார ணம்இல்லை என்பதனைத் தெரிவித்தபடி. கடல் ஞாலம் ஆவே னும் யானே என்னும்-[3]"அவற்றைப் படைத்து அவற்றுள் பிர வேசித்து நின்ருன், அவற்றுள் பிரவேசித்து உயிர்ப்பொரு ளும் உயிரல்பொருளும் ஆனன்" என்கிறபடியே, இவற்றை உண்டாக்கி, இவை பொருளாதல் பெயரடைதல் முதலியவை களுக்காக அநுப்பிரவேசித்து, இவற்றைச் சொல்லும் சொற் கள் தன்னளவும் வரும்படி இவையாகி நிற்கிறேன் நான் என்னுநின்ருள். [4]வாசகமாயாதல் போதகமாயாதல் அவ

---

'கடலோடுகூடின' என்று தொடங்கி. 'ஒரு துரும்பு' என்றது, இளநீர்க் குழம்பு இடுகிற துரும்பைச் சொல்லுதல்; அஞ்சனம் எழுதுகிற கோலைச் சொல்லுதல்.

1. மூன்றுவிதமான காரணங்களும் தானேயாகக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் 'சூக்ஷ்மமான' என்று தொடங்கி. மூன்று விதமான காரணங்களும் தானேயாளுலும், பரிணமம் விசேஷணம்சத்திலே என்னுமிடந் தோற்ற, 'சூக்ஷ்மமான சித்து அசித்துக்களோடு கூடின பிரஹ் மமே காரணமாய்' என்கிருர்.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிருர் 'சித்து அசித்துக்களோடு' என்று தொடங்கி. இங்கே, முதற்பத்து ஈட்டின் தமிழாக்கம், பக். 183. காணல் தகும்.

3. "தத் ஸ்ருஷ்ட்வா ததேவ அநுப்ராவிஶத் தத் அநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்ச அபவத்"

என்பது, தைத்திரீய ஆன. 6.

4. தன்னளவும் வரும்படி எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிருர் 'வாசகமாயாதல்' என்று தொடங்கி.

னைக் காட்டக்கடவன அன்றே; [1]தோற்றுகிற இதனைச் சொல்லிக்கொண்டு அபர்யவசான விருத்தியாலே அவனளவும் வருதல், இக்கூட்டத்துக்கே வாசகமாயாதல் இருக்குமேயன்றே. "ஸச்சத்யச்சாபவத் - [2]சேதனமும் அசேதனமும் ஆனார்" என்கிற இது, ஸ்வரூப ஐக்யம் அன்று, "தத்அநுப்ரவிஶ்ய - அவற்றுள் அநுப்பிரவேசித்து" என்றதனால், அநுப்பிரவேசத்தின் காரியம் என்னுமிடத்தைச் சொல்லுகிறது. கடல் ஞாலம் கொண்டேனும் யானே என்னும் - மஹாபலிபோல்வார், பருந்து இரைஞ்சினாற்போன்று இதனை அபஹரித்து 'என்னது' என்னும் அன்று, இதனை எல்லைநடந்து மீட்டுக் கொண்டேன் நான் என்னுகின்றாள். என்றது, இவற்றைப் படைத்து, 'மேல் உள்ளன தாமே நடக்கின்றன' என்று விடுகை அன்றிக்கே, இவற்றை அடிஒற்றிக்கொண்டு சென்று காத்தலைத் தெரிவித்தபடி. [3]'அசுரத்தன்மைவாய்ந்தவர்கள் இவன்முன்பு நில்லார்களேயன்றே' என்னுமதனாலே, 'இராச்சியத்தை வாங்கித் தரவேணும்' என்று விரும்பிக் கேட்டவளவே அன்றே இந்திரன்பக்கல் உள்ளது; அவனுடைய ஔதார்யத்துக்குத் தகுதியாகத் தன்னை இரப்பாளனாக்கி, அவன் தரும் விரகு அறிந்து வாங்கினன் தானேயாதலின் 'யானே' என்கிறது.

கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும் - அசுரத்தன்மைவாய்ந்தவர்களாயிருப்பார் இதனை அழித்தல் அன்றிக்கே, பூமிக்குக் காவலாக வைத்த கடல்தானே இதனை

---

1. அதனை விவரிக்கிறார் 'தோற்றுகிற' என்று தொடங்கி. அபர்யவசான விருத்தியாவது, ஒருசொல், தனக்குரிய பொருளைக் காட்டி அவ்வளவில் முடிவுபெறுது, தொடர்ந்து மேலும் செல்லுவது. 'இக்கூட்டத்துக்கே வாசகமாயாதல்' என்றது, 'காடு' என்றால், ஒரு மரத்தைமட்டும் குறிக்காமல், எல்லா மரங்களையும் பொதுவாகக் காட்டுவதுபோன்று, 'தேவதத்தன்' என்றால், இச்சொல், சித்து அசித்து ஈசுவர வாசகமாயிருத்தலைக் குறித்தபடி. போதகமாவது, 'தேவதத்தன்' என்றால், இச்சொல், முதலில் தோற்றுகிற அசித்தைச் சொல்லி, பின், அதனை விரும்பியிருக்கின்ற சேதனனைச் சொல்லி, பின், அவனுக்குள்ளே யிருக்கிற ஈசுவரனைச் சொல்லுதல்.

2. கூட்டத்துக்கே வாசகமாகக்கொள்ளுதல் எற்றிற்கு? ஸ்வரூப ஐக்யம் சொல்லுகிறது என்று கொண்டாலோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சேதனமும் அசேதனமும்' என்று தொடங்கி.

3. "யானே" என்கிறது என்? இந்திரன் இரக்க இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அசுரத் தன்மை' என்று தொடங்கி.

அழிக்க, அண்டபித்தியிலே புக்குச் சேர்ந்த இதனை இடந்து எடுத்தேனும் யானே என்னுகின்றாள். [1] அமிழ்ந்து கிடக்கிற பூமி, 'என்னை எடுக்கவேணும்' என்று விரும்பியது இல்லையே அன்றே; தானே செய்தானதலின் 'யானே' என்கிறது. கடல் ஞாலம் [2] உண்டேனும் யானே என்னும்-சிலர் இருத்தல் சிலர் அழிதல் அன்றிக்கே, படைக்கின்றவர்களோடு அழிக்கின்றவர்களோடு வேற்றுமை அற எல்லாரையும் ஒக்கப் பிரளயம் கொள்ளப் புக, இவ்வுலகம் முழுதினையும் வயிற்றிலே வைத்துக் காப்பாற்றினேன் நான் என்னுகின்றாள். [3] 'அப்போது வேறு சிலர் காத்தார்கள்' என்பதற்கு, மற்று ஒருவர் உண்டாகைக்குச் சம்பாவனையும் இல்லையாதலின் 'யானே' என்கிறது.

கடல் ஞாலத்து ஈசன் வந்து ஏறக் கொலோ - எல்லாப் பொருள்களையும் படைத்தவனுய் எல்லாப்பொருள்கட்கும் அந்தர்யாமியாய் எல்லாருக்கும் வந்த ஆபத்துக்களுக்குத்துணை வனை சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? அறிகின்றிலேன். 'கொலோ' என்பது, ஐயத்தின்கண் வந்தது அன்று, காணுங்கோள் என்று அறுதியிட்டுச் சொல்லுகிற வார்த்தை. 'உன்னைக் கேட்டு அறுதியிட வந்தோம், நீயும் எங்களைப் போன்று ஆராயாகின்றாயே! நாங்கள் பின்னர் நிர்ணயிக்கும் படி என்? நாங்கள் தெளியும்படி நீயே சொல்லாய்' என்ன, கடல் ஞாலத்தீர்க்கு இவை என்சொல்லுகேன் - [4] "வைகுந்தத்து அமரர்" என்னுமாறுபோன்று, நித்திய சம்சாரிகளாய், பகவத்விஷயம் புதியது உண்டறியாதே போருகிற உங்களுக்கு நான் எதனைச் சொல்லுவேன்? கடல் ஞாலத்து என் மகள் கற்கின்றவே-நித்தியசூரிகள் சொல்லக்கூடிய வார்த்தைகளை என்மகள் சம்சாரத்திலே இருந்து சொல்லுகிற இதற்கு நான் எதனைச் சொல்லுவது? இவைதாம், நித்தியசூரிகள் சொல்லக்கூடிய வார்த்தைகள் ஆதலின் **'ஞாலத்து என்மகள் கற்கின்றவே'** என்கிறாள். (1)

---

1. "யானே" என்ற ஏகாரத்தின் பொருளைத் தெரிவிக்கிறார் 'அமிழ்ந்து கிடக்கிற' என்று தொடங்கி.

2. "உண்டேனும்" என்றதனால், ரக்ஷணத்தைச் சொல்லுகிறது; ரக்ஷணம் தாரகமாகையாலே.

3. "யானே" என்ற ஏகாரத்தின் பொருளைத் தெரிவிக்கிறார் 'அப்போது' என்று தொடங்கி.

4. "'வைகுந்தத் தமரர்' என்னுமாறுபோன்று" என்றது, பரமபதத்தை இருப்பிடமாகவுடைய நித்தியசூரிகள் என்று விசேடித்துக்கூறியது போன்று என்றபடி.

499.

கற்குங் கல்விக்குஎல்லை இலனே என்னும்
கற்கும் கல்வி ஆவேனும் யானே என்னும்
கற்கும் கல்விசெய்வேனும் யானே என்னும்
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே என்னும்
கற்கும் கல்விச்சாரமும் யானே என்னும்
கற்கும் கல்வி நாதன்வந்து ஏறக்கொலோ?
கற்கும் கல்வியீர்க் கிவைஎன் சொல்லுகேன்?
கற்கும் கல்வி என்மகள் காண்கின்றவே.

பொ - ரை:—கற்கப்படுகின்ற கல்விக்கு எல்லையை உடையேனல்லேன் என்னுகின்றாள், கற்கும் கல்வியாக இருப்பேனும் யானே என்பாள், கற்கும் கல்வியை உண்டாக்குகின்றவனும் யானே என்பாள், கற்கும் கல்வியினுடைய தாத்பர்ய அர்த்தத்தை அறுதியிடுகின்றவனும் யானே என்பாள், கற்கும் கல்வியினுடைய சாரமாகிய மந்திரங்களும் யானே என்பாள், கற்கும் கல்வியினுலே சொல்லப்படுகின்ற சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? பகவத்விஷயம் என்றால் இன்று கற்க வேண்டியிருக்கிற உங்களுக்கு, இன்று வார்த்தை கற்கும்படியான பருவத்தையுடைய என்மகள் கண்டு சொல்லுகின்றவற்றை என்சொல்லுவேன்?

ஈடு:—இரண்டாம்பாட்டு. எல்லாக் கல்விகளால் அறியப்படுதலும் அக் கல்விகளைப் பரப்புதல் முதலான செயல்களும் நான் இட்ட வழக்கு என்கிறாள்.

கற்கும் கல்விக்கு எல்லை இலனே என்னும் - அல்ப காலத்துக்குள்ளே சாந்தீபனியோடே நான்கற்ற பரப்புக்கு ஓர்எல்லை இல்லை என்னுகின்றாள். அன்றிக்கே, [1] "ஆனந்த குணத்தைக் கூறமுடியாமல் அவனிடமிருந்து வேதவாக்குக்கள் மீண்டன" என்கிற சுருதிக்கு நிலம் அன்றிக்கே இருக்கிறேன் நான் என்னுகின்றாள் என்னுதல். என்றது, கற்கும் கல்வியினுடைய எல்லைக்குள்ளே நிற்கிறேன் அல்லேன் நான் என்கிறாள் என்றபடி. அன்றிக்கே, [2] "வேதாந்த விழுப்பொருளின்

1. "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ" என்பது, தைத்திரீய. ஆனந். 9 : 1.

2. "கற்கும் கல்விக்கு எல்லை இலனே என்னும்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். மூன்றாவது பொருளில், எல்லை என்பது, வேதாந்தமாய், இல் என்று இருப்பிடமாய், வேதாந்தத்தை இருப்பிடமாக வுடையவன் என்பது, சொற்பொருள். வேதாந்த வேத்யன் என்றபடி.

மேலிருந்த விளக்கை" என்கிறபடியே, வேதாந்தங்களாலே அறியப்படுமவன் நான் என்கிறாள் என்னுதல். கற்கும் கல்வி ஆவேனும் யானே என்னும் - [1]அவற்றால் அறியப்படாமல் இருக்கிற அளவேயோ, [2]"நீரே கல்வி" என்கிறபடியே, அவை தாம் என் அதீநம் அலவோ என்னுகின்றாள். கற்கும் கல்வி செய்வேனும் யானே என்னும் - அந்தக் கல்விகளை [3]அவ்வக் காலங்களில் உண்டாக்குவேனும் நான் என்னுகின்றாள். கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே என்னும் - அவற்றின் சந்தேகங்களைத் தீர்த்துத் தாத்பர்ய நிர்ணயம் செய்வேனும் நான் என்னுகின்றாள். [4]பரக்கக் கற்றுவைத்தே "சூந்யமே தத்துவம்" என்கிறார் உளரே அன்றே. அன்றிக்கே, கற்கின்றவர்களும் கற்பிக்கின்றவர்களும் நான் இட்ட வழக்கு என்னுகின்றாள் என்னுதல். 'தீர்ப்பேன்' என்ற சொல், [5]இப் பொருளைக் காட்டுமோ? என்னில், தீர்க்கையாவது, அவற்றினுடைய எல்லைகாண்கை அன்றே. கற்கும் கல்விச் சாரமும் யானே என்னும் - அக்கல்வியினுடைய [6]சாரமான பிரயோஜனமும் நான் என்னுகின்றாள். கற்கும் கல்விநாதன் வந்து ஏறக் கொலோ - எல்லாக் கல்விகளாலும் அறியப்படுகின்ற சர்வே

---

மாலிருஞ் சோலையென்னும் மலையையுடைய மலையை
காலிரு மூர்த்திதன்னை நால்வேதக் கடலமுதை
மேலிருங் கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளின்
மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனவே.

என்பது, பெரியாழ்வார் திருமொழி.

1. "கற்கும் கல்விக்கு எல்லை இலனே என்னும்" என்பதற்கு, அருளிச் செய்த பொருள் மூன்றனுள், இரண்டாவது பொருளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவற்றால்' என்று தொடங்கி.

2. கற்கும் கல்வி ஆகிறவன் இவனே என்னுமதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நீரே கல்வி' என்று.

"த்வமேவ மாதாச பிதா த்வமேவ த்வமேவ பந்துஶ்ச குரு: த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தேவதேவ"

என்பது, சுலோகம்.

3. அவ்வக்காலங்களில் - படைக்கும் காலந்தோறும்.

4. ஐயம் உண்டானால் அன்றே தீர்க்கவேண்டும்; ஐயத்திற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பரக்கக் கற்று' என்று தொடங்கி. 'சூந்யமே தத்துவம்' என்றது, பிரபஞ்சம் பொய் என்று சொல்லுகிற மாயாவாதிகளுக்கும் உபலக்ஷணம்.

5. 'இப்பொருளை' என்றது, கற்கின்றவர்களும் கற்பிக்கின்றவர்களும் என்னும் பொருளை.

6. சாரமான பிரயோஜனம் - மோக்ஷம்.

சுவரன் வந்து ஆவேசித்தானே? கற்கும் கல்வி உலகத்தீர்க்கு இவை என்சொல்லுகேன் - இப்போது கற்று அறியவேண்டும்படி, பகவத் விஷயத்தில் [1] ஒவ்வோக்குழியிடாதே இருக்கிற உங்களுக்கு நான் எதனைச் சொல்லுவது? [2] கற்கும் கல்வி என்மகள் காண்கின்றவே - சொன்ன வார்த்தையைச் சொல்லுமித்தனைபோக்கி, தானுக ஒரு வார்த்தை சொல்லமாட்டாத அளவாயிருக்கிற இவள், இவ்விஷயத்திலே இறங்குகிற எல்லையை, நான் எதனைச் சொல்லுவது? (2)

## 500.

காண்கின்ற நிலமெல்லாம் யானே என்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்
காண்கின்றவெம் தீயெல்லாம் யானே என்னும்
காண்கின்றஇக் காற்றெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடல்வண்ணன் ஏறக்கொலோ?
காண்கின்ற உலகத்தீர்க் கென்சொல் லுகேன்?
காண்கின்ற என்கா ரிகைசெய் கின்றவே.

**பொ - ரை:**—பார்க்கப்படுகின்ற பூமி முழுதும் யானே என்பாள், பார்க்கப்படுகின்ற ஆகாயமுழுதும் யானே என்பாள், பார்க்கப்படுகின்ற கொடிய நெருப்பு முழுதும் யானேஎன்பாள், பார்க்கப்படுகின்ற இக்தக் காற்று முழுதும் யானே என்பாள், பார்க்கப்படுகின்ற கடல் எல்லாம் யானே என்பாள், காட்சிக்கு இனியதான கடல்போன்ற நிறத்தையுடைய சர்வேசுவரன் ஆவேசித்தானே? எல்லாவற்றையும் காணவல்ல என்மகள் செய்கின்றவற்றை, காண்கின்ற உலகத்தை ஒழிய வேறு ஒன்றனையும் அறியாத உங்களுக்கு எதைச் சொல்லுவேன்?

**வி:**—மூன்றும்பாட்டு. [3]காரணமான மண்முதலான பூதங்கள் ஐந்தும் நான் இட்ட வழக்கு என்கிறாள்.

---

1. ஒவ்வோக் குழி - பாலர்கள் எழுத்து இடுகிற வரிக்குழி.

2. "கற்கும் கல்வி என்மகள்" என்பதனை, கல்வி கற்கும் என்மகள் என்று மாற்றி, இன்று வார்த்தை கற்கும் பருவமான என் பெண்பிள்ளை என்று பொருள் கூறுக. காண்கின்ற - கண்டு சொல்லுகின்றவற்றை.

3. "நிலம்" முதலான காரியங்களைக் காட்டுகின்ற சொற்கள், காரணத்தைக் காட்டுகின்றன எனக் கொண்டு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'காரணமான' என்று தொடங்கி.

காண்கின்ற நிலம் எல்லாம் யானே என்னும் - [1] காணப்புக்கால் கண்டதாய்த் தலைக்கட்ட முடியாதபடியான பரப்பையுடைத்தான பூமிஎல்லாம் நான் இட்டவழக்கு என்னுநின்றாள். இப்படி இருக்கிற இதுதான் காரிய உருவமாக இருக்கின்ற மண்ணே அன்றே, கண்களுக்குத் தோற்றுகிற இது இவ்வளவானால், இதற்குங்கூடக் காரணமாய்த் தான் சாஸ்திரம் கொண்டு அறியவேண்டும்படி இருக்குமது இவ்வளவு அல்லவே அன்றே. காண்கின்ற விசும்பு எல்லாம் யானே என்னும் - காணப்புக்கால் கண்டதாய்த் தலைக்கட்ட முடியாதபடியாய், இது தனக்குங்கூட இடத்தைக்கொடுக்கிற ஆகாயமும் நான் இட்டவழக்கு என்னுநின்றாள். காண்கின்ற வெம் தீ எல்லாம் யானே என்னும் - அப்படிப்பட்ட ஒளியுள்ள பொருளும் நான் இட்டவழக்கு என்னுநின்றாள், காண்கின்ற [2] இக்காற்று எல்லாம் யானே என்னும் - பரிசம்கொண்டு அறியும்படி இருக்கிற காற்றும் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள். காண்கின்ற கடல் எல்லாம் யானே என்னும்-காண்பார்க்குக் கண்டதாகத் தலைக்கட்ட முடியாதபடியான கடல் எல்லாம் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள். காண்கின்ற கடல்வண்ணன் ஏறக் கொலோ - காணப்புக்கால் கண்டதாக மீளஒண்ணாதபடியான கடல்போலே சிரமஹரமான வடிவையுடைய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? காண்கின்ற உலகத்தீர்க்கு என் சொல்லுகேன் - நீங்களும் என்னைப்போன்று காணுநின்றீர் கோளாகில், உங்களுக்கு நான் என்ன பாசுரமிட்டுச்சொல்லுவது; [3] சொல்ல ஒண்ணுமைக்கு உங்களோடு என்னோடு வாசி உண்டோ? [4] காண்கின்ற என்காரிகை செய்கின்றவே - "வேத வாக்குக்கள் மனத்தாலும்கூட நினைக்கமுடியாதபடி எந்தப்

1. "காண்கின்ற" என்றதற்கு இரண்டு பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, காரணபூமி. மற்றொன்று, காரியபூமி. அவற்றில் காரியபூமியை அருளிச்செய்கிறார் 'காணப்புக்கால்' என்று தொடங்கி. காரணபூமியை அருளிச்செய்கிறார் 'இப்படி இருக்கிற' என்று தொடங்கி. இரண்டாவது பொருளில் காணுதல், சாஸ்திரங்களைக்கொண்டு காணுதல்.

2. தரித்திருப்பதற்குக் காரணமாய் அண்மையிலிருத்தலை நோக்கி, "இக் காற்று" என்கிறாள்.

3. ஆனாலும், எங்களைக் காட்டிலும் நீ அந்தரங்கமானவள் அல்லையோ? உன்னால் சொல்ல ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சொல்ல ஒண்ணுமைக்கு' என்று தொடங்கி.

4. காண்கின்ற என்காரிகை - சாக்ஷாத்கரித்த என் பெண்பிள்ளை.

பரம்பொருளிடமிருந்து திரும்புகின்றனவோ" என்கிற அளவிட்டு அறியமுடியாத விஷயத்தை உட்புக்குப் பேசுகின்ற என் பெண்பிள்ளை செய்கிற இதனை நான் சொல்லுவது என்? (3)

## 501.

செய்கின்ற கிதிஎல்லாம் யானே என்னும்
செய்வானின் றனகளும் யானே என்னும்
செய்துமுன் இறந்தவும் யானே என்னும்
செய்கைப்பயன் உண்பேனும் யானே என்னும்
செய்வார்களைச் செய்வேனும் யானே என்னும்
செய்ய கமலக் கண்ணன் ஏறக்கொலோ?
செய்ய உலகத்தீர்க் கிவைஎன் சொல்லுகேன்?
செய்ய கனிவாய் இளமான் திறத்தே.

**பொ - ரை:**—செய்துகொண்டிருக்கின்ற காரியங்கள் எல்லாம் யானே என்னும், இனிமேல் செய்யப்படுவனவாக நிற்கின்ற காரியங்களும் யானே என்னும், முன்செய்து கழிந்துபோன காரியங்களும் யானே என்னும், காரியங்களின் பயன்களை அநுபவிக்கின்றவனும் யானே என்னும், அந்தக் காரியங்களைச் செய்கின்றவர்களைப் படைக்கின்றவனும் யானே என்னும், செங்நிறம்பொருந்திய தாமரைபோன்ற திருக்கண்களையுடைய சர்வேசுவரன் ஆவேசித்தானோ? நன்மை அல்லது அறியாத இந்த உலகத்தார்க்கு, சிவந்த கோவைக்கனி போன்ற இளமை பொருந்திய மான்போன்ற இப்பெண் விஷயத்தில் எதனைச் சொல்லுவேன்?

**ஈடு:**—நான்காம்பாட்டு. முக்காலத்திலும் உண்டான காரியங்களின் கூட்டம் எல்லாம் நான் இட்ட வழக்கு என்னுநின்ருள்.

செய்கின்ற [1] கிதி எல்லாம் யானே என்னும், செய்வான் நின்றனகளும் யானே என்னும், செய்து முன் இறந்தவும் யானே என்னும் - நிகழ்காலத்தில் நடக்கும் காரியக்கூட்டம், செய்யக்கடவதாய் நிற்கிற காரியக்கூட்டம், முன்பு செய்து போன காரியக்கூட்டம் இவை அடைய நான் இட்ட வழக்கு என்னுநின்ருள். செய்கைப் பயன் உண்பேனும் யானே என்

1. "கிதி" என்பது கிருதியாய், கிரியையைச் சொல்லுகிறது. கிரியை - செயல்.

னும்-[1]"நானே பஞ்ச மஹா யஜ்ஞும் முதலிய எல்லா நித்திய கர்மங்களின் பயனைப் புசிப்பவனும்" என்னுநின்றாள். அன்றிக்கே, கிரியைகளின் பலன்களை அநுபவிக்கின்றவர்களும் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள் என்னுதல். அன்றிக்கே, செய்கையாகிற கிரியையும், பலத்தை அநுபவிக்கின்றவனும் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள் என்னுதல். செய்வார்களைச் செய்வேனும் யானே என்னும் - [2]கிரியைகளின் கர்த்தாக்களை இடுவித்து அவற்றைச் செய்விக்கின்றவனும் யானே என்னும். அன்றிக்கே, அவர்கள் இவற்றைக்கொண்டு என்னை அடையும்படி செய்வேனும் யானே என்னும் என்னுதல். செய்ய கமலக்கண்ணன் ஏறக்கொலோ-கரிய கண்ணையுடைய வளான தன்மை நீங்கி, புண்டரீகாக்ஷன்படியாய் விட்டது. என்றது, மையகண்ணளான தன்மை போய், [3]செய்யகோலத் தடங்கண்ணன்படியாய்விட்டது என்றபடி. செய்ய உலகத் தீர்க்கு இவை என்சொல்லுகேன் - 'சொல்லமுடியும், முடியாது' என்று அறியாதே, 'சொல்லு, சொல்லு' என்று என்னை அலைக்கிற [4]படுபாடரான உங்களுக்கு நான் எதனைச்

---

1. "செய்கைப்பயன் உண்பேனும்யானே என்னும்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். அவற்றில், முதற்பொருளை 'நானே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

"அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச
ந து மாம் அபிஜாநந்தி தத்வேந அதஃ ச்யவந்தி தே"

என்பது, ஸ்ரீ கீதை. 10 : 25.

'நித்திய கர்மங்களின் பயனை' என்றது, ஹவிஸ்ஸினை. 'கிரியைகளின் பலன்களை அநுபவிக்கின்றவர்கள்' என்றது, சுவர்க்கம் முதலான பலன்களை அநுபவிக்கின்றவர்கள் என்றபடி.

2. "செய்வார்களைச் செய்வேனும்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருள், செய்வார்களை—விரும்பப்படுகின்ற சுவர்க்கம் முதலான பல சாதன கர்த்தாக்களை, செய்வேனும்-வேறு தேவர்களைப் பற்றும்படி செய்வேனும் என்பது. இதனை, அருளிச்செய்கிறார் 'கிரியைகளின்' என்று தொடங்கி. செய்வார்களை - மோக்ஷத்திற்குச் சாதனமான யஜ்ஞும் முதலான கர்மங்களைச் செய்கிறவர்களை, செய்வேனும் - என்னை அடையச் செய்வேனும் என்பது இரண்டாவது பொருள். இதனை, அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

3. 'செய்யகோலத் தடங்கண்ணன் படியாய்விட்டது' என்றது, செந்தாமரைக் கண்ணனுக்கே அன்றே இச்செயல்கள் எல்லாம் உள்ளது என்றபடி.

4. படுபாடர் - எங்ஙனமாயினும் விஷயத்தைத் தெரிந்துகோடல் வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள்.

சொல்லுவது? செய்ய கனிவாய் இளமான் திறத்தே - [1] அநு காரத்தாலே புணர்ச்சி சமயத்திற்போலே இருக்கிற இவள், உதடு செவ்விபெற்று வரும்படி வேறுபட்டவளாய், மிக இளைய ளாய் இருக்கிறபடி. நான் எதனைச் சொல்லுவது. [2] பிரிவில் வெளுத்திருக்கை தக்கதாக இருக்க, இவள் உதடு செவ்வி பெற்று வருகின்றதே அன்றே அநுகாரத்தால் வந்த தரிப் பாலே. சிவந்த கனிபோலே இருக்கிற உதட்டினையுடையளாய், இளைய மான்போலே பேதையான இவள் இடையாட்டத்தே.(4)

## 502.

திறம்பாமல் மண்காக்கின்றேன் யானே என்னும்
திறம்பாமல் மலைஎடுத் தேனே என்னும்
திறம்பாமல் அசுரரைக் கொன்றேனே என்னும்
திறங்காட்டி அன்றைவரைக் காத்தேனே என்னும்
திறம்பாமல் கடல்கடைந் தேனே என்னும்
திறம்பாத கடல்வண்ணன் ஏறக் கொலோ?
திறம்பாத உலகத்தீர்க்கு என்சொல் லுகேன்?
திறம்பாது என் திரு மகள் எய்தினவே.

**பொ - ரை:**—நன்னெறியினின்றும் ஒருவரும் பிறழாதவாறு உல கத்தை எல்லாம் காக்கின்றவன் யானே என்னும், தளர்ச்சியில்லாமலே கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்தேன் என்னும், தப்பாதபடி அசுரர்களைக் கொன்றேன் என்னும், திறமைகளைக் காட்டி அக்காலத்தில் பாண்டவர்களைக் காப்பாற்றினேன் என்னும், தப்பாமல் சமுத்திரத்தைக் கடைந்தேன் என்னும், தன்னிகளை ஒருவரும் தப்பஒண்ணுதவாறு இருக்கின்ற கடல்வண்ணனுகிய சர்வேசுவரன் ஆவேசித்தானே? பக வானுடைய குணங்களில் நின்றும் மீளாதவாறு என்மகள் எய்திய வற்றை, கேட்டு அல்லது மீளாத உலகத்தார்க்கு எதனைச் சொல்லு வேன்?

**ஈடு:**—ஐந்தாம்பாடு. உலகத்தைப் பாதுகாத்தல் தொடக்க மான செயல்களை எல்லாம் செய்தேன் நான் என்னுநின்றாள் என்கிறாள்.

---

1. அநுகாரம் - சொல் அநுகாரம்.

2. அநுகாரத்தாலே என்று கூறுதல் என்? இயற்கையிலே சிவந் திருத்தல் ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிவில்' என்று தொடங்கி.

திறம்பாமல் மண்காக்கின்றேன் யானே என்னும் - [1] ஒருவர் கூறை எழுவர் உடாதபடி, "இந்தப் பரமாத்மாவினிடமிருந்து பயந்து காற்று வீசுகிறது" என்கிறபடியே, பூமியை நோக்குகிறேன் நான் என்னும். திறம்பாமல் மலையெடுத்தேனே என்னும் - ஒரு பசுவின் மேலாதல், ஓர் ஆயன்மேலாதல் ஒரு துளிபடாதபடி கோவர்த்தனகிரியைத் தரித்துப் பாதுகாத்தேனும் நான் என்னுள்நின்றருள். திறம்பாமல் அசுரரைக் கொன்றேனே என்னும் - அசுரர்களுடைய கூட்டத்தைத் தப்பாதபடி அறுத்துப் போகட்டேன் என்னும். திறம் காட்டி அன்று ஐவரைக் காத்தேனே என்னும் - [2] உலகத்தில் என்படிகளைக் காட்டி, பகலை இரவாக்கியும், 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுத்தும், பகைவர்களுடைய உயிர்நிலையைக் காட்டியும் இப்படி அன்று பாண்டவர்கள்மேல் அன்புவைத்து அவர்களைக் காப்பாற்றினேனும் நான் என்னுள்நின்றருள். "கிருஷ்ணா! வெற்றியையாவது இராஜ்ஜியத்தையாவது நான் விரும்பவில்லை" என்ற அருச்சுனனை, "இப்போதே போரைச்செய்ய வேணும் என்கிற உன்னுடைய வார்த்தையை நிறைவேற்றி விடுகிறேன்" என்னச் செய்தானே அன்றே. திறம்பாமல் கடல் கடைந்தேனே என்னும்-ஒருதாழிக்கு உட்பட்ட தயிரை

---

1. "திறம்பாமல்" என்பதற்கு, ஒருவர் நிமித்தமான அச்சத்தாலே ஒருவர் அஞ்சாதபடி என்று பொருள்கூறத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிறார் 'ஒருவர்' என்று தொடங்கி. ஒருவர் கூறை எழுவர் உடுக்கையாவது, ஒருவன் கையில் உள்ள புடைவையை ஒருவன் பறிக்க, அவன் கையிலுள்ள அதனை வேறு ஒருவன் பறிக்க, இப்படியே எழுபேராகப் பறித்து உடுத்தல். இது, எளியாரை வலியார் வருத்துவதற்குத் திருஷ்டாந்தம். இப்படி, எளியாரை வலியார் வருத்தாதபடி அவர் அவர்கள் மரியாதைகளிலே நிறுத்திப் பூமியைக் காக்கிறேன் என்றபடி.

2. திறம்காட்டி - பகுபாத பிரகாரங்களைக் காட்டி என்னுதல். திறம் என்று சமூகமாய், தத்துவவிவேகம் தொடங்கிப் பிரபத்தி முடிவாகவுள்ள அர்த்த சமூகங்களைக் காட்டி என்னுதல். இந்த இரண்டு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'உலகத்தில்' என்று தொடங்கியும், 'கிருஷ்ணா!' என்று தொடங்கியும்.

"நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நச ராஜ்யம் ஸுகானிச
கிம்நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைஃ ஜீவிதேநவா"

"நஷ்டோ மோஹஃ ஸ்மிருதிர்லப்தா த்வத் ப்ரசாதாத் மயாச்யுத
ஸ்திதோஸ்மி கதஸந்தேஹஃ கரிஷ்யே வசனம் தவ"

என்பன, ஸ்ரீ கீதை. 1; 32. 18; 73.

ஒன்றும் பிரிகதிர்ப்படாதபடி கடைவாரைப்போலே, சமுத்திரம் என்கிற மஹாதத்துவத்தின் நடுவே மந்தரத்தை நட்டுக் கடைகிறஇடத்துக் கீழேவிழுதல் மேலே கொந்தளித்தல் செய்யாதபடி கடலைக் கடைந்தேனும் நான் என்னும். திறம்பாத கடல்வண்ணன் ஏறக்கொலோ - தன்சாசனத்தை ஒருவரால் தப்பஒண்ணாதபடியாயிருக்கிற, அளவிட்டு அறிய ஒண்ணாத தன்மையனான சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? திறம்பாத உலகத்தீர்க்கு என்சொல்லுகேன் - 'கேட்டு அல்லது கால்வாங்கோம்' என்று இருக்கிற உங்களுக்கு நான் எதனைச் சொல்லுவது. திறம்பாது என் திருமகள் எய்தின - திருமகளை ஒத்த என்மகள், ஹிதம்சொல்லி மீட்கஒண்ணாதபடி அடைந்தவற்றை நான் எதனைச் சொல்லுவது? [1] ஆழங்காலிலே இழிந்தார்படியைக் கரையிலே நின்றாராலே சொல்லப்போமோ. (5)

## 503.

இனவேய்மலை ஏந்தினேன் யானே என்னும்
இனஏறுகள் செற்றேனும் யானே என்னும்
இனஆன்கன்று மேய்த்தேனும் யானே என்னும்
இனஆநிரை காத்தேனும் யானே என்னும்
இனஆயர் தலைவனும் யானே என்னும்
இனத்தேவர் தலைவன் வந்து ஏறக்கொலோ?
இனவேற்கண் நல்லீர்க் கிவைஎன் சொல்லுகேன்?
இனவேற் கண்ணி என்மகள் உற்றனவே.

பொ ரை:—கூட்டம் கூட்டமான மூங்கில்களையுடைய கோவர்த்தனம் என்னும் மலையைத் தாக்கினவனும் நானே என்னும், ஒத்த இடபங்களைக் கொன்றவனும் யானே என்னும், ஒத்த பசுவின் கன்றுகளை மேய்த்தேனும் யானே என்னும், ஒத்த ஆயர்களுக்குத் தலைவனும் யானே என்னும், கூட்டம் கூட்டமான நித்தியசூரிகளுக்குத் தலைவனான சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? வேலை ஒத்த கண்களையுடைய நல்லவர்களான உங்களுக்கு, வேலை ஒத்த கண்களையுடையவளான என்மகள் அடைந்தனவற்றை என்சொல்லுவேன்?

---

1. அவள் அடைந்ததை உன்னாலே சொல்லப்போகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆழங்காலிலே' என்று தொடங்கி.

ஈடு:—ஆரும்பாட்டு. கோவர்த்தனமலையைத்தூக்கித் தரித்திருத்தல் முதலான, கிருஷ்ணனுடைய செயல்களை எல்லாம் செய்தேன் நான் என்னுகின்றாள்.

இன வேய் மலை ஏந்தினேன் யானே என்னும்-[1] அணுக்கனைக் கவிழ்த்துப் பிடித்தாற்போலே, திரள்திரளான மூங்கிலையுடைத்தான மலையை வருத்தம் இன்றியே தரித்தேன் நான் என்னுகின்றாள். இனம் ஏறுகள் செற்றேனும் யானே என்னும் - ஒன்று இரண்டு அன்றிக்கே [2] யமனுக்கு ஒத்தனவாக இருக்கிற இடபங்கள் ஏழனையும் ஒருகாலே ஊட்டியாக நெரித்துப் போகட்டேன் நான் என்னும். இன ஆன்கன்று மேய்த்தேனும் யானே என்னும் - [3] "கன்றுகளின் நடுவில் உள்ளவனும் இளமைப்பருவமுடையவனும்" என்கிறபடியே, என்னோடு ஒத்த பருவமுள்ள கன்றுகளை மேய்த்தேனும் நான் என்னும். இன ஆநிரை காத்தேனும் யானேஎன்னும்-முன்பு பிரஹ்மசர்யம் அநுஷ்டித்துப் பின்பு இல்லறதர்மம் அநுஷ்டிப்பாரைப் போலே, இளமைப்பருவத்தில் கன்றுகளை மேய்த்து, பருவம் நிரம்பினபின்பு பசுக்களை மேய்த்தேனும் நான் என்னும். இன ஆயர் தலைவனும் யானே என்னும் - [4] "தன்னேராயிரம் பிள்ளைகள்" என்கிறபடியே, என்னோடு ஒத்த பருவத்தில் பிள்ளைகளும் நானுமாகத் தீம்புசெய்து திரிகிற இடத்தில் அவர்களில் என்னளவு தீம்புசெய்கின்றவர்கள் இலர் என்னும். இனத்தேவர் தலைவன்வந்து ஏறக்கொலோ-வேறு ஒன்றிலும் விருப்பமில்லாதிருத்தலுக்குத் தன்னோடு ஒத்திருக்கிற நித்திய சூரிகளுக்கு நிர்வாஹகனான சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? அன்றிக்கே, இனத்தேவர் என்பதற்கு, தனியே அநுபவிக்க ஒண்ணுமையாலே திரள்திரளாக இருக்கிற நித்திய சூரிகள் என்னுதல். [5] "அடியார்கள் குழாங்கள்" என்னக்கடவதன்றே. இனம் வேல் கண் நல்லீர்க்கு இவை என் சொல்லு

---

1. அணுக்கன் - குடை.

2. "இன ஏறுகள்" என்றவிடத்தில், இனம் என்றது, ஒத்ததாய், யமனுக்கு ஒத்ததாயிருக்கிறபடி.

3. "வத்ஸ மத்யகதம் பாலம் நீலோத்பல தளச்சவிம்" என்பது, விஷ்ணுபுரா. 5. 17: 19.

4. "தன்னேராயிரம்பிள்ளைகளோடு தளர்நடை இட்டு வருவான்" என்பது, பெரியாழ்வார் திருமொழி.

5. திருவாய்மொழி. 2. 3: 10.

கேன் - 'இவள்நிலே எவ்வளவாய்த் தலேக்கட்டுகிறது' என்று, வேல்ஒழுங்குபோலே கூர்க்கப் பார்த்துக்கொண்டிருக்கிற உங்களுக்கு நான் எதனைச்சொல்லுவது? ஏன்தான், சொல்ல அருமை என்? என்ன, இனம் வேல் கண்ணி என்மகள் உற்றன - தன்கண்களுக்கு இலக்கானர் படுமதனைத் தான் படுகிற படியைச் சொல்லப்போமோ? [1] "உயிர்காமின்கள் ஞாலத்துள்ளே" என்பதே அன்றே இவள் கண்களுக்கு இலக்கானர் படுவது. (6)

504.

உற்றார்கள் எனக்கில்லே யாரும் என்னும்
உற்றார்கள் எனக்கெங்குஎல் லாரும் என்னும்
உற்றார்களைச் செய்வேனும் யானே என்னும்
உற்றார்களை அழிப்பேனும் யானே என்னும்
உற்றார்களுக் குற்றேனும் யானே என்னும்
உற்றாரிலி மாயன் வந்து ஏறக்கொலோ?
உற்றீர்கட் கென்சொல்லிச் சொல்லு கேன்யான்?
உற்று என்னுடைப் பேதை உரைக்கின்றவே.

பொ - ரை:—எனக்கு உறவினர்கள் யாரும் இல்லே என்பாள், இங்கு எல்லாரும் எனக்கு உறவினர்களே என்பாள், உறவினர்களை உண்டாக்குகின்றவனும் யானே என்பாள், உறவினர்களை அழிக்கின்றவனும் யானே என்பாள், உறவினர்களுக்குப் பொருந்தியவனும் யானே என்பாள், உறவினர்கள் ஒருவரும் இல்லாத மாயனுகிய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? இங்கு வந்து சேர்ந்திருக்கின்ற உங்களுக்கு, என்னுடைய பேதைப்பருவத்தையுடைய மகள் பொருந்தி உரைக்கின்ற வார்த்தைகளை எதனைச் சொல்லுவேன்?

ஈடு:—ஏழாம்பாட்டு. எம்பெருமான் அடியார்கள் விஷயத்தில் இருக்கிற இருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாள் என்கிறாள்.

எனக்கு உற்றார்கள் யாரும் இல்லே என்னும் - [2] எனக்கு ஒருகாரணம் பற்றிவந்த பந்துக்கள் ஒருவரும் இலர் என்னும்.

1. "கடாவிய வேகப் பறவையின் பாகன் மதனசெங்கோல்
கடாவிய கூற்றம் கண் டீர்உயிர் காமின்கள் ஞாலத்துள்ளே"
என்பது, திருவிருத்தம். 6.

2. "எனக்கு உற்றார்கள் யாரும் இல்லே" என்பதற்கு, இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். இரண்டாவது வகையில், உற்றார் - உற்றிருப்பார் என்றபடி, சிநேகம் செய்வார் என்பது பொருளாகக் கொள்க.

அன்றிக்கே, என்னுடைய சம்பந்தம் அறிந்து என்னோடு சிநேகிக்கக்கூடியவர் ஒருவரும் இலர் என்னும் என்னுதல். [1]"உலகங்கட்கு எல்லாம் தலைவன்" என்று இதனை ஒதிவைத்தே வேறு தெய்வங்களை வணங்குதல் அன்றே செய்வது. எனக்கு உற்றார்கள் இங்கு எல்லாரும் என்னும் - என்க்கு, காரணம் இல்லாமல் வந்த பந்துக்கள் அல்லாதார் இலர் என்னும். அவர்கள் இப்படி இருக்கச்செய்தே காரணமில்லாமல் வந்த பந்துவாய் எல்லாரிடத்திலும் அன்புடையனாயிருப்பன் என்னுதல். உற்றாரைச் செய்வேனும் யானே என்னும் - அவர்களிலே சிலர் வந்து என்னை அடையும்படி செய்கின்றேனும் யானே என்னும். உற்றாரை அழிப்பேனும் யானே என்னும் - அவர்களுக்கு வேறு பிரயோஜனங்களிலே ருசி உண்டானால், அந்தப் பிரயோஜனங்களைக் கொடுத்து என்பக்கல் நின்றும் அகற்றுவேனும் யானே என்னும். அன்றிக்கே, 'அவர்களை அழகு முதலியவைகளாலே அழிப்பேனும் யானே என்னுநின்ருள்' என்று ஆண்டான் பணித்தாராக [2]இளையபெருமாள் பணிப்பர். உற்றாருக்கு உற்றேனும் யானேஎன்னும் - என்பக்கல் வேறு பிரயோஜனங்களை விரும்பாதவர்களாய் என்னை அடைகின்றவர்கட்கு, என்னளவு வேறு பிரயோஜனங்களை விரும்பாதவர் இலர் என்னுதல். அன்றிக்கே, என்னையே எல்லா உறவுமுறையுமாகப் பற்றினவர்கட்கு, நானும் அவர்களையே எல்லா உறவு முறையுமாக இருப்பேன் என்னுதல். உற்றார் இலி மாயன் வந்து ஏறக்கொலோ - இற்றைக்கு முன்பு தம்முயற்சியால் கிட்டினவர்கள் ஒருவரும் இல்லாதபடி இருக்கிற ஆச்சரியத்தையுடைய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? உற்றீர்கட்கு என்சொல்லிச் சொல்லுகேன் யான் - 'இங்ஙனம் சந்தேகிக்கலாமோ, உறவினர்களுக்கு அறுதியிட்டுச் சொல்லவேணுங்காண்' என்ன, உறவு முறையராமித்தனையோ வேண்டுவது, சொல்லவேண்டுவன இருந்து சொல்ல

---

1. சம்பந்தம் அறிந்து சிநேகம் செய்யார்களோ? என்ன, 'உலகங்கட்கெல்லாம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"பதிம் விஸ்வஸ்ய ஆத்மேஸ்வரம் ஸாஸ்வதம் ஸிவம் அச்யுதம்" என்பது, தைத்திரீய நாரா.

2. இளையபெருமாள் - முதலியாண்டான் ஸ்ரீ பாதத்தில் ஆஸ்ரயித்த ஒரு பெரியார்.

வேண்டாவோ, என்ன பாசுரத்தைச் சொல்லிச் சொல்லு வேன்? ஏன்தான், சொல்ல ஒண்ணுமைக்கு வந்தது என்? என்னில், என்னுடைப் பேதை உற்று உரைக்கின்றவே - பருவம் நிரம்பாத என்பெண், மறுபாடுருவத் தைத்துச் சொல்லுகிறவற்றை, கரையிலே நிற்கிற நான் எதனைச்சொல்லுவது? [1]திருத்தாயாரான நிலையும் இவர்க்கே உள்ளது ஒன்றுகில், இங்குச் சொல்லஒண்ணுதபடி கலங்குகையாவது என்? என்னில், [2]"தனக்கும் தன் தன்மை அறிவரியான்" என்கிறபடியே, சர்வேசுவரனை, தன்படி தானும் அறியான் என்று சொல்லுமாறுபோலே, தம்நிலை தமக்குங்கூடப் பேச்சுக்கு நிலம் அன்று என்கிறது. (7)

## 505.

உரைக்கின்ற முக்கட்பிரான் யானே என்னும்
உரைக்கின்ற திசைமுகன் யானே என்னும்
உரைக்கின்ற அமரரும் யானே என்னும்
உரைக்கின்ற அமரர்கோன் யானே என்னும்
உரைக்கின்ற முனிவரும் யானே என்னும்
உரைக்கின்ற முகில்வண்ணன் ஏறக்கொலோ?
உரைக்கின்ற உலகத்தீர்க்கு என்சொல் லுகேன்?
உரைக்கின்ற என்கோ மள ஒண் கொடிக்கே.

**பொ-ரை:**—தாமதபுராணங்களிலே சொல்லப்படுகின்ற சிவபிரானும் யானே என்பாள், அவனுக்கும் தமப்பனுகச் சொல்லப்படுகின்ற பிரமனும் யானே என்பாள், சொல்லப்படுகின்ற தேவர்களும் யானே என்பாள், சொல்லப்படுகின்ற தேவர்கள் தலைவனுன இந்திரனும் யானே என்பாள், உரைக்கின்ற முனிவர்களும் யானே என்பாள், வேதங்களிலே பிரசித்தமாகச் சொல்லப்படுகின்ற மேகம்போன்ற நிறத்தையுடைய சர்வசுவரன் வந்து ஆவேசித்தானே? சொல்லு சொல்லு என்று பேசுகின்ற உங்களுக்கு, உலக விஷயத்தைக் கடந்து பேசுகின்ற அழகிய கொடிபோன்ற என்பெண் விஷயத்தில் எதனைச் சொல்லுகேன்?

---

1. ஸ்வாபதேசத்திலே ஜிஜ்ஞாஸு பிரஸ்நத்தை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'திருத்தாயாரான' என்று தொடங்கி.

2. திருவாய். 8. 4: 6.

**ஈடு**:—எட்டாம்பாட்டு. உலகத்திற்குப் பிரதாநரான பிரமன் முதலான தேவர்கள் நான் இட்ட வழக்கு என்னுநின்ருள் என்கிருள்.

உரைக்கின்ற முக்கட்பிரான் யானே என்னும் - [1]வேதத்திலே பகவானுடைய செல்வங்கள் பரக்கச் சொல்லப்படுகின்ற இடங்களிலேயாதல், புனைந்துரையாகப்பேசப்படுகின்ற இடங்களிலேயாதல் சொல்லப்படுமவனுய், தன்னுடைய கோஷ்டிக்கு உபகாரகனை சிவன் நான் இட்ட வழக்கு என்னுநின்ருள். அன்றிக்கே, [2] "பதினேர் உருத்திரர்களுக்குள்ளே சங்கரன் நான் ஆகின்றேன்" என்கிறபடியே, சர்வேசுவரனுக்குப் பிரகாரமாகச் சொல்லப்பட்டவனுதலின் '**உரைக்கின்ற**' என்கிருர் என்னுதல். உரைக்கின்ற திசைமுகன்யானே என்னும் - [3] "விரூபாக்ஷனும் பிரமனுக்கு ஜ்யேஷ்டபுத்திரனுமான சிவன்" என்கிறபடியே, அந்தச் சிவனுக்கும் தமப்பனுகப் பிரமாணப் பிரசித்தனுயிருக்கின்ற பிரமனும் நான் இட்ட வழக்கு என்கிருள். உரைக்கின்ற அமரரும் யானேஎன்னும் - பிரமனுலே படைக்கப்பட்டவர்களாய், நித்திய சிருஷ்டிக்கு உரியவர்களாகச் சாஸ்திரங்களிலே சொல்லப்படுகின்ற **பிரமர்கள்** பதின்மர்களும் நான் இட்ட வழக்கு என்னும். [4] அன்றிக்கே, "பிரமன் என்ன, தக்ஷர் முதலான பிரஜாபதிகள் என்ன, இவர்கள் முதலானவர்கள், சர்வேசுவரனுல் நியமிக்கப்

---

1. "உரைக்கின்ற" என்பதற்கு, பரம்பொருளாக உரைக்கப்படுகின்ற என்றும், பகவானுக்குச் சரீரமாக உரைக்கப்படுகின்ற என்றும், இரண்டுவிதமாகப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அவ்விரண்டு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிருர் 'வேதத்திலே' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும்.

2. "ருத்ராணாம் ஶங்கரஶ் ச அஸ்மி வித்தேஶஶ் யக்ஷரக்ஷஸாம்
வஸூனாம் பாவகஶ் ச அஸ்மி மேரூ: ஶிகரிணாம்அஹம்"
என்பது, ஸ்ரீ கீதை. 10 : 23.

3. "விரூபாக்ஷாய பிரஹ்மணஶ்புத்ராய ஜ்யேஷ்டாய ச்ரேஷ்டாய"
என்பது, சாமவேதம்.

பிரமர்கள் பதின்மர்:—மரீசி, அத்திரி, அங்கிரசு, புலஸ்தியர், புலகர், கிரது, வசிஷ்டர், தக்ஷர், பிருகு, நாரதர் என்பவர்கள்.

4. "ப்ரஹ்மா தக்ஷாதயஶ் காலஶ் ததைவ அகில ஜந்தவஶ்
விபூதயஶ் ஹரேஶ் ஏதா ஜகதஶ் ஸ்ருஷ்டி ஹேதவஶ்"
என்பது; விஷ்ணுபுரா. 1. 22 : 31.

படுகின்ற பொருள்கள்; உலகத்தைப்படைப்பதற்குக் காரணர்களாக இருக்கிறார்கள்" என்கிறபடியே, பகவானுக்குப் பிரகாரமாகச் சொல்லப்படுகின்றவர்களாதலின் '**உரைக்கின்ற அமரர்**' என்கிறாள் என்னுதல். உரைக்கின்ற அமரர்கோன் யானே என்னும் -[1]"இந்திரனே! உன்னைக்காட்டிலும் உயர்ந்தவர் ஒருவரு மிலர்" என்று சொல்லப்படுகின்ற இந்திரனும் யானே என்னும். அன்றிக்கே, [2]"வேதங்களில் சாமவேதம் நானாக இருக்கிறேன், தேவர்களில் இந்திரன் நானாக இருக்கிறேன்" என்கிறபடியே, பகவானுக்குப் பிரகாரமாகச் சொல்லப்படுகின்றவன் ஆதலின் '**உரைக்கின்ற**' என்கிறாள் என்னுதல். உரைக்கின்ற முனிவரும் யானேஎன்னும்-வேதத்தின் அர்த்தங்களை நினைத்து, உலகத்திற்குச் செய்யவேண்டியனவற்றைச் சொல்லும் மனு முதலான முனிவர்களும் நான் இட்ட வழக்கு என்னும். உரைக்கின்ற முகில்வண்ணன் ஏறக்கொலோ - வார்த்தை சொல்லுவதாய், கழுத்தே கட்டளையாக நீரை முகந்து, மின்னி, முழங்கி, வில்லிட்டு வருவதொருமேகம் போலே வடிவழகையுடைய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானோ? அன்றிக்கே, உரைக்கின்ற -[3]"கருமை நிறத்தையுடைய மேகத்தின் நடுவிலிருப்பதான மின்னல்போலே" என்கிறபடியே, நீருண்ட மேகம்போலே என்று சொல்லப்படுகிற என்னுதல். உரைக்கின்ற உலகத்தீர்க்கு இவை என்சொல்லுகேன் - சிலவற்றைச் சொல்லுமித்தனையேயாய், 'சொல்லலாம், சொல்லஒண்ணாது' என்று பாராதே, சொல்லு சொல்லு என்று வருத்துகின்ற உலகத்தீரான உங்களுக்கு நான் எதனைச் சொல்லுவது? உரைக்கின்ற என்கோமள ஒண் கொடிக்கே-அதுவும் சொல்லி ஒழிவேனே அன்றோ [4]வார்த்தை சொல்லிற்றிலள் ஆகில். '**கோமளம்**' என்கையாலே, சௌகு

---

1. "நகிரிந்த்ர த்வத் உத்தரஃ" என்பது, ருக்வேதம்.

2. "வேதாநாம் ஸாமவேதஃ அஸ்மி தேவாநாமஸ்மி வாஸவஃ" என்பது, ஸ்ரீ கீதை. 10: 22.

3. "நீலதோயத மத்யஸ்த்தா" என்பது, தைத்திரீய நாராயண உப. 11.

4. 'வார்த்தை சொல்லிற்றிலளாகில்' என்றது, பகவானுடைய விபூதியைப் பரக்கச் சொல்லிற்றிலளாகில் என்றபடி. ஆதலால், இப்படிப்பட்டவளுடைய வைபவம் என்னால் சொல்லப்போகாது என்பது கருத்து.

மார்யத்தைச் சொல்லிற்று. 'கொடி' என்கையாலே, [1] "கண வனை அடைதற்குரிய வயதினையுடையவள்" என்கிறபடியே, ஒருகொள்கொம்போடே சேராதபோது தறைப்படும் பருவம் என்பதனைச் சொல்லிற்று. (8)

## 506.

கொடியவினை யாதும் இலனே என்னும்
கொடியவினை ஆவேனும் யானே என்னும்
கொடியவினை செய்வேனும் யானே என்னும்
கொடியவினை தீர்ப்பேனும் யானே என்னும்
கொடியான் இலங்கைசெற் றேனே என்னும்
கொடியபுள் ளுடையவன் ஏறக்கொலோ?
கொடியஉல கத்தீர்க் கிவைஎன் சொல்லுகேன்?
கொடியேன் கொடிஎன் மகள்கோ லங்களே.

பொ - ரை:—கொடுமை பொருந்திய கர்மங்கள் ஒருசிறிதும் எனக்கு இல்லை என்னும், கொடிய கர்மங்கள் ஆவேனும் யானே என்னும், கொடிய பாவங்களைச் செய்விப்பவனும் யானே என்னும், கொடிய பாவங்களைத் தீர்க்கின்றவனும் யானே என்னும், கொடியவனை இராவணனுடைய இலங்காபுரத்தை அழித்தேனே என்னும், பகைவர்களுக்குக் கொடுமையை விளைக்கின்ற கருடப்பறவையை வாகனமாகவுடைய சார்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? கொடுமையையுடைய உலகத்தீர்க்கு, மஹாபாவியேனுகிய என்னுடைய கொடிபோன்ற பெண்ணனவள் செய்கின்ற அழகிய காரியங்களைப் பற்றி என்சொல்லுவேன்?

ஈடு:—ஒன்பதாம்பாட்டு. கர்மங்களுக்குக் கட்டுப்படாமை முதலான, பகவானுடைய வார்த்தைகளைத் தன்னுடையனவாகப் பேசாநின்றாள் என்கிறாள்.

கொடிய வினை யாதும் இலனே என்னும்-கர்மங்களுக்குக் கட்டுப்பட்டவர்களை அருளின்றி நலியும் கர்மங்கள் எனக்கு ஒன்றும் இல்லை என்னும். [2]"ஜீவாத்மாவுக்கு வேறுபட்ட சார்வேசுவரன் கர்மபலத்தை அநுபவியாமல் மிகவும் பிரகாசிக்

1. "பதி ஸம்யோக ஸுலபம் வயஃ த்ருஷ்டவா ச மே பிதா" என்பது, ஸ்ரீராமா. அயோத். 118: 36. அநசூயையைப் பார்த்துப் பிராட்டி கூறியது.

2. "தயோஃ அந்யஃ பிப்பலம் ஸ்வாது அத்தி அநஸ்நந் அந்யஃ அபிசாக ஸீதி"

என்பது, உருக்குவேதம்.

கிறான்" என்றும், [1]"என்னைக் கர்மங்கள் ஒட்டுவன இல்லை, கர்ம பலத்தில் எனக்கு ஆசை இல்லை" என்றும் சொல்லப்படுகிற அவன்படிகளைத் தான் சொல்லாநின்றாள். [2]"நாட்டிற் பிறக்து படாதன பட்டு" என்கிற இடம், இச்சையால் வருவனவே அன்றே. கொடிய வினை ஆவேனும் யானே என்னும் - நான் இவற்றால் தொடப்படாத மாத்திரமேயாய், அவைதாம் எனக்குப் புறம்பாய் இருக்கின்றனவோ; அந்தப் பாவங்கள்தாம் என்னுடைய நிக்கிரஹமேயன்றே என்னும். கொடிய வினை செய்வேனும் யானே என்னும் - [3]அடியார்களுடைய பகைவர்களுக்குக் கொடியதான பாவத்தை விளைப்பேனும் யானே என்னும். ஈண்டுச் 'செய்வேன்' என்றது, அடியார்களுடைய பகைவர்களைப் பாவங்களிலே மூட்டுகையைக் குறித்தபடி. "என்னைப் பகைக்கின்ற அத்தகையரும் கொடுந்தன்மையரும் இழிந்தவருமான பாவிகளை எப்பொழுதும் பிறப்பு இறப்பு பரம்பரைகளில், அவற்றிலும் அசுரப்பிறவிகளில் தள்ளுகிறேன்" என்பது, ஸ்ரீகீதை. கொடிய வினை தீர்ப்பேனும் யானே என்னும் - என்னை வந்து அடைந்தவர்கட்கு அவை வந்து கிட்டாதபடி. [4]"எல்லாப்பாவங்களில் நின்றும் விடுவிக்கிறேன்" என்பேனும் யானேயென்னும். கொடியான் இலங்கை செற்றேனே என்னும் - [5]சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையுடையவனாதலின் '**கொடியான்**' என்கிறது. இவ்விடத்தில், [6]'**கொடியான்**' என்றது, திருத்தாயார் வார்த்தை

---

1. "ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா" என்பது, ஸ்ரீ கீதை. 4: 14.

2. அவதாரதசையில் துக்கம் அடைந்ததாகச் சொல்லுகிறது எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "நாட்டில்" என்று தொடங்கி. இது, திருவாய். 7.5: 2.

3. "அகர்மவஶ்யன்" என்று சொல்லிவைத்து, "கொடியவினை செய்வேன்" என்னுமிது முரண்அன்றே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியார்களுடைய' என்று தொடங்கி.

"தாகஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோனிஷு"

என்பது, ஸ்ரீ கீதை. 16: 19.

4. "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுசஃ"
என்பது, ஸ்ரீ கீதை. 18: 66.

5. "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவினை அரக்கன்".
என்பது, பெரிய திருமொழி. 5. 7: 7.

6. பெண்பிள்ளை சர்வேசுவரனை அநுகரித்துச் சொல்லுகிறளாகையாலே, இவள் சொன்னபோதே அவன் சொன்னதாகும் என்றுகொண்டு,

காண்' என்று அருளிச்செய்வர் சீயர், எதிரிகளே இவன் ஒன்றாக மதித்திருந்தானுகாமைக்கு; அவனுலே ஆவேசிக்கப்பட்டவள் அன்றே இவள். கொடியபுள்ளுடையவன் ஏறக்கொலோ-அடியார்களுடைய பகைவர்களுக்கு யமனை ஒத்தவனுன பெரிய திருவடியை வாஹனமாகவுடைய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? கொடிய உலகத்தீர்க்கு இவை என் சொல்லுகேன் - 'கேட்கவேணும்' என்று [1]திரண்டு கிடக்கிற உலகத்தீர்க்கு என்னுதல். 'இது கூடும்; கூடாது' என்று பாராமல் 'சொல்லுசொல்லு' என்று நிர்ப்பந்தித்து [2]ஸ்வகாரியத்தில் நோக்குள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு எதனைச்சொல்லுவது? என்னுதல். கொடியேன் கொடி என்மகள் கோலங்களே - இவள் அநுகரித்துச் சொல்லுகிற பாசுரங்களைக்கேட்க வேண்டும்படியான பாவத்தைச் செய்த என்னுடைய மகள் செய்கிற [3]காணத்தக்க இனியவான செயல்களே. அன்றிக்கே, ஒருப்பாடுகளே என்னுதல். (9)

## 507.

கோலங்கொள் சுவர்க்கமும் யானே என்னும்
கோலமில் நரகமும் யானே என்னும்
கோலம்திகழ் மோக்கமும் யானே என்னும்
கோலம்கொள் உயிர்களும் யானே என்னும்
கோலம்கொள் தனிமுதல் யானே என்னும்
கோலம்கொள் முகில்வண்ணன் ஏறக் கொலோ?
கோலம்கொள் உலகத்தீர்க்கு என்சொல் லுகேன்?
கோலம்திகழ் கோதைஎன் கூந்த லுக்கே.

---

எதிரிகளே இவன் ஒரு பொருளாக மதித்திருந்தவனல்லனுதலின், 'கொடியான் என்றது' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

1. "கொடிய" என்பதற்குப் பொருள், திரண்டுகிடக்கிற என்பது. கொடிய என்பது, கோடிய என்றாய், கோடுதல் வளைதலாய், அது திரண்டு கிடத்தலைக் குறிக்கிறது.

2. "கொடிய" என்பதற்கு, இரண்டாவது பொருள், ஸ்வகாரியத்தில் நோக்குள்ளவர்கள் என்பது. இங்குக் "கொடிய" என்பது, ஸ்வகாரியத்தில் நோக்குடைமையாகிற கொடுமை.

3. "கோலங்கள்" என்பதற்கு, இருபொருள். ஒன்று, காணத்தக்க இனியவான செயல்கள். மற்றொன்று, ஒருப்பாடு. இரண்டாவது பொருளில், கோலுதல் - முயற்சியாய், ஒருப்பாட்டினைக் குறிக்கின்றது என்றபடி.

**பொ - ரை:**—அழகினைக் கொண்டுள்ளதான சுவர்க்கமும் யானே என்பாள், அழகு இல்லாத நரகமும் யானே என்பாள், அழகோடு விளங்குகிற பரமபதமும் யானே என்பாள், அழகினைக்கொண்ட உயிர்களும் யானே என்பாள், அழகினைக்கொண்டிருக்கின்ற ஒப்பற்ற மூலப் பகுதியும் யானே என்பாள், அலங்காரத்தைக்கொண்ட மேகம்போன்ற நிறத்தையுடைய சர்வேசுவரன் வந்து ஆவேசித்தானே? அலங்காரத்தைச்செய்துகொண்டுவந்து நிற்கிற உலகத்தீர்க்கு, அழகோடு விளங்குகிற மாலையைத் தரித்த கூந்தலையுடைய என் மகளுக்கு உண்டான நிலைகளைப் பற்றி எதனைச் சொல்லுவேன்?

**ஈடு:**—பத்தாம்பாட்டு. சுவர்க்கம் முதலான பொருள்கள் எல்லாம் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள் என்கிறாள்.

கோலம் கொள் சுவர்க்கமும் யானே என்னும் - சுகரூபமான சுவர்க்கமும் யானே என்னும். [1]நிலைநில்லாமையாலே, முகப்பில் காட்சிக்கினியதாந் தன்மையைப் பற்ற, **'கோலம் கொள்'** என்கிறது. [2]'நரகத்தோடு ஒத்திருக்கச்செய்தே, வாசலிலே கழஞ்சு செம்மண் பூசி இருக்குமாறுபோலே காண்' என்று அருளிச்செய்வர் சீயர். கோலம் இல் நரகமும் யானே என்னும் - மேல்எழப் பார்க்கையில் அங்ஙனமும் ஒன்று இன்றியிலே இருக்கிற நரகமும் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள். கோலம் கொள் மோக்கமும் யானே என்னும் - மீண்டு வருந்தன்மை இல்லாததாய், சுகத்திற்கே இருப்பிடமானதான மோக்ஷமும் நான் இட்ட வழக்கு என்னுநின்றாள். "கடல் ஞாலம் செய்தேன்" என்று, படைப்புத்தொடங்கி, "மோக்கமும் யானே" என்று, மோக்ஷம் முடிவாகத் தன்னுடைய காரியம் என்கிறாள். கோலம் கொள் உயிர்களும் யானே என்னும்-நாடகம் கட்டி ஆடுவாரைப்போலே, தேவனுகவும், மனிதனுகவும், இப்படிப் பலவகையான சரீரங்களை மேற்கொள்ளுகிற ஆத்மாக்களும் யானே என்னும். அன்றிக்கே, கோலம்கொள்

---

1. சுவர்க்கம், பரமபதம் போன்று சுகரூபமாக இருக்குமோ? என்ன, மேலே, "கோலம் திகழ் மோக்கம்" என்று விசேடிக்கையாலே அது இல்லை என்கிறாள் 'நிலை நில்லாமையாலே' என்று தொடங்கி. 'நிலை நில்லாமையாலே' என்றது, நிலை நில்லாததுமாய், துக்கம் கலந்ததுமான சுகத்தையுடையதாகையாலே என்றபடி.

2. 'முகப்பில் காட்சிக்கு இனியதாந் தன்மையைப்பற்ற' என்பதற்கு, பெரியாருடைய சம்வாதத்தைக் காட்டுகிறாள் 'நரகத்தோடு' என்று தொடங்கி சீயர் - நஞ்சீயர்,

உயிர்கள் - [1] ஞான ஆனந்த லக்ஷணமான உயிர்கள் என்னுதல். கோலம் கொள் தனிமுதல் யானே என்னும் - [2] இவற்றிற் கெல்லாம் காரணமான மூலப்பகுதியும் யானே என்னும். அன்றிக்கே, சங்கல்ப ரூப ஞானத்தைச் சொல்லுதல். அன்றிக்கே, விசித்ர காரியகாரிணியான மூலப்பகுதியையும் சங்கல்பரூப ஞானத்தையும் பிரகாரமாகவுடையனுய், எல்லாநற்குணங்களையுமுடையனை சர்வேசுவரன் என்னுதல். கோலம்கொள் முகில்வண்ணன் - திருமேனிக்கு மேகத்தை ஒப்பாகச் சொல்லும்போது அலங்கரித்துச் சொல்லவேணுமாதலின் 'கோலம் கொள் முகில்' என்கிறது. மின்னி முழங்கி வில்லிட்டு வந்து தோற்றினபோதாயிற்று ஒப்பாகச் சொல்லலாவது. கோலம் கொள் உலகத்தீர்க்கு என்சொல்லுகேன் - 'கேட்கவேணும்' என்று ஒருப்பட்டிருக்கிற உலகத்தீர்க்கு நான் எதனைச் சொல்லுவது. அன்றிக்கே, மயிரும் உகிரும் பேணி, உடம்பு பேணி வந்து அலங்கரித்துக்கொண்டு நிற்கிற உங்களுக்கு என்னுதல். கோலம் திகழ் கோதை என் கூந்தலுக்கு - அழகிய மாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப் பிறந்த அவஸ்தைகளை. என்றது, இவள் மாலையையும் மயிர்முடியையும் கண்டார் படுகிற பாட்டைத் தான்பட்டு அநுகரித்துச்சொல்லுகிறவற்றை நான் எதனைச் சொல்லுவது என்றபடி. (10)

## 508.

கூந்தல் மலர்மங்கைக்கும் மண்மடந் தைக்கும்
குல ஆயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை
வாய்ந்த வழுதி வளநாடன் மன்னு
குருகூர்ச் சடகோபன் குற்றேவல் செய்து
ஆய்ந்த தமிழ்மாலை ஆயி ரத்துள்
இவையும்ஓர் பத்தும் வல்லார் உலகில்
ஏந்து பெருஞ்செல் வத்தராய்த் திருமால்
அடியார் களைப் பூ சிக்க நோற் றார்களே.

---

1. "கோலம்" என்பதற்கு, இருபொருள். இரண்டாவது பொருள், அழகு என்பது. ஆத்மாவிற்கு அழகாவது, ஞானஆனந்தங்களேயாதலின், அதனை அருளிச்செய்கிறார் 'ஞானஆனந்தலக்ஷணமான' என்று தொடங்கி.

2. "கோலம்கொள் தனிமுதல் யானே என்னும்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவற்றிற்கெல்லாம்' என்று தொடங்கி. இவற்றிற்கெல்லாம் - இந்த உலகங்கட்கெல்லாம். மூலப்பகுதிக்கும், சங்கல்பரூபஞானத்துக்கும், கோலமாவது யாது? எனின், விசித்ரமான காரியத்திற்குக் காரணமாயிருத்தல் என்க.

**பெர் - ரை :—** மயிர்முடியையுடைய பெரியபிராட்டியார்க்கும் பூமிப்பிராட்டிக்கும் ஆயர்குலத்துக்குக் கொழுந்துபோன்ற நப்பின்னைப் பிராட்டிக்கும் கணவனான சர்வேசுவரனே, பொருந்திய வளப்பத்தை யுடைய வழுதிநாடரும், நிலைபெற்ற திருக்குருகூரில் அவதரித்த சட கோபருமான நம்மாழ்வாரால் குற்றேவல்செய்து ஆராய்ந்து சொல்லப் பட்ட தமிழ்ப்பாசுரங்கள் ஆயிரத்துள் இப்பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள், தரித்த பெரிய செல்வத்தையுடையவர்களாகிச் சர்வேசு வரனுடைய அடியார்களைப் பூசிப்பதற்குப் புண்ணியம் செய்தவர்கள் ஆவர்கள்.

**ஈடு :**—முடிவில், [1]இத் திருவாய்மொழியைக் கற்கவல்லவர் கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமை செய்யப் பெறுவர்கள் என்கிறார்.

கூந்தல் மலர்மங்கைக்கும்-சர்வேசுவரனுடைய ஐசுவரியத் துக்கும் காரணமாயிருக்கிற பெரிய பிராட்டியார். அன்றிக்கே, [2]"சர்வேசுவரனுடைய செல்வமாக இருப்பவள்" என்கிற படியே, சர்வேசுவரனுடைய செல்வமாயிருக்கிற பெரியபிராட் டியார் என்னுதல். மண்மடந்தைக்கும் - அந்தச் செல்வத்திற்கு விளைபூமியாயிருக்கிற ஸ்ரீ பூமிப்பிராட்டி. குலஆயர்கொழுந்துக் கும் - அதனுடைய [3]பல உருவமாயிருக்கும் நப்பின்னைப் பிராட்டி. கேள்வன்தன்னை - [4]"உலகங்கட்குத் தலைவனுகிய இறைவன் இலக்குமியோடுகூடி எழுந்தருளியுள்ளான்" என் கிறபடியே, இவர்களுக்குப் பதியாயுள்ளவனே. இதனால், ஓர் அவதாரமாத்திரமன்றிக்கே, உபய விபூதிநாதனை பூர்ண விஷயத்திலே அநுகரிக்கிறார் என்று தோற்றி இருக்கிறபடி.

---

1. "இவையும் ஒர்பத்தும் வல்லார் திருமால் அடியார்களைப் பூசிக்க நோற்றார்களே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நித்யைவ ஏஷா ஜகன்மாதா விஷ்ணோஃ ஸ்ரீஃ அநபாயிநீ
யதா ஸர்வகதோ விஷ்ணுஃ ததைவ இயம் த்விஜோத்தம"

என்பது, விஷ்ணுபுராணம். 1. 8 : 17.

3. பல உருவம் - அநுபவரூபம்.

4. ஸ்ரீ பூமி நீளைகளோடே கூடி இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உலகங்கட்கு' என்று தொடங்கி. "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதிஃ" என்பது. இங்கு, 'இலக்குமியோடு கூடி' என்றது, பூமி நீளைகளுக்கும் உபலக்ஷணம்.

வாய்ந்த -"வாய்க்கையாவது, கிட்டுகை.[1] அநுகாரத்தாலே கிட்டின படியை நினைக்கிறது. குற்றேவல் செய்து-ஆழ்வார், திருவடிகளில் அந்தரங்க அடிமைகள் செய்தபடியாயிற்று இவை தாம். என்றது,[2] வாசிகமாக அடிமை செய்தபடியாயிற்று என்றபடி.

நன்று; அநுகாரம் அடிமையானபடி எங்ஙனே? என்னில், அப்படியாகத் தட்டு என்? கொள்ளுகிறவன் கருத்தாலே.[3] அவன் உகப்பே அன்றே அடிமையாலும் புருஷார்த்தம். 'நம்முடைய பிரிவில் அநுகரித்துத் தரிக்கவேண்டும்படி சம்சாரத்திலே இப்படி உண்டாவதே!' என்று திருவுள்ளம் போர உகக்கும், அது அடிமையாய்த் தலைக்கட்டு மித்தனை. ஆய்ந்த தமிழ்மாலை ஆயிரத்துள் இவையும் ஒருபத்தும் வல்லார் - ஆராய்ந்து சொன்ன தமிழ்த் தொடை ஆயிரத்திலும் இப் பத்தைக் கற்கவல்லவர்கள். உலகில் ஏந்து பெரும் செல்வத்தராய் -[4] இந்த உலகத்தில் எல்லாரும் கொண்டாடும்படி ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ யையுடையராய். அன்றிக்கே.[5] "நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான்வேண்டும் செல்வம்" என்கிறபடியே, உலகத்திலே முகந்தெழுபானையான எல்லையில்லாத செல்வத்தையுடையராய்க்

---

1. பிரத்யக்ஷமாகக் கிட்டினரோ? என்னில், 'அநுகாரத்தாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'வாசிகமாக அடிமைசெய்தபடியாயிற்று' என்றது, அநுகார முகத்தாலே வாசிகமாக அடிமைசெய்தபடி ஆயிற்று என்றபடி.

3. கொள்ளுகிறவன் கருத்தாலே அடிமையாம் பிரகாரம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் உகப்பே' என்று தொடங்கி. இது, அவனுக்கு உகப்பான படியைக் காட்டுகிறார் 'நம்முடைய பிரிவில்' என்று தொடங்கி.

4. "ஏந்து" என்பதற்கு, இரண்டுபொருள் அருளிச்செய்கின்றார். ஒன்று, எல்லாராலும் கொண்டாடப்படுதல். மற்றொன்று, முகந்துஎழு பானை போன்று மேலும் மேலும் பெருகிவருதல் என்பது. இந்த இரண்டு பொருளையும் முறையே அருளிச்செய்கிறார் 'இந்த உலகத்தில்' என்று தொடங்கி.

5. நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே.

என்பது, பெருமாள் திருமொழி.

முகந்தெழுபானை - தண்ணீரை முகந்துகொண்டு மேலே எழுகின்ற எற்றப் பானை.

கொண்டு என்னுதல். திருமால் அடியார்களைப் பூசிக்க நோற் றூர்களே - ஸ்ரீமத் புத்திரர்களை ஆராதிக்கப்பெறுவர்கள். திரு மால் அடியாரை ஆராதிக்கையாவது, இவர் அநுகாரத்தாலே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பிரியமுள்ளவராக ஆனாற்போலே, இத் கற்றூர்களும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பிரியத்தைக் கொடுக்கக்கூடிய கைங்கரியத்தைச் செய்யப்பெறுவர் என்கை. என்றது, இவர் அநுகரித்த இப்பாசுரங்களைச் சொல்லுகை. [1] "தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன் மாலைகள் சொன்னேன்" என்னக் கடவதன்றே. (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

கடல்ஞாலத் தீசனைமுன் காணுமல் நொந்தே
உடனு அநுகரிக்க லுற்றுத்—திடமாக
வாய்ந்தவனுய்த் தான்பேசும் மாற னுரையதனை
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்யநோற் றூர். (46)

---

ஆழ்வார் எம்பெருமானுர் சீயர் திருவடிகளே அரண்.

---

1. இப் பாசுரங்களைச் சொன்னுல் அவர்கட்கு உகப்பு ஆகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறூர் 'தொண்டர்க்கு' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி. 9. 4; 9.

# ஏழாந் திருவாய்மொழி—"நோற்ற நோன்பு"

## முன்னுரை

[1] மேல் திருவாய்மொழியில் அநுகரித்துத் தரிக்கப் பார்த்தார், 'அநுகரித்துத் தரிக்கவேண்டும்படியான கலக்கம் பிறந்த இடத்திலும் வந்து முகங்காட்டிற்றிலன், இதற்குக் காரணம் என்? தன்பக்கல் ஆசை சிறிதுடையார்க்குத் தானே வந்து முகங்காட்டிக் காப்பாற்றக்கூடிய சர்வேசுவரன் நம்பக்கல் ஆறி இருக்கைக்கு நிபந்தனம் என்?' என்று பார்த்தார்; 'இனி இங்ஙனேயாமித்தனை; நம் பிரகிருதி ஸ்வபாவத்தாலே, தன்னல் அல்லது செல்லாதபடியாயிருப்பதோர் ஆற்றுமை உண்டாயிருந்தது; '**அது நமக்கு ஸ்வரூபம்**' என்று அறியாதே '**உபாயம்**' என்றிருந்தாலாகவேணும்' என்று பார்த்து, தம் கையில் ஒன்று இல்லாமையை அறிவித்து அவன் திருவடிகளிலே சரணம் புகுகிறார். [2] கடற்கரையின் வெளியில், மஹாராஜரை உள்ளிட்ட முதலிகளோடும், [3] "புண்ணியத்தையே இலக்ஷணமாகவுடைய இளையபெருமாள்" என்கிற தம்பியோடுங்கூட எழுந்தருளியிருக்க, ஸ்ரீவிபீஷணழ்வான் [4] "கெட்ட ஒழுக்கத்தையுடையவன், இராவணன் என்று பிரசித்திபெற்றவன், அரக்கர்களுக்கெல்லாம் அரசனான அரக்கன் இருக்கிறான், நான் அவனுக்குப் பின் பிறந்த தம்பி; விபீஷணன்

---

1. மேல்திருவாய்மொழியில் அநுகரித்துத் தரிக்கப் பார்த்தவர், இத் திருவாய்மொழியில் "நோற்ற நோன்பிலேன்" என்று கூறுவதற்கு அடி ஏது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்யுமுகத்தால், மேல்திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச் செய்கிறார் 'மேல்திருவாய்மொழியில்' என்று தொடங்கி. 'ஆற்றுமையுண்டாயிருந்தது' என்றது, இத்திருவாய்மொழியில் வருகின்ற "ஆற்றகில்கின்றிலேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'உபாயம் என்றிருந்தாலாகவேணும்' என்றது, ஆற்றுமையாவது, சிகேகமாய், சிநேகத்தை முன்னுகக் கொண்ட தியானம் பக்தியாகையாலே, இது உபாயமாகவேணும் என்றிருந்தாலாகவேணும் என்றபடி.

2. திருஷ்டாந்தமுகத்தால் அதனை விரித்து அருளிச்செய்கிறார் 'கடற்கரையின்' என்று தொடங்கி.

3. "லக்ஷ்மணம் புண்ய லக்ஷ்மணம்" என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 7.

4. ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஸ்வரஃ
தஸ்ய அஹம் அநுஜோ ப்ராதா விபீஷண இதிச் ருதஃ"
என்பது, ஸ்ரீராமா. யுத். 17: 10.

என்று பிரசித்திபெற்றவன்" என்று தன்னுடைய தாழ்ச்சியை முன்னிட்டுக்கொண்டு பெருமாள் திருவடிகளிலே விழுந்தாற்போலே, இவரும், அவன் கடற்கரையிலே தனி இருந்த இழவுதீர, பிராட்டிமாரோடும் [1] நித்திய பரிகரத்தோடும்கூட சிரீவரமங்கல நகரிலே திருவனந்தாழ்வான்மேலே எழுந்தருளியிருக்கின்ற வானமாமலை திருவடிகளிலே, வேர்அற்ற மரம் போலே புகல் அற்று விழுந்து சரணம் புகுகிறார். இவர்தாம் [2] என்கொண்டு அவனை வடிம்பிடப் பார்க்கிறது; என்னில், அவன் காத்தற்குரிய பொருள்களை விரும்பியுள்ளான், காவலனை விரும்புதல் தமக்கு உண்டாயிருந்தது; ஆனபின்னர், இதற்கு மேற்பட சம்பந்தம் உண்டோ? என்று.

---

## 509.

**நோற்ற நோன்பிலேன் நுண்ண றிவிலேன் ஆகிலும்**
**[இனி உன்னைவிட் டொன்று**
**மாற்ற கிற்கின்றிலேன் அரவினணை அம்மானே!**
**சேற்றுத் தாமரை செந்நெ லூடுமலர் சிரீவர மங்க லநகர்**
**வீற்றிருந்த எந்தாய்! உனக்குமிகை அல்லேன் அங்கே.**

**பொ - ரை:**—செய்த கர்மயோகத்தையுடையேனல்லேன், ஞானயோகத்தையுடையேனல்லேன், அப்படியானாலும், இனி உன்னைப் பிரியச் சிறிதுபொழுதும் பொறுக்கமாட்டுகிறிலேன்; ஆதிசேஷசயனத்தையுடைய அம்மானே! சேற்று நிலங்களிலே தாமரைகள் செங்கெற்பயிர்களுக்கு மத்தியில் மலர்கின்ற சிரீவரமங்கை என்னும் திவ்விய தேசத்தில் வீற்றிருக்கின்ற எந்தையே! காப்பாற்றுகின்ற உனக்கு அங்கே புறம்பு அல்லேன்.

**வி - சு:**—அம்மானே! எந்தாய்! நோன்பிலேன், நுண்ணறிவிலேன், ஆகிலும் உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன், உனக்கு

---

1. 'நித்திய பரிகரத்தோடும்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "கருளப்புட்கொடி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'திருவனந்தாழ்வான் மேலே' என்றது, "அரவின் அணை" என்றதனைத் திருவுளம்பற்றி. "ஆறு எனக்கு" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றிப் 'புகலற்று' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. என்கொண்டு - என்ன சம்பந்தம் கொண்டு. வடிம்பிடப்பார்த்தல் - விரைந்து நிர்ப்பந்தித்தல்.

அங்குமிகைஅல்லேன் என்க. ஒன்றும்-சிறிதும். கில்: ஆற்றலையுணர்த்தும் இடைச்சொல். கிற்கின்றிலேன்-ஆற்றலையுடையேனல்லேன். வீற்றிருந்த: காலமயக்கம்.

இத் திருவாய்மொழி, ஆசிரியத்துறை.

ஈடு:—முதற்பாட்டு. [1] என்னுடைய பேற்றுக்குக் காரணமாயிருப்பதொரு கைம்முதல் என்னிடத்தில் இல்லை, இல்லாமையாலே ரக்ஷகன் வேண்டும் என்ற விருப்பம் உண்டு; பரிபூர்ணரான தேவர், காத்தற்குரிய பொருள்களை விரும்புகின்றவராய் இருந்தீர், ஆகையாலே, தேவரே என் விருப்பத்தை முடித்தருளவேண்டும் என்கிறார்.

நோற்ற நோன்பு இலேன் நுண் அறிவு இலேன் - [2] "கர்மயோகத்தில் நிஷ்டையுடையேன் அல்லேன், ஞானயோகத்தையுடையேன் அல்லேன், உன்னுடைய திருவடிகளில் பக்தியுடையேன் அல்லேன்" என்கிறார். [3] "ந தர்மநிஷ்டோஸ்மி - கர்மயோகத்தில் நிஷ்டையுடையேனல்லேன்" என்றது, நாட்டார் 'இவன் சில செய்யாநின்றான்' என்றிருக்கைக்கும், அது கண்டு நான் 'நமக்குச் சில உண்டு ஆகாதே' என்று மயங்குவதற்கும், நீ கைவிடுகைக்கும் வேண்டுவது உண்டு; ஆனால், பலத்

---

1. "நோற்றநோன்பிலேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'என்னுடைய' என்று தொடங்கியும், "ஆற்றகிற்கின்றிலேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ரக்ஷகன் வேண்டும்' என்று தொடங்கியும், "சிரீவரமங்கலநகர் வீற்றிருந்த" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'காத்தற்குரிய பொருள்களை' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். மேல் திருப்பாசுரத்திலே "அருளாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'என் விருப்பத்தை முடித்தருளவேண்டும்' என்கிறார்.

2. "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று இப்படிச் சொன்ன பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கர்மயோகத்தில்' என்று தொடங்கி. 'என்கிறார்' என்றது, ஸ்ரீ ஆளவந்தாரை.

"ந தர்மநிஷ்டோஸ்மி நச ஆத்மவேதி ந பக்திமான் த்வத்சரணாரவிந்தே
அகிஞ்சநோ அநந்யகதிஃ சரண்ய த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே".

என்பது, ஸ்தோத்திரரத்நம். இது, ஆளவந்தார் அருளிச்செய்தது.

3. மேலே காட்டிய சுலோகத்திற்கு விரிவுரை அருளிச்செய்கிறார் 'ந தர்மநிஷ்டோஸ்மி' என்று தொடங்கி. "தர்மவாந்நாஸ்மி" என்னுது, "ந தர்மநிஷ்டோஸ்மி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நாட்டார்' என்று தொடங்கி. என்றது, பலசாதனத்தைத் தொடங்கிய மாத்திரமே ஒழிய, சாதனத்தை அநுஷ்டித்து, 'பலம் கைவரும்' என்று நிச்சயிக்கத் தக்கது இல்லை என்றபடி.

தோடே கூடியிருப்பது ஒன்று இல்லை என்றபடி. "நசஆத்ம வேதி - ஞானயோகமுடையேனல்லேன்" என்றது, [1] தாச்சீல்யந்தோன்ற இருப்பன், எனக்கு அதுதானும் இல்லை. [2] "அந்தப் பரமனைப் பற்றிய ஞானம்தான் ஞானம்என்ற சொல்லாற் சொல்லக்கூடியது; ஆகையால், மேற்சொல்லிய ஞானத்திற்கு வேறானது அஜ்ஞானமாகச் சொல்லப்பட்டது" என்கிறபடியே, ஆத்மாவைப் பற்றிய உண்மையான ஞானத்தை முன்னுகைக்கொண்ட ஈசுவரஞானம் எனக்கு இல்லை என்றபடி. "நபக்திமான்-பக்தியுடையேனல்லேன்" பக்தி இல்லை என்று சொல்லவேண்டாவே அன்றே, மேற்சொல்லிய அவை இரண்டும் உண்டானால் வருமதுவே அன்றே அது. அவை இரண்டும் இல்லாமையாலே பக்தியும் இல்லை என்கிறார் என்றபடி. 'நோன்பிலேன்' என்ன அமையாதோ? **'நோற்ற நோன்பிலேன்'** என்னவேண்டுமோ? என்ன, சரீதனங்களைச் சமைய அநுஷ்டித்து, பலத்தோடே கூடியிருப்பதாகப் பார்த்திருக்கலாவது ஒன்று இல்லை என்கைக்காகச் சொல்லுகிறார். என்றது, [3] சக்கரவர்த்தி, ஸ்ரீ வசுதேவரைப்போலே பேற்றுக்கு அடியாக நினைத்திருக்கலாவது ஒன்றில்லை என்றபடி. "நதர்மநிஷ்டோஸ்மி - கர்மயோகத்தில் நிஷ்டையுடையேனல்லேன்" என்கிற இடத்தில், 'தர்மம்இல்லை' என்னுமல்,

---

1. "ஆத்மவேதீந" என்றதற்கு, ஆத்மாவை அறிந்த ஸ்வபாவன் அல்லன் என்று பொருளாய், அதனை எடுத்துக் கழிக்கிறபோதே, அதிலே சிறிது சம்பந்தம் உண்டு என்று தோற்றுகையாலே, 'தாச்சீல்யம் தோன்ற இருப்பன்' என்கிறார். தாச்சீல்யம் தோன்ற இருப்பன் - ஞானஸ்வபாவனுக ஆகாரம் தோற்ற இருப்பன். அதுதானும் இல்லை - அந்த ஞானலேசதையும் இல்லை. தாச்சீல்யம் - அதனுடைய ஸ்வபாவம்.

2. இந்த ஆத்மஞானத்திலே சிறிது சம்பந்தம் உண்டு என்றதுதான் போராதோ? என்கிற சங்கையிலே, அல்பஞானம், லௌகிக ஞானத்தோடு கூடினதாகையாலே அஜ்ஞானத்திற்குச் சமமாக இருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டாநின்றுகொண்டு, 'தாச்சீல்யம் தோன்ற இருப்பன், எனக்கு அது தானும் இல்லை' என்றதனை விவரிக்கிறார். 'அந்தப் பரமனைப் பற்றிய' என்று தொடங்கி.

"தத், ஞானம்; அஜ்ஞானம்அதஃ அன்யத்உக்தம்"
என்பது, விஷ்ணு புரா. 6. 5 : 57.

3. அப்படிப் பார்த்திருந்த பேர் உண்டோ? எனின், அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'சக்கரவர்த்தி' என்று தொடங்கி. சக்கரவர்த்தி-தசரத சக்கரவர்த்தி.

தர்மநிஷ்டனைப் பெறுகின்றிலேன் என்னுற்போலே, 'அறிவிலேன்' என்னுமல், 'நுண்ணறிவிலேன்' என்கிறார். என்றது, [1] ஆத்மஞானம் முன்னைப் பரம்பொருளின் சொரூபத்தைக் காணும் அளவாக அறியும் அறிவையுடையேனல்லேன் என்றபடி. "ந பக்திமான்" என்றும், [2] "நின்கணும் பத்தன் அல்லேன்" என்றும் எடுத்துக் கழித்த அளவு [3] இங்கும் எடுத்துக் கழியாது ஒழிவான் என்? என்னில், [4] "கரும ஞானங்களால் அலங்காரம் பண்ணப்பட்ட மனத்தையுடையவனுக்கு" என்கிறபடியே, அவை இரண்டும் உண்டானால் வருமதுவேயன்றே பக்தி; அவை இல்லாமையாலே எடுத்துக் கழிக்கவும் வேண்டாவேயன்றே. ஆனால், இதைப்போன்று, 'கர்மம்இல்லை' என்றபோதே, 'ஞானம்இல்லை' என்பது போதருமேயன்றே, அதனை எடுத்துக் கழிக்கவேண்டுவது என்? என்னில், முற்பிறவியில் கர்மங்கள் முடிந்த அளவிலே மரணம் உண்டானால் அடுத்த பிறவியிலே ஞானம் உண்டாகக்கடவது. [5] ஆயின், பக்தியும் அப்படி ஆனாலோ? என்னில், ஞானகர்மங்கள்

---

1. "நுண்ணறிவு" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆத்ம ஞானம் முன்னை' என்று தொடங்கி.

2. குளித்துமூன் றனலோ யோம்பும் குறிகொள் அந் தணமைதன்னை
ஒளித்திட்டேன் என்க ணில்லை நின்கணும் பத்த னல்லேன்
களிப்பதென் கொண்டு? நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன்
அளித்தெனைக் கருள்செய் கண்டாய் அரங்கமா நகருளானே.

என்பது, திருமாலை. 25.

3. 'இங்கும்' என்றது, "நோற்ற நோன்பிலேன்" என்ற இத்திருப்பாசுரத்திலும் என்றபடி.

4. உபய பரிகர்மித ஸ்வஅந்தஸ்ய ஏகாந்தி காத்யந்திக
பக்தியோகைகலப்யஃ"

என்பது ஆத்மசித்தி.

5. முற்பிறவியில் அடையப்பட்ட கர்ம ஞானங்களாலே அடுத்த பிறவியில் பக்தியும் உண்டாகலாமே, ஆன பின்பு, அவையுடையவனுக்கே பக்தி விலக்குதலையும் செய்யலாமே? என்று சங்கித்துப் பரிஹரிக்கிறார் 'ஆயின், பக்தியும்' என்று தொடங்கி. 'பக்தியும் அப்படியானாலோ' என்றது, முற்பிறவியிலே கர்ம ஞானங்களை அநுஷ்டித்து, இந்தப் பிறவியிலே பக்தி உண்டானாலோ என்னில் என்றபடி.

இரண்டும் உண்டானால் [1] பக்தி கூடி அல்லது நில்லாது, ஆன பின்பு, இங்கு அப்படி ஆக ஒண்ணாது. [2] 'உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்' என்று இவர் சொல்லுகிற இது, பக்தி அன்றோ, [3] "சிநேகத்தை முன்னிட்ட தியானமானது பக்தி" அன்றோ; ஆனபின்பு, இது உபாயம் ஆனாலோ? என்ன, அங்ஙனம் ஒண்ணாது அன்றோ, கரும ஞானங்களோடு கூடியுள்ள மனத்தையுடையவனுக்கு உண்டாகும் பரபக்தி அன்றோ சாஸ்திரங்களில் சாதனமாகச் சொல்லிப் போருகிறது; இது, அங்ஙன் அன்றிக்கே, அவனுடைய திருவருள் காரணமாக வந்ததுஆகையாலே இது ஸ்வரூபமாமித்தனை. [4] அங்ஙன் அன்றிக்கே, புராணங்களிலே தனித்தனியே கர்ம ஞானங்களைச் சாதனமாகச் சொல்லுகையாலே சொல்லிற்றாகவுமாம்.

[5] இவை இல்லையாகில், முதல் இல்லாதார் பலிசை இழக்கு மத்தனை அன்றோ? என்ன, ஆகிலும் - இங்ஙனம் இருந்ததே

---

1. 'பக்தி கூடியல்லது நில்லாது' என்றது, "பக்திஶ்ச ஞான விஶேஷஃ" என்றும், "ஞானம் கனிந்த நலம்" என்றும் சொல்லுகிறபடியே, ஞானத்தின் பரிபாகம் பக்தியாகையாலே, ஞானம் பக்தியோடு கூடியதாகவே இருக்கும் என்றபடி.

2. ஜிஜ்ஞாஸு பிரச்நத்தை அநுவதிக்கிறார் 'உன்னை விட்டு' என்று தொடங்கி.

3. "ஸ்நேஹபூர்வம் அநுத்யானம் பக்திஃ இதி அபிதீயதே
பஜஇதிஏஷதாதுஃ வை ஸேவாயாம் பரிகீர்திதஃ
தஸ்மாத் ஸேவாபுதைஃ ப்ரோக்தா பக்தி ஶப்தேந பூயஸீ"

4. "பக்தியானது, கர்மஞானங்களை அங்கமாகக் கொண்டு தான் அங்கியாயிருக்கும்" என்கிற வேதாந்தப் பிரக்கிரியையை மேற்கொண்டு அருளிச் செய்தார் இதுகாறும். இனி, கர்மம் ஞானம் முதலானவற்றைத் தனித்தனியே சாதனமாகச் சொல்லுகிற புராணப் பிரக்கிரியையை மேற்கொண்டு அருளிச் செய்கிறார் 'அங்ஙன் அன்றிக்கே' என்று தொடங்கி. இந்தப்பக்ஷத்தில், இத்திருப்பாசுரத்தில், கர்ம ஞானங்கள் இல்லாமையைச் சொன்னது, பக்தி இல்லாமைக்கும் உபலக்ஷணம்:

"ஜ்ஞான பக்தி அந்விதம் கர்ம ஜனகாதிஷு த்ருஶ்யதே
கர்ம பக்தி அந்விதம் ஜ்ஞானம் ப்ராயேண பரதாதிஷு
கர்ம ஜ்ஞாநாந் விதா பக்திஃ ப்ரஹ்லாத ப்ரமுகாஶ்ரயா"

என்ற சுலோகம் இங்கே நோக்கல் தகும்.

5. "சாதனம் இல்லையாகில் சாத்யமும் இல்லை" என்றதனை உட்கொண்டு அருளிச்செய்கிறார் 'இவை இல்லையாகில்' என்று தொடங்கி. பலிசை - வட்டி.

யாகிலும். [1] 'ஆற்றகிற்கின்றிலேன்' என்னுமிதனை, 'உபாயம்' என்றிருந்தாராகில், 'ஆகிலும்' என்கைக்கு இடம் இல்லை. ஆனால், நீர் இந்நாள்வரை ஆறியிருந்தீரே? என்ன, இனி- [2] உன்னையும் அறியாதே என்னையும் அறியாதே இருந்த அன்று இழக்க அமையாதோ, உன்நிறைவும் என்குறைவும் அறிந்த இன்றும் இழக்கவேண்டுமோ? [3] ஒருவன் கையிலே சோறும் உண்டாய் அவன் இடுவானுமானால், ஒருவனுக்குச் சோறும் இன்றிக்கே பசியனும் ஆனால் இழக்கவேணுமோ? இனி - [4] என்கையிலேயும் ஒன்று உண்டாய் அது சமையும் தனையும் ஆறி இருக்கிறேனே. [5]ஸ்வரூபத்தை உபாயத்திலே செலவு எழுதிக் கைவிடப் பார்க்கில் பார்க்குமித்தனை. [6] அநாதி

---

1. "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற, பகவத் பிரசாதம் அடியாக வந்த பக்தி தானே சாதனம் ஆனாலோ? என்னில், அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'ஆற்றகிற்கின்றிலேன்' என்னுமிதனை' என்று தொடங்கி. என்றது, "ஆகிலும்" என்ற பதம் பயன் அற்றதாய்விடும் என்றபடி. அதாவது, "வேறு உபாயங்கள் தமக்கு இல்லை" என்று அருளிச்செய்யக் கூடாது என்ற படி.

2. திருப்பாசுரத்தில், மேலே உள்ள பதங்களையும், இனி வருகின்ற "அரவின் அணை அம்மானே" என்றதனையும் கடாகூத்து, "இனி" என்ற பதத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்னையும் அறியாதே' என்று தொடங்கி. இதனை, விவரணம் செய்கிறார் 'உன் நிறைவும்' என்று தொடங்கி.

3. நிறைவில்லாதவனுக்கு நிறைவுள்ளவன் செய்யவேணுமோ? என்ன, செய்யவேண்டும் என்னுமதனை லௌகிக திருஷ்டாந்தத்தாலே காட்டுகிறார் 'ஒருவன்' என்று தொடங்கி.

4. "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றதனைமட்டும் கடாகூத்து "இனி" என்றதற்கு, வேறு ஒருவகையில் பாவம் அருளிச் செய்கிறார் 'என்கையிலேயும்' என்று தொடங்கி.

5. 'ஒன்றும் இல்லை' என்கிறது என்? "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற பக்தி, உபாயம் ஆனாலோ? என்று ஈஸ்வரனுடைய அபிப்பிராயமாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்வரூபத்தை' என்று தொடங்கி.

6. "அரவின் அணை அம்மானே" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் மேல்: முதற்பொருள், அரவை அணையாக உடையனாந் தன்மை சர்வாதிக லக்ஷணமாகையாலே பூர்த்தி சொல்லுகிறது என்பது. 'அரவின் அணை' என்றதனால், சேஷசாயி ஆகையாலே பரமபோகியாய் இருப்பவன் என்றும், 'அம்மானே' என்றதனால் சரீரியாக இருப்பதனாலே சேஷியாக இருப்பவன் என்றும் கூறுவது இரண்டாவது பொருள். இந்த இரண்டாவது பொருளைக் கடாகூத்து, "இனி" என்பதற்கு, மூன்றாவதாக வேறும் ஒரு

காலம் மெய்மறந்து இழந்தகாலம் போராதோ, நான் மெய்யாக இசைந்த இன்றும் இழக்கவேண்டுமோ? உன்னைவிட்டு - [1] நீயும் என்னைப்போலே இருந்தாயாகில் நான் ஆறி இரேனே, நானும் சிறிது செய்து வரவேண்டும்படியோ நீ இருக்கிறது. அன்றிக்கே, [2]உயிரை விட்டு உடல் தரிக்கவற்றே என்னலுமாம். ஒன்றும் ஆற்ற கிற்கின்றிலேன்-[3]உன்னுடைய ஸ்வரூப ஞானம் என்னுடைய தாரணத்துக்குக் காரணமாய் இருக்கிறதில்லை. [4]"அங்ஙனம் அழைத்துக்கொண்டு செல்லும் செயல் அவருக்குத் தக்கதாகும்" என்று ஆறி இருக்கைக்கும் ஒருவழி உண்டேஅன்றே அவளுக்கு. கடலை அணைசெய்யவும் இராவணனை அழியச்செய்யவும் வேண்டாவேஅன்றே இவளுக்கு. இதுகாறும் தம்முடைய நிறைவின்மையைச் சொன்னார்; இனி, அவனுடைய பூர்த்தியைச்சொல்லுகிறார்: அரவின் அணை அம்

---

பாவம் அருளிச்செய்கிறார் 'அநாதிகாலம்' என்று தொடங்கி. 'மெய்மறந்து' என்பது, சிலேடை: சரீரசரீரிபாவசம்பந்தத்தை மறந்து என்பது, நேர்பொருள். உடம்பு தெரியாதே மோஹித்து என்பது, வேறும் ஒருபொருள். 'மெய்யாக' என்பதும் சிலேடை: சரீரமாகையாலே சேஷம் என்பது, நேர்பொருள். சத்தியமாக என்பது, வேறும் ஒருபொருள்.

1. "அரவின் அணை அம்மானே" என்றதற்கு, மேற்கூறிய இருவகைப் பொருள்களுள் முதற்பொருளைக் கடாக்ஷித்து, "உன்னை" என்பதற்குப் பூர்ணனான உன்னை என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, பாவம் அருளிச்செய்கிறார் 'நீயும் என்னைப்போலே' என்று தொடங்கி.

2, "அரவின் அணை அம்மானே" என்றதற்குக் கூறிய இருவகைப் பொருள்களுள், இரண்டாவது பொருளைக் கடாக்ஷித்து, அதற்குத் தகுதியாகப் போக்யனான உன்னை என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'உயிரைவிட்டு' என்று தொடங்கி.

3. "ஒன்றும்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்னுடைய' என்று தொடங்கி.

4. பிராட்டிக்கு, ஸ்வரூபஞானம் தரித்திருப்பதற்குக் காரணமாய் இருந்ததே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அங்ஙனம்' என்று தொடங்கி. 'அங்ஙனம்' என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகத்தை மேலே காணல்தகும். வழியாவது, முறைப்படி விரோதியை அழிக்கவேண்டியிருத்தல். விரைவு உண்டாயிருக்கச்செய்தே பிராட்டி ஆறியிருந்ததற்கும், இவள் ஆறியிராமைக்கும் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடலை' என்று தொடங்கி.

மானே - அரவினை அணையாகவுடைய சர்வேசுவரனே![1] பாம்பினைப் படுக்கையாகவுடைமை, அறப்பெரியவனுந் தன்மைக்கு இலக்கணமேயன்றே.[2] உன்னுடைய போகப் பிராவண்யம் என்னுல் ஆறி இருக்கலாயிருக்கிறதோ? நீ பரமபோகியாயிருக்க, என்னுல் ஆறியிருக்கப்போமோ?

சேற்றுத் தாமரை செந்நெலூடு வளர் சிரீவரமங்கல நகர்-. சேறுகளிலே தாமரைகளானவை செந்நெலூடே அவற்றுக்கு அணுக்கன் இட்டாற்போலே அலராநிற்கின்ற தேசம்.[3] "நித்தியஸூரிகளுடைய நகரம் அயோத்தி என்னும் பரமபதம்" என்னும்படியான பரமபதத்திற் காட்டில் தனக்கு நகரமாக விரும்பி வாழ்கின்ற தேசம். சம்சாரிகளுடைய ரக்ஷணத்துக்காக நித்தியவாசம்செய்யும் தேசம். பரமபதத்தையும் மறக்கச் செய்யும் தேசம் என்பார் **'சேற்றுத்தாமரை செந்நெலூடு மலர் சிரீவர மங்கலநகர்'** என்கிறார். [4]அன்றிக்கே, அரசர்கள் எடுத்துவிட்ட இடத்தே பரிகரமும் புகுமித்தனையன்றே என்னுதல். வீற்றிருந்த-'அங்கே இருக்கக்கூடிய நமக்கு, இவ்விருப்பு இருக்கவேண்டாகின்றதே!' என்னும் வெறுப்போடு அன்றிக்கே, [5]தட்டியிலிருந்தவன் மூடி சூடினாற்போலே தன் வேறுபாடு தோற்ற இருக்கை. எந்தாய் - அங்குத்தை இருப்பு நித்தியசூரிகளுக்கு ஆனாற்போலே, இவ்விருப்பு எனக்காக அன்றே இருக்கிறது. சிரீவரமங்கல நகரான அங்கே வீற்றிருந்த எந்தாய்! என்க. உனக்கு மிகை அல்லேன்-பரமபதத்திலே நெடுங்கை நீட்டாக இருந்தாயாகில் நான் தரித்திருக்கலாயிற்றே, எனக்காக வந்த இடத்தே நான் இழக்கவோ. அங்கே

---

1. "அரவின் அணை அம்மான்" என்பது, பூர்த்தியைச் சொல்லும்படியாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாம்பினைப் படுக்கை' என்று தொடங்கி.

2. "அரவின் அணை அம்மான்" என்பதற்கு, இனிமையைப் பற்ற வேறும் ஒருபாவம் அருளிச்செய்கிறார் 'உன்னுடைய' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'நீ பரமபோகியாய்' என்று தொடங்கி.

3. "தேவாநாம்பூஃ அயோத்யா" என்பது.
இது, "நகர்" என்றதற்கு, பாவம்.

4. தாமரையையும் செந்நெல்லையும் வர்ணிப்பதற்கு வேறு ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. என்றது, சர்வேசுவரன் வந்து அவதரிக்கையாலே நித்தியசூரிகளும் அவற்றின் உருவமாக வந்து அவதரித்திருக்கின்றார்களாகையாலே, அவனைப் போன்றே உத்தேஸ்யமாய் வருணிக்கிறார் என்றபடி.

5. தட்டி - திரைச்சீலை.

வீற்றிருந்த உனக்கு மிகை அல்லேன் - [1] காக்கும் பொருள் கனத்தேதடிக்கொண்டிருக்கின்ற உனக்குப் புறம்பு அல்லேன். அன்றிக்கே, உனக்கு மிகை அல்லேன் - [2]"என்னை அடியவனாகக் கொள்வதில் சேவ்ய சேவக பாவம் மாறுடிக் கிடக்கிறது இல்லை" என்று, மற்றைப்போதைக்கு நான் இரேன். என்றது, உனக்கு மிகையானபோது அல்லேனாய் விடுவேன் என்றவாறு. [3]இத்தால் நமக்கு லாபம் என்? என்ன, அங்கே - [4]"தேவரீருக்கே பிரயோஜனம் கிடைக்கப் போகிறது" என்கிறபடியே, இத்தால் வரும் பிரயோஜனமும் தேவரீருடையதே. [5]பால்குடிக்கும் குழந்தையை, பால்குடித்து வயிறு நிறையக்கண்டு உகக்கும் தாயைப்போலே, அடிமையாக இருப்பவன் ஸ்வரூபம்பெற்று அடிமைசெய்கை சேஷிக்குப்பேறே அன்றே. (1)

## 510.

**அங்குற் றேனலேன் இங்குற் றேனலேன் உனைக்காணும்**
**[அவாவில் வீழ்ந்துநான்**
**எங்குற் றேனுமலேன் இலங்கைசெற்ற அம்மானே!**
**நின்கள் சேர்மணி மாட நீடு சிரீவர மங்கல நகருறை**
**சங்கு சக்கரத்தாய்! தமியேனுக்கு அருளாயே.**

---

1. "அங்கே வீற்றிருந்த உனக்கு மிகை யல்லேன்" என்பதற்கு, இரண்டுவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, எந்தையாய் அண்மையிலிருப்பவனான உனக்கு மிகையல்லேன் என்பது. என்றது, உன் ரக்ஷணத்துக்குப் புறம்பு அல்லேன் என்றபடி. இதனையே அருளிச்செய்கிறார் 'காக்கும் பொருள்களே' என்று தொடங்கி. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. இரண்டாவது பொருளுக்குக் கருத்து, உனக்குப் புறம்பாய்த் தோற்றிற்றுகில் தரியேன் என்பது. அல்லேன் = தரியேன்.

2. மிகையாகுல் தரியேன் என்னுமதனைத் திருஷ்டாந்த மூலமாகக் காட்டுகிறார் 'என்னை அடியவனாக' என்று தொடங்கி.

"குருஷ்வ மாம் அநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே
க்ருதார்த்தஃ அஹம் பவிஷ்யாமி தவச அர்த்தஃ ப்ரகல்பதே"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31: 22. பெருமாளைப் பார்த்து இளையபெருமாள் கூறியது.

3. 'இத்தால்' என்றது, மிகையாகத் தோற்றுமல் அடிமைகொண்டு இதனால் என்றபடி.

4. "அங்கே" என்பதற்கு, வேறும் ஒருபொருள் அருளிச்செய்கிறார் 'தேவரீருக்கே' என்று தொடங்கி. "தவச அர்த்தஃ ப்ரகல்பதே" என்பதன் பொருள், 'தேவரீருக்கே' என்றது முதல் 'கிடைக்கப்போகிறது' என்றது முடிய.

5. இவரை அடிமைகொள்வது, அவன்பேறுயிருக்கும் என்னுமதனைத் திருஷ்டாந்த முகத்தால் காட்டுகிறார் 'பால்குடிக்கும்' என்று தொடங்கி.

**பொ-ரை:**—ஒருசாதனத்தைச் செய்து முக்தியை அடைந்தவனு மிருக்கிறேன் அல்லேன், சாதனத்தைச் செய்கின்றவர்களில் ஒருவனு மிருக்கிறேன் அல்லேன், உன்னைக் காணவேண்டும் என்கிற ஆசையிலே அகப்பட்டு நான் உபாயங்களைச் செய்வதற்கு ஆற்றலுடையேனும் அல்லேன்; இலங்கையை அழித்த அம்மானே! சந்திரமண்டலம்வரை யிலும் பொருந்தும்படி மாணிக்கங்கள் பதித்த மாடங்கள் உயர்ந்திருக்கின்ற ஸ்ரீவரமங்கல நகரிலே எழுந்தருளியிருக்கின்ற, சங்கினையும் சக்கரத்தினையுமுடையவனே! வேறு துணை இல்லாத எனக்குக் கிருபை செய்தருளவேண்டும்.

**வி-கு:**—அம்மானே! சங்குசக்கரத்தாய்! அங்குற்றேனல்லேன், இங்குற்றேனல்லேன், ஆசையில் வீழ்ந்து எங்குற்றேனுமல்லேன், தமியேனுக்கு அருளாய் என்கிறார். திங்கள்சேர் என்பதற்கு, சந்திரன் வந்து தங்கியிருக்கும்படியாக என்று பொருள்கூறலுமாம். மணி-அழகுமாம்.

**ஈடு:**—இரண்டாம்பாட்டில்[1] "ஆற்றேன்" என்றால் பெற்றது என், தடைகள் இன்னம் உண்டே? என்ன, பிராட்டிக்கு வந்த தடைகளைப் போக்கியது போன்று, அடியேனுடைய விரோதியையும் போக்கியருளவேண்டும் என்கிறார்.

அங்குற்றேன் அல்லேன்-[2]முக்தர் இந்தச் சம்சாரத்திலே உலாவினாற்போன்று சித்தசாதனனாய்த் திரிகிறேன் அல்லேன். இங்குற்றேன் அல்லேன்-[3] இங்கே இருந்து சாதனங்களைச் செய்கின்றவர்களிலே ஒருவனாய் இருக்கிறேன் அல்லேன். [4]அன்றிக்கே, "சனங்களுடன் இந்தச் சரீரத்தை நீனை

---

1. "இலங்கை செற்ற அம்மானே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. உபாசகர், ஆரப்தயோகர் என்றும், ஆரூடயோகர் என்றும் இருவகையர். அவர்களில், ஆரூடயோகர் படி தமக்கு இல்லை என்கிறார் என்று கூறத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிறார் 'முக்தர்' என்று தொடங்கி. 'சித்தசாதனனாய்' என்றது, சாதனங்களை எல்லாம் அநுஷ்டித்து, பலத்தினை அநுபவிப்பதற்காக அங்கே செல்ல இருக்கிற ஆரூடயோகனாய் என்றபடி.

3. ஆரப்தயோகர் படி தமக்கு இல்லை என்கிறார் என்று கூறத் திருவுள்ளம்பற்றி அதனை அருளிச்செய்கிறார் 'இங்கே இருந்து' என்று தொடங்கி. 'சாதனங்களைச் செய்கின்றவர்களிலே' என்றது, சாதன அநுஷ்டானம் செய்ய ஆரம்பித்த ஆரப்தயோகரிலே என்றபடி. ஆக, மேல்திருப்பாசுரத்தில் "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று சொன்ன உபாயம் இன்மையை, இத்திருப்பாசுரத்தில் "அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்" என்று வேறு வகையாக அநுபாஷிக்கிறார் என்பதாம்.

4. "அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்" என்பதற்கு, மற்றும் ஒருபொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

யாதவனிருன்" என்கிறபடியே, உன்னை அநுபவித்துச் சம்சாரத்தை நினையாதிருக்கிறேன் அல்லேன். இங்குற்றேன் அல்லேன் - [1] "மறந்தேன் உன்னை முன்னம்" என்கிறபடியே, உன்னை மறந்து "அவர் தரும் கலவியே கருதி" என்கிற படியே, அதுவே பேருக இருக்கிறேன் அல்லேன் என்னுதல். [2] யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்கையாலே அப்படி இருக்கமாட்டாரே. உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்துயான் எங்குற்றேனும் அல்லேன்- [3] ஆனால், ஒரு காலத்திலாகிலும் சில செய்ய வல்லீரோ? என்னில், அது, முன்பே தானே "உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்" என்று சொன்னேனே அன்றே. [4] ஒருகாரியத்தைச் செய்யவேண்டியவர்கள் அதற்கு ஆற்றல் உள்ளவராய் இருக்கவேண்டும் அன்றே. 'உன்னைக் காணவேணும்' என்னும் ஆசையாலே வலிமை குன்றினவனுய்த் தளர்ந்தேன், ஆதலால் சாதனங்களைச்செய்வதற்கு ஆற்றலுடையவன் அல்லேன். இது, பூர்வர்

---

"ஸுஉத்தமஃ புருஷஃ ஸதத்ர பர்யேதி ஜக்ஷத்க்ரீடன் ரமமாணஃ

ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா ந உபஜநம் ஸ்மரந் இதம் சரீரம்" என்பது, சாந்தோக்யம். 8. 12: 3.

1. "மறந்தேன்உன்னைமுன்னம்" என்பது, பெரியதிருமொழி. 6. 2: 2. "அவர்தரும் கலவியே" என்பது, ஷை 1. 1: 1.

2. இதர விஷயமே அடையத்தகுந்தது என்று இருந்தாலோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'யாதானும்பற்றி' என்று தொடங்கி. என்றது, இவ்வுலக இன்பங்களில் எதேனும் ஒன்றினைப் பற்றிப் பகவத் விஷயத்தை விட்டே போம்படியான இந்தச் சம்சாரி சேதனனுடைய நினைவானது,மீண்டும் தொடராதபடி அதனை நன்றாக விடுவிக்கையாலே என்றபடி. இது, திருவிருத்தம். 95-ஆம் பாசுரம்.

3. "அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்" என்பதற்கு அருளிச்செய்த இருவகைப்பொருள்களுள், முதற்பொருளுக்குத் தகுதியாக அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஆனால்' என்று தொடங்கி. 'ஆனால்' என்றது, ஆசூடயோகரும் ஆரப்தயோகரும் அல்லீராகில் என்றபடி. 'செய்ய வல்லீரோ' என்றது, சாதனங்களை அநுஷ்டிப்பதற்கு யோக்கியதைதான் உமக்கு உண்டோ? என்றபடி.

4. "நம்மைவிட்டுத் தரிக்கமாட்டீர்" என்றால், "யோக்கியதைஇல்லை" என்னுமதற்கு, அது ஒரு காரணமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒருகாரியத்தை' என்று தொடங்கி. என்றது, "காலாழும்" (பெரிய திருவந்.) என்கிறபடியே, பக்திபாரவச்யத்தாலே அசக்தனான நான், மேலும் சாதனஅநுஷ்டானத்துக்குத் தக்கவனல்லேன் என்றபடி.

கள் நிர்வாஹம். அங்குற்றேன் அல்லேன் - [1]நித்தியசூரிகளோடுகூட அங்கே இருக்கிறேன் அல்லேன். இங்குற்றேன் அல்லேன் - சம்சாரிகளோப்போன்று இங்கே உண்டு உடுத்துப் போருகிறேன் அல்லேன். [2] இங்ஙனே ஆனால், நீ வந்து முகங் காட்டுமளவும் நடு ஓர் இடத்தில் நிற்கப் பொறுதவனாக இருக்கிறேன். உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து யான் எங்குற்றேனுமல்லேன் - [3] "ஆசை என்னும் கடலில் வீழ்ந்து இங்கு அயர்த்தோம்" என்கிறபடியே, அந்த ஆசையிலே வீழ்ந்து கரையேறமாட்டாதே தடுமாறுகின்றேன்.

இலங்கை செற்ற அம்மானே - [4]தம்தலையில் ஒன்றும்இல்லாமையைக் கண்டார், ஒன்றும்இல்லாதார் பெற்ற இடத்தைப் பார்க்கிறார்; கைம்முதல்அற்றவன் முன்பு ஈட்டிவைத்த செல்வத்தை வாங்கிப் பார்க்குமாறுபோலே. [5] தன்பேறாகக்கொள்ளுமவன் என்பார் 'அம்மானே!' என்கிறார். [6] அன்றிக்கே, ஸ்வரூபம் பிரகாசித்தால், அவன்தலையிலே தள்ளிவைக்கவுங் கடவதாய், அவனும் பிராட்டிமாரைப்போன்று மேல் விழுந்து

---

1. பிரபந்நர், ஆர்த்தப் பிரபந்நர் என்றும், திருப்தப் பிரபந்நர் என்றும் இருவகையர்; அவர்களுள், திருப்தப் பிரபந்நனல்லேன் என்கிறார் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி, அதனை அருளிச்செய்கிறார் 'நித்தியசூரிகளோடுகூட' என்றது முதல், 'பொறுதவனாக இருக்கிறேன்' என்றது முடிய.

2. நித்தியசூரிகளிலும் சம்சாரிகளிலும் கூட்டி அன்றிக்கே, வேறு பட்டவரானால் ஸ்வரூப ஞானத்தாலே தரித்திருந்தாலோ? என்ன, அதற்கு, விடை அருளிச்செய்கிறார் 'இங்ஙனேயானால்' என்று தொடங்கி. என்றது, பக்திபாரவச்யத்தாலே, "சேஷிசெய்தபடி கண்டிருக்கிறோம்" என்று ஆறியிருக்கப் பொறுமையுடையவனல்லேன் என்றபடி. இதனால், திருப்தப் பிரபந்நன் அல்லேன் என்றபடி.

3. பெரியதிருமொழி.. 4 9: 3.

4. "அங்குற்றேனல்லேன் இங்குற்றேனல்லேன்" என்பதற்கு, அருளிச்செய்த இருவகைப்பொருள்களுள் முதற்பொருளுக்குத் தகுதியாகச் சங்கதி அருளிச்செய்கிறார் 'தம்தலையில்' என்று தொடங்கி. இதனால், உம்மையே உபாயமாக அறுதியிட்டிருந்த பிராட்டிக்கு உதவியதுபோன்று, எனக்கு நீயே உதவவேண்டும் என்பதனைத் தெரிவித்தபடி. இதற்குத் திருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் 'கைம்முதல்' என்று தொடங்கி.

5. "அம்மானே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன்பேறாக' என்று தொடங்கி.

6. பிராட்டிக்கு உதவியதுபோன்று, தமக்கும் உதவவேண்டும்படியான சம்பந்தத்தை நினைத்து "அம்மானே" என்கிறார் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

விரோதிகளையும் போக்கி அணைக்கைக்குவேண்டும் சம்பந்தம் உண்டாய்க்காணும் இருப்பது என்னுதல். நன்று; அவைஎல்லாம் செய்தமை உண்டு, ஆனாலும், [1] அதற்குப் பிற்பட்டதே? என்ன, அக்கண்ணழிவு அறுத்துவைத்தாய்அன்றே என்கிறார் மேல்: திங்கள் சேர் மணி மாட நீடு சிரீவரமங்கலநகர் உறை-சந்திரமண்டலம்வரை செல்ல உயர்ந்து இரத்தினமயமான மாடங்களையுடைய சிரீவரமங்கல நகரிலே, அவதாரம்போலே தீர்த்தம் பிரசாதியாதே நித்தியவாசம் செய்கின்றாயில்லையோ? நீடுகை-நீட்சியையுடைத்தாயிருக்கை. அன்றிக்கே, திங்கள்சேர் மணிமாடம் நீடுஎன்பதற்கு,சந்திரனேபோலே சேரும்படி மாணிக்கமயமான மாடங்கள் வளர்கின்றஎன்னுதல். அது அப்படியேயானாலும் பரிகரம் இல்லையே? என்ன, சங்கு சக்கரத்தாய் - அங்ஙன் கண்ணழிவு சொல்லலாமோ? ஒரோ [2] கைக்குப் படைஅன்றே கூட நிற்கிறது என்கிறார். [3] இங்கு, "இலக்குமணனே! வில்லைக் கொண்டு வா" என்னவேண்டும் குறை உண்டோ. பிறர்கை பார்த்திருக்கவேண்டும் குறை உண்டோ இங்கு. பரிகரங்களை அழைத்துக் காரியம் கொள்ளவேண்டும் படியோ உனக்கு இருக்கிறது. [4] நீ அண்மையிலிருப்பவன் அல்லாமையோ,நீ ஆற்றலுடையவன் அல்லாமையோ, உனக்குப் பரிகரம்இல்லாமையோ, பரிகரம்தான் கைகழியநின்றே,

---

1. அதற்கு - ஸ்ரீராமாவதாரத்துக்கு. கண்ணழிவு - குறைவு.

2. கை - போரும், கையும். படை - ஆயுதமும், சேனையும்.

3. "சங்குசக்கரத்தாய்" என்று, நிரூபகமாகச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இங்கு' என்று தொடங்கி.

"சாபமாநய ஸௌமித்ரே" என்பது, ஸ்ரீராமா. யுத். 21: 22. சுலோகத்திலுள்ள "ஸௌமித்ரே" என்ற சொல்லுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிறர்கை' என்று தொடங்கி. "சாபமாநய" என்ற சொல்லுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பரிகரங்களை' என்று தொடங்கி. பரிகரங்கள் - ஆயுதங்கள், உபகரணங்கள்.

4. மேலே கூறியவற்றைக் கடாக்ஷித்து, மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நீ அண்மையில்' என்று தொடங்கி. "சிரீவரமங்கல நகருறை" என்றதனை நோக்கி 'நீ அண்மையில்' என்று தொடங்கியும், 'இலங்கைசெற்ற அம்மானே" என்றதனை நோக்கி 'ஆற்றலுடையவன்' என்று தொடங்கியும், "சங்குசக்கரத்தாய்" என்றதனை நோக்கி 'உனக்குப்பரிகரம்' என்று தொடங்கியும், அதனை நிரூபகமாகச் சொன்னதனை நோக்கிப் 'பரிகரம்தான்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

எதனாலேதான் இழக்கிறது? என்ன, அவைஎல்லாம் அப்படியே, இத்தலை இப்படிக் குறைவற்றிருந்தாலும் பிரயோஜனம் இல்லையே, [1] அத்தலையும் குறைவற்றிருக்கவேணுமே? என்ன, தமியேனுக்கு - இத்தலையும் குறைவற்றது என்கிறார். [2] அங்கே பிரியாதிருக்கிறார் படி அல்லேன், இங்கே பிரியாதிருக்கிறார் படி அல்லேன். [3] இங்குள்ளார்க்கு இவ்விஷயத்தை அறியாமையாலே பிரிவு இல்லையே. தமியேனுக்கு - உன்னை ஒழியத் துணை இல்லாத எனக்கு. [4]ஸ்வரூபத்தைச் 'சாதனம்' என்று செலவு எழுதிக் கழிக்கில் கழிக்குமித்தனை. [5] நீ உபாயம் ஆனாலும் உபாயத்தைப் பிரதிபத்திபண்ணுவார் வேண்டாவோ. தமியேன் - [6]பிராட்டியில் வேறுபாடு. அங்காகில் ஒரு திரிசடையாகிலும் உண்டே அன்றே, இங்கு "ஆவார் ஆர் துணை" என்னும்படி அன்றே தனிமை. ஆயின், செய்யவேண்டுவது என்? என்ன, அருளாயே - [7]என்வெறுமையும் உன்நிறைவும் அறிகைக்கு, நீ அடியில் தந்த அருள் இன்று குடிபோ

---

1. 'அத்தலையும் குறைவற்றிருக்கவேணுமே' என்றது, உமக்கு இச்சையும் உண்டாகவேணுமே என்றபடி.

2. "அங்குற்றேனல்லேன் இங்குற்றேன் அல்லேன்" என்றதற்குக் கூறிய இரண்டாவது பொருளுக்கு அநுகுணமாகத் "தமியேன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அங்கே' என்று தொடங்கி.

3. இங்குள்ள சம்சாரிகளுக்குப் பிரிவு இல்லாமை எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்குள்ளார்க்கு' என்று தொடங்கி.

4. "தமியேன்" என்பதற்கு, உபாயசூந்யனை எனக்கு என்று பொருள்கூறத் திருவுள்ளம்பற்றி, 'உபாயசூந்யன்' என்று சொல்லுவான் என்? "அவாவில் வீழ்ந்து" என்கிற பக்தி உபாயம் ஆனாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்வரூபத்தை' என்று தொடங்கி.

5. ஸ்வரூபத்தைச் சாதனம் என்று செலவு எழுத ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீ உபாயமானாலும்' என்று தொடங்கி. ஆக, வேறு சாதனங்கள் ஒன்றும் இல்லாதவன் என்றபடி.

6. "இலங்கைசெற்ற அம்மானே" என்றதனைக் கடாகூத்து, "தமியேன்" என்பதற்கு, சம்சாரிகளில் தமக்கு ஒரு துணை இல்லாதவர் என்று மூன்றுவதாக ஒருபாவம் அருளிச்செய்கிறார் 'பிராட்டியில்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'அங்காகில்' என்று தொடங்கி. ஆக, "தமியேன்" என்பதற்கு, பிரிந்திருக்கிற எனக்கு என்றும், உபாயசூந்யனை எனக்கு என்றும், சம்சாரிகளில் துணை இல்லாத எனக்கு என்றும் மூன்று பொருள் அருளிச்செய்தபடி.

7. "சங்குசக்கரத்தாய் தமியேன்" என்றதனைக் கடாகூத்து, "அருளாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்வெறுமையும்' என்று தொடங்கி. என்றது, இப்படி அருளின நீ பேற்றுக்குத் தகுதியாகவும் அருள வேண்டும் என்றபடி. 'அடியில் தந்த அருள்' என்றது, மயர்வற மதிநலம் அருளினதைக் குறித்தபடி.

யிற்றே, [1]அன்று நான் விரும்பாதிருக்க அருளின நீ, விரும்புவதற்குத் தகுதியைப் பிறப்பித்துப் பொகடவோ. [2]ருசியை உண்டாக்குவார் ஒருவரும், உபாயத்தை அநுஷ்டிக்கிறவர் ஒருவருமாயோ இருப்பது. [3]நின்னருளே புரிந்திருக்கிற எனக்கு அருளாயாகில் பின்னை யார்க்கு வேறு அருள இருக்கிறாய். (2)

## 511.

கருளப் புட்கோடி சக்கரப்படை வான நாடவெம் கார்முகில் வண்ணனே!
பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமைகொண்டாய்!
தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ் சிரீவர மங்கல நகர்க்கு
அருள்செய் தங்கிருந்தாய் அறியேன்ஒரு கைம்மாறே.

**பொ-ரை:**—கருடக் கொடியினையும் சக்கரப்படையினையுமுடைய வைகுந்த நாடனே! எம் கார்முகில் வண்ணனே! பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமைகொண்டாய்; நான்மறைகளிலும் வல்லவர்களான தத்துவ ஞானத்தையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் வாழ்கின்ற ஸ்ரீவரமங்கலநகரத்திற்குத் திருவருளைச்செய்து அங்கே தங்கியிருக்கின்றவனே! ஒரு பிரதியுபகாரத்தை யான் அறியேன் என்கிறார்.

**வி-கு:**—வானநாட! கார்முகில்வண்ண! அங்கு இருந்தாய்! என்னை அடிமைகொண்டாய்; அதற்கு ஒரு கைம்மாறு அறியேன் என்க. வெம் கார்முகில்வண்ண! என்றுகொண்டு விரும்பப்படுகின்ற கரியமேகம்போன்ற நிறத்தையுடையவனே! என்னலுமாம். வெம்மை-விருப்பம். "வெம்மை வேண்டல்" என்பது தொல்காப்பியம். தெருள்-ஞானம். வல்லவர்: முற்றெச்சம்.

---

1. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'அன்று நான்' என்று தொடங்கி. 'அன்று நான் விரும்பாதிருக்க' என்றது, "மயர்வற மதிநலம் அருளினன்" என்றவிடத்தில், 'எனக்கு' என்று கூறுமையைத் திருவுள்ளம் பற்றி.

2. யோக்கியதையைப் பிறப்பித்தால், பேற்றினையும் செய்து தரவேண்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ருசியையுண்டாக்குவார்' என்று தொடங்கி.

3. "தமியேனுக்கு அருளாய்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'நின்னருளே' என்று தொடங்கி.

ஈடு :— மூன்றும்பாட்டு. [1]"அருளாய்" என்றீர், அருளக் கடவோம், அதில் ஒருதட்டு இல்லை; ஆனாலும், [2]"ஆத்துமா கருத்தாவானால் சாஸ்திரம் பயனுடைத்தாம்" "சாஸ்திரம் பயனுடைத்தாம்போது ஆத்துமா கருத்தாவாகவேணும்" என்ற படி அருள்பெறுவார்பக்கலிலும் சிறிது உண்டாகவேணும் காணும் என்ன, இது மேலுற்றைக்கிட்ட மரியாதையோ! கீழுற்றைக்கும் ஏதேனும் உண்டோ; ஆனபின்னர், இத்தலையில் கிஞ்சித்காரத்தை விட்டு உன்கிருபையாலே செய்தருளாய் என்கிறார். இவ்வளவும் வர இதற்குமுன்பு நீ நிர்ஹேதுகமாக ஏற்றுக்கொண்ட பின்பு, மேலும் செய்தருளவேணும் என்கிறார்.

கருளப்புட்கொடி ..... அடிமைகொண்டாய் - [3]நீ முன்பு அருளிற்று உன்னை அறிந்தோ, என்னை அறிந்தோ! கருளப்புட்கொடி - பெரியதிருவடியைக் கொடியாகவுடையவனே! [4]இன்னமும் ஒன்று வேண்டும்படியோ உன்னுயர்த்தி. [5]"அரு

---

1. தம் உபாய சூந்யதையைச் சொல்லி, 'நீயே காப்பாற்றவேண்டும்' என்று பிரார்த்திக்கின்ற இவ்விடத்திற்கு, "அடிமைகொண்டாய்", "அறியேன் ஒருகைம்மாறே" என்கிறது சோறாது என்கிற சங்கையிலே, இது, முன்பு செய்ததற்கு ஒரு பிரதியுபகாரம் அறியேன் என்கிறதைச் சொல்லுகிறது என்னுமிடம் தோன்ற அவதாரிகை அருளிச்செய்கிறார் '"அருளாய்" என்றீர்' என்று தொடங்கி.

2. "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி"
என்பது, பூர்வமீமாம்சை.
"கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்"
என்பது, உத்தரமீமாம்சை.

'மேலுற்றைக்கிட்ட மரியாதையோ' என்றது, "அருள்செய்தங்கிருந்தாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'கீழுற்றைக்கும்' என்றது, "பொருளல்லாத என்னைப் பொருளாக்கி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'ஆனபின்னர்' என்றது, முன்பு இன்றியே இப்போது உண்டான பின்பு என்றபடி.

3. "அடிமைகொண்டாய்" என்பது முடிய, பாவம் அருளிச்செய்கிறார் 'நீ முன்பு' என்ற தொடங்கி. 'அறிந்தோ' என்ற ஓகாரத்திற்குக் கருத்து, உன்பெருமையையும் என்சிறுமையையும் பாராதே முன்பு நிர்ஹேதுகமாக அடிமை கொண்டாற்போலே, பேற்றினையும் உன்கிருபையாலே செய்தருள வேண்டும் என்கிறார் என்பது.

4. "கருளப்புட்கொடி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இன்னமும்' ஏன்று தொடங்கி. என்றது, கருடக்கொடியே உன் பெருமைக்கு நிரபேக்ஷ சாதகம், சக்கரத்தைத் தரித்தலும் பரமபதத்தில் இருத்தலும் மிகை என்றபடி.

5. மேலே, மேன்மைக்குக் காரணமாக அருளிச்செய்து, இங்கே நீர்மைக்குக் காரணமாக அருளிச்செய்கிறார் "அருளாழிப்புள்" என்று தொடங்கி. இது, திருவாய். 1. 4: 6.

ளாழிப்புள் " அன்றே. சக்கரப்படை - அதுவும் வரவேண்டும் படியோ இது இருக்கிறது. [1]"அருளார் திருச்சக்கரம்" அன்றே வானநாட- [2]ஒன்று எடுக்கவும் ஒன்று பிடிக்கவும்வேணுமோ, இருப்பிடமே அமையாதோ. [3]ஆக, பெரியதிருவடியைக் கொடியாகவும், திருவாழியை ஆயுதமாகவும், பரமபதத்தை வசிக்குமிடமாகவும் உடையையாய் வைத்து என்றபடி. பெரிய திருவடியை மேற்கொள்ளுதல், திருவாழியைச் சலியாமல் பிடித்தல், பரமபதத்தை இருப்பிடமாகவுடையனுதல் இவை அறப் பெரியவனுக்கு இலக்கணம்; [4]இவை ஒரொன்றே அமைந் திருக்கஎல்லாவகையாலும் நிறைந்தவனுயிருக்கிறபடி. "புள்" என்பது, பொதுப்பெயர்; [5]"கருளப்புள்" என்பது, கருடனுகிய பறவை என்று சிறப்பித்தபடி. "ஈடே" என்றதனை, "ஈளே" என்னுமாறுபோலே, கருடன் என்பது 'கருவான்' என வந்தது. அன்றிக்கே, 'கருள்' என்று கறுப்பாய், அது சீற்றமாய், பகைவர்கள்மேலே சீற்றத்தையுடையவன் என்னுதல். [6]"கருளுடைய பொழில் மருதும் " என்னக்கடவதன்றே. எம் கார் முகில் வண்ணு - என்பக்கலிலே ஔதார்யத்தைச் செய்தவனே! [7]பெரிய உன் உயர்த்தி பாராவிட்டால் ஔதார்யம் செய்கிற இடத்தைத்தான் பார்த்தாயோ. என்னளவு பாராதே பிரயோஜனத்தில் விருப்பமில்லாமல் செய்தபடி. செய்த ஔதார்யம் ஏது? என்ன, பொருளல்லாத என்னைப் பொருளாக்கி - வஸ்து முன்பே உண்டாய், அதற்கு ஓர் உயர்வினைச்

---

1. " அருளார் திருச்சக்கரம் " என்பது, திருவிருத்தம்.

2. மேலே கூறிய இரண்டினையும் கடாக்ஷித்து, ரஸோக்தியாக அருளிச் செய்கிறார் ' ஒன்று எடுக்கவும் ' என்று தொடங்கி.

3. மேலே, மேன்மைக்குக் காரணமாகச் சொன்ன அர்த்தத்தை விவரணம் செய்கிறார் ' ஆக ' என்று தொடங்கி.

4. ஒன்றனைச் சொல்லுதலே போதியதாக இருக்க, மூன்றனையும் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ' இவை ஓர் ஒன்றே ' என்று தொடங்கி.

5. கருளப்புள்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

6. பெரியாழ்வார் திருமொழி. 4. 9: 3.

7. " எம் " என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ' பெரிய உன் ' என்று தொடங்கி. அதனை, விவரணம் செய்கிறார் ' என்னளவு பாராதே ' என்று தொடங்கி.

செய்துவிட்டாயோ; [1] "இறைவனைப் பற்றிய ஞானமில்லாதவன் இல்லாதவனாக ஆகிறான்" என்று அன்றே அங்கீகாரத்திற்கு முன்பு இருந்தது, இப்போது ஒருவஸ்துவாக்கி, "இறைவனைப் பற்றிய ஞானமுள்ளவனை உள்ளவன் என்று அறிகிறார்கள்" என்று உஜ்ஜீவிக்கும்படி செய்தாய். அடிமைகொண்டாய் - [2] "பெருமக்கள் உள்ளவர்" என்கிறபடியே, நித்ய சித்தர் செய்யக்கூடிய கைங்கர்யத்தை அன்றே என்னைக் கொண்டது. [3] உண்டாக்கின அளவேயோ, ஜீவனமும் இட்டிலையோ என்கிறார். "கார்முகில்" என்றது, பலித்தபடி. 'அடிமைகொண்டாய்' என்கிறது, "அடிதொழுது எழு" என்னச் செய்த அவ்வளவை அன்றே. மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் இப்படிச் சொல்லுகையாலே, தம்மைத் தாழ்த்திக் கூறல் ஞானகார்யம்; "ஈஸ்வரோகம்-நான் பெரியவன்" என்றிருக்கை அஜ்ஞான கார்யம் என்பது பெறப்படும்.

தெருள்கொள் நான்மறை வல்லவர் - சிறந்த ஞானத்தையுடையராய்க்கொண்டு, நாலுவகைப்பட்ட வேதங்களையும் தாங்கள் நினைத்தபடி நிர்வஹிக்கவல்லவர்கள். என்றது, தெரியும்படி வேத தாத்பர்யம் கைவந்தவர்கள் என்றபடி. பலர்-ஒருவர் இருவர் அன்றிக்கே ஸ்ரீ வைகுண்டம்போலே திரள்திரளாயிருக்கை. வாழ் - வேதப்பொருளாய் விளங்குமவனைக் கண்டு அநுபவிக்கிறவர்கள். [4] புண்ணிய தீர்த்தங்களிலே வசிக்கிற

---

1. ஆனால், இவர் வஸ்து அலரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இறைவனைப்பற்றிய' என்று தொடங்கி.

"அஸந்நேவஸபவதி அஸத்ப்ரஹ்மேதி வேதசேத்
அஸ்திபிரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோவிதுஃ"

என்பது, தைத்திரீய. ஆனந். 6.

2. திருவாய்மொழி. 3. 7: 5.

3. "அடிமைகொண்டாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உண்டாக்கின அளவேயோ' என்று தொடங்கி. '"கார்முகில்" என்றது, பலித்தபடி' என்றது, மேகம் ஜீவனத்தைக் கொடுக்குமன்றே என்பதனைத் தெரிவித்தபடி.

4. "தெருள்கொள் நான்மறை வல்லவர்" என்று ஞானத்தைச் சொல்லி, "வாழ்" என்று அநுபவத்தைச் சொல்லுவது என்? திவ்யதேச வாசம் தானே உஜ்ஜீவனத்திற்குக் காரணம் அன்றே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'புண்ணிய தீர்த்தங்களிலே' என்று தொடங்கி.

"கங்காதி தீர்த்தேஷு வஸந்தி மத்ஸ்யாஃ
தேவாலயே பக்ஷிஸங்காஃ சகித்யம்
பாவோஜ்ஜிதாஃ தே ந பலம் ல பந்தே
தீர்த்தாநி புண்யாயதநாஃ ச முக்யாஃ"

என்பது, இங்கு நினைத்தல் தகும்.

பிராணிகளுக்குப் பாவம் போகிறது இல்லை அன்றே, ஞானம் இல்லாமையாலே; அங்ஙன் அன்றிக்கே, ஞானமும் அதனோடு சேர்ந்த செயலுமுடையராயிருக்கை. சிரீவரமங்கல நகர்க்கு அருள்செய்து அங்கு இருந்தாய் - சிரீவரமங்கல நகரிலுள்ளார் விரும்பாமல் இருக்கவே, அவர்கள்பக்கல் தண்ணளியாலே வந்திருந்தவனே! இதனால், [1] அங்குள்ளார்க்குத் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கிற இருப்பு, தன்பேறாக இருக்கிற படி. அன்றிக்கே, [2] என்னை அடிமைகொள்ளுகைக்காக அங்கே வந்திருந்தாய் என்றுமாம். [3] 'கைங்கர்யத்தளவும் வர நிறுத்தினேம், இனி அதற்குப் பிரிவு வரவொண்ணாது' என்று அங்கே வந்திருந்தாய். ஒரு கைம்மாறு அறியேன் - நீ இவ்வளவாக உபகரித்துநின்ற இதற்கு, நான் ஒன்று செய்தேனாக அறிகின்றிலேன். [4] இதற்கு முன்னர் உதவிசெய்ததற்கு ஒரு காரணம் என்பக்கலிலே உண்டு என்று சொன்னோமாதல், இனியும் நீயே நிர்வஹித்தாயாதல் செய்யவேணும். [5] 'நீர் உள்ளீராகையாலே செய்தோம்' என்றும் சொல்லலாவதில்லை உன்னால், பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அன்றே அடிமைகொண்டது. (3)

## 512.

மாறு சேர்படை நூற்றுவர் மங்கலர் ஐவர்க் காயன்று மாயப் போர்பண்ணி
**நீறுசெய்த எந்தாய்! நிலம்கீண்ட அம்மானே!**
**தேறு ஞானத்தர் வேத வேள்வி அரூர்சிரீவர மங்க லநகர்**
**ஏறிவீற் றிருந்தாய்! உனை எங்ஙனேயத்தக் கூவுவனே?**

---

1. நகரிலுள்ளார்க்கு அருள்செய்திருந்தால், தமக்கு வந்தது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அங்குள்ளார்க்கு' என்று தொடங்கி.

2. இரண்டாவது பொருளில், சிரீவரமங்கலநகரான அங்கே என்று கொள்க. அப்பொழுது, நான்காம் வேற்றுமையுருபிற்குப் பொருள் இல்லை.

3. "அடிமைகொண்டாய்" என்று மேலே சொல்லியிருக்க, இங்கு, அடிமை கொள்ளுகைக்காக வந்திருக்கையாவது எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கைங்கர்யத்தளவும்' என்று தொடங்கி.

4. ஆகில், செய்ய அடுப்பது எது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'இதற்கு முன்னர்' என்று தொடங்கி. என்றது, நீ செய்ததற்குப் பிரதியுபகாரம் அறியேன் என்கையாலே, இனியும் நீயே செய்யவேண்டும் என்பது கருத்து.

5. 'காரணம் இல்லை' என்பது என்? 'நீர் உள்ளீராகையாலே செய்தோம்' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீர் உள்ளீராகில்' என்று தொடங்கி.

**பொ - ரை:**—பகைவர்களாகச் சேர்ந்த சேனையையுடைய துரியோதனன் முதலிய நூறுபேர்களும் அழியும்படி, தனியான பஞ்ச பாண்டவர்களுக்காக வஞ்சனையையுடைய போரைச் செய்து சாம்பலாகச் செய்த என் தந்தையே! பிரளயம்கொண்ட பூமியை எடுத்து வந்த அம்மானே! தெளிந்த ஞானத்தையுடையவர்களுடைய வேத ஒலியும் யாகங்களும் நீங்காமல் இருக்கின்ற ஸ்ரீவரமங்கல நகரிலே குடிஏறி வீற்றிருந்தவனே! உன்னை அடைவதற்கு எந்த விதமான முயற்சியைச் செய்வேன்?

**வி - கு:**—மாயப் போர் பண்ணி நூற்றுவர் மங்க நீறுசெய்த எந்தாய் என்க. ஞானத்தருடைய வேதமும் வேள்வியும் என்க. உன்னை எய்த எங்குக் கூவுவன்? 'ஓர்' என்பது, வேறு துணை இன்மையைக் காட்டவந்தது.

**ஈடு:**—நான்காம்பாட்டு. [1]'வெறும் உன்கிருபையாலே காத்தருளவேண்டும்' என்னுகின்றீர், நாம் இதற்குமுன்னர் அங்ஙனம் செய்த இடம் உண்டோ? என்ன, ஒன்று இரண்டு உதாஹரணங்களை எடுத்துக்காட்டி, இங்ஙனே செய்தது இல்லையோ, எனக்கும் செய்தருளவேண்டும் என்கிறார்.

மாறு சேர் படை நூற்றுவர் - [2]பகைவர்களாய்க்கொண்டு வந்து சேர்ந்த படையையுடைய நூற்றுவர். [3]துரியோதனுதியர் கட்குத் துணையாளராய் வருகை அன்றிக்கே, தனித்தனியே பகைவர்களாய் வந்து கிட்டினர்களாதலின் '**மாறுசேர்**' என்கிறது. [4]அன்றிக்கே, படையோடு கூடிப் பகைவர்களாய்ச் சேர்ந்த நூற்றுவர் என்றுமாம். "பகைவனுடைய சோற்றைப்

---

1. "ஐவர்க்காய்" என்பது போன்றவைகளையும், "நிலங்கீண்ட அம்மானே" என்றதனையும் கடாகூடித்து, விளவும் விடையுமாக அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "மாறுசேர்" என்பதனைப் "படைக்கு" அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்கிறார் 'பகைவர்களாய்க் கொண்டு' என்று தொடங்கி.

3. துரியோதனன் முதலானோர்கட்குத் துணையாக வந்தவர்களாகையாலே இவர்களும் பகைவர்கள் என்பது, தானே போதருமேயன்றோ? அங்ஙனமிருக்கவும், "மாறுசேர்" என்று விசேடிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'துரியோதனுதியர்கட்கு' என்று தொடங்கி.

4. 'அன்றிக்கே' என்று தொடங்கிக் கூறும் பொருளில், "மாறுசேர்" என்பது, "நூற்றுவர்க்கு" அடைமொழி. 'பகைவர்களாய்' என்றது, கிருஷ்ணனுக்குப் பகைவர்களாய் என்றபடி. துரியோதனன் முதலானோர், கிருஷ்ணனுக்குப் பகைவர்களோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகைவனுடைய' என்று தொடங்கி.

புகிக்கலாகாது" என்கிறபடியே, தனக்குப் பகைவர்களாக நினைத்திருக்கிறபடி. மங்க - மாள. [1]விளக்குப்பிணம் போலே காணஒண்ணுதவாறு செய்தபடி. ஓர்ஐவர்க்காய்-இரண்டு பக்கங்களும் ஒத்திருக்க, [2] ஒருதலையிலே நின்றுயத்தனை அன்றே. [3] உளனை ஒரு சாதியும்கூட முதன்மையற்றவனும்படி தனியரான ஐவர் ஆதலின், 'ஓர்ஐவர்' என்கிறது. ஐவர்க்காய் - [4]அவர்களுக்குத் தன்னை வேண்டியவாறு உபயோகப்படுத்திக் கொள்ளவைத்தபடி. அன்று - போரிலே நோக்குள்ளவர்களாய் வந்த அன்று. மாயம் போர் பண்ணி - ஆச்சரியமான போரைச்செய்து. அன்றிக்கே, வஞ்சகமான போரைச்செய்து என்னுதல். என்றது, பகலே இரவாக்கியும், 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுத்தும், பகைவர்களுடைய உயிர்நிலையைக் காட்டிக்கொடுத்தும் செய்தமையைத் தெரிவித்தபடி. நீறு செய்த - [5]"கூரும் நீரும் நிலனுகி" என்கிறபடியே, சாம்பல் ஆக்கின. எந்தாய் - எந்தையே! பாண்டவர்களுக்காகத் தூரி

---

"த்விஷதர்தம் ந போக்தவ்யம் த்விஷதர்தம் நைவ போஜயேத்
பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம பிராணுஹி பாண்டவாந்"

என்பது, பாரதம். இது, தூரியோதனனைப்பார்த்துக் கிருஷ்ணன் கூறியது.

"என்னினின்னில் ஒரு", "அரவமல்கியபதாகையாய்" என்ற வில்லி பாரதச் செய்யுட்கள் ஈண்டு ஒருபுடை நோக்கலாகும். (கிருஷ்ணன் தூது. 108, 109.)

1. விளக்குப் பிணம் - இருட்டு.

2. 'ஒரு தலையிலே நின்றுயத்தனையன்றே' என்றது, இரண்டு பக்கமும் ஒத்த பலமுடைத்தாயிருக்க, கேவலம் கிருபையாலே, தாழ்ந்த தலையிலே நின்றுயத்தனையன்றே என்றபடி.

3. "ஓர் ஐவர்" என்பதற்கு, தனியரான ஐவர் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி, கிருஷ்ணன் இல்லையோ? என்ற சங்கைக்கு, விடை அருளிச்செய்கிறார் 'உளனை ஒரு சாதியும்' என்று தொடங்கி. 'முதன்மையற்றவனும்படி' என்றது, 'போரிலே ஆயுதம் எடேன்' என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

4. "ஆய்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவர்களுக்கு' என்று தொடங்கி.

5. "கூரும் நீரும் நிலனுகி" என்றது, திருவாய். 6. 10: 2.

'கூரும் நீரும் நிலனுகி - முற்பட இருதுண்டமாக்கி, பின்பு நீருக்கி, பின்னைத் தறையாக்கும். இப்பொருள் தன்னையே 'சாம்பலாக்கின' என்கிறார்.

யோதனுதியர்களை அழித்ததும் தம்பேரில் இருக்கிறபடி. நீர் சொல்லுகிறவை எல்லாம் செய்தமை உண்டு, ஆனாலும், அவர்கள் எனக்கு பவ்யர்அலரோ என்ன, ஆயின், [1] அதுவும் பாராதேஅன்றே நீ பூமியைக் காப்பாற்றியது என்கிறார்மேல்:

நிலம் கீண்ட அம்மானே - [2] அது கிடக்கிடு வேணுமாகில், அதற்கு ஒன்று சொல்லுகிறாய்; பிரளயம்கொண்ட இப்பூமிக்கு என்ன தக்கோர்மை இருந்தது நீ செய்வதற்கு? [3] 'எடுக்க வேணும்' என்ற விருப்பமும் இல்லாமல், செய்ந்நன்றி யறிதலும் இல்லாமல் இருக்கிற இந்தப்பூமிக்கு உதவிசெய்தாயில்லையோ? இங்கு ஒருதலையேஅன்றே உள்ளது. அம்மானே - 'உடைமை இழக்கஒண்ணாது' என்று, வெறும் உன் கிருபையாலே செய்த இத்தனைஅன்றே. தேறு ஞானத்தர் வேத வேள்வி அரு - [4] அநுஷ்டானத்தையும் அநநுஷ்டானத்தையும் விகல்பிக்கலாம்படி தெளிந்திருக்குமவர்கள். அநநுஷ்டானம் சாதனம் ஆகாதேஅன்றே. 'விலக்கிய ஒழுக்கங்கள் நமக்கு ரக்ஷகம்ஆகா' என்றிருக்குமாறுபோன்று, 'விதித்த ஒழுக்கங்களும் நமக்கு ரக்ஷகம் ஆகா' என்றிருக்குமவர்கள்.

---

1. அதுவும் - பவ்யதையும்.

2. 'அதுவும் பாராதே' என்றதனை, வேறு வகையாக விவரிக்கிறார் 'அது கிடக்கிடு' என்று தொடங்கி. அது கிடக்கிடு - அது நிற்க. தக்கோர்மை - நன்மை.

3. "நிலம்" என்ற சொல்லைக் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எடுக்கவேணும்' என்று தொடங்கி. 'இங்கு ஒரு தலையேயன்றே உள்ளது' என்றது, கிருஷ்ணனும் பாண்டவர்களுமான இரண்டு தலையிலும் நிகேகம் உண்டு அங்கு; இங்கு, அசேதனமான பூமிக்குப் பவ்யதை இல்லாமையாலே, வராக நாயனாருடைய நிகேகமே உள்ளது என்றபடி.

4. "தேறு ஞானத்தர்" என்பதனை, "வேத வேள்வி அரு" என்பதற்கு அடையாக்கி அருளிச்செய்கிறார் 'அநுஷ்டானத்தையும்' என்று தொடங்கி. வேள்வி - பஞ்ச மஹா யஜ்ஞங்கள். ஞானத்திற்குத் தேற்றமாவது, வேத வேள்விகளில் உபாயத்வபுத்தி கலவாதிருத்தல். விகல்பிக்கலாம்படி - சமமாக விகல்பிக்கலாம்படி. என்றது, விலக்கிய ஒழுக்கங்களில் உபாயபுத்தி செய்யாததைப் போன்று, விதித்த வேதத்திலும் வேள்வியிலும் உபாயபுத்தி பண்ணாதவர்கள் என்றபடி. அநநுஷ்டானம் - விலக்கிய ஒழுக்கங்கள். நாலாம் பத் காண்க.

ஆலே, இவற்றைச்செய்வது என்? என்னில், [1] சர்வேசுவர னுடைய ஆணையைச் செய்வதன் ஆகிறன். அன்றியும், விலக்கிய ஒழுக்கங்கள் இராசத தாமத குணங்களை வளர்ப்பிக்கு மாறுபோலே, விதித்த ஒழுக்கங்களும் சத்துவ குணத்தை வளர்ப்பிக்கக்கூடியனவாய் இருப்பனவே அன்றே. அன்றியும், [2] சேதனன் ஆகையாலே ஒருதொழிலேச் செய்தன்றி நில்லானே. [3] "சத்துவகுணத்தினின்றும் ஞானம் உண்டாகின்றது" என்கிறபடியே, ஞானத்துக்கும் காரணமாக இருக்குமேஅன்றே, ஆகையாலே, அநுஷ்டிக்கத் தக்கனவாகக் கடவனவேயாம். சிரீவரமங்கல நகர் ஏறிவீற்றிருந்தாய் - [4] இவனும் அவர்களிலே ஒருவனுய் ஒருசேரக் குடி ஏறி இருக்கிறபடி.' இவர்கள் நடுவே இருக்கப்பெற்றேமே' என்று பெரும் பேறு பெற்றனுய் இருக்கிறபடி. உன்னை - வேறு உபாயங்களாலே அடையமுடியாதவனுன உன்னை. [5] எங்கு எய்தக் கூவுவன் - நீ இவ்விருப்பு இருக்கைக்கு நான் செய்தது ஏதேனும் சாதனம் உண்டாகில் அன்றே என்பேற்றுக்கு நான் ஏதேனும் செய்வது. என்றது, இவ்வளவாகச் செய்த நீ இனியும் உன்கிருபையாலே செய்தருளவேணும் என்றபடி. (4)

---

1. வேத வேள்வி யறமல் செய்துகொண்டு போவதற்குக்குரிய காரணத்தை மூன்று வகையாக அருளிச்செய்கிறார் 'சர்வேசுவரனுடைய' என்று தொடங்கி. இம்மூன்றனுள், ஈசுவரனுடைய ஆணையைச் செய்தவனுகிறன் என்றது ஒன்றும் பிரதானமாய், மற்றைய இரண்டும் ஞானயோக நிஷ்டனுக்குச் சொன்னவையாகையாலே, அவ்விரண்டனையும் திருஷ்டாந்தமாகக் கோடல் தகும்.

2. காரியங்களைச் செய்வதற்குரிய உறுப்புக்களையுடையவனுகையாலே யாதாயினும் ஒருதொழிலேச் செய்தன்றி நில்லானே என்றபடி.

3. கூறிய மூன்று காரணங்களுள் இரண்டாவது காரணத்தால் பயன் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சத்துவகுணத்தினின்றும்' என்று தொடங்கி.

"ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் ரஜஸோ லோப ஏவ ச
ப்ரமாத மோஹௌ தமஸோ பவதோ அஜ்ஞானமேவச"

என்பது, ஸ்ரீ கீதை. 14 : 17.

4. "ஏறி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவனும்' என்று தொடங்கி. "வீற்றிருந்தாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர்கள் நடுவே' என்று தொடங்கி.

5. "எங்கு எய்தக் கூவுவன்" என்பதற்கு, உன்னைக் கிட்டுவதற்கு என்ன சாதனத்தைச் செய்யப்புகுகிறேன் என்பது பொருள். கூவுதல் - சாதன அநுஷ்டானத்தாலே அழைத்தல்.

## 513.

எய்தக் கூவுதல் ஆவ தேஎனக்கு? எவ்வ தேவ்வத்துளாயு மாய்நின்று
கைதவங்கள் செய்யும் கருமேனி அம்மானே!
செய்த வேள்வியர் வையத் தேவர் அருச்சிரீவர மங்கலநகர்
கைதொழ இருந்தாய் அதுநானும் கண்டேனே!

**பொ - ரை :**—பேற்றினைப் பெறுதற்கு நான் உன்னை அழைத்தல் எனக்குத் தகுதியாகுமா? எவ்வகைப்பட்ட பகைவர் கூட்டத்துள் நீயும் ஒருவனாகச் சேர்ந்து புத்தமுனியாய் நின்று வஞ்சகமாகக் காரியங்களைச் செய்த கரியமேனியையுடைய அம்மானே! ஐவகையான யாகங்களைச் செய்தவர்களும் பூதேவர்களுமான ஸ்ரீ வைஷ்ணவர்கள் நீங்காமல் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீவரமங்கலநகரிலே எல்லாரும் கைகூப்பி வணங்கும்படியாக எழுந்தருளியிருக்கின்றாய்; அதனை அடியேனும் கண்டேன்.

**வி - கு :**—எய்தக் கூவுதல் எனக்கு ஆவதே என்க. தெவ்வத்துள் : தெவ் - பகை. அத்து: சாரியை. உள்: ஏழாம் வேற்றுமை உருபு. நின்று செய்யும் அம்மான் என்க. வையத்தேவர் - நிலத்தேவர்; ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

**ஈடு :**—ஐந்தாம்பாட்டு. [1]அடியார்கள் பக்கலிலே நாம் வைத்திருக்கும் பக்ஷபாதத்தையும் சிரீவரமங்கலநகரில் இருப்பையும் உமக்குக் காட்டினோமே, "எங்கு எய்தக் கூவுவன்" என்று ஒன்றும் பெருதாரைப்போன்று கூப்பிடாநின்றீரே என்ன, செய்த அம்சத்தை அறிந்தேன், அதனாலே நிறைவுபெற்றவன் ஆகின்றிலேன் என்கிறார்.

எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு - [2]பொகடு, அது கிடக்

---

1. "கைதவங்கள் செய்யும் கருமேனி அம்மானே! சிரீவரமங்கலநகர் கைதொழ இருந்தாய்" என்பன போன்றவைகளைக் கடாகூவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "அது நானும் கண்டேனே" என்றதனைத் திருவுள்ளம் பற்றிச் 'செய்த அம்சத்தை அறிந்தேன்' என்கிறார்.

2. மேல் திருப்பாசுரத்தில் "எங்கு எய்தக் கூவுவனே" என்று சாதன அநுஷ்டானம் செய்யப் போகாது என்றவர், மீளவும், "எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு" என்று கூறுதல், கூறியது கூறல் ஆகாதோ? என்ன, மேலே பேற்றுக்குச் சாதன அநுஷ்டானம் செய்யவேண்டுவதில்லை என்றார். இங்கே, அஜ்ஞான அசக்திகளாலே சாதன அநுஷ்டானம் செய்யமாட்டேன் என்னுமதனைக் குறிப்பால் உணரும்படியாக அருளிச்செய்கிறாராகையாலே கூறியது கூறலாகாது என்கிறார் 'பொகடு' என்று தொடங்கும் வாக்கியத்தாலே. 'பொகடு' என்ற சொல்லின் விவரணம், 'அது கிடக்கிடாய்' என்பது. அது கிடக்கிடாய் - சாதன அநுஷ்டானம் செய்யவேண்டும்

கிடாய்,[1] இந்தத் திருமகள்கேள்வனைக் கண்ட உனக்கு 'இவன் சாதன அநுஷ்டானம் பண்ணுவான்' என்று தோற்றி இராதோ.[2] உன்னிலும் என்னை நான் அறிவேனே அன்றே! என்னல் செய்யலாவது உண்டோ என்று கேட்கிறார்,[3] 'அவனலே பேறு என்றிருக்குமவர் ஆகையாலே'; நீ கைவிட்ட அன்று நான் அநுஷ்டிக்கும்படி, திருமகள் கேள்வனை உன்னோடு ஒக்க விகல்பிக்கலாம்படி இருந்தேனே என்கிறார். எய்தக் கூவுதல் ஆவதே - நீ எனக்குக் கைப்படும்படியாக விரும்புதல் ஆவதே. எனக்கு - வலி இல்லாதான் ஒருவன் தலையிலே ஒரு மலையை வைத்தாற்போலே இருக்கிறதுகாணும் இவர்க்கு. "என்னை வணங்குவாய்" என்றல், பின்னர் இல்லையாவரே அன்றோதான்.[5] இனி, பிரபலனையிருப்பான் ஒருவன் அதனைத்

---

என்பது கிடக்கட்டும். என்றது, நிர்ஹேதுகமாகச் சிரீவரமங்கல நகரிலே இருந்தாயாகையாலே பேற்றிற்குச் சாதன அநுஷ்டானம் செய்யவேண்டுவதில்லை என்பது கருத்து.

1. அநுஷ்டிக்கத்தான் வேண்டினலும், அஜ்ஞானத்தாலும் அசக்தியாலும் அநுஷ்டிக்கமாட்டேன் என்னுமதனைக் குறிப்பாக அருளிச்செய்கிறார் 'இந்தத் திருமகள் கேள்வனை' என்று தொடங்கி. "எனக்கு" என்றதிலே நோக்காக, இங்ஙனம் அருளிச்செய்கிறார். 'இந்தத் திருமகள் கேள்வனை' என்றது, விபரீதலக்ஷணையாலே 'என்னை' என்பதனைக் குறித்தபடி.

2. உம்முடைய அசக்தி நமக்குத் தெரியுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உன்னிலும்' என்று தொடங்கி. இதுவும் குறிப்புப் பொருள். என்றது, முற்றறிவினனான நீ அறியாததனை நான் அறிவேனே? என்றபடி.

3- மேலே குறிப்பால் கூறிப் போந்த அஜ்ஞான அசக்திகளை வெளிப்படையாக அருளிச்செய்கிறார் 'அவனலே பேறு' என்றி தொடங்கி.

4. அப்படி, மலையை வைத்தாற்போலே இருக்குமோ? என்ன, வியாக்யாதாவின் ஈடுபாடு, 'என்னை வணங்குவாய்' என்று தொடங்கும் வாக்கியம்.

"மன்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாமேவ ஏஷ்யஸி யுக்த்வா ஏவம் ஆத்மானம் மத் பராயணஃ"

என்பது, ஸ்ரீ கீதை. 9 : 34. 'இல்லையாவரே அன்றோதான்' என்றது, சத்தை இல்லையாய் விடுவார் என்றபடி.

5. மேலிற் பதத்திற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இனி, பிரபலனுய்' என்று தொடங்கி. 'இனி' என்றது, உபாயத்தைச் செய்வதற்குத் தகுதியில்லையாயின பின்பு என்றபடி. 'அதனைத்தள்ளி' என்றது, 'சாதன அநுஷ்டானம் பண்ணமுடியாதவன் இழந்தேபோமித்தனை' என்கிற சோகத்தைத் தள்ளி என்றபடி. ஆக, சித்தோபாயனான சர்வேசுவரனுடைய சக்தியைச் சொல்லி, இப்படிச் சக்திமானான நீயே உபாயமான பின்பு இழக்க வேண்டுவது இல்லை என்கைக்காக, சாதன அநுஷ்டானம் பண்ணமாட்டேன் என்றதன்பின், அசுரர்களின் கூட்டத்தை வஞ்சித்த வகையை அருளிச்செய்கிறார் என்றபடி.

தள்ளி 'அஞ்சாதேகொள்' என்னவேண்டுமே அன்றே, ஆகை யாலே, அவன், பகைவர்களை அழித்த தன்மையை அருளிச் செய்கிறார் மேல்: எவ்வ தெவ்வத்துளாயும் ஆய்நின்று கைத வங்கள் செய்யும் கருமேனி அம்மானே - [1] அடியர் அல்லாதார் பக்கல் செய்வதனை, வேறு கதியற்றவர்களாயிருக்கின்ற அடி யார் பக்கலிலும் செய்யப் புக்கதோ இப்போது. எவ்வ தெவ் வத்துளாயும்ஆய்நின்று - எவ்வகைப்பட்ட பகைவர்கள் கூட் டங்களினுள்ளே புக்கு. தெவ்வர்-பகைவர். தெவ்வம்-பகைவர் கூட்டம். [2] "தெவ்வர் அஞ்சு" என்னக்கடவதன்றே. கை தவங்கள் செய்யும்-வஞ்சகங்களைச் செய்கின்ற. என்றது, புத்த முனியாய்அவர்கள் நடுவே புக்குநின்று அவர்களுக்குண்டான வைதிகசிரத்தையைப் போக்கினமையைத் தெரிவித்தபடி. கைதவங்கள் செய்யும் கருமேனி அம்மானே-வசனங்களாலும் யுக்திகளாலும் வஞ்சகங்களைச்செய்து வைதிகசிரத்தையைப் போக்கி, அவ்வளவிலும் கேளாதார்க்கு வடிவைக்காட்டி வாய்மாளப் பண்ணினபடி. என்றது, [3] தன்னுடைய வார்த்தை களாலே அவர்களைச் சவப்பிராயராக்கி, ஒருவன் அம்புக்கு இலக்காம்படி செய்துவைத்தமையைத் தெரிவித்தபடி. அம் மானே - சம்பந்தம் ஒத்திருக்கச்செய்தே, நீ அவர்களை அழி யச்செய்தது [4] அடியார்களுக்காக அன்றே? [5] 'ஒருதெய்வம்

---

1. அவதாரிகையிலே விரோதியை அழிப்பதற்கு உறுப்பாக அருளிச் செய்து, இங்கே, அவர்களை வஞ்சித்தாற்போலே; என்னையும் வஞ்சித்தாய் என்று வெறுப்பாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அடியரல்லா தார்' என்று தொடங்கி. என்றது, அவர்களுக்கு வைதிகச் சிரத்தையைக் குலைத்தாற்போலே, சித்தசாதன நிஷ்டனான என்னுடைய அத்யவஸாயத் தையும் குலைக்கலாமோ இப்போது என்றபடி.

2. தெவ்வர் - பகைவர் என்பதற்கு, மேற்கோள், 'தெவ்வர் அஞ்சு' என்பது. இது, பெருமாள் திருமொழி. 10 : 3.

3. திரிபுரங்களை அழித்தது சிவன் அலனே? இவன், பிணமாக்கின படி எப்படி? என்ன, 'தன்னுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஒருவன் - சிவபெருமான்.

"செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்லுயர் சென்னி இமயவில் நாணுகித்
தொல்புகழ் தந்தாரும் தாம்"

என்பது, பரிபாடல்.

4. 'அடியார்களுக்காக அன்றே' என்றதற்குக் கருத்து, அம்மானுய் வைத்தும், ஆஸ்ரித பக்ஷபாதத்தாலே அவர்களை அழித்த நீ, அடியனான என்னையும் அழிக்கலாமோ? என்பது.

5. உம்மை நாம் அழித்தேமோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'ஒரு தெய்வம்' என்று தொடங்கி. 'ஒரு தெய்வம் இல்லை' என்ற

உண்டு'என்று இருக்கின்றவர்களை அழித்ததைப் போன்றதே அன்றே, 'ஒரு தெய்வம் இல்லை' என்றிருக்கிற என்னை ஒன்று செய்யச்சொல்லுகையாவது. "ஒரு மா தெய்வம் மற்றுடை யமோ யாமே" என்றதே அன்றே இவர். அவர்களுடைய வைதிக சிரத்தையை அழித்தாற்போலே இருக்கிறதாயிற்று, சித்த சாதனத்தைப் பற்றி இருக்கின்ற தன்மையினின்றும் நெகிழ்த்துச் சாதனத்திலே மூட்டுகிற இது.

செய்த வேள்வியர் - சித்தோபாய நிஷ்டர்கள். [1] "அரசனே! எந்தப் பிராஹ்மணர்கள், கிருஷ்ணனை உள்ளபடி அறிகின்றார்களோ அந்தப் பிராஹ்மணர்களுக்கு எல்லா யாகங்களும் முடிந்தவைகள் ஆகின்றன" என்றதே அன்றே. [2]வேறு ஒன்று செய்யுமவனுக்கும் குறை கிடப்பதும் ஓர் அம்சம் உண்டே அன்றே. சித்தோபாய நிஷ்டர்கள் செய்யவேண்டுமவற்றை எல்லாம் செய்து முடித்தவர்கள் அலரோ. வையத் தேவர் - பூசுரர். அரசர் சிரீவரமங்கல நகர் கைதொழ இருந்தாய் - அவர்கள் நித்தியவாசம் செய்கிற ஸ்ரீவரமங்கல நகரிலே அங்குள்ளவர்கள் அடிமைசெய்ய, அதுவே தாரகமாக இருந்தாய். அது நானும் கண்டேன் - [3] ஸ்ரீவைகுண்டத்தைக் கல விருக்கையாகவுடைய நாம் இங்கே வந்து உமக்காக இருக்க, ஒன்றும் செய்திலோமாகச் சொன்னீரே? என்ன, இருந்தாய், அதில் தடை இல்லை, நான் அநுபவித்த அம்சத்தை இல்லை

---

லிடத்தில், 'உன்னைத் தவிர' என்பது எஞ்சி நின்றது. சர்வேசுவரனைத் தவிர, வேறு தெய்வம் இல்லை என்று இருப்பவர் இவர் என்பதற்கு, மேற்கோள் காட்டுகிறார் 'ஒரு மா தெய்வம்' என்று தொடங்கி. இது, திருவாசிரியம். 7.

1. "செய்த வேள்வியர்" என்றல், சித்தோபாய நிஷ்டரைச் சொல்லுமோ? என்ன, அர்த்த ஔசித்தியத்தாலே சொல்லும் என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அரசனே' என்று தொடங்கி.

"ஸர்வே வேதாஃ ஸர்வ வித்யாஃ ஸசாஸ்த்ராஃ
ஸர்வே யஜ்ஞாஃ ஸர்வ இஜ்யஸ்ச கிருஷ்ணஃ
வித்துஃ க்ருஷ்ணம் ப்ராஹ்மணஃ தத்த்வதஃ யே
தேஷாம் ராஜன் ஸர்வயஜ்ஞாஃ ஸமாப்தாஃ"

என்பது, பாரதம்.

2. அர்த்த ஔசித்தியத்தைக் காட்டுகிறார் 'வேறு ஒன்று' என்று தொடங்கி.

3. "நானும்" என்ற உம்மையின் பொருளை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ வைகுண்டத்தை' என்று தொடங்கி,

செய்கிறேன் அல்லேன்; அநுபவித்த அம்சம் போராமல் படு கிறேன். என்றது, தேவர் செய்தருளின அம்சம் இவ்வளவு உண்டு, அதில் குறை இல்லை, எனக்கு அவ்வளவால் போராது என்கிறார் என்றபடி. திருவடிகளில் கைங்கரியமே யாத்திரை யாகப் பெறவேண்டும் என்பது அவாய்நிலை. (5)

## 514.

**ஏன மாய்நிலம் கீண்ட என் அப்ப னே!கண் ணா!என் றும்எனை ஆளுடை வானநா யகனே ! மணிமாணிக் கச்சுட ரே !**
**தேன மாம்பொழில் தண்சி ரீவர மங்க லத்த வர்கை தோழஉறை வானமா மலையே ! அடியேன்தொழ வந்தருளே.**

**பொ - ரை :**—பிரளயம்கொண்ட நிலத்தை வராகமாகி எடுத்த என்அப்பனே! கண்ணபிரானே ! எப்பொழுதும் என்னை அடிமையாக ஆளுகின்ற தெய்வநாயகனே ! அழகிய மாணிக்கத்தினது சுடரே! தேனையுடைய மாமரச்சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த ஸ்ரீவரமங்கலத் திலிருப்பவர்கள் கைகூப்பி வணங்கும்படியாக எழுந்தருளியிருக்கின்ற வானமாமலையே! அடியேன் வணங்கும்படி வந்தருள்வாயாக என்கிறார்.

**வி - சூ :**—ஏனம் - பன்றி. தேன - தேனையுடைய. அ : ஆறும் வேற்றுமையுருபு. மாம்பொழில் - மாமரச்சோலை. உறை - வசிக்கின்ற.

**ஈடு :**—ஆறும்பாட்டு. [1] மேற்பாசுரத்தில் அவாய்நிலையாற் போந்த கைங்கரியத்தை விரும்புகிறார் இப்பாசுரத்தில்.

ஏனமாய் நிலம் கீண்ட - ஆபத்தை அடைந்தவர்கள் அறி விக்கையும் மிகையாம்படி அன்றே உன்படி இருப்பது. காத் தல் ஒருதலையானால் உன்னைப் பேணுதவன் அன்றே என்ற படி. ஏனமாய் நிலம்கீண்ட என்அப்பனே **கண்ணா** - பிரளயம் கொண்ட பூமியை மஹா வராஹமாகி எடுத்தாய், சம்சார பிர ளயம்கொண்ட என்னை ஸ்ரீகிருஷ்ணனாய் எடுத்தாய். ஏனமாய் நிலம்கீண்ட **என்அப்பனே** - பிரளயத்தாற் கொள்ளப்பட்ட பூமிக்கு உதவிசெய்தது தமக்கு உதவிசெய்ததாயிருக்கிறபடி. என்அப்பனே கண்ணா - [2] என்னைக் காப்பாற்றுவதற்கு ஏதே

---

1. "அடியேன் தொழ வந்தருளே" என்றதனைக் கடாக்ஷித்து அவதா ரிகை அருளிச்செய்கிறார்.

2. "என்னப்பனே கண்ணா" என்பதற்கு, வெறுப்பிலே நோக்காகச் சிலேடையில் வைத்து, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி. முகம் - வேறொரு பிரகாரமும், வராகத்தினது முகமும். தோலும் - வராகமும், அலங்காரமும்.

னும் முகம்பண்ணவேண்டுமோ? என்னைக் காப்பாற்றுவதற்கு ஏதேனும் ஒரு கோலம் கொள்ள வேண்டுமோ. [1] கண்ணன் கோள் இழை வாண்முகமேஅன்றே இவர்க்கு ரக்ஷகம். என்றும் என்னை ஆளுடை வானநாயகனே - [2] தனக்குத் தகுதியானவரோடு இருக்கும்போதும் இவர் இடையாட்டமாயிற்று ஆராய்ந்துபோருவது. இவர் சத்தையே தொடங்கிக் கைதொட்டு நோக்கிக் கொண்டாயிற்றுப் போந்தது. மணிமாணிக்கச்சுடரே-[3]உளரான பின்பு ஓர் ஏற்றம் செய்து கொடுத்தலன்றிக்கே, அடியே பிடித்து நோக்கிக்கொண்டு போந்து, இச்சை பிறந்தவாறே, அவ்வளவிலே நித்தியசூரிகளுக்கு விடும்படியையும் இவர்க்கு விட்டான். மணி மாணிக்கச் சுடர்-[4]இரத்தினங்களுக்குள்ளே சிரேஷ்டமான இரத்தினம் என்னுதல். மணியினுடையவும் மாணிக்கத்தினுடையவும் ஒளியையுடைத்தாயிருப்பவன் என்னுதல்.

தேன மாம் பொழில் தண் சிரீவரமங்கலத்தவர் கைதொழ உறை-தேனையுடைத்தான மாம்பொழிலையுடைத்தாகையாலே சிரமஹரமான சிரீவரமங்கல நகரத்திலுள்ளார், ஸ்வரூபத்திற்குத்தகுதியான கைங்கரியத்தைச்செய்யும்படி இருக்கிற. வான மா மலையே-[5] நித்தியசூரிகளை அடிமைகொண்டிருக்கும் வேண்

---

1. வேறு ஒரு முகம் கொள்ளாமல் ஸ்வாபாவிகமான கிருஷ்ணனுடைய முகமே போருமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "கண்ணன்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி 7. 7: 8.

2. "வானநாயகனுய் வைத்து என்னையாளுடை" என்று பிரித்துக் கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார் 'தனக்குத் தகுதியான' என்று தொடங்கி. இடையாட்டம் - காரியம். "என்றும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர்சத்தையே' என்று தொடங்கி.

3. "என்றும் என்னையாளுடை" என்றதற்கு, அருளிச்செய்த பொருளையும் அநுவதித்துக்கொண்டு, "மணி மாணிக்கச் சுடரே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உளரானபின்பு' என்று தொடங்கி.

4. இரத்தினங்களுக்குள்ளே சிரேஷ்டமான இரத்தினம் - இந்திர நீல மணி. 'மணியினுடையவும், மாணிக்கத்தினுடையவும்' என்ற இடத்தில், மணி - நீலமணி. மாணிக்கம் - பத்மராகம். இருவகைப் பொருளிலும், சுடர் என்பதற்கு, விக்கிரஹம் என்பதுவே பொருள்.

5. வானத்திலே - பரமபதத்திலே, பெரிய மலைபோலே, அளவிடற்கு அரியனுய்க்கொண்டு வீற்றிருந்தாற்போலே, இங்கும் எழுந்தருளியிருக்கிறான் என்று பொருள்கூறத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் 'நித்திய சூரிகளை' என்று தொடங்கி. வேண்டற்பாடு - பெருமை.

டற்பாடுபோலே காணும் இங்குள்ளார் அடிமைசெய்ய இருக்கிற இருப்பும். அடியேன் தொழ வந்தருளே - நான் அடிமை செய்து வாழும்படிக்குத் தகுதியாக வந்து தோற்ற வேண்டும். நான் அடிமைசெய்துவாழும்படிக்குத் தகுதியாக என்முன்னே நடந்துவரவேணும் என்பார் 'வந்தருளே' என்கிறார். என்கண் வட்டத்திலே உலாவிநின்று நீ அடிமை கொள்ளவேண்டும் என்றபடி. [1] அடிமைசெய்கையாவது, "அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி" என்னுமாறுபோலே, அந்த நடை அழகுக்கு மங்களாசாசனம் செய்தல். (6)

## 515.

வந்தருளிஎன் னேஞ்சிடம் கோண்ட வானவர் கோழுந்தே! உலகுக்கோர்
மூந்தைத்தாய் தந்தையே! முழுவேழுலகும் உண்டாய்!
செந்தொ ழிலவர் வேத வேள்வி அரூச்சி ரீவர மங்க லநகர்
அந்தமில் புகழாய்! அடியேனை அகற்றேலே.

**பொ - ரை:**—பரமபதத்தில் நின்றும் வந்து என்நெஞ்சினை இடமாகக் கொண்ட வானவர் கொழுந்தே! இந்த உலகங்கட்கு ஒப்பற்ற பழைமையான தாயும் தந்தையுமானவனே! எல்லா உலகங்களையும் பிரளயகாலத்தில் உண்டவனே! பயன் கருதாத கைங்கர்யத்தையுடைய ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய வேத ஒலியும் யாகங்களும் நீங்காமல் இருக்கிற சிரீவரமங்கல நகரிலே எழுந்தருளியிருக்கின்ற எல்லையில்லாத புகழையுடையவனே! உனக்கு அடிமைப்பட்டுள்ள அடியேனை நீக்காமல் இருக்கவேண்டும்.

**வி-கு:**—வந்தருளி: ஒருசொல். வந்தருளி கொண்ட கொழுந்தே! என்க. அகற்றேல்: எதிர்மறை.

**ஈடு:**—ஏழாம்பாட்டு. [2] "அடியேன் தொழ வந்தருளே" என்கிற சொல்லோடே வரக் காணுமையாலே 'உபேக்ஷித்தானே' என்று அஞ்சி, என்னை அகற்றாது ஒழியவேண்டும் என்கிறார்.

---

1. நடக்கிறபோது செய்கின்ற அடிமை எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார்: 'அடிமை செய்கையாவது' என்று தொடங்கி. 'அன்றிவ் வுலகம்' என்பது, திருப்பாவை 24-ஆம் பாசுரம்.

2. மேலே 'வரவேண்டும்' என்று பிரார்த்தித்தவர், முகங்காட்டாதவனைச் சொல்லுமாறுபோலே "அகற்றேலே" என்பான் என்? என்ன, அதற்கு விடை கூறுமுகத்தால் 'அடியேன்' என்று தொடங்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

'வந்தருளி என்நெஞ்சிடம்கொண்ட வானவர்கொழுந்தே' என்பதற்கு, [1] "பட்டர், ஸ்ரீ புஷ்பயாகம் அணித்தானவாறே, நஞ்சீயரைப் பலகாலும் இயல்கேட்டருளுவர்; ஒருகோடை யிலே திருவீதியிலே நீரைவிட்டு 'எழுந்தருளியிருந்து இப் பாட்டை இயல்சொல்லும், என்று சீயரை அருளிச்செய்து, தாம் இதனை அநுசந்தித்திருந்து பின்புதாமும் இப்பாசுரத்தை இயல்சொல்லி, [2]'இயமம் நியமம் முதலிய கிரமத்தாலே தியானம் செய்யத்தக்க சர்வேசுவரனை மனனம்செய்து புறம்புள்ள பராக்கை அறுத்து அநுசந்திக்கப் புக்காலும் சுக்கான்பரல் போன்று இருக்கக்கூடிய நெஞ்சுகளைப் பதம்செய்யும்படி, தார்மிகராயிருப்பார் இவை சில ஈரச்சொற்களைப் பொகட்டுப் போவதே!' என்று அருளிச்செய்தார்; நஞ்சீயர், இவ்வார்த்தையை உருத்தோறும் அருளிச்செய்வர்" என்று அருளிச் செய்வர்.

வந்தருளி - நான் விரும்பாதிருக்க வந்தருளி. வெவ்வேறு தீவுகளில் உள்ள வஸ்துக்கள் இரண்டையன்றோ சேர்கின்றன.

---

1. "வந்தருளி" என்று ஈடுபாடு தோன்ற அருளிச்செய்ததற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பட்டர்' என்று தொடங்கி. புஷ்பயாகம் என்பது, ஒரு யாக விசேடம். பிரஹ்மோத்சவத்தின் முடிவில் (பத்தாவது உத்சவம்) பெருமாளுக்கு எதிரில் மண்டலங்கள் போட்டு, அதில், மற்றைப் பொருள்களையும் நெருப்பையும் கலவாமல், புஷ்பங்களையே கொண்டு அர்ச்சனை செய்வது போன்று யாகம் செய்வது என்பர். இது, திருவரங்கத்தில் பிரஹ்மோத்சவத்தில் இன்றும் செய்யப்பட்டு வருகின்றது.

2. 'இயமம் நியமம்' என்பன, யோக உறுப்புக்களைச் சார்ந்தவை. முதல் பத்து ஈட்டின் தமிழாக்கம் காண்க. சுக்கான்பரல் - சுக்கான்பருக்கைக்கல். தார்மிகர் - ஆழ்வார்கள். ஈரச்சொற்கள் - பக்திரசமான திருவாய்மொழி முதலான பிரபந்தங்கள். 'அருளிச்செய்வர்' என்றது, நம்பிள்ளையை. "வானவர் கொழுந்து வந்தருளி" என்கையாலே, அதிதூரத்திலிருக்கிறவன் சம்சாரியான தான் இருந்தவிடத்தே வந்தான் என்று ஈடுபட்டமையும், "கொழுந்து" என்கையாலே, அவர்களுக்கும் ஆதரணீயன் ஆகையாலே, சேஷியானவன் சேஷபூதன் இருந்தவிடத்தே வந்தான் என்று ஈடுபட்டமையும் தோற்றுகையாலே அவ்விரண்டனையும் உட்கொண்டு அருளிச்செய்கிறார் 'வெவ்வேறு தீவுகளில்' என்று தொடங்கி.

இங்கு,

வேலைபயில் தீற்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
தூலைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கீலைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
வீலைவையலால் வியவே னைய வேன் ஒருதெய்வம் மிக்கன்வே.

என்ற அருமைச் செய்யுள் ஒரு புடை ஒப்புநோக்கலாகும். (திருக்கோவையார். 6.)

[1] பரமபத நிலையனைவனும், சம்சாரத்தை இருப்பிடமாக வுடையவரும், இந்த இருவருமேஅன்றே கூடுகின்றார்கள். உத்தேச்ய வஸ்து இருந்த இடத்துஏற இவன்தான் போகவேண்டியவனாக இருக்க, அது பெருவிட்டால் இருவரும் பாதிப்பாதி வழிதான் வரப் பெற்றார்களோ. '**வந்தருளி**' என்று நெஞ்சுக்குச் சொல்லுகிறானன்றே. [2] **ஆப்பான் திருவழுந்தூர் அறையர்** கையிலே தாளத்தை வாங்கி 'வந்தருளி, வந்தருளி' என்று மேல் போகமாட்டாதே படுவராம். என்நெஞ்சு-அவனை ஒழிந்த வேறு விஷயங்களை உகந்து போந்த நெஞ்சுஅன்றே. இடம்கொண்ட - [3] வந்தாலும் '**நெஞ்சுக்கு விஷயம் வேறு உண்டு**' என்பரே. [4] "தேவரீரால் காண்பிக்கப்பட்ட வாசகத்தையே நான் விரும்புகிறேன்" என்னுகின்றான். ஆக. '**நெஞ்சிடம் கொண்ட**' என்றதனால், திரவிய குணங்கள்போலே சேர்ந்தான் என்பதனைத் தெரிவித்தபடி. [5] திரவியமாக இருக்கச்செய்தேயும் குணங்களைப்போன்று சிலபொருள்கள் சேரக் காணுகின்றமேயன்றே. என்நெஞ்சு இடம்கொண்ட

---

1. விவரணம் செய்கிறார் 'பரமபத நிலையனைவனும்' என்று தொடங்கி. இப்படி ஈடுபாடாக அருளிச்செய்ததற்குக் காரணம் யாது? என்ன, விடை அருளிச் செய்கிறார் 'வந்தருளி' என்று தொடங்கி. நெஞ்சுக்கு - ஈடுபட்டு.

2. ஈடுபாட்டுக்கு வேறும் ஒரு சம்வாதம் காட்டுகிறார் 'ஆப்பான் திருவழுந்தூர் அறையர்' என்று தொடங்கி.

3. "கொண்ட" என்றதனால், 'அவன் வேண்டிப் பெறுகிறான்' என்பது தோற்றுகின்றது என்று கூறத் திருவுள்ளம்பற்றி, இவர் நெஞ்சு பெறுகைக்கு அவன் பிரார்த்திக்கவேண்டுமோ? என்ற சங்கையிலே அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வந்தாலும்' என்று தொடங்கி.

4. அவன் அப்படிப் பிரார்த்தித்த இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தேவரீரால்' என்று தொடங்கி.

> "அஹம் ஏவ ஆஹரிஷ்யாமி ஸ்வயம் லோகாந் மஹாமுநே
> ஆவாஸம்து அஹம் இச்சாமி ப்ரதிஷ்டம் இஹ காநநே"

என்பது, ஸ்ரீராமா. ஆரண் 5. 32: 33. சரபங்கமுனிவரைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

5. இருவரும் திரவியமாயிருக்கச்செய்தே, திரவிய குணங்கள்போலே சேரக்கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திரவியமாக' என்று தொடங்கி. என்றது, விளக்கு விளக்கின் ஒளி இவற்றினிடத்திலே காணுகின்றமேமே என்றபடி. 'சிலபொருள்' என்றது, ஒளியினை. மேலும், ஆத்மாவைக் குறிக்க, சரீரமும் ஞானமும்; பரமாத்மாவைக் குறிக்க, ஜீவாத்மாவும், திரவியமாக இருக்கச்செய்தே, குணங்களைப்போன்று சேர்ந்திருத்தலையும் ஈண்டுக் கோடல் தகும்.

வானவர்கொழுந்தே - [1] ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக வுடையவன் என்நெஞ்சு பெறுகைக்குக் காலத்தை எதிர்பார்த் துக்கொண்டிருப்பவனுவதே! என்றது, நித்தியசூரிகளுக்குத் தலையானவன்அன்றே நித்திய சம்சாரிகளுக்குத் தலையான என்நெஞ்சு பெறுகைக்குப் பிரார்த்திக்கிறன் என்றபடி. உல குக்கு ஓர் முந்தைத் தாய் தந்தையே - உலகத்துக்கு [2] அத்வி தீயனுய்ப் பழையனுன தாயும் தமப்பனுமானவன். [3] அங்கு இரண்டு தலையும் கூடிவருமேஅன்றே, இங்கு வெறும் ஒரு தலையேயாயிருக்கிறபடியைத் தெரிவித்தவாறு. [4] "உயிர் களுக்கு எவன் அழியாத தந்தையோ" என்கிறபடியே, நாலு நாட்கள் மணற்கொட்டகம் இட்டு விளையாடுமாறுபோலே அழி யும் தாயும் தமப்பனும் அன்றே அவர்கள், ஒருநாளும் அழி யாத மாதா பிதாக்கள்அன்றே இவர்கள். [5]"மனிதர்களில் சிறந்தவர்களே! உலகங்களில் இருக்கிற எல்லாப்பிராணிக

---

1. "வானவர் கொழுந்து" என்றதனைக் கடாகூத்து, "இடம் கொண்ட" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஸ்ரீவைகுண்டம்' என்று தொடங்கி.

2. 'அத்விதீயன்' என்றது, ஈராசு இன்மையைத் தெரிவித்தபடி.

3. "உலகு" என்று அஃறிணையாக அருளிச்செய்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அங்கு' என்று தொடங்கி. என்றது, "வானவர் கொழுந்து" என்றவிடத்தில், இரண்டு தலைக்கும் சேஷ சேஷி பாவம் முத லான சமபந்தஞானமுண்டாகையாலே, இரண்டு தலையும் கூடிவரும். "உலகுக்கு ஓர் முந்தைத் தாய்தந்தை" என்கிற இவ்விடத்தில், உலகத்தார்க்கு அறிவின்றியே ஈசுவரன் தானே அறிந்து ரகூஷிக்கையாலே வெறும் ஒரு தலை யாயே இருக்கும் என்றபடி.

4. ஈசுவரன், முந்தையான தாயும் தந்தையுமாக இருப்பதற்குப் பிரமா ணம் காட்டுகிறார் 'உயிர்களுக்கு' என்று தொடங்கி.

"பூதா நாம் யஃ அவ்யயஃ பிதா" என்பது, மஹாபாரதம் ஸஹஸ்ரநாமம். இதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நாலு நாட்கள்' என்று தொடங்கி. 'இவர்கள்' என்றது, ஈசுவரனையும் பிராட்டியையும்.

5. சர்வேசுவரனே உலகங்கட்கெல்லாம் தாய் தந்தையர்கள் என்னு மதற்கு, வேறும் ஒரு பிரமாணங் காட்டுகிறார் 'மனிதர்களில்' என்று தொடங்கி.

"சர்வேஷாம் ஏவ லோகாநாம் பிதா மாதா ச மாதவஃ
கச்சத்வமேநம் ஸரணம் ஸரண்யம் புருஷர்ஷபாஃ"

என்பது, மஹாபாரதம் ஆரண்யபர்வம். பாண்டவர்களைப் பார்த்து மார்க்கண்டே யர் கூறியது. இச்சுலோகத்தின் இரண்டாம் அடிக்குப் பொருள், 'ஒருதலை யாகாமே' என்று தொடங்குவது.

ளுக்கும் திருமாலானவர் தாயும் தந்தையுமாக இருக்கிறார்; காப்பாற்றுகின்றவரான இவரை உபாயமாக அடைமின்" என்றார் மார்க்கண்டேயரும். "கச்சத்வம் - ஒருதலையாகாமே நீங்களும் அவனைப் பற்றப் பாருங்கோள்."

முழு ஏழு உலகும் உண்டாய் - [1] மாதாவானவள் பத்து மாதங்கள் வயிற்றிலே வைத்துத் தரிப்பது, 'பிறந்து வளர்ந்தால் பின்னை நம்மைப் பாதுகாப்பவனுவான்' என்னும் பிரயோஜனத்தைப் பற்றவேயன்றே; இவன் அங்ஙன் அன்றிக்கே, 'இவைதாம் நோவுபடாதொழியப்பெற்றோமே' என்று இதனைத் தன்பேறாக நினைத்திருப்பான். செந்தொழிலவர் - [2] வேறு பிரயோஜனத்தைக் கருதாத நேர்மையையுடைய தொழில் விசேடத்தையுடையவர்களுடைய. என்றது, "எனக்கு ஒன்று கொடு, உனக்கு ஒன்று தருகிறேன்" என்னுதவர்கள் என்றபடி. அன்றிக்கே, அவன் ரக்ஷணம் செய்வதைப்போலே இவர்களும் கைங்கரியம் செய்கின்றவர்கள் ஆதலின் 'செந்தொழிலவர்' என்கிறார் என்னுதல். இங்ஙன் அன்றாகில், வியர்த்தம் ஆமே. வேத வேள்வி அறா - வேதஒலியும் வைதிக கார்யங்களின் கோலாகலமும் மாறாதே செல்லுகை. [3] பிராப்பிய விரோதியாதல் பிராபகவிரோதியாதல் இல்லாமையாலே, நாய்ச்சிமாருடைய கலவியைப் போன்று நித்தியமாய்ச் செல்லாநிற்கும். [4] காதலியை அணைக்கிறதற்கு வேறு ஒருபலம் உண்டாகில் அன்றே இதற்கு வேறு ஒருபலம் உண்டாய் அவ்

---

1. உலகிலேயுள்ள தாய்மார்களைக்காட்டிலும் ஈசுவரனுக்குள்ள வேற்றுமையினைக் காட்டுகிறார் 'மாதாவானவள்' என்று தொடங்கி. "உண்டாய்" என்று உணவாகச் சொல்லுகையாலே, இது தன் பேறாக இருக்கும் என்றபடி.

2. "செம்" என்பதற்கு, வேறு பிரயோஜனத்தைக் கருதாத செம்மை என்று பொருள் அருளிச்செய்கிறார் 'வேறு பிரயோஜனத்தை' என்று தொடங்கி. அன்றிக்கே, சாதனபுத்தியாக ஒரு தொழிலைச் செய்யாதவர்கள் என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'வியர்த்தமாமே' என்றது, அநந்யப்பிரயோஜனத்வ சித்த சாதன நிஷ்டைகளுக்கு விரோதமாமே என்றபடி.

3. "அறா" என்று நித்தியமாகச் செல்லுகைக்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிராப்பிய விரோதி' என்று தொடங்கி. என்றது, நாய்ச்சிமாருடைய கலவியைப் போன்று இதுவும் ஈசுவரனுக்குப் போக்யமாகையாலே நித்தியமாயிருக்கும் என்றபடி. பிராப்பியம் - பேறு. பிராபகம் - அதனையடைவதற்குரிய வழி.

4. இவனுக்கு, மனைவியின் கலவிபோலே அதுவும் போக்யமாகையாலே நித்தியமாயிருக்கிறது என்று வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'காதலியை' என்று தொடங்கி. 'அவ்வளவிலே தலைக்கட்டுவது' என்றது, பல சித்தியோடே முடிவது என்றபடி.

வளவிலே தலைக்கட்டுவது. சிரீவர மங்கலநகர் அந்தமில் புக ழாய் - ஸ்ரீவைகுண்டத்திலே இருந்தானுகில் புகழுக்கு முடிவு உண்டுபோலேகாணும். அடியேனை அகற்றேலே - [1] ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச்சென்று நீ படைத்த புகழை, **'வேறு ஒரு கதியும் இல்லாதவனைக் கைவிட்டான்'** என்ற பழி ஆக்கித் தலைக்கட்டுவித்துக் கொள்ளப் பாராதே கொள்ளாய். [2] **'அகற்றேல்'** என்பது, அரைக்கணம் தாழ்க்கப் பொறுக்கமாட்டாமை சொல்லுகிற வார்த்தை. விளம்பம் பொறாதார் சொல்லப்பெறுவர்போலேகாணும். இதனுடைய ரக்ஷணத்தில் உன்னை ஒழிய வேறு ஒருசம்பந்தம் உண்டாய்த் தான் அகற்றுகிறாயோ என்பார் **'அடியேனை'** என்கிறார். (7)

## 516.

**அகற்ற நீவைத்த மாய வல்லம் புலன்க ளாமவை நன்க ழிந்தனன்**
**அகற்றி என்னையும்நீ அரும்சேற்றில் வீழ்த்திகண்டாய்**
**பகர்க்க திர்மணி மாட நீடு சிரீவர மங்கை வாண னே! என்றும்**
**புகற்கரிய எந்தாய்! புள்ளின்வாய் பிளந்தானே!**

**பொ - ரை:**—உன்பக்கல் அன்புஇல்லாதாரை அகற்றுவதற்காக உன்னாலே உண்டாக்கிவைக்கப்பட்ட வஞ்சனைபொருந்திய கொடிய ஐந்து இந்திரியங்களான அவற்றை உள்ளவாறே அறிந்தேன்; அவற் றின் தன்மையை அறிந்திருக்கிற என்னையும் நீக்கி, கரை ஏற அரிதான விஷயங்களாகிற சேற்றிலே தள்ளிவிடுவாயோ என்று அஞ்சுகிறேன்; மிக்க ஒளியையுடைய மாணிக்கங்கள் பதித்த உயர்ந்த மாடங்களை யுடைய ஸ்ரீவரமங்கை என்னும் திவ்யதேசத்தில் நித்தியவாசம் செய்கின்றவனே! என்றும் பேசுதற்கு அரிய எந்தையே! பகாசுரனு டைய வாயினைப் பிளந்தவனே!

**வி - கு:**—வாணனே! எந்தாய்! பிளந்தானே! என்னையும் அரும் சேற்றில் வீழ்த்திகண்டாய் என்க. வாழ்நன் என்பது, வாணன் என மரீஇயது. கண்டாய்: முன்னிலை அசைச்சொல். பகர் - சொல்லப்படு கின்ற எனவுமாம். **'பகற்கரிய'** என்ற பாடம் சிறக்கும். புகற்கு அரிய - அன்பில்லாதார் அடைவதற்கு அரிய என்னவுமாம்.

---

1. "அந்தமில் புகழாய்" என்றதனை, "அகற்றேல்" என்றதனோடு கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு தேசத்திலிருந்து' என்று தொடங்கி.

2. தம்மை விடமாட்டாமல் அண்மையிலிருக்கிறவனை "அகற்றேல்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ''அகற்றேல்' என்பது' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'விளம்பம்' என்று தொடங்கி.

**ஈடு:**—எட்டாம்பாட்டு. [1] உம்மை அகற்றுவதற்குக் காரணம் என்? இங்கு வந்து அண்மையினேனுய் நின்றது உமக்காக அன்றே? என்ன, அடிமைக்குப் பகையாக இருக்கின்ற ஐம்புல இன்பங்கள் நடையாடுகிற சம்சாரத்திலே வைத்த போதே என்னை அகற்றினுய் அல்லையோ என்கிறார்.

அகற்ற நீ வைத்த - [2] சர்வசக்தியான நீ, உன்னை உகவாதார் அகன்றுபோம்படிக்குத்தகுதியாக, "என்னுடைய மாயை தாண்ட முடியாதது" என்று கொண்டு வைத்த. மாயம் வல் ஐம்புலன்களாம் அவை - ஆச்சரியமான செயல்களைச் செய்யக் கூடியனவாய்த் தப்பஒண்ணாதபடியாய் இருக்கிற ஐந்து இந்திரியங்களாகிறவை. [3] உன்னை விரும்பாதார் அகன்றுபோம்படிக்குத் தகுதியாகச் சர்வேசுவரனை நீ வைத்தவை. நீர் எங்ஙனே இது அறிந்தபடி? என்ன, நன்கு அறிந்தனன் - மயர்வற மதிநலம் பெறுகையாலே நான் அழகிதாக அறிந்தனன். [4] உகவாதார் அகன்றுபோகைக்கு வைத்தோமாகில், அதனால் உமக்கு என்? என்ன, அகற்றி என்னையும் நீ அரும்சேற்றில் வீழ்த்திகண்டாய் - உன்னால் அல்லது செல்லாதபடியாயிருக்கிற என்னையும் உன்பக்கல் நின்றும் நீ பிரித்து, கால்வாங்கவொண்ணாதபடியான ஐம்புல இன்பங்களிலே தள்ளப்புகாநின்றாய். [5] இந்த உடம்போடு எனக்கு ஒருசம்பந்தம் அற்றிருக்க, நீ பொதுவான இதிலே வைக்கிறது கைவிடப் பார்த்தன்றே? நன்று; அவன்பக்கல் காரியம்கொள்ள நினைக்கிறவர், அருளில்

---

1. "அகற்றி என்னையும் நீ" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நீ அகற்ற வைத்த மாய வல் ஐம்புலன்களாமவை" என்று கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வ சக்தியான நீ' என்று தொடங்கி. 'இந்திரியங்களுக்குத் தப்பமுடியாது' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'என்னுடைய மாயை' என்று தொடங்கி.

"தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே"

என்பது, ஸ்ரீகீதை. 7: 14. இதனைப் பிரமாணமாக எடுத்தது, இந்திரியங்களும் பிரகிருதியின் காரியமாய் அதற்குள்ளே அந்தர்ப்பூதமாகையாலே என்க.

3. "மாய வல் ஐம்புலன்களாமவை அகற்ற நீ வைத்த" என்று மாற்றிக் கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'உன்னை விரும்பாதார்' என்று தொடங்கி.

4. "என்னையும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உகவாதார்' என்று தொடங்கி.

5. நாம் உம்மை விஷயங்களிலே தள்ளினேமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இந்த உடம்போடு' என்று தொடங்கி.

லாதவர்களைச் சொல்லுமாறுபோன்று கொடிதாகச் சொல்லுவான் என்? என்ன, '**நமக்கே பழியாய் வந்து விளையப்புகா நின்றது**' என்று நீர்மையுடையார் காரியம்செய்து தலைக்கட்டுவர்கள் என்று நினைத்துச் சொல்லுகிறார்.

பகர்க் கதிர் மணி மாடம் நீடு சிரீவரமங்கை வாணனே - மிக்க ஒளியையுடைத்தாய், மணிமயமான மாடங்களின் ஒக்கத்தையுடைத்தான சிரீவரமங்கைக்குப் பிரதானனானவனே! பகர் என்பதும், கதிர் என்பதும் ஒருபொருட்சொற்கள்; மிக்க ஒளி என்பது பொருளாம். 'பகற்கதிர்' என்று பாடமான போது, சூரியலோகம் வரையிலும் செல்ல உயர்ந்து ஒளியையுடைய மணிமாடங்கள் என்று பொருள்கூறுக. பகல் - சூரியன். என்றும் புகற்கு அரிய எந்தாய் - நீ, கிட்டாமல் செய்யுமதும் அழியச்செய்வதும் உகவாதாரை அன்றே. உனக்கே உரியவனான என் விஷயத்திலும் அதனைச் செய்யவோ என்பார் '**எந்தாய்**' என்கிறார். புள்ளின் வாய் பிளந்தானே-உமக்குக் கிட்டுதற்குத் தட்டு என்? என்ன, பகாசுரனை அழித்தாற்போலே, என் சரீரசம்பந்தத்தைப் போக்கியருளாய் நான் வந்து கிட்டும்படி என்கிறார். (8)

## 517.

புள்ளின் வாய் பிளந் தாய்! ம ருதிடை போயி னாய்! எரு தேழ டர்த்தஎன்
**கள்ள மாயவனே! கருமாணிக் கச்சுடரே!**
**தெள்ளி யார் திரு நான்ம** றைகள் வல்லார் மலி தண் சிரீவர மங்கை
**யுள்ளிருந்த எந்தாய்! அருளாய் உய்யுமா றுஎனக்கே.**

**பெர் - ரை :**—பகாசுரனுடைய வாயினைப் பிளந்தவனே! மருதமாங்களின் நடுவே போனவனே! இடபங்கள் ஏழனையும் கொன்ற என்கள்ளமாயவனே! கரியமாணிக்கத்தின்சுடரே! திருநான்மறைகளிலும் வல்லவர்களான தெளிந்த ஞானமுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் நிறைந்து வசிக்கின்ற குளிர்ந்த ஸ்ரீவரமங்கை என்னும் திவ்விய தேசத்திற்குள் எழுந்தருளியிருக்கின்ற எந்தையே! எனக்கு உஜ்ஜீவிக்கும் வகையை அருளவேண்டும்.

**வி - சு :**—வல்லார் : முற்றெச்சம். வல்லராகிய தெள்ளியார் என்க. மலிதல் - மிகுதல். இருந்த : காலமயக்கம்.

ஈடு:—ஒன்பதாம்பாட்டு. [1] "அருஞ்சேற்றில் வீழ்த்திகண்டாய்" என்று அஞ்சுகின்ற உமக்கு நான் செய்யவேண்டுவது என்? என்ன, சக்தனுய் அண்மையிலிருப்பவனுயிருக்கிற நீ என் விரோதியைப்போக்கி, உன்திருவடிகளிலே கைங்கரியத்தைத் தந்தருளவேணும் என்கிறார்.

புள்ளின்வாய் பிளந்தாய் மருதிடை போயினுய் எருதுஏழ் அடர்த்த - [2] கலியர் சோறு இட்ட நாட்களை எண்ணுமாறு போன்று, பண்டு உபகரித்த படிகளைச் சொல்லுகிறார். பகாசுரனை அழித்தாய், இரட்டை மருதமரங்களைப் பொடிபடுத்தினுய், இடபங்கள் ஏழனையும் ஊட்டியாக நெரித்தாய். என்கள்ள மாயவனே - ஒருவர்க்கும் தெரியாத ஆச்சரியமான செயல்களையுடையையாய், [3] அவை எல்லாம் எனக்குத் தெரியும்படி செய்து, என்னை அகப்படுத்திக்கொண்டவனே! கருமாணிக்கச் சுடரே - நப்பின்னைப் பிராட்டியுடைய தடைகளைப் போக்கி, [4] அவளுக்குக் கொடுத்த உடம்பின் வாசியை எனக்கும் அறிவித்தவனே! தெள்ளியார்-[5] தங்கள் தங்களுக்கும் சில உண்டேயாகிலும், அவற்றைப்பொகட்டு அவன் கைபார்த்திருக்குமவர்கள். [6] இவர்கள் ஞானத்துக்கு விநியோகம் இதுவே அன்றே. என்றது, "இராமபிராணுடையவும் அறிவிற் சிறந்

---

1. "அருளாய் உய்யுமாறு எனக்கு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். "புள்ளின்வாய் பிளந்தாய்" என்றதனை நோக்கிச் 'சக்தனுய்' என்றும், "சிரீவரமங்கையுள் இருந்த" என்றதனை நோக்கி 'அண்மையிலிருப்பவனுய்' என்றும் அருளிச்செய்கிறார்.

2. "புள்ளின்வாய்பிளந்தாய்" என்பது போன்றவைகளைச் சக்தியுடையனுந் தன்மைக்கு உறுப்பாக அவதாரிகையில் அருளிச்செய்தார். இங்கு, அவற்றை உபகாரமாக அருளிச்செய்கிறார் 'கலியர் சோறு இட்ட' என்று தொடங்கி.

3. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவையெல்லாம்' என்று தொடங்கி.

4. "என்" என்றதனை, கருமாணிக்கச் சுடரிலும் கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'அவளுக்குக் கொடுத்த' என்று தொடங்கி.

5. "தெள்ளியார்" என்பதற்கு, இரண்டு தாத்பரியம்: முன்னையது, தங்கள் முயற்சிகளை விட்டு அவன் கைபார்த்திருக்குமவர்கள் என்பது. இதனையே அருளிச்செய்கிறார் 'தங்கள்' என்று தொடங்கி.

6. ஞானம் உண்டானுல் சாதநாநுஷ்டானம் செய்யவேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்கள் ஞானத்துக்கு' என்று தொடங்கி. இதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இராமபிராணுடையவும்' என்று தொடங்கி.

"ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்ய ச தீமதஃ
ந அத்யர்த்தம் கூர்ப்யதே தேவீ கங்கேவ ஜலதாகமே"
என்பது, ஸ்ரீராமா. சுந். 16; 4.

தவனை இலக்ஷ்மணனுடையவும் அபிப்பிராயத்தை அறிந்த சீதை கலங்கவில்லை" என்கிறபடியே, அசோகவனத்திலே தனியிருப்பில் பிராட்டியின் தெளிவினைப் போன்ற தெளிவினையுடையவர்கள் என்றபடி. அன்றிக்கே, [1]"சுக்கிரீவ மஹாராஜரையும் மற்றைய முதலிகளையும் அழகிதாகப் பார்த்துப் பெரிய சப்தத்தோடு சொன்னன்" என்கிறபடியே, நலியாநின்றாலும் [2]தாய்முகமே பார்த்துக் கிடக்கும் குழந்தையைப் போலே, [3]"வத்யதாம் - கொல்லுதற்குரியவன்" என்கிற மஹாராஜரையும், அவரிலும் கொடிய முதலிகளையும் அழகிதாகப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீவிபீஷ்ணழ்வான் தெளிவு போன்ற தெளிவினையுடையவர்கள் என்னுதல்.

திருநான்மறைகள் வல்லார்-[4]நூறாயிரம் வரி எழுதியிருந்தாலும் அவற்றிற் போகாமல், தாத்பரியத்தைக் கிரகிக்குமவர்கள். என்றது, "மாதவன் பேர்சொல்லுவதே ஒத்தின் சுருக்கு"

---

1. இரண்டாவது தாத்பரியம், அவன்தான் நலியும்போதும் அவன் கையைப் பார்த்திருக்கும்படி தெளிந்த ஞானத்தை யுடையவர்கள் என்பது. இதனையே அருளிச்செய்கிறார் 'சுக்கிரீவ மஹாராஜரையும்' என்று தொடங்கி.

"உவாச ச மஹாபிராஜ்ஞஃ ஸ்வரேண மஹதா மஹாந்
ஸுக்ரீவம் தாந் ச ஸம்ப்ரேக்ஷ்ய கஸ்தஏவ விபீஷணஃ"

என்பது, ஸ்ரீராமா. யுத். 17 : 9.

2. தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரண் இல்லே
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்கினைந்தே அழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

என்பது, பெருமாள் திருமொழி.

"குழவி அலைப்பினும் அன்னையென் றேறும்"

என்பது, நான்மணிக்கடிகை.

3. "வத்யதாம்"

என்பது, ஸ்ரீராமா. யுத்.

4. "வல்லார்" என்றதற்கு, தாத்பரியத்தைக் கிரஹிக்குமவர்கள் என்று பொருள் அருளிச்செய்கிறார் 'நூறாயிரம்' என்று தொடங்கி. அதனைப் பிரமாண முகத்தாலே விவரணம் செய்கிறார் 'மாதவன்' என்று தொடங்கி.

ஒத்தின் பொருள்முடிவும் இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறமறிமின் ஏழைகாள்—ஒத்ததனை
வல்லீரேல் நன்றுஅதனை மாட்டீரேல் மாதவன்பேர்
சொல்லுவதே ஒத்தின் சுருக்கு.

என்பது, இரண்டாந் திருவந். 39.

என்றிருக்குமவர்கள் என்றபடி. மலி தண் சிரீவரமங்கையுள் இருந்த எந்தாய் - அவர்கள் நெருங்கி வசிக்கின்ற சிரமஹர மான சிரீவரமங்கையிலே அவர்களோப்போன்று இருக்கின்ற என்நாதனே! எனக்கு உய்யுமாறு அருளாய் - [1] அறச்சென் றற்றது கண்டாய், உன்திருவடிகளில் கைங்கர்யத்தைத் தந்த ருளவேணும். [2] கைங்கரியம் என்றும், உய்கை என்றும் இரண்டு இல்லை இவர்க்கு. விரைந்திலராகில் அவன் வைல க்ஷண்யத்தில் ஞானம் இல்லையாகக்கடவது, இங்கே கால் பாவிற்றாகில் சம்சாரத்தின் தண்மையில் ஞானம் இல்லையாகக் கடவது. (9)

## 518.

ஆறெனக்கு நின் பாத மே சர ணாகத் தந்தொழிந் தாய் உனக் கோர்கை
மாறு நான் ஒன்றிலேன் எனதாவியும் உனதே
சேறு கொள்கருப்பும் பெருஞ்சேந் நெலும்ம லிதண் சிரீவர மங்கை
நாறு பூந்தண் துழாய்முடியாய்! தெய்வ நாயகனே!

**பொ - ரை:**—எனக்கு உபாயம் தருமிடத்தில் உனது திருவடி களையே உபாயமாகத் தந்தாய்; அவ்வாறு தந்த உனக்குக் கொடுப்ப தற்குரிய பிரதியுபகாரம் நான் ஒன்றையுடையேனல்லேன்; என்னு டைய உயிரும் உன்னுடையதே; சேற்றையுடைத்தான கரும்பும் பெரிய செங்கெற்பயிர்களும் மிகுந்திருக்கின்ற குளிர்ந்த ஸ்ரீ வரமங்கை என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற வாசனை வீசுகின்ற பூக்கள்பொருந்திய குளிர்ந்த திருத்துழாயைத் தரித்த திருமுடியை யுடையவனே! தெய்வங்கட்குத் தலைவனே!

**வி - கு:**—துழாய் முடியாய்! தெய்வநாயகனே! எனக்கு ஆறு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்; உனக்குக் கைம்மாறு ஒன்று இலேன்; எனது ஆவியும் உனதே என்க. ஆறு - வழி. சரண் - உபா யம். தந்தொழிந்தாய்: ஒருசொல்.

**ஈடு:**—பத்தாம்பாட்டு. [3] "அருளாய் உய்யுமாறு எனக்கு" என்றார், அப்போதே வந்து அருளக் கண்டிலர்; ஏதேனும் நிலை

---

1. "எனக்கு" என்கையாலே, "ஏஹிபஶ்ய - இதனைப் பார்த்தருள வேணும்" என்னுமாறுபோன்று, 'அறச்சென்றற்றது கண்டாய்' என்கிறார்.

2. "உய்யுமாறு" என்றால், கைங்கரியத்தைச் சொல்லுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கைங்கரியம் என்றும்' என்று தொடங்கி.

3. இந்தப் பாசுரத்திலும் சந்தோஷம்போலே இருந்ததேயாகிலும், இடத்திற்குத் தகுதியாக அநுவாப்திதோற்ற அவதாரிகை அருளிச்செய்கிறார். இதற்கு, "உனக்கோர் கைம்மாறு நான் ஒன்றிலேன்" என்றதிலே நோக்கு.

யிலும் 'உன் திருவடிகளே சரணம்' என்றிருக்கும்படி என்னைச் செய்தருளின மகோபகாரத்துக்குப் பிரதிஉபகாரம் இல்லை என்கிறார்.

ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் - உபாய உபேயங்கள் இரண்டும் உன் திருவடிகளேயாம்படி செய்து தந்தாயே என்று **பிள்ளான்** பணிப்பர். ஆறு - வழி. வழி - உபாயம். [1] "எவ்வாறு நடந்தனை", "இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்" என்னக்கடவதன்றே. [2] சரண்-உபேயம். அன்றிக்கே, [3] 'இவை இரண்டாலும் உபாயத்தையே சொல்லுகிறது' என்று **பட்டர்** அருளிச்செய்வர். [4] ஆறு - உபாயம். "சரணம் என்கிற இந்தச்சொல்லானது, உபாயம் வீடு காப்பவன் என்ற இம்மூன்று பொருள்களைக் காட்டும்; இப்போது இந்தச் சரணம் என்ற சொல் உபாயத்தையே சொல்லாநின்றது" என்கையாலே 'சரண்' என்பதும் உபாயம். ஆக, [5] எனக்கு உபாயம் உன் திருவடிகளேயாம்படிசெய்து தந்தாய் என்றபடி. வேறு உபாயங்களை அநுஷ்டிக்கிறவர்களைக் காட்

---

1. "ஆறு" என்பது, வழி என்ற பொருளில் வருவதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'எவ்வாறு' என்று தொடங்கி.

"எவ்வாறு நடந்தனை? எம்மிராமாவோ! எம்பெருமான்! என்செய்கேனே?" என்பது, பெருமாள் திருமொழி. 9: 2. "இப்பொய்கைக்கு" என்பது, நாய்ச்சியார் திருமொழி. 3: 2.

2. பிள்ளான் நிர்வாஹத்தில், "சரண்" என்பது, இல்லமாய், அதனுலே, உபேயத்தைச் சொல்லுகிறது என்று கோடல் வேண்டும்.

3. 'இவை இரண்டாலும்' என்றது, "ஆறு, சரண்" என்ற இந்த இரண்டு சொற்களாலும் என்றபடி.

4. பட்டர் நிர்வாஹத்திலே சப்தநிர்வாஹம் காட்டுகிறார் 'ஆறு உபாயம்' என்று தொடங்கி.

"உபாயே க்ருஹ ரக்ஷித்ரோஃ ஶப்தஃ ஶரணம் இதி அயம்
வர்த்ததே ஸாம்ப்ரதம் ச ஏஷஃ உபாயார்த்தைகவாசகஃ"

என்பது, பாஞ்சராத்திரம்.

5. "எனக்கு உபாயம் உன் திருவடிகளேயாம்படி செய்து தந்தாய் என்றது, எனக்கு உபாயம் தருமிடத்தில் வேறு ஒன்றினைத் தாராமல் உன் திருவடிகளையே உபாயமாகச் செய்து தந்தாய் என்றபடி" என்று பெரிய சீயர் அருளிச்செய்வர்; ஆகையாலே, பட்டர் நிர்வாஹத்துக்கு "எனக்கு ஆறு தருமிடத்தில், நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று சொற்களைக் கூட்டிக் கோடல் தகும். எனக்கு - வேறு கைம்முதல் இல்லாத எனக்கு.

டிலும் தமக்கு உண்டான வேறுபாட்டினைச் சொல்லுகிறார் 'எனக்கு' என்ற சொல்லால். [1] "நோற்ற நோன்பிலேன்" என்று தொடங்கி, வேறு உபாயம் இன்மையை முன்னிட்டுக் கொண்டு உபாயத்தை அறுதியிடுகிற திருவாய்மொழி ஆகையாலே அதனையே நிகமிக்கிறது. 'நின்பாதமே' என்ற ஏகாரத்தாலே [2] ஏகபதத்தை நினைக்கிறது. [3] ஈசுவரனைப்பற்றின ஊற்றத்தாலே வேறு உபாயங்களை நெகிழுகை ஒழிய, நாஸ்திக்யத்தாலே விடுமன்று அது வேறு விஷயங்களிலே ஈடுபாட்டிற்குக் காரணமாம். [4] மருந்தினையுண்டவன் ஒருவன் பாம்பின் வாயிலே கையினைக் கொடுத்தால் அது தீங்கினை விளையாதாம், மருந்து இல்லாதவன் அதனைச்செய்தால் அது மரணத்திற்குக் காரணமாம். இந்தத் தெளிவினைப் பிறப்பித்த உனக்கு ஒத்ததான பிரதியுபகாரம் காணுத மாத்திரம் அன்றிக்கே, கைம்முதல் இல்லாத நான் [5] போலியாயிருப்பது ஒரு பிரதியுபகாரமும் காண்கின்றிலேன். என் வருந்துகிறீர், உம்முடைய ஆத்மாவைத் தந்தாலோ? என்ன, எனது ஆவியும் உனதே - அதுவும் செய்து நெஞ்சாறல் கெட்டிருப்பன் அன்றே, நீ மயர்வற மதிநலம் அருளிற்றிலையாகில். ஆத்ம சமர்ப்பணம் செய்கையாவது, [6] ராஜமஹேந்திரன்படியை எடுத்து 'என்னது' என்று கொண்டு பெருமாளுக்குக் கொடுப்பாரைப் போன்று களவு

---

1. "ஆறு, சரண்" என்ற இரண்டினையும் உபாயபரமாகப் பட்டர் அருளிச்செய்வதற்கு நியாமகம் எது? என்ன, இடத்திற்குத் தகுதி ஆகையாலே என்று அருளிச்செய்கிறார் 'நோற்ற நோன்பு' என்று தொடங்கி.

2. 'ஏகபதத்தை நினைக்கிறது' என்றது, பற்றுமிடத்தில் உபாயபாவத்தைக் கழிக்கிற ஏகபதத்தில் அர்த்தத்தை நினைக்கிறது என்றபடி. 'ஏகபதம்' என்றது, சரமஸ்லோகத்திலுள்ள "ஏகம்" என்ற பதத்தைக் குறித்தபடி. அங்கு "மாம் ஏகம்" என்பதற்கு 'என்னையே' என்பது பொருள். "ஏகம்" என்ற சொல் ஏகாரத்தின் பொருளில் வந்துள்ளது.

3. ஆயின், நித்தியநைமித்திக கர்மங்களை விட்டொழித்தல் ஆகுமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஈசுவரனைப்பற்றின' என்று தொடங்கி.

4. மேலதற்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'மருந்தினையுண்டவன்' என்று தொடங்கி.

5. "ஓர் கைம்மாறு" என்றதற்கு, பொருள் அருளிச்செய்கிறார் 'போலியாயிருப்பதொரு' என்று தொடங்கி.

6. 'ராஜமஹேந்திரன்படி' என்றது, நம்பெருமாள் திருமார்பில் அணிந்துகொள்ளும் ஒரு பதக்கம்.

வெளிப்படுதலே அன்றே. "சரண் - திருவடிகளை; ஆறுக எனக்குத் தந்தொழிந்தாய்; நின்பாதமே, எனது ஆவியும் உனதே" என்று கூட்டி 'நின்பாதமே' என்பதனைச் சபத மாக்கி நிர்வஹிப்பர் **ஆப்பான் திருவழுந்தூர் அறையர்.**

சேறுகொள் கரும்பும் பெரும்செந்நெலும் மலிதண் சிரீவர மங்கை - மிக்க சேற்றையுடைத்தான கரும்பும், அதற்கு நிழல் செய்யும்படியான செந்நெலும் மிக்குக் குளிர்ந்த சிரீவர மங்கை. நாறுபூந்தண்துழாய் முடியாய்-[1] இதற்கெல்லாம் முதலி யாக வைத்த வளையத்தையுடையையாய். தெய்வநாயகனே - நித்தியசூரிகளுக்கு அதிபதியானவனே! தெய்வம்-தேவர்கள். எத்தனையேனும் ஞானமுடையார்க்கும் நிர்வாஹகனா யிரா நின்றாய், ஆனபின்னர் நான் உனக்கு என்ன பிரதியுபகாரம் பண்ணுவது. [2] நீயோ கனக்க உபகரித்துக்கொண்டு நின்றாய், நான் அறிவிலனாகப் பெற்றிலேன், இங்ஙனேயானாலும் நான் சிலசெய்து தலைக்கட்டினேனாக ஒண்ணுதபடி நீ பரிபூர்ணனா னாய். [3] உபகாரம் கொள்ளாதார் உண்டு உடுத்துத் திரியா நின்றார்கள், அறிவுகேடரானவர்கள் 'சில பிரதியுபகாரம் செய் தோம்' என்றிராநின்றார்கள்; நீ நிறைவில்லாதவனாகில் இவை எல்லாம் சில செய்தனவாக நினைத்திருக்கலாமே அன்றே, நீயோ நிறைந்தவனாயிரா நின்றாய்; ஆனபின்னர், ஒன்று செய்து தலைக்கட்டப்போமோ. (10)

---

1. "தெய்வநாயகனே" என்றதனைக் கடாகூஷித்து, பாவம் அருளிச் செய்கிறார் 'இதற்கெல்லாம்' என்று தொடங்கி. இதற்கெல்லாம் - இந்தப் பூமிக்கெல்லாம். "தெய்வநாயகன்" என்றது, லீலாவிபூதிக்கும் உபலக்ஷணம்.

2. பாசுரம் முழுதினையும் கடாகூஷித்துக் கருத்து அருளிச்செய்கிறார் 'நீயோ' என்று தொடங்கி. "ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்து ஒழிந்தாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'கனக்க உபகரித்துக் கொண்டு நின்றாய்' என்கிறார். "எனதாவியும் உனதே" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'நான் அறிவிலனாகப் பெற்றிலேன்' என்கிறார். "தெய்வநாயகன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நீ பரிபூர்ணனாய்' என்கிறார்.

3. 'நீயோ கனக்க' என்று தொடங்கி, மேற்கூறியவற்றை யெல்லாம் தொகுத்து எதிர்மறைமுகத்தால் அருளிச்செய்கிறார் 'உபகாரம் கொள்ளாதார்' என்று தொடங்கி. 'அறிவுகேடரானவர்கள்' என்றது, மயர்வறமதிநலம் அருளப்பெறாமல் தாமாகவே ஈசுவரனைப் பற்றினவர்களைக் குறித்தபடி.

## 519.

**தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன் அடியிணைமிசைக்**
**கொய்கொள் பூம்பொழில்சூழ் குருகூர்ச் சடகோபன்**
**செய்த ஆயிரத்துள் விளை தண் சீரிவர மங்கை மேய பத்துடன்**
**வைகல் பாடவல்லார் வானேர்க்கு ஆராவமுதே.**

**பொ - ரை:**— நித்தியசூரிகளுக்குத் தலைவனும் நாராயணனும் திரிவிக்கிரமனுமான சர்வேசுவரனுடைய திருவடிகளின்மேலே, பறித்துக்கொள்ளப்படுகின்ற பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபர் அருளிச்செய்த ஆயிரம் திருப்பாசுரங்களுள், குளிர்ந்த ஸ்ரீவரமங்கை என்னும் திவ்வியதேசத்தைப் பற்றிய இவைபத்துப் பாசுரங்களையும் அர்த்த ஞானத்தோடு பாடவல்லவர்கள் நித்தியசூரிகளுக்கு எப்பொழுதும் தெவிட்டாத அமுதத்தைப் போன்றவராவர்.

**வி - சூ:**—ஆயிரத்துள் தண் சிரீவரமங்கை மேய இவைபத்தையும் உடன் பாடவல்லார் வானேர்க்கு வைகல் ஆராவமுது என்க. வைகல் - நாள்.

**ஈடு:**—முடிவில், [1]இத்திருவாய்மொழியைப் பொருள் அறிவோடு கற்குமவர்கள், நித்தியசூரிகளுக்கு என்றும் இனிய பொருளாவர் என்கிறார்.

தெய்வநாயகன் - சர்வேசுவரன். நாரணன் - தன்னுடைமை இழக்கவிடாத வத்சலன். திரிவிக்கிரமன் - தன்னை இரந்தார்க்குத் தன்னை அழிய மாறியும் காரியத்தைச்செய்து தலைக்கட்டிக் கொடுக்குமவன். அடி இணைமிசை - திருவடிகளிலே. கொய்கொள் பூம்பொழில் - நித்திய வசந்தமான சோலை. என்றது, எப்போதும் கொய்கைக்குப் பக்குவமாயிருக்கை. குருகூர்ச் சடகோபன் - [2]ஸ்ரீ கீதையில் வேறுபாடு. செய்த ஆயிரம் -

---

1. "உடன்பாடவல்லார் வானேர்க்கு ஆராவமுதே" என்றதனைக் கடாகித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'ஸ்ரீ கீதையில் வேறுபாடு' என்றது, தத்துவப்பொருளாயிருக்கின்ற சர்வேசுவரன் அருளிச்செய்த ஸ்ரீ கீதையைக் காட்டிலும், தத்துவங்களை அறிந்த சதுர்மறைப் புரோகிதருடைய வசனங்களாதையாலே இவை விலக்ஷணம் என்றபடி.

அர்த்தம் வேதார்த்தமேயாகிலும், வேதம்போலே தான் தோன்றியன்று ஆதலின் 'செய்த ஆயிரம்' என்கிறது. [2] பரத்துவம்போலே வேதம், அவதாரம்போலே இதிகாச புராணங்கள், அர்ச்சாவதாரம்போலே திருவாய்மொழி. [3] செய்த ஆயிரம்அன்றே. அன்றிக்கே, [4] தமப்பன் இல்லாத இழவுதீரச் சக்கரவர்த்திக்குப் பிள்ளையாறேபோன்று, வேதமும் இவர்பக்கல் வந்து பிறந்தது ஆதலின் 'செய்த ஆயிரம்' என்கிறது என்னுதல். உடன்பாடவல்லார் - அபிப்பிராயத்தோடு பாட வல்லார். என்றது, இவருடைய உபாயசூன்யதையை நினைத்துப் பாடவல்லார் என்றபடி. வைகலும் வானோர்க்கு ஆராவமுதே-காலம் என்னும் ஒருபொருள் உள்ளவரையிலும் நித்தியசூரிகளுக்கு இனியபொருளாகப் பெறுவர். [5] தேவசாதிகள் அமுதம்பெற்றுக் கிருதார்த்தராமாறுபோலே, நித்தியசூரிகள் 'இவர்களைப் பெற்றேம்' என்று கிருதார்த்தராவர் என்பார்

---

1. திருவாய்மொழி வேதமாயிருக்க, "செய்த ஆயிரம்" என்னலாமோ? என்ன, 'அர்த்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, ஆப்தமான ஆழ்வார் பக்கலிலே பிறந்தது ஆகையாலே செய்யாமொழியாகிய வேதத்தைக் காட்டிலும் இது உயர்வுக்குக் காரணமாயிருக்கும் என்றபடி.

2. வேதத்தைக் காட்டிலும் இதற்கு உயர்வு எது? என்ன, 'பரத்துவம் போலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே - செய்யா
வதற்குரியர் அந்தணரே யாராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்.

என்பது, இங்கு ஒப்புநோக்குதல் தகும். திருவள்ளுவமாலை. 23.

'அர்ச்சாவதாரம்போலே' என்றது, சர்வாதிகாரம் என்பது கருத்து. ஆசாரியஹ்ருதயம் முதல் பிரகரணத்தின் பொருளே இங்கு நோக்கல் தகும்.

3. 'அர்ச்சாவதாரம்போலே' என்றது, எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'செய்த ஆயிரம் அன்றே' என்று.

4. மேலே வேதார்த்தத்தைச் செய்த ஆயிரம் என்று அருளிச்செய்து, வேத அவதாரம் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'தமப்பன் இல்லாத' என்று தொடங்கி. என்றது, வேதமும் இவர்பக்கல் வந்து பிறந்து நிறம்பெறவேண்டும் என்றபடி.

5. "அமுது" என்றதிலே நோக்காக, மேல்வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'தேவசாதிகள்' என்று தொடங்கி.

'அமுதே' என்கிறார். [1] வேறு உபாயங்களில் விருப்பம்இல்லா மல் பகவத் ருசியையுடைய அவர்கள், வேறு உபாயங்களில் விருப்பம் இல்லாமல் பகவத் ருசியையுடைய இவரை விரும்பி இருக்கையாலே, வேறு உபாயங்களில் விருப்பம் இல்லாதவ ராய் இதனை அநுபவிக்க வல்லரானவர்கள் நித்தியசூரிகளுக்கு அமுதாவர். (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

நோற்றநோன் பாதியிலேன் நுன்தனைவிட் டாற்றகிலேன்
பேற்றுக் குபாயமுன்தன் போருளே—சாற்றுகின்றேன்
இங்கெனிலே என்னும் எழில்மாறன் சொல்வல்லார்
அங்கமரர்க்கு ஆரா வமுது.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. வானோர்க்கு ஆராவமுது ஆகைக்குக் காரணம் என்? என்ன, 'வேறு உபாயங்களில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

# எட்டாந் திருவாய்மொழி — "ஆராவமுதே"

## முன்னுரை

---

ஈடு :—[1] சிரீவரமங்கல நகரிலே எழுந்தருளியிருக்கின்ற வானமாமலை திருவடிகளிலே, வேர் அற்ற மரம்போலே வீழ்ந்து வேறுகதி இல்லாதவராய்க் கொண்டு சரணம்புக்கார்; இவர் அப்படிப் பெரிய ஆர்த்தியோடே சரணம் புகச் செய்தேயும் வந்து முகங்காட்டாதிருக்க; [2] கடலில் அமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப்பெற்றுத் தரிக்குமாறுபோலே, "இவ்வளவிலும் 'வேறு ஒன்றிலே பேறு' என்றிருத்தல், மற்றொருவர் வாசலிலே சென்று கூப்பிடுதல் செய்தல் என்னும் மயக்கத்தைத் தவிர்த்தானே அன்றே" என்று கொண்டு தரித்தார்; தரித்த இதுதான் திருக்குடந்தையளவும் கால்நடை தந்து போகைக்கு உடலாயிற்று. [3] என்தான்? இங்கு, தம்விருப்பம் கிட்டாதொழி

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார் 'சிரீவரமங்கல நகரிலே' என்று தொடங்கி. மேல்திருவாய்மொழியிலேயுள்ள "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்ற தனைக்கடாக்ஷித்து, 'வேறுகதியில்லாதவராய்க்கொண்டு' என்கிறார். ஆர்த்தி - தன்பம்.

2. முகங்காட்டாதிருக்க, திருக்குடந்தைக்குச் செல்லுவதற்குத் தரிப்பு உண்டானவாறு எங்ஙனே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடலில் அமிழ்ந்துவார்' என்று தொடங்கி. மிதப்பு - தெப்பம். "ஆறு எனக்கு நின்பாதமே சரணகத் தந்தொழிந்தாய்" என்றதனைக் கடாக்ஷித்து, 'இவ்வளவிலும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். இங்கே, 'வேறு ஒன்றிலே பேறு என்றிருத்தல், மற்றொருவர் வாசலிலே சென்று கூப்பிடுதல் செய்தல்' என்றிருக்கையாலே, "ஆறு எனக்கு நின்பாதமே சரணகத் தந்தொழிந்தாய்" என்பதற்கு, மேல் அருளிச்செய்த மூன்று யோஜனைகளையும் தவிர, இன்னமும் ஒரு யோஜனை உண்டு என்று தோற்றுகிறது. அதாவது, எனக்கு உன் பாதமே உபாயமாகவும், ரக்ஷகமாகவும் தந்தாய் என்பது. "நின் பாதமே ஆருகா" என்கையாலே வேறு உபாயங்களை நீக்குகிறது; "நின் பாதமே சரணக" என்கையாலே, வேறு ரக்ஷகங்களை நீக்குகிறது. ஆக, "ஆறு" என்றதனால், ஆகிஞ்சன்யமும், "சரண்" என்கையாலே, அநந்யகதித்வமும் போதரும். இத்தால், இந்த நிலையிலும், ஆகிஞ்சன்ய அநந்யகதித்வங்களுக்கு ஒரு ஹானி வராதபடி செய்தான் என்றபடி. ஆகிஞ்சன்யமாவது, வேறு உபாயம் இன்மை. அநந்யகதித்வமாவது, வேறு ரக்ஷகரில்லாமை.

3. 'என்தான்?' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, வஸ்துஜக்யத்தாலே அங்கிருக்கிறவனும் இவனேயாயிருக்க, இங்கே பலியாவிட்டால் அங்கே பலிக்கக் கூடுமோ? அதற்குமேல், 'ஒரே முறை செய்யக்கூடியதாய் அமோகமான பிரபத்தியும் பயன் அற்றதாய் விட்டது' என்று விசுவாசம் குறைந்து ருசியும் தெளிவாதோ என்னில்? என்பது.

யவும் அங்கு ஏறப்போகவேண்டுவான் என்? என்னில், [1] 'ஒரு கால் சரணாகதி செய்தோம், அது பலித்தது இல்லை' என்னு, நாஸ்திகப்த்தியாலே விசுவாசம் குலைந்து ருசியும் நெகிழுமவ ரன்றே; "அடியார்களுக்காக எழுந்தருளியிருக்கிறவன் நம் காரியம்செய்து தலைக்கட்டாமை இல்லை, 'இன்ன இடங்களிலே செய்யக்கடவோம்' என்று அறுதியிடப்பட்டதா யிருக்குமே அன்றே, ஆனபின்பு, இங்குச் செய்யப் பார்த்திலனுகில் மற் றோர் இடத்தில் செய்கிறான்; [2] இனித்தான், ஸ்ரீபரதாழ்வான் 'பெருமாளை மீட்டுக்கொண்டு வந்து திருமுடி சூட்டவேண்டும்' என்று பாரித்துக்கொண்டு செல்ல, 'பதினன்கு ஆண்டும் கழித்தல்லது மீளோம்' என்ற ஸ்வதந்திரனே அன்றே; ஆகை யாலே, நமக்கு நான்குநாள் தாழ்த்தேயாகிலும் நம் காரியம் செய்யாமை இல்லை" என்று பார்த்து, 'திருக்குடந்தையிலே சென்றுபுகவே நாம் விரும்பினவை அனைத்தும் கிட்டும், நமக்கு ஒருகுறையும் இல்லை' என்று திருக்குடந்தையை அடைந்தார்.

அவ்வாறு அடைய, [3] ஸ்ரீபரதாழ்வான் 'இராச்சியத்துக்கு நிமித்தமானவனனேன்' என்றதாலே ஒருபுண்பாடும், "'தாயைக்கொண்டு இராச்சியத்தை வாங்கிப் பெருமாளைக் காடேறப் போகவிட்டான்' என்று நாட்டார் சீறுபாறு என் றிருப்பார்கள்" என்றதாலே வந்ததொரு அச்சத்தையு முடையவனுய்க்கொண்டு; நான் திருவடிகளிலே சென்று கிட்டி னுல், உடன்பிறந்தவன் அல்லனே! சிஷ்யன் அல்லனே! தாசன் அல்லனே! என்பக்கல் மலர்ந்த முகத்தராய்த் திரு

---

1. மேலே கூறிய இரண்டு சங்கைகளையும் முறையே பரிஹரிக்கிறார் 'ஒருகால்' என்று தொடங்கி. என்றது, அரசர்கள் ஆசனபேதத்தாலே காரியம் செய்யுமாறு போலேயும், நம்பெருமாள், திருமங்கையாழ்வாருடைய அபேக்ஷிதத்தைக் கோயிலிலே செய்யாமல் திருக்குறுங்குடியிலே செய்தது போலேயும் தேசம் அறுதியிடப்பட்டதாயிருக்கும் என்றபடி.

2. காலவேற்றுமையாலும் காரியம் செய்வான் என்பதற்கு, வேறும் ஒரு காரணம் காட்டுகிறார் 'இனித்தான்' என்று தொடங்கி. ஆக, இதனுல், 'இன்னுனை இன்ன தேசத்திலே அங்கீகரித்துக் கடவோம்' என்றும், 'இன்ன காலத்திலே அங்கீகரிக்கக்கடவோம்' என்றும். அவனுக்கு இரண்டு நிலைகள் உண்டு; ஆகையாலே, அந்த இரண்டு நிலைகளையும் அறிந்திருக்கிற இவர், இங்குச் செய்திலனுகில் இன்னம் ஒரு தேசத்திலே செய்கிறான், இப்போது செய்திலனுகில் வேறு ஒரு காலத்திலே செய்கிறான் என்று திருக்குடந்தை யிலே புக்கார் என்றபடி.

3. 'திருக்குடந்தையிலே போனுல் நம் அபேக்ஷிதங்கள் எல்லாம் கிட்டும்' என்று இவர் பாரித்ததற்கும், இதற்கு அவன் காரியம் செய்யாமைக்கும் உதாஹரணம் காட்டுகிறார் 'ஸ்ரீ பரதாழ்வான்' என்று தொடங்கி.

அருள் செய்யாதொழிவரோ! என்று பார்த்து; அம்புளய்வார் படைதிரட்டிக்கொண்டு போமாறுபோலே, திருவயோத்தியி லுள்ளாரில் மரங்கள் அகப்பட ஆர்த்தியில் தன்னில் குறைந்த பொருள்கள் இல்லைஅன்றே, நம்ஆர்த்தி கண்டு மீண்டிலராகி லும் ஆர்த்தர் பலரையும் கண்டால் மீளாமை இல்லை என்று பார்த்து [1]"இந்த மந்திரிமார்களோடுங்கூட என்னில் தலையால் வணங்கி யாசிக்கப்பட்ட தேவரீர், பின்பிறந்தவனும் சிஷ்ய னும் தாசனுமான அடியேனுக்குத் திருவருள் செய்யவேண் டும்" என்கிறபடியே, இவன் செல்ல; பெருமாளும்"இராச்சிய தந்திரங்களில் குறைவுபடாமல் நடத்தாகின்றீரே? காரியங் கள்செய்யுமிடத்தில் மந்திரிகளோடுகூடிச் செய்யாகின்றீரே?" என்பன போலே இவனுக்கு இடம்அற வார்த்தைகள் கேட் டாற்போலே; இவர் அடைந்த இடத்தில் [2]திருக்கண்களை அலர விழித்துக் குளிரநோக்கியருளுதல், திருப்பவளத்தைத் திறந்து ஒருவார்த்தை அருளிச்செய்தல், அணைத்தல் செய்யக் கண்டிலர். [3]"அந்தக்கிருஷ்ணன், என்னை அக்ரூரனே! என்று அருளிச்செய்வர்" என்றாற்போலே பகைவன் சோறு உண்டுவளர்ந்தவன் மனோரதம் பெற்றானே அன்றே; அப்படி யே தம்மையும் கிட்ட வந்து அணைக்கப்பெறுமையாலே மிகவும் துக்கித்தவராய், [4]இனிமையாலும் ஈடுபட்டு, அழகு முதலாயின வற்றாலும் போர நொந்து, பால்குடிக்கும் குழந்தை தாய்பக்க லிலே கிட்ட முகம்பெறுவிட்டால் அலமந்து நோவுபடுமாறு

---

1. "ஏபிஸ்ச ஸசிவைஸ் ஸார்த்தம் ஸ்ரிதஸ்ய யாசிதோ மயா
பிராதுஸ் ஸிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹஸி"
என்பது; ஸ்ரீராமா. அயோத். 101 : 12.

2. "கிடந்தாய் கண்டேனே" என்றதனைக் கடாக்ஷித்துத் 'திருக் கண்களை அலரவிழித்து' என்றது முதல், 'அணைத்தல் செய்யக் கண்டிலர்' என்றது முடிய அருளிச்செய்கிறார்.

3. 'அடியார்கட்காக எழுந்தருளியிருக்குமவன் நம் காரியம் செய்யாமை இல்லை' என்று அவனுடைய ஸ்வபாவத்தை அநுசந்தித்துக் 'கிடைக்கும்' என்று சென்றீரேயாகிலும், உமக்குக் கிடைக்குமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அந்தக் கிருஷ்ணன்' என்று தொடங்கி.

"யஸ் அநந்தஸ் ப்ருதிவீம் தத்தே ஸேகராஸ்திதி ஸம்ஸ்திதாம்
ஸ அவதீர்ணே ஜகத்யர்த்தே மாம் அக்ரூரேதி வக்ஷ்யதி"
என்பது, விஷ்ணுபுரா. 5. 17 : 12.

4. "ஆராவமுதே", "ஏராரார்கோலம்" என்பனவற்றைக் கடாக்ஷித்து 'இனிமையாலும்' என்றும், "செந்தாமரைக்கண்ணே" என்றதனைக் கடா க்ஷித்து 'அழகு முதலாயினவற்றாலும்' என்றும் அருளிச்செய்கிறார்.

போலே, அவன் சந்நிதியிலே தளர்ந்து கிடந்து கூப்பிட்டு, [1] இன்னம் எத்தனைத் திருவாசல் தட்டித் திரியக்கடவேன் என்னும் ஆர்த்தியோடே தலைக்கட்டுகிறார்.

---

## 520.

ஆரா அமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே!

**பொ - ரை**:—எம்மானே! தெவிட்டாத அமுதே! அடியேனுடைய சரீரமானது, உன் விஷயத்தில் அன்புதானே தனக்கு உருவமாகிப் பின்பு தண்ணீராகி ஒரு நிலையில் நில்லாமல் கரையும்படி உருக்குகின்ற நெடுமாலே! சிறப்புப்பொருந்திய செந்நெற்பயிர்கள் சாமரையைப் போன்று வீசுகின்ற செழுமைபொருந்திய நீரையுடைய திருக்குடந்தை என்னும் திவ்வியதேசத்தில் அழகுபொருந்திய ஒப்பனையானது விளங்கும்படியாகச் சயனித்திருக்கின்றவனே! என்கண்களாலே கண்டு அநுபவிக்கப்பெற்றேன் என்கிறார்.

**வி - கு**:—உடலமானது அன்பாகி நீராகி அலைந்து கரையும்படியாக உருக்குகின்ற நெடுமாலே என்க. வீசும் திருக்குடந்தை என்க.

இத்திருவாய்மொழி, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

**ஈடு**:—முதற்பாட்டு. [2] உன் அழகாலே என்னை உருக்குகின்ற நீ கண்வளர்ந்தருளக் கண்டேன்; குளிரநோக்குதல், அணைத்தருளுதல், செய்யக் காண்கின்றிலேன் என்கிறார்.

[3] **ஆராஅமுதே** - அநுபவியாநின்றாலும் கிரமப்பிராப்தி பற்றாத விஷயத்தைப் பிரிந்தார் எங்ஙனே ஆறி இருக்கும்படி. என்றது, முற்படக் காட்சியாய், அதன்பின்னர் அணுகி,

---

1. "உனக்காட்பட்டும் இன்னம் உழல்வேனே" என்றதனைக் கடாகூத்து 'இன்னம் எத்தனைத் திருவாசல் தட்டித் திரியக்கடவேன்' என்கிறார்.

2. "உருக்குகின்ற நெடுமாலே" என்றதனைக் கடாகூத்து 'உன்னழகாலே' என்று தொடங்கியும், "கிடந்தாய் கண்டேன்" என்றதனைக் கடாகூத்துக் 'கண்வளர்ந்தருளக் கண்டேன்' என்றும் அருளிச்செய்கிறார். அதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'குளிர நோக்குதல்' என்று தொடங்கி.

3. "ஆரா அமுதே" என்றது, உண்ண உண்ண தெவிட்டாத திருப்தி பிறவாத அமுதம் என்றபடி. இதனையே விவரணம் செய்கிறார் 'அநுபவியாநின்றாலும்' என்று தொடங்கி. 'கிரமப்பிராப்தி' இன்னது என்றும், 'அது பற்றாத' என்றதனையும் காட்டுகிறார். 'முற்பட' என்று தொடங்கி.

பின்னர் ஸ்பரிசமாய், இப்படியே அன்றே அநுபவப் பிரகாரங்கள் இருக்கின்றன; அத்துணைக் கிரமங்களைப் பார்த்திருக்க ஒண்ணாதபடி இருக்கையைத் தெரிவித்தபடி. **ஆரா அமுதே** - [1]கடலில் உப்புச்சாறு குடிப்பார்க்கு, தேவயோனியிலே பிறக்கவேணும், பிரஹ்மசரியம் அநுஷ்டிக்கவேணும், இத்தனையும் இருந்தால் ஒருதடவை உண்ணக்கூடியதாக இருக்கும்; இது அங்ஙன் அன்றிக்கே, சர்வாதிகாரமுமாய், எப்பொழுதும் உண்ணக்கூடியதாய், பிரஹ்மசரியம் முதலானவற்றினின்றும் நழுவுதலால் வரும் குற்றங்களையும் தானே போக்கக்கூடியதாயிருக்கும். [2]வடதேசத்திலே லோகசாரங்க மஹாமுனிகள் வசித்துக்கொண்டிருக்க, இங்கேயுள்ள் ஒருவன் அங்கு ஏறச்செல்ல, 'பிள்ளாய்! தென்தேசத்தில் விசேஷம் என்?' என்று கேட்க, '**திருவாய்மொழி என்ற ஒரு பிரபந்தம் அவதரிக்க, அதனைச் சிஷ்டர்கள் மேற்கொண்டுபோரக்கொண்டாடிக் கொடுபோகாநின்றார்கள்**' என்ன, 'அதிலே உனக்குப் போவது ஒரு பாசுரத்தைச் சொல்லிக் காணாய்' என்ன, "'**ஆராவமுதே**' என்கிற இத்துணையே எனக்கும் போம்" என்ன, 'நாராயணன் முதலான நாமங்கள் கிடக்க, இங்ஙனேயும் ஒரு பெயர் உண்டாவதே' என்று அதனைக் காணமிக்க ஆவலுடையவராய், 'இச்சொல் நடையாடுகிற தேசத்து ஏறப்போவோம்' என்று அப்பொழுதே புறப்பட்டுப் போந்தார். **ஆராஅமுதே** - [3]"ஸஹபத்ன்யா - பத்நியோடுகூட" ஆழங்காலிலே இழிவார் ஒருகொம்பை ஒரு கொடியைப்

---

1. இன்னார்க்கு ஆரா அமுது என்னுதல், இன்னபோது ஆரா அமுது என்னுதல் செய்யாமல், பொதுவாக "ஆராவமுது" என்கையாலே 'அதிகாரி நியமம் இல்லை' என்று வேறுபடுத்திக் காட்டுகின்றார் 'கடலில்' என்று தொடங்கி. உப்புச்சாறு - திருப்பாற்கடலில் தோன்றிய அமுதம்.

2. "ஆராவமுது" என்ற இத்திருப்பெயர் போக்கியம் என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'வடதேசத்திலே' என்று தொடங்கி.

3. இத்திருப்பெயரின் இனிமையின் மிகுதி ஈசுவரனுக்கும் தனியே அநுபவிக்கப் போகாது என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'ஸஹபத்நியா' என்று தொடங்கி.

"கதே புரோஹிதே ராமஃ ஸ்நாதஃ நியதமானஸஃ
ஸஹபத்நியா விஶாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத்"

என்பது, ஶ்ரீராமா. அயோத். 6 : 1.

"ஸஹபத்நியா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆழங்காலிலே என்று தொடங்கி. "கொம்புபோற் சீதை" (திருவாய். 4. 2 : 8.) என்ற தனைத் திருவுள்ளம்பற்றிக் 'கொம்பு' என்கிறார். அதனை விவரணம் செய்கிறார் 'கிண்ணகத்தில்' என்று தொடங்கி. கிண்ணகம் - ஆற்றுப்பெறுக்கு.

பிடித்துக்கொண்டு இழியுமாறு போலே. கிண்ணகத்தில் இழிவார் அறிந்தவர்களைக் கைப்பிடித்துக்கொண்டு இழியுமாறு போலே, பெருமாள் பெரியபெருமாளை அநுபவிக்கும்போது பிராட்டியைக்கூடக் கொண்டாயிற்று இழிவது. "விசாலாக்ஷயா-பரந்த கண்களையுடையவளோடு" இவர்க்குப் பெரிய பெருமாள் பக்கல் உண்டான பிரேமத்தின் மிகுதியைக் கண்டு, தன்னை அணைக்கும்போதையிற் காட்டிலும் உடம்புமுழுதும் கண்களானபடி. "நாராயணம் உபாகமத் - நாராயணனை அடைந்தார்" இவர் [1] நியதி இருக்கிறபடி, இக்கண்களுக்கு இலக்காய் ஆழங்காற்படாதே அவ்வருகுபட்டார். இதனால் என் சொல்லியவாறே? எனின், தான் தன்னை அநுபவிக்கும் போதும் கூட்டுத்தேடவேண்டும்படியாயிற்று ஆராமை இருக்கும்படி என்பதனைச் சொல்லியவாறும். **ஆராஅமுதே** - இத் திருவாய்மொழியில் இவர்க்கு உண்டான ஆற்றாமைக்கெல்லாம் வித்து இச்சொல்லே ஆயிற்று.

அடியேன் - மயர்வுஅற மதிநலம் அருளப்பெற்ற ஸ்வரூபத்தால் சொல்லுகிறார் அல்லர், இனிமைக்குத் தோற்றுப் [2] புற்கவ்விச் சொல்லுகிறார். [3] "பரவாஸ்மி-அடியவன் ஆகிறேன்"

---

1. நியதியாவது - ஐம்பொறிகளையும் அடக்கிய தன்மை.

2. புற்கவ்வுதல் - போரிலே தோற்றவன் ஆயுதத்தைப் போட்டுக் கீழே விழுதல்.

வில்லெ டுக்கவரி யார்கள் ஜயசில வீர ரிங்குமுளர் மெல்லியோய்!
கல்லெ டுக்கவரி யானு நின்றனன் அதுஇன்று நாளையிடை காணலாம்
எல்லெ டுத்தபடை இந்தி ராதியர் உனக்கிடைந் துயிர்கொ டேகுவார்
புல்லெ டுத்தவர்க ளல்லம் வேறுசில போரெடுத் தெதிர் புகுந்துளேம்.

என்பது, கம்பராமாயணம்.

விற்கவ்வு வாளி யடலேவர் மீது விடவஞ்சி வீரர் எதிரே
புற்கவ்வு மாகில் விரைவோடு கங்குல் புலராமுன் வந்து பொருவேன்
சொற்கவ்வை யாக நினையற்க கொன்று சுரர் நா டளிப்ப னினியுன்
சிற்கவ்வை தீர வவருக்கும் நின்ற திருமா லினுக்கு மெனவே.

என்பது, வில்லிபாரதம்.

3. 'ஸ்வரூபத்தோடு கூடியதான தாஸ்யமே உத்தேசியம்' என்றிருக்கிறவருக்கு, இனிமைக்குத் தோற்று, "அடியேன்" என்கிற இது, பொருத்துவதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பரவாஸ்மி' என்று தொடங்கி.

"பரவாஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத"

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15; 7.

என்றவர் [1]"அவர் குணங்களால் கைங்கர்யம் செய்துகொண்டிருக்கிறேன்" என்றுற்போலே. உடலம் நின்பால் அன்பாயே நீராய் அலைய உருக்குகின்ற நெடுமாலே - சேஷத்வம் ஆத்மாவுக்கு ஸ்வரூபமானால் சரீரம் அதற்கு விரோதியாய் நிற்கும் நிலைகுலைந்தது. [2]'நான்' என்று இருக்கக்கூடிய இவர் தாம், '**அடியேன்**' என்கிறது, விஷயத்தினுடைய இனிமையின் மிகுதியே அன்றோ; அப்படியே சரீரமும் விஷயத்திற்கு வசப்பட்டதாய் அழிந்தபடி. [3]சேஷத்வமே உருவமான ஆத்மாவைத் தன்வழியே இழுக்கை தவிர்த்து, அதன்வழியே தான் ஒழுகும்படியாயிற்று விஷயத்தினுடைய இனிமை. அன்றிக்கே, [4]ஞான ஆனந்த ஸ்வரூபனான ஆத்மாவாதல், அதற்குத் தோள்தீண்டியான ஞானம் செல்லுதற்கு வழியான மனமாதல் அன்றிக்கே, இவற்றுக்கு அவ்வருகான தோல் சதை நிணம் எலும்பு வடிவமான சரீரமும் அழியும்படியாயிற்று என்னுதல். [5]சேதனம் என்றும் அசேதனம் என்றும் கூறப்படுகின்ற வேற்றுமைஅற அழிக்கவல்ல உன் பக்கலிலே அன்புக்கு இருப்பிடமாகை தவிர்த்து அன்புதான் ஒரு வடிவு கொண்டாற்போலே இராநின்றது என்பார் '**நின்பால் அன்பாயே**' என்கிறார். [6]உடலம் அன்பாய், அன்புதான் நீராய்க்

---

1. "அஹம் அஸ்ய அவரோ ப்ராதா குணைஃ தாஸ்யம் உபாகதஃ
திருதஞ்ஜஸ்ய பஹுஞ்ஜஸ்ய லக்ஷ்மணோ நாமநாமதஃ"
என்பது, ஸ்ரீராமா. கிஷ். 4: 12.

2. விரோதியாய் நிற்கும் நிலை குலைகைக்குக் காரணம் யாது? என்ன, திருஷ்டாந்த மூலமாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நான் என்று' என்று தொடங்கி.

3. 'சேஷத்வம் ஆத்மாவுக்கு' என்று தொடங்கிய மேல் வாக்கியத்தின் விவரணம், 'சேஷத்வமே உருவமான' என்று தொடங்கும் வாக்கியம். 'தான்' என்றது, சரீரத்தை.

4. விரோதியான சரீரமும் அழியும்படியாயிற்று என்று ஒரு பாவம் அருளிச்செய்து, அசேதனமான சரீரமும் அழியும்படியாயிற்று என்று வேறும் ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'ஞான ஆனந்த ஸ்வரூபனான' என்று தொடங்கி.

5. 'அன்பையுடைத்து' என்னாது, "அன்பாயே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சேதனம் என்றும்' என்று தொடங்கி.

6. வடிவு இல்லாத அன்பு நீராகக்கூடுமோ? என்ன, அசேதனமான சரீரம் விஷயவைலக்ஷண்யத்தாலே அன்பானாற்போலே, வடிவில்லாத அன்பும் நீராயிற்று என்கிறார் 'உடலம் அன்பாய்' என்றுதொடங்கி.

கொண்டு அலையாகின்றது என்பார் 'உடலம் அன்பாய் நீராய் அலைந்து' என்கிறார். [1] முதல் முன்னம் கேள்வியாய், அதன் பின் மனனமாய், பின்னை பாவனையாய், அது பிரத்யக்ஷ ஸமாநாகாரமாய்க் கொண்டு அவ்வடைவிலே வருகிறதன்றே, விஷயம் அழிக்க அழிகிறதித்தனை அன்றே. நீர் தன்பக்கலிலே அகப்பட்டதனைக் கரைத்துத் தான் கரையாதிருக்குமாயிற்று; இங்கு அங்ஙன் அன்று, நீர்தானேயிற்றுக் கரைகிறது என்பார் 'நீராய் அலைந்து கரைய' என்கிறார். [2] அன்பு நீரானால், நீர்தான் கரையத் தட்டு இல்லையே. இத்தலை அளவு இது ஆனால், அத்தலை செய்கிறது என்? என்னில், 'உருக்குகின்ற' என்கிறார்; என்றது, [3] அழிக்கைக்கு அடி இட்ட இத்தனையாயிற்று என்கிறார் என்றபடி. [4] அழிக்கிறவன் 'ஆபரணங்கள்' என்று பாராதே உருக்கி அழிக்குமாறுபோலே காணும் இவனும் உருக்கி அழிக்கிறபடி. [5] தேசமான அணிகலனும் இவர் கைகூப்புச் செய்கையே அன்றே.

ஆழ்வார்க்கு உள்ள உடலை உருக்கி அழிக்கு மித்தனையோ? இவன்தனக்கு ஓர் அழிவில்லையோ? எனின், 'நெடுமாலே' என்கிறார். என்றது, எதிர்த்தலையில் அழிவுகண்ட

---

1. சாஸ்திரம் சொல்லுகிறபடி அன்றிக்கே, உடலம் அன்பாய், அன்பு நீராய், இப்படி முறைகேடாகக் கூடுதல் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முதல் முன்னம்' என்று தொடங்கி.

2. நீர் கரையக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அன்பு நீரானால்' என்று தொடங்கி.

3. "உருக்குகின்ற" என்ற நிகழ்காலத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அழிக்கைக்கு' என்றுதொடங்கி.

4. சிலாக்கியமான இவர் திருமேனியை, ஆபரணம்போலே உருக்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அழிக்கிறவன்' என்று தொடங்கி. அழிக்கிறவன் - தட்டான்.

5. இவர் திருமேனி ஆபரணம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தேசமான' என்று தொடங்கி.

பூசுஞ் சாந்தென் னெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய
வாச கஞ்செய் மாலையே வான்பட் டாடையு மஃதே
தேச மான அணிகலனும் என்கை கூப்புச் செய்கையே
ஈசன் ஞால முண்டு மிழ்ந்த எந்தை எக மூர்த்திக்கே.

—பத்து, திருவாய். 4. 3: 2.

பின்பே அன்றே இத்தலையில் அழிவு என்றபடி. [1] அவனுடைய வியாமோகத்தைப் பார்த்தால் இது ஒன்றும் போராதபடியா யிருக்கும். அவனுடைய அழிவு சொல்லும் போது இனி இவ்வடைவில் சொற்களைக் கொண்டு சொல்ல ஒண்ணாது. 'நெடுமால்' என்னில் என்னுமித்தனை. மால் - வியாமோகம். நெடுமால் - மிக்க வியாமோகத்தை யுடையவனா யிருக்கை. அன்றிக்கே, மால் என்று, பெரியோன் என்றபடியாய், அதுதானும் பிரமன் சிவன் முதலானவர்கள் அளவோ? என்னில், அன்று, நெடுமால் - [2] மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவன் என்கிறது என்னுதல்; சர்வேசுவரன் என்றபடி. [3] அவனுடைய பெருமையும் இவரை அழிக்கைக்குக் காரணமாம் இத்தனை அன்றே. சீர் ஆர் செந்நெல் கவரி வீசும் - மிக்க கனத்தையுடைத்தான செந்நெற்கதிர்களானவை திருக்கண்வளர்ந்தருளுகிற அழகைக்கண்டு கைங்கர்யம் செய்வாரைப்போலே அசையாநிற்கும். சீர்-கனமும், அழகும். 'கவரி வீசும்' என்றது, கவரிபோலே வீச என்றபடி. கவரி - சாமரை. அன்றிக்கே, ஆராவமுதாழ்வாருக்கு அமுதுபடியாகிற சீர்மையையுடையதாதலின் 'சீராார் செந்நெல்' என்கிறார் என்னுதல். அப்போது "நான் சர்வேசுவரனுக்கு போக்யன்" என்கிற சீர்மை. [5] "மரங்கள் எல்லாம் காலம் அல்லாத காலத்

---

1. "நெடு" என்ற சொல்லுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. ஆயின், "நீராய் அலைந்து கரைய" என்பது போன்று, சொல்லாது ஒழிந்தது என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'அவனுடைய அழிவு சொல்லும்போது' என்று தொடங்கி.

2. ஆருயி ரேயோ! அகலிட முழுதும் படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்த
பேருயி ரேயோ! பெரியநீர் படைத்துஅங் குறைத்தது கடைந்தடைத் துடைத்த
சீருயி ரேயோ! மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ!
ஓருயி ரேயோ! உலகங்கட் கெல்லாம் உன்னை நான் எங்குவந் துறுகோ.

என்பது, திருவாய். 8. 1: 5.

3. சௌலப்யம் போன்று, மேன்மையும் ஈடுபடுத்தக் கூடுமோ? என்ன, 'அவனுடைய பெருமையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

4. "அஹமன்னம் அஹமன்னம் அஹமன்னம்
அஹமன்னாதஃ அஹமன்னாதஃ அஹமன்னாதஃ"

என்பது, தைத்திரீய. உப. ப்ரு. 10.

5. "அகால பலினோ வ்ருக்ஷாஃ ஸர்வே"

இத்தனை, மேலே காணல் தகும்.

திலும் பயன் அளிக்கக்கடவன''என்னுமாறுபோலே, எப்பொழுதும் செந்நெற்கள் உள்ளன என்பார் 'வீசும்' என [1]நிகழ்காலத்தாற்கூறுகிறார்.என்றது,அறுத்து நடவேண்டாபோலே காணும் இருப்பது என்றபடி. [2]கருத்து அறிந்து அடிமை செய்வாரைப்போலே. அன்றிக்கே, [3]சேஷ வஸ்துக்களின் தொழில்கள் முழுதினையும் சேஷி தனக்கு அடிமையாக நினைத்திருக்கிறபடியால் 'கவரி வீசும்' என்கிறார் என்னுதல். செழுநீர்த் திருக்குடந்தை - திருக்கண்வளர்ந்தருளுகிற சௌகுமார்யத்துக்குப் போரும்படி அழகிதான தண்ணீர் நிறைந்திருக்கின்ற திருக்குடந்தையிலே. செழுநீர் - பெருநீர் என்றுமாம். ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் - அழகு சமைந்த ஒப்பனை நிறம்பெறும்படி திருக்கண் வளர்ந்தருளுகின்றாய். [4]நாட்டார் உலாவித் திரியும்போது அவயவங்களிலுண்டான பொல்லாங்குகள் மறைந்து ஒன்றுபோலே இருக்கும், ஓர் இடத்தில் இருத்தல் கிடத்தல் செய்தவாறே அழகற்றதன்மை தோற்றிக் கண்கொண்டு பார்க்க ஒண்ணாதபடி இருப்பர்; இங்கு அங்ஙன் அன்றிக்கே, [5]"பகைவர்களைத் தபிக்கச் செய்கின்ற ஸ்ரீராமனை அந்தப்பெருமாள் என்னுல்உறக்கத்தினின்றும்உணர்த்தப்பட்டார்''என்கிறபடியே,கிடந்த கிடைக்கு ஆலத்தி வழிக்க

---

1. முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

என்பது, இலக்கணம்.

2. அசேதனமான செந்நெல், கவரி வீசக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கருத்து அறிந்து' என்று தொடங்கி. என்றது, அஹ்ருத ஸஹஜ தாஸ்யரான நித்தியசூரிகளுடைய அவதாரமாகையாலே கூடும் என்றபடி. அஹ்ருத - அபகரிக்கப்படாத.

3. இவை அசேதனங்களானாலும், சேஷி நினைவாலே அடிமையாகக் கூடும் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'சேஷவஸ்துக்களின்' என்று தொடங்கி.

4. "கிடந்தாய் கண்டேன்" என்கைக்கு, கிடக்கிற நிலையிலே அப்படி அழகு உண்டோ? என்ன, நாட்டாரை நோக்க வேறுபட்டதாயன்றே கிடையழகு இருப்பது என்கிறார் 'நாட்டார்' என்று தொடங்கி.

5. "வாயஸேந ததஃ தேந பலவத்க்லிச்யமானயா
ஸ மயா போதிதஃ ஸ்ரீமாந் ஸுகஸுப்தஃ பரந்தபஃ"

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 24. திருவடியைப்பார்த்துப் பிராட்டி கூறியது. சுலோகத்திலுள்ள "ஸ்ரீமாந்" என்ற சொல்லுக்கு, பாவம், 'இவன் உணரில்' என்று தொடங்கும் வாக்கியம்.

வேண்டும்படி இருத்தலின் 'ஏரார்கோலம் திகழ' என்கிறார். 'இவன் உணரில் செய்வது என்' என்று வயிறு பிடிக்க வேண்டி இருக்கை. கிடந்தாய் கண்டேன்-"சுகமாகத் தூங்குகிறவன்" என்கிறபடியே, கிடை அழகினைக் கண்களாலே காணப்பெற்றேன், நினைத்த பரிமாற்றம் பெற்றிலேன்..என்றது, [1]எழுந்திருத்தல், இருத்தல், உலாவுதல், 'என்செய்தாய்' என்று வினவுதல், அணைத்தல் செய்யப்பெற்றிலேன் என்றபடி. [2]எம்மானே - 'இது நம்மது' என்று இராதொழியப் பெற்றேனுகில் நான் ஆறி இருக்கலாயிற்றே. என்றது, சம்பந்தத்தைக் கொண்டு என்னை இப்படி நலியலாமோ என்கிறார் என்றபடி. அன்றிக்கே, வடிவினைப் போன்றே சம்பந்தமும் என்னை நலியாகின்றது என்கிறார் என்னுதல். (1)

## 521.

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி! என்னை ஆள்வானே!
எம்மா உருவும் வேண்டு மாற்றால் ஆவாய்! எழிலேறே!
செம்மா கமலம் செழுநீர் மிசைக்கண் மலரும் திருக்குடந்தை
அம்மா மலர்க்கண் வளர்கின் றானே! என்நான் செய்கேனே?

**பொ - ரை:**—எம்மானே! பரிசுத்தமான சொரூபத்தையுடையவனே! என்னை ஆள்கின்றவனே! எத்தகைய பெருமைபொருந்திய உருவங்களையும் விரும்பும் வகையிலே மேற்கொள்ளுகின்றவனே! அழகிய ஏறே! சிவந்த பெரிய தாமரை மலர்கள் செழுமைபொருந்திய தண்ணீர் மேலே கண்கள்போன்று மலர்கின்ற திருக்குடந்தை என்னும் திவ்விய தேசத்தில் அந்த அழகிய தாமரைபோன்ற திருக்கண்களை மூடிக் கொண்டு உறங்குகின்றானே! நான் என்செய்வேன்? என்கிறார்.

**வி - கு:**—மூர்த்தி - ஸ்வபாவம், வடிவுமாம்; ஏறு - இடபம். மிசைக்கண் என்றவிடத்தில் 'கண்' இடமுமாம். 'வளர்கின்றானே' என்பது, கண்களைத் திறந்து என்னை வினவுதல் செய்யாது உறங்குகின்றானே என்செய்வேன்! என்கிறார் என்றபடி.

---

1. "கிடந்தாய் கண்டேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எழுந்திருத்தல்' என்று தொடங்கி.

2. "எம்மானே" என்றதற்கு, இரண்டு பாவம் அருளிச்செய்கிறார். 'சம்பந்தத்தைக் கொண்டு என்னை இப்படி நலியலாமோ' என்றது, சம்பந்தம் இல்லையாகில் ஆறியிருக்கலாம், சம்பந்தமுள்ளதாகையாலே, 'இப்போதே பெற வேண்டும்' என்னும் மஞ்சவேகத்தைப் பிறப்பியாகின்றது; இதனையறிந்து விரைவாக உதவவேணும் என்கிறார் என்றபடி.

ஈடு :—இரண்டாம்பாட்டு. [1] இப்படிக் கூப்பிடச்செய்தே யும் மறுமாற்றம் தாராமையாலே, 'உம்முடைய காரியம் நீரே செய்யுமித்தனை அன்றே' என்று இருந்தானுகக் கொண்டு முன்புசெய்த உபகாரங்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.

எம்மானே! என் நான் செய்கேன்- [2] உடைமையோ! உடையவனே உடைமையை நிர்வஹிப்பார். 'நீயே உன்காரி யத்தைச்செய்து தலைக்கட்டிக்கொள்' என்கைக்கு வெறும் நானேயாய் இருந்தேனே. என்நாதனே! எம்மானே என் வெள்ளைமூர்த்தி-[3] "உலகத்திற்கெல்லாம் தலைவன்", "அந்தச் சர்வேசுவரனுக்கு அடியவனுய் இருக்கிறேன்" என்கிற பிர மாணங்கொண்டு அறிந்தேனே. பின்னர் எங்ஙனே செய்த படி? என்னில், [4] சுத்த ஸ்வரூபனுகையாலே தன்படிகளில் ஒன்றும் குறையாதபடி எனக்குத் தன்பேரூகத் தானே காட் டக் கண்டேன். சிறிது மயர்வு கிடக்க நீ அருளினையாகில் நான்

---

1. திருப்பாசுர முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய் கிறார். 'உம்முடைய காரியம் நீரே செய்யுமித்தனையன்றே' என்றது, பலம் உம்மதான பின்பு அதற்குத் தக்க சாதனானுஷ்டானமும் நீரே செய்யுமித்தனை யன்றே என்றபடி.

2. சாதனாநுஷ்டானம் செய்யப் போகாது என்கிறவிடத்தில் "எம் மானே" என்று ஸ்வாமித்வத்தைச் சொல்லுகிறதற்குப் பிரயோஜனம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உடைமையோ' என்று தொடங்கி. இவ் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'நீயே உன்காரியத்தை' என்று தொடங்கி. என்றது, ஸ்வம்மான (சொத்தான) என்னைப் பெறு கைக்கு ஸ்வாமியான நீயே சாதனாநுஷ்டானம் பண்ணவேண்டுமித்தனை யன்றே என்றபடி. 'வெறும் நானேயாயிருந்தேனே' என்றது, கேவலம் ஸ்வதந்திரனுயிருந்தேனே, உமக்கு ஸ்வம்மன்றே என்றபடி.

3. "எம்மான்" என்பதனை அறிந்திருந்தும், உபாசகர் தங்கள் முயற்சி யாலே தங்கள் காரியம் செய்துகொள்ள இல்லையோ? என்ன, "எம்மானே"? என்கிற இது, சாதனாநுஷ்டானம் பண்ணப் பிராப்தி இல்லாமையைச் சொல்லுகிறது என்னுமிடம் தோன்ற அருளிச்செய்கிறார் "உலகத்திற்கெல் லாம்" என்று தொடங்கி.

"பதிம் விஸ்வஸ்ய ஆத்மேஸ்வரம் ஸாஸ்வதம்
ஸிவம் அச்யுதம்."

"யஸ்ய அஸ்மி தம் நாந்தரோமி."

4. "வெள்ளை" என்று வெளுப்பாய், சுத்தியைச் சொல்லுகிறது, "மூர்த்தி" என்பது ஸ்வரூபம். ஆக, சுத்தஸ்வரூபனுகையாலே எனக்குத் தன் பேரூக் மயர்வற மதிநலம் அருளினன் என்கிறார் 'சுத்த ஸ்வரூபனுகையாலே' என்று தொடங்கி. 'ஒன்றும் குறையாதபடி' என்றதனை விவரிக்கிறார் 'சிறிதுமயர்வு' என்று தொடங்கி.

ஆறி இருக்கலாயிற்றே. என்னை ஆள்வானே - காட்டுகிற போது தெரியக் காட்டி, பின்னர் என்வழியேயாக்கி என்னைக் கைவிட்டாயோ. என்றது, "அஞ்சிறையமடநாராய்", 'மாசறு சோதி" தொடக்கமான திருவாய்மொழிகளிலுண்டான வியசனங்களையும் போக்கி, குணஞானத்தாலே தம்மைத் தரிப்பித்துக்கொண்டு போந்த படியைத் தெரிவித்தபடி. எம் மா உருவும் ஆவாய்-[1] எனக்காகவும் அடியார்கட்காகவும் நீ படும்பாடு அறிவுதியே. அன்றிக்கே, எ மா உருவும் ஆவாய்' என்று கொண்டு, [2] எவ்வகையாலும் விலக்ஷணமான விக்கிரஹங்களை மேற்கொள்ளுகின்றவனே! என்னுதல். என்றது, [3] "என்னுடையதான ஸ்வபாவத்தை ஏற்றுக்கொண்டு" என்கிறபடியே, பிரகிருதி சம்பந்தமில்லாத தெய்வத்தன்மை பொருந்திய திருமேனியாக இருக்கை. [4] வேண்டுமாற்றால் - "தனக்கு வேண்டுருக்கொண்டு" என்கிறபடியே, இச்சையாலே என்னுதல். அடியார்கள் வேண்டுமாற்றால் என்னுதல்; "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்னக்கடவதன்றே. அன்றிக்கே, 'எ மா உருவும் ஆவாய்' என்றுகொண்டு [5] "எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே, அடியார்களைக்

---

1. "எம்மாவுருவும்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'எனக்காகவும்' என்று தொடங்கி. முதற்பொருளில் "எம்" என்பது, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

2. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'எவ்வகையாலும்' என்று தொடங்கி. 'எவ்வகையாலும்' என்றது, அப்ராக்ருதமாகையாலும், இச்சையே காரணமாகையாலும், பரார்த்தமாகையாலும் என்றபடி.

3. அவதார விக்கிரஹங்களுக்கு வைலக்ஷண்யம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என்னுடையதான' என்று தொடங்கி.

"அஜோபிஸந் அவ்யயாத்மா பூதாநாம் ஈஸ்வரோபிஸந்
ப்ரகிருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா"

என்பது, ஸ்ரீ கீதை. 4: 6.

4. வேண்டுமாற்றால் - இச்சித்தவகையாலே. தான் இச்சித்தபடியே என்னுதல்; அடியார்கள் இச்சித்தபடியே என்னுதல். "தனக்கு வேண்டுருக்கொண்டு" என்பது, தான் இச்சித்தபடியே வடிவைக் கொள்ளுவதற்கு மேற்கோள். இது, திருவாய்மொழி அடியார்கள் இச்சித்தபடியே வடிவைக் கொள்ளுவதற்கு மேற்கோள், "தமருகந்த தெவ்வுருவம்" என்பது. இது, முதல் திருவந். 44.

5. மூன்றாவது பொருளை அருளிச்செய்கிறார் 'எங்கின்ற யோனியுமாய்' என்று தொடங்கி. எல்லாச் சாதிகளிலும் பிறந்தவனே! என்பது பொருள். "எங்கின்ற" என்பது, திருவிருத்தம். மா உரு - விலக்ஷணமான விக்கிரஹம். இது, மேலே அருளிச்செய்த மூன்றுவகையான பொருள்கட்

காக்கும்பொருட்டு நீ கொள்ளாத வடிவு உண்டோ என்னுதல். எல்லாவடிவங்களும் அவன் கொண்டவையாகையாலே சிலாக்கியமாயிருக்கிறபடி; ஆதலால், "**மாஉரு**" என்கிறது. என்றது, [1] "தோன்றுதல்" என்கிறபடியே, பிரகிருதி சம்பந்தம் இல்லாத தெய்வத் திருமேனியை இதர சஜாதீயமாக்குமித்தனை என்றபடி. [2]"பகவானுடைய மகத்தான அந்தத் திவ்யமங்கள விக்கிரஹமானது வேறுபட்டது" என்னுமித்தனை அன்றே. கர்மம் அடியாக இவன் பிறக்குமாறுபோலே அன்றே அநுக்கிரஹம் அடியாக அவன் பிறக்கும்படி என்பார் '**வேண்டு மாற்றல் ஆவாய்**' என்கிறார். [3] இருவர்க்கும் பிறவி ஒக்கும். இவனுக்குக் கர்மங்கள் அழியப் பிறவி நீங்கும், [4]இவன் கர்மங்கள் அவன் காலிலே குனியப்போம்; அவனுக்கு நித்தியமாகச் செல்லாநிற்கும். [5] இனி, அவனுக்குக் கர்மம் என்னப் பார்க்

---

கும் ஒக்கும். "வேண்டுமாற்றல் எம் மா உருவும் ஆவாய்" என்பதனை, மேலே அருளிச்செய்த மூன்று வகையான பொருள்கட்கும் தனித்தனியே கூட்டிக்கோடல் வேண்டும். ஆக, இச்சித்தபடியே எங்களுக்காக விலக்ஷணமான அவதார விக்கிரஹங்களையுடையவனனவனே! என்பது முதற்பொருள். இச்சையாலே எல்லாவகையாலும் விலக்ஷணமான விக்கிரஹங்களையுடையவன் என்பது இரண்டாவது பொருள். அநேகமான விக்கிரஹங்களையுடையவனே! என்பது மூன்றாவது பொருள்.

1. ததஃ அகில ஜகத்பத்மபோதாய அச்யுதபாநுநா
தேவகீ பூர்வசந்த்யாயாம் **ஆவிர்பூதம்** மஹாத்மநா"

என்பது, விஷ்ணுபுரா. 5. 3: 2.

2. "ஸமஸ்தாஃ ஸக்தயஃ ச ஏதாஃ ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதாஃ
**தத்விஶ்வரூப வைரூப்யம் ரூபம் அஸ்யத் ஹரேஃ மஹத்**"

என்பது, விஷ்ணுபுரா. 6. 7: 70. இது, அவனுடைய விக்ரஹம் அப்ராகிருதம் என்பதற்குப் பிரமாணம். 'வேறாயிருக்கும்' என்றது, அப்ராக்ருதமாயிருக்கும் என்றபடி.

3. ஆனால், இருவர்க்கும் வாசி எது? என்ன, 'இருவர்க்கும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இவன் கர்மங்கள் அழிவதற்குக் காரணம் எது? என்ன, 'இவன் கர்மங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. நித்தியமாகச் செல்லுகைக்குக் காரணம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி, அவனுக்கு' என்று தொடங்கி. அதுதானும் நித்தியமேயன்றே அவனுக்கு, ஆனபின்பு, அநுக்ரஹத்துக்கு முடிவில்லாமையாலே, அநுக்ரஹ காரியமான பிறவியும் நித்தியமாகச் செல்லாநிற்கும் என்றபடி. 'அதுதானும்' என்ற உம்மை, ஸ்வரூப நித்தியத்வத்தைத் தழுவுகிறது.

கிறது, அநுக்கிரஹத்தை அன்றே, அதுதானும் நித்தியமே அன்றே அவனுக்கு. [1] இவனுக்கு இவன்தன் அளவிலே பிறக்க அமையும், அவனுக்கு எல்லார்க்குமாகப் பிறக்க வேணுமே. [2] இவனுக்குக் கர்மங் காரணமாக வந்ததாகையாலே தன்பொருட்டேயாயிருக்கும், அவனுக்கு அநுக்கிரஹம் காரணமாக வந்ததாகையாலே பிறர் பொருட்டேயாயிருக்கும். [3] "அருச்சுனனே! உன்னுடைய பிறவிகளைப் போலவே என்னுடைய பல பிறவிகளும் கழிந்துபோயின" என்றன்றே. [4] "தவச - உனக்கும்" என்கிறது, உன்னுடைய பிறவி மெய்யாய் இருக்குமாறுபோன்று, என்னுடைய பிறவி ஐந்திர ஜாலிகம் அன்றுகாண் என்பதற்கு. [5] இப்படி இராத அன்று இவனுக்கு மார்விலே கையை வைத்து உறங்க ஒண்ணுதே.

---

1. நித்யமாயிருக்கும் தன்மையாலே வேறுபாட்டினை அருளிச்செய்து, பரார்த்ததையாலும் வேறுபட்டது என்கிறார் 'இவனுக்கு இவன்தன்' என்று தொடங்கி.

2. இவன் பிறப்பு தன் பொருட்டேயாகவும், அவன் பிறப்பு பிறர் பொருட்டேயாகவும் இருப்பதற்குக் காரணம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவனுக்குக் கர்மம்' என்று தொடங்கி.

3. ஈசுவரனுடைய அவதாரங்கள் எண்ணிறந்தன என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அருச்சுனனே!' என்று தொடங்கி-

"பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவச அர்ஜுந
தான்யஹம் வேதஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப"

என்பது, ஸ்ரீகீதை. 4: 5.

4. எடுத்த சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தவச' என்று தொடங்கி. என்றது, பிறப்பு இல்லாதவனாக இருக்கிற நீ, இப்படிப் பல அவதாரங்களைச் செய்கிறேன் என்றால், இது ஐந்திரஜாலிகம் ஒழியச் சத்தியமாகக்கூடுமோ? என்று அருச்சுனன் சங்கிக்க, உனது பிறவி எப்படி உண்மையோ, அப்படியே எனது பிறவியும் உண்மை என்கிறான் என்றபடி. "தவச" எனறது, திருஷ்டாந்தார்த்தம் என்கிறது.

5. 'இப்படி இராத அன்று' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, அவதாரங்கள் உண்மையல்லவானால், அவ் வவதாரங்களில் சொல்லப்பட்ட

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம்மம"

(ஸ்ரீராமா. சுந். 18 : 33.) என்பது போன்ற சுலோகங்களும் உண்மையல்லவாம் ஆகையாலே, அவ்வார்த்தைகளை நம்பிப் பயம் அற்றவனுயிருக்கக் கூடாதே என்பதாம். அன்றிக்கே, இப்படி, அவன் அநுக்ரஹத்தாலே அவதாரங்களைச் செய்யாதபோது, இவனுக்கு 'அவனே ரக்ஷிகன்' என்று நம்பிப் பயமற்றவனுயிருக்க விரகு இல்லையே என்னுதல்.

எழில் ஏறே - இப்படி அடியார்கட்காகப் பிறவாநின்றால் பழைய புகரில் குறைந்து வருமோ? என்னில், பண்டு இல்லாத எழிலும் உண்டாயிருக்கை. [1] கர்மத்தால் பிறக்கில் அன்றோ நிறக்கேடாவது. பலபிறப்பாய் ஒளிவரும் முழுநலமே அன்றோ. "அவதரித்த பின்பு அந்தப் பரமாத்மா மிகுந்த ஒளியையுடையவனாகிறான்" என்பது சுருதி. [2] எல்லார்க்கும் பிறக்கப் பிறக்கப் புகர் அழிந்து வரும், இவன் ஒருவனுக்கும் பிறவாநின்றால் புகர் உண்டாகாநிற்கும். தேசம் அறியப் புகர் உண்டாய் நெஞ்சு வெறுத்திருக்குமோ? என்னில், [3] "பட்டிமேய்ந்தோர் காரேறு" என்கிறபடியே, '**பிறக்கப் பெற்றோம்**' என்னும் மேனாணிப்பையுடையவனாயிருக்கும். "வானிளவரசு" என்கிறபடியே, அகம்படி வைத்த அரசாய் இருக்கும் அங்கு, அச்செறுப்புத் தீர, தான் விரும்பினபடி சஞ்சரிக்கப்போந்த இடமே அன்றோ இது, ஆகையாலே, அங்கு நின்றும் போந்து பிறந்த பின்பாயிற்று '**எழில்ஏறு**' ஆயிற்று. [4] அடி அறிவார்,

---

1. பண்டு இல்லாத எழில் உண்டாதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கர்மத்தால்' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பலபிறப்பாய்' என்று தொடங்கியும், 'அவதரித்த பின்பு' என்று தொடங்கியும்.

"பல பிறப்பாய்" என்பது, திருவாய். 1. 3 : 2.

"யுவா ஸுவாஸாஃ பரிவீத ஆகாத் **ஸஉஶ்ரேயாந்**
**பவதி ஜாயமாநஃ**"

என்பது, யஜுர்வேதம். 3. 6 : 1.

2. இந்தச் சுருதிக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

3. "எழில் ஏறு" என்பதிலுள்ள "எழில்" என்ற சொல்லின் பொருளை அருளிச்செய்தார் மேல். "ஏறு" என்ற சொல்லின் பொருளை அருளிச்செய்கிறார் 'பட்டிமேய்ந்தோர்' என்று தொடங்கி. "பட்டி மேய்ந்து" என்பது, நாய்ச்சியார் திருமொழி. 14 : 1. மேனாணிப்பு - கர்வம். எடுத்த பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வானிளவரசு' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி. 3. 6 : 3. "வானிளவரசு" என்பதற்குப் பொருள், முதியோர்களான அமைச்சர்களின்கீழே இளவரசன் இருப்பதுபோன்று, நித்தியசூரிகள் தங்கியிருக்கின்ற பரமபதத்தில் இளவரசாக உள்ளவன் என்பதாம். அகம்படி - பழையபடியார். உள் என்றுமாம். செறுப்பு - சங்கோசம்.

4. இங்கு இருப்பதுவே இஷ்டமாய் மேனாணித்திருப்பான் என்பதற்கு, பகவானுடைய வார்த்தையையும் பிரமாணம் காட்டுகிறார் 'அடியறிவார்' என்று தொடங்கி.

[1]"தேவரீர், பிராட்டியோடு கூடியவரும் சக்கரத்தைத் தரித்தவரும் எங்கும் நிறைந்திருப்பவருமான நாராயணன் என்னும் தெய்வம் ஆவீர்; தேவரீர் ஒற்றைக் கொம்புள்ளவராக அவதாரம் செய்தவர், சென்றவர்களும் வருகின்றவர்களுமான பகைவர்களை அழித்தவர்" என்றால், அது பொருதவனும்[2]"என்னை மனிதனாகவும் இராமன் என்கிற பெயரையுடையவனாகவும் தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரனாகவும் எண்ணுகிறேன்" என்றும், [3]"நான் தேவனும்அலன், கந்தருவனும் அலன், இயக்கனும்அலன், அசுரனும்அலன், நான் உங்களுக்கு உறவினனாகத் தோன்றி இருக்கிறேன்" என்றும் சூழ்த்துக் கொடுக்கும்படி அன்றே அவதாரத்தில் மெய்ப்பாடு இருக்கும்படி.

செம் மா கமலம் செழுநீர் மிசைக் கண் மலரும் திருக்குடந்தை அம் மா மலர்க்கண் வளர்கின்றனே-அவதாரகாலத்தில் உதவாதார்க்கும் இழக்கவேண்டாதபடி அன்றே [4]கோயில்களிலே வந்து திருக்கண் வளர்ந்தருளுகிறது. [5]பரிமளம் முகத்தே வந்து அலை எறிய அதுதானே துடை குத்தக் கிடந்து

---

1. "பவாந் நாராயணோ தேவஃ ஸ்ரீமாந் சக்ராயுதோ விபுஃ
எகஸ்ருங்கோ வராஹஃ த்வம் பூதபவ்யஸபத்நஜித்"

என்பது, ஸ்ரீராமா. யுத். 120 : 13. ஸ்ரீராமபிரானைப் பார்த்துப் பிரமன் துதித்தது.

2. "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்
யோஹம் யஸ்ய யதஸ்சாஹம் பகவாந் தத் ப்ரவீது மே"

என்பது, ஸ்ரீராமா. யுத். 120 : 11.

3. "நாஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ நச தாநவஃ
அஹம்வோ பாந்தவோ ஜாதோ மைதச் சிந்த்ய மதோந்யதா"

என்பது, விஷ்ணுபுரா. 5. 13 : 12. இது, கோவர்த்தன கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்து நிற்கும் கோபாலன், ஆயர்களைப் பார்த்துக் கூறியது. சூழ்த்துக் கொடுக்கும்படி - ஆணையிட்டுக்கொடுக்கும்படி.

4. 'கோயில்களிலே' என்ற இவ்விடத்தில்

நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில் - நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தனு வான். (நான்முகன் திருவந்.)

என்ற திருப்பாசுரம் அநுசந்தேயம்.

5. "செம்மாகமலம்" என்றதற்கு, போக்யதைக்கு உறுப்பாக, பாவம் அருளிச்செய்கிறார் 'பரிமளம் முகத்தே' என்று தொடங்கி.

உறங்குகிறபடி. அன்றிக்கே, [1] சிவந்த பெரிய தாமரைகளானவை, காட்சிக்கு இனியதான நீரை அமுக்கி மேலே அலருகிறபோது, கடல்நிறமான வடிவையும் அங்குத்தை அவயவங்களையும் காட்டாகின்றன ஆதலின், **'செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண் மலரும்'** என்கிறார் என்னுதல். அரைக்கணத்திலே செவ்வி மாறுகிற தாமரை அங்குத்தைக்கு ஒப்பாகாதே அன்றே, வருந்திச் சொல்லும்போதும் இத்தனை ஏறிட்டுச் சொல்லவேணுங்காணும் என்பார் **'செம்மாகமலம்'** என்கிறார். [2] அழகிய தாமரைப்பூப்போலே இருக்கிற திருக்கண்கள் அலரக் காண்கின்றிலேன் என்பார் **'அம்மா மலர்க்கண் வளர் கின்றனே'** என்கிறார். அன்றிக்கே, அவற்றேடே ஒரே சாதியினவான இரண்டு பூக்கள் அலரக் காண்கின்றிலேன் என்கிறார் என்னுதல். என் நான் செய்கேனே - இவை இரண்டும் மலர்ந்தால் அல்லது தரியாதிருக்கிற நான் என்செய்கேன்? [3] திருக்குடந்தையிலே தாமரைகள் அலர்ந்தால் தேனைக் குடிக்கக்கூடிய வண்டுகள் தேனைக்குடித்துக் களியாகின்றன, இத் தாமரைகள் அலர்ந்தால் தேனைக் குடிக்கக்கூடிய வண்டு இங்ஙனே பட்டினி கிடந்து போமித்தனையோ! [4] 'இக் கூப்பீடு உருவச்செல்லும்' என்று இருக்கிறீரோ, சென்றற்றது கண்டாய். [5] 'இவை ஒழிய மதுபானம் செய்யோம்' என்கையன்றே இவர்க்கு இங்ஙன் படவேண்டுகிறது. [6] இனி, இவை அலர்தலாவது, விசேஷ கடாக்ஷம் பண்ணுகை காணும். அவன் கண் விழியாதபோது இவர் கண் விழிக்கமாட்டாரே.(2)

1. அவன் திருமேனிக்கும் திவ்ய அவயவங்களுக்கும் போலியாயிருக்கும் என்று உபமானபரமாக வேறும் ஒருகருத்து அருளிச்செய்கிறார் 'சிவந்த பெரிய' என்று தொடங்கி.

2. "அம்மாமலர்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருளில், "அம்" என்பது, சொல். இச்சொல்லுக்குரிய பொருளையே 'அழகிய தாமரை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். இரண்டாவது பொருளில், சுட்டுப் பெயராகக் கொண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'அவற்றேடே' என்று தொடங்கி.

3. "மலர்க்கண் வளர்கின்றன் என் நான் செய்கேன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'திருக்குடந்தையிலே என்று தொடங்கி.

4. "நான்" என்பதற்கு, பாவம், 'இக்கூப்பீடு' என்று தொடங்கும் வாக்கியம். சென்றற்றது - முடியும்படி ஆயிற்று.

5. மற்றைப் பூக்களில் மதுவைப் பானம் பண்ண ஒண்ணுமோ இவர்க்கு? என்ன, 'இவை ஒழிய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார் 'இனி, இவை' என்று தொடங்கி.

## 522.

என்னுன் செய்கேன் யாரே கனைகண் என்னைஎன் செய்கின்றாய்
உன்னுல் அல்லால் யாவ ராலும் ஒன்றும் குறைவேண்டேன்
கன்னார் மதிள்சூழ் குடந்தைக் கிடந்தாய் அடியேன் அருவாணுள்
செந்நாள் எந்நாள் அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே.

பொ - ரை:—நான் என்ன காரியத்தைச் செய்வேன், துணையா வார்வேறு யாவர், என்னை என்செய்ய இருக்கின்றாய், உன்னுல் அல்லா மல் மற்றையோரால் ஒருகுறையும் விரும்பேன், வேலைப்பாடு அமைந்த மதிள்களாற் சூழப்பட்ட திருக்குடந்தையில் திருக்கண்வளர்கின்ற வனே! அடியேனுடைய ஆத்மா இந்தச் சரீரத்தோடு சேர்ந்து வாழ்ந் திருக்கும்காள், தொடர்ந்து செல்லுகின்ற காட்கள் எத்துணை உண்டோ அத்துணை காட்கள் எல்லாம் உன்திருவடிகளைப் பிடித்துக்கொண்டே கடக்கும்படி திருவருள் புரியவேண்டும்.

வி - கு:—கன் - தொழில்; வேலைப்பாடு. முதனிலைத் தொழிற் பெயர். அரு - ஆத்மா. வாழ்நாள் என்பது, வாணுள் என மரீயது.

ஈடு:—மூன்றும்பாட்டு. [1] இப்படி நசை அற்றுற்போலே துடித்துக் கிடந்து கூப்பிட்ட இடத்திலும், குளிர நோக்குதல் வினவுதல் செய்யாமையாலே, பேறு தம்மதானுல் பெறுவார்க் கும் நிலைசெய்யவேணும் என்று இருந்தானுகக்கொண்டு, நான் என்காரியம் செய்கை என்று ஒன்று உண்டோ, நீசெய்து தலைக்கட்டித் தரவேணும் என்கிறார்.

என் நான் செய்கேன் யாரே கனைகண் என்னை என்செய் கின்றாய்-[2]என்மேலே விட்டிருக்கிறாயோ? பிறர்மேலே விட் டிருக்கிறாயோ? நீயே செய்யக்கடவதாக நினைத்திருக்கிறாயோ?

---

1. பாசுர முழுதினையும் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'நசை அற்றுற்போலே' என்றது, தம்முடைய பிராணனில் நசையற்றுற் போலே என்றபடி.

2. "என் நான் செய்கேன்" என்று, தம்முடைய செயல் அறுதியும், "யாரே கனைகண்" என்று, பிறர் ரக்ஷகர் அல்லாமையும், "என்னை என் செய்கின்றாய்" என்று, அவனைக் கேட்கிறதுமான இம் மூன்றாலும் இவர்க் குண்டான மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'என்மேலே' என்று தொடங்கி. 'என்மேலே விட்டிருக்கிறாயோ' என்றது, 'இவனே சாதாநுஷ்டானம் பண்ணுகிறான், நாம் என்' என்று என் மேலேயாக்கி முகங் காட்டாதிருக்கி றாயோ? அதற்கு நான் சுமன் அல்லேன் என்கிறார் என்றபடி.

'**என் நான் செய்கேன்**' என்றதனால், [1]'**நான் செய்வது எது**' என்று கேட்கிறார் அல்லர், நான் செய்து தலைக்கட்டுவதாக நினைத்திருக்கின்றவற்றுக்கும் எனக்கும் என்ன சேர்த்தி உண்டு என்கிறார். '**யாரே களைகண்**' என்றதனால், [2]அமிழ்ந்துகிறார் அமிழ்ந்துகிறாரை எடுக்கவோ? [3]ஒருவருக்கு ஒருவர் உணர்த்திக்கொள்வதற்கும் ஆள் அல்லாதவர்கள் என்காரியம் செய்யவோ? என்கிறார். [4]நெறிகாட்டி நீக்குதியோ, நின்பால் கருமாமுறி மேனி காட்டுதியோ, நீ நினைத்திருக்கிறது என்? என்பார் '**என்னை என் செய்கின்றாய்**' என்கிறார். என் நான்செய்கேன் யாரே களைகண் என்னை என்செய்கின்றாய் - [5]என்னை அறியாயோ! பிறரை அறியாயோ! உன்னை அறியாயோ!

---

'பிறர்மேலே விட்டிருக்கிறாயோ' என்றது, பிறர் இவனை ரக்ஷிக்கின்றார்கள் என்று அவர்கள் மேலேயாக்கி முகங்காட்டாதிருக்கிறாயோ? அவர்கள் ரக்ஷிக்கமாட்டார்கள் என்றபடி. 'நீயே செய்யக்கடவதாக நினைத்திருக்கிறாயோ' என்றது, இவர் நிலையும் பிறர் நிலையும் இப்படியான பின்பு நாமேயன்றோ உளோம் என்று நீயே ரக்ஷிக்கப்பார்க்கிறாயோ என்றபடி.

1. "என்நான் செய்கேன்" என்றது, அநுவாதமன்று, வினாவுமன்று; க்ஷேபோக்தியாய், அஜ்ஞனாய் அசக்தனான நான் என்ன சாதநாநுஷ்டானம் செய்வேன் என்கிறார் என்றபடி. இதனைக் காட்டுகிறார் 'நான் செய்வது எது' என்று தொடங்கி. இங்கே, "'என் நான் செய்கேன்' என்ற விடத்தில் இம்மூன்றும் உண்டு" என்ற ஸ்ரீவசனபூஷண ஸ்ரீ சூக்தி அநுசந்தேயம்.

2. நீர் அசக்தரானால், சக்தரான வேறு தெய்வங்கள் ரக்ஷகர் ஆனாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அமிழ்ந்துகிறார்' என்று தொடங்கி. என்றது, அவர்கள் சக்தியில்லாதவர்கள் என்றபடி.

3. எடுக்கமாட்டார்களேயானால், உசாத்துணையாயினும் ஆவர்களோ? என்னில், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒருவருக்கொருவர்' என்று தொடங்கி. என்றது, அறிவின்மையாலும் என் காரியம் செய்யமாட்டார்கள் என்றபடி.

4. "என் செய்கின்றாய்" என்ற ஐயம், த்விநிஷ்டமாகையாலே, அருளிச்செய்கிறார் 'நெறிகாட்டி' என்று தொடங்கி.

இது, பெரிய திருவந்தாதி. 6. "நெறி" என்பது, வேறு உபாயங்களை.

5. ஆக, "என் நான் செய்கேன், யாரே களைகண், என்னை என் செய்கின்றாய்" என்ற இம்மூன்றாலும், உன் அபேக்ஷை ஒழிய, முகங்காட்டாமைக்கு வேறு காரணம் இல்லை என்பது இவர்க்குத் திருவுள்ளம் என்னுமிடம் தோன்ற அருளிச்செய்கிறார் 'என்னை அறியாயோ' என்று தொடங்கி.

[1] என்னை நாலுக வன்றே புத்திபண்ணி இருக்கிறது. யாரே களைகண்-[2] என்னளவு கிட்டாதார் எனக்கு ரக்ஷகர் ஆகவோ. என்னை என்செய்கின்றாய் - நீ செய்து தலைக்கட்டப் பார்த்தாயோ? அன்றிக்கே, 'சாதநாநுஷ்டானம் செய்து வாரும்' என்று, நளன் தமயந்திக்கு வழிகாட்டினாற்போலே கைவிடப் பார்த்தாயோ? என் நான் செய்கேன் - [3] தாம் கைவாங்கின படி. யாரே களைகண் - பிறர்பக்கல் நின்றும் கைவாங்கினபடி. என்னை என்செய்கின்றாய் - [4] "என்னை ஆராதிக்கின்றவன் ஆவாய், என்னை நமஸ்காரம் செய்வாய்" என்னப் பார்த்தாயோ? [5] "துக்கப்படாதே" என்னப் பார்த்தாயோ?

[6]உன்னல் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்

---

1. 'அஜ்ஞனும் அசக்தனான நான் என்ன சாதநாநுஷ்டானம் பண்ணுவேன்' என்னுமதனைக் குறிப்பாக அருளிச்செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி. 'என்னை நாலுகவன்றே புத்தி பண்ணி இருக்கிறது' என்றது, நான் என்னை 'அஜ்ஞன், அசக்தன், அப்ராப்தன்' என்று புத்திபண்ணியிருக்கவில்லையோ, சர்வஜ்ஞனும், சர்வ சக்தியான தேவரீரைப் போன்று எண்ணிவிட்டதோ என்றபடி.

2. 'என்னளவு கிட்டாதார்' என்றது, உன் திருவருளுக்கு என்னைப் போன்று இலக்கு ஆகாதவர்கள் என்றபடி. அன்றிக்கே, என்னளவு ஞான பக்தி இல்லாதவர் என்னுதல்.

3. "என் நான் செய்கேன், யாரே களைகண், என்னை என் செய்கின்றாய்" என்னும் இம் மூன்றாலும், ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களும், அவனே ரக்ஷகன் என்னுமதுவும் சொல்லப்படுகின்றன என்னுமிடம் தோற்ற அருளிச்செய்கிறார் 'தாம்' என்று தொடங்கி. 'தாம்கைவாங்கினபடி' என்றது, ஆகிஞ்சந்யத்வம்; 'பிறர் பக்கல் நின்றும் கை வாங்கினபடி' என்றது, அநந்யகதித்வம்; 'என்னை ஆராதிக்கின்றவன்' என்று தொடங்கும் வாக்கியம், 'அவனே ரக்ஷகன்' என்னுமிடம் கூறுவது.

4. "மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாமேவ ஏஷ்யஸி யுக்த்வா ஏவம் ஆத்மாநம் மத்பராயணஃ"

என்பது கீதை. 9 : 34

5. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ"

என்பது ஸ்ரீ கீதை. 18 : 66.

6. இதுகாறும் அநப்யுபகம்யவாதத்தாலே அருளிச்செய்தார்; இனி, அப்யுபகம்யவாதத்தாலே அருளிச்செய்கிறார் 'உன்னல் அல்லால்' என்று தொடங்கி. என்றது, வேறு உபாயங்களிலே தமக்கு ஞானசக்திகளும் உண்டாய், வேறு தெய்வங்கட்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் சக்தியுமுண்டாகிலும், ஸ்வரூபத்திற்கு விரோதமாகையாலே தமக்கு வேண்டா என்கிறார் என்றபடி. அநப்யுபகம்யவாதம் - உடன்படாமலே பேசுகின்ற வாதம். அப்யுபகம்யவாதம் - உடன்பட்டுப் பேசுகின்ற வாதம்.

டேன் - [1]"என்னை நமஸ்காரம் செய்வாய், என்னை அடை வாய்" என்றால் எனக்குச் சோகம் போகாதுகண்டாய். 'யாவை யாலும்' என்னுமல், 'யாவராலும்' என்கிறது, உபாயபாவம் ஒருசேதனனாலே என்றிருக்கையாலே. அன்றிக்கே, [2]பெறு வது உன்னையேயாகிலும் உன்னாலே பெறுமன்று வேண்டு வன், என்னாலும் பிறராலும் பெறும் உன்னையும் வேண் டேன். [3]மற்றையவற்றிற்கும் அபிமதசித்தி உண்டேயாகி லும், **காலன்கொண்டு மோதிரம் இடுமாறுபோலே** ஸ்வரூப விரோதியானது எனக்கு வேண்டாம். [4]கடல் கடத்தப் பெற இருத்தல், சபித்துப்பெற இருத்தல் செய்யாத பிராட்டியைப் போலே. என்றது, இரண்டு தலைகளையும் அழிக்கையே அன்றோ. ஒருவராலும் ஒருகுறை நிரம்புவதாக வேண்டி

---

1. "உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் [3]அருளிச் செய்கிறார். அவற்றுள், முதலது, "என் நான் செய்கேன்" என்றதனை மாத்திரம் கடாக்ஷித்து அரு ளிச்செய்வது. என்றது, உன்னால் வரும் உன்னை ஒழிய, வேறு உபாயங்க ளால் வரும் உன்னையும் வேண்டேன் என்கிறார் என்றபடி. இதனையே அரு ளிச்செய்கிறார் 'என்னை நமஸ்காரம் செய்' என்று தொடங்கி. அங்ஙனமாயின், 'யாவையாலும்' என்னுது, "யாவராலும்" என்றது என்னை? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'யாவையாலும்' என்று தொடங்கி.

2. இரண்டாவது பொருள்: "என் நான் செய்கேன், யாரே களைகண்" என்னும் இரண்டனையும் கடாக்ஷித்து அருளிச்செய்வது. என்றது, உன்னாலே பெறும் உன்னை ஒழிய வேறு உபாயங்களாலும், வேறு தெய்வங்களாலும் பெறும் உன்னையும் வேண்டேன் என்கிறார் என்றபடி. இதனையே, 'பெறுவது உன்னையேயாகிலும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. பெறுவது நம்மையானால், வேறு உபாயங்களாலும், வேறு தெய் வங்களாலும் நம்மைப் பெற்றால் விரோதம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மற்றையவற்றிற்கும்' என்று தொடங்கி. காலன் கொண்டு - காலபுருஷதானம் வாங்கி.

4. அப்படி வேண்டாம் என்று இருந்த பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடல் கடத்த' என்று தொடங்கி. 'கடல்கடத்த' என்றது, திருவடியினால் கடல்கடத்தப்பட என்றபடி. 'சபித் துப் பெற' என்றது, பிராட்டியாகிய தான் சபித்து என்றபடி. அப்ப டிச் செய்தால், அவனுடைய ரக்ஷகத்வத்துக்கும் தன்னுடைய பாரதந்திரியத் திற்கும் சேராது என்கிறார் 'என்றது' என்று தொடங்கி.

இரேன். அன்றிக்கே, [1] 'உன்னல் அல்லால்' என்கிற இதனை, உபேயவிஷயமாக்கி, 'உன்னை ஒழிய மற்றொன்றால் எனக்கு ஒருகுறை இல்லை' என்று சொல்லுவாருமுளர். கன் ஆர் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய் - [2] இவருடைய உபாயம் அரண் செய்து கிடக்கிறபடி. 'அவனே உபாயமும்உபேயமும்' என்று அறுதியிட்டவர்கள் அத்தலையில் உண்டான பரிவாலே அவனைக் காக்கை பணியேஅன்றே. "செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்றாரேஅன்றே. கன் ஆர் மதிள் - தொழில் மிக்க மதிள் என்னுதல். செம்பாலே செய்யப்பட்ட மதிள் என்னுதல். 'கன்' என்பது, தொழிலும், செம்பும், சிக்கெனவும் எனப் பலபொருள்படும் ஒருசொல்.

அடியேன் அரு - உனக்கு அநந்யார்ஹமாய்த் தனக்கு உரித்தல்லாத இந்த ஆத்மவஸ்து. வாழ்நாள் செல்நாள் எந்நாள் - ஜீவித்துக்கொண்டு செல்லும்நாள் யாதொருநாள். அந்நாள் - அந்த நாட்கள்முழுதும். உன தாள் பிடித்தே செலக் காணே - உன் திருவடிகளையே பெற்றுச் செல்லும்படி பார்த்தருளவேண்டும். [3] காற்கூறும் விடாதபடி பார்த்தருளவேண்டும். [4] 'ஒன்றும் குறைவேண்டேன்' என்ற பின்னர், வந்து

---

1. மூன்றுவது பொருள்: உம்மாலும் பிறராலும் சாத்யம் அல்லாத என்னை விட்டு, உபயசாத்யமான ஐஸ்வர்யாதிகளைப் பெற்றுப் போம் என்ன, 'உன்னல் அல்லால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'உன்னை ஒழிய மற்றொன்றால்' என்றது, பிராப்யனான உன்னை ஒழிய வேறோர் ஐஸ்வர்யாதிகளால் என்றபடி. அசேதனமான ஐஸ்வர்யாதிகளை "யாவராலும்" என்றது, 'பிராப்யம் ஒரு பரமசேதனம்' என்கிற வாசனையாலே என்க. 'சொல்லுவாருமுளர்' என்கையாலே, இப் பொருள் அத்தனை சிறப்புடைத்தன்று என்பது போதரும்.

2. "கன்னார்மதிள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவருடைய' என்று தொடங்கி. தம் முயற்சி என்பது ஒன்றும் இல்லாதவரான இவர், அத்தலைக்கு ரக்ஷை தேடுவான் என்? என்ன, அதற்கு விடையும் மேற்கோளும் அருளிச்செய்கிறார் 'அவனே உபாயமும்' என்று தொடங்கி. 'செவ்வடி செவ்வி' என்றது, திருப்பல்லாண்டு. 'என்றார்' என்றது, பெரியாழ்வாரை.

3. 'காற்கூறும் விடாதபடி' என்றது சிலேடை. இது, "உன தாள் பிடித்தே செலக் காணே" என்பதன் பொருள்.

4. "உன்னல் அல்லால்" என்பது போன்றவைகளால், நீயே உபாயம் என்றும், விரோதியைப் போக்கிக் கைங்கர்யத்தைத் தந்தருள வேணும் என்னுமல், "உனதாள் பிடித்தே செல்லும்படி பார்த்தருளவேண்டும்" என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒன்றும் குறை வேண்டேன்' என்று தொடங்கி.

குறை நிரப்பக்கண்டிலர்; இனி அநுபவம் பெற்றபோது பெற, **'உன்னல் அல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்'** என்கிற இந்த உறுதி குலையாதபடி பார்த்தருளவேண்டும் என்கிறார்.[1] அடிவிடில் உறுதி குலையுமே,[2] அடியேபிடித்து ஜீவித்தவர் அதனைவிடாரே இப்போதாக. அத்யவசாயம் இது, ருசியில் வந்தால் பரபக்தியையுடையவர், விளம்பத்துக்குக் காரணம் என்? என்னில், பக்தி விபாகத்துக்காகவும், இவருடைய பிரேமம் வழிந்த சொல்லால் நாட்டினைத் திருத்துகைக்காகவும். (3)

## 523.

செலக்காண்கிற்பார் காணு மளவும் செல்லும் கீர்த்தியாய்!
உலப்பி லானே! எல்லா உலகு முடைய ஒருமூர்த்தி!
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்! உன்னைக் காண்பான்நான்
அலப்பாய் ஆகா சத்தை நோக்கி அழுவன் தொழுவனே.

**பொ-ரை:**—மேலே போகக் காணவல்ல சக்தியையுடையவர்கள் காணவல்ல அளவுக்கும் அப்பால் போகும்படியான கீர்த்தியையுடையவனே! முடிவுஇல்லாதவனே! எல்லா உலகங்களையுமுடைய ஒப்பற்ற மூர்த்தியே! பக்தியினால் மேம்பட்டவர்கள் தங்கியிருக்கிற திருக்குடந்தை என்னும் திவ்யதேசத்திலே திருக்கண்வளர்கின்றவனே! உன்னைக் காணும்பொருட்டு நான் அலமந்து ஆகாசத்தை நோக்கி அழுவேன், தொழுவேன்.

**வி-கு:**—காண்கிற்பார்: வினையாலணையும் பெயர். உலப்பு - முடிவு. நலம் - பக்தி. அலத்தல் - அலமருதல்; சுழலுதல்.

**ஈடு:**—நாலாம்பாட்டு.[3] சர்வேசுவரனுயிருந்து வைத்து அடியார்கட்காகத் திருக்குடந்தையிலே அண்மையிலிருப்பவனாக இருக்க, நினைத்த கைங்கரியத்தைப் பெறுமையாலே நோவுபடாநின்றேன் என்கிறார்.

---

1. "பிடித்தே" என்ற ஏகாரத்தின் பொருளை அருளிச்செய்கிறார் 'அடிவிடில்' என்று தொடங்கி.

2. "உன்னல் அல்லால்" என்றதற்கு அருளிச்செய்த மூன்றுவது பொருளுக்குத் தகுதியாக, "பிடித்தே" என்ற ஏகாரத்திற்கு, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அடியே பிடித்து' என்று தொடங்கி.

3. "எல்லா உலகுமுடைய ஒருமூர்த்தி, குடந்தைக் கிடந்தாய், நான் அலப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவன்" என்பனவற்றைக் கடாகஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

செலக் காண்கிற்பார் காணும் அளவும் செல்லும் கீர்த்தியாய்.[1] உன்னுடைய குணங்களால் வந்த பிரசித்தி அடங்கலும் அழியப்புகாநின்றது கண்டாய். [2]எத்தனையேனும் அளவுடையாரும் தாங்கள் நின்ற அளவுகளைக் கழித்து அவ்வருகே காணப் புக்கால், அவ்வளவுகளையுடையனுயிருக்கும். [3]"பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே, வக்கரனைக் கொன்ருன் வடிவு"-திவ்வியமங்கள விக்கிரஹத்தின் வைலக்ஷண்யத்தைப் பற்றிப் பேசுமவர்கள் யாதோர் அளவு சொல்லுவார்கள், அவ்வளவாயிருக்குமத்தனை. உலப்பிலானே - ஸ்வரூப குணங்கள் புருஷர்களுடைய புத்திக்கு உட்பட்டவல்லாத அளவாய், தான் ஓர் எல்லையிலே இருக்குமோ? என்னில், உலப்பிலானே - இயல்பிலே எல்லை காணவொண்ணுதபடியா யிருக்கை. [4]தனக்கும் தன்தன்மை அறிவரியானேயன்ரே. எல்லா உலகுமுடைய ஒருமூர்த்தி - [5]வடிவழகைக் காட்டி எல்லா உயிர்களையும் காற்கீழே இட்டுக் கொள்ளக் கூடியவனே! அன்றிக்கே, வடிவு கண்டபோதே, '**இவனே இவற்றிற்கெல்லாம் கடவன்**' என்று தோற்றும்படியாய் இருப்பவனே! என்னுதல். அன்

---

1. கீர்த்தியை வர்ணித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிரூர் 'உன்னுடைய' என்று தொடங்கி.

2. "செலக் காண்கிற்பார்" என்பதற்கு, முன்புண்டான ஞானம் போராது என்று அதனைக் கழித்து, மேலும் மேலும் ஞானதிசயத்தைச் சம்பாதித்துக்கொண்டு காணவல்லார் என்று பொருள் அருளிச்செய்கிரூர்; 'எத்தனையேனும்' என்று தொடங்கி. 'அவ்வருகே காணப்புக்கால்' என்றது, மேலும் மேலும் ஞானதிசயத்தைச் சம்பாதித்துக்கொண்டு காணப்புக்கால் என்றபடி. 'அவ்வளவுகளையுடையனுயிருக்கும்' என்றது, "காணுமளவும் செல்லும்" என்றதற்குப் பொருள். ஆக, முதல் வரிக்குப் பொருள், மேலே மேலே போகக் காணவல்ல சக்தியையுடையவர்கள் காணவல்ல அளவுக்கும் அப்பாற்பட்டுச் செல்லக்கூடிய கீர்த்தியையுடையனே என்பது.

3. அப்படிக் காண்பார் காணுமளவான கீர்த்தியையுடையவன் என்பதற்கு, பிரமாணம் காட்டுகிரூர் 'பேசுவார்' என்று தொடங்கி. "வடிவு" என்றது, ஸ்வரூப குணங்களுக்கும் உபலக்ஷணம். இது, மூன்ரும் திருவக். 21. மேற்கோள் காட்டிய பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிரூர்; 'திவ்யமங்கள விக்கிரஹத்தின்' என்று தொடங்கி.

4. திருவாய்மொழி. 8. 4. 6.

5. "எல்லாவுலகுமுடைய ஒரு மூர்த்தி" என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிரூர். "மூர்த்தி" என்பது விக்கிரஹமாய், அதனுலே, அழகினை விவக்ஷித்து, விக்கிரஹ சௌந்தர்யத்தாலே எல்லா உலகங்களையும் சேஷமாகக்கொண்டவன் என்பது, முதற்பொருள். "மூர்த்தி" என்பது விக்கிரஹமாய், விக்கிரஹத்தைக் கண்டவாறே 'இவனே எல்லா உலகங்களுக்கும் சேஷி' என்று தோற்றும்படியாயிருப்பவன் என்பது, இரண்டாவது பொருள்.

நிக்கே, [1] 'மூர்த்தி' என்ற சொல்லானது, விக்கிரஹத்துக்கும் பெயராய், ஐஸ்வரியத்துக்கும் பெயராய் இருக்கும். அப்போது, எல்லா உலகங்கட்கும் நிர்வாஹகனுய் ஒப்பற்றவனுன சர்வேசுவரன் என்றபடி. இதனுல், இவர்க்குப் பேறு என்? என்னில், உன்பெருமையை அழிக்க அன்றே புகுகிறுய் என்பது. [2] நீர் நோவுபடுகிற இடம் என் எல்லேக்குள் அன்று என்ன ஒண்ணுதே உனக்கு.

நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய் - [3] நீ ஸ்வரூபங்களால் வேறுபட்டவனுய்க்கொண்டு அங்கே இருந்தாயாகில் நான் ஆறி இரேனே, உன்னுல் அல்லது செல்லாதாருடைய தேசத்தை விரும்பிப் படுகாடு கிடவாகின்றுய். கிரமப் பிராப்தி பற்றுதபடி அன்பு செலுத்தியிருப்பவர்களாதலின் 'நலத்தால் மிக்கார்' என்கிறது. உன்னைக் காண்பான் நான் - [4] ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக இருக்க, அடியார்களே விட மாட்டாதே திருக்குடந்தையில் திருக்கண்வளர்ந்தருளுகிற உன்னை, மிக்க காதலையுடைய நான், அத்தலை இத்தலையாய்க் காண ஆசைப்பட்டு அலமாவாகின்றேன். உன்னைக் காண்பான் நான் - [5] காண்கிறவன் நான் அன்றே, காண்கிறது உன்னை அன்றே; ஆனபின்னர், எங்ஙனே ஆறியிருக்கும்படி.

---

1. "மூர்த்தி" என்ற சொல்லானது, விக்கிரஹத்தைக் காட்டுமோ? என்ற சங்கையையும் பரிஹரித்துக்கொண்டு, மூன்றுவது பொருளினை அருளிச்செய்கிறுர் 'மூர்த்தி என்ற சொல்லானது' என்று தொடங்கி. 'அப்போது' என்றது, செல்வத்திற்கு வாசகமானபோது என்றபடி.

2. உம்மை நழுவவிட்டால் நம் பெருமை அழிந்ததாக வேணுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'நீர் நோவுபடுகிற' என்று தொடங்கி. 'உனக்கு' என்றது, எல்லாவுலகுமுடைய உனக்கு என்றபடி.

3. மேலே கூறிய பொருள்களையெல்லாம் கடாகூத்து, பாவம் அருளிச்செய்கிறுர் 'நீ ஸ்வரூபங்களால்' என்று தொடங்கி. படுகாடு - வெட்டி வீழ்த்திய காடு.

4. "உன்னை" என்பதற்கு, சௌலப்யத்திலே நோக்காகப் பொருள் அருளிச்செய்கிறுர் 'ஸ்ரீ வைகுண்டம்' என்று தொடங்கி. கலவிருக்கை - நெஞ்சுபொருந்தியிருத்தல். அலமாவாகின்றேன் - மனம் சுழலாகின்றேன்.

5. "நான்" என்றதனையும் கடாகூத்து, "உன்னை" என்பதற்கு, ப்ராப்யபரமாக வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறுர் 'காண்கிறவன்' என்று தொடங்கி. 'நான் அன்றே' என்றது, ஆராத காதலையுடைய நான் அன்றே என்றபடி.

உன்னை - [1]மேலே கூறிய இனிமையையுடைய உன்னை என்றுமாம். அலப்பாய் - அலமந்து. [2]காணும்போது 'கண்டு கொள்ளுகிறோம்' என்று, சூது சதுரங்கம் பொருது ஆறியிருக்கும் விஷயமன்றே, காணப்பெறாமையாலே வந்த துடிப்பு. ஆகாசத்தைநோக்கி-[3]திருவடியினுடைய சப்தம் ஒரு திக்கிலேயாயிருக்கச்செய்தே "அந்தப்பிராட்டி குறுக்கும் மேலும் அப்படியே கீழும் பார்க்கிறவளாய்க்கொண்டு வாயுபுத்திரனை அநுமானை உதயபர்வத்தில் தோன்றுகிற சூரியனைப்போலப் பார்த்தாள்" என்கிறபடியே, பிராட்டி எங்கும் ஒக்கப் பார்த்தாளேஅன்றோ. 'உன்னை' என்னாநிற்கச்செய்தே 'ஆகாசத்தை நோக்கி' என்பான் என்? என்னில், 'அலப்பாய்' என்றாரேஅன்றோ, கலக்கத்தின் காரியம் இருக்கிறபடி. விஷயம் அண்மையில் இருக்கச்செய்தே ஆகாசத்தைப் பார்க்கிறது, நினைத்த பரிமாற்றம் பெறாமையாலே. 'ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு வந்து தோற்றினாற் போலே தம் தசையைப் பார்த்த்துத் தோற்றுகிறானோ' என்று பார்த்து. அன்றிக்கே, ஆகாசத்தை நோக்கி என்பதற்கு, "என்னுடைய [4] நிராலம்பநதையைப் பார்த்து" என்று ஆண்டான் அருளிச்செய்வர். அன்றிக்கே, [5]"வயோதிகரான தசரதசக்கரவர்த்தி அப்படியே வெம்மை தோன்ற பெருமூச்சுவிட்டு ஆகாசத்தை நோக்கிய

---

1. 'மேலே கூறிய' என்றது, "ஒருமூர்த்தி" என்றதனையாதல்; "ஆராவமுதே" என்றதனையாதல்.

2. அலமருகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காணும்போது' என்று தொடங்கி.

3. ஆகாசத்தை நோக்குகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருவடியுடைய' என்று தொடங்கி.

"ஸாதிர்யக் ஊர்த்வஞ்ச ததாபி அதஸ்தாந்
நிரீக்ஷமாணா தம் அசிந்த்ய புத்திம்
ததர்ஶ பிங்காதிபதேஃ அமாத்யம்
வாதாத்மஜம் ஸூர்யமிவ உதயஸ்தம்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 31 : 19.

4. நிராலம்பநம் - பற்றுக்கோடு இல்லாதிருத்தல். அநந்யகதித்வத்தைக் குறித்தபடி.

5. "ததைவ உஷ்ணம் விநிஶ்வஸ்ய விருத்தோ தசரதோ ந்ருபஃ
விலலாப ஆர்த்தவத் துக்காத் ககநாஸக்தலோசநஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 13 : 16. இது, கைகேயியின் வார்த்தையைக் கேட்ட தசரதனது துக்கம்.

**கண்களே யுடையவராய்த்** துக்கத்தால் பீடிக்கப்பட்டவன் போலக்கதறினர்" என்றுகொண்டு, கண்கள் இலக்கில் தைக்க மாட்டாதபடியாயிற்றுச் சென்றற்றபடி என்னுதல். [1]அழுவன் தொழுவன் - உபாசகர்கள் செய்யுமதனையும் செய்யாதின் றேன், பிரபந்நர்கள் செய்யுமதனையும் செய்யாதின்றேன். சபலர் செய்யுமதனையும் செய்யாதின்றேன், விரக்தர் செய்யு மதனையும் செய்யாதின்றேன். (4)

## 524.

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் பாடி அலற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய்! செந்தா மரைக்கண்ணா!
தொழுவ னேனை உனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய்.

**பொ - ரை:**—கலக்கத்தாலே அழுவேன், தெளிவாலே தொழு வேன், பக்கத்தால் ஆடுவேன், குணங்களுக்குப் பரவசப்பட்டுப் பாடு வேன், துன்பத்தால் அலற்றுவேன், என்னைத் தழுவி நிற்கின்ற காதலா கிற கொடிய பாவங்களால் நீ வருதற்குச் சம்பாவனையுள்ள பக்கத்தை நோக்குவேன், வரக் காணுமையாலே நாணங்கொண்டு தலைகுனிந்திருப் பேன், செழுமைபொருந்திய அழகிய வயல்களாற் சூழப்பட்ட திருக் குடந்தை என்னும் திவ்வியதேசத்தில் திருக்கண்வளர்கின்றவனே! செந்தாமரைக்கண்ணா! வேறுகதி இல்லாதவனைத் தொழுகின்ற என்னை உன்திருவடிகளைச் சேரும்படி ஒருநல்விரகு பார்க்கவேண்டும்.

**வி - கு:**—ஆடிக்காண்பன்: ஒருசொல். ஆடுவேன் என்பது பொருளாம். தொழுவனேன்: வினையாலணையும் பெயர். கண்டாய்: முன்னிலை அசைச்சொல்.

**ஈடு:**—ஐந்தாம்பாட்டு. [2]உன்னைக் காணவேண்டும் என் னும் ஆசையாலே இரங்குதற்குரிய செயல்கள் பலவும் செய்த இடத்திலும் காணப்பெற்றிலேன், உன்திருவடிகளை நான் பெறும்படி பார்த்தருளவேண்டும் என்கிறார்.

---

1. அழுதல்: உபாசகர், சபலர். தொழுதல்: பிரபந்நர், விரக்தர்.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். மேல் திருப்பாசுரத்தில் "அழுவன் தொழுவன்" என்றவர், மீண்டும் "அழுவன் தொழுவன்" என்பது, கூறியது கூறலாகாதோ? எனின், அங்கு, காணப்பெறுமையாலே "அழுவன் தொழுவன்" என்றார்; இங்கு, காண வேணும் என்று "அழுவன் தொழுவன்" என்கிறார்; ஆதலால், குற்றம் இன்று.

அழுவன் - குழந்தைகள் செய்வதனையும் செய்யாதின் றேன்.[1] "மற்றவள்தன் அருள் நினைந்து அழுங்குழவி யதுவே போன்றிருந்தேன்" என்னக்கடவதன்றே. தொழுவன் - [2]வேதாந்த ஞானமுடையார் செய்வதனையும் செய்யாதின் றேன். ஆடிக்காண்பன் - 'இத்தனை சோறிடுகிறேம், ஆடவல் லீயோ' என்றால், கலியர் ஆடுமாறுபோலே ஆடியும் பார்ப் பன். [3]'என்பட்டால் பெறலாம்' என்று அறியாரே. பாடி அலற்றுவன் - காதலால் வழிந்த சொல் பாட்டாய், அதுதா னும் அடைவு கெடக் கூப்பிடுகை, அலற்றுகை. தழுவல் வினை யால்-இப்படிப்பட்டாலும் காணவொண்ணாதே அன்றே [4]உடன் வந்தியான வல்வினை. என்னைத் தழுவி விடாதே நிற்கிற காத லாகிற பிரபலமான பாவத்தாலே. பக்தியை, பாவம் என்கி றது, வேண்டாததைக் கொடுப்பது பாபம் ஆகையாலே. பக் கம் நோக்கி - 'துன்பமே செப்பேடாக வரும்' என்றிருக்கை யாலே, வருவதற்குச் சம்பாவனையுள்ள திக்கைப் பார்த்து. நாணிக் கவிழ்ந்திருப்பன் - அங்கு வந்து தோற்றக் காணுமை யாலே, 'ஆசைப்பட்டு [5]அழகிதாக உண்டோம்' என்று நாண முற்று கவிழ்தலே இட்டிருப்பன். அன்றிக்கே, பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன் என்பதற்கு, 'அருகுநின்றார் இவனை என்சொல்லுவர்களோ' என்றதற்கு நாணமுற்றுக் கவிழ்தலே இட்டிருப்பன் என்னலுமாம்.

---

1. குழந்தைகள் அழுவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "மற்றவள்தன்" என்று தொடங்கி.

> தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லே
> வீரைகுழவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே!
> அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
> அருள்நினைந்தே அழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

என்பது, பெருமாள் திருமொழி. 5: 1.

2. "அஞ்சலிஹ பரமா முத்ரா" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து, 'வேதாந்த ஞானமுடையார்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். கலியர் - பசியர்.

3. "காண்பன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என்பட்டால்' என்று தொடங்கி. அறியாரே, ஆகையாலே, 'பார்ப்பன்' என்கிறார் என்று கூட்டுக.

4. 'உடன் வந்தியான' என்றது, போன போன இடமெல்லாம் ஒரு சேர வருகிறதான என்றபடி. 'வல்வினை' என்றது, ஈண்டு, பக்தியை.

5. 'அழகிதாக உண்டோம்' என்றது, வெறுப்பிலே நோக்கு. குறிப் புப் பொருளது.

செழுஒண் பழனம் குடந்தைக் கிடந்தாய்-பெருத்து அழகிதான நீர்நிலைகளையுடைய திருக்குடந்தையிலே திருக்கண் வளர்ந்தருளுகிறவனே! செந்தாமரைக்கண்ணா-[1]கையிலே நிதி உண்டாயிருக்க வறியர்க்கு இடாதாரைப்போலே. வேறுமுகத்தாலே என் ஜீவனமாய்க் கிடக்கிறாய் இல்லை, என் ஜீவனம் ஒருமுகம்செய்து கிடக்கிறதன்றே. தொழுவனேனை - [2]புறம்புகல் அற்று உன்னில் அல்லது செல்லாதபடி கிருபணனை என்னை. அன்றிக்கே, புறம்புள்ள விஷயங்களிலே ஈடுபட்டவனைத் தாழ்ந்தவனை என்னை என்னுதல். தொழுவன் - கிருபணன் என்னுதல். தாழ்ந்தவன் என்னுதல். உனதாள் சேரும்வகையே சூழ்கண்டாய் - உன்திருவடிகளைக் கிட்டுவது ஒரு விரகு, [3]நான் அறியாதபடி நீயே பார்த்தருளவேண்டும். [4]தம்முடைய ஆற்றுமை பேற்றுக்குக் காரணம் அன்றிக்கே, அது பிரகிருதியாய், 'அவனிலே பேறு' என்று இருக்கிறபடி. என்றது, வேறு பிரயோஜனங்களை விரும்பாதார் திறத்தில் காரியசிந்தையும் அவனதாக இருக்கிறபடியைத் தெரிவித்தபடி. (5)

## 525.

சூழ்கண் டாய்என் தொல்லை வினையை அறுத்துன் னடிசேரும்
ஊழ்கண் டிருந்தே தூராக் குழிதூர்த்து எனைநா ளகன்றிருப்பன்
வாழ்தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்! வானோர் கோமானே!
யாழி னிசையே! அமுதே! அறிவின் பயனே! அரிவ றே!

---

1. என்னுடைய துன்பம் நீக்குதற்குப் பரிகரம் உன்கையிலே உண்டாய் இருக்க, நான் துன்புற்றவனாயிருக்க, என்னைக் கடாக்ஷியாதே இருக்கிறாய் என்னுமதனைத் திருஷ்டாந்தமூலம் காட்டுகிறார் 'கையிலே நிதி' என்று தொடங்கி.

2. "தொழுவனேனை" என்பதற்கு, இரண்டு பொருள். முதற்பொருளில், தொழுகை - கார்ப்பண்யகார்யம் என்றுகொண்டு, அதனை விரிக்கிறார் 'புறம்புகலற்று' என்று தொடங்கி. இரண்டாவது பொருளில், "தொழுவன்" என்பது, தொழும்பன் என்றபடியாய், தாழ்ந்தவன் என்றபடி.

3. "சூழ்கண்டாய்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் அறியாதபடி' என்று தொடங்கி. சூழ்ச்சியாவது, புறம்பே ஒருவர் அறியாதபடி பார்க்கும் விரகு.

4. "அழுவன் தொழுவன்" என்பன போன்ற ஆற்றுமை உண்டாயிருக்க, "சூழ்கண்டாய்" என்று, நீயே விரகு பார்த்தருளவேணும் என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தம்முடைய ஆற்றுமை' ஏன்று தொடங்கி.

**பொ - ரை :**—இயல்பாக அமைந்த புகழையுடைய பெரியோர்கள் நித்தியவாசம் செய்கின்ற திருக்குடந்தை என்னும் திவ்வியதேசத்தில் திருக்கண்வளர்கின்றவனே! நித்தியசூரிகளுக்குத் தலைவனே! பாழினிசையே! அமுதே! அறிவின்பயனே! அரிஏறே! என்னுடைய பழைமையான இருவினைகளையும் அறுத்து உனது திருவடிகளைச் சேர்வதற்குரிய முறையை யான் அறிந்திருந்தும், தூர்க்கமுடியாத இந்திரியங்களாகிற குழியை நிறைத்துக்கொண்டு எத்தனைகாலம் உன்னை நீங்கி இருப்பேன்? உன்னைச் சேர்வதற்குரிய உபாயத்தைச் செய்தருளவேண்டும்.

**வி - கு :**—ஊழ்-முறைமை. தூரா-நிறைதல் இல்லாத. தூர்த்து-நிறைத்து. எனை - எத்தனை. அரியேறே! சூழ்கண்டாய் என்க. அரி ஏறு - ஆண்சிங்கம்.

**ஈடு :**—ஆரும்பாட்டு. [1]உன் இனிமையை அநுபவிக்கிற எனக்கு ஒருபிரிவு வாராதபடி உன்னை அடைவதற்குத் தடையாகவுள்ள விரோதிகளையும்போக்கி, உன்னைப்பெறுவது ஒரு விரகு பார்த்தருளவேண்டும் என்கிறார்.

[2]என் தொல்லை வினையை அறுத்து உன் அடி சேரும் சூழ் கண்டாய் - என்னுடைய பழைமையான கர்மங்களை வாசனையோடே போக்கி, உன்திருவடிகளை நான் வந்து கிட்டுவது ஒரு வழியை நீயே பார்த்தருளவேண்டும். கிரமத்திலே செய்கிறேரும் என்ன, அதற்கு எல்லை என்? என்கிறார். உன் அடி சேரும் ஊழ் கண்டிருந்தே - உன் திருவடிகளைக் கிட்டும் முறையை அறிந்து கொண்டிருந்தே. நாட்டாரைப் போன்று உன்னை அறியாது ஒழியப்பெற்றிலேன் என்பார் 'இருந்தே' என்கிறார். தூராக் குழி தூர்த்து-நிறைக்க இயலாத இந்திரியங்களுக்கு இரை இட்டு. எனைநாள் அகன்று இருப்பன்-இன்னம் எத்தனை நாள் இங்ஙனே இருக்கக்கடவேன்? [3]ஸ்ரீ பரதாழ்வான்போல்

---

1. திருப்பாசுரத்தில், "உன்னடிசேரும்" என்பது முடியக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார் 'உன் இனிமையை' என்று தொடங்கி.

2. "உன்னடிசேரும்" என்பதனை, "உன்னடி சேரும்படி சூழ்கண்டாய்" என்றும், "உன்னடிசேரும் ஊழ்கண்டிருந்தே" என்றும் முன்னும் பின்னும் கூட்டுக. "ஊழ்" என்றது, சேஷ சேஷிபாவமுறையினை.

3. "எனை நாள் அகன்றிருப்பன்"—என்கிறது என்? 'நாம் நாளிட்டுக் கொடுக்கவேண்டும்' என்ற நிர்ப்பந்தம் நமக்கு உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ பரதாழ்வான்' என்று தொடங்கி.

வார்க்கோ ஒருநாள் இட்டுக் கொடுக்கலாவது என்றபடி. வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய் - [1]'பிரிந்திருக்கும் நாள் எத்தனை' என்று கேட்கவேண்டாதவர்கள், அவன் கண்வட்டத்தில் வசித்து வாழப் பெறுகையாலே வந்த சிலாக்யமான புகழையுடையவர்கள். அன்றிக்கே, தொல்புகழ் என்பதற்கு, பழைய புகழ் என்னலுமாம். விஷயசந்நிதி தமக்கும் அவர்களுக்கும் ஒத்திருக்க, அவர்கள் வாழ்கிறபடி எங்ஙனே? என்னில், தம்மைப் போன்று கூப்பிடாமையாலே நினைத்த பரிமாற்றம் பெற்றார்கள் என்று இருக்கிறார்.

வானோர் கோமானே - [2]அவர்கள்சிலவர் நாள் கடையாடாத தேசத்திலே வசிக்கிறவர்கள் காணும். யாழின் இசையேமிடற்று ஓசைபோன்று கர்மத்துக்குத் தகுதியாகப் [3]போது செய்கைஅன்றிக்கே இருத்தல். "யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே" என்னக்கடவதன்றே. அமுதே - [4]செவிக்கு அதுவாய், நாவிற்கு வேறு ஒன்று தேடவேண்டாதபடி இனிய பொருளாயிருக்கை. அறிவின் பயனே - ஞானத்துக்குப் பிரயோஜனரூபமான சுகம். மனத்திற்கு இனிய பொருளாயிருக்கிறபடி. அரிஏறே - எல்லாப்பொருள்கட்கும் வேறுபட்ட தன்மையையுடையவனாயிருத்தலால் வந்த மேன்மணிப்பையுடையவனே! [5]அன்றிக்கே, கண்களுக்கு முகக்கொள்ள ஒண்ணாத

---

1. "வாழ்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிந்திருக்கும் நாள்' என்று தொடங்கி. வாழ்ச்சியை எதுவாக்கி, "தொல்புகழார்" என்பதற்கு, பொருள் அருளிச்செய்கிறார் 'அவன் கண் வட்டத்தில்' என்று தொடங்கி.

2. "வாழ்தொல்புகழார்" என்றதனால், தம்மைப்போன்று "எனைநாள் அகன்றிருப்பன்" என்று நாளிட்டுக் கொடுக்கவேண்டாதே, எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டிருப்பவர்கள் திருக்குடந்தையிலுள்ளவர்கள் என்றார்; அந்தக் காலந்தானும் இன்றிக்கே எப்பொழுதும் பகவத் அநுபவம் செய்யுமவர்கள் நித்தியசூரிகள் என்கிறார் மேல்: அவர்கள் - நித்தியசூரிகள்.

3. போது செய்கையாவது, மொட்டிக்கையாய், சிலேஷ்மம் முதலியவைகளாலே மறைக்கப்படுகின்ற நிலையுண்டேயன்றே கண்டத்துக்கு; அது இன்றிக்கே இருக்கை என்றபடி. அவன் யாழிசை என்பதற்குப் பிரமாணம்காட்டுகிறார் "யாழ்பயில்" என்று தொடங்கி. இது, திருவாய்மொழி. 2. 3 : 7.

4. 'செவிக்கு அதுவாய்' என்றது, செவிக்கு இசை போக்கியமாய் என்றபடி. என்றது, ஒருவனே எல்லா இந்திரியங்களுக்கும் விஷயமாய் இருக்கிற தன்மையைத் தெரிவித்தபடி.

5. 'அன்றிக்கே' என்று தொடங்கும் இரண்டாவது பொருளுக்கு, அப்ராக்ருதமான அரியேறுபோலே அளவிட்டு அறிந்து அநுபவிக்க ஒண்ணாத இனிமையை யுடையவன் என்பது கருத்து. முகக்கொள்ள - அளவிட்டு அறிய.

இனிமையையுடையவன் என்றுமாம். [1] இங்குள்ளார்க்கும் அங்குள்ளார்க்கும் உன்னை அநுபவிக்கக்கொடுத்து நிரதிசயபோக்கியனாயிருக்க, நான் இந்திரியங்களுக்கு இரை இட்டு எத்தனை காலம் அகன்றிருக்கக்கடவேன் என்கிறார். (6)

## 526.

அரியே றே! என் னம்பொற் சுடரே! செங்கட் கருமுகிலே!
[2] எரியேய் பவளக் குன்றே! நால்தோள் எந்தாய்! உனதருளே
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்! குடந்தைத் திருமாலே!
தரியேன் இனிஉன் சரணம் தந்துஎன் சன்மம் கழாயாயே.

**பொ-ரை:**—அரிஏறே! அழகிய பொன்னின் சுடரே! சிவந்த கண்களையுடைய கரியமுகிலே! நெருப்புப் பொருந்திய பவளக்குன்றே! நான்கு திருத்தோள்களையுடைய எந்தையே! உன்னுடைய திருவருளாலே என்னைப் பிரிதல் இல்லாத அடிமை கொண்டவனே! திருக்குடந்தையில் திருக்கண்வளர்கின்ற திருமாலே! இனி, தரித்திரேன், உன்னுடைய திருவடிகளைத் தந்து என் பிறவியை நீக்குவாய்.

**வி-கு:**—வியாக்கியானத்துக்குப் பொருந்த "எரியேய் பவளக்குன்றே!" என்று திருத்தப்பட்டது. இப்பொழுதுள்ள பாடம், 'எரியே பவளக்குன்றே' என்பது. 'அடிமை கொண்டாய்!' என்பதனை விளிப்பெயராகக் கொள்ளாது, அடிமைகொண்டாய், ஆகையாலே, சரணம் தந்து சன்மம் களையாய் என க் கோடலுமாம். களையாய் என்றது, களையவேண்டும் என்றபடி. உடன்பாட்டு முற்று.

**ஈடு:**—ஏழாம்பாட்டு. [3]உன்கிருபையாலே உன் வைலக்ஷண்யத்தைக் காட்டி அடிமையால் அல்லது செல்லாதபடி ஆக்கினபின்பு, உன்திருவடிகளைத் தந்து பிறகு சம்சாரத்தை அறுக்கவேண்டும் என்கிறார்.

---

1. "வாழ்தொல் புகழார்" என்றதுமுதல், "எனைநாளகன்றிருப்பன்" என்றது முடியக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'இங்குள்ளார்க்கும்' என்று தொடங்கி.

2. "எரியே பவளக்துன்றே" என்பது, இப்பொழுது உள்ள பாடம். வியாக்கியானத்தை நோக்கும்போது "எரியேபீ பவளக்துன்றே" என்ற பாடமே சிறப்புடைத்தாம்.

3. "அரியேறே" என்பது போன்றவைகளையும், "உனதருளே" என்பது போன்றவைகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அரிஏறே - [1] தன்னினின்றும் வேறுபட்ட பொருள்களுக் கெல்லாம் தானே கடவனுகையாலே வந்த மேலுணிப்பு. என் அம்பொன்சுடரே - அம்மேன்மைக்குச் சிறிது உள்ளாகப் பார்த்தவாறே பிரகாசித்துத் தோற்றுகிற ஒளியாலே வில க்ஷணமான பொன்போலே விரும்பத் தக்க தான ஒளியை யுடையவனே! அவ்வடிவில் வாசியைத் தமக்கு அறிவித்தவ னுதலின் 'என் அம்பொன்சுடரே' என்கிறார். செம் கண் கரு முகிலே - [2] அதற்கும் அடியான திருக்கண்களும் திருமேனியும் இருக்கிறபடி. எரி ஏய் பவளக் குன்றே - நக்ஷத்திரமண்டலம் வரையிலும் ஓங்கிய பவளக்குன்றே! சமுதாய சோபை இருக் கிறபடி. எரி - கேட்டை நக்ஷத்திரம். அன்றிக்கே, எரி ஏய்ந்த பவளக்குன்றுபோலே இருக்கை என்னுதல், என்றது, அக்கி போலேயுள்ள ஒளியையுடைய பவளக்குன்றே! என்றபடி. இதனால், [3] ஒளியையும், விரும்பப்படுகின்ற தன்மையையும் நினைக்கிறது. உகவாதார்க்கு நெருங்கவும்கூடாத தன்மைய னுய், அநுகூலர்க்கு ஒளியால் விருப்பத்திற்கு விஷயமாய் இருக்கையைத் தெரிவித்தபடி. அளவிடற்கு அரியவன் என் பார் 'குன்றே' என்கிறார். நால்தோள் எந்தாய் - கல்பக தரு பணைத்தாற்போலே இருக்கிற திருத்தோள்களைக் காட்டி என் னைத் தனக்கே உரியவனுக எழுதிக்கொண்டவனே! [4] திருவடி தோற்ற துறையிலே ஆயிற்று இவரும் தோற்றது.

---

1. மேற்பாசுரத்தில், எல்லாப் பொருள்களுக்கும் வேறுபட்டிருக்குந் தன்மையால் வந்த மேலுணிப்பு என்று அருளிச்செய்து, இங்கே, சர்வ நிர்வா ஹகன் ஆகையால் வந்த மேலுணிப்பு என்கையாலே கூறியது கூறல் இல்லை.

"கூறியது கூறினும் குற்ற மில்லை
வேறொரு பொருளை வினைக்கு மாயின்"

என்பது, இலக்கணம்.

2. 'அதற்கும் அடியான' என்றது, "அரியேறே" என்ற மேன்மைக் கும் அடியான என்னுதல். "அம்பொற்சுடரே" என்ற தேஜஸ்ஸுக்கும் அடி யான என்னுதல்.

3. "எரி" என்றதனை நோக்கி, 'ஒளியை' என்றும், "பவளக்குன்று" என்றதனை நோக்கி, 'விரும்பப்படுகின்ற தன்மை' என்றும் அருளிச்செய் கிறார்.

4. "ஆயதாள்ச" என்ற சுலோகத்தைத் திருவுள்ளம்பற்றித் 'திருவடி' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

உனது அருளே பிரியா அடிமை என்னைக் கொண்டாய்-[1] உன்னுடைய கேவல கிருபையாலே என்னை நித்தியகைங் கரியத்தைக் கொண்டாய். அருள் - அருளாலே. குடந்தைத் திருமாலே - அடிமை கொள்ளுகைக்காகப் பெரிய பிராட்டியா ரோடே கூடத் திருக்குடந்தையிலே வந்து திருக்கண்வளர்ந் தருளுகிறவனே! 'ஒரு தேச விசேடத்தே' என்னுதபடி தேசத் தில் குறை இல்லை, திருமகள்கேள்வனுகையாலே பேற்றிற் குறை இல்லை. [2] "சீதாபிராட்டியாரோடுகூட நீர் மலைத்தாழ் வரைகளில் உலாவும்பொழுது நான் எல்லாவித கைங்கர்யங் களையும் எப்பொழுதும் பண்ணுவேனை" என்ற இளையபெரு மாளைப்போலே பற்றுகிறார் இவரும். இனி தரியேன் - அந்தச் சேர்த்தியைக் கண்டபின்பு என்னால் பிரிந்து தரித்திருக்கப் போகாது. [3] தாய் தந்தையர்கள், அண்மையிலிருப்பாருமாய் ஸ்ரீமான்களுமாய் உதாரருமாய் இருக்க, குழந்தை பசித்துத் தரித்துக் கிடக்கவற்றே. தரியாமை எவ்வளவு போரும் என்ன, உன் சரணம் தந்து என் சன்மம் களையாயே-மூலை கொடுத்துச் சிகித்சிப்பாரைப் போலே, முற்படத் திருவடிகளைத் தந்து, பின்பு பிறவியின் சம்பந்தத்தை அறுக்கவேண்டும். [4] புண் ணூர் ஆக்கையின் புணர்வினை அன்றே அறுக்கப் புகுகிறது; அதற்கு அடியிலே தரிப்பித்துக்கொண்டு, பின்னை அறுக்க வேண்டும் என்கிறார். (7)

---

1. 'உன்னுடைய கேவல கிருபையாலே' என்றது, "அருளே" என்றதிலேயுள்ள 'ஏகாரத்தைத் திருவுள்ளம்பற்றி.

2. "பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஶ்ச தே"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 25. பெருமாளைப் பார்த்து இளையபெரு மாள் கூறியது.

3. தரித்திருக்கப் போகாமைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தாய் தந்தையர்' என்று தொடங்கி. 'தரியாமை எவ்வளவுபோரும் என்ன' என்றது, இந்தச் சரீர சம்பந்தத்தை அறுத்துத் திருவடிகளைத் தரப் பற்றுமோ என்ன என்றபடி.

4. இது புண்ணூ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'புண்ணூர்' என்று தொடங்கி.

மண்ணுய் நீர்எரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்
புண்ணூர் ஆக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்
விண்ணூர் நீள்கொடி விரையார்திரு வேங்கடவா!
அண்ணா! வந்தடைந்தேன் அடியேனைஆட் கொண்டருளே.

என்பது, பெரிய திருமொழி.

## 527.

கூவாய் துன்பம் கூயா தொழிவாய் கூகண் மற்றிலேன்
வூவாய் நேமிப் படையாய்! குடந்தைக் கிடந்தாய்! மாமாயா!
தளரா உடலம் எனதாவி சரிந்து போம்போது
இூயா துனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே.

**பொ - ரை:**—வூளைந்த வாயையுடைய சக்கரத்தைப் படையாக வுடையவனே! திருக்குடந்தையில் திருக்கண்வளர்ந்தருளுகின்றவனே! மாமாயனே! என் துன்பத்தைப் போக்குவாய்; போக்காதொழி வாய்; துணையாவார் வேறு ஒருவரையுமுடையேன் அல்லேன்; சரீரம் தளர்ந்து என் உயிரும் இந்த உடலை விட்டு நீங்கிப் போகின்ற காலமா யிற்று; தளராமல் உன் திருவடிகளை ஒருபடிப்படப் பிடித்துக்கொண்டு போவதற்கு நீ சம்மதிக்கவேண்டும்.

**வி - கு:**—"துன்பம் என்பதனை இடைநிலைத் தீவகமாக முன் னும் பின்னும் கூட்டுக. கூகண் - துணை. இூத்தல் - நெகிழ்தல்.

**ஈடு:**—எட்டாம்பாட்டு. [1]"தரியேன்" என்ற பின்பும் முகங் கிடையாமையாலே கலங்கி; அநுபவம் பெற்றிலேனே யாகிலும், 'உன் திருவடிகளே தஞ்சம்' என்று பிறந்த விசுவா சம் குலைகிறதோ என்று அஞ்சாநின்றேன்; அது குலையாத படி பார்த்தருளவேண்டும் என்கிறார்.

கூவாய் துன்பம் கூயாது ஒழிவாய் கூகண் மற்றி லேன் - [2]நீ உன் காரியத்தைச் செய்யிலும் செய், தவிரிலும் தவிர்வாய், நான் குறைவற்றேன், "நீயே உபாயமாக எனக்கு

---

1. "ப்ரசக்தஸ்யஹி ப்ரதிஷேதः" என்கிற நியாயத்தாலே, இப்போது 'விஶ்வாஸம் குலையாதபடி செய்யவேணும்' என்கைக்குக் காரணம் எது? என்ன, அதற்கு விடை யருளிச்செய்யு முகத்தால் அவதாரிகை அருளிச்செய் கிறார். "இூயாதுனதாள்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து 'உன் திருவடிகளே தஞ்சம்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். ப்ரசக்தஸ்யஹி ப்ரதிஷேதः என்ற நியாயமாவது, உண்டாவதற்கு எது இருந்தால் அல்லவா விலக்குவேண்டும். என்பது.

2. "துன்பம் கூவாய், துன்பம் கூயாதொழிவாய்" என்றபடி. குறைவற்ற பிரகாரத்தை விவரிக்கிறார் 'நீயே உபாயமாக' என்று தொடங்கி.

"த்வம்ஏவ உபாயபூதோ மே பவ இதி ப்ரார்த்தநாமதिः"

என்றது, சரமஶ்லோக பூர்வார்த்த பிரதிபாத்ய அதிகாரியின் செயலில் குறை இல்லை என்றபடி.

ஆவாய்" என்கிற அம்சத்தில் குறை இல்லை; [1]"எல்லாப்பாவங் களினின்றும் விடுவிக்கின்றேன்" என்னும் உன் கூறு செய் யிலும் செய், தவிரிலும் தவிர்வாய். [2]அப்படிச் செய்கிறேம் என்னுமையாலே, என்னுடைய ரக்ஷணத்துக்காக அன்றே இக்கிடை என்கிறார், மேல்: வலவாய் நேமிப்படையாய்-பார்த்த இடம் எங்கும் வாயான திருவாழியை ஆயுதமாகவுடையவனே! [3]கலையா தொழிகைக்குச் சொல்லலாம் கண்ணழிவு உண்டோ? என்பார் '**நேமிப்படையாய்**' என்கிறார். என்றது, '**பரிகரம் இல்லை**' என்னப் போமோ. 'கைகழிந்து போயிற்று, இனிப் படை திரட்டவேண்டும்' என்னும் கண்ணழிவு உண்டோ? என்றபடி. [4]உன் கையில் ஆயுதத்துக்கு வாய் இல்லாத இடம் உண்டோ, அது வாய் படைத்த பிரயோஜனம் பெறவேண் டாவோ? என்பார் '**வலவாய்**' என்கிறார். நேமிப்படையாய் கலகண் மற்றிலேன் - [5]அப்படி இருப்பது என்கையில் ஓர் ஆயுதம் உண்டோ, பிறர் கையில் ஓர் ஆயுதம் உண்டோ, உன் கையில் ஆயுதம் இல்லையோ. குடந்தைக் கிடந்தாய் மாமாயா - திருக்குடந்தையிலே வந்து ஆச்சரியமான அழகோடே திருக் கண் வளர்ந்தருளுகிறது அடியார்களுக்காக அன்றே. நீ [6]"மாம்" என்றதன்பின் இவ்வருகுள்ள ஏற்றமெல்லாம் பாராய். இதனால், அவதாரதசையிலும் அர்ச்சாவதாரம் சுலபம்

---

1. 'நீ உன் காரியத்தைச் செய்யிலும் செய், தவிரிலும் தவிர்வாய்; என்றதன் விவரணம், 'எல்லாப் பாவங்களினின்றும்' என்று தொடங்கும் வாக்கியம். "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்பது, ஸ்ரீ கீதை.

2. "குடந்தைக் கிடந்தாய்" என்றதற்கு, அவதாரிகை அருளிச்செய்கி றார் 'அப்படிச் செய்கிறேம்' என்று தொடங்கி.

3. "நேமிப்படையாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கலையாதொழிகைக்கு' என்று தொடங்கி.

4. "வலவாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உன்கையில்' என்று தொடங்கி.

5. "மற்றிலேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அப்படி இருப்பது?' என்று தொடங்கி.

6. "குடந்தைக் கிடந்தாய்" என்று அர்ச்சாவதார சௌலப்யம் சொல் லுகையாலே, 'நீ, "மாம்" என்றதன்பின்' என்று தொடங்கி அருளிச்செய் கிறார். "மாம்" என்பது, சரமஸ்லோகத்திலுள்ள ஒரு பதம். 'நீ மாம் என்ற தன்பின்' என்றது, கிருஷ்ணாவதார சௌலப்யத்தைத் திருவுள்ளம்பற்றி. 'ஏற்ற மெல்லாம் என்றது, அர்ச்சக பராதீனனாயிருக்கிற ஏற்றம் எல்லாம் என்றபடி.

என்றபடி. [1]சக்தி வைகல்யம் சொல்ல ஒண்ணாது, 'சுலபன் அல்லன்' என்ன ஒண்ணாது, 'குசியை உண்டாக்குமவன் அல்லன்' என்ன ஒண்ணாது என்றபடி.

உடலம் தளரா – சரீரம் கட்டுக் குலைந்து. தளரா - தளர. எனது ஆவி சரிந்து போம்போது - என் உயிரானது முடிந்து போகுமளவாயிற்றுக் கண்டாய். 'போம்போது' என்றது, போகும் அளவாயிற்று என்றபடி. நன்று; [2]இதுதான் அந்திம ஸ்மிருதி ஆனாலோ? என்னில். "கட்டைபோன்றவனைக்கல் போன்றவனை" என்றும், "நான் நினைக்கிறேன்" என்றும் சொல்லுகிறதை இவர் அறியாதவர் அன்றே; இவர்தாம் அவ்வதிகாரிகளும் அலரே. ஆதலால், பிரிவுத் துன்பத்தாலே சரீரமும் தளர, உயிரும் சரீரத்தை விட்டுப் போகும் தசையாயிற்று என்கை. இனியாது உன தாள் ஒருங்கப் பிடித்துப் போத நீ இசை - அபேக்ஷிதம் பெற்றிலேனே யாகிலும், நான் விரும்பியது சித்திக்கும்படி உன் திருவடிகளைப் பற்றின பற்று நெகிழாமற் பண்ணி அருளவேண்டும். [3]அநுபவம் கிடையாமையாலே, 'அதற்கு அடியான உபாய அத்யவசாயமும் குலைகிறதே' என்று அஞ்சி, இது குலையாமல் பார்த்தருள வேண்டும் என்கிறார். ஒருங்க - ஒரு படிப்பட. (8)

## 528.

இசைவித் தென்னை உன்தா ளிணைக்கீழ் இருத்தும் அம்மானே!
அசைவில் அமரர் தலைவர் தலைவா! ஆதிப் பெருமூர்த்தி!
திசைவில் வீசும் செழுமா மணிகள் சேரும் திருக்குடந்தை
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்! காண வாராயே.

---

1. "நமிப்படையாய், குடந்தைக் கிடந்தாய், மாமாயா" என்ற மூன்றனையும் கடாகரித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'சக்தி வைகல்யம்' என்று தொடங்கி. சக்தி வைகல்யம் - சக்தி குறைவு.

2. 'முடிந்துபோகுமளவாயிற்றுக் காண்' என்று வலிந்து பொருள் கொள்ளுதல் எற்றிற்கு? இருந்தபடியே, அந்திமஸ்மிருதி பிரார்த்தனையாகக் கொண்டாலோ? என்று சங்கிக்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி.

"ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணசன்னிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்"

என்பது, வராஹசரமம். 'அவ்வதிகாரிகளும்' என்றது, உபாசகர்களைக் குறித்தபடி.

3. "உனதாள் பிடித்தே" என்று, அத்யவஸாயத்தைப் பிரார்த்திக்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுபவம் கிடையாமையாலே' என்று தொடங்கி. ஒரு படிப்பட - பிரிவில்லாதபடி.

**பொ - ரை :**—என்னை உடன்படச்செய்து உனது திருவடிகளிலே சேரச்செய்த அம்மானே! அழிதல் இல்லாத நித்தியசூரிகளுக்குத் தலைவரான சேனைமுதலியாருக்குத் தலைவனே! திசைகளில் எல்லாம் ஒளியை வீசுகின்ற செழுமைபொருந்திய சிறந்த இரத்தினங்கள் சேர்ந்திருக்கின்ற திருக்குடந்தை என்னும் திவ்வியதேசத்திலே, வருத்தம் இல்லாதவாறு உலகமானது பரவும்படி திருக்கண்வளர்கின்றவனே! நான் காணும்படி வரவேண்டும்.

**வி - கு :**—இசைவித்து இருத்தும் அம்மான் என்க. வில் - ஒளி. வாராய் : உடன்பாடு ; வரவேண்டும் என்றபடி.

**ஈடு :**—ஒன்பதாம்பாட்டு. [1] சர்வேசுவரனுய்வைத்து எல்லாராலும் பற்றப்படுமவனுகைக்காக இங்கே வந்து அண்மையில் இருப்பவனுய் எனக்கு அடிமையால் அல்லது செல்லாதபடி செய்த நீ, கண்களால் நான்காணும்படி வரவேணும் என்கிறார்.

என்னை இசைவித்து-நெடுநாள் விமுகனுய்நித்திய சம்சாரிகளுக்கும் இவ்வருகாயிருக்கிற என்னை அடிமையிலே இசைவித்து. [2] இசையாத என்னை இசைவித்த அருமைவேணுமோ இசைந்திருந்த நீ காரியம் செய்கைக்கு. உன் தாள் இணைக்கீழ் இருத்தும் - [3]நித்தியசூரிகள் அடிமைசெய்கின்ற உன்திருவடிகளிலே இருத்தினவனே! பரகுபரகு என்று திரியாதபடி தன் திருவடிகளிலே விஷயமாம்படி செய்யுமவன் என்கை. [4] "நிழலும் அடிதாறும் ஆனேம்" என்கிறபடியே, மிதி அடியாம்படி

---

1. "ஆதிப் பெருமூர்த்தி, உலகம் பரவ, காண வாராய்" என்பன போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "காணவாராய்" என்ற அளவிலே சொல்ல அமைந்திருக்க, "இசைவித்து என்னை" என்கிறதற்குப் பயன் அருளிச்செய்தார் 'இசையாத என்னை' என்று தொடங்கி. இவ்விடத்தில், "யான் ஒட்டி என்னுள்" என்ற திருப்பாசுரம் அநுசந்தேயம். 'இசைந்திருந்த நீ' என்றது, "எதிர்சூழல் புக்கு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

3. "அசைவில்" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'நித்தியசூரிகள்' என்று தொடங்கி.

4. அழகு மறிவோமாய் வல்வினையைத் தீர்ப்பான்
நிழலும் அடிதாறு மானேம்—சுழலக்
குடங்கடலை மீதெடுத்துக் கொண்டாடி அன்றத்
தடங்கடலை மேயார் தமக்கு.

என்பது, பெரிய திருவந்தாதி.

ஸ்ரீசடகோபன் ஆக்கி. [1] பெருங்காற்றில் பூளைபோலே யாதானும்பற்றி நீங்கும் விரதமாய் அன்றே முன்பு போந்தது. அம்மானே - பேறு இவரதாயிருக்க, அவன் இசைவிக்க வேண்டின சம்பந்தம் சொல்லுகிறது. அசைவு இல் அமரர் தலைவா - நித்தியசூரிகளுக்குத் தலைவனான ஸ்ரீசேனபதியாழ்வானுடைய காரியமும் இவன் புத்தியதீனமாய் இருக்கிறபடி. அசைவில்லாத அமரர்-நித்தியசூரிகள். அசைவில்லாமையாவது, பிரமன் முதலியோருடைய அழியாமைபோலே [2] ஆபேக்ஷிகமன்று. கல்பகாலத்தை எல்லையாக உடையது அன்று என்றபடி. அன்றிக்கே, குறைதல் விரிதல் இல்லாமல், எப்பொழுதும் ஒரே தன்மைத்தான ஞானத்தையுடையவர்கள் என்னுதல். ஆதிப் பெருமூர்த்தி-இவ்வருகுள்ளாருடையவும் சத்தைக்குக் காரணமாக இருப்பவனே! என்றது, உலகத்திற்கெல்லாம் காரணமாயிருக்கின்ற சர்வாதிகனே! என்றபடி. மூர்த்தி - ஸ்வாமி.

திசைவில் வீசும் செழுமா மணிகள்சேரும் திருக்குடந்தை-திசைகளிலே ஒளிபரவாநின்றதாய், காட்சிக்கு இனியதாய், பெருவிலையனான இரத்தினங்கள் சேராநிற்கிற திருக்குடந்தையிலே. அசைவுஇல் உலகம் பரவக் கிடந்தாய் - உலகமானது வருத்தம் அற்று அடையும்படி கிடந்தாய். வருத்தம் அறுதலாவது, கண்களால் காணமுடியாதவனை நாம் எங்கே அடையப் போகிறோம் என்கிற வருத்தம் தீர்தல். அன்றிக்கே, [3] அசைவில்லாத உலகமான நித்தியவிபூதியிலுள்ள நித்தியசூரிகளும் வந்து அடையும்படி கிடந்தாய் என்னுதல். அன்றிக்கே, [4] அசைவுண்டு-இடம் வலம் கொள்ளுகை, அதனைக் கண்டு உலகமானது பரவும்படி கிடந்தாய் என்னுதல். ஆக, சத்தையை

---

1. ஆனை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
காளை வாவென நவின்றனன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்.

என்பது, கம்பராமாயணம்.

2. 'ஆபேக்ஷிகமன்று' என்றது, நம்மைக்காட்டிலும் நாலுநாள் சாவாதிருக்கிற தன்மையையீட்டு, அவர்களை 'அமரர்' என்னுகின்றதேயன்றே; அப்படி அன்று என்றபடி.

3. அசைவில்லாத - ஞானத்திலே குறைவுஇல்லாத.

4. அசைவில் - அசைவினுலே என்றபடி. இப்பொருளில் "அசைவில்" என்பது, ஒருசொல்.

நோக்கி; மேலுள்ளனவற்றை இவர்கள்தாமே நிர்வஹித்துக் கொள்ள இருக்கை அன்றிக்கே, மேலுள்ளனவற்றையும் தானே செய்வானாக நினைத்து வந்து கிடக்கிறபடியைத் தெரிவித்தபடி. கிடந்தாய் காண வாராய் - திருக்கண் வளர்ந்தருளுகின்ற அழகினைக் கண்டு அநுபவித்தேன், இனி நடையழகு கண்டு நான் வாழும்படி வரவேணும். செழுமா மணிகள் சேரும் திருக்குடந்தை என்பதற்கு, [1]'ஆராவமுதாழ்வார், திருமழிசைப்பிரான் போல்வார் புருஷரத்நங்கள் சேரும் திருக்குடந்தை' என்று நிர்வஹிப்பர்கள். (9)

## 529.

வாரா அருவாய் வரும்என் மாயா! மாயா மூர்த்தியாய்!
ஆரா வமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்!
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்! திருக்குடந்தை
ஊராய்! உனக்காட் பட்டும் அடியேன் இன்னம் உழல்வேனே?

**பொ - ரை:**—புறத்தில் காணும்படி வாராமல் அருவாய் மனத்தின்கண் தோன்றிக் காட்சிஅளிக்கின்றவனே! அழிதல்இல்லாத திருமேனியையுடையவனே! ஆராவமுதம்போன்று அடியேனுடைய நெஞ்சுக்குள்ளே தித்திக்கின்றவனே! தீராத வினைகள் எல்லாம் தீரும்படியாக என்னை அடிமைகொண்டவனே! திருக்குடந்தையாகிய திவ்விய தேசத்தையுடையவனே! உனக்கு அடிமைப்பட்டும் இன்னமும் இங்கே அடியேன் அலைந்து திரிவேனே?

**வி - கு:**— மூர்த்தி - சரீரத்தையுடையவன். ஆவியகம் - ஆவியில். அகம்: ஏழாம்வேற்றுமையுருபு. தீர ஆண்டாய் என்க. உழலுதல்- அலைந்துதிரிதல்.

**ஈடு:**—பத்தாம்பாட்டு [2]'திருக்குடந்தையிலே புக, நம் மனோரதம் எல்லாம் சித்திக்கும்' என்று செல்ல, நினைத்தபடி தாம் பெருமையாலே, இன்னமும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக்கடவேன் என்கிறார்.

---

1. ஆராவமுதாழ்வார் - திருக்குடந்தை எம்பெருமான். திருமழிசைப்பிரான் - திருமழிசை ஆழ்வார். வில்வீசுதல் - ஞான ஒளி உலகம் எங்கும் பரவுதல்.

2. "உனக்கு ஆட்பட்டும் அடியேன் இன்னம் உழல்வேனே" என்பதனைக் கடாகவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வாரா அருவாய் - வாராத அருவாய், என்றது, [1] புறத்திலே கண்களாலே கண்டு அநுபவிக்கலாம்படி வாராத அருபிப் பொருளாய் என்றபடி. அருவாய் வரும் என் மாயா - மறந்து பிழைக்க ஒண்ணாதபடி [2] அகவாயிலே அருவாய்க் கொண்டு பிரகாசிக்கின்ற ஆச்சரியத்தையுடையவனே! 'அருவாய்' என்ற பதத்தை இங்கேயும் கூட்டிக்கொள்வது. மாயா மூர்த்தியாய் - நித்தியமான திவ்விய மங்கள விக்கிரஹத்தையுடையவனே! [3]"அல்லாதாருடைய சரீரங்கள் முழுதும் பிறத்தல் இறத்தல்களை யுடையனவாயன்றே இருப்பன. ஆராவமுதாய்-நிரதிசய இனியனுய்க்கொண்டு எனக்கு மறக்க ஒண்ணாதபடி இருக்கின்றவனே! அடியேன் ஆவியகமே தித்திப்பாய் - என்றும் உனக்குச் சொத்தாகவுள்ள என் நெஞ்சினுள்ளே உன் இனிமையைத் தோற்றுவித்து அநுபவிப்பித்தவனே! [4]தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய் - அநுபவித்தே போக்கக்கூடியனவாய், உன்னை ஒழிய வேறு ஒருவரால் போக்க ஒண்ணாத, உன்னை அநுபவிப்பதற்குத் தடையாகவுள்ள கருமங்களைப் போக்குவித்து, 'அடியேன் ஆவியகமே தித்திப்பாய்' என்னும்படி புகுர நிறுத்தினவனே! அன்றிக்கே, "பிணியும் ஒழிகின்ற தில்லை பெருகு மிதுவல்லால்" என்கிறபடியே, "தீர்ப்பாரை யாம் இனி"என்ற திருவாய்மொழியில் கூறிய வினைகள் தொடக்கமானவற்றைப் போக்கி என்னை அடிமை கொண்டாய் என்றுமாம். திருக்குடந்தை ஊராய் - என்னை அடிமைகொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலே வந்து அண்மையில் இருப்பவனே! என்றது, [5]நான் கிட்டாத அம்சத்துக்கு

---

1. "வரும்என் மாயா" என்னுமிற்க, "வாரா வருவாய்" என்கிறது என்? என்ன, 'புறத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'அகவாயிலே அருவாய்க்கொண்டு' என்றது, அரு என்று ஆத்மாவாய், அகவாயிலே தாரகனுய்க்கொண்டு என்றபடி.

3. "மாயா" என்ற விசேடணத்தின் பொருளை அருளிச்செய்கிறார் 'அல்லாதாருடைய' என்று தொடங்கி.

4. "தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். இரண்டாவது பொருளில், "வினை" என்றது, பிரிவால் உளதாய துன்பம். தீர - தீர்த்து.

5. 'நான் கிட்டாத அம்சத்துக்கு நீ கிட்ட வந்து கிடக்கிறவனே' என்றது, நீ இருக்கிற பரமபதத்திலே நான் கிட்டவேண்டும்படியாயிருக்க, நான் இருக்கிற இடத்திலே நீ கிட்ட வந்து கிடக்கிறவனே! என்றபடி.

நீ கிட்ட வந்து கிடக்கிறவனே! என்றபடி. [1]ஒரு நத்தம் இல்லாதான் ஒருவனையோ நான் பற்றிற்று. இதனால், பரத்துவம் வியூகம் விபவம் என்னுமிவற்றைக் காட்டிலும் இதற்கு உண்டான் வேறுபாட்டினைத் தெரிவிக்கிறார். உனக்கு ஆட்பட்டும்-சம்சாரிகளை அநுபவிப்பிக்க வந்து கிடக்கிற உனக்கு ஆட்பட்டும். அடியேன்-யாருடைய வஸ்து இங்ஙனே அலமந்து திரிகிறது. இன்னம் உழல்வேனே - என்னுடைய முயற்சிகள் எல்லாவற்றையும் உன் திருவடிகளிலே பொகட்டு, நீ செய்தது தலைக்கட்டக்கடவையாக நினைத்திருக்கிற நான், இன்னம் எத்தனை திருப்பதிகள் புக்குத் [2]தட்டித் திரியக்கடவேன் என்கிறார். (10)

## 530.

உழலை என்பில் பேய்ச்சி முலையூடு அவளை உயிர்உண்டான்
கழல்கள் அவையே சரணுகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்னஓர் ஆயி ரத்துள் இப்பத்தும்
மழலை தீர வல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே.

**பொ - ரை :**—உழலை கோத்தாற்போலே இருக்கின்ற எலும்புகளையுடைய பூதனையினது முலை வழியே அவளுடைய உயிரையும் உண்டவனை கண்ணபிரானுடைய திருவடிகளையே உபாயமாகக் கொண்ட குருகூர்ச் சடகோபரானே வேய்ங்குழலின் இசையைக் காட்டிலும்இசை மிகும்படியாக அருளிச்செய்யப்பட்ட ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களையும் இளமை தீரும்படி வல்லவர்கள் மானைப்போன்ற பார்வையையுடைய பெண்களுக்கு மன்மதனைப் போன்றவரேயாவர்.

**வி - கு :**—உழலை - தடைமரம். "பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப்புடைய கும்பி" என்பது, சிந். 713. பேய்ச்சி - பூதனை. 'அவளை' என்பது உருபு மயக்கம். 'குழலின்' என்பதில், இன் என்பது, ஐந்தாம்வேற்றுமையுருபு, ஒப்புப்பொருளில் வந்தது. உறழ்பொருவுமாம். 'ஏய்' என்பது, உவமை உருபு. நோக்கியர்க்குக் காமர் என்க.

**ஈடு :**—முடிவில், [3]இப்பத்தைப் பழுதறக் கற்கவல்லவர்கள், காமினிகளுக்குக் காமுகரைப்போலே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இனியர் ஆவர் என்கிறார்.

---

1. "ஊராய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒருநத்தம்' என்று தொடங்கி.

2. தட்டித்திரிதல் - பலம் இல்லாதிவனுய்த் திரிதல்.

3. "மழலை தீரவல்லார்" என்று தொடங்கி, திருப்பாசுரத்தில் மேலுள்ளவற்றைத் தொகுத்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

உழலை என்பில் பேய்ச்சி முலையூடு அவளை உயிர் உண்டான் - [1] உழலை கோத்தாற்போலே இருக்கிற எலும்புகளையுடைய பூதனை முலைவழியே அவளுடைய உயிரை உண்டான். கழல்கள் அவையே சரணைக்கொண்ட குருகூர்ச் சடகோபன்- [2] விரோதிகளை அழிக்கின்ற ஸ்வபாவத்தையுடைய கண்ணபிரானது திருவடிகளையே, விருப்பமில்லாதவைகள் நீங்குவதற்கும் விருப்பமுள்ளவைகளை அடைவதற்கும் உபாயம் என்று அறுதியிட்ட ஆழ்வார். விரோதிகளைப்போக்குவதும் அவனைத் தருவதும் திருவடிகளேயாம் என்பார் '**அவையே**' என ஏகாரம் கொடுத்து ஒதுகிறார். பலியாவிட்டாலும் தம்மடி விடாதவரே அன்றே இவர்; ஆதலின், '**கொண்ட**' என்கிறார். குழலின் மலியச் சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் - [3] திருக்குழல் ஓசையிற்காட்டிலும் விஞ்சி, கேட்டார் நோவுபடும்படியாக இருக்கிற ஒப்பற்ற ஆயிரம் திருவாய்மொழியில் இப்பத்தையும். [4] மரங்கள் நின்று மதுதாரைகள் பாய்தல் அன்றே அங்கு, மரங்களும் இரங்கும்வகை இங்கு; இனி, நாம் இரங்கு

---

1. 'உழலை கோத்தாற்போலே இருக்கிற எலும்புகளையுடைய' என்றதற்குக் கருத்து, அகவாயில் மாத்திரமன்றிக்கே, வடிவிலும் ஒருபசை இல்லை என்பதாம்.

2. 'பூதனை முலையுண்டவன் திருவடிகளை உபாயமாகக் கொண்ட' என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'விரோதிகளை' என்று தொடங்கி.

3. 'பூதனையை அழித்தவன்' என்று மேலே சொல்லி, "குழலின் மலிய" என்கையாலே, "குழலின்" என்பதற்கு, கிருஷ்ணனுடைய திருக்குழலோசை என்று பொருள்கூறத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் 'திருக்குழல் ஓசையிற் காட்டிலும்' என்று தொடங்கி.

4. திருக்குழல் ஓசையைக்காட்டிலும், இத்திருவாய்மொழிக்கு ஆதிக்யம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மரங்கள் நின்று' என்று தொடங்கி.

கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து கட்டிநன் குடுத்த பீதக வாடை
அருங்கல வுருவின் ஆயர் பெருமான் அவனொரு வன் குழ லூதின போது
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற பக்கம் நோக்கிஅவை செய்யும் குணமே.

என்பது, பெரியாழ்வார் திருமொழி.

"இரங்கி நான்தொறும் வாய்வெரீஇ இவள் கண்ண நீர்கள் அலமர
மரங்களும் இரங்கும்வகை மணிவண்ணனோ என்று கூவுமால்"

என்பது, திருவாய். 6. 5 : 9.

கிற இது [1] தன்னேற்றமேயன்றே இங்குத்தைக்கு; ஆதலின், 'குழலின் மலிய' என்கிறது. மழலே கீர வல்லார் - இளமை கீர வல்லார். என்றது, 'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்று இருக்கைஅன்றிக்கே, இவர் சொன்ன ஆற்றமை யோடே சொல்லவல்லார் என்றபடி. [2] "அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடி அலற்றுவன்" என்பதேஅன்றே இவர் ஆற்றமை. மான் ஏய் நோக்கியர்க்குக் காமர் - மானே ஏய்ந்த நோக்கையுடைய பெண்களுக்குக் [3] காமுகரைப்போலே ஆவர். ஆவது என்? என்னில், "தூராக் குழி தூர்த்து எனை நாள் அகன்றிருப்பன்" என்ற இவர் இது பலமாகச் சொல் லும்போது மேற்கூறியதோடு முரண்பட்டதாம். [4] ஆனால், சொல்லிற்றுயிற்று என்? என்றால், "மேல் கொடிதான நர கம்" என்றுநிற்கச்செய்தேயும், விஷயத்தில் ஈடுபாடுடையவர் கள் அது பாராதே மேல் விழுமாறுபோலே, இது கற்றாரை எம்பெருமானும் ஸ்ரீவைஷ்ணவர்களும் மேல்விழுந்து இனிய ராகக் கொள்ளுவர்கள் என்றபடியாம். [5] இங்ஙன் அன்றுகில் வஞ்சனையுள்ளவர் வார்த்தையாமேஅன்றே. இவர் பிராமாணி

---

1. 'தன்னேற்றமேயன்றே' என்றது, "மரங்கள்போல் வலியநெஞ் சம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. இவர், ஆற்றமையோடே கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அழுவன்' என்று தொடங்கி.

3. 'காமுகரைப்போலே ஆவர்' என்றது, பெண்களுக்குக் காமுகர் இனியராயிருக்குமாறு போன்று, ஈசுவரனுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் போக்யராவர் என்றபடி. 'ஆவது என்? என்னில்' என்றது, இருந்தவாறே பொருள் கூறாமல், இதனைத் திருஷ்டாந்தமாகக் கொண்டு பொருள் கூறுவான் என்? என்னில் என்றபடி. பிரகரணத்திற்கு விரோதம் இல்லாமல் வலிந்து பொருள் கூறுகிறோம் என்கிறார் "தூராக்குழி" என்று தொடங்கி.

4. ஆனபின்பு, முதல் சொன்ன பொருளே பொருந்துவதாம் என்று, சங்கை முன்னுக, சொன்ன பொருளே உறுதிப்படுத்துகிறார் 'ஆனால்' என்று தொடங்கி.

5. தமக்கு இதனைப் பலமாகச் சொன்னால் அன்றே "தூராக்குழி தூர்த்து" என்றதனோடு முரண்படுவதாம்; பிறர்க்கு இதனைப் பலமாகச் சொன் னார் என்றால் வரும் விரோதம் யாது? என்ன, இதற்கு மூன்று விதமாக விடை அருளிச்செய்கிறார் 'இங்ஙன் அன்றுகில்' என்று தொடங்கி. 'இங்ஙன் அன்றுகில்' என்றது, நான் சொன்னபடி சொல்லாமல், இருந்தபடியே சொல் லில்' என்றபடி.

கர் அன்றிக்கே ஒழிவரே. பிரகரணத்துக்குத் தகுதியாக அன்றே தலைக்கட்டி இருப்பதும். 'அவர்களுக்குப் போல்' என்ற ஒருதொடர் இங்குக் கண்டிலோமே! என்னில், [1]'முற்றுவமை' என்ற ஒரு இலக்கணம் இருக்கிறபடி. உவமை புக்க இடத்தே உபமேயமும் வரக்கடவது. "தாவி வையங்கொண்ட தடந் தாமரைகள்" என்னுகின்றதேஅன்றே. (11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

ஆரா வமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்
தாராமை யாலே தளர்ந்துமிகத் – தீராத
ஆசையுடன் ஆற்றுமை பேசி அலமந்தான்
மாசறுசீர் மாறன்எம் மான்.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. நன்று; 'எம்பெருமானுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் இனியராவர்' என்று தார்ஷ்டாந்திகத்தைக் காட்டும் சொற்கள் இங்கு இல்லையே? ஏனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முற்றுவமை' என்று தொடங்கி.

# ஒன்பதாந் திருவாய்மொழி—"மானேய் நோக்கு"

## முன்னுரை

ஈடு:—[1] திருக்குடந்தையிலே சென்று புக்கவிடத்திலும் தம் எண்ணம் நிறைவேறுமையாலே திருவல்லவாழ் ஏறப் போக ஒருப்பட்டார்; திருக்குடந்தையிலே சென்று புக்கவிடத்தில் தம் எண்ணம் சித்தியாததுபோன்று, திருவல்லவாழிலே முட்டப்போகவுங்கூட அரிதாயிற்று; அங்ஙனம் அரிதாம்படி தமக்குப் பிறந்த துன்பத்தை அங்ஙாபதேசத்தாலே அருளிச் செய்கிறார். [2] "மாசறு சோதி" என்ற திருவாய்மொழியில், இவர்தாம் மடல் எடுக்கப் புக்கு, 'அவனுக்குத் தாழ்வாம்' என்று தவிர்ந்தார்; இங்கு, ஆற்றுமை தோற்ற, கண்ட திருப்பதிகள்தோறும் புக்குத் திரியாநின்றார்; இதற்கு அடி ஏதும் தெரிகிறதில்லை. [3] அங்கு, அவன் ஸ்வரூபம் பரிஹரித்தார்; இங்கு, தம்முடைய ஸ்வரூபம் நோக்கப் பார்க்கிறார்; [4] அங்கு வடி

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் பொருளியைபு அருளிச்செய்கிறார் 'திருக்குடந்தையிலே' என்று தொடங்கி.

2. ஸ்வாபதேசத்திலே சங்கித்துப் பரிஹரிக்கிறார் 'மாசறுசோதி' என்று தொடங்கி. 'அவனுக்குத் தாழ்வாம்' என்றது, 'அவனுடைய ரக்ஷகத்வத்துக்குத் தாழ்வாம் என்றபடி. "ஊரெல்லாம்" என்ற திருவாய்மொழியின் முன்னுரையில் 'சூரியன் மறைகையாலே மடல் எடுக்கை தவிர்ந்தார்' என்று அருளிச்செய்தாரேயாகிலும், இங்கு, 'அவனுக்குத் தாழ்வாம் என்று தவிர்ந்தார்' என்று அருளிச்செய்கையாலே, இதுவும் ஒரு காரணமாகக் கோடல் தகும்.

3. 'இதற்கு அடி ஏதும் தெரிகிறதில்லை' என்ற சங்கையை இரண்டு விதமாகப் பரிஹரிக்கிறார் 'அங்கு அவன்' என்று தொடங்கியும், 'அங்கு வடிவிலே' என்று தொடங்கியும். 'அவன் ஸ்வரூபம் பரிஹரித்தார்' என்றது, அவனுடைய நிருபாதிக ரக்ஷகத்வத்துக்குத் தம்முடைய முயற்சி விரோதமாகையாலே, தம்முடைய முயற்சியை விட்டார் என்றபடி. 'இங்கு, தம்முடைய ஸ்வரூபம் நோக்கப் பார்க்கிறார்' என்றது, அநுபவம் இல்லாதபோது சத்தை கிடவாமையாலே, திருப்பதிகள்தோறும் புக்காகிலும் அவனே அநுபவித்துச் சத்தையை நோக்கப் பார்க்கிறார் என்றபடி. இதனால், தம்முடைய சத்தையை உண்டாக்கியே அத்தலையை நோக்க வேண்டுகையாலே தம்முடைய சத்தை சித்திக்கும்பொருட்டுத் திருப்பதிகள்தோறும் புக்கு அநுபவிக்கப் பார்க்கிறார் என்று பரிஹரித்தாராயிற்று.

4. 'அங்கு, வடிவிலே அணையவேணும் என்று ஆசைப்பட்டார்' என்றது, "மாசறுசோதி என்செய்யவாய் மணிக்குன்றத்தை" என்றதனைத் திருவுள்ளம்பற்றி. 'ஆசைப்பட்டார்' என்றது, ஆசைப்பட்டமாத்திரமாகையாலே "தத் தஸ்ய சத்ருஶம் பவேத் - அச்செயல் அவருக்கு ஒத்ததாகும்" என்றிருக்கலாம் என்றபடி.

விலே அணையவேணும் என்று ஆசைப்பட்டார்; பின்பு இவ் வளவும்வர அந்த வடிவிலே இறங்கி மூழ்கினபடியாலே ஆற் றுமை முறுகி, [1]"கொம்மை முலைகள் இடர் தீரக் கோவிந்தற் கோர் குற்றேவல்" என்கிறபடியே, அடிமைசெய்ய ஆசைப் படுகிறார். இனி, இவர் தமக்குக் கலவியாவது, மானச அநுபவம் என்றேயன்றே [2]திருவாய்மொழியின் முன்னுரையிலே அடி யிலே சொல்லிற்று; இங்ஙனேயிருக்க, திருவல்லவாழ் ஏறப் [3]புறப்பட்டுப் போகையாவது என்? உறவினர்கள் விலக்குத லாவது என்? என்னில், [4]அந்த மானச அநுபவத்திற்கு ஒரு கலக்கம்வர அமையுமன்றே.

[5]எம்பெருமானேடே கலந்து பிரிந்து பிரிவாற்றுமையாலே நோவுபடுகிறார் ஒரு பிராட்டி, தன்னுடைய குடிப்பிறப்பு முத லானவற்றையும் பாராமல், திருவல்லவாழ் ஏறப் புறப்பட்டுப்

---

1. "கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந் தற்கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும்
தவந்தான்என்"

என்பது, நாய்ச்சியார் திரு. 13: 9.

'அடிமை செய்ய ஆசைப்படுகிறார்' என்றது, "அடிகூடுவது என்று கொலோ" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

2. 'திருவாய்மொழியின் முன்னுரையிலே' என்றது, முதற்பத்திலே 'திருமகள் கேள்வன் ஒன்றிலே' என்றபடி.

3. 'புறப்பட்டுப் போகையாவது என்?' என்றதன்பின், 'முடியப் போகமாட்டாமல் புறச்சோலையிலே விழுந்து கிடைக்கையாவது என்' என்பது எஞ்சி நின்றது; அதனைக் கூட்டிக்கொள்க.

4. இரண்டற்கும் விடை அருளிச்செய்கிறார் 'அந்த' என்று தொடங்கி. 'அந்த மானச அநுபவத்திற்கு ஒரு கலக்கம் வர அமையும் அன்றே' என்றது, திருவல்லவாழ் ஏறப் போகிறது, மானச அநுபவமாய், முடியப் போகமாட்டா மல் புறச்சோலையிலே விழுந்து கிடக்கை, மானச அநுபவ அபாவத்தால் வந்த கலக்கம் என்றபடி. 'உறவினர்கள்' என்றது, சுவாபதேசத்தில், சம்பந்த ஞான உபாய அத்யவஸாய நிலைகளை. அவர்கள் விலக்குதல் என்றது, சம்பந்த ஞான உபாய அத்யவஸாய நிலைகளோடு கூடினவராய் நிரூபிக்குமளவில், தம் முயற்சி, அவனேயே ரக்ஷகனாகக் கொண்டிருத்தல் அவனுக்கே பாரதந்திரப் பட்டிருத்தல் ஆகிற ஸ்வரூபத்திற்கு முரண்பட்டதாகத் தோன்றுதலைக் குறித்த படி.

5. பிராசங்கிகமாகச் சங்கித்துப் பரிகாரம் செய்து, பின், இத்திருவாய் மொழியில் அருளிச்செய்யப்பட்ட பொருளை விரித்து அருளிச்செய்கிறார் 'எம்பெருமானேடே' என்று தொடங்கி. 'குடிப்பிறப்பு முதலானவற்றையும்' என்ற உம்மை, அவனுடைய ரக்ஷகத்வம் முதலான குணங்களைத் தழுவுகிறது.

போகப் புக, இதனை அறியும் தோழிமார் வந்து '**இது காரியம் அன்று, நம் தலைமைக்குப் போராதுகாண்**' என்று ஹிதம் சொல்லி மீட்கப் பார்க்க, 'இனி, நீங்கள் சொல்லுகிறவற்றால் நான்பெற்றது என்; [1] அவ்வூரில் திருச்சோலையும், அங்குண்டான பரிமளத்தைக் கொய்துகொண்டு புறப்படுகிற தென்றலும், அங்கே தேனைக் குடித்துக் களித்துப் பாடாநின்றுள்ள வண்டுகளினுடைய இனிதான மிடற்றோசையும், ஊரிலுண்டான வைதிகக் கிரியைகளின் கோலாஹலங்களும், நகர சம்பிரமங்களும், இவையெல்லாம், நீங்கள் என்னை மீட்க நினைப்பதைப்போன்று '**அங்கே போரு போரு**' என்று அழையாநின்றன; ஆனபின்பு, நீங்கள் சொல்லுகிறவற்றால் பெற்றது என்' என்று தன் துன்பத்தை அவர்களுக்கு அறிவுறுத்தி [2] அவர்களை வேண்டிக்கொண்டு; திருவல்லவாழிலே நான் நினைத்தபடியே போய்ப் புக்குப் பரிமாற வல்லேனே என்று அவர்களுக்குச் சொல்லுகிறளாயிருக்கிறது. [2] '**இதுதான் நான் அநுபவித்தேன்**' என்று சீயர் அருளிச்செய்வர். **பட்டர்** திருவடிகளை ஆஶ்ரயித்துப் பின்பு ஒருகால் மேல்நாட்டுக்கு எழுந்தருளி மீண்டு பெரிய விரைவோடே '**திருநாளுக்கு உதவ வேணும்**' என்று வர, **திருக்கரம்பன் துறையளவிலே** வந்த வாறே நினைவின்றிக்கே காவிரி பெருகிக் கிடக்க; இராத் திருநாள் எழுந்தருளி இங்குண்டான சம்பிரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப் பெறுதோழிவதாய்க்கொண்டு '**போர நோவுபட்டோம்**' என்று அருளிச்செய்வர். **ஏகதத்வி தத்ரிதர்கள்** சுவேதத் தீபத்தைச் சென்று கிட்டி, உள்ளுப் புகுகைக்குத் தகுதியில்லாமையாலே புறம்பே நின்று, அங்குள்ளார் எம்பெருமானைக் கண்டு படுகிற சம்பிரமத்தைச் செவி

---

1. இத்திருவாய்மொழியில் வருகின்ற "தேனுர் சோலைகள்", "தென்றல் மணம் கமழும்", "பாண்குரல் வண்டு", "பாடு நல் வேதஒலி", "மண்ணும் விண்ணும் தொழுகின்ற" என்ற பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி 'அவ்வூரில் திருச்சோலையும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "மானேய் நோக்கு நல்லீர்", "நன்னலத் தோழிமீர்காள்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி 'அவர்களை வேண்டிக்கொண்டு' என்கிறார்.

2. அங்குத்தை வியாபாரங்களும் செவிப்படாதிற்கக் கிட்டப்பெறுமல் சமீபத்தில் நின்று நோவுபட்டமைக்கு இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிறார் 'இதுதான்' என்றும், 'ஏகதத்விதத்ரிதர்கள்' என்றும் தொடங்கி. 'திருநாள்' என்றது, மார்கழி மாதத்து அத்யயன உத்ஸவத்தை. 'ஏகதத்விதத்ரிதர்கள்' என்றது, பிரஹ்மாவினுடைய மானச புத்திரர்களான இருடிகளை.

மேலே கேட்டு நிற்பது, கண்ணாலே காணப் போகாதொழிவ தாய்க் கிடந்து பட்டாற்போலே கிடந்து கூப்பிடுகிறாயிற்று இவரும்.

---

## 531.

**மானேய் நோக்கு நல்லீர்! வைகலும் வினையேன் மெலிய**
**வானுர் வண்கமு கும் மது மல்லிகை கமழும்**
**தேனுர் சோலை கள்சூழ் திருவல்லவாழ் உறையும்**
**கோனுரை அடியேன் அடிகூடுவது என்று கொலோ?**

**பொ - ரை:**—மான்பார்வைபோன்ற பார்வையையுடைய பெண் களே! வினையேன் நாள்தோறும் மெலியும்படியாக, ஆகாயம் வரையி லும் உயர்ந்திருக்கிற வளவிய பாக்குமரங்களும், தேன் பொருந்திய மல் லிகையும் வாசனை வீசுகின்ற தேன்பொருந்திய சோலைகள் சூழ்ந்த திரு வல்லவாழ் என்னும் திவ்வியதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற சர் வேசுவரனுடைய திருவடிகளிலே அடியேன் சேர்வது என்றுகொல்? என்கிறாள்.

**வி - கு:**—"மானேய்" என்பதில், ஏய்: உவம உருபு. நோக்கு = கண்கள். பார்வையுமாம். கமுகு - பாக்குமரம். மல்லிகை = முல்லை விசேடம். கோனுர் என்பதில், கோ என்பதற்கு, தலைவன் என்பது பொருள்; னகர ஒற்று, சாரியை; ஆர், உயர்வுப்பொருளைக் காட்ட வந்த விகுதி.

இத்திருவாய்மொழி, கலிநிலைத்துறை.

**ஈடு:**—முதற்பாட்டு. [1]தோழிமாரைக் குறித்து, திருவல்ல வாழிலே நின்றருளின சர்வேசுவரன் திருவடிகளைக் கிட்டப் பெறுவது என்றே? என்கிறாள்.

மான் ஏய் நோக்கு நல்லீர் - [2]"நான் திருவல்லவாழிலே போய்ப் புகும்படி உங்கள் கண்களாலே குளிர நோக்கித் திருவருள்புரியவேணும் என்கிறாள்" என்று பிள்ளான் பணிப் பர். மான்ஏய் நோக்குநல்லீர் = மானைஒத்த நோக்கினையுடையீ

---

1. "திருவல்லவாழ் உறையும் கோனுரை அடியேன் அடி கூடுவது என்று கொலோ" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நோக்கு" என்பதற்குப் பார்வை என்று பொருள் கொண்டு, தோழிமாருடைய பார்வையை வர்ணிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் திருவல்லவாழிலே' என்று தொடங்கி.

நாய் எனக்கு நல்லவர்களே! அன்றிக்கே, [1]'பிரிவாற்றுமை யாலே நோவுபட்டும், சோலையழகிலே ஈடுபட்டும், நம்மூடைய ஹிதவசனத்தாலே தளர்ந்தும் இருக்கின்ற இவளுக்கு, 'போக லாகாது' என்று விலக்கும் நம்மூடைய வார்த்தைகள் செவிப் படுமாகில், இவள் மோஹிக்கும்' என்று விலக்குகிற காரியம் தோற்றும்படி காதரேக்ஷணைகளாய்க் கொண்டிருக்க, 'மான் ஏய் நோக்கு நல்லீர்' என்கிறாள் என்னுதல். இவள் தனக்கு "அசூயையில்லாத" என்னும் இவ்வளவே அன்றே வேண்டு வது. "இதந்து தே குஹ்ய தமம் ப்ரவக்ஷ்யாமி - வைப்பாக வைத்தவையுமெல்லாம் சொல்லாநின்றேன் கேள். அஸூ யையே - [3]அத்தலை குறைவற்ற பின்பு இத்தலை கிடக்குமோ." வைகலும் வினையேன் மெலிய - [4]ஒருகால் மெலிந்து தரித்திருப் பார்க்கன்றே பிரிவாற்றலாவது. வைகலும் மெலிய - [5]காலம் கழியக் கழியக் காதல் கழியும்படியன்றே சிற்றின்பத்தை

---

1. "நோக்கு" என்பதற்குக் கண் என்று பொருள் கொண்டு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'பிரிவாற்றுமையாலே' என்று தொடங்கி. 'விலக்குகிற காரியம் தோற்றும்படி' என்றது, விலக்குதலால் வந்த வியசனம் தோற்றும்படி என்றவாறு. காதரேக்ஷணம் - மான்போன்ற பார்வை.

2. விலக்காமல் அதன் காரியம் தோற்றும்படி இருக்கின்றவர்களே வெறுப்பின்மை மாத்திரத்தைக் கொண்டு "நல்லீர்" என்று கொண்டாடக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "இவள் தனக்கு" என்று தொடங்கி.

"இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி அநஸூயவே
ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே அஶுபாத்"

என்பது, ஸ்ரீ கீதை. 9 : 1.

சுலோகத்தின் அர்த்தத்தை அருளிச்செய்கிறார் 'இதந்து' என்று தொடங்கி.

3. 'அத்தலை குறைவற்ற பின்பு' என்று தொடங்கும் வாக்கியத் திற்குக் கருத்து, அதிகாரியான நீ குறைவற்றபின்பு நான் சும்மா இருப் பேனே என்பது.

4. "வைகலும் மெலிய" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒருகால் மெலிந்து' என்று தொடங்கி.

5. விஷயாந்தரங்களைப் பிரிந்தவர்கள் தரித்திருக்கவில்லையோ, அப்படி இவரும் தரித்திருக்க ஒண்ணுதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிறார் 'காலங்கழிய' என்று தொடங்கி. என்றது, விஷயாந்தரங்கள் சிற்றின்ப மாகையாலே அவர்களுக்கு ஆறியிருக்கலாம், அங்ஙன் அன்றிக்கே, எல்லை யில்லாத பேரின்பப் பொருளே விரும்புகையாலே இவர்க்குத் தரித்திருக்கப் போகாது என்றபடி.

விரும்பியிருப்பார்க்கு இருப்பது; [1] மனனம் பண்ணி, பாவனை யாய், பின்பு தரிசனமாய், பிரத்தியக்ஷ சமான ஆகாரமாய், பின்பு சரீரம் நீங்குங்காலத்தைப் பார்த்திருப்பார்படி அன்றே இது. [2] "தஸ்ய-எனக்கு, அதஸம்பத்ஸ்யே - பின்பு சம்பந்நனாகக் கடவேன் என மேலே வருகின்ற தன்மை ஒருமை வினை முற்றோடு கூடவேண்டுமே. யாவந்நவி மோக்ஷ்யே-எத்தனைக் காலம் சரீரத்தினின்றும் விடுபடாமல் இருக்கிறேனே, தாவ தேவ சிரம் - எனக்கு அவ்வளவே கண்டாய் விளம்பம், அத ஸம்பத்ஸ்யே - பின்பு சம்பந்நனாகக் கடவேன்" என்றது, [3] "இந்த ஆத்மா இந்தச் சரீரத்திலிருந்து விடுபட்டுப் பரமாத் மாவை அடைந்து தானே நிலையைப் பெறுகிறான்" என்றபடி. இப்படிச் சரீரம் விட்டு நீங்கும் தினத்தைப் பார்த்திருப்பார்படி அன்றே இது. வைகலும் வினையேன் மெலிய - தன்னைப் பிரியும்படி மஹாபாவத்தைப் பண்ணின நான், நாடோறும் தொடர்ந்து வருகிற வியசனத்தாலே மெலிவினையுடையவ

---

1. பின்னை இவருடைய பக்தி இருக்கும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மனனம்பண்ணி' என்று தொடங்கி.

2. 'சரீரம் நீங்குங் காலத்தைப் பார்த்திருப்பார்' என்பதற்குப் பிர மாணம் காட்டுகிறார் 'தஸ்ய' என்று தொடங்கி.

"தஸ்ய தாவ தேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்பது, சாந்தோக்யம்.

எத்தனைக்காலம் சரீரத்தினின்றும் விடுபடாமலிருக்கிறேனே, அத் தனைக்காலந்தான் எனக்குத் தாமதம் அவனைப் பெறுவதற்கு; சரீரம் விடு பட்டபின், அவனை நான் பெறுவேன் என்பது இவ்வுபநிடத வாக்கியத்தின் பொழிப்புரையாகும்.

இந்த உபநிடத வாக்கியத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தஸ்ய' என்று தொடங்கி. 'தஸ்ய' என்றது முதல், 'கடவேண்டுமே' என்றது முடியவுள்ள வாக்கியத்திற்குக் கருத்து, அந்த என்னும் பொருளையுடைய 'தஸ்ய' என்னும் சுட்டுப்பெயர், பின்னே வருகின்ற "அதஸம் பத்ஸ்யே - பின்பு சம்பந்நனாகக் கடவேன்" என்னும் தன்மை யொருமை வினைமுற் றோடு சேராமையாலே, "தஸ்ய" என்ற சொல்லுக்குப்பின் 'எனக்கு' என்ற ஒருசொல்லைக் கூட்டிக் கோடல் வேண்டும் என்பது.

3. "ஏஷ ஸம்பிரசாதோ அஸ்மாத் சரீராத் சமுத்தாய பரஞ்ஜ்யோதிர் உபசம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே"

என்பது, சாந்தோக்யம்.

ளாக. [1]ஒருநாள் மெலியப் பொறுக்கமாட்டாத தன்மையினை யுடையவள் காண்! நெடுநாள் நோவுபடுகிறாள். திருவடி கண்டு போந்தபின்பு பிராட்டி படுவனவெல்லாம் படுகிறாளாயிற்று இவளும். ஓர் இரவின் வியசனத்தைத் திருவடி பொறுக்க மாட்டிற்றிலன் அன்றே; [2]"இமாம் அவித கேசாந்தாம்-மை வண்ண நறுங்குஞ்சியையுடையவர்க்கும் பேணத் தகும் குழலை யுடையவள்காண். சதபத்ரநிபேக்ஷணம்-'கமலக்கண்ணன்' என்கிற கண்களாலே கண்டுகொண்டிருக்கத் தக்க கருங்கண் களையுடையவள் காண். ஸுகார்ஹாம்-அவர் மடியிலே இருக் கத் தகுமவள். துக்கிதாம் த்ருஷ்ட்வா-இந்த இருப்பு இருக் கத் தகாதவளைக் கண்டு. மமாபி வ்யதிதம் மந:-இன்பதுன்பங் களுக்கு அழியாத என்னுடைய நெஞ்சுங்கூட வருந்திற்றுக் காண்." இப்படியே காணும் இவளுக்கும் இருக்கிறபடி. வினை யேன்-[3]நாள்செல்ல நாள்செல்ல ஆசை கழியாதபடியான பாவத்தைச் செய்தேன். மெலிய, திருவல்லவாழ் உறையும் என்னுதல். மெலிய-நீர்ப்பண்டமாய் அழிகிறபடி.

வான் ஆர் வண் கமுகும் மது மல்லிகை கமழும் தேனூர் சோலைகள் சூழ் திருவல்லவாழ் உறையும் கோளூரை-[4]இதனால், இத்தலை மெலிய மெலிய அத்தலை மல்காநின்றது என்ப

---

1. இவள் நாள்தோறும் மெலிவதற்குப் பிராட்டியின் மெலிவினைத் திருஷ்டாந்தம் காட்டுவதற்குத் திருவுள்ளம்பற்றி அதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஒருநாள் மெலிய' என்று தொடங்கி. 'திருவடி கண்டு போந்த பின்பு' என்றது, இலங்கையிலே போந்து பிராட்டியைக் கண்ட பின்பு என்றபடி. பிரிவுற்ற நிலையிலே பிராட்டி பட்ட படிக்குப் பிரமாணம் காட்டு கிறார் 'இமாம்' என்று தொடங்கி.

"இமாம் அவித கேசாந்தாம் சதபத்ர நிபேக்ஷணம்
ஸுகார்ஹாம் துக்கிதாம் த்ருஷ்ட்வா மமாபி வ்யதிதம் மந:"

என்பது, ஸ்ரீராமா. சுந். 16:

2. 'இமாம்' என்ற சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவித' என்று தொடங்கி. 'அவித கேசாந்தாம்' என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மைவண்ணம்' என்று தொடங்கி. இங்கே, திருநெடுந் தாண்டகம் 21-ஆம் திருப்பாசுரம் அநுசந்தேயம். பேணத்தகும்-ஆசை படத்தகும்.

3. "வினையேன்" என்பதற்கு, வேறும் ஒருகருத்து அருளிச்செய் கிறார் 'நாள் செல்ல' என்று தொடங்கி.

4. "மெலிய, வானூர்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. அன்றிக்கே, "மெலிய, கோளூர்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் என்று கோடலுமாம். 'அத்தலை' என்றது, தேசத்தை. கோளூரை என்று கோடலுமாம்.

தனைத் தெரிவித்தபடி. [1]அவ்வூரிற் சோலைக்கு நீர் இத்தலையில் மெலிவுபோலே காணும். ஆகாயத்தைக் கண்செறி இட்டாற் போல் இருத்தலின் '**வானூர்**' என்கிறது. [2]இவள் இருக்கிற இடம், "மரங்கள் எல்லாம் உலர்ந்துவிட்டன" என்னும்படியாக இருக்கும். அவன் இருக்கிற இடம், "காலம் அல்லாத காலத்திலும் மரங்கள் பலத்தைக் கொடுக்கக்கூடியனவாக இருக்கும்." காட்சிக்கு இனியதாக இருத்தலின் '**வண்கமுகு**' என்கிறது. "குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளை முத்தும், தலையார்ந்த இளங்கமுகு" என்னுமாறுபோலே இருத்தல். [3]அன்றிக்கே, கொடி தொடரவேண்டாதே, தானே கொடிக்கு உடம்பு கொடுத்து நிற்கிற ஔதார்யம் எனலுமாம். மெய்யே கொடுக்கிற ஔதார்யம் அன்றே இது. மதுவையுடைத்தான மல்லிகைகளின் பரிமளம் இவள் இருந்த இடத்தே வந்து அலை எறிதலின், '**மல்லிகை கமழும்**' என்கிறாள். [4]மலட்டுக் கொடியாயிராமல் பூகத்தோடே அணைந்து பரப்பும் பூவாயிருத்தலின், '**மதுமல்லிகை**' என்கிறாள். [5]இதற்குமுன்பு சொன்னவை எல்லாம் ஆஶ்ரயமாத்திரமேயாய்த் தேனே மிக்

---

1. "மெலிய, வண்கமுகு" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'அவ்வூரிற் சோலைக்கு' என்று தொடங்கி. கண்செறியிடுதல் - கபளீகரித்தல்.

2. இவற்றை இப்படி வர்ணிப்பதற்குத் தான் இருக்கிறஇடம் இப்படி இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவள் இருக்கிற இடம்' என்று தொடங்கி. "அபிவிருக்ஷாஃ பரிம்லாநாஃ", "அகால பலி நோ வ்ருக்ஷாஃ" என்பன, ஸ்ரீராமா.

இது, காட்சிக்கு இனியதாக இருத்தலாவது ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'குலையார்ந்த' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி. 6. 9: 8.

3. வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'மெய்யே' என்றது, சிலேடை; சரீரமும், சத்தியமும் என்பன பொருள்.

4. மல்லிகையானது மதுவையுடைத்தாம்போது, மலர்கள் நிறைந்திருந்தால் ஒழியக் கூடாமையாலே அருளிச்செய்கிறார் 'மலட்டுக்கொடி' என்று தொடங்கி.

5. "மது மல்லிகை கமழும்" என்று வைத்து, "தேனூர் சோலைகள்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதற்கு முன்பு' என்று தொடங்கி. 'இதற்கு முன்பு சொன்னவை யெல்லாம்' என்றது, கமுகையும், மல்லிகையையும். ஆஶ்ரயம் - இடம்.

கிருத்தலின், 'தேனுர் சோலைகள்' என்கிறாள். ஆக, வானுர் வண் கமுகுகள் தேன்வெள்ளத்திலே அலைந்து, பிரளயகாலத்தில் மார்க்கண்டேயன் பட்டவெல்லாம் படாநின்றன என்றபடி. [1] இருவரும் கூட இருந்து மதுபானம் பண்ணிக் களிக்க வேண்டியிருக்க, நான் மெலியத் தாமே மதுபானம் பண்ணி வாழ்கின்றவர் என்பாள், 'தேன் வெள்ளமிடுகிற சோலைகள் சூழ்ந்த திருவல்லவாழ் உறையும் கோனரை' என்கிறாள். பாவியேன், இவ்வளவிலே [2] "மதுவையும் குடிப்பது இல்லை" என்னவேண்டாவோ.

[3] இவர், இவ்வாற்றுமையோடே இருந்து சோலையைக் கவி பாடுகிறது, உள்ளே நிற்கின்றவனைப் போன்று இவையும் இனிய பொருளாக இருக்கையால் அன்றே. [4] மனத்தினை உள்முகமாக்கி அநுபவிக்கமாட்டாதார்க்கு, தன்னை அவர்கள் கண்களுக்கு இலக்காக்கிக்கொண்டு உபாயவஸ்து நிற்கிறாப் போலே காணும் இவையும். யாவர்க்கும் தொழுகுலமான சர்வேசுவரனுடைய உபாயபாவத்தில் நிலைபோலே. நித்தியப் பிராப்பியனைக்கொண்டு அங்கே இருக்கிறவன், அடியார்கள் உகந்தது ஒருபொருளைத் திருமேனியாகக்கொண்டு முகங்

---

1. "மெலிய" என்றதனை "வானுர்" என்றதனோடே கூட்டிக் கருத்து அருளிச்செய்தார் இதுகாறும். இனி, "மெலிய" என்றதனை "திருவல்லவாழ் உறையும்" என்றதனோடு கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'இருவரும்' என்று தொடங்கி. இதனை, 'இத்தலை மெலிய மெலிய' என்ற வாக்கியத்தின் விவரணமாகக் கண்டு கொள்வது.

2. "நமாம்ஸம் ராகவோ புங்க்தே நசாபி மது ஸேவதே"
என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 42. திருவடி கூறியது.

3. பிரிவின் துன்பத்தாலே நோவுபடுகிறவர் சோலையை வர்ணிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர் இவ்வாற்றுமை' என்று தொடங்கி. என்றது, அவனைப் போன்று போக்யமா யிருக்கையாலே வர்ணிக்கிறார் என்பது கருத்து.

4. வர்ணிப்பதற்கு வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'மனத்தினை' என்று தொடங்கி. என்றது, நித்தியசூரிகள் இவற்றின் உருவமாக வந்து நிற்கையாலும் வர்ணிக்கிறார் என்றபடி. 'கண்களுக்கு இலக்கு ஆக்கிக் கொண்டு' என்றதன் விவரணம் 'யாவர்க்கும்' என்று தொடங்கும் வாக்கியம். பிரபத்திக்கு அடைத்த நிலம் அர்ச்சாவதாரமாகையாலே 'உபாய பாவத்தில் நிலை' என்கிறார். மேலே அருளிச்செய்த வாக்கியத்தை விவரிக்கிறார் 'நித்தியப் பிராப்பியனை' என்று தொடங்கி. பிராப்பியன் - அடையத் தக்கவன்.

கொடுத்துக்கொண்டு நிற்பதுபோலே, அங்குள்ளாரும் இங்கே போந்து தாவரங்களாயும் ஜங்கமங்களாயும் விலங்குகளாயும் அவனே விடமாட்டாதே நிற்கிறபடி.. நித்தியரும் முக்தரும் சம்சாரிகளில் ருசியுடையாரும், உகந்தருளின நிலங்களைப் பற்றியன்றே கிடப்பது. [1]"இயல்பாயமைந்த சேஷத்வத்தையுடைய நித்தியசூரிகளும், சம்சார சம்பந்தம் நீங்கப்பெற்ற முக்தர்களும், பாவங்கள் எல்லாம் நீங்கி இனிமேல் சரீர சம்பந்தம் இல்லை என்னும்படி முடிவான சரீரமுடையவர்களான முமுக்ஷுக்களும் ஆகிய இவர்கள், மனிதப்பிறவியையும் விலங்கின் பிறவியையும் தாவரப் பிறவியையும் விரும்பினவர்களாய்க் கொண்டு ஸ்ரீரங்கத்தை எப்போதும் பற்றியிருக்கிறார்கள் என்று பௌராணிகர்கள் சொல்லிவைத்தார்கள்; இப்படிப்பட்ட மனித விலங்கு தாவரங்களின் பொருட்டு நமஸ்காரம் ஆகுக" என்றார் பட்டர். [2]இராமாவதாரத்திலும் ஒரு இலக்குமணன் மூதலியோர்கள், வானரங்களின் உருவத்தை அடைந்தார்கள், விபீஷணன் முதலியோர் பற்றிக் கிடந்தார்கள்;

---

1. நித்தியசூரிகள், தாவரம் முதலானவைகளாக இங்கே தங்கியிருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இயல்பாயமைந்த' என்று தொடங்கி.

"அஹ்ருத ஸஹஜ தாஸ்யாஃ ஸ்ரேயஃ ஸ்ரஸ்தபந்தாஃ
விமல சரம தேஹா இத்யமீ ரங்கதாம"
மஹித மநுஜதிர்யக் ஸ்தாவரத்வாஃ ஸ்ரயந்தே
ஸ்ரியதம இதி ஹஸ்ம ப்ராஹுஃ ஏப்யோ நமஃஸ்தாத்"

என்பது, ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்.

2. 'சர்வேசுவரன் அவதரித்த விடத்திலே நித்தியசூரிகள் முதலானோர்களும் அவதரிப்பர்கள்' என்பதற்கு அநுஷ்டானமும் காட்டுகிறார் 'இராமாவதாரத்திலும்' என்று தொடங்கி. இலக்குமணன் முதலியோர்கள் - நித்தியர்கள். வானரங்களின் உருவத்தை யடைந்தவர்கள்-தேவர்கள். விபீஷணன் முதலியோர் - முமுக்ஷுக்கள்.

வானுளோ ரனைவரும் வான ரங்களாக்
கானினும் வரையினும் கடித டத்தினும்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தனன் அருளின் ஆழியான்.

வேளையொடு திகிரியும் வடவை தீதர
வீளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளைஞர்கள் எனவடி பரவவேகி நாம்
வேளைமதில் அயோத்தியில் வருதும் என்றனன்.

என்பன, கம்பராமாயணம்.

அதுபோன்று. [1]அதிலும் நடையாடித் திரிகின்றவர்கட்குப் போகைக்கும் தகுதி உண்டேயன்றே, அதுவும் இல்லையே அன்றே தாவரங்களுக்கு.

[2]**ஜனகாத்பிரஹ்மராயர்** திருமுடிக்குறையிலே ஒருமரம் வெட்டப்புக, அதனை எம்பார் கேட்டு 'அல்லாளப் பெருமாளே! ஈசுவர விபூதியை அழிக்கப்பார்த்தாயோ' என்ன, இவர் சொல்லும் வார்த்தையைக் கேட்கைக்காக, 'ஈசுவர விபூதி அல்லாத இடம் உண்டோ' என்ன, 'அவைபோல் அல்ல காண் இவை; சார்வபௌமனை ராஜாவும் தேவியுமாக முற்றூட்டாகக் குடநீர் வார்த்து ஆக்கும் சோலை போலே, பெருமாளும் பெரிய பிராட்டியாருங்கூடக் கைதொட்டு ஆக்குமவைகாண்' என்று அருளிச்செய்தார். [3]உகந்தருளின நிலங்களிலே மெய்யே பிரதிபத்தி விளைந்தார்க்கு அங்குள்ளவை எல்லாம் உத்தேச்யமாகத் தோன்றுமன்றே. [4]கால் வாங்கியல்லது நிற்கவொண்ணுத சம்சாரம் அவனுக்குரியது என்னும் தன்மையாலே ஒரு கால் உத்தேச்யமாகாநின்றதன்றே. [5]பிரமாணத்தில் பிறக்கும் எண்ணம் போலன்று கண்களுக்கு இலக்காஞல் இருப்பது, முக்தரைப் போன்று பிரத்யக்ஷ சமானமன்றே ஆழ்

---

1. ஆயின், இலக்குமணன் முதலியோர் போன்று அவதரியாமல் தாவரங்களாய் அவதரிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அதிலும் நடையாடி' என்று தொடங்கி.

2. நித்திய முக்தர்களுடைய அவதாரமாகையாலே உத்தேச்யம் என்று மேலே அருளிச்செய்து, பகவானுக்கு விருப்பமுள்ளவை யாகையாலும் உத்தேச்யம் என்று அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஜனகாதப் பிரஹ்மராயர்' என்று தொடங்கி.

திருமுடிக்குறை - பெருமாளுடைய திருமுடிப் பிரதேசமான உபய காவேரியின் மத்தியப் பிரதேசம். 'அல்லாளப் பெருமாளே' என்றது, ஜனகாதப் பிரஹ்மராயரை நோக்கிய விளி. முற்றூட்டு - பூர்ண அநுபவம்.

3. எல்லார்க்கும் இந்த நினைவு பிறவாமைக்கு அடி ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உகந்தருளின நிலங்களிலே' என்று தொடங்கி.

4. 'உத்தேசியமாகத் தோற்றும்' என்கைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'கால்வாங்கியல்லது' என்று தொடங்கி. 'நின்றதன்றே' என்றது, முக்தருக்கு நின்றதன்றே என்றபடி.

5. ஆனால், இவர்க்கும் நமக்கும் வாசி ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரமாணத்தில்' என்று தொடங்கி. என்றது, நமக்குப் பிரமாணம் கொண்டு அறியவேண்டும், அது இவருக்குப் பிரத்யக்ஷமாகத் தோற்றும்; ஆனபின்பு, பிரமாணத்தால் உண்டாகின்ற பரோக்ஷ ஞானத்தை நோக்க, நேரே பார்த்தலால் உண்டாகும் ஞானம் வேறுபட்டது என்றபடி.

வார்க்குத் ததீயத்வ ஆகாரம். [1]பிரமாணத்தை நம்பினவனுக்கு இங்ஙனமல்லது எண்ணம் இல்லையன்றே. **நல்லான்**, பட்டர் திருவடிகளை ஆஶ்ரயித்து நெடுங்காலம் சேவித்து, பின்பு மரணதசையிலே பட்டர் எழுந்தருளி, **'என் நினைத்திருந்தாய்'** என்ன, "'**ஒரு சர்வசக்தி உபகரிக்கும்போது இங்ஙனம் கனக்கவாகாதே உபகரிப்பது**' என்று நினைத்திருந்தேன்" என்ன, 'அது என், உன்தேசத்தைவிட்டு உறவினர்களை விட்டு நெடுந்தூரம்போந்து இங்ஙனம் நோவுபட்டுத் திருவடி சேரக் கிடந்தாயாகில் இங்கு உபகாரம் என்?' என்ன, 'வேறு தேசத்திலே இருந்து பொருள் அல்லாதவனுய் விழுந்துபோக்க கடவ என்னை இவ்வளவும் அழைப்பித்து, உம்முடைய திருவடிகளை அடையச்செய்து ருசியை விளைப்பித்து, இத் தேசத்திலே உம்முடைய கண்வட்டத்திலே சரீரம் நீங்கும்படி செய்தானே' என்ன, 'ஆனாலும், தானுக அபிமானித்த சரீரம் போகாநிற்க, நீ இங்ஙனம் நினைத்திருந்தது என்கொண்டு?' என்ன, '**பிரமாணம்கொண்டு நினைத்திருந்தேன்**' என்றான். [2]கண்ணழிவற்ற வெளிச் சிறப்பையுடையார்க்கு இங்ஙனமன்றே இருப்பது.

[3]இருவராய்க்கொண்டு பரிமாறவேண்டும் தேசத்திலே தனியே நிற்கிறான்காண் என்பாள் '**தேனுர் சோலைகள் சூழ் திருவல்லவாழ் உறையும் கோளரை**' என்கிறாள். அவதாரங்கள்

---

1. பிரமாணத்தாலே பிரதிபத்தி விளையக் கண்ட இடம் உண்டோ? என்ன, அதற்கு ஐதிஹ்யம் காட்டுவாராகத் தொடங்குகிறார் 'பிரமாணத்தை' என்று தொடங்கி. 'பிரமாணங்கொண்டு நினைத்திருந்தேன்' என்கிற இவ்விடத்தில்,

> "ஈச்வரஸ்யச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா
> விஷ்ணோஃ ப்ரஸாதம் அத்வேஷம் ஆபிமுக்யம்ச ஸாத்விகைஃ
> ஸம்பாவ்யணம் ஸதாசார்ய ப்ராப்திம்ச"

என்பது, அநுசந்தேயம். மேலும்,

திருவாய்மொழி 2-ஆம் பத்து 3-ஆம் திருப்பதிகம் 2-ஆம் திருப்பாசுரம் அவதாரிகையும், "ஆசாரிய லாபம் பகவானுலே" என்ற ஸ்ரீ வசன பூஷண ஸ்ரீ சூக்தியும் நினைவு கூர்தல் தகும்.

2. 'ஆசார்ய அங்கீகாரத்தாலே மோக்ஷம்' என்று சொல்லுகிற பிரமாணந்தானே, 'தன் முயற்சியை மூலமாகக்கொண்ட பக்தியாலே மோக்ஷம்' என்று சொல்லுகையாலே, நிச்சய ஞானம் பிறக்கமாட்டாதே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கண்ணழிவற்ற' என்று தொடங்கி.

3. 'இருவரும் கூட இருந்து மதுபானம் பண்ணிக் களிக்க' என்ற மேல் வாக்கியத்தின் விவரணம் 'இருவராய்க் கொண்டு' என்று தொடங்கும் வாக்கியம்.

போல் தீர்த்தம் பிரசாதித் தொழியாது தங்கியிருத்தலின் 'உறையும் கோனுரை' என்கிறாள். [1] நாராயணசப்தத்திலும் பிரணவத்திலும்போலே, 'கோனுரை அடியேன்' என்கிறாள். [2] அவனைச் சொல்லும்போது தம்மையிட்டல்லது சொல்லப் போகாது; தம்மைச் சொல்லும்போதும் அவனையிட்டல்லது சொல்லப்போகாது. [3] 'கோனுரை' என்ற இடம், நாராயண சப்தார்த்தம்; 'அடியேன்' என்ற இடம், பிரணவார்த்தம். பிரணவம், ஜீவப்பிரதானம்; நாராயணபதம், ஈசுவரப் பிரதானம். 'அடி கூடுவது என்றுகொலோ' என்ற இடம், நான்காம் வேற்றுமையின் பொருள்; [4] 'என்றுகொலோ' என்று, பிராப்தனையோடு தலைக்கட்டுகிறதன்றே. கோனுரை அடியேன் - [5] நாயகன் தைரியத்தையுடைய நாயகன், இவள் தைரியம் இல்லாதவள். அடியேன் அடிகூடுவது என்றுகொலோ - [6] ஸ்வரூபத்துக்குத் தகுதியாக வேற்றுமையின் பொருளோடே

---

1. நாராயண சப்தம், சர்வேசுவரனைச் சொல்லுவதாய், பிரணவம், சேதனனைச் சொல்லுவதா யிருக்கையாலே, 'நாராயண சப்தத்திலும் பிரணவத்திலும் போலே' என்கிறார்.

2. சர்வேசுவரனைக் காட்டும் நாராயண சப்தம், சேதனனையும், சேதனனைக் காட்டுகின்ற பிரணவம், சர்வேசுவரனையும் சொல்லுவதற்குக் கருத்து எது? என்ன, இவை பிரதிகோடியை விட்டு இராமையாலே என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனைச் சொல்லும்போது' என்று தொடங்கி.

3. 'நாராயண சப்தத்திலும் பிரணவத்திலும்' என்று மேலே கூறியதனை விவரிக்கிறார் 'கோனுரை' என்று தொடங்கி. 'நான்காம் வேற்றுமை' என்றது, 'நாராயணாய' என்ற பதத்திலேயுள்ள 'ஆய' என்னும் உருபினை.

4. "அடிகூடுவது என்று கொலோ" என்பது, நான்காம் வேற்றுமையின் பொருளாயினவாறு யாங்ஙனம்? எனின், அதற்கு விடை அருளிச் செய்கிறார் "என்று கொலோ" என்று தொடங்கி.

5. நாயகி இருந்த இடத்தே நாயகன் வந்து மேல்விழுகை ஒழிய, நாயகி விரையலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாயகன்' என்று தொடங்கி.

6. பிரணவத்தின் அர்த்தம் சொன்னபின் நான்காம் வேற்றுமையின் பொருளைக் கூறுதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'ஸ்வரூபத்துக்கு' என்று தொடங்கி. ஸ்வரூபம் - சேஷத்வ ஸ்வரூபம். 'வேற்றுமை' என்றது, 'ஆய' என்ற நான்காம் வேற்றுமை யுருபினை.

தலைக்கட்டுகிறபடி. [1] எல்லா அளவிலும் சொரூபம் அழியாதன்றே. தாமாகவுமாம், பிராட்டிமார் தசையை அடைந்தவராகவுமாம், அதற்கும் அவ்வருகே சில அவஸ்தைகளையுடையவராகவுமாம், எல்லாக்காலத்திலும் ஸ்வரூபம் மாறாது; [2] பிண்டத்வ கடத்வ கபாலத்வ சூர்ணத்வங்களாகிற நிலை வேறுபாடுகளை அடைந்தாலும் மண்ணுன வடிவுக்கு அழிவில்லையன்றே. தாமான தன்மையில் [3] "அடிதொழுது எழு" என்பர்; பரோபதேசத்தில் [4] "திண்கழல்சேர்" என்பர்; தூதுவிடப்புக்கால் [5] "திருவடிக்கீழ்க் குற்றேவல்" என்பர்; பிறரைச் சொல்லப்புக்கால் [7] "தாட்பட்ட தண்துழாய்த் தாமம் காமுற்றாயே" என்பர்; கலங்கி மடல் எடுக்குமளவானாலும் [8] "தலையில் வணங்கவுமாங்கொலோ" என்பர்; பித்தேறிச் சொல்லும்போதும் [9] "கண்ணன் கழல்கள் விரும்புமே" என்னுதல், [10] "ஏறிய பித்திலெடு எல்லா உலகும் கண்ணன் படைப்பு" என்னுதல் சொல்வார் இத்தனை. (1)

## 532.

**என்றுகொல் தோழிமீர்காள்! எம்மைநீர் நலிந்தேன் செய்தீரோ!**
**பொன்திகழ் புன்னை மகிழ்புது மாதவி மீதணவித்**
**தென்றல் மணங்கமழும் திருவல்லவாழ் நகருள்**
**நின்றபிரான் அடிநீறு அடியோங் கொண்டு சூடுவதே.**

---

1. மனைவியானவள் அவனை அணையவேண்டும் என்னுதே "அடி கூடுவது என்று கொலோ" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'எல்லாவளவிலும்' என்று தொடங்கி. அதனை விவரிக்கிறார் 'தாமாகவுமாம்' என்று தொடங்கி.

2. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பிண்டத்வ' என்று தொடங்கி. பிண்டம் - மண்தொகுதி. கடம் - குடம். கபாலம் - ஓடு. சூர்ணம் - தூள்.

3. 'தாமான தன்மையில்' என்று தொடங்கி மேலே அருளிச்செய்த வாக்கியத்தை விவரிக்கிறார் 'தாமான தன்மையில்' என்று தொடங்கி.

4. திருவாய். 1. 1 : 1.
5. திருவாய். 1. 2 : 10.
6. திருவாய். 1. 4: 2.
7. திருவாய். 2. 1 : 2.
8. திருவாய். 5. 3: 7.
9. திருவாய். 4. 4: 8.
10. திருவாய். 4. 4: 7.

**பொ - ரை:**—தோழிமீர்காள்! என்னை வருத்தி என்ன காரியத்தைச் செய்தீர்கள்? பொன்னைப்போன்று விளங்குகின்ற புன்னை என்ன, மகிழ் என்ன, புதிய மாதவி என்ன, இவற்றின்மேலே பொருந்தித் தென்றலானது வாசனை வீசுகின்ற திருவல்லவாழ் என்னும் திவ்விய தேசத்தில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற பிரானுடைய திருவடிகளில் பொருந்திய நீற்றினை அடியோங்கள் கொண்டு சூடுவது என்றுகொல்? என்கிறாள்.

**வி - கு:**—தோழிமீர்காள்! பிரான் அடிநீறு அடியோம் கொண்டு சூடுவது என்றுகொல்? எம்மை: தனித்தன்மைப்பன்மை. மகிழ் - வகுளம். மாதவி - குருக்கத்தி. நீறு - புழுதி. அடியோம்: உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

**ஈடு:**—இரண்டாம்பாட்டு. [1]விலக்குகிற தோழிமார் தங்களைப் பார்த்தே, அவன் பாதரேணுவை நான் சூடுவது என்று? என்கிறாள்.

என்றுகொல் தோழிமீர்காள் - 'எல்லை கடந்த பிராவண்யம் ஆகாது' என்று விலக்குகிறவர்களையே, தன்பேற்றுக்கு நாள் அறுதியிட்டுத் தருமவர்களாகக் [2]கேட்கிறாளேயன்றே. [3]அவர்கள் உலக அபவாதத்தைப் பற்றி விலக்குகிறார்கள்; இவள், தனது பேற்றினை, அவர்கள் தங்கள் பேறாக நினைத்திருக்கும் ஐககண்ட்யத்தாலே கேட்கிறாள். [4]தோழிமாரேயன்றே, இவளுடைய லாபாலாபமேயன்றே அவர்களுக்கும்

---

1. "அடிநீறு அடியோம் கொண்டு சூடுவது என்று கொல்?" என்ற தனைக் கடாகூவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'கேட்கிறாளேயன்றே' என்றதன்பின், 'இதற்குக் கருத்து யாது? என்னில்,' என்பது எஞ்சி நிற்கிறது; அதனைக் கூட்டிப் பொருள் கோடல் தகும்.

3. அவர்கள் விலக்குவதற்கும், இவள் கேட்கிறதற்கும் உரிய ஏதுவை அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி. ஐககண்ட்யம் - ஒரேமிடற்றுரை. 'உலக அபவாதத்தைப்பற்றி விலக்குகிறார்கள்' என்றது, 'உலக அபவாதம் கண்டு மீளுவாளோ! இவ்விஷயத்திலே உறைக்க ஈடுபட்டவளாயிருப்பாளோ!' என்று பரீக்ஷார்த்தமாக விலக்குகிறார்கள் என்றபடி.

4. அவர்களுக்கு ஐககண்ட்யம் உண்டோ? என்ன, 'தோழிமாரேயன்றே' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதனை விவரணம் செய்கிறார் 'இவளுடைய லாபாலாபம்' என்று தொடங்கி.

பேறு இழவு. தோழிமீர்காள் என்றுகொல் - [1]உங்களுக்கு நான்பெறும் நாள் ஆராய்கையிலேயன்றே அதிகாரம். எம்மை - [2]உங்களுடைய கையாலும் காலாலும் துகையுண்கிற என்னை. அன்றிக்கே, அவ்வூரிலே புக்கல்லது தரிக்கமாட்டாத என்னை என்னுதல். நீர் - என்னுடைய உஜ்ஜீவனத்தையே எண்ணுவதற்குரிய நீங்கள். அன்றிக்கே, எனக்குப் பிரியமே செய்துபோந்த நீங்கள் என்னுதல். நலிந்து என்செய்தீரோ - எனது தன்மையை அறியும் நீங்கள் என்வழியே போகவேண்டாவோ. அன்றிக்கே, [3]உங்கள் தன்மைக்கு இது சேர்ந்ததோ, என்தன்மைக்கு இது சேர்ந்ததோ? என்னுதல். அன்றிக்கே, தோழிமீர்காள் **எம்மை நீர் நலிந்து** என்செய்தீரோ என்பதற்கு, உங்களுக்கு அவசியம் நலியவேண்டினால் தென்றலியன்றே நலிய அடுப்பது என்னுதலுமாம். [4]என்னை மீள வொட்டாமல் காற்கட்டாகிற்க, நான் மீளும்படி என்?

பொன்திகழ் புன்னை மகிழ் புது மாதவி-[5] "புன்னைபொன்னேய் தாதுதிர்க்கும்" என்கிறபடியே, பொன்னைப்போன்று பிரகாசிக்கின்ற புன்னை, அப்படியே இருக்கிற மகிழ், அப்போது அலர்ந்த குருக்கத்தி. இதனால், நலிகைக்கு [6]இவை அமையாதோ, [7]கடினமான ஸ்வபாவத்தையுடையராயிருப்பார் செய்வதை மிருதுத்தன்மைவாய்ந்தவர்களாயிருக்கிற நீங்கள் செய்யவோ என்கிறாள் என்றபடி. மீது அணவித் தென்றல் மணம் கமழும் - இவற்றின்மேலே தென்றலானது வந்து

---

1. "தோழிமீர்காள் என்று கொல்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்களுக்கு' என்று தொடங்கி.

2. 'உங்களுடைய கையாலும் காலாலும்' என்றது, உங்களுடைய ஹித வசனத்தாலும் தென்றற் காற்றாலும் என்றபடி. கால் - காற்று. "தென்றல்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'கால்' என்கிறார்.

3. 'உங்கள் தன்மைக்கு' என்றது, பிரியத்தோடு கூடியிருக்கின்ற உங்கள் தன்மைக்கு என்றபடி.

4. செல்லுகிற உன்னை நலியாமல், தென்றலே நலிவான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'என்னை மீளவொட்டாமல்' என்று தொடங்கி. 'காற் கட்டாகிற்க' என்றது, சிலேடை; காற்று வருத்தாகிற்க என்பது பொருள். பந்தமாக நிற்க என்பது தொனி.

5. பெரிய திருமொழி. 5. 1: 6.

6. 'இவை' என்றது, புன்னை மகிழ் மாதவிகளை.

7. நாங்கள் நலியலாகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடினமான' என்று தொடங்கி. மரங்கள் ஆகையாலே, 'கடினமான ஸ்வபாவத்தையுடையராயிருப்பார்' என்கிறாள்.

அணைந்து பரிமளத்தைக்கொண்டுபோந்து கமழாநின்றது. 'ஆழ இழியில் பூவில் வெக்கை தட்டும்' என்று மேலெழத் தெண்டி, அங்குள்ளனவெல்லாம் கொண்டுபோந்து கமழாநின்றது என்பாள் 'மீது அணவி' என்கிறாள். என்றது, [1]"தாமரைப் பூக்களின் தாதுக்களோடு சேர்ந்தது" என்னுமாறுபோலே, பூவில் கால் படாமே மேல் எழுந்த பரிமளத்தைக் கொண்டு போருகிறது என்றபடி. [2]அத்தலையில் உள்ளவையடங்கக்கொண்டு தந்தாமது ஒன்றும் கொடாதே போருகை அந்நிலத்துள்ள பொருள்கட்கெல்லாம் ஸ்வபாவம் கண்டீர். [3]கலம்பகன் அல்லது சூடப்பொறாத சுகுமாரரைப்போலே காணும் தென்றலின் ஸ்வபாவம் என்பாள் **'பொன்திகழ் புன்னை மகிழ் புது மாதவி மீதணவித் தென்றல் மணம் கமழும்'** என்கிறாள். இதனால், பூவில் பரிமளத்தைத் தேடுவாரைப்போலே காணும் இது பரிமளத்தில் கலம்பகன் தேடுகிறபடி என்பதனைத் தெரிவித்தபடி. [4]செருக்கராயிருக்கும் இராஜபுத்திரர்கள் முலைசரிந்தாரைப் **'போகத்திற்குத் தகுதியுள்ளவர்'** என்று கழிக்குமாறுபோன்று, கழிய அலர்ந்தவற்றைப் பாராமல் போருகிறது என்பாள் **'புது மாதவி மீதணவும்'** என்கிறாள். [5]கண்களுக்குத் தோற்ற நின்று நலியாமையாலே காணும் **'நோவில்லை'** என்றிருக்கிறது. [6]இவர்களுக்கு லாபாலாபம் ஒத்திருக்கச்செய்தேயும், ஹிதபுத்தி தொடர்ந்து

---

1. வெக்கை தட்டாமல் மேலே ஸ்பர்சித்ததற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தாமரை' என்று தொடங்கி.

"பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்டோ வ்ருக்ஷாந்தர விநிஸ்ஸ்ருதஃ"

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1 : 71. என்றது, மகரந்தங்களிலே மேலே ஸ்பர்சித்து வந்தாற்போன்று, இத்தத் தென்றலும் மீது அணவி வந்தது என்றபடி.

2. "மணங்கமழும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அத்தலையில்' என்று தொடங்கி.

3. பல மரங்களைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கலம்பகன், என்று தொடங்கி. கலம்பகன் - பல மலர்களால் தொடுக்கப்பட்டது. பரிமளத்தில் கலம்பகன் - பலவிதமான பரிமளத்தின் கூட்டம்.

4. "புது" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'செருக்காயிருக்கும்' என்று தொடங்கி.

5. எங்களை நலியக் காண்கிறோம் இல்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி.

6. கண்களுக்குத் தோற்றுவிடிலும் மூக்கிற்கு விஷயமாய்ப் பாதகம் ஆகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்களுக்கு' என்று தொடங்கி.

நிற்பதனுலே இவை நெஞ்சிற்படாதே யன்றே.[1] 'இவர்கள் தாம் அன்வயத்தில் கூடாவிட்டால் வியதிரேகத்திலும் கூடலாகாதோ' என்றுகாணும் இவள் நினைத்திருக்கிறது. [2] இவர்களுக்குப் பேறும் இழவும் ஒத்திருந்தாலும் இவர்கள் இவள்தான் ஆகமாட்டார்களே, இவளுக்கே வருமவையன்றே இவையெல்லாம். **'பொன்திகழ் புன்னை மகிழ்'** என்றதனால், கண் இந்திரியத்திற்குக் கவர்ச்சிகரமாயிருப்பதனைத் தெரிவித்தபடி. **'தென்றல் மணம் கமழும்'** என்றதனால், சரீரத்திற்கும் மூக்கிற்கும் அங்ஙனம் இருப்பதனைத் தெரிவித்தபடி.

திருவல்லவாழ் நகருள் நின்ற பிரான் - [3] அவன் அத்தனை விடுவதும் செய்திலன். நான் நோவுபடாநிற்க, இவ்வளவிலே ஸ்ரீவைகுண்டத்திலே இருக்கையன்றிக்கே, திருவல்லவாழிலே புகுந்து கிட்டவிருக்கு மிதற்குமேற்பட உபகாரம் உண்டோ. "'' இது பல " என்னுமாறுபோலே காணும் இவ்வளவில் ஆஸ்வாசம். " ஒரேபூமியில் இருக்கிறோம் " என்று சொல்லப் பட்டதன்றே. [5] " காற்றே வீசுக " என்று, இவர் கையாலே தொடவேண்டாதபடி இடைச்சுவரான கடல் கிடந்ததேயாகிலும், ஒருபடுக்கையிலே இருப்பாரைப்போலே அவள் இருந்த பூமியிலே இருக்கப்பெற்றோமே என்றாரேயன்றே பெருமாள்.

---

1. ஹிதபுத்தி தொடர்ந்து நிற்பதனுலே தென்றலால் வந்த துன்பம் நெஞ்சிற் படாமலிருக்கிறவர்கள் இவளுக்குக் கூட்டு ஆவர்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்கள் தாம்' என்று தொடங்கி.

2. தோழிமார்கட்குத் தென்றல் பாதகம் ஆகாமைக்கு வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'இவர்களுக்கு' என்று தொடங்கி. என்றது, புணர்ச்சியாலும் பிரிவாலும் வருகின்ற சுகதுக்க பிராதான்யம் இவளுக்கேயாய், இவளையிட்டு வருமவையன்றே தோழிமார்கட்கு என்றபடி. 'இவையெல்லாம்' என்றது, சுகதுக்கங்களை.

3. பிரிந்திருக்கிறவனைப் " பிரான் " என்கிறது என்? என்ன, தான் இருக்கும் பூமியிலே அவன் இருப்பதனுல் வந்த ஆஸ்வாசம் கொண்டு என்கிறார் 'அவன் அத்தனை' என்று தொடங்கி.

4. புணர்ச்சி யின்றிக்கே இருக்க, இங்ஙனம் இருத்தலே மாத்திரம் உபகாரமாகக் கொள்ளலாமோ? என்ன, பெருமாள் பிராட்டியைப் பிரிந்திருக்கச் செய்தேயும் தாம் இருந்த பூமியிலே அவள் இருத்தல் காரணமாக ஆஸ்வாசித்தாற்போலே என்கிறார் 'இது பல' என்று தொடங்கி.

" பஹு ஏதத் காமயாநஸ்ய ஶக்யம் ஏதேந ஜீவிதும்
யத் அஹம் ஸாச வாமோரூ: ஏகாம் தரணிம் ஆஸ்ரிதௌ "

என்பது, ஸ்ரீராமா. யுத். 5 : 10.

5. " வாஹி வாத யதஃ காந்தா "

என்பது, ஸ்ரீராமா. யுத். 5 : 6.

[1] காலைப்பிடித்து 'நீ இப்படிச் செய்யவேணும்' என்று வேண்டிக்கொள்ளுகிறதேயன்றே இவருடைய செல்லாமை. நின்றபிரான் அடிநீறு அடியோம் கொண்டு சூடுவது என்று கொல் - [2] பூவில் சுண்ணம்பெறுவது என்றே. மயிர் கழுவிப் பூச்சூட இருப்பாரைப்போலே காணும். [3] இவர்கள், இப்போது பிரியகின்றார்களேயாகிலும் கலக்கும்போது அநுபவம் இவர்களுக்கும் ஒத்திருக்குமாதலின் 'அடியோம்' என்கிறாள். [4] அவன் வந்தாலும் இவளுக்குமுன்னே கொண்டாடுவது இவர் கையன்றே. [5] ஸ்ரீ பரதாழ்வானே, 'பிள்ளாய், உன் உள்ளெதுப்பு ஆறுவது எப்போது?' என்ன, "பெருமாளும் தமக்கு வகுத்த முடிசூடி, நானும் எனக்கு வகுத்த முடிசூடி, இருவரும் முறை தப்பாமே கூறு ஒக்க நின்ற அன்று" என்றான்; அதுபோன்று, இவளும் 'அடியோம் கொண்டு சூடுவது என்று' என்கிறாள். [6] "கோலமாம் என்சென்னிக்குன் கமலமன்ன குரைகழலே" என்னுமவர் அலரோ. (2)

## 533.

சூடு மலர்க்குழலீர்! துயராட்டி யேனை மெலியப்
பாடுநல் வேதஒலி பரவைத் திரைபோல் முழங்க
மாடுயர்ந் தோமப்புகை கமழும் தண்திரு வல்லவாழ்
நீடுறை கின்ற பிரான்கழல் காண்டுங்கொல் நிச்சலுமே.

**பொ-ரை:**—மலர்களைச் சூடிக்கொண்டிருக்கின்ற கூந்தலையுடைய தோழிமீர்காள்! பிரிவின் துன்பத்தால் வருந்துகின்ற யான், மேலும்

---

1. "வாஹி வாத3 - காற்றே வீசுக" என்றதனை, ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் 'காலைப்பிடித்து' என்று தொடங்கி. காலை - காற்றை.

2. "அடிநீறு" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பூவில்' என்று தொடங்கி. "சூடுவது" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மயிர்கழுவி' என்று தொடங்கி.

3. விலக்குகிறவர்களையும் கூட்டிக்கொண்டு "அடியோம்" என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்கள்' என்று தொடங்கி.

4. ஆயின், தோழிமார்க்கு அநுபவம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் வந்தாலும்' என்று தொடங்கி.

5. இப்படிப் பிரார்த்தித்தபேர் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ பரதாழ்வானே' என்று தொடங்கி.

"யாவந்ந சரணௌ ப்ராது: பார்த்திவ வ்யஞ்ஜநாந்விதௌ
பரிரக்ஷா தாரயிஷ்யாமி நமே ஶாந்தி: பவிஷ்யதி"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 98 : 8.

6. ஆயின், இவர்தாம் அப்படி இருப்பவரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கோலமாம்' என்று தொடங்கி. இது, திருவாய். 4. 3 : 6

மேலும் மெலியும்படியாகப் பாடுகின்ற சிறந்த வேதங்களின் ஒலியானது கடலில் அலைகள் முழங்குமாறுபோன்று முழங்க, பக்கங்களில் உயர்ந்து எழுகின்ற ஓமப்புகையானது வாசனை வீசுகின்ற தண்ணிய திருவல்லவாழ் என்னும் திவ்விய தேசத்தில் நித்தியவாசம் செய்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளை நாள்தோறும்காண்போம்கொல்லோ?

வி-சு:—துயராட்டியேன் மெலியப் பாடும் வேதஒலி திசைபோல் முழங்க, ஓமபுகை கமழும் திருவல்லவாழ் என்க. காண்டும்: உளப் பாட்டுத் தன்மைப்பன்மை விணைமுற்று. கொல்: ஐயத்தின்கண்வந்தது.

ஈடு:—மூன்றாம்பாட்டு. [1]தோழிமாரைப் பார்த்து, நான் அவனை நித்தியானுபவம் பண்ணப்பெறும் நாள் என்று? என்கிறாள்.

சூடு மலர்க் குழலீர் - 'உங்களைச் சூடு மலர்க் குழலாராக நான் காண்பது என்றே' என்று பிள்ளான் பணிப்பர். என்றது, [2]இவள் பூவுக்கு இரங்க, அவர்கள் மலர்களைச் சூடி இராக்களேயன்றே என்றருளிற்று அபிப்பிராயம். அங்ஙன் அன்றிக்கே, [3]அவன்தான் வந்து இவள் பக்கல் பாவபந்தம் உறைக்க உறைக்கக் கொண்டாடுவது இவர்களையாகையாலே, பெரியதிருநாள் சேவித்தார். இரட்டைகள் அழுக்காறும் மடிகுலையாமல் வைக்குமாறுபோன்று, இவர்களும் அவன் கொடுத்த மாலையின் செவ்வியழிந்ததே யாகிலும் மாறாதே வைத்துக்கொண்டிருப்பர்களே அன்றே; அது இவளுக்கு நினைவூட்டுவதாய் நலியாகின்றதாதலின் 'சூடுமலர்க் குழலீர்' என்கிறாள் என்னுதல். [4]தென்றலுக்குப் பிழைக்கிலும் இவர்களுடைய தரிசனத்திற்குப் பிழைக்கப்போகிறதில்லை. கால் ஒருகையும் மயிர் ஒருகையுமாகப் பிடித்து நலிகின்றது காணும்.

---

1. "நீடுறைகின்றபிரான் கழல் காண்டுங்கொல் திசையும்" என்ற தனைக் கடாகஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "சூடுமலர்க்குழலீர்" என்றதற்கு, எதிர்காலமாகப் பொருள் அருளிச்செய்ததற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இவள் பூவுக்கு' என்று தொடங்கி.

3. "சூடுமலர்க்குழலீர்" என்றதற்கு, இறந்தகாலமாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவன்தான்' என்று தொடங்கி.

4. "மலர்க்குழலீர்" என்று திரூபகமாகச்சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தென்றலுக்கு' என்று தொடங்கி. தரிசனம் - காட்சி. 'கால்' என்றது, மேல் திருப்பாசுரத்தில் கூறிய தென்றலை. 'மயிர்' என்றது, இத்தத் திருப்பாசுரத்தில் "குழலீர்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி.

[1]அவன்தான் வந்தாலும் இவளுக்கு முன்னே விரும்புவது இவள் சம்பந்தமுடையார்களை அன்றே. "தத்ரகாஷாயிணः- அங்குக் காவி உடையணிந்தவர்களை;" தங்கள்தங்களைப் பேணுமவர்கள் அல்லாமையாலே அழுக்குச்சட்டையும் தாங்களுமாயன்றே இருப்பது. "விருத்தாந் - முதிர்ந்தவர்களை;" தொண்ணூற்றைந்து வயதுக்கு மேலாய் ஆசையற்றவர்களாய் இருப்பாரை அன்றே அந்தப்புரங்களுக்கு வைப்பது. "வேத்ரபாணீந் - பிரம்பைக் கையிலுடையவர்களை;" பெருமாள் விற்பிடித்தாற்போலே அவர்கள் பிரம்பு பிடித்தபடி. விற்பிடித்து ரக்ஷகராயிருப்பாரும் பிரம்புபிடித்து ரக்ஷகராயிருப்பாருங்காணும். "ஸுஅலங்க்ருதாந் - தங்களை அலங்கரித்தவர்களை;" பேணுத பரிவட்டங்களையுடையராய் விருத்தருமாய் இருந்தார்களாகில் இவர்களுக்கு அலங்காரமாவது என்? என்னில், பெருமாள் சக்கரவர்த்தி மாளிகையிலே போய்த் திருமஞ்சனமாடி அமுதுசெய்து மீண்டு திவ்ய அந்தப்புரத்துக்கு எழுந்தருளும்போது, சக்கரவர்த்தியைப் போன்று, **பழையராகையாலும் தங்கள் பரிவாலுமாக இவரை மடியிலே வைத்து ஆணைத்து உச்சியை மோந்து விடுவர்கள்;** அதனாலே, **குங்குமக் குழம்பும் கோயிற் சாந்துமாக இருப்பர்கள்.** பெருமாளுடையவும் பிராட்டியுடையவும் ஒப்பனைபோலன்று இவர்கள் ஒப்பனை. அப்படியே இவர்களும் '**சூடுமலர்க் குழலீர்**' என்னும்படியாயிருக்கிறபடி.

**துயராட்டியேனை மெலியப் பாடு நல்வேதஒலி** -[2] எனக்குத் துயரை விளைத்தற்காகவே யன்றி, பிராஹ்மணர் வேண்டிச்செய்கிறார்களன்றே. பிராஹ்மணராகில் தார்மிகராயிருக்க

---

1. ஒரு சம்வாதம் காட்டுவதற்காக, மேலே கூறியதனை அநுவதிக்கிறார் 'அவன்தான்' என்று தொடங்கி. சொல்லப்போகும் அர்த்தத்திற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தத்ர' என்று தொடங்கி.

"தத்ர காஷாயிணः விருத்தாந் வேத்ரபாணீந் ஸ்வலங்க்ருதாந்
ததர்ச விஷ்டிதாந் த்வாரி ஸ்த்ர்யத்யக்ஷாந் ஸுஸமாஹிதாந்"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 16 : 3.

இந்தச் சுலோகத்தில் "ஸுஅலங்க்ருதாந்" என்பதுவே இங்கு வேண்டுவது. "ஸு அலங்க்ருதாந்" என்றதிலுள்ள "ஸு" என்ற பதத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெருமாளுடையவும்' என்று தொடங்கி.

2. "மெலியப் பாடும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எனக்குத் துயரை' என்று தொடங்கி. "மெலியப்பாடும்" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'பெண்கொலை' என்று தொடங்கி.

வேண்டாவோ? பெண்கொலைசெய்யலாமோ? துயராட்டியேன் - [1]நலிவார்க்கு ஆஸ்ரயம் வேண்டாவோ? நலிகைக்குத் தென்றலே அமையாதோ? [2]திருவடி நடுஇரவில் சென்று பிராட்டியைக் கண்டு சிலவார்த்தை விண்ணப்பம் செய்ய, அவள் இவனே 'இன்னன்' என்று அறுதியிடமாட்டாதே, [3]'முன்பு சன்யாஸி வேடம்கொண்டு அவர்பக்கல்நின்றும் என்னைப் பிரித்தாய், இப்போது வானர வேடம்கொண்டு சில வார்த்தைகளைச் சொல்லி நலியாநின்றாய், இவையெல்லாம் உனக்கு ஆகாதுகாண்.' [3]வருத்துதல் அழகன்று" - வாராய், நீயும் உன்னை உகந்தாரைப்பிரிந்து நோவுபடுகிறாயன்றே என்றாள் பிராட்டி. [4]செய்யத்தக்கனவானவும் சிலர்க்கு நலிவானல் தவிரவேண்டாவோ? என்பாள் 'மெலியப் பாடும்' என்கிறாள். [5]அவர்கள், எல்லாம் சமைந்தாலல்லது குருகுலத்தை விட்டு நீங்கார்களாதலின் 'பாடும்' என்கிறாள். [6]இவள் தனக்கு வேதஒலியைக் கேட்டவாறே, நாயகன் பேர்வைத்துப் புணர்த்த புணர்ப்பினைக் கேட்டாற்போலேகாணும் அஸஹ்ய மாயிருக்கிறபடி. [7]இருவரும்கூட இருந்து கேட்கக்கூடியதனைத் தனியிருந்து கேட்கப் புக்கால் பொறுக்கஒண்ணாதேயன்றே.

---

1. "துயராட்டியேனை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நலிவார்க்கு' என்று தொடங்கி. ஆஸ்ரயம் - பற்றுக்கோடு; உடல்.

2. இங்ஙனம் நலியப்படுவதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'திருவடி' என்று தொடங்கி.

3. "ஸ்வம் பரித்யஜ்ய ரூபம் யஃ பரிவ்ராஜகரூபவான்
ஜஹஸ்தாரே மயாத்ருஷ்டஃ த்வம் ஸஏவ அஸி ராவணஃ"
"உபவாஸக்ருஶாம் தீநாம் காமரூப நிஶாசர
ஸந்தாபயஸி மாம் பூயஃ ஸந்தாபம் தக்ந ஶோபனம்"

என்பன, ஸ்ரீராமா. சுந். 34 : 15, 16.

திருவடியை இராவணனாக நினைத்துப் பிராட்டி கூறியது.

4. செய்யவேண்டியனவற்றைச் செய்யாமல் இருக்கப் போமோ என்ன, 'செய்யத்தக்கனவானவும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

5. "பாடும்" என்ற நிகழ்காலத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவர்கள், எல்லாம்' என்று தொடங்கி.

6. இவளுக்கு வேதம் பாதகமாம்படி எப்படி? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவள் தனக்கு' என்று தொடங்கி. புணர்ப்பு - பிரபந்தம். அஸஹ்யமாய் - பொறுக்க முடியாதபடி.

7. நாயகன் புணர்ப்புக் கேட்டது நல்லதேயன்றிப் பாதகமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இருவரும்' என்று தொடங்கி.

[1] அவன் பெயர்வைத்துப் புணர்த்தாலும் [2] "சீதையினுடைய மஹத்தான சரிதம்" என்றேயன்றே புணர்ப்புத்தான் இருப்பது. [3] இனித்தான், [4]"தேவரீருக்குப் பூமிப்பிராட்டியும் பெரிய பிராட்டியும் தேவிகளாக இருக்கிறார்கள்", [5]"எல்லா ஆத்மாக்களுக்கும் நியமிக்கின்றவளாயிருப்பவள்", [6]"விஷ்ணுபத்னியானவள் இந்த உலகத்திற்குத் தலைவி" என்று இவற்றையேயன்றே அவன் விரும்பிக்கேட்பது. ஈசுவரனைப் பாடுகிறபழம் புணர்ப்பான வேதம் ஆதலின், 'பாடு நல்வேதம்' என்கிறது. அன்றிக்கே, இசையையுடைத்தான சாமவேதம் என்னுதல். "உளன் சுடர்மிகுசுருதியுள்" என்று மற்றைப் பிரமாணங்களைக் காட்டிலும் உயர்ந்த பிரமாணமாதலின், 'நல்வேதம்' என்கிறது. அன்றிக்கே, [7]"வேதங்களுக்குள் சாமவேதம் நான் ஆகிறேன்" என்கிற உயர்வினைச் சொல்லுகிறதாதல். [8]ஆக, ஸ்வரத்திலே குற்றமுண்டாதல், "வேதங்களுக்குள்ளே சாமவேதம் நானகின்றேன்" என்கிறபடியே அந்தரங்கமான வேதமன்றிக்கேஒழில்தல்தான் செய்ததாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே என்கிறாள் என்றபடி. வேதஒலி பரவைத் திரைபோல் முழங்க - ஓதம்கிளர்ந்த கடல்போலே காணும்

---

1. ஈசுவரனுக்குத் தன் புணர்ப்புக் கேட்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் பெயர்' என்று தொடங்கி.

2. "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஸ் சரிதம் மஹத்" என்பது, ஸ்ரீராமா. பால. 4: 7.

நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே.

என்பது, கம்பராமாயணம்.

3. ஆனால், இருவர் புணர்ப்பும் சமமாகக் கேட்குமோ? என்ன, 'இனித்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ன்யௌ" என்பது, புருஷ சூக்தம்.

5. "ஈஸ்வரீம் ஸர்வபூதானாம்"

என்பது, ஸ்ரீ சூக்தம்.

6. "அஸ்ய ஈஸானா ஜகதோ விஷ்ணுபத்னீ"

என்பது, ய. 4. 4. 37.

7. "வேதானாம் ஸாமவேதோஸ்மி தேவானாம் அஸ்மி வாஸவஃ"

என்பது, ஸ்ரீ கீதை. 10: 22.

8. "பாடுநல்வேதம்" என்கிறவளுடைய மஞ்சாவத்தை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

சாமவேதத்தின் ஒலி இருக்கிறபடி. [1]அதில் பருவம் ஒழிந்த நாட்களும் பகலும் ஆறியிருக்கலாமே என்பாள் 'முழங்கு' என்கிறாள். [2]எல்லாவளவிலும் இவர்க்கு வேதத்திற் கிடக்கிற பிராவண்யம் பாரீர், [3]முதல் வார்த்தைதான் "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்பதேயன்றே. [4]"யாதொருவனுடைய ஸ்வரூபத்தை எல்லாவேதங்களும் சொல்லுகின்றனவோ" என்றும், [5]"எல்லாவேதங்களும் எந்தப் பரம்பொருளிடத்தில் ஒரே முகமாய் ஆகின்றனவோ" என்றும், [6]"எல்லாவேதங்களாலும் அறியப்படுமவன்யானே" என்றும் அன்றே பிரமாணங்கள் கூறுகின்றன.

மாடு உயர்ந்து ஓமப்புகை கமழும் [7]"ஒத்துச்சொல்லிச் சொல்லாத விடமெல்லாம் வைதிகக் கிரியைகளேயாய்க் கிடக்கு மித்தனை. மாடு - பக்கம். ஆகாச மடங்கலும் இடமடைத்து, வைமானிகரை மூகம்பார்த்து அநுபவிக்கவொட்டாதபடி எழா நின்றது. [8]"கர்மங்களைச்செய்து அவற்றாலே சித்திபெற்றவர்

---

1. கடல் ஒலிக்குக் காலத்தாலே இடையீடு உண்டு, இதற்கு அதுவும் இல்லை என்கிறார் 'அதில்' என்று தொடங்கி. அதில் - கடல் ஒலியில். ஆனால், அநத்யயன காலங்களில் ஓதலாமோ? எனின், தர்சபூர்ணமாசங்களிலும் யஜ்ஞகிரியாசேஷமானவைசொல்லலாம் என்பர். தர்சபூர்ணமாசங்கள் - பக்ஷங்களில் செய்யப்படும் யாகம்.

2. பிராட்டியான நிலையிலும் வேதத்தைச் சொல்லுகிற ஸ்ரீ சுக்தியை அநுசந்தித்து வியாக்யாதாவின் ஈடுபாடு, 'எல்லாவளவிலும்' என்று தொடங்குவது. 'எல்லாவளவிலும்' என்றது, தாமான தன்மையோடு பிராட்டியான தன்மையோடு வாசியற எல்லா அவஸ்தைகளிலும் என்றபடி.

3. 'எல்லாவளவிலும்' என்கைக்கு, தாமான தன்மையில் வேதத்தைச் சொன்னவிடம் உண்டோ? என்ன, 'முதல் வார்த்தைதான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "உளன் சுடர்மிகு" என்பது, திருவாய். 1. 1 : 7.

4. "ஸர்வே வேதாயத் பதமாமநந்தி" என்பது.

5. "ஸர்வே வேதாயத்ரைகம் பவந்தி" என்பது.

6. "வேதைஸ்ச ஸர்வைஃ அஹமேவ வேத்யஃ" என்பது.

7. "மாடு" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஒத்துச் சொல்லி' என்று தொடங்கி.

8. பலம் கிடைத்தபின், கர்மங்களைச் செய்வதில் நின்றும் நீங்கியிராரே, "கமழும்" என்று நிகழ்காலமாகச் சொல்லுவான் என்? என்ன, ஞானாதிகர் ஆகையாலே பலத்தில் நினைவு இல்லை என்கிறார் 'கர்மங்களை' என்று தொடங்கி.

"கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜனகாதயஃ
லோக ஸங்க்ரஹமேவாபி ஸம்பஸ்யந் கர்தும் அர்ஹஸி"

என்பது, ஸ்ரீ கீதை. 3 : 20,

கள் ஜனகன் முதலானவர்கள்" என்கிறபடியே, ஞானத்தில் தலைநின்றவர்களே அன்றே. இனி, பலத்தை நினைத்து கர்மங் களைச்செய்து பலம் கிட்டினவாறே மீளுமவர்கள் அன்றே. ஹோமப்புகையும், ஹவிஸ்ஸினைக் கொள்ள வந்து நிற்கிற [1]எம்பெருமானுடைய மாளிகைச் சாந்துமாகக் கமழுகின்றன ஆதலின் 'கமழும்' என்கிறாள். திருவல்லவாழ் நீடு உறைகின்ற பிரான் - அவதாரம்போலே தீர்த்தம் பிரசாதியாதே பிற் பாடர்க்கு உதவும்படி சிரமஹரமான திருவல்லவாழிலே நித் தியவாசம் செய்கிற உபகாரகன். கழல் காண்டும்கொல் நிச்ச யமே-[2]அவன் இங்கே நித்தியவாசம் செய்யாநின்றால், நாமும் நித்தியவாசம் செய்யும் தேசத்தில்போய்ப் பெறக்கூடிய பேற் றினைப் பெறவல்லோமே. [3]அங்கும் போனால் எப்பொழுதும் பார்த்துக்கொண்டே யிருத்தலன்றே. (3)

## 534.

*நிச்சலும் தோழிமீர்காள்! எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ?*
*பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்*
*மச்சணி மாடங்கள் மீதண வும்தண் திருவல்லவாழ்*
*நச்சர வின்அணைமேல் நம்பி ரானது நன்னலமே.*

பொ - ரை:—தோழிமீர்காள்! எம்மை நீங்கள் நாள்தோறும் வருத்தி என்ன காரியத்தைச் செய்தீர்கள்? பசிய இலைகளையுடைய நீண்ட பாக்குமரங்களும் பலாமரங்களும் வாழைகளும், மச்சினையுடைய அழகிய மாடங்களின்மேலே புல்லிக்கொண்டிருக்கின்ற குளிர்ந்த திரு வல்லவாழ் என்னும் திவ்யதேசத்தில் ஆதிசேடசயனத்தின்மேலே எழுந்தருளியிருக்கின்ற நம்பெருமானிடத்திலேயுள்ளதாம் எனது உயிரானது.

---

1. 'எம்பெருமானுடைய மாளிகைச் சாந்தும்' என்றது, சொல்லு கின்ற தலைவியின் மனோபாவத்தைக் கூறியபடி.

2. "கழல் காண்டும் கொல் நிச்சலுமே" என்றதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'அவன் இங்கே' என்று தொடங்கி.

3. காண்டல் மாத்திரம் போதியதாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அங்கும்போனால்' என்று தொடங்கி. அங்கும் - பரம பதமும்.

மேல் திருப்பாசுரம், "மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி - என்னுடைய தலையை எப்பொழுது அலங்கரிக்கப்போகிறது" (தோத்திர ரத்நம். 31.) என்றதன்பொருள். "கதாநு ஸாக்ஷாத்காவாணி சக்ஷுஷா-என் கண்களால் உன் திருவடிகளை எப்பொழுது காணப்போகிறேன்" (தோத்திர ரத்நம். 30.) என்றதன்பொருள் இத்திருப்பாசுரம்.

வி - சூ :—நன்னலம் நம்பிரானது ; ஆதலால், எம்மை நீர் நலிந்து என்செய்தீர் என்க. நஞ்சு அரவு - நச்சரவு. அரவு - பாம்பு.

ஈடு :—நான்காம்பாட்டு. [1] ' இங்ஙனம் மநோரதித்தல் ஈடு அன்று ' என்று விலக்குகிற தோழிமாரைக் குறித்து, என்னுடைய நல்ல உயிரானது அவன்பக்கலது, உங்களுடைய வார்த்தைகள் பயன் அற்றவை என்கிறாள்.

நிச்சலும் தோழிமீர்காள்! எம்மை நீர் நலிந்து என்செய்தீரோ - [2] தோழிமார் 'உனக்கு இத்தனையாகாதுகாண்' என்று பலகாலும் சொல்லுவர்களே, அது பலியாதிருக்கச்செய்தேயும், இவளை இழக்கஒண்ணாது என்று பார்த்து மீண்டும் சொல்லத் தொடங்கினார்கள் ; [3] நீங்கள் நலிதல் தவிரமாட்டீர்கோளாகில், நான் இருந்த இடத்தேபோய் நலியுங்கோள் என்கிறாள். என்னுடைய நல்ல உயிரானது அவன்பக்கலிலேயானபின்பு நீங்கள் சொல்லுகிறவற்றால் என்ன பிரயோஜனம் உண்டு. [4] எனக்கு 'அவனைக் காணவேண்டும்' என்னும் ஆசை எப்பொழுதும் செல்லுகிறப்போலே, உங்களுக்கும் 'என்னை மீட்கவேண்டும்' என்கிற இந்த நினைவு மாறுதே செல்லுகிறபடி. [5] நீங்கள் நீங்களாய்ச் சொல்லுகிறீர்களோ, தாய்மாராகச் சொல்லுகிறீர்களோ, இத்தனைபேர் ஸ்வரூபஜ்ஞானமில்லாதார்

---

1. "நம்பிரானது நன்னலம்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நிச்சலும் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ" என்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'தோழிமார்' என்று தொடங்கி, 'மீண்டும் சொல்லத் தொடங்கினார்கள்' என்பது முடிய.

3. "நம்பிரானது நன்னலம்" என்றதனைக் கடாக்ஷித்து, "எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

4. "கழல் காண்டுங் கொல் நிச்சலும்" என்றதன்பின், "நிச்சலும் நலிந்து" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'எனக்கு' என்று தொடங்கி.

5. "தோழிமீர்காள் நலிந்து என்செய்தீரோ" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி. "தோழிமீர்காள்" என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இத்தனைபேர்' என்று தொடங்கி.

உளர் ஆனீர்களே. [1] ஒன்று சொல்லுவார் சொல்லும்போது தம்மை அறிந்தன்றே சொல்லுவது. நீர் எம்மை - உங்களை அழியமாறியும் என்னுடைய ஜீவனமே எண்ணக்கூடிய நீங்கள், உங்களுடைய நல்வார்த்தை நெஞ்சிற்பட்டால் ஜீவியாத என்னை. தாங்கள் தாங்கள் நலிவுபட்டும் பிறரை நோக்குவார், தாங்களே பிறரை நலியவும் பார்ப்பாரோ என்பாள் 'நீர் நலிந்து,' என்கிறாள். நான் ஜீவிப்பேன் என்று நினைத்தோ! உங்கள் ஸ்பரூபத்தோடு சேர்ந்ததாக நினைத்தோ என்பாள் [2]'என்செய்தீரோ' என்கிறாள். அன்றிக்கே, என்செய்தீரோ என்பதற்கு, [3] ஒன்று செய்வது ஒரு பிரயோஜனத்தளவு மன்றே, லாபாலாபம் அறிந்தாலும் கைவாங்க வேண்டாவோ என்னுதல். எம்மை நீர் நலிந்து என்செய்தீரோ - [4]பிராவண்யத்தை விளைப்பதற்கு முற்பாடரானால் பேற்றிற்கு முற்பாடராக வேண்டாவோ. நிச்சலும் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்து என்செய்தீரோ என்பதற்கு, '"மாசறுசோதி" என்ற திருவாய்மொழி தொடங்கி இவ்வளவும் வர ஹிதம் சொல்லுகிற நீங்கள் என்ன பிரயோஜனம் பெற்றீர்கோள்' என்று **பிள்ளான் பணிப்பர்.**

பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்-[5] அந்நிலத்திலே அகப்பட்டாரையும் சிலர் மீட்க நினைப்பாரோ. [6] ஹிதம்சொல்லுவார் பசுமையுள்ள விடத்தேயன்றே சொல்

---

1. 'நீங்கள் நீங்களாய்ச் சொல்லுகிறீர்களோ' என்றதனைப் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'ஒன்று சொல்லுவார்' என்று தொடங்கி.

2. "என் செய்தீரோ" என்றது, என்ன பிரயோஜனத்தைப் பெற்றீர்கோள் என்றபடி.

3. என்னுடைய உயிருக்கு நாசத்தை யுண்டாக்குகின்றீர்களே ஒழிய, வேறொரு பிரயோஜனம் இல்லை என்று மேலே அருளிச்செய்து, உங்கள் ஹித வசனத்துக்கு நான் மீளாத பின்பு உங்களுக்கு ஒரு பிரயோஜனம் இல்லை என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'ஒன்று செய்வது' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'லாபாலாபம்' என்று தொடங்கி.

4. நலிவதற்குப் பிராப்தி இல்லையாகில், பின் எதற்குப் பிராப்தி உண்டு? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிராவண்யத்தை' என்று தொடங்கி.

5. "பச்சிலை" என்று தொடங்கி, அவ்வூரை வர்ணிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அந்நிலத்திலே' என்று தொடங்கி.

6. "பச்சிலை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஹிதம் சொல்லுவார்' என்று தொடங்கி. ஆயின், இங்குப் பசுமை இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்குப் பசலை' என்று தொடங்கி.

லுவது, இங்குப் பசலை பூத்தன்றே கிடக்கிறது. [1]பிரியாதிருப் பார்க்குப் பசுமை மாறுதேயன்றே. [2] "'பச்சிலை நீள்கமுகு என்றுற்போலே, பலவும் தெங்கும் வாழைகளும்' என்று உய்ந்த பிள்ளை கூட்டி அருளிச்செய்வர்காணும்" என்று சீயர் அருளிச்செய்வர். மச்சு அணி மாடங்கள் - [3] பல நிலங்களை யுடைத்தாகையாலே அலங்காரத்தையுடைத்தான மாடங்கள். மச்சு - மேல்தளம். மீது அணவும் - செல்வப்பிள்ளைகளுக்கு அணுக்கன் இட்டாற்போலே காணும் கவிந்துகொண்டு நிற் கிறபடி. தண் திருவல்லவாழ்-சிரமம் நீங்கும்படி சோலை செய்த ஊர். ஆக,பசுமை மாறாத இலைகளையுடைத்தாய் நீண்ட கமுகும், அப்படிப்பட்ட பலவும், தெங்கும், வாழைகளும், மச்சுக்களின் நிரையையுடைத்தான மாடங்களின்மேலே, அவ் வந் நிலங்க ளுக்கு நிழல்செய்யும்படி அணவின குளிர்ந்த திருவல்லவா ழிலே என்றபடி. நஞ்சு அரவின் அணை மேல் - [4] மேலும் சுற் றும் சோலையுண்டானால் கீழும் சோலையுண்டாகவேண்டுமோ. இங்கும் குளிர்ச்சி, வாசனை, மென்மைகளால் குறை இல்லையே. நஞ்சு அரவின் அணை - [5] படுக்கையும் தானேயாய்க் காத்து ஊட்டவும் வற்றாயிருக்கை. பின் மூன்று அடிகட்குக் கருத்து, போகிகளாய் இருப்பார் விடாமல் வசிக்கக்கூடிய தேசம் என்

---

1. அங்குப் பசுமை உண்டாவதற்குக் காரணம் என்? என்ன, 'பிரியா திருப்பார்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். பிரியா திருப்பார்க்கு - ஈசுவரனைப் பிரியாமலிருக்கின்ற மரங்களுக்கு. 'பிரியாதிருப் பார்க்கு' என்றது, பிரிவால்வரும் வியசனம் இன்றிக்கே இருப்பார்க்கு என்றபடி.

2. 'பச்சிலைநீள்கமுகு' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து என்? என்னில், "பச்சிலைநீள்" என்ற அடைமொழிகளை, பலா தெங்கு வாழைகளுக்கும் தனித்தனியே கூட்டிக்கொண்டு பொருள் அருளிச்செய்ய வேண்டும் என்று 'உய்ந்த பிள்ளை' என்ற பெரியார் அருளிச்செய்வர் என்று நஞ்சீயர் அருளிச்செய்வர் என்பது. பச்சிலைநீள் பலவும், பச்சிலைநீள் தெங்கும், பச்சிலைநீள் வாழைகளும் என்று கூட்டுக.

3. பல நிலங்களாவன, தளத்தின்மேல் தளம். மச்சை அலங்காரமாக வுடைய மாடம். அணுக்கன் - குடை.

4. "மீதணவும்" என்று, மேலே சோலையைச் சொன்னபோதே 'சுற்றும்' என்பதும் தானே போதரும். அரவினைச் சோலையாகச் சொல்லு கைக்குக் காரணம் யாது? என்ன, குணத்தின் ஒப்புமையாலே என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவ்வும்' என்று தொடங்கி.

5. "நஞ்சு அரவின் அணை" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'படுக்கையும்' என்று தொடங்கி. 'காத்து ஊட்டவும் வற்றா யிருக்கை' என்றது, விரோதிகள் வாராமல் காத்து ஊட்டவும் வற்றாயிருக்கை என்றபடி.

பது. [1] இளையபெருமாள் கையும் வில்லுமாய் வெளிக்காவல் நிற்க, பெருமாளும் பிராட்டியுமாய்க் காட்டிலே இன்பம் அநுபவித்தாற்போலே. மூவரும் காட்டிலே இன்பத்தை அநுபவித்தார்களேயன்றே, அப்படியே இங்கும் காவல் உண்டாயிருக்கிறபடி. அநந்தமுகமான காவலேயன்றே.

[2] பெருமாளும் இளையபெருமாளும் பிராட்டியும் சிருங்கிபேர புரத்திலே தங்கியிருந்த அன்று ஸ்ரீகுகப்பெருமாள் இளையபெருமாளைப் பார்த்து, 'பெருமாளும் பிராட்டியும் திருக்கண் வளராநின்றார்கள், உமக்குத் தகுதியாம்படி திருவடிகளிலே தலையாம்படி படுக்கை படுத்தேன்; நாங்கள் காடராய் அங்கே இங்கே திரிகையாலே எங்களுக்கு உறக்கம் வாராது, நீர் இராஜபுத்திரராகையாலே சுகுமாரர்; 'பரதன் முதலானோர் வருவர்கள்' என்று அஞ்சவேண்டா, நானும் என்பரிகரமும் உண்டு, நீர் திருக்கண் வளர்ந்தருளும்' என்ன, "தாசரதி சீதையோடுகூட பூமியில் உறங்கும்பொழுது என்னால் நித்திரை அடைய எவ்வாறு முடியும்;" வாரீர், மஹாராஜனை சக்கரவர்த்தி அறுபதினாயிரம் ஆண்டு குழந்தையில்லாதவனாய் வருந்திப்பெற்ற சுகுமாரரான பெருமாள் தறைக்கிடை கிடக்க, எனக்குக் கண்ணுறங்குமோ; அவர்தாம் வசிஷ்டர் முதலான முனிவர்கள் கீழே தறையிலே இருந்தும் அறிவர், அதுவுமின்றிக்கே இருக்கிற பிராட்டியோடே கூடக் கிடக்கிறபடி பாரீர்; ஆனபின்பு, எனக்கு உறக்கம் உண்டாய் அதுபோகைக்கு நினைவுபண்ணி இருக்கிறேன் அல்லேன் காணும், உறக்கம் தேட்டமாய்க் கிடையாமையாலே இருக்கிறேன். நம்பிரானது நன்னலமே." [3] "இந்தச் சீதாபிராட்டியினுடைய மனமானது

---

1. விரோதிகள் வாராமல் காத்து ஊட்டினதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'இளையபெருமாள்' என்று தொடங்கி. திருஷ்டாந்தத்திற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'மூவரும் காட்டிலே' என்று தொடங்கி. "ரம்யம் ஆவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரயஃ" என்பது, சங்கேப ராமா. 31. 'அநந்தமுகமான' என்பது, கிலேடை.

2. இளையபெருமாள் காத்த பிரகாரத்தைக் காட்டுகிறார் 'பெருமாளும்' என்று தொடங்கி.

"கதம் தாஸரதௌ பூமௌ ஸயாநே ஸஹ ஸீதயா
ஸக்யா நித்ரா மயாலப்தும் ஜீவிதம்வா ஸுகாதிவா"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 9. குகப்பெருமாளைப் பார்த்து இளையபெருமாள் கூறியது.

3. கருத்து அருளிச்செய்கிறார் 'இந்தச் சீதாபிராட்டி' என்று தொடங்கி.

அந்தப் பெருமாளிடத்தும், அவருடைய மனமானது இந்தப் பிராட்டியிடத்தும் நிலைபெற்றிருக்கிறது" என்னும்படியே, இருந்ததாகில் நான் ஆறியிரேனே, [1] இரண்டும் அங்கே ஒரு தலைத்தபின்பு நான் எங்ஙனே ஆறியிருக்கும்படி. நஞ்சு அரவின் அணைமேல் நம்பிரானது நன்னலம்-திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்த வடிவழகைக் காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன்பாடது என்னுடைய நற்சீவன். அன்றிக்கே, திருவனந்தாழ்வானைப்போலே என்னை அநந்யார்ஹமாக்கினவன் என்னலுமாம். [2] நற்சீவன் அவன்பக்கலிலேயாயிருக்க, கேவலம் சரீரத்துக்கு ஹிதம்சொல்லுகிற இதனால் பிரயோஜனம் என்? அவன்பக்கலிலே சென்று ஹிதம்சொல்லுங்கோள் வேணுமாகில். (4)

## 535.

**நன்னலத் தோழிமீர்காள்! நல்ல அந்தணர் வேள்விப்புகை மைந்நலங் கொண்டுயர் விண்மறைக் கும்தண் திருவல்லவாழ் கன்னலங் கட்டிதன்னைக் கனியையின் னமுதந் தன்னை என்னலங்கொள் சுடரை என்றுகொல் கண்கள் காண்பதுவே.**

**பொ - ரை:**—சிறந்த அன்பினையுடைய தோழிமீர்காள்! சிறந்த பிராமணர்களாலே செய்யப்படுகின்ற யாகங்களினின்றும் மேல் எழுகின்ற புகையானது, கரியநிறத்தைக்கொண்டு உயர்ந்த ஆகாசத்தை மறைக்கின்ற குளிர்ந்த திருவல்லவாழ் என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற வெல்லக்கட்டியைப் பழத்தை இனிய அமுதத்தை என் நலத்தை எல்லாம் கொண்ட சுடரை என்கண்கள் காண்பது என்றுகொல்? என்கிறாள்.

**வி - கு:**—வேள்விப்புகை விண்மறைக்கும் திருவல்லவாழ் என்க. கன்னல் - கரும்பு.

---

"அஸ்யா தேவ்யா மநஸ் தஸ்மிந் தஸ்யச அஸ்யாம் ப்ரதிஷ்டிதம்
தேந இயம் ஸச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி"

என்பது, ஸ்ரீராமா. சுந். 15: 52. என்றது, பிராட்டிக்கு மனம் பெருமாள் பக்கலிலேயாய், உயிர் தன் பக்கலிலேயாய்க் கிடந்தது; எனக்கு அங்ஙன் அன்றிக்கே, உயிரும் மனமும் பெருமாள் பக்கலிலேயானபின்பு ஆறியிருக்கப் போமோ என்கிறார் என்றபடி.

1. 'இரண்டும் அங்கே ஒருதலைத்த பின்பு' என்றது, பிராட்டியைப் போன்று மனம் மாத்திரமன்றிக்கே, உயிரும் மனமும் அங்கே ஒருதலைத்த பின்பு என்றபடி. "நன்னலம் நம்பிரானது" என்றபோதே, மனமும் அங்கே ஈடுபட்டுவிட்டது என்பதும் தானே போதரும். நலம் - உயிர்.

2. "நம்பிரானது நன்னலம் எம்மை நீர் நலிந்து என்செய்தீர்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'நற்சீவன்' என்று தொடங்கி.

**ஈடு :**—ஐந்தாம்பாட்டு. [1]நான் செய்தபடி செய்ய, இக்கண்கள் விடாய் தீரக் காணப்பெறுவது? என்று என்கிறாள்.

நல் நலம் தோழிமீர்காள்-நலமாவது, [2]இவள்பக்கல் இவர்களுக்கு உண்டான அன்பு. நன்னலமாவது, தங்கள் காரியம் தலைக்கட்டிக்கொள்ளுகையன்றிக்கே இருக்கை. [3]ஆனபின்பு, 'தாய்மார்கள் பழிசொல்லுவர்கள்' என்று அஞ்சி என்வழியே உங்களுக்கு ஒழுகாதிருக்கப்போமோ. [4]"குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் சேர்க்கை எப்படி உண்டாயிற்று;" என்றது, குருகுலத்தில் வாசம் செய்யாத விலங்குகளுக்கும் வசிஷ்டசிஷ்யர்களான இராஜபுத்திரர்களுக்கும் இது ஒரு சேர்த்தி உண்டானபடி எங்ஙனே; [5]சாஸ்திரங்களை அறிந்தவர்கள் அலரோ குருகுல வாசத்திற்குத் தக்கவர்; என்ன, மேல் [6]இதற்குக் காரணம் சொல்லுகிறான். [7]"இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் இந்தவிதமாகச் சிநேகமானது உண்டாயிற்று;" [8]தங்களையும் அறி

---

1. "என்றுகொல் கண்கள் காண்பதுவே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நலம்" என்றதற்கு, பாவம், 'இவள் பக்கல்' என்று தொடங்கும் வாக்கியம். "நல்" என்றதற்கு, பாவம், 'தங்கள் காரியம்' என்று தொடங்கும் வாக்கியம்.

3. "நன்னலம்" என்று, ஸ்வப்பிரயோஜனத்தை விரும்பாத சிநேகத்தையுடையவர்கள் என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'ஆனபின்பு' என்று தொடங்கி.

4. தோழிமார்களுக்கும் இவளுக்கும் உண்டான சிநேகத்துக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'குரங்குகளுக்கும்' என்று தொடங்கி.

"வாநராணாம் நராணாம்ச கதம் ஆஸீத் ஸமாகம:"

என்பது, ஸ்ரீராமா. சுந். 35 : 2.

5. விலங்குகளுக்குக் குருகுல வாசத்திற்கு யோக்கியதை இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சாஸ்திரங்களே' என்று தொடங்கி.

6. இதற்குக் காரணம்-நட்பிற்குக் காரணம். 'சொல்லுகிறான்' என்றது, திருவடியை.

7. "ராம சுக்ரீவயோ: ஐக்யம் தேவி ஏவம் ஸமஜாயத"

என்பது, ஸ்ரீராமா. சுந். 35 : 32.

என்றது, நிர்ஹேதுகத்வம் என்றபடி.

8. "ஏவம் ஸமஜாயத—இந்தவிதமாக உண்டாயிற்று" என்றதற்கு, மூன்றுவகையாகப் பாவம் அருளிச்செய்கிறார். அவற்றுள், முதலது, 'தங்களையும்' என்றது முதல் 'ஒருங்கு சேர்ந்தபடி' என்றது மூடிய. என்றது, அந்தப்புரக் காரியத்திற்கு அடியேன் வரும்படி யன்றே அவர்கள் சேர்ந்தது என்று கருத்து. 'தங்களையும்' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, தங்கள் பெருமையையும் எங்கள் சிறுமையையும் பாராமல் நினைவின்றிக்கே சேர விழுந்தது என்பது.

யாதே எங்களையும் அறியாதே இங்ஙனே விழுந்துகொடு நிற்கக் கண்டோமித்தனை. அதாவது, இளையபெருமாள் கையும் வில்லுமாய் உணர்ந்துகொண்டு நின்று நோக்கக்கூடிய அந்தப் புரக் காரியத்துக்கு அடியேன் வரும்படியன்றே அவர்கள் ஒருங்கு சேர்ந்தபடி. [1] இளையபெருமாள் அடிமையில் தப்பி நின்ற அளவுக்கும் திருவடியைக்கொண்டு இழையிடவேண்டும் படியாக அன்றே அவர் நிலவரானபடி, இளையபெருமாள் பேரநிற்கையன்றே பிரியவேண்டிற்று. "ஏவம் ஸமஜாயத - இவ்வாறு உண்டாயிற்று" - [2] தங்கள் அளவிலும் பெருக்கப் பார்த்தார்கள். ஐசுவரியம் அவனுக்குக் காடுபடும்படியன்றே பார்த்தது. இப்படியன்றே நட்பு இருப்பது; இவர்களும் தோழி மார்கள் அன்றே.

நல்ல அந்தணர் வேள்விப்புகை மைந்நலம் கொண்டு உயர் விண் மறைக்கும் - வேறு பிரயோஜனங்களை நினைக்காதவர்களான பிராமணர்களுடைய யாகங்களில் உண்டான ஹோமப் புகையானது, வெளிறு கழித்துக்கொண்டு ஆகாயத்தளவன்றியே உயர்ந்த சுவர்க்கலோகத்தை மறைக்கும். என்றது, கருமை நிறம்கொண்டு எழுகிற புகைகள், இங்கே கண்ணழிவறப் புண்ணியங்களைச் செய்து சம்சார வெக்காயம் தட்டாதபடி சென்று தேவமாதரோடே அநுபவிக்கிற வைமாநிகரை முகத்தோடு முகம் பார்க்க ஒட்டாமல் மறைக்கிறபடியைத்தெரிவித்தபடி. [3] இருவராய்க் கலப்பாரை முகத்தோடு முகம் பார்க்க ஒட்டாமை அந்நிலத்திலுள்ளார்க்கு ஸ்வபாவம்

---

1. இரண்டாவது பாவத்தை அருளிச்செய்கிறார் 'இளையபெருமாள் அடிமையில்' என்று தொடங்கி. என்றது, தம்பியான இளையபெருமாளுடைய அபராதத்தையும் நான் பொறுப்பிக்கும்படி என்பது கருத்து. நிலவர் - அந்தரங்கர். இளையபெருமாள் அடிமையில் தப்ப நின்றாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இளையபெருமாள் பேரநிற்கை' என்று தொடங்கி.

2. மூன்றாவது கருத்தை அருளிச்செய்கிறார் 'தங்கள் அளவிலும்' என்று தொடங்கி. 'தங்கள் அளவிலும் பெருக்கப் பார்த்தார்கள்' என்றது, தங்களுடைய ஐஸ்வர்யத்தைக் காட்டிலும், அதிகமான ஐஸ்வர்யத்தையுடையராகும்படி பார்த்தார்கள் என்றபடி. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'ஐசுவரியம்' என்று தொடங்கி. 'காடுபடும்படி' என்றது, நிறைவுற்ற தாம்படி என்னுதல்; காட்டுக்கெல்லாம் தலைவனாகும்படி என்னுதல்.

3. 'முகம் பார்க்கவொட்டாமல் மறைக்கிறபடி' என்றதற்கு, மேலே பாவம் அருளிச்செய்கிறார் 'இருவராய்' என்று தொடங்கி. 'புகைத்தல்' என்றது, இலேடை; பொருமை என்பதும், புகை என்பதும் பொருள்.

போலே காணும். அவர்கள் புகைத்தல் இருக்கிறபடி. நல்ல அந்தணர் - வேறு பிரயோஜனங்களைக் கருதாதவரான பிராமணர்கள். இதனால், [1] அவர்கள் கண்டீர்கோள் அத்தலைக்குத் தகுதியாகப் பரிமாறுகிறபடி; ஆனபின்பு, நீங்களும் அப்படியாயிருக்கவேண்டாவோ என்பதனைத் தெரிவித்தபடி. தண் திருவல்லவாழ் கன்னல் அம் கட்டிதன்னை - கரும்பினுடைய கோதுஅற்ற கட்டியை, '**இன்னமுலபின் கட்டி**' என்னுமாறு போலே, '**திருவல்லவாழ் கட்டி**' என்கிறாள். கனியை - அவ்வளவும் பார்த்திருக்க வேண்டாதபடி பக்குவமான பழமாயிருக்கை. இன்அமுதந்தன்னை - உடம்பைப் பூண்கட்டிக் கொடுக்கவற்றாயிருக்கை. என்றது, அநுபவிப்பதற்குத் தக்க ஆற்றலைக் கொடுக்கையைத் தெரிவித்தபடி. தேவர்களுடைய உப்புச்சாறு போலன்றிக்கே, ஆத்ம உஜ்ஜீவனம் பண்ணிக் கொடுக்கவற்றதாயிருத்தலின் '**இன்னமுதம்**' என்கிறாள். என் நலம் கொள் சுடரை-என்னுடைய அழகையெல்லாம் கொள்ளை கொண்டு, அதனாலே ஒளியுருவனாயிருக்கிறவனை: என்றது, இவளுடைய அழகையெல்லாம் கொள்ளைகொண்டது தன்பேறு என்னுமிடம் வடிவிலே தோற்றும்படி இருக்கையைத் தெரிவித்தபடி. அன்றிக்கே, என்னை எழுதிக்கொண்ட அழகையுடையவனை என்றுமாம்.

என்றுகொல் கண்கள் காண்பதுவே - 'நான்பட்டதுபட, குழந்தை ஜீவிக்கப்பெறுவது காண்' என்பாரைப்போலே, என் கண்களின் விடாய் தீர்வது என்றோ? என்கிறார். "முடியானே" என்கிற திருவாய்மொழியிற் கூறிய கரணங்களையுடையவர் அன்றோ. இந்திரியங்களும் தாமும் தனித்தனியே சேதன சமாதியாலே விடாய்கொள்ளுகின்றவர் அன்றோ. [2] "துக்கத்தால் மிக அதிகமாக இளைத்திருக்கிற என் உறுப்புக்களால் புருஷ சிரேஷ்டரான அந்தப்பெருமானை நான்

---

1. "நன்னலத் தோழிமீர்காள்" என்றதன்பின், "நல்ல அந்தணர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

2. கரணங்கள் விடாய்க்கக் கூடுமோ? என்னுமதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'துக்கத்தால்' என்று தொடங்கி.

"யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரைः ஸோகாபிகர்ஶிதைः
ஸம்ஸ்ப்ருஶேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி"

என்பது, ஸ்ரீராமா. சுந். 40; 3. திருவடியைப் பார்த்துப் பிராட்டி கூறியது.

தொடக்கூடியவாறு திருவருள் புரியவேண்டும்" என்றுள் பிராட்டி. [1]குழந்தைகள் ஜீவித்தால் பசிகெடுவார் அபிமானிகள் அன்றே.

536.

காண்பதெஞ் ஞான்றுகொலோ? வினையேன் கனிவாய் மடவீர்!
பாண்குரல் வண்டிசை பசுந்தென்றலு மாகி எங்கும்
சேண்சினை ஓங்குமரச் செழுங்கா னல் திரு வல்லவாழ்
மாண்குறள் கோலப் பிரான்மலர்த் தாமரைப் பாதங்களே.

**பொ - ரை:**—கோவைக்கனிபோன்ற வாயினையுடைய பெண்களே! எல்லாவிடங்களிலும் வண்டுகளினுடைய பாண்குரலும் இளந்தென்றலுமாக, மிக உயர்ந்திருக்கின்ற கிளைகளையுடைய மரங்கள் நெருங்கியிருக்கின்ற வளப்பம் பொருந்திய கானலையுடைய திருவல்லவாழ் என்ற திவ்வியதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற மாட்சிமை அமைந்த அழகிய பிராஞ்சிய வாமனனுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளை, வினையேன் காண்பது எந்நாளோ? என்கிறாள்.

**வி - மு:**—மடவீர்! மலர்த்தாமரைப் பாதங்கள் வினையேன் காண்பது எஞ்ஞான்றுகொலோ? என்க. பண் என்பது, பாண் என வந்தது, விகாரம். பாண் - இசை. எங்கும் வண்டின் குரலும் பசுந்தென்றலுமாக, மரம் ஓங்கு செழுங்கானல் என்க. சேண்ஓங்கு சினைமரம் என்க. அன்றி, சேண் என்பதனைச் சினைக்கும், ஓங்கு என்பதனை மரத்திற்கும் அடை ஆக்கலுமாம். கானல் - கடற்கரைச்சோலை.

**ஈடு:**—ஆறாம்பாட்டு. [2]திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமனனுடைய இனிமையையுடையதான திருவடிகளை நான் காண்பது என்றே? என்கிறாள்.

வினையேன் காண்பது எஞ்ஞான்று கொலோ-[3]குழந்தைகள் செய்தபடி செய்ய, நான் முன்னம் என் பசி தீர்த்துக் கொள்வது என்றே. உலகநடைக்கு ஒத்ததல்லாத பாவத்தைச் செய்தேன் என்பாள், தன்னை 'வினையேன்' என்கிறாள்.

---

1. கண்களின் விடாய் தீர்ந்தால் தமக்கு லாபம் ஏது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'குழந்தைகள்' என்று தொடங்கி.

2. "மாண்குறள் கோலப்பிரான் மலர்த்தாமரைப் பாதங்கள் காண்பது எஞ்ஞான்று கொலோ" என்றதனைக் கடாவித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

3. மேல் திருப்பாசுரத்தில் கண்களின் விடாயைச் சொல்லி, இங்குத் தம் விடாயைச் சொல்லுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'குழந்தைகள்' என்று தொடங்கி. 'உலக நடைக்கு ஒத்ததல்லாத' என்றது, கழியமிக்க தோர் காதலனாயிருத்தல்.

என்றது, [1]காணுமைக்குப் பாவம் பண்ணினாரும் கூடக் காணும் படியான விஷயத்தை, காண்கைக்கு யோக்கியதை உண்டாய் வைத்தே காணுதபடியான பாவத்தைப் பண்ணினேன் என்ற படி. [2]மாண் குறள் கோலப்பிரானே யன்றே. இனி, 'காண் பது எஞ்ஞான்றுகொலோ வினையேன்' என்பதற்கு, நீங்கள் காட்டுகைக்கு விரைய ஆறியிருக்கக்கூடிய நான், இன்று 'காண்பது எஞ்ஞான்றுகொலோ' என்னும்படியான பாவத் தைப் பண்ணினேன் என்னுதலுமாம். கனி வாய் மடவீர்-உங் களை நான் பண்டுபோலே காண்பது என்றே. [3]"ஞானிக ளுக்கு நான் மிகவும் பிரியமுள்ளவன், அவர்களும் எனக்குப் பிரியமுள்ளவர்களே" என்னும்படியன்றே அவர்கள் இருப் பது. [4]இவள் மாசுடை உடம்பொடு தலை உலறி வாய்ப்புறம் வெளுத்திருக்க, அவர்கள்தங்களைப் பேணி இரார்களே.[5]அவர் கள் பண்டுபோலே இருக்கக் காண்கையும் இவளுக்கு விருப்ப மானபடி.

பாண்குரல் வண்டினெடு - [6]இவற்றின் குரல் ஓசையில் வெள்ளோசையாய்க் கழியுண்பது இல்லை, பரப்பு அடங்கலும்

---

1. அதனை விவரணம் செய்கிறார் 'காணுமைக்கு' என்று தொடங்கி. 'பாபம் பண்ணினார்' என்றது, மஹாபலிபோல்வாரை.

2. அப்படிப் பாபம் பண்ணினவர்களும் அவனைக் கண்டார்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மாண்குறள்' என்று தொடங்கி.

3. "கனிவாய் மடவீர்" என்றதனை, இப்பொழுதுள்ள நிலைக்கு விசேஷணமாக்காமல் 'பண்டுபோலே காண்பது' என்று இறந்தகாலமாக்கிப் பொருள் அருளிச்செய்வதற்குக் காரணம் என்? என்ன, இவள் அதரம் வெளுத்திருக்க, அவர்கள் அதரம் செவ்வி பெற்றிருக்கக் கூடாமையாலே என்று கூறத் திருவுள்ளம்பற்றி, இவள் விஷயத்தில் அவர்களுக்கு உண்டான நிநேகத்தைத் திருஷ்டாந்த மூலமாகக் காட்டுகிறார் 'ஞானிகளுக்கு' என்று தொடங்கி.

"ப்ரியோஹி ஜ்ஞானிநோ அத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரியஃ"
என்பது, ஸ்ரீ கீதை. 7: 17. என்றது, ஞானி விஷயத்தில் சர்வேசுவரன் மிகவும் நிநேகித்திருக்குமாறு போன்று, இவர்களும் இவள் விஷயத்திலே மிகவும் நிநேகித்தவர்களா யிருப்பர்கள் என்றபடி.

4. இப்படி மிக்க அன்புள்ளவர்களாகையாலே, இவள் அதரம் வெளுத் திருக்க, அவர்கள் அதரம் நிறம்பெற்றிருத்தல் கூடாது என்கிறார் 'இவள் மாசுடை' என்று தொடங்கி..

5. இவள் அவனைப் பிரிந்த சமயத்திலே அவர்கள் அதரம் உருவின உறைப்பை அருளிச்செய்கிறார் 'அவர்கள் பண்டு' என்று தொடங்கி.

6. "குரல்" என்னுமல், "பாண் குரல்" என்று விசேஷித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவற்றின்' என்று தொடங்கி. வெள்ளோசை - சாரமில்லாத ஓசை. பாட்டாக - இசையாக.

பாட்டாக இருக்கும். என்றது, இயல் கற்று இசையோடு கூட்டிற்று அன்று அவற்றுக்கு, பேச்சே தொடங்கி இசை என்ற படி.[1] 'தேன்போலே இனிய பாட்டு' என்னுமதுபோய், வடிவே தேனுய் அதற்குமேலே பாட்டும் ஆனால் மிகவும் இனியதா யிருக்குமன்றே. அன்றிக்கே, பாண் குரல் - இசைரூபமான மிடற்றோசை என்னுதல். பசுந்தென்றலுமாகி எங்கும்-[2] கலப்பு அற்ற தென்றலுமாயிருக்கை என்றது, [3] பலவிடங்களிலே காலிட்டு வாராதே தாய்தலைத் தென்றலாயிருக்கையைத்தெரி வித்தபடி. அன்றிக்கே, பசுந் தென்றல் - இளந்தென்றல் என் றுமாம். சேண் சினை ஓங்கு மரம் செழுங் கானல் - கவடுகளா னவை சுற்றிலே பணைத்திருப்பனவாய் மேலோக்கத்தை யுடைத்தான மரங்களையுடைத்தாகையாலே அழகிய சோலை யையுடைய. அன்றிக்கே, செழுங்கானல் என்பதற்கு, காண்ப தற்கு இனிய கானல் என்னுதல். கானல் - கடற்கரைச் சோலை யாதல், நெய்தல் நிலமாதல். சினைக்கு ஓக்கம், சுற்றிலே வளர் தல். மரத்துக்கு ஓக்கம், மேலே உயர்தல். மாண் குறள் கோலப்பிரான் மலர்த்தாமரைப் பாதங்கள் காண்பது எஞ் ஞான்றுகொலோ - தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப் பாளனுய், பெருவிலையனை வடிவினைச் சிறுகவிட்டு மிக்க அழகையுடையவனுய், [4] சௌலப்யத்தையும் அழகையும் திரு வல்லவாழில் அடியார்களை அநுபவிப்பித்துக்கொண்டு நிற்கிற வனுடைய தனக்குமேல் ஒன்றில்லாததான இனிமையை யுடையதான திருவடிகளைக் காண்பது எஞ்ஞான்றுகொலோ?

---

1. 'பேச்சே தொடங்கி இசை' என்றதனால் போந்த பொருள், நிரதிசய போக்யத்வம் என்று திருவுள்ளம்பற்றி அதன் முடிவின் எல்லையை அருளிச் செய்கிறார் 'தேன்போலே' என்று தொடங்கி. 'தேன்' என்று வண்டுக்குப் பெயர்.

2. "பசுந்தென்றல்" என்பதற்கு, செவ்வித் தென்றல் என்று பொருள் கூறத் திருவுள்ளம்பற்றி, அதற்குச் 'செவ்வி' எது? என்ன, 'கலப்பற்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'கலப்பற்ற' என்றதனை விவரிக்கின்றார் 'பல விடங்களிலே' என்று தொடங்கி. 'பல விடங்களிலே காலிட்டு வாராதே' என்றது, பல சரீரங்களிலே பட்டு அந்தத் துர்வாற்றம் கலந்து வராமல் என்றபடி. 'தாய் தலைத் தென்றலா யிருக்கை' என்றது, மேல் வருகின்ற தென்றலுக்கெல்லாம் தாயாய், முந்தி வரும்போதே இங்கே வருமதாயிருக்கையைத் தெரிவித்தபடி.

4. 'சௌலப்யத்தையும் அழகையும்' என்றது, "மாண்", "கோலம்" என்ற சொற்களைத் திருவுள்ளம்பற்றி.

அப்போது அலர்ந்த தாமரைபோலே எல்லையற்ற போக்யமான திருவடிகள் என்பாள் 'மலர்த்தாமரைப் பாதங்கள்' என்கிறாள். [1]அடியிலே இவர்க்குத் தானே அன்றே ருசியை உண்டாக்கினன். [2]'அடிகள் அடிகள்' என்று வாய்புலற்றும் படி அன்றே திருவடிகளில் இனிமை இருப்பது. (6)

## 537.

பாதங்கள் மேலணி பூந்தொழக் கூடுங்கொல்? பாவைகல்லீர்!
ஓத நெடுந்த டத்துள் உயர்தாமரை செங்கழுநீர்
மாதர்கள் வாண்முகமும் கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ்
நாதன் இஞ் ஞாலமுண்ட நம்பிரான் தன்னை நாடொறுமே.

**பொ - ரை**:—பாவைபோன்ற பெண்களே! தண்ணீர் நிறைந்த பெரிய குளங்களானவை, உயர்ந்த தாமரை மலர்களையும் செங்கழுநீர் மலர்களையும், பெண்களினுடைய ஒளிபொருந்திய முகத்தையும் கண்களையும் போன்று ஏந்திக்கொண்டிருக்கின்ற திருவல்லவாழ் என்ற இவ்விய தேசத்திலே எழுந்தருளியிருக்கின்ற நாதனும் இவ்வுலகங்களை எல்லாம் உண்ட நம்பிரானுமான சர்வேசுவரனுடைய, மலர்களால் மேலே அலங்கரிக்கப்பட்ட திருவடிகளை நாடோறும் தொழுவதற்குக் கூடுமோ? என்கிறாள்.

**வி - கு**:—மேல் பூ அணி பாதங்கள் தொழக் கூடுங்கொல் என மாற்றுக. தாமரையை முகத்துக்கும், செங்கழுநீரைக் கண்ணுக்கும் முறை நிரல்நிறையாகக்கொள்க. தடம் ஏந்தும் திருவல்லவாழ் என்க. அன்றி, தடத்துள் இருக்கின்ற தாமரையும் செங்கழுநீரும் முகத்தையும் கண்ணையும்போன்று உயர்ந்து பொலிகின்ற திருவல்லவாழ் என்னுதல்.

**ஈடு**:—ஏழாம்பாட்டு. [3]அவன் திருவடிகளிலே நித்யமாகப் பூவை அணிந்து தொழவல்லோமே! என்கிறாள்.

பாதங்கள் மேல் பூ அணி தொழக் கூடுங்கொல் - திருவடிகளின்மேலே மலர்களை அணிந்து நமக்குத் தொழக் கூட

---

1. வாமனனைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அடியிலே' என்று தொடங்கி. தமக்குத் திருவடிகளிலே ருசி பிறந்தது வாமனன் திருவருளாலே என்பது கருத்து.

2. பல பாசுரங்களிலும் திருவடிகளைச் சொல்லுவதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அடிகள்' என்று தொடங்கி.

3. "நாடொறும் பாதங்கள்மேல் அணி பூந்தொழக் கூடுங்கொல்" என்ற தனைக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வற்றே. பாவைகள்ளீர் -[1] இவளை விலக்குவதற்கு ஆற்றல் இல்லாதவர்களாய் மரப்பாவைகளைப்போன்று இருந்தபடி. அன்றிக்கே, எழுதின பாவைபோன்று இருந்தார்கள் என்னுதல். அன்றிக்கே, விலக்காமையாலே மகிழ்ந்து பெண்களில் நல்லரானவர்களே! என்று விளிக்கிறாள் என்னுதல். ஓதம் நெடுந்தடுத்துள் உயர் தாமரை செங்கழுநீர் - கடல்போலே பெருத்திருந்துள்ள தடாகங்களினுள்ளே ஒக்கத்தையுடைத்தான தாமரை செங்கழுநீரானவை. மாதர்கள் வாண்முகமும் கண்ணும் ஏந்தும்-அவ்வூரில் பெண்களினுடைய ஒளியையுடைத்தான முகத்தையும் கண்களையும் [2] தரியாநின்றன. என்றது, ஊருக்கும் வயலுக்கும் வாசி தெரிந்துகோடல் அரிதாயிருக்கையைத் தெரிவித்தபடி. அன்றிக்கே, [3] திருவோலக்கத்திற்படியே அவற்றைத் தள்ளும்படியாயிருக்கை என்னுதல். திருவல்லவாழ் நாதன் - ஸ்ரீவைகுண்டநாதனைக் காட்டிலும் ஏற்றம். என்றது, [4] ஸ்ரீவைகுண்டத்துக்குக் கடவுளாய் இருக்கிறது, அந்தப்புரத்துக்குக்கடவன் என்கிற அளவேஅன்றே, ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப இருக்கிற இடமேஅன்றே; இது, அங்ஙன் அன்றிக்கே, ஒருவர் கூறையை எழுவர் உடுக்கிற தேசத்திலே தரிசு அற இருக்கிற இடமேஅன்றே என்றபடி. இஞ் ஞாலம் உண்ட - ஆபத்தே செப்பேடாக வயிற்றிலே வைத்து நோக்கும். என்றது, மேன்மை பாராதே [5] தளர்ந்தார் தாவளமாயிருக்கும் என்றபடி. அது கதையில் கேட்கவேண்டி

1. "பாவை" என்பதற்கு, மரப்பாவை என்றும், கொல்லிப் பாவை என்றும், பிரதிமை என்றும் மூன்றுவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவளை விலக்குவதற்கு' என்று தொடங்கி. முதற்பொருள், விலக்குதற்கு ஆற்றல் இல்லாமையைக் குறித்தது. இரண்டாவது பொருள், அழகிய உறுப்புக்களை யுடையவர்கள் என்பதனைக் குறித்தது. மூன்றாவது பொருள், ஸ்வாதந்திரியம் இல்லாதவர்கள் என்பதனைக் குறித்தது.

2. 'தரியாநின்றன' என்றது, ஒப்புமையைத் தரித்துக்கொண்டு நிற்கின்றன என்றபடி.

3. இரண்டாவது பொருளில் "ஏந்துதல்" என்பதற்கு, தள்ளுதல் என்பது பொருள். திருவோலக்கத்திற்படியாவது, பெரியோர்கள் ஓலக்கத்திலே தாழ்ந்தவர்கள் வந்தால் முறைப்படி தள்ளிவிடுதல்.

4. ஏற்றம் எது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீவைகுண்டத்துக்கு' என்று தொடங்கி. தரிசு - பாழ்விடக்கிற நிலம். "ஒண்டொடியாள்" என்பது, திருவாய். 4. 9 : 10.

5. தளர்ந்தார்தாவளம் - தளர்ந்தவர்கட்கு ஆதாரமாயிருப்பவன்.

இருந்ததோ? எனின், நம்பிரான் தன்னை - சம்சார பிரளயங் கொண்ட என்னை எடுத்து இவ்வளவாக்கி உபகரித்தவன். நாடொறும் பாதங்கள்மேல் அணிபூந்தொழக் கூடுங்கொல்? (7)

538.

**நாடொறும் வீடின்றி யேதொழக் கூடுங்கொல் நன்னுதலீர்!**
**ஆடுறு தீங்கரும் பும்விளை செந்நெலு மாகிஎங்கும்**
**மாடுறு பூந்தடஞ் சேர்வயல் சூழ்தண் திருவல்லவாழ்**
**நீடுறை கின்ற பிரான்நிலம் தாவிய நீள்கழலே.**

**பொ - ரை:**—நல்ல நெற்றியையுடைய பெண்களே! எல்லா விடங்களிலும் அரைக்கப்படுகின்ற மதுரம்பொருந்திய கரும்புகளும் விளைந்திருக்கின்ற செந்நெற்பயிர்களுமாக, பக்கங்களில் பொருந்தியிருக் கின்ற அழகிய குளங்களையும் அவற்றைச் சார்ந்து சூழ்ந்திருக்கின்ற வயல்களையுமுடைத்தா யிருக்கின்ற குளிர்ந்த திருவல்லவாழ் என்ற திவ்வியதேசத்தில் நித்தியமாக எழுந்தருளியிருக்கின்ற பிரானுடைய நிலம் தாவிய நீண்ட திருவடிகளை, நாள்தோறும் இடையீடு இல்லாமல் தொழுவதற்குக் கூடுமோ? என்கிறாள்.

**வி- சு:**—எங்கும் கரும்பும் செந்நெலும் ஆக தடம் சேர்ந்து வயல் சூழ்ந்த திருவல்லவாழ் என்க. பிரானுடைய நீள்கழலைத் தொழக் கூடுங்கொல்? என்க. மாடு - பக்கம்.

**ஈடு:**—எட்டாம்பாட்டு. [1] சர்வ சுலபனவன் திருவடிகளிலே சர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக் கூடவற்றே! என்கிறாள்.

நாடொறும் வீடு இன்றியே தொழக் கூடுங்கொல்-'**நாடொறும்**' என்று, ஒவ்வொரு பக்ஷத்திலும் செய்யும் யாகங்களைப் பிரிக்கிறது. '**வீடு இன்றியே**' என்று நித்திய அக்நிஹோத்ரத்தைப் பிரிக்கிறது. [2] "ஒழிவில் காலமெல்லாம்" என்கிறபடியேயன்றே இவர் பிரார்த்திப்பது. [3] ஆசாரிய உபதேசத்தை நம்பி விரும்புகிற நம்மைப்போல் அன்றியே, அடிமை ரசித்து

1. "நீடுறைகின்ற பிரான் நிலம் தாவிய நீள்கழல் நாடொறும் வீடின்றியே தொழக் கூடுங்கொல்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. ஒருகால் தொழுதால் போராதோ, "நாடொறும் வீடின்றி" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒழிவில்' என்று தொடங்கி. இது, திருவாய். 3. 3 : 1.

3. நமக்கு அப்படி அபேக்ஷை பிறக்க இல்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆசாரிய' என்று தொடங்கி.

ஆசையாலே விரும்புகிறாரே அன்றே. நல்நுதலீர் - [1] அவன் வந்த உபகாரத்துக்கு அவன் திருவடிகளிலே விழுந்து வணங்கிய வணக்கத்தினால் புழுதிபடிந்த நெற்றியுடையவர்களாக உங்களைக் காணவல்லேனே. [2] "தலையில் வணங்கவுமாங்கொலோ" என்று தொழக்கடவளே, அப்போது இவர்களும் தொழுவர்களே; இவளுக்குக் கைங்கர்யத்தில் உகப்புப்போலே, இவள் பேறே தங்களுக்கு உகப்பாயிருக்குமவர்களே. ஆடு உறு தீங்கரும்பும் விளைசெந்நெலுமாகி எங்கும்-கரும்புகள் எப்போதும் ஆடுகையிலே உற்றிருக்கை, செந்நெலும் எப்போதும் அறுக்கைக்குப் பக்குவமாய் விளைந்து கிடக்கை. என்றது, [3] அங்குள்ளவை முழுதும் பக்குவமாய்க் காணும் இருப்பது என்றபடி. மாடு உறு பூந் தடம் சேர் வயல் சூழ் தண் திருவல்லவாழ்-மருங்கேயுற்றிருப்பதாய்ப் பூக்களையுடைத்தான தடாகங்களைச் சேர்ந்த வயல்களாலே சூழப்பட்டிருப்பதாய்ச் சிரமஹரமான திருவல்லவாழிலே. [4] ஊரைத் தடாகங்கள் சூழ்ந்து, தடாகங்களை வயல்கள் சூழ்ந்திருக்க, இப்படிகளாலே குளிர்ந்துகாணும் ஊர்தான் இருப்பது. மீடு உறைகின்ற பிரான் நிலம் தாவிய நீள் கழலே - [5] குணகுண நிரூபணம் பண்ணுதே எல்லார் தலைகள் மேலும் பொருந்தும்படி சுலபமான திருவடிகளைக் கொண்டு, அவதாரம்போலே தீர்த்தம் பிரசாதியாமல் நித்திய வாசம் செய்கிற உபகாரமே இங்குத்தைக்குத் தன்னேற்றம். நிலம் தாவிய நீள்கழல் நாடொறும் வீடு இன்றியே தொழக் கூடுங்கொல்? என்க. (8)

---

1. தன் நிலையைக் கண்டு உருவியிருக்கிறவர்களை "நன்னுதலீர்" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் வந்த' என்று தொடங்கி.

2. தோழிமார்கள் வணங்குவார்களோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'தலையில்' என்று தொடங்கி. இது, திருவாய். 5. 3: 7.

3. "'அங்குள்ளவை முழுதும் பக்குவமாய்க் காணும் இருப்பது' என்ற வாக்கியத்தால், நாம் அங்குச் சேர்தலே தாமதம், அவன் நம்மை அநுபவிப்பிப்பான் என்ற பொருள் கூறப்படுகின்றது.

4. சிரமஹரமாய் இருப்பதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஊரைத் தடாகங்கள்' என்று தொடங்கி.

5. 'குணகுண நிரூபணம் பண்ணுதே' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, சௌலப்யம், ஸ்ரீ வாமனனுக்கும் இவனுக்கும் ஒக்கும், நீடுறை இன்றதே இவனுக்குத் தன்னேற்றம் என்பது. இங்குத்தை - இவ்விடம்.

## 539.

**கழல்வளை பூரிப்ப நாம்கண்டு கைதொழக் கூடுங்கொலோ?**
**குழல்என யாழும் என்னக் குளிர்சோலையுள் தேனருந்தி**
**மழலை வரிவண்டு கள் இசை பாடும் திருவல்லவாழ்**
**சுழலின் மலிசக் கரப்பெரு மானது தொல்லருளே.**

**பொ - ரை:**—இளமைபொருந்திய அழகிய வண்டுகளானவை, குளிர்ந்த சோலையிலே தேனைக் குடித்துக் குழலைப்போலவும் யாழைப் போலவும் இசையைப் பாடுகின்ற திருவல்லவாழ் என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற சுழலின் மலி சக்காப் பெருமானுடைய தொல்அருளால், சுழலுகின்ற வளையல்கள் தங்கும்படியாக நாம் கண்டு தொழுவதற்குக் கூடுமோ? என்கிறாள்.

**வி - கு:**—வண்டுகள் தேன் அருந்தி குழல் என்ன யாழும் என்ன இசை பாடும் திருவல்லவாழ் என்க. தொல்அருளால் கண்டு தொழக் கூடுங்கொல்? என்க. குழல், யாழ் என்பன: ஆகுபெயர். மழலை - இளமை. வரி - கீற்றுமாம். சுழலின் மலி - சுழலுதலில் மிகுந்த. இது, சக்கரத்திற்கு அடை.

**ஈடு:**—ஒன்பதாம்பாட்டு. [1] நம்முடைய கழலுகிற வளைகள் பூரிக்க அவனைக் கண்டு தொழும்படி அவன் அருள்கூடவற்றே! என்கிறாள்.

கழல்வளை பூரிப்ப -[3] "**வெள்வளை**" என்னுமாறுபோலே; '**கழல்வளை**' என்று, வளைக்கு விசேடணமாய்விட்டது காணும். [3]இவளைக் கைவிடுகையாலே அன்றே இது விசேடணமாக வேண்டிற்று. பூரிப்ப - பூர்ணமாக. [4]அவன் வரில் கைமேலே காணலாமே இவற்றை. 'பூரிப்ப' என்பதனை, மேலே வரு

---

1. "கழல்வளை பூரிப்ப நாம் கண்டு கைதொழப் பெருமானது தொல்லருள் கூடுங்கொலோ" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "வெள்வளை" இது, திருவாய். 10. 3 : 7.

3. விசேடணமாகைக்குக் காரணம் என்? என்ன, 'இவளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'இவளைக் கைவிடுகையாலே' என்பது, இவளை அவன் கைவிடுகையாலே என்றும், இந்த வளை கையை விடுகையாலே என்றும் இரு பொருள்படும்.

4. வளை பூரிக்கைக்கு ஹேது எது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'அவன் வரில்' என்று தொடங்கி.

கின்ற 'நாம் கண்டு கைதொழக் கூடுங்கொலோ' என்றதனோடு முடிக்க. பிரிவில் வளை கழலுவது தனக்கேயாலுலும் காட்சி எல்லார்க்கும் ஒக்குமாதலின் [1]'நாம்' என்கிறாள். குழல் என்ன யாழும் என்ன - குழல் என்னவுமாய் யாழ் என்னவுமாய் இருக்கை. [2] நாட்டில் இனியவற்றை எல்லாம் சேரக்கேட்டாற் போலே இருக்கை. [3] "வீரியத்தில் விஷ்ணுவை ஒத்தவர், பிரிய மாகப் பார்க்கப்படுவதில் சந்திரனை ஒத்தவர்" என்னுமாறு போலே. குளிர் சோலையுள் தேன் அருந்தி - சிரமஹரமான சோலையிலே குளிருக்குப் பரிஹாரமாகத் தேனைக் குடித்து. அருந்தி-குடித்து. மழலை வரி வண்டுகள் இசைபாடும் திருவல்ல வாழ் - இளமையோடு கூடியதாய்க் காண்பதற்கு இனியதா யிருக்கின்ற வண்டுகள், பிரீதிக்குப் போக்குவிட்டுப் பாடாநின் றுள்ள திருவல்லவாழ். செருக்கருமாய் ஸுகுமாரருமாயிருப் பார், 'மரம்' என்று சந்தனத்தைக் கழித்துப் புழுகு நெய்யை ஏறிட்டுக்கொண்டு திரியுமாறுபோலே, இவையும் இயலைவிட்டு இசையையே பாடுகின்றனவாதலின் 'இசைபாடும்' என்கிறது. சுழலின் மலி சக்கரப் பெருமானது - பகைவர்களை அழிக்க வேண்டும் என்னும் விரைவாலே மிகவும் சுழன்று வாராநின் றுள்ள திருவாழியையுடைய சர்வேசுவரன். அன்றிக்கே, சுழ லின் மலி சக்கரம் என்பதற்கு, சுழல்வதுபோலத் தளங்கா நின்றுள்ள சக்கரம் என்னுதல். தொல் அருள்-இயல்பாகவே அமைந்த அருள். அருளாலே, கழல் வளை பூரிப்ப நாம் கண்டு கைதொழக் கூடவற்றே என்க. (9)

## 540.

**தொல்லருள் நல்வினை யால்சோலக் கூடுங்கொல்? தோழிமீர்காள்!**
**தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்ற திருநகரம்**
**நல்லருள் ஆயி ரவர் நல னேந்தும் திருவல்லவாழ்**
**நல்லருள் நம்பெரு மான் நா ராயணன் நாமங்களே.**

---

1. "மரம்" என்பது முன்புள்ள பாடம்.

2. "குழல் என்ன யாழும் என்ன" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'நாட்டில்' என்று தொடங்கி.

3. ஒன்றற்குப் பலபொருள்களை உவமை கூறுதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'வீரியத்தில்' என்று தொடங்கி.

"விஷ்ணுநா ஸத்ருஸோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்ஸநஃ"
என்பது, ஸ்ரீராமா. பால. 1: 18.

**பொ-ரை :**—தோழிமீர்காள்! எம்பெருமானுடைய தொல்அருளே மண்ணுலகமும் விண்ணுலகமும் அநுபவித்துத் தொழும்படி நின்ற திருநகரம், எம்பெருமானுடைய கல்யாண குணங்களைக் கொண்டாடிப் பேசுகின்ற நல்ல அருளையுடைய ஆயிரம் ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கியிருக்கின்ற திருவல்லவாழ் என்னும் திவ்வியதேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற நல்லருளையுடைய நம்பெருமான் நாராயணனுடைய திருநாமங்களே, எம்பெருமானுடைய தொல்லருளால் உண்டான புண்ணியத்தாலே சொல்லுவதற்குக் கூடுமோ? என்கிறாள்.

**வி-கு :**—தொல்அருள் - இயல்பாகவே உள்ள அருள். தொல் அருளைத் தொழ நின்ற திருநகராகிய திருவல்லவாழ் என்க. நலனேந்தும் நல்அருள் ஆயிரவர் தங்கியிருக்கின்ற திருவல்லவாழ் என்க. நாராயணனுடைய நாமங்களை நல்வினையால் சொலக் கூடுங்கொல்? என்க. தொல்லருளால் உண்டாய நல்வினை என்க.

**ஈடு :**—பத்தாம்பாட்டு. [1] இயல்பாகவே அமைந்துள்ள, அவனுடைய கிருபையாலே அவனைக் காணப்பெற்று, பிரீதியாலே இனி தாய்க்கொண்டு திருநாமங்களைச் செல்லக் கூடவற்றே என்கிறாள்.

தொல்அருள் நல்வினையால் சொலக் கூடும் கொல் - [2] அவனுடைய ஸ்வாபாவிகமான அருளாலே அவனைக் காணப்பெற்று, அதனால் வந்த பிரீதியாலே உகந்துகொண்டு திருநாமத்தைச் சொல்லக்கூடவற்றே என்னுதல்; நல்வினை - உகப்பு. அன்றிக்கே, ஸ்வாபாவிகமான கிருபையால் உண்டான புண்ணியத்தாலே அவனைக் கண்டு திருநாமங்களைச் சொல்லக் கூடவற்றே என்னுதல். [3] "நா, நீர் அற்று இருக்கை பாபத்தின் பலம்அன்றே, நாக்கிலே நீர்உண்டாய்த் திருநாமம்

---

1. "தொல்லருள் நல்வினையால் நாராயணன் நாமங்கள் சொலக் கூடுங் கொல்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "தொல் அருள் நல்வினையால்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, தொல்லருளாலே அவனைக் காணப் பெற்று, அதனால் வந்த பிரீதியாலே திருநாமங்களைச் சொல்லக் கூடுமோ? என்பது. இதனை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. இந்த யோஜனையில் "நல்வினை" என்பது, சத்கர்மமாய், அதன் பலமான பிரீதியைக் காட்டுகிறது. நல்வினை - புண்ணியம்.

3. 'நா, நீர் அற்றிருக்கை' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, நா நீர் அற்றிருக்கை பாபத்தின் பலமானால், நாக்கில் நீர் வருதல் புண்ணியத்தின் பலமாகையாலே, அவனுடைய கிருபையாகிற புண்ணியத்தாலே நாக்கிலே நீர் உண்டாய்த் திருநாமம் சொல்ல வல்லோமே என்கிறாள் என்பது.

சொல்லவல்லோமே என்கிறாள்' என்று **அம்மங்கி அம்மாள்** வாக்கியார்த்தமாக அருளிச்செய்வர்" என்று அருளிச்செய்வர். தொல்அருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம் - தன்னுடைய கண்ணழிவற்ற கிருபையை இவ்வுலகத்திலுள்ளாரும் நித்தியவிபூதியிலுள்ளாரும் தொழ நின்ற மஹாநகரம். நல்அருள் ஆயிரவர் - மக்களைக் காப்பாற்றுவதில் [1] எம்பெருமானைக்காட்டிலும் அநுக்கிரஹ சீலர்களாயிருக்குமவர்கள். நலன் ஏந்தும் திருவல்லவாழ் - [2] அவனுடைய கல்யாண குணங்களைக் கொண்டாடி வசிக்கின்ற ஊர் என்னுதல். அன்றிக்கே, அன்பாலே மங்களாசாசனம்செய்து வசித்துக்கொண்டிருக்கும் ஊர் என்னுதல். நல் அருள் நம்பெருமான் - நல்ல அருளையுடையனும் நமக்கு ஸ்வாமியாயிருக்குமவன். [3] நல்லருளாவது, வாத்சல்யம். வாத்சல்ய ஸ்வாமித்வங்கள், நாராயண சப்தார்த்தமாகும். அர்த்தத்தை அருளிச்செய்து பின்பு சப்தத்தை அருளிச்செய்கிறார்: நாராயணன் நாமங்களே - [4] நாராயண சப்தம், தர்மி நிர்த்தேசம். இந்த ஸ்வபாவங்க

---

1. "நல்லருள்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எம்பெருமானைக் காட்டிலும்' என்று தொடங்கி.

2. "நலன் ஏந்தும்" என்பதற்கு இரண்டு பொருள்: ஒன்று, அவனுடைய கல்யாண குணங்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற ஊர் என்பது. பிரேமத்தாலே அவனுடைய ரக்ஷகத்வத்தைத் தாங்கள் ஏறிட்டுக் கொண்டு அவனுக்கு மங்களாசாசனம் செய்கிற ஊர் என்பது மற்றொரு பொருள். நலன் - அன்பு. இவ்விரு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கியும், 'அன்பாலே' என்று தொடங்கியும்.

3. நாராயண சப்தத்தைச் சொல்லும்போது முன்பு பொருளைச் சொல்லிக் கொண்டு பின்பு மந்திரத்தைச் சொல்லுதல் என்ற நிர்ப்பந்தமுண்டாகையாலே, நாராயண சப்தார்த்தமாக யோஜிக்கிறார் 'நல்லருளாவது' என்று தொடங்கி. முதல்பத்து, 73-ஆம் பக்கம் காண்க. அன்மொழித் தொகைப் பொருளில், வாத்ஸல்யம். வேற்றுமைத்தொகைப் பொருளில், ஸ்வாமித்வம்.

4 நாராயண சப்தமும் சர்வேசுவரனுடைய திருநாமம் அன்றே, இதனைப் பிரதானமாகச் சொல்லுவான் என்? என்ன, 'நாராயண சப்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'தர்மிநிர்த்தேசம்' என்றது, ஸ்வரூப நிரூபகம் என்றபடி. 'இந்த ஸ்வபாவங்களாலே' என்றது, வாத்ஸல்ய ஸ்வாமித்வங்களாலே என்றபடி. குணங்களில் வைத்துக்கொண்டு ஞான ஆனந்த அமலத்வ ஆதி குணங்கள் நிரூபகங்களாய், அல்லாத குணங்கள் இவற்றாலே நிரூபிதமான ஸ்வரூபத்திற்கு விசேஷணமாஞற்போலே, திருநாமங்களிலும் நாராயணசப்தம் ஸ்வரூப நிரூபகமாய், அல்லாத திருப்பெயர்கள் இந்தத் திருநாமத்தாலே நிரூபிதமான வஸ்துக்கு உண்டான குணங்களுக்கும் செயல்களுக்கும் வாசகமாயிருக்கும் என்றபடி.

ளாலே நிரூபிதமான வஸ்துவுக்கு உண்டான குணங்களுக்கும் செயல்களுக்கும் வாசகங்கள், மற்றைத் திருநாமங்கள். (10)

## 541.

நாமங்க ளாயிர மூடைய நம்பெரு மானடிமேல்
சேமங்கொள் தென்குரு கூர்ச்சட கோபன் தெரிந்துரைத்த
நாமங்க ளாயிரத் துள்இவை பத்தும் திருவல்லவாழ்
சேமங்கொள் தென்னகர்மேல் செப்புவார் சிறந்தார் பிறந்தே.

**பொ - ரை:**—ஆயிரம் திருநாமங்களையுடைய நம்பெருமானது திருவடிகளையே தமக்குக் காவலாகப் பற்றின தென்குருகூர்ச் சடகோபராலே ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட திருநாமங்களைப் போன்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இவைபத்துத் திருப்பாசுரங்களும், சேமத்தைக் கொண்டிருக்கிற அழகிய திருவல்லவாழ் என்னும் திவ்யதேசத்தின் மேலனவாம்; இவற்றைச் சொன்னவர்கள் இந்தச் சரீரசம்பந்தத்தோடே இருந்தும் பகவானுடைய அநுபமாகிற சிறப்பினையுடையவராவர்கள் என்றவாறு.

**வி - கு:**—அடிமேல் - திருவடிகளை. திருவடிகளிலே என்னலுமாம். சேமம் - காவல். தென் - அழகு. தெற்குத் திசையுமாம். செப்புவார் பிறந்தே சிறந்தார் என மாறுக. செப்புவார்: வினையாலணையும் பெயர்.

**ஈடு:**—முடிவில், [1]இத்திருவாய்மொழியைக் கற்கவல்லவர்கள் சம்சாரத்தில் இருந்துவைத்தே பகவானுடைய குணநுபவத்தாலே எல்லாரிலும் சிறந்தவர்கள் என்கிறார்.

நாமங்கள் ஆயிரமுடைய நம்பெருமான்-[2]"ஸ்வயம் பிரகாசனை சர்வேசுவரன் ஆயிரம் திருப்பெயர்களையுடையவனுயிருக்கிறான்" என்கிறபடியே, குணங்களுக்கும் செயல்களுக்கும் வாசகமான திருப்பெயர்களையுடையவனுகையாலே சர்வேசுவரனுகப் பிரசித்தனனவன். [3]'நம்' என்பது, பிரசித்தியைக்

---

1. "இவை பத்தும் செப்புவார் சிறந்தார் பிறந்தே" என்றதனைக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஸஹஸ்ரபாஹுஃ ஸர்வஜ்ஞோ தேவோ ராமஸஹஸ்ரவாந்" என்பது, பாரதம்.

3. "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்"

என்பது, உபதேச ரத்தினமாலை.

'ந என்பது, சிறப்புப் பொருள் உணர்த்தும்; நக்கீரன், நச்செள்ளை என்றாற்போல' என்பர் நச்சினார்க்கினியர்.

காட்டும். பெருமான் - சர்வேசுவரன். அடிமேல் சேமம்கொள் தென்குருகூர்ச் சடகோபன் - புறம்புள்ள காற்கட்டுக்களை விட்டு, அவன் திருவடிகளையே தமக்கு ரக்ஷகமாகப் பற்றின ஆழ்வார். தெரிந்து உரைத்த நாமங்கள் ஆயிரத்துள் இவை பத்தும் - அவனுடைய திருநாமங்கள்போலே, குணங்களையும் செயல்களையும் தெரிவிக்கின்ற ஆயிரத்திலும் ஆய்ந்து உரைத்த. [1] ஆயிரம் திருப்பெயர்களைச் சொன்னால் அவன் குணங்கள் தோற்றுமாறு போலேயன்றே, இவற்றிலும் அவன் குணங்களும் செயல்களும் தோற்றும்படி. தென்நகர் - அழகிய நகரி. சிறந்தார் பிறந்தே - [2] ஒருவனுக்குப் பிறக்கை போக்கித் தாழ்ச்சி இன்றிக்கே இருக்க, அவனுக்குப் பலபிறப்பாய் ஒளிவருமாறு போலே, இவர்களும் இங்கே பகவானுடைய குணங்களை அநுபவம் பண்ணுகையாலே சீரியர்கள். [3] "சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியர்" என்னக்கடவதன்றே. [4] இந்தப் பத்தினைக் கற்கவல்லவர்கள், என்னைப் போலே அவன் இருந்த தேசத்திலே போகப் புக்கு, பலக் குறைவின் காரணமாக நடுவழியிலே விழுந்து நோவுபடாதே, உகந்தருளின தேசத்திலே புக்கு அநுபவிக்கப்பெறுவர்கள். [5] இவர்களுடைய ஜன்மங்கள் கர்மங் காரணமாக இருக்கச்

---

1. 'ஆயிரம் பாசுரங்களில் இவைபத்து' என்னுமல், "நாமங்களாயிரத்துள் இவைபத்தும்" என்பான் என்? என்ன, "நாமங்களாயிரமுடைய" என்றதனைத் திருவுளத்தே கொண்டு, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆயிரம் திருப்பெயர்களை' என்று தொடங்கி. தோற்றும்படி ஆகையாலே திருநாமங்களான ஆயிரம் என்னக் குறை இல்லை என்பது எஞ்சி நிற்கிறது.

2. பிறந்தே சிறந்தார் என்று கூட்டுக. பிறவியீனையுடையராயிருந்தும் சிலாக்கியராயிருப்பர். பிறவியில் சிலாக்கியதை கூடாது என்னுமதனையும்; இத்தகைய பிறவியீனையுடையராயிருந்தும், சர்வேசுவரனுக்குப் பிறக்கப் பிறக்கக் குணங்கள் புகர் பெற்று வருமாறு போன்று, இவர்களும் பகவதநுபவம் பண்ணுகையாலே சிலாக்கியராயிருப்பர்கள் என்னுமதனையும் அருளிச்செய்கிறார் 'ஒருவனுக்கு' என்று தொடங்கி. ஒருவனுக்கு - சம்சாரி சேதனனுக்கு. பிறக்கை போக்கி - பிறக்கையைப் பற்ற; என்றது, பிறவியைக் காட்டிலும், வேறு ஒன்று தாழ்ச்சியின்றிக்கே இருக்கையைத் தெரிவித்தபடி.

3. 'இங்கே பகவதநுபவம் பண்ணுகையாலே அவர்கள் சீரியர்' என்ற தற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சீதனையே' என்று. இது, திருவிருத்தம். 79.

4. இத் திருவாய்மொழியின் அர்த்தாநுசுணமாகப் பலம் அருளிச்செய்கிறார் 'இந்தப் பத்தினை' என்று தொடங்கி.

5. பகவானுடைய அவதாரத்திற்கு இச்சை காரணமாகையாலே, அவனுக்கு ஒளிவரக்கூடும், கர்மங் காரணமாகப் பிறக்கின்ற இவர்கள் சிலாக்கியராகக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்களுடைய' என்று தொடங்கி.

செய்தே அவனுக்கு உறுப்பாகையாலே முக்தர்களுடைய சரீரத்தைக் காட்டிலும் சிலாக்கியம். [1] அடியார்களின்பொருட்டு அவதரித்தபகவானுடைய அவதாரம்போலே சிலாக்கியம்.(11)

---

## திருவாய்மொழி நூற்றந்தாதி

மாநலத்தால் மாறன் திருவல்ல வாழ்புகப்போய்த்
தானிலத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில்—மேல்நலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன சொலவுகற்பார் தங்களுக்குப்
பின்பிறக்க வேண்டா பிற.

---

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. கூறிய பொருளைத் திருஷ்டாந்தத்தைக் காட்டி உறுதிப்படுத்துகிறார் 'அடியார்களின்' என்று தொடங்கி.

# பத்தாந் திருவாய்மொழி — "பிறந்தவாறும்"

## முன்னுரை

---

ஈடு:—[1] 'திருவல்லவாழ் என்னும் திவ்வியதேசத்திலே சென்று புக்கு அங்கு நிற்கின்றவனேடே பரிமாறவேண்டும்' என்று மநோரதித்துக் கொண்டு போக, கால் நடைதாராமல் நடுவழியிலே விழுந்து கிடந்து கூப்பிட்டார்; இனி, "இவ்வளவில் குணநுபவம் பண்ணியாகிலும் தரிப்போம்" என்று பார்க்க, அதுதானும் பேற்றினைப் போன்று அரிது என்னலாம்படி சைதில்யத்தை விளைப்பிக்க; எல்லா அவஸ்தைகளிலும், உன்னைப் பிரிந்து நின்றாலும் தரித்து நின்று குணநுபவம் பண்ணவல்லேனும்படி செய்தருளவேணும் என்று திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

[2] இருடிகளுக்குண்டான சம்சார பயத்தை ஒத்ததாயிற்று ஆழ்வார்களுக்குப் பகவானைப் பிரிந்த விரஹத்தால் வரும் கிலேசம்; [3] அவர்கள், தங்கள்தங்கள் பேற்றிற்குத் தாங்கள் தாங்கள் சிலமுயற்சிகள் செய்யாநிற்பர்கள், இவர்கள் அத்தலையாலே பேறுகுமளவும் அசோக வனத்திலே பிராட்டியைப்

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, மேல்திருவாய்மொழியிலே கூறியதை அநுவாதம் செய்கிறார் 'திருவல்லவாழ்' என்று தொடங்கி, 'கிடந்து கூப்பிட்டார்' என்றது முடிய. 'இனி, இவ்வளவில்' என்றது முதல், 'திருவடிகளிலே சரணம் புகுகிறார்' என்றது முடிய, கூரத்தாழ்வானுடைய நிர்வாஹத்தைச் சுருங்க அருளிச்செய்கிறார். 'குணநுபவம் பண்ணியாகிலும்' என்ற இவ்விடத்திலே "கோவிந்தன் குணம் பாடி....ஆவி காத்திருப்பேனே" என்னும் நாய்ச்சியார் திருமொழி அநுசந்தேயம். 8. 3.

2. மற்றும் பகவத் விஷயத்தில் கைவைத்திருப்பார் பலரும் உளரே? அவர்களுக்கு இவ்வாற்றுமை காண்கின்றிலோமே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இருடிகளுக்குண்டான' என்று தொடங்கி. இதனால், இருடிகளுக்குச் சம்சார பயமாத்திரமொழிய, பகவானைப் பிரிந்த விரஹத்தால் வரும் கிலேசம் இல்லை என்றபடி.

3. இருவரும் பகவத் விஷயத்திலே சேர்ந்திருக்க, அவர்களுக்கு இல்லாமற் போவான் என்? இவர்களுக்கு உண்டாவான் என்? என்ற சங்கையிலே, இரண்டற்கும் காரணத்தை அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, இருடிகளுடையவும் ஆழ்வார்களுடையவும் பிரதிபத்தி சரீரத்தை அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

போன்று துடியாகிற்பர்கள்; [1] அவர்களுக்குத் தங்கள் தலையிலேயும் சில கிடக்கையாலே விளம்பம் பொறுக்கலாம், இவர்களுக்கு அங்ஙன் சொல்லலாவது ஒன்று இல்லையாகையாலே கிடந்து அலமாப்பார்கள். [2] "அவன் அடியாலே நம் பேறு" என்றிருக்குமவர்களுக்கு ஒரு கண்ணழிவு இல்லையே சொல்லலாவது. [3] "இரகு வம்சத்தில் அவதரித்தவரே! உம்மை நீங்கினால் சீதா பிராட்டி உயிர் வாழாததுபோன்று, நானும் உயிர் வாழ மாட்டேன்" என்கிறபடியே, லாபாலாபங்களில் பிராட்டியையும் தம்மையும் ஒருதன்மையராகச் சொன்னானன்றே இளையபெருமாள். [4] "சுவாமியே! சிறந்த பிரீதியானது எப்பொழுதும் தேவரீரிடத்திலேயே நிலைத்துவிட்டது, பக்தியும் நியதமாக இருக்கிறது, என் எண்ணமும் வேறிடத்தில் எனக்குச் செல்வது இல்லை" என்று, திருவடி ஸ்ரீராமாவதாரம் ஒன்றிலும் சக்தனையிருக்குமாறுபோன்று, இவர் எல்லா அவதாரங்களிலும்

---

1. 'தங்கள் முயற்சியாலே பேறு' என்றிருத்தல் இருடிகளுடைய பிரதிபத்தி சரீரமாகையாலே, 'நாம் செய்யும் முயற்சி முடிந்து கிரமத்திலே பலிக்கவேண்டாவோ' என்று அவர்களுக்கு விரஹம் பொறுக்கலாயிருக்கும் என்றும், ஆழ்வார்களுக்கு அவர்களைப்போன்று தங்கள் தலைகளிலேயும் சில உண்டாய், அது பக்குவமடைந்த பின்னர் பெறவேண்டும் என்னுமதில்லாமையாலே விரஹம் பொறுக்கமாட்டார்கள் என்றும் அருளிச்செய்கிறார் 'அவர்களுக்கு' என்று தொடங்கி.

2. இவர்களுக்கு முயற்சியிலேலே பலிக்கவேண்டுவது ஒன்று இன்றிக்கே இருப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் அடியாலே' என்று தொடங்கி.

3. நன்று; 'அசோகவனத்தில் பிராட்டியைப் போன்று' என்று பிராட்டியோடு ஒப்புச்சொல்லலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இரகுவம்சத்தில்' என்று தொடங்கி.

"நச ஸீதா த்வயா ஹீநா நச அஹமபி ராகவ
முஹூர்த்தமபி ஜீவாவஃ ஜலாந்மத்ஸ்யாவிவ உத்ருதௌ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 53. 31.

4. இத்திருவாய்மொழியில் கிருஷ்ணவதாரம் சொல்லாநிற்க, மற்றை அவதாரங்களேயும் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சுவாமியே!' என்று தொடங்கி.

"ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டிதஃ
பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி"

என்பது, ஸ்ரீராமா. உத். 40: 16.

எல்லாச் செயல்களிலும் அகப்பட்டிருப்பார் ஒருவர் [1] அர்ச்சாவதாரத்தில் தம் அபேக்ஷிதம் பெற ஆசைப்பட்டவர், அது கிடையாமையாலே அவதாரங்களிலே போகிறார்; 'விபவம் உள்ள இடத்தே சென்றால் சிறிது அபேக்ஷிதம் கிடைக்கும்' என்று இருப்பரே. நன்று; அவதாரங்களிலே இழந்தார்க்கும் [2] இழவு தீர்க்கிற இடம் அர்ச்சாவதாரமாயிருக்க, இதனைவிட்டு, 'பெறலாம்' என்று அவதாரமுள்ள இடம் தேடிப் போகையாவது என்? என்னில், அர்ச்சாவதாரத்தில், கண்களால் காண முடியாதவனை தன்னை, சம்சாரிகள் கண்களுக்கு விஷயமாக்குகையும் விரும்பினவை யனைத்தையும் கொடுக்கையும் ஒழிய, குளிர நோக்குதல், வினவுதல், அணைத்தல் செய்யக்கடவோம் அல்லோம் என்று சங்கல்பித்திருக்கையாலே, [3] 'சத்திய சங்கல்பனுடைய சங்கல்பம் குலையும்படி அதிநிர்ப்பந்தம் செய்யக்கடவோமல்லோம்' என்று, [4] "அந்தக் கிருஷ்ணனும் தவ ஜம் வஜ்ரம் தாமரை என்னும் இந்த ரேகைகளை அடையாளமாகவுடைய கைகளாலே நன்றாகத்தொட்டு இழுத்து

---

1. மேல் மூன்று திருவாய்மொழிகளிலும் அர்ச்சாவதாரத்தை அருளிச்செய்தவர், அதனை விட்டு, இங்கே அவதாரங்களில் வருவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அர்ச்சாவதாரத்தில்' என்று தொடங்கி. தம் அபேக்ஷிதமாவன, குளிரநோக்குதல், அணைத்தல் முதலானவை. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'விபவம்' என்று தொடங்கி.

2. 'இழவு தீர்க்கிற இடம் ... இருக்க.' என்றது, அவதாரங்களில் பிற்பட்டார்க்கும் அநுபவிக்கலாம்படி எப்பொழுதும் அண்மையிலிருப்பவனாயிருக்க என்றபடி.

3. 'சத்திய சங்கல்பனுடைய சங்கல்பம் குலையும்படி' என்ற இவ்விடத்திலே, "கூரத்தாழ்வான் ஆர்த்தராய்ச் சரணம்புக, பெருமாளும் இரங்கி 'மூன்றுநாளைக்கு வீடு தந்தோம்' என்ன, 'ஆழ்வான் திருமதிளுக்குப் புறம்பாளர்' என்னக் கேட்டு உடையவர் ஓடிச்சென்று 'ஆழ்வான், நாம் இங்கே இருக்க உமக்குப் பரமபதத்தே போகவேண்டிற்றே' என்ன, 'அடியேன் சம்சாரத்திலே அடிக்கொதிப்பாலே மறந்தேன்' என்ன, 'ஆகில், நாமும் சரணம்புக்கால் இன்னம் சிலநாள் ஆழ்வானை இங்கே வைக்க இரங்குவர்' என்று திருவாசலளவும் சென்று, 'சத்திய சங்கல்பனுடைய சங்கல்பத்தைக் குலைக்க வேண்டா' என்று மீண்டு எழுந்தருளினார்" என்ற சரிதம் அநுசந்திக்கத்தகும். என்றது, நான் ஒருவன் தோன்றிப் பெருமானை இரண்டு வார்த்தை சொல்லுவாராகச் செய்யலாமோ என்றபடி. 'அதி நிர்ப்பந்தம் செய்யக்கடவோம் அல்லோம்' என்கையாலே, நிர்ப்பந்தித்தால் செய்வர் என்பது கருத்து.

4. "ஸோப்யேநம் த்வஜ வஜ்ராப்ஜ க்ருத சிஹ்நேந பாணிநா
ஸம்ஸ்ப்ருஶ்ய ஆக்ருஷ்யச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே"

என்பது, விஷ்ணுபுரா. 5. 18: 2.

அன்போடு கெட்டியாக ஆலிங்கனம்செய்து கொண்டார்"என்னும் கிருஷ்ணவதாரத்திலே போந்தார் அண்மைக் காலமாகையாலே.

[1]'இவ்வாழ்வார்கள் கிருஷ்ணவதாரம் என்றவாறே போரமண்டியிருப்பர்கள், இதற்குக் காரணம் என்?' என்று **பட்டரைக்** கேட்க, 'ஒருவனுக்கு உண்டான துக்கம் சிலநாட்கள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப்போகாதே அன்றே; அப்படியே, அல்லாத அவதாரங்களைப்போல் அன்றிக்கே, சமகாலமாகையாலே, **'ஒரு செவ்வாய்க்கிழமை மூற்படப் பெற்றிலோம், பாவியேம்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே'** என்னும் இழவாலே வயிறு எரிதலாலேயாயிருக்கும்' என்று அருளிச்செய்தார். [2] இனித்தான், இராமாவதாரத்தில், தமப்பன் சம்பரனைக் கொன்றவனுய் ஏகவீரனுய் இருப்பான் ஒருவன்; பிள்ளைகள்தாம் ஆண்புலிகள், குடிதானே வன்னியம் அறுத்திருப்பதொருகுடி; இவை எல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாடுகளையெல்லாம் ஒருமார்வு எழுத்தாக்கிக்கொண்டிருப்பர்கள், ஆகையால் எதிரிகள் என்கிற சொல்லும் இல்லை; இங்கு அங்ஙன் அன்றிக்கே, தமப்பன் ஒருசாது விருத்தன்; பிறந்தது கம்சன் சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவனகத்து அருகே; ஸ்ரீபிருந்தாவனத்திலே எழும் பூண்டுகளகப்பட அசுரமயமாயிருக்கும், ரக்ஷகரானவர்கள் ஓர் அடி தாழ நிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று இவன்தன் படிகள் இருப்பன, அப்படியானால் வயிறு எரியாதே செய்வது என்? இவர்கள்; [3] அக்காலத்திலே உணர்ந்து நோக்கப் பெற்றிலர்கள், அவ் விழவுக்கு இன்று

---

1. அண்மைக் காலமாகையாலே என்றதனைப் பெரியோர்களுடைய வார்த்தைகள் மூலமாக விவரிக்கிறார் 'இவ்வாழ்வார்கள்' என்று தொடங்கி. 'பட்டரைக் கேட்க' என்றது, பட்டரை நஞ்சீயர் கேட்க என்றபடி. செவ்வாய்க்கிழமை - செவ்வாயினுடைய சாரம்.

2. அண்மைக்காலமாத்திர மன்றிக்கே, பரியவேண்டும் காரணங்கள் இருந்தனவாகையாலும் கிருஷ்ணவதாரத்திலே போந்தார்கள் என்று அருளிச்செய்கிறார் 'இனித்தான்' என்று தொடங்கி. வன்னியம் - குறும்பரான பகைவர்கள். 'ஒரு மார்வெழுத்தாக்கிக் கொண்டிருப்பர்கள்' என்றது, எல்லாரையும் அடிமையாக்கிக் கொண்டிருப்பார்கள் என்றபடி. 'ஒரு மார்வெழுத்து' என்றது, மார்வெல்லாம் ஓரேழுத்தாக என்றபடி. 'ரக்ஷகர்' என்றது, நம்பி மூத்தபிரானை.

3. இவையெல்லாம் மூற்காலத்தில் நடந்தனவேயன்றே, அவற்றிற்கு இப்போது சோவுபடுகிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அக்காலத்திலே' என்று தொடங்கி.

இருந்து நோவுபடுகிறார்கள். [1] அவர்களிலே ஒருவரான இவர் சொல்லுகிறபடியன்றே இது, 'தெரிந்துணர்வு' என்ற திருப் பாசுரம்; [2] மாயாமிருகத்தின் பின்னேசென்று இளைத்து மீண்டு எழுந்தருளினபோது அடிசுட்டுப் பொறுக்கமாட்டாமையாலே தழைகளை முறித்துப்பொகட்டு அவற்றிலே நின்று ஆறி எழுந் தருளினர் என்று கேட்டு, பாவியேன்! அன்று உதவி அத் திருவடிகளிலே என் தலையை மடுக்கப்பெற்றிலேன், ஒருபயனு மின்றியே கழிந்தனவேயன்றே அநாதிகாலம் எல்லாம் என்று நொந்தாரன்றே. இப்படியேயன்றே கழிந்தனவற்றிற்கு இவர்கள் வயிறு எரியும்படி. [3] "திருநீல மணியார் மேனியோடு என்மனம் சூழ வருவாரே' என்றும் வயிறு பிடித்தாரன்றே இவர்.

[4] "இவர் அவனுடைய அவதாரங்களையும் உலகைப் படைத் தல் முதலான வியாபாரங்களையும், "தாயர் மகிழ ஒன்னார் தளரத் தளர் நடை நடந்த" என்கிறபடியே, அடியார்களை வாழ்

---

1. முன் நடந்தனவற்றைக் குறித்து அப்படி நோவு பட்டார்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்களிலே' என்று தொடங்கி.

தெரிந்துணர்வொன் றின்மையால் தீவினையேன் வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாள்க ளெல்லாம்—கரந்துருவின்
அம்மானே அங்ஙான்று பின்தொடர்ந்த ஆழியங்கை
அம்மானே எத்தாது அயர்த்து.

என்பது, பெரிய திருவந்தாதி. 82.

2. பாசுரத்திற்கு பாவம், அருளிச்செய்கிறார் 'மாயாமிருகத்தின்' என்று தொடங்கி. மாயாமிருகம் - மாரீசனுகிய மாயமான்.

பூலையாம் பிறவி பிறந்தென் செய்தோம் பொன்னி பொன்கொழிக்கும்
அலையார் திருவரங்கத் தெம்பிரான் நம தன்னையொடும்
தொலையாத கானம் கடந்த அந்நாள் தடந்தோறும் புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே கழல் தீண்டுகைக்கே.

என்னும் திருப்பாசுரம் ஒருபுடை ஒப்பு நோக்கலாகும்.

3. "தணியா வெந்நோய் உலகில் தவிர்ப்பான் திருநீல
மணியார் மேனியோடு என்மனம்சூழ வருவாரே."

என்பது, திருவாய். 8. 3: 6.

4. பிராசங்கிகங்களை (இடைப்பிறவால்) அருளிச்செய்து, இனி, இத் திருவாய்மொழிக்குள்ள மூன்றுவகையான நிர்வாகங்களை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, முந்தற இத்திருவாய்மொழியிற் கூறப்படும் பொருள்களை யெல்லாம் திரட்டி, ஆழ்வான் நிர்வாகத்தை அருளிச்செய்கிறார் 'இவர் அவனுடைய' என்று தொடங்கி. இத்திருவாய்மொழியில் வருகின்ற "தொப்

விக்கவும், பகைவர்களை அழியச்செய்யவும் அடியிட்டு அப்படி வளர்ந்தருளின கிருஷ்ணாவதாரத்தையும் அநுசந்தித்து மிகவும் சிதிலரான இவர்; தரித்து நின்று உன்னை அநுசந்திக்க வல்லேனும்படி செய்தருளவேணும் என்று அவனைச் சரணம் புகுகிறார்" என்று [1]ஆழ்வான் பணிக்கும். அன்றியே, 'பிரிந் திருக்கும் சமயத்திலே உன்குணங்கள் மனத்திலே நிலைபெற்று மிகவும் நலிய, அதனாலே நெருக்குண்டு நோவுபடுகை தவிர்ந்து, உன்திருவடிகளிலே வந்து சேர்ந்து உன்னைக்கிட்டி அநுபவிக் கும்படி செய்தருளவேண்டுமென்று அவனைக் குறித்து அரு ளிச்செய்கிறார்' என்று எம்பார் அருளிச்செய்வர். அங்ஙனம் அன்றிக்கே, "'சர்வேசுவரன் கிருஷ்ணனுய் வந்து திருவ வதரித்துத் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான்' என்று கேட்டு, 'அங்கே மநோரதித்தபடியே நாம் கலந்து பரி மாறலாம்' என்று தெற்குத் திருவாசலாலே சென்றுபுக, 'இப்போது இங்ஙனே வடக்குத் திருவாசலாலே புறப்பட்டுத் தன்னுடைச் சோதியேற எழுந்தருளினன்' என்று கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறார்" என்று பிள்ளான் பணிப்பர் என்று அருளிச்செய்வர்.

---

## 542.

**பிறந்த வாறும் வளர்ந்த வாறும் பேரிய பாரதம் கைசெய்து ஐவர்க்குத்**
**திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும்**
**நிறந்த னூடுபுக்கென தாவியை நின்று நின்று ருக்கிஉண் கின்றஇச்**
**சிறந்த வான்சுடரே! உனைஎன்றுகொல் சேர்வதுவே?**

**பொ - ரை:**—பிறந்த விதமும் வளர்ந்த விதமும் மஹாபாரத யுத்தத்திலே அணிகளை வகுத்துப் பாண்டவர்கட்குப் பலதிறங்களையும்

---

பூழ்ச் செந்தாமரைமேல்" என்பது போன்றவைகளைக் கடாகூத்து 'உலகைப் படைத்தல்' என்று தொடங்கியும், "வதுவை வார்த்தையுள்" என்பது போன்றவைகளைக் கடாகூத்து 'அடியார்களை' என்று தொடங்கியும், "நாகணைமிசை" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றிச் 'சரணம் புகுகிறார்' என்றும் அருளிச்செய்கிறார்.

"தாயர்மகிழ" என்பது, பெரியாழ்வார் திருமொழி. 1. 7: 11.

1. "நின்று நின்றுநினைகின்றேன்" என்பது போன்றவைகளைக் கடா கூத்து எழுகின்றது ஆழ்வான் நிர்வாகம். எம்பார் நிர்வாஹம், "என் கண் கட்குத் திண்கொள்ள" என்பது போன்றவைகளிலே நோக்காக எழுந்தது. "செய்துபோன மாயங்களும்" என்றதிலே நோக்கு, பிள்ளான் நிர்வாஹம்.

காட்டிக் காரியங்களைச்செய்து தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளிய ஆச்சரியமான காரியங்களும் மார்பினுள்ளே நுழைந்து என்னுடைய உயிரை உருக்கி நின்று நின்று உண்கின்றன; இந்தச் சிறந்த வான் சுடரே! உன்னையடைவது என்றுகொல்?

**வி - சு:**—கைசெய்து - அணிவகுத்து. காட்டியிட்டு: ஒருசொல். ஆறும் ஆறும் மாயங்களும் புக்கு நின்று நின்று உருக்கி உண்கின்ற என்க. நின்றுநின்று: அடுக்குத்தொடர். உண்கின்ற: முற்று. உண்கின்ற சுடரே என எச்சமாகக்கோடலுமாம்.

இத்திருவாய்மொழி ஆசிரியத்துறை.

**ஈடு:**—முதற்பாட்டு. [1] இத்திருவாய்மொழியில் சொல்லப் படுகின்ற அர்த்தத்தைச் சுருக்கமாக அருளிச்செய்யாநின்று கொண்டு; உன்னுடைய அவதாரம் முதலானவைகள் என்னை மர்மத்திலே தொட்டு நைவிக்கின்றன, இந்த நையும் தன்மை நீங்கி உன்னைத் தரித்து நின்று நான் அநுசந்திப்பது எப் போது? என்கிறார்.

பிறந்தவாறும் - [2] தாய்தந்தையர்கட்குக் காற்கட்டு அறும் படியன்றே பிறந்தது. [3] தன்னைப் பெற்றவர்களுடைய பந் தத்தை அறுத்துக்கொண்டு வந்து பிறப்பாரும் உளரோ. "இவன் அன்றே நமக்குக் காற்கட்டு ஆனன்' என்றிருந்தார் கள் அவர்கள்; அது பொறுக்கமாட்டாமல், 'உங்களுடைய கட்டு நான் பொறுக்கமாட்டேன்' என்று விட்டான். [5] தந்தை காலில் விலங்கு அற அன்றே வந்து தோன்றிற்று, பிறக்கிற போதே தாய்தந்தையர்கள் காலில் கிரந்தியை அறுத்துக்

---

1. பாசுர முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேன்மை தோற்ற வந்து பிறந்தான் என்கிறார் 'தாய் தந்தையர்கள்' என்று தொடங்கி.

3. மேன்மை தோற்ற வந்து பிறக்கையாலே ஈடுபாட்டுக்குக் காரணமாக அருளிச்செய்கிறார் 'தன்னைப்பெற்றவர்களுடைய' என்று தொடங்கி. இது, "பிறந்தவாறும்" என்கிறவருடைய மனோபாவம். என்றது, எல்லாரும் தங்களைப் பெற்றவர்களுக்குப் பாசத்தை யுண்டாக்குவார்களே ஒழிய, பாசத்தை அறுத்துக்கொண்டு வந்து பிறப்பார் உளரோ என்றபடி.

4. 'தாய் தந்தையர்கட்கு' என்று தொடங்கிய மூன்றைய வாக்கி யத்தை விவரணம் செய்கிறார் 'இவன் அன்றே' என்று தொடங்கி.

5. தாய் தந்தையர்களுடைய காற்கட்டு அறும்படி வந்து தோன்றி னானே? என்ன, 'தந்தை காலில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். இது, பெரிய திருமொழி. 8. 5: 1. எடுத்த பாசுரத்திற்கு ரசோக்தியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'பிறக்கிற போதே' என்று தொடங்கி. கிரந்தி - முடிச்சு.

கொண்டு காணும் பிறந்தது. பிறந்தவாறும் - [1]பிள்ளாய்! பிறக்கிறபோதும் ஒருவிளக்கு எரிந்தால் ஆகாதோ, [2]தானே விளக்காக அன்றே பிறந்தது. [3]ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கன்றே. பிறந்தவாறும் - [4]கர்மங்கட்குக் கட்டுப்படாதவனை தான் கர்மங்கட்குக் கட்டுப்பட்டவரோடு ஒக்கப் பிறப்பது, பிறந்தால் அடியார்களைப் பாதுகாத்தலே தனக்குப் பிரயோஜனமாக இருப்பது, அவர்கள் ஆபத்துப் படுங்காலமே தனக்குப் பிறக்கைக்கும் காலமாவது, பிறவாதின்றால் தன் ஐசுவர்யத்தில் ஒன்றும் குறையாமற் பிறப்பது, பிரகிருதி சம்பந்தமில்லாத திருமேனியை இதர சஜாதீயமாக்காநிற்பது, தன் பிறப்பை அநுசந்தித்தாருடைய பிறவிகள் போகும்படியாக இருப்பது, இவையெல்லாவற்றையும் நினைக்கிறது. [5]'நமக்காக இவர்கள் பிணைபட்டுச் சிறையிருக்கும்படி இவர்களுக்கு இங்ஙனே பிறப்பதே!' என்று ஈடுபடாநிற்பனவான படிகளையெல்லாம் நினைக்கிறது. பிறந்தவாறும் - [6]"ஆவிர்பூதம் - தோன்றுதல்" என்றதனைக்கொண்டு, தோன்றினவாறும் என்னதொழிவான் என்? என்னில், சம்சாரிகள் பத்து மாதங்

---

1. நீர்மையும் தோற்றப் பிறந்தான் என்கிறார் 'பிள்ளாய்' என்று தொடங்கி. 'பிள்ளாய்' என்றது, வார்த்தைப்பாடு. ஈடுபாட்டிலே.

2. வேறு ஒரு விளக்கு இல்லையோ? என்ன, 'தானே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. அவன் விளக்கு என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆயர் குலத்தினில்' என்று தொடங்கி. இது, திருப்பாவை. பாசு. 5.

4. பிறந்ததும் என்னுமல், "ஆறும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கர்மங்கட்கு' என்று தொடங்கி.

5. தாய் தந்தையர்களுடைய காற்கட்டினைப் பொறுக்கமாட்டாமல் அவன் நெஞ்சு நொந்திருக்கும் பிரகாரத்தைக் காட்டுகிறார் 'நமக்காக' என்று தொடங்கி. இந்த வாக்கியத்தை, 'நான் பொறுக்கமாட்டேன் என்று விட்டான்'-என்று மேலே கூறிய வாக்கியத்திற்குப் பின்னே கூட்டிப் பொருள் முடிவு காணல் தகும்.

6. '"ஆவிர்பூதம்" என்றதனைக் கொண்டு' என்றது, 'ஆவிர்பூதம்' என்று மஹரிஷி சொன்னபோலே என்றபடி. (விஷ்ணுபுரா. 5 : 3.) 'தோற்றினவாறும் என்னுது ஒழிவான் என்?' என்றதன்பின், இல்லாத பிறவியை இட்டு குணத்தை அவன்மேல் ஏறிட்டுக் கூறலாமோ என்ற வாக்கியம் எஞ்சிநிற்கிறது. 'சம்சாரிகள்' என்று தொடங்கி, அதற்கு விடை அருளிச்செய்கிறார். மஹரிஷி, "ஆவிர்பூதம்" என்றது, அவதாரம் இச்சை காரணமாக என்கைக்காக; இவர், "பிறந்தவாறும்" என்றது, அவதாரத்தில் மெய்ப்பாட்டுக்காக என்க.

கள் கருவிலே தங்கியிருப்பார்களேயாகில் [1] "பிறகு பன்னிரண்டாவது மாதமான சித்திரை மாதத்தில் நவமி திதியில்" என்கிறபடியே, பன்னிரண்டு மாதங்கள் கர்ப்பத்திலே தங்கியிருக்கையாலும், அவளுக்கு மூலை சுரக்கையாலும், மூலை பெருவிடில் இவன்தான் நோவுபடுகையாலும், தன்னைக் கட்டவும் அடிக்கவுமாம்படி எளியனுக்கி வைக்கையாலும் பிறந்தவாறும் என்கிறார். [2] பகல்கண்ட குழியிலே இரவிலே விழுவாரைப்போன்று, பருவம் முற்றினவளவிலே "எத்திறம்" என்று மோஹித்து விழக்கடவ இவர், அதற்கும் அவ்வருகே சென்று இழிகிறரன்றே, கலக்கம் இருக்கிறபடி. **'எத்திறம்' என்று அங்கே ஆறு மாதங்களும், 'பிறந்தவாறும்' என்று இங்கே ஆறு மாதங்களும் மோஹித்துக் கிடந்தார் என்று பிரசித்தமன்றே!** [3] ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீராமபிராணுடைய பிரிவாலே மோஹித்துத் தறைப்பட்டுக் கிடக்க, தாய்மார் அடங்கலும் சுற்றும் பார்த்து நிற்க, "சத்ருக்நாழ்வான் செயலற்று நின்றான்" என்கிறபடியே, ஸ்ரீசத்ருக்நாழ்வான் கிட்டவுங்கூடப் பயப்பட்டுச் செயலற்றவனாய் நின்றானன்றே. [4] அப்படியே, நல்லார் நவில் குருகூரன்றே, உலகத்தில் அறிவுடையாரடங்கலும் திரண்டு இவர்படிகளைக்கண்டு அறிவுகெடும்படி அன்றே இவர் கலங்கிக் கிடந்த கிடை.

---

1. "ததஸ்ச த்வாதஸே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ" என்பது, ஸ்ரீராமா. பால. 18 : 8.

"பன்னிரு திங்கள் வயிற்றில்கொண்ட வப்பாங்கினுள்
என் இளங்கொங்கை அமுதமூட்டி எடுத்து யான்"

என்பது, பெரியாழ்வார் திருமொழி. 3. 2 : 8.

2. வளர்ந்தவாற்றிலே "எத்திறம்" என்று மோஹித்த இவர், அதற்கு அவ்வருகான பிறந்தவாற்றிலே போவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகல் கண்ட' என்று தொடங்கி. இப்படிச் சொல்லுகைக்கு இரண்டு இடங்களிலும் மோஹித்தாரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எத்திறம்' என்று தொடங்கி.

3. மோஹித்துக் கிடந்த தசையில் இவரை நோக்கினார் இன்னார் என்பதனைத் திருவுள்ளாந்தத்தோடு அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ பரதாழ்வான்' என்று தொடங்கி.

"ததவஸ்தம் து பரதம் ஶத்ருக்நஃ அநந்தரஸ்திதஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 87 : 4.

4, 'அப்படியே' என்றதனை, 'உலகத்தில் அறிவுடையார்' என்று பின்னே வருகின்ற வாக்கியத்தோடு கூட்டுக, "நல்லார் நவில்" என்பது, திருவிருத்தம்.

**வளர்ந்த வாறும்** - [1]வளர்ந்தபடியை அநுசந்தித்தால் பிறந்தவாற்றிலே கால்வாங்கி இளைப்பாற வேண்டும்படி மன்றே இருப்பது. பிறக்கிறபோது சிறைக்கூடத்திலே தான் பிறந்தால், வளருகிறபோது காட்டாரைப்போன்று வளரத் தான் பெற்றதோ. வளர்ந்தவாறும் - [2]பூதனை முதலாயினோர் கள் உயிர்கள் மாளவும், யசோதை முதலானவர்களுடைய நிநேகம் வளரவுமன்றே வளர்ந்தது. "தாயர் மகிழ ஒன்னூர் தளரத் தளர் நடை நடந்து" என்கிறபடியே, [3]மிடறு மெழு மெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப் போய்ப் படிறு பல செய்து இப்பாடி எங்கும் திரியஅன்றே அவர்கள் உகந்திருப் பது. வளர்ந்தவாறும் - [4]இவன் கால் நெடுக நெடுக, பகைவர் உடலும் மாண்டது, அநுகூலர் உடலும் மாண்டது; [5]"பொட் டத் துற்றி" என்றும், 'வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு' என்றும் அநுகூலர் உடல்அன்றே மாண் டது. இப்படிப் பகைவர் மண்ணுண்ணவும், தான் நெய்யுண்ண வும், அநுகூலர் கண்ணுண்ணவுமன்றே வளர்ந்தருளிற்று.

**பெரிய பாரதம்** - 'மஹா பாரதம்' என்றன்றே பிரசித்தி. **கைசெய்து** - கையும் அணியுமாக வகுக்கை தொடக்கமான

---

1. வளர்ந்தவாறு இருக்கும்படி பிறந்தவாற்றிலும் அதிகம் என்கிறார் 'வளர்ந்தபடியை' என்று தொடங்கி. வளர்ந்தபடியை நினைத்து ஈடுபடுகிற ஆழ்வாருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'பிறக்கிறபோது' என்று தொடங்கி.

2. வளர்ந்ததும் என்னுமல், "வளர்ந்தவாறும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பூதனை' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டு கிறார் 'தாயர்' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி. 1. 7: 11.

3. தீம்புகளாலே தாய்க்குச் நிநேகம் வளருமாற்றினைக் காட்டுகிறார் 'மிடறு மெழு' என்று தொடங்கி.

மிடறு மெழுமெழுத் தோட வெண்ணெய் விழுங்கிப்போய்ப்
படிறு பலசெய்து இப்பாடி யெங்கும் திரியாமே
கடிறு பலதிரி கானதரிடைக் கன்றின்பின்
இடற என்பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே!

என்பது, பெரியாழ்வார் திருமொழி.

4. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'இவன் கால்' என்று தொடங்கி. உடல் - சரீரமும், உற்பத்தியும், செல்வமும். மாண்டது-இறந்தது, மாட்சிமைப் பட்டது.

5. பிரதிகூலர் உடல் மாண்டதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பொட் டத்துற்றி' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி. 3. 5: 1.

"வெண்ணெய் விழுங்கி" என்பது, பெரியாழ்வார் திருமொழி. 2. 9: 1.

பூசல் உள்ளனவற்றையெல்லாம் நிஷேக்கிறது. ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டு - அறிவு பிறப்பதற்கு முன்பு சத்தையே பகைவர்கள் அழிவதற்கு உடலாயிற்று, [1]இருள் ஒளிகள் ஓர் இடத்தில் சேர்ந்திருத்தல் இல்லை அன்றே; பருவம் நிரம்பின பின்பு அநுகூலர்க்குக் கையாளானபடி. 'திறங்கள்' என்றது, தூதுசென்றும், தேரை ஓட்டியும், 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுத்தும், பகலை இரவாக்கியும், எதிர்கள் உயிர்நிலைகளைக் காட்டிக்கொடுக்கை தொடக்கமானவற்றையெல்லாம் சொல்லுகிறது. செய்து - இப்படிச்செய்து. போன மாயங்களும் - [2]அடியார்களைக் காப்பாற்றுவதற்காக வந்து பிறந்து அவர்களுடைய ஆபத்துக்களைப் போக்கி உபகரித்தால், 'இது நமக்காகச் செய்தானன்றே' என்று இருக்கையன்றிக்கே, இவன் தன்னைதே எதிரிடும்படியான சம்சாரத்திலே இராமல், ஓரவசரத்திலே இங்கு நின்றும்போன ஆச்சரியமான செயல்களும். என்றது, [3]"நீண்ட கண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணன், பூமியின் பாரத்தை நீக்கி உலகத்தையெல்லாம் மோஹிக்கச் செய்து மேலான இடமான தன் பரமபதத்தை அடைந்தார்" என்று, வந்து திருவவதாரம்செய்து, அநுகூலர் காரியங்கள் அடையத் தலைக்கட்டி, பிரிதிகூலரையடைய முட்கோலுக்கு இரையாக்கி, அனுகூலரையடையக் கண்களாலே விழுவிட்டு, இருதிறத்தாரையும் நோவுபடுத்தி, இங்கு நின்றும் போய்த் தப்பப் பெறுவதே! என்கிறது. "ஸ்வம் ஸ்தாநம் உத்தமம் - தன்னுடைய உத்தமமான ஸ்தானத்தை" என்கிறபடியே, இங்குள்ளாரடங்கலும் எதிரம்பு கோக்குமாறுபோலேயன்றே அங்குள்ளாரடங்கலும் எதிர்ஏற்கப் போனபடி. நிறந்தனூடு புக்கு-தோல்புரையே போமதன்று, மர்மத்திலே நலிகிறபடி.

---

1. சத்தை மாத்திரமே பிரதிகூலர் அழிவதற்குக் காரணம் ஆமோ? என்ன, 'இருள் ஒளிகள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. அவதரித்தது குணமாமே ஒழிய, போனது குணமாய் உருகுவதற்குக் காரணமாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடியார்களை' என்று தொடங்கி.

3. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நீண்டகண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணன்' என்று தொடங்கி.

"க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யாஃ ப்ருதுலோசநஃ
மோஹயித்வா ஜகத்ஸர்வம் கதஃஸ்வம் ஸ்தாநமுத்தமம்"

என்பது, பாரதம்.

என்னது ஆவியை - அல்லாதார் அடங்கலும் இவற்றைக் கேட்டு உண்டு உடுத்துக் காலம்போக்கித் திரியாநின்றார்களன்றே. ஆவியை நின்றுநின்று உருக்கி - [1]வெட்டமுடியாததும் எரிக்க முடியாததுமாயிருக்கிற ஆத்மாவை இடைவிடாதே நையும்படி செய்யாநின்ற. நின்றுநின்று உருக்கி உண்கின்ற - [2]அவை ஒருகால் போகச்செய்தேயும், இவை உருவநின்று நலியாநின்றன. இச் சிறந்த வான்சுடரே - தகுதியாய் அளவிடமுடியாததான இவ் வழகையுடையவனே! [3]அவன் பிறக்கப் பிறக்க வாயிற்று ஒளி மிக்குப் பொலிவது. [4]இறந்தகாலமாயிருக்கச்செய்தேயும், இவர்க்குச் சமகாலம்போலேயும் கண்களுக்கு விஷயமாயிருத்தலின், இச் சிறந்த' என்று சுட்டுகிறார். [5]வான்சுடர் இங்கே வந்த பின்பு சிறந்தது என்றுமாம். பிறந்தவாற்றலும், வளர்ந்தவாற்றலும், பெரியபாரதம் கைசெய்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களாலும், நிறந்தன் ஊடு புக்கு எனது ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற இச் சிறந்த வான்சுடரே! என்று, அவன் தனக்கு விசேடணமாக்குதல். உருக்கி உண்கின்ற என்று, குணபரமாக்குதல்; என்றது,' பிறந்தவாறு' என்று தொடங்கி, மாயங்களும் உருக்கி உண்கின்றன என்றபடி. இதுவே நிர்வஹித்துப் போருமது. உன்னை என்றுகொல் சேர்வதுவே - [6]நான் தரித்துநின்று அநுசந்திக்கவல்லேனும்படி செய்தருளவேண்டும் என்கிறார். [7]அன்றிக்கே, சேருகையாவது, இரண்டு தலை

---

1. ஸ்ரீ கீதை.

2. "உண்கின்ற" என்ற நிகழ்காலச் சொல்லின் பொருளை விரிக்கிறார் 'அவை' என்று தொடங்கி. 'அவை' என்றது, "பிறந்தவாறும்" என்று தொடங்கி மேலே கூறிய செயல்களை.

3. "சிறந்த" என்பதற்கு, மேலே தகுதி என்று ஒரு பொருள் அருளிச்செய்து, மிகுதி என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

4. "இச்சிறந்த" என்று பிரத்யக்ஷமாகக் கூறியதற்கு, பாவம் அருளிச் செய்கிறார். 'இறந்தகாலமா யிருக்கச்செய்தே' என்று தொடங்கி.

5. "வான்" என்பதற்கும் "இ" என்பதற்கும், வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'வான்சுடர்' என்று தொடங்கி.

6. சிறந்த வான்சுடரே! நான் தரித்து நின்று அநுசந்திக்கவல்லேனும்படி செய்தருளவேண்டும் என்று கூட்டுக.

7. மேல், மானசமாகச் சேருகையை அருளிச்செய்து, எம்பார் நிர்வாகத்திலே, சரீரத்தால் சேருகையை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

யும் சேருகையாய், நான் அநுசந்தித்து நைகின்றவனுதல் தவிர்ந்து உன்னைப் பிரியாதபடி கிட்டப்பெறுவது என்று? என்கிறாராகவுமாம். (1)

## 543.

வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் மாய மாவினை வாய்பி ளந்ததும்
**மதுவை வார்குழலார் குரவை பிணைந்தகுழகும்**
அது இது உது என்ன லாவன அல்ல என்னை உன் செய்கை நைவிக்கும்
**முதுவைய முதல்வா! உனை என்று தலைப்பெய்வனே?**

**பொ - ரை:**—கல்யாண வார்த்தைகள் பிறந்த அளவிலே இட பங்களின்மேல் வீழ்ந்து அவற்றைக் கொன்றதும், வஞ்சனைபொருந்திய கேசி என்பவனுடைய வாயினைப் பிளந்ததும், தேன்சிந்துகிற கூந்தலையுடைய பெண்களோடு குரவைக்கூத்தினைக் கோத்தாடிய குழகும், அது இது உது என்னலாவன அல்ல; உன்செய்கைகள் என்னை நைவிக்கும்; பழைமையான உலகங்கட்கெல்லாம் முதல்வனே! உன்னை என்று வந்து சேர்வேன்?

**வி - கு:**—வதுவை-திருமணம். மாவினை என்பதில், இன்சாரியை; ஐ இரண்டனுருபு. மா-குதிரை. மதுவை என்பதில், ஐ: இடைச்சொல். குரவை - ஒருகூத்து விசேடம். குழகு - சாமர்த்தியம்.

**ஈடு:**—இரண்டாம்பாட்டு. [1]ஏறு அடர்க்கை தொடக்கமான உன்செயல்கள் என்னை நைவிக்கின்றன; நான் தரித்துநின்று அநுபவிக்கும்படி செய்யவேண்டும் என்கிறார். [2]இனி அல்லாத அவதாரங்களையும் ஆராய்ந்தால் இத்தன்மையனவாய் இருக்குமன்றே, ஆகையாலே அவ்வருகு போகமாட்டார், அடியில் இழியமாட்டார், இனி வளர்ந்தவாற்றிலே ஏறப்போமித்தனை

---

1. "ஏறு பாய்ந்ததும்" என்றது முதலாகக் கடாகூத்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பிறந்தவாற்றிலேயாதல் மற்றை அவதாரங்களிலேயாதல் போகாமல், வளர்ந்தவாற்றிலே போவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'இனி' என்று தொடங்கி. 'இத்தன்மையனவாயிருக்கும்' என்றது, இந்த ஸ்வபாவத்தை யுடையனவாயிருக்கும் என்றபடி. என்றது, இப்படியே பரியவேண்டியிருக்கும் என்றபடி. அவ்வருகு - மற்றை அவதாரங்களில். அடியில் - பிறந்தவாற்றில். மோஹிக்கச் செய்கையாலே அடியில் இழியமாட்டார் என்பது.

யன்றே, [1] "சீராற்பிறந்து" என்ற திருப்பாசுரம் அநுசந்தேயம். [2] 'பிறந்தவாறு' அவனே செய்கையாலே இவர்க்கு அங்குச் செய்யலாவதில்லை, இனி [3] அநுகூலர்க்குக் கண்டு பரிவதற்கும் விஷயமுள்ளது வளர்ந்தவாற்றிலே யன்றே; அவ் வளர்ந்த வாறுதான் இருக்கிறபடி சொல்லுகிறார்.

வதுவை வார்த்தையுள் - 'எருதுகள் ஏழினையும் கொன்ற வர்க்கு இவளைக்கொடுக்கக்கடவோம்'என்று பிறந்த பிரசித்தி. வதுவை - விவாகம். ஏறுபாய்ந்ததும்-ஏறுகளின்மேல் விழுந்த படியையும். [4] இவர்க்கு யமன்வாயிலே விழுந்தாற்போலேயாயிற்று இருக்கிறது, பொய்கையிலே பாய்ந்தாற்போலே இராகின்றதாயிற்று அவனுக்கு. [5] கருமாரி பாய்ந்தால் ஆகாதோ என்னும்படி அன்றே அவளுடைய இன்பம். மாய மாவினை வாய்பிளந்ததும் - [6] கம்சனுலே தூண்டப்பெற்றதாய் வஞ்சனை

---

1. மற்றை அவதாரங்களும் இத்தன்மையவாயிருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சீராற் பிறந்து' என்று தொடங்கி.

சீரால் பிறந்து சிறப்பால் வளராது
பேர்வாம னுகாக்கால் பேராளா! மார்பாரப்
புல்கிநீ உண்டுமிழ்ந்த பூமிநீர் ஏற்பரிதே?
சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து.

என்பது, பெரிய திருவந்தாதி. 16.

2. மோஹிக்கச் செய்கையாலே அடியில் இழியமாட்டார் என்று மேலே ஒரு கருத்து அருளிச்செய்து, பிறந்தவாறு அவனே செய்ததாகையாலே பரிய விஷயம் இல்லாமையாலும் அடியில் இழியமாட்டார் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'பிறந்தவாறு' என்று தொடங்கி. 'அவனே' என்ற ஏகாரம் கர்மத்தை விலக்குகிறது.

3. இங்குப் பரியத்தக்கது உண்டோ? என்ன, 'அநுகூலர்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "பாய்ந்ததும்" என்றதற்கு, மனுஷ்யபாவத்தை அருளிச்செய்கிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி. என்றது, அவன் சௌகுமார்யத்தையும் அவற்றின் கொடுமையையும் கினைக்கையாலே, யமன் வாயிலே விழுந்தாற் போலே இருந்தது இவர்க்கு; அவனுக்கு அவளுடைய கலவிக்குக் காரண மாகையாலே பொய்கையிலே பாய்ந்தாற்போலே சுகரூபமாய்த் தோன்றியது என்றபடி.

5. சுகரூபமாகத் தோன்றுகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கருமாரி' என்று தொடங்கி. கருமாரி பாய்கையாவது, காமாக்ஷியினுடைய ஆலயத்திலேயுள்ள குளத்திலே கட்டுள்ள இரண்டு இரும்புக்கம்பிகளின் நடுவில் விழுதல்.

6. அசுரன் குதிரையாய் வருவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'கம்சனுலே' என்று தொடங்கி. வருத்தம் சிறிதும் இன்றி அழித்தமையை அருளிச்செய்கிறார் 'வஞ்சனையாக' என்று தொடங்கி.

பொருந்திய வேடம்கொண்டு வந்ததாயிற்று. வஞ்சனையாகக் குதிரை வடிவங்கொண்டு வாயினை அங்காந்துகொண்டு ஓர் அசுரன் வந்து தோன்ற, சிறுபிள்ளைகள் துவாரங்கண்ட இடத்தில் கைந்நீட்டும் வாசனையாலே அதன்வாயிலே கையை நீட்டினன், முன்பு கண்டறியாதது ஒன்றைக் கண்ட காட்சியாலே கைவிம்மிற்று, பூரித்தவாறே இரண்டுகூறாய் விழுந்தான். [1]ஸ்ரீநாரத பகவான் "உலகம் அழிந்தது" என்று வந்து விழுந்தாற் போலே இவர்க்கு இப்போது இருக்கிறது. [2]"நன்கு திறந்த வாயையுடையவனும் மஹாபயங்கரமானவனுமான அந்த அசுரன் இடியினாலே பிளக்கப்பட்ட மரம்போலே கிருஷ்ணனுடைய திருக்கையாலே இரண்டு கூறு செய்யப்பட்டவனாய்க் கீழே விழுந்தான்" என்பது ஸ்ரீவிஷ்ணுபுராணம். [3]இத்தால், ஸ்ரீபிருந்தாவனத்துக்கு வழி இசங்கும்படி பெண்களுக்கு வன்னியம் அறுத்துக்கொடுத்தபடி.

மதுவை வார் குழலார் குரவை பிணைந்த குழகும் - தேன் பெருக்கு எடுக்கின்ற கூந்தலையுடைய பெண்களோடு [4]குரவையின்கோப்பிலே தன்னையும் ஒருவனுக்கித் தொடுத்தபடி. [5]அவர்கள் நினைவினைக் குலைத்து அபிமானம் நீங்கினவர்களாகச் செய்து, அவர்களோடு ஒக்கத் தான் கலந்தான். [6]அதாவது, வேற்றுரு என்ன ஒண்ணுதபடி இவர்களிலே ஒருவன் என்னலாம்படி புக்கு நின்றுளுயிற்று என்றபடி. மதுவை வார்குழலார்

---

1. அவன் இறந்து போகவும் "மாயமா" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீ நாரதபகவான்' என்று தொடங்கி.

2. அப்படிக் கொடுமையாக வந்தானே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நன்கு' என்று தொடங்கி.

"வ்யாதிதாஸ்யஃ மஹாரௌத்ரஃ ஸஃ அஸுரஃ க்ருஷ்ணபாஹுனா
நிபபாத த்விதாபூதஃ வைத்யுதேந யதா த்ருமஃ"

என்பது, விஷ்ணுபுரா. 5. 16 : 7.

3. மேலே நப்பின்னைக்கு உதவியபடி சொல்லிற்று; இங்குப் பெண்களுக்கு உதவினபடி சொல்லுகிறது என்கிறார் 'இத்தால்' என்று தொடங்கி. இசங்கும்படி - நடக்கும்படி.

4. மேன்மை தோற்றுதபடி ஒரே இனத்தானுய்க் கலந்தான் என்கிறார் 'குரவையின் கோப்பிலே' என்று தொடங்கி.

5. அன்றிக்கே, விடர்களின் செயலாலே பெண்கள் நெஞ்சில் மறத்தைப் போக்கி வசீகரித்துக் கலந்தான் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அவர்கள் நினைவினை' என்று தொடங்கி.

6. மேலே கூறிய பொருளை விவரணம் செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி. 'அதாவது' என்றது, அவர்களோடு ஒக்கத் தான் கலத்தலாவது என்றபடி.

என்றது, [1]மதுவார்குழலார் என்றபடி. சொற்பாடு. அது இது உது என்னலாவன அல்ல - அதுவாகவுமாம், இதுவாகவுமாம், உதுவாகவுமாம், எனக்கு இதில் ஒருநிர்ப்பந்தம் இல்லை. என்னை உன்செய்கை நைவிக்கும் - [2]அச்செயலாகவுமாம், இச்செயலாகவுமாம், உச்செயலாகவுமாம், அவற்றில் எனக்கு ஒருதாத்பர்யம் இல்லை; உன்னுடைய செயல்களாகையும், நானுகையுமே எனக்கு நோவுபடுகைக்கு வேண்டுவது. [3]"இத்தால் சொல்லிற்றுயிற்று, இப்பாசுரத்தில் மூன்று பொருள்கள் சொல்லப்படுகின்றன, அவையாவன: அநுகூல சம்ஶ்லேஷமும், பிரதிகூல நிரசனமும், மத்தியஸ்தரக்ஷணமும்; இவற்றையே, 'அது இது உது' என்கிறது" என்று 'பிள்ளான்' பணிக்கும். முதுவையம் முதல்வா - பழையதான பூமிக்குக் காரணமானவனே! என்னுதல்; பூமிக்குப் பழைய காரணமானவனே! என்னுதல். [4]இவர்தம்மதும் அவ்வளவாகாதேதான். பிரளயம்கொண்ட உலகம்போலேயாகாதே இவரும் அழிந்தபடி. இத்தோடுஒக்க இவரையும் அடிதொட்டும் உண்டாக்கவேண்டி இருக்கிறபடி. உன்னை என்று தலைப்பெய்வனே-உன்னைநினைத்துநிலைகுலைந்தவனுகாதே தரித்துநின்று அநுசந்திக்கும்படி செய்யவேண்டும். அன்றிக்கே, உன்னை வந்து கிட்டப்பெறுவது என்றோ என்றுமாம். தலைப்பெய்கை - கிட்டுகை. (2)

---

1. 'மதுவார் குழலார் என்றபடி' என்றது, "மதுவை" என்பதில் "ஐ" சாரியை இடைச்சொல் என்பதனைத் தெரிவித்தபடி. 'சொற்பாடு' என்றது, சொல்படுதல்; அதாவது, இசை நிறைக்க வந்தது என்றபடி. "என்னலாவன அல்ல" என்றது, அது இது உது என்று விசேடித்துச் சொல்லலாவன அல்ல என்றபடி.

2. 'அதுவாகவுமாம்' என்று தொடங்கி, மேலே அருளிச்செய்ததை விவரணம் செய்கிறார் 'அச்செயலாகவுமாம்' என்று தொடங்கி.

3. "அது இது உது" என்பதற்கு, வேறும் ஒரு நிர்வாஹத்தை அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்று தொடங்கி. 'மத்தியஸ்த ரக்ஷணமும்' என்றது, நப்பின்னையைப் போன்று அந்தரங்கைகளுமன்றிக்கே, கேசியைப் போன்று விரோதிகளுமன்றிக்கே இருக்கின்ற மதுவார் குழலார்களுடைய ரக்ஷணத்தை என்றபடி.

4. "என்னை உன்செய்கை நைவிக்கும்" என்றதன்பின் "முதுவையமுதல்வா" என்று காரணத்வம் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர்தம்மதும்' என்று தொடங்கி. அடிதொட்டும் - அடி தொடங்கி; சத்தையே தொடங்கி என்றபடி.

இத்திருவாய்மொழியில், கிட்டுகைக்கு வாசகங்களான சொற்களெல்லாம், ஆழ்வான் நிர்வாஹத்திலே மானசாநுசந்தானபரங்கள் என்றும், எம்பார் நிர்வாஹத்திலே சரீரத்தாலே கிட்டுதல் என்றும் கொள்க.

544.

பெய்யும் பூங்குழல் பேய்முலை யுண்ட பிள்ளைத் தேற்றமும்
[பேர்ந்தொர் சாடிறச்
செய்ய பாதமொன்ருல் செய்தநின்சிறுச் சேவகமும்
தெய்யுண் வார்த்தையுள் அன்னை கோல்கொள நீயுன்
[தாமரைக் கண்கள் நீர்மல்கப்
பையவே நிலையும்வந்து என்நெஞ்சை உருக்குங்களே.

**பொ-ரை:**—பூக்கள்வைத்த கூந்தலையுடைய பூதனையினது பாலை உண்ட பிள்ளைத்தனத்திலே தெளிவும், வஞ்சனையினால் ஒப்பற்றவனான சகடாசுரன் இடம்விட்டுப் பெயர்ந்து சென்று அழியும்படி சிவந்த ஒரு திருவடியினால் உதைத்துத் தள்ளிய நின் சிறிய வீரமும், செய்யை உண்ட வார்த்தை பிறந்தவளவிலே தாயானவள் கோலினைக் கையிலே எடுக்க நீ உன் தாமரைபோன்ற திருக்கண்களில் நீர் மிகும்படி அச்சங் கொண்டு நின்றநிலையும், வந்து என்னுடைய மனத்தினை உருக்காநின்றன.

**வி-சு:**—"பெய்யும்பூங்குழல்" என்பதனை, "பிள்ளை"க்கு அடையாக்கலுமாம். சாடு பேர்ந்து இறச் செய்த சிறுச்சேவகம் என்க. சாடு-சகடம். கோல்கொள்ள கண்கள்நீர்மல்க நின்றநிலை என்க. உருக்குங்கள் : கள், அசைநிலை.

**ஈடு:**—மூன்றும்பாட்டு. [1]நீ இளமைப்பருவத்தில் செய்த உன்னுடைய செயல்கள் என்னை நலியாநின்றன என்கிறார்.

பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட பிள்ளை - பிரதிகூலருடைய பிராணன்களும் அடியார்கள் சம்பந்தமுடைய திரவியமுமே தாரகமாக வளர்ந்தான் என்று, 'வளர்ந்தவாறு' என்று சொன்ன இடத்தை விவரிக்கிறது இங்கு. [2]பிள்ளையைத் திருமஞ்சனம்செய்து ஒப்பித்துக் கண்வளரப்பண்ணிக் கடக்க நின்றருள் யசோதைப்பிராட்டி, அவ்வளவிலே வந்து கிட்டினள் பூதனை. இங்கு, 'பெய்யும்பூங்குழல்' என்பது, பிள்ளைக்கு அடைமொழி. பெய்யும் பூங்குழலையுடைய பிள்ளை பேய் முலையுண்ட தேற்றம் என்று கூட்டுக. அன்றிக்கே, 'பெய்யும்பூங்குழல்' என்பதனை, 'பேய்'க்கு அடைமொழியாக்கலுமாம்; என்றது,

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து, அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "பெய்யும் பூங்குழல்" என்றதனை, "பிள்ளை"க்கு அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்கிறார் 'பிள்ளையை' என்று தொடங்கி.

[1]'பிள்ளை அனுங்கஒண்ணாது' என்று தாய்மார் எப்போதும் ஒப்பித்தபடியே இருப்பர்களாயிற்று, இவளும் அப்படியே வந்தாளாயிற்று என்றபடி. பிணக்கோலமாக ஒப்பித்து வந்தாள் காணும் என்கிறார் என்றபடி. [2]பெற்றதாய்போல் வந்தபேய்ச்சியன்றே. வைத்த பூக்களையுடைய மயிர்முடியையுடைய பேய். பிள்ளைத்தேற்றம்-[3]ஐஸ்வர்யமான ஞானம் இன்றிக்கே, 'தாய்முலை' என்றும், 'வேற்றுமுலை' என்றும் அறியும் தெளிவு. மிகச்சிறிய இளமைப்பருவத்திலும் பிள்ளைகள் முலைவாசி அறிவர்கள் அன்றே. [4]இவனும் 'தாய்' என்றே நினைத்து உண்டான்காணும். பால்யத்தில் தெளிவு இருக்கிறபடி. என்றது, யசோதைப்பிராட்டி முலைகொடுக்கும்போது பிரீதியினாலே செய்யும் மழலைச்சொற்களை இவள்பக்கலிலே செய்தாளுயிற்று. [5]'பாதகர்' என்று அறியவுமாம், அறியாதிருக்கவுமாம், பகைவர்கள் கிட்டினால் முடியக்கடவதான பொருளின் ஸ்வபாவம் இருக்கிறபடி.

பேர்ந்து - அதற்குமேலே. ஓர்சாடுஇற - [6]தீமைசெய்வதில் இதனோடு ஒப்பது இல்லை கண்டீர். 'பிரதிகூலம்' என்று சங்கிக்கவும் ஒண்ணாதுகண்டீர். [7]பூதனையை, 'இன்னாள்' என்று ஆராய்கைக்காகிலும் விஷயம் உண்டு, யசோதையைக் கண்டவாறே 'இவள்யார்' என்று ஆராய்ச்சிப்படுமன்றே, இது ரக்ஷகமாகவைத்தது கண்டீர். இற-'தளர்ந்தும் முறிந்தும்' என்

---

1. இவள் ஒப்பித்து வந்ததற்கு ஏது யாது? என்ன, 'பிள்ளை அனுங்க' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அனுக்கம் - இளமைப் பருவத்தில் வரும் வியாதி.

2. தாயாய் வந்ததற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பெற்றதாய்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி. "பெய்யும் பூங்குழல்பேய்" என்பதன் பொருளை அருளிச்செய்கிறார் 'வைத்த பூக்களை' என்று தொடங்கி.

3. ஐசுவரியமான ஞானம் - ஈசுவரத் தன்மைக்குரிய ஞானம்.

4. "உண்ட" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவனும்' என்று தொடங்கி. பிள்ளையானால் தெளிவு எது? என்ன, 'பால்யத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. தாய் என்றே நினைத்து உண்டானால், அவள் முடியக்கூடுமோ? என்ன, 'பாதகர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "ஓர்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'தீமை செய்வதில்' என்று தொடங்கி.

7. இது பூதனைக்கும் ஒவ்வாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பூதனையை' என்று தொடங்கி. விஷயம் எப்படி உண்டு? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'யசோதையை' என்று தொடங்கி.

கிறபடியே, முறிய. செய்ய பாதம் - சிவந்த திருவடிகள். [1] என்னுடைய ஜீவனத்தைக்கொண்டு கண்டீர் விரோதியைப் போக்கிற்று என்கிறார். இவர்க்கு ஜீவனம் அடியிலே கல்பித்தன்றே கிடப்பது. ஒன்றால் - 'இன்னதிருவடி' என்று நியதி இல்லையன்றே; [2] கறுவிச்செய்கின்றான் அன்றே. செய்த நின் சிறுச் சேவகமும் - நீ சேவகம் செய்ய அடியிட்டபடியும். என்றது, [3] அரசகுமாரனாய்ப் பிறந்து, பருவம் நிரம்பி, ஆயுதப்பயிற்சி செய்து, வசிஷ்டர் முதலியவர்களைப் பின்சென்று, விஸ்வாமித்திரர் முதலியோர்பக்கலிலே அத்திரங்களைப் பெற்றுப் பின்பே யன்றே தாடகை மாரீசன் சுபாகு முதலியவர்களைக்கொன்றது; அவையெல்லாம் பருவம் நிரம்புவதற்குமுன்பே, வாயாலும் காலாலுமாயிருக்கிறபடி, இங்கு. [4] வாயால் வலியார்க்குத் தாயாரும் வேண்டாவாயிற்றுக்காணும். இவனைப்போன்று கால்கடியார் இலர், ஆகையாலேயன்றே காலிலே கொடிகட்டி வைக்கிறது. [5] "எல்லார்தலைகளிலும் திருவடியைவைத்து உதவி செய்தவனே! சங்கு சக்கரம் கொடி தாமரைப்பூ மாவட்டி வச்சிரம் முதலிய ரேகைகளாலே அலங்கரிக்கப்பட்டிருக்கிற உன் இரண்டு திருவடித்தாமரைகளும் என்தலையை எப்போது அலங்காரம் செய்யப்போகின்றன" என்பது ஸ்தோத்திர ரத்

---

1. "இற" என்றதன்பின், "செய்ய பாதம்" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி.

2. நியதியில்லாமைக்கு ஏதுவை அருளிச்செய்கிறார் 'கறுவிச்செய்கின்றான் அன்றே' என்று. என்றது, 'இது அழியவேண்டும்' என்று கறுக்கொண்டு செய்தாலுகில் வலத் திருவடியாலே உதைக்கவேண்டும்; அங்ஙனன்றிக்கே, அனந்தலிலே உதைக்கிறானாதலாலே, எதேனும் ஒன்று அமையும் என்றபடி.

3. இவை இரண்டனையும் இளமைப் பருவத்திலே செய்கையாலே, ஸ்ரீராமாவதாரத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார் 'அரசகுமாரனாய்' என்று தொடங்கி.

4. 'வாயாலும்' என்றதனை, ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'வாயால்' என்று தொடங்கி.

5. காலிலே கொடி இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எல்லார் தலைகளிலும்' என்று தொடங்கி.

"கதாபுஃ ஶங்கரதாங்க கல்பகதவஜ அரவிந்தாங்குஶ வஜ்ரலாஞ்சனம்
த்ரிவிக்ரம த்வச்சரணம்புஜ த்வயம் மதீயமூர்தாநம் அலங்கரிஷ்யதி"

என்பது, தோத்திர ரத்நம். 31.

"ஒண்மிதியில்" என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைத் திருவுளத்தே கொண்டு, சுலோகத்திலுள்ள 'த்ரிவிக்ரம' என்றதற்கு, பாவம் அருளிச்செய்

நம். அப்போதும் அவுணன் உள்ளத்து எண்மதியும் கடந்து அண்டமீதுபோயிற்றதும் கடுகித் திருவடிகள் அன்றே.

நெய் உண் வார்த்தையுள் அன்னை கோல் கொள்ள நீ உன் தாமரைக்கண்கள் நீர் மல்க பையவே நிலையும் - பருவம் நிரம்புவதற்கு முன்பு, தான் பிரதிகூலரை அஞ்சப்பண்ணுமாறு போலேகாணும் பருவம் நிரம்ப நிரம்ப அநுகூலர்க்குத் தான் அஞ்சும்படியும். நெய் உண் வார்த்தையுள்-நெய்யைக் குறியிட்டுக் கடக்க வைத்துப்போய்ப் பின்னர் வந்து பார்த்தாள், குறி அழிந்து கிடக்கையாலே 'நெய் களவுபோயிற்று' என்றுள்; அவ்வளவிலே [1] பையாக்க விழிக்கத் தொடங்கினன். அன்னை கோல் கொள்ள -[2] 'மாதா அன்றே எடுத்தாள்' என்னும் வேறு பாடு அறிகின்றிலன். அவள் வார்த்தை அன்றே 'உந்தம் அடிகள் முனிவர் - வாரீர் பிள்ளாய், உங்கள் தமப்பனார் கேட்ப ராகில் உம்மைப் பொடிவர் உன்னை நான் என்கையிற்கோலால் நொந்திட மோதவும்கில்லேன்' இதுதான் இருக்கிறபடி கண்டீரே; இதனைக்கொண்டு இனி, நீர் ஒன்றும் செய்யாதபடி பண்ணிக்கொள்ளலாமன்றே வல்லார்க்கு, நான் அதற்குச் சக்தை ஆகின்றிலேன். [3] தாய்எடுத்த சிறுகோலுக்கு உளைந்து ஓடி அன்றே, 'அச்சம் உறுத்துகிறபடி. இது, பட்டாலும் நோவாது'

---

இரூர் 'அப்போதும்' என்று தொடங்கி. அப்போதும் - அந்த அவதார சமயத்திலும்.

1. பையாக்க - பயம்தோன்ற.

2. அன்னை கோல் கொண்டபின் இவன் கண்ணீர் விழவிட்டது மயக்கத்தின் காரியம் என்கிறார் 'மாதாவன்றே' என்று தொடங்கி. ஆயின், அவள் அடியாளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவள் வார்த்தை' என்று தொடங்கி. "உந்தம் அடிகள்" என்ற பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வாரீர்' என்று தொடங்கி.

உந்த மடிகள் முனிவர் உன்னை நான் என்கையில் கோலால்
கொந்திட மோதவுங் கில்லேன் துங்கள்தம் ஆகிரை எல்லாம்
வந்து புகுதரும் போது வானிடைத் தெய்வங்கள் காண
அந்தியம் போதுஅங்கு நில்லேல் ஆழியங் கையனே வாராய்.

என்பது, பெரிய திருமொழி. 10. 5: 8.

3. தாய் எடுத்த கோலுக்கு இவன் பயப்பட்டதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தாய் எடுத்த' என்று தொடங்கி.

"தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித் தயிருண்ட
வாய்துடைத்த மைத்தனுக்கு இழந்தேன்என் வரிவளையே"

என்பது, பெரிய திருமொழி. 8. 3: 5.

என்று அறிகின்றிலன். [1]தமப்பனுர் எடுத்தாராகிலும் சிறிது ஆறலாம்காணும், ஹிதத்தை விரும்புகிறவராகையாலே அது தக்கதன்ரே;உகப்பேபின்செல்லக் கடவ இவள் பொடிந்தால் பின்னைப் பொறுக்கப்போகாதன்ரே. இவள்தான் இப்படிச் செய்வான்என் ? என்னில், [2]சிநேகம் இன்றிக்கே ஒழிந்தால் இன்னுர் என்று உண்டோ கல்லும் தடியும் கொள்ளுகைக்கு. நீ உன் தாமரைக்கண்கள் நீர்மல்க-வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டியிருக்கிற நீ, அதற்குமேலே கண்களும் [3]கோட் புக்கால் பொறுக்கப்போமோ. [4]"பிராட்டிக்குத் தகுந்தவர் பெருமாள்" என்கிறபடியே அவனுக்குத் தகுதியான கண்கள் ஆதலின் 'உன் தாமரைக்கண்கள்' என்கிறது. [5]'தக்கதாமரைக் கண்' என்னக்கடவதன்ரே. பையவே நிலையும் - 'அடிக்க' என்று அவள் கோலை எடுத்தாள்; அவளைப் பார்த்து நின்று கண்ணநீரை விழ விடாநிற்பது, உடம்பு வெளுப்பதாய்ப் பேக ணித்து நின்ற நிலையும். அன்றிக்கே, அஞ்சி அவள் முகத் தைப் பார்த்து நிற்கச்செய்தே பின்பே கால்வாங்கக் கணி சித்து மாட்டாதொழிவது, ஊன்ற நிற்கமாட்டாதொழிவதாய்த் தறையில் கால் பாவாதபடி பொய்க்க அடியிட்டுக்கொண்டு நின்ற நிலை காணும் என்னுதல். பைய - மெள்ள. வந்து என் நெஞ்சை உருக்குங்களே - அச்செயல்கள் என்னை நலியாநின் றன. [6]உனக்காகில் தப்பியாகிலும் போகலாம், அதுவும் ஒண்ணுதபடி புக்க இடம் புக்கு வடிம்பிட்டு நலியாநின்றன. பையவே வந்து என்நெஞ்சை உருக்கும் - என்னை ஒர் அடி போகஒட்டாதே காற்கட்டாநின்றன என்கிறுர். நெஞ்சை

---

1. தாயினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறுர் 'தமப்பனுர்' என்று தொடங்கி.

2. ரசோக்தியாக அருளிச்செய்கிறுர் 'ஸ்நேகம்' என்று தொடங்கி. ஸ்நேகம் - நெய்.

3. கோட்புகுதல் - புதிதாகத் தோன்றுதல்.

4. "துல்ய ஸீல வயோவ்ருத்தாம் துல்யாபிஜனல க்ஷணாம்
ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேய மவிசேரணே"
என்பது, ஸ்ரீராமா. சுந். 16 : 15.

5. 'தகுதியான கண்கள்' என்பதற்கு, மேற்கோள் காட்டுகிறுர் "தக்க தாமரைக்கண்" என்று.

பொய்க்க - மெள்ள.

6. "வந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'உனக்காகில்' என்று தொடங்கி. 'தப்பியாகிலும் போகலாம்' என்றது, யசோதை பல மில்லாதவளாகையாலே தொடர்ந்து வரமாட்டாள் என்றபடி.

உருக்கும் - இவர்நெஞ்சிலே அடியிட்டபடி. உருக்கும் - முதல் நெஞ்சினை உருக்க அடியிட்டது. (3)

545.

**கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப்புரம் புக்க வாறும் கலந்த சுரரை**
**உள்ளம் பேதம்செய்திட்டு உயிருண்ட உபாயங்களும்**
**வெள்ள நீர்ச்சடை யானும் நின்னிடை வேற லாமை விளங்க நின்றதும்**
**உள்ள முள்குடைந்துஎன் உயிரைஉருக்கி உண்ணுமே.**

**பொ-ரை:**—வஞ்சனைபொருந்திய வேடத்தைக்கொண்டு சென்று திரிபுரத்திலே புகுந்த விதமும், அங்குள்ள அசுரர்களோடு கலந்து அவர்களுடைய மனங்களை வேறுபடுத்தி உயிர்களைப் போக்கிய உபாயங்களும், கங்கையைத் தரித்த சடையையுடைய சிவபிரானும் உன்பக்கல் வேறு அல்லாதபடி விளங்கநின்றதும், என்மனத்திற்குள்ளேபுக்கு என் உயிரை உருக்கி முடிக்கின்றன.

**வி - கு:**—கள்ளவேடம் - புத்தவேடம். அசுரர் - திரிபுரவாசிகள். உள் - ஞானம். புக்கவாறும் உபாயங்களும் விளங்கநின்றதும் உள் குடைந்து உயிரை உருக்கி உண்ணும் என்க.

**ஈடு:**—நான்காம்பாட்டு. [1]பௌத்தாவதாரச்செயல் மிகவும் என்னை நலியாநின்றது என்கிறார். அநுகூலர் விஷயத்தில் களவு சொல்லிற்று, மேற்பாசுரத்தில்; பிரதிகூலர் விஷயத்தில் களவுகண்டபடி சொல்லுகிறது, இப்பாசுரத்தில்.

கள்ளவேடத்தைக் கொண்டு - [2]"திருடன் எப்படி ஊரை விட்டுத் தூரத்தத் தகுந்தவனே வேதபாஹ்யனுய்ப் பிரசித்தனு யிருப்பவனும் அப்படியே தூரத்தத் தக்கவன், இவ்வுலகில்

---

1. "கள்ளவேடத்தை" என்பது போன்றவைகளைக் கடாகஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். தர்மத்தைக் கெடுக்க எடுத்த பௌத்த அவதாரச்செயல் மனமுருகுவதற்குக் காரணமாமோ? என்ன, மேற்பாசுரத்திற் கூறிய களவு அடியார்கள் விஷயத்தில் செய்ததாகையாலே குணமாய் மனம் உருகுவதற்குக் காரணம் ஆயினுற்போன்று, இப்பாசுரத்திற் சொன்ன களவும் அடியார்களுடைய விரோதிகளை அழிப்பதற்குக் காரணமாகையாலே குணமாய் மனம் உருகுவதற்குக் காரணமாகக்கூடும் என்று திருவுள்ளம்பற்றி, மேற்பாசுரத்தோடே இப்பாசுரத்திற்கு இயைபு அருளிச்செய்கிறார் 'அநுகூலர் விஷயத்தில்' என்று தொடங்கி.

2. பௌத்தவேடம் என்னுமல், "கள்ளவேடம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'திருடன்' என்று தொடங்கி.

"யதாஹி சோரஃ ஸ ததாஹி புத்தஃ ததாகதம் நாஸ்திகம் அத்ர வித்தி
தஸ்மாத்தியஃ சங்க்யதமஃ ப்ரஜாநாம் ந நாஸ்திகேந அபிமுகோபுத்தஃஸ்யாத்"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 109 : 34.

நாஸ்திக்யமானது புத்தனுக்குச் சமானம் என்று அறிந்து கொள்ளவும்; ஆகையினால், எவன் மனிதர்களுக்குள் அவை திகன் என்று சந்தேகப்படத் தக்கவனே அந்த நாஸ்திகனோடு எதிர்முகமாக இருக்கக்கூடாது" என்கிறபடியே, வஞ்சனை பொருந்திய வேடத்தைக்கொண்டு. [1] "எல்லாவேதங்களாலும் அறியப்படுமவனும் நானே" என்று வேதப்பொருளாய் விளங்கும் சர்வேசுவரன், வேத அப்ராமாணிக வேடத்தைக் கொண்டு. [2] கண்டார் மனங்கள் அடங்கலும் கொள்ளைகொள்ளும்படி, கறுத்து நெய்த்த வடிவும் வடிந்த காதும் இடுக்கின புத்தகமுமாய் நின்ற நிலையைக்காணும் நினைக்கிறது. [3] 'இவன் சொன்னதற்கு மேற்பட அர்த்தம் இல்லை' என்று, கேட்டார் நெஞ்சிலே தேறும்படியன்றே வடிவைஇட்டு மயக்கினபடி. போய் - [4] 'காலுக்குட்பட்ட அற்பப் பிராணிகள் நோவுபடுகின்றன' என்னும் அச்சம் தோன்றப் பொய்க்க அடியிட்டுக் கொண்டு போனபடி. என்றது, [5] அவர்கள்தாம் சாஸ்திரங்கட்கு விரோதமானவற்றில் நடக்கச்செய்தேயும், முகப்பில் நின்று ஒன்றுபோலே இருக்க, 'பரஹிம்சை செய்யலாகாது, கள் உண்ணலாகாது, பொய் பேசலாகாது, சிற்றின்பத்தில் ஆசை கூடாது' என்றற்போலே சிலசொல்லுவர்களாயிற்று, அவை யெல்லாம் தோற்றும்படிக்குத் தகுதியாகப் போனபடி. [6] பெருமாள், 'வனத்திற்கு எழுந்தருள' என்று புறப்பட, ஜாபாலிகள்

---

1. "கொண்டு" என்கையாலே, தனக்குச் சோராததனை எறிட்டுக் கொண்டான் என்கிறார் 'எல்லா வேதங்களாலும்' என்று தொடங்கி. இது, ஸ்ரீ கீதை.

2. "வேடம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கண்டார்' என்று தொடங்கி.

3. "வேடம்" என்று விக்ரஹ சௌந்தர்யத்தை அருளிச்செய்த தற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவன் சொன்னதற்கு' என்று தொடங்கி.

4. "கள்ளவேடத்தைக் கொண்டு புரம் புக்கவாறும்" என்னுமல், "போய்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'காலுக்குட் பட்ட' என்று தொடங்கி. பொய்க்க - மெள்ள.

5. அவர்கள் வைதிக சித்தையைக் குலைக்கப் புகுகிறவனில், அஹிம்சை முதலான தர்மம் தோற்றப் போவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்கள்தாம்' என்று தொடங்கி. அவர்கள் - பௌத்தர்கள்.

6. அவைதிக மதத்தை ஸ்தாபிக்க வந்த அவதாரத்தின் செயல், இவரை நடுபடுத்தக் கூடுமோ? என்ன, அடியார்கட்கு விரோதிகளை அழிக்கும் பொருட்டு வந்ததாகையாலே கூடும் என்னுமதற்குத் திருஷ்டாந்தமூலமாக ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார் 'பெருமாள்' என்று தொடங்கி.

மீண்டு புகுரும்படிக்குத் தகுதியாகச் சில வார்த்தைகளைச் சொல்ல, பெருமாள் சிவிட்கு என்று செவியைப் புதைத்து, 'வாராய், என்முன்னே நின்று தர்மத்தில் ருசி குலையும்படிக்குத் தகுதியாக நாஸ்திகவாதம் செய்வதே, உன்னை வெறுக்கிறது என், உன்னைக்கொண்டு காரியம்கொண்ட ஐயரையன்றே வெறுப்பது' என்ன, 'நாயன்தே! நீர் மீண்டு எழுந்தருளித் திருவபிடேகம் பண்ணியருளி, ஸ்ரீபரதாழ்வான் கண்களிலே கண்ணநீரை மாற்றினவாறே, நான் நாஸ்திகனுகை தவிர்ந்து ஆஸ்திகனும்படி பாரீர்' என்ன, அவ்வளவிலே இவனை [1]"ஜாபாலி பிராஹ்மணோத்தமன்" என்றார்கள் அன்றே. நாங்களும் எல்லாம் நூல் இட்டு இருக்கையாலே, பிராஹ்மணர்கள் என்று கொள்ளுகிறோம் இத்தனை. பிராஹ்மணனுகிறன் பிரஹ்ம சம்பந்தியானவன் அன்றே; அது உள்ளது இவனுக்கே அன்றே, இவ்வளவிலே உலோகாயத மதத்தை உபந்யசித்தான் ஒருவன் அன்றே.

புரம்புக்கவாறும் - ஊரைக் கிட்டினவாறே செய்த நியதிகளையெல்லாம் நினைக்கிறது. என்றது, விதித்த ஹிம்சையையும் சாமான்ய ஹிம்சையைப்போன்று ஆக்கப்புகுகிறவனுகையாலே, பசும்புல்லும் சாவ மியாதே கூரி அடியிட்டுப்புக்கபடி. கலந்து - இவர்களிலே ஒருவனுய்ப் புக்கு நின்று [2]இவ்வர்த்தத்தை உபந்யசித்தபடி. தன்வார்த்தையை நம்புகைக்காக இவர்களோடே ஒருநீராகக் கலந்து பரிமாறினபடி. அசுரரை உள்ளம் பேதம்செய்திட்டு-அசுரத்தன்மை வாய்ந்தவர்களான இவர்களுக்கு அவைதிக மதத்தை உபந்யசித்து வைதிக சிரத்தையைப் போக்கினனையிற்று. ஆயின், இவர்களுக்கு வைதிக

---

1. "ஆஸ்வாஸயந்தம் பரதம் ஜாபாலிஃ ப்ராம்மணோத்தமஃ
உவாச ராமம் தர்மஜ்ஞம் தர்மாபேதம் இதம் வசஃ"

என்பது, ஸ்ரீராமா. அயோத். 108 : 1.

எடுத்த சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நாங்களும்' என்று தொடங்கி. இவனுக்குப் பிரஹ்ம சம்பந்தம் எது? என்ன, 'இவ்வளவிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'இவ்வளவிலே' என்றது, பெருமாள் 'நாம் திரும்புவதில்லை, மீண்டு வருமளவும் இராஜ்ஜியத்தை நோக்கிக்கொண்டிரும்' என்று ஸ்ரீ பரதாழ்வானை நம்பும்படி செய்கிற அளவிலே என்றபடி.

2. 'இவ்வர்த்தத்தை' என்றது, ஜாபாலி உபந்யசித்த பௌத்த மதத்தை என்றபடி. அதற்குக் கலக்கவேண்டுமோ? என்ன, 'தன் வார்த்தையை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சித்தை உண்டோ? என்னில்,[1] "இராக்கதர்களுடைய வீடுகள் தோறும் அக்நிஹோத்ரங்களும் வேதாத்யயனங்களும் இருக்கின்றன, கருணை சத்தியம் ஆசாரம் இவைகள் இராக்கதர்களுக்குக் கிடையாது" என்கிறபடியே, எல்லார்க்கும் சில உண்டாகை தவிரா. தர்ம ருசியுள்ளவையுண்டாகிலும் குலைந்து போம்படி மதி பேதங்களைச் செய்தானுயிற்று. உயிர் உண்ட உபாயங்களும் - இவர்களுடைய உயிர்களைப் போக்கின உபாயங்களும் என்றது,[2] இவர்களுடைய வைதிக சித்தையைப் போக்கிப் பிணத்தினைப் போன்றவராகும்படி பண்ணி, நின்றுன் ஒரு பிக்ஷுகனுக்குங்கூட மேல்விழலாம்படி அவர்களை அடி அறுத்து, 'நான் செய்தேன்' என்று கவிபாடுவித்துக் கொள்ளலாம்படி செய்தபடி. [3]'அவன் செய்தான்' என்று சொல்லாநிற்கச் செய்தேயும் இந்தச்செயல் ஒன்றும் அவன் தலையிலே சேராதபடி சொன்னபடி பாரீர்; [4]"அளவிடமுடியாத பராக்கிரமத்தையுடையவனும் பூஜ்யனுமாயிருக்கிற சிவனுக்கு, சர்வ வியாபியான விஷ்ணுவானவர் அந்தர்யாமியாக இருக்கிறார்; அப்படி இருப்பதனாலே, அந்தச் சிவன், திரிபுரங்களை அழிக்குங்காலத்தில் வில்லை வளைத்து நாணை ஏற்றுதலா

---

1. "அக்நிஹோத்ராணி ச வேதாஃ ச ராக்ஷஸாநாம் க்ருஹேக்ருஹே
தயா ஸத்யம் ச ஸௌசம்ச ராக்ஷஸாநாம் கவித்யதே"

என்பது.

2. அழித்தவன் இவனே? சிவன் அன்றே அழித்தான்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்களுடைய' என்று தொடங்கி. அடி அறுத்து - வலிமையைக் குறைத்து.

3. வியாக்யாதாவின் ஈடுபாடு, 'அவன் செய்தான்' என்று தொடங்கும் வாக்கியம்.

4. 'சிவன் செய்தான்' என்று பிரமாணம் சொல்லாநிற்க, சர்வேசுவரன் முப்புரங்களை யழித்தான் என்பது, என் கொண்டு? என்ன, பிரமாணம் கொண்டு என்கிறார் 'அளவிடமுடியாத' என்று தொடங்கி.

"விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்ய அமித தேஜஸஃ
தஸ்மாத் தஜ்ஜ்யா ஸம்ஸ்பர்சம் ஸ விவேஷஹே மஹேஸ்வரஃ

என்பது, பாரதம் கர்ணபர்வம்.

"மலைபோற் பொறுத்தாரும் தாமம், பணிவில்சீர்ச்
செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்லுயர் சென்னி இமயவில் நாணுகித்
தொல்புகழ் தந்தாரும் தாம்"

என்பது, பரிபாடல்.

இற அந்தக் காரியத்தை மிகவும் பொறுத்துக் கொண்டான்" என்கிறபடியேயன்றே. [1]சேதனனைக்கொண்டு காரியங் கொண்டதோடு, அசேதனத்தைக்கொண்டு காரியங்கொண்டதோடு வாசியில்லை இவனுக்கு. சிவன்தன்னோடு அவன்கையில் வில்லோடு வாசியில்லை இவனுக்கு. [2]காரணநிலையில் சித்து அசித்துக்களைக்கொண்டு காரியங்கொண்டதைப் போன்றதாயிற்று. [3]முன்பு அவன்தானே செய்வானைக்கொண்டு எடுத்துப் பார்த்தான் அன்றே; அது முடியாதொழிய, பின்னர் இவன் உள்ளீடாய் நிற்கையாலன்றே செய்து தலைக்கட்டவல்லனாயிற்று. [4]'பண்டு ஓர் அரசன் "சிவனே பரம்பொருள்" என்று எழுதி, 'எழுத்திட்டுத் தாருங்கோள்' என்ன, அப்படிப் பலரும் எழுதி எழுத்திடாநிற்கச்செய்தே, ஒருவர், "வாராய், நீ இந்த ஓலை கெடாமே நோக்கிவைத்தால்அன்றே இவனுடைய

---

1. சேதனனுகையாலே சிவனுக்கும் இதில் சம்பந்தம் இல்லையோ? என்ன, 'சேதனனைக் கொண்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். அதனை விவரணம் செய்கிறார் 'சிவன் தன்னோடு' என்று தொடங்கி.

2. சித்து என்றும், அசித்து என்றும் வேறுபாடில்லாமல், காரியங் கொள்ளக் கண்டவிடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காரண நிலையில்' என்று தொடங்கி.

3. மேலே காட்டிய சுலோகத்திலுள்ள "தஸ்மாத், ஸவிஷேஹே" என்ற பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'முன்பு அவன் தானே' என்று தொடங்கி. "தஸ்மாத்" என்றதன் அர்த்த சாமர்த்தியத்தாலே, முன்பு எடுத்துப் பார்க்க, முடியாதொழிந்தது சித்தம்.

4. 'சர்வேசுவரன் அந்தராத்மாவாய் நிற்கையாலே செய்தான்' என்ற தனால் பலிதமான சிவனுடைய உயர்வு பகவானுக்கு அதீனப்பட்டது என்ற தற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'பண்டு ஓர் அரசன்' என்று தொடங்கி. 'ஒருவர்' என்றது, கூரத்தாழ்வானை. விவகூடிதன் - அறிவுடையவன். இங்கு,

அவத்தப்புன் சமயச்சொற் பொய்யை மெய்யென்று
அணிமிடறு புழுத்தான்தன் னவையின் மேவிச்
சிவத்துக்கு மேற்பதக்குண் டென்று தீட்டும்
திருக்கூர வேதியர்கோன் செவ்வி பாடப்
பவத்துக்கம் பிணிநீங்க நரகந் தூரப்
பரமபதம் குடிமலியப் பள்ளி கொள்ளும்
நவத்துப்புச் செங்கனிவாய்க் கரிய மேனி
நம்பெருமான் அரங்கேசர் ஆடி ரூசல்,

என்ற திருப்பாசுரம் நினைதல் தகும்.

பரத்துவம் சாதிக்கலாவது; நீ நினைக்கிற தேவதைக்கு உண்டான உயர்வுகள் 'சர்வேசுவரனுலே' என்று பிரமாணங்கள் சொல்லாநின்றன; ஆனபின்னர், இன்று, நீசொல்ல நான் எழுத்திட்டுப் போகிறேன்; நானோ ஒரு விவகூடிதன் தோன்றி 'இவன் அறிவீனனுயிருந்தானே!' என்னக் கேட்பதில் இன்று நீ நினைத்ததைச் செய்துகொள்ளமாட்டாயோ" என்றூர். உபாயங்களும்-[1]அப்போது இருந்து சிந்தித்தவற்றையெல்லாம் நினைக்கிறது.

வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடை வேறு அலாமை விளங்க நின்றதும் - "பிரஹ்ம ருத்திரர்கள் நடுவே நின்றது ஒரு [2]முதல் களவு உண்டு, அதனைச்சொல்லுகிறது" என்று ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பர். என்றது, சிவனையும் தன்னையும் சமமாகச் சொல்லலாம்படி திரிமூர்த்தி மத்திய நிலையைச்சொல்லுகிறது என்றபடி. இதனை எம்பெருமானர் கேட்டருளி, "அழகிது, அத்தனை தூரம் தேடிப் போகவேணுமோ, இவன்தன்விஷயத்திலே, [3]முன்புசெய்த உபகாரத்துக்கு ஓர் அளவு உண்டோ, இதுதானே அமையாதோ" என்று அருளிச்செய்தார். [4]கங்கையைத் தன் சடையில் ஏக தேசத்திலே தரித்த பிரபாவத்தையுடைய சிவனும் உன்பக்கல் வேறு அல்லாதபடி தோற்ற நின்றமையும். என்றது, 'சரீரமாக இருப்பவன்' என்னுமிடம் தோன்ற நின்றபடி. இங்ஙன் சொல்லுகிறது என்? இதனை ஐக்கியமாகக் கொண்டாலோ? என்னில், அங்ஙன் கொள்ளுமன்று [5]"விஷ்ணுஃ ஆத்மா - விஷ்ணு அந்தர்யாமியாக இருந்தார்" என்கிற பிரமாணத்திற்கு விஷயமின்றிக்கே ஒழியுமே. [6]"நலந்திகழ் சடையான்

---

1. "உபாயங்களும்" என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறூர் 'அப்போது' என்று தொடங்கி.

2. 'முதல் களவு' என்றது, "மத்யே விரிஞ்ச கிரிசம்" என்கிற படியே அவதரித்து, அவர்களோடே ஒருசேரக் கூறலாம்படி திரிமூர்த்தி மத்திய நிலைமையை.

3. 'முன்பு செய்த உபகாரத்துக்கு' என்றது, முப்புரத்தை எரித்த காலத்தில் அந்தராத்மாவா யிருத்தல் முதலானவை.

4. "வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" என்றதற்கு, எம்பெருமானர் நிர்வாஹத்திலே பொருள் அருளிச் செய்கிறூர் 'கங்கையை' என்று தொடங்கி.

5 இந்தச் சுலோகத்தை மேலே காண்க.

6. வேறு பிரமாணமும் காட்டுகிறூர் "நலந்திகழ்சடையான்" என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி. 4. 7 : 2.

மூடிக் கொன்றை மலரும் நாரணன் பாதத் துழாயும், கலந் திழிபுனலால் புகர்படு கங்கை" அவனுடையசேஷத்வத்துக் கும் இவனுடைய சேஷித்வத்துக்கும் பிரமாணம் [1] ஒருவெள் ளம் என்கிறார் காணும். [2]சிவன்சடையில் கொன்றையும் சர் வேசுவரன் அடியில் திருத்துழாயும் கூடிவந்து, இழிகிறபடி. உள்ளம் உள் குடைந்து - என் மனத்திலேபுக்கு மூழ்கி. என் உயிரை உருக்கி உண்ணும் - [3] "சேதிக்கமுடியாதது, எரிக்க முடியாதது" என்கிற ஆத்மாவைப் புக்கு அழித்து நோவு படுத்தாநின்றன. ஞானத்திற்கு வழியாக இருக்கின்ற மனத் திலே புகுந்து ஆத்மாவை நீராக்கி முடியா நின்றன. (4)

## 546.

**உண்ண வானவர் கோனுக்கு ஆயர் ஒருப்ப டுத்த அடிசில் உண்டதும்**
**வண்ண மால்வரையை எடுத்துமழை காத்ததும்**
**மண்ணை முன்படைத் துண்டு மிழ்ந்து கடந்தி டந்து மணந்த மாயங்கள்**
**எண்ணுந் தோறுமென் னெஞ்சு எரிவாய்மெழு கொக்கும்நின்றே.**

**பொ - ரை:**—தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் உண்ணுவ தற்கு ஆயர்கள் சித்தம்செய்த உணவினைப் புசித்ததும், பலநிறங்களை யுடைய பெரிய கோவர்த்தனமலையை எடுத்து மழையைக் காத்ததும், பூலோகத்தை முன்னேஉண்டாக்கிப் பிரளயகாலத்தில் புசித்து மீண்டு உமிழ்ந்ததும் திரிவிக்கிரமனாய் அளந்ததும், வாகமாகி இடந்து சேர்ந்த தாமான ஆச்சரியம் பொருந்திய செயல்களை நினைக்குந்தோறும் என் மனம் அவற்றிலே நிலைபெற்று நெருப்பில் அகப்பட்ட மெழுகினைப் போன்று உருகாநிற்கும்.

**வி - கு:**—வானவர்கோன் உண்ணற்கு ஆயர் ஒருப்படுத்த அடிசில் என்க. வண்ணம் - வர்ணம். மணந்த - பூமிப்பிராட்டியோடுங்கூடிய. நெஞ்சு நின்று எண்ணும்தோறும் எரிவாய் மெழுகு ஒக்கும் என்க.

---

1. 'ஒரு வெள்ளம் என்கிறார் காணும்' என்றது, சிலேடை; கங்கை என்றும், வெள்ளம்போன்று பலவாம் என்றும் பொருளாம்.

2. மேற்கோளாக எடுத்த "நலந்திகழ்" என்ற திருப்பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சிவன் சடையில்' என்று தொடங்கி.

அண்ட கோளகைக் கப்புறத்ததா யகிலமன் னுளத்த
புண்ட ரீக மென் பதத்திடைப் பிறந்துபூ மகளார்
கொண்ட தீர்த்தமாய் அரன்கொளப் பகீரதன் கொணர
மண்ட லத்து வந் தடைந்த நிம் மாநதி மைந்த.

என்ற கம்பராமாயணச் செய்யுள் இங்கு ஒப்பு நோக்குதல் தகும். (அகலிகைப் படலம். 60.)

3. ஸ்ரீ கீதை. 2; 24.

ஈடு:—ஐந்தாம்பாட்டு.[1] அடியார்களுக்காகவும் பொதுமையில் எல்லார்க்குமாகவும் செய்த செயல்களை நினைக்குந்தோறும் என் மனமானது மிகவும் அழியாநின்றது என்கிறார்.

வானவர்கோனுக்கு உண்ண ஆயர் ஒருப்படுத்த அடிசில் உண்டதும் - தான்பிறந்து வளருகிற ஊரிலே சிலர் மழையின் பொருட்டு இந்திரனுக்குச் சமைத்த அடிசிலைத் தான் புகுந்து உண்ட அதுவும்.[2] "நாம் பிறந்து வளருகிற ஊரிலே வேறேயும் ஓர் அடையத்தக்க பொருள் உண்டாகையாவது என்?" என்று பொருமையாலே, "வாரீர்கோள், இந்திரனுகிறன் எவன், கண்டறியாதான் ஒருவனே! நமக்கு உதவி செய்யப் புகுகின்றன்; ஆனபின்பு, மேகங்களும் வந்து பணியும்படிக்குத் தக்க தாய்ப் புல்லும் தண்ணீருமுடைத்தாய், பசுக்களுக்கும் இடம் கொடுத்து நிற்கிற மலையன்றே நமக்கு எல்லாம் கடவது" என்று சொல்ல,[3] ஆயர்கள் ஆகையாலே சொல்லிற்றுக் கேட்பார் சிலரே, இனி இவன்தானே சொன்னவை மறுக்கஒண்ணாதபடியாயிருக்குமே; "இம்மலையின்முன்னே இடுங்கோள்" என்ன, அங்கே கொடு வந்து குவித்தார்கள்; அதனைத் தான் புக்கிருந்து அமுதுசெய்தான்.[4] தனக்கே உரியராயிருப்பாருடைய பொருளை வேறே சிலர்க்குக் கொடுக்கையாவது, மஹிஷீஸ்வேதத்தைப் பிறர்க்குக் கொடுத்த அளவேயன்றே.[5] அவன் தன் பரிகரத்தோடுங்கூட இதனைக்கொண்டு திருப்தனாக இருக்க, இதனைத் தான் கைக்கொண்டானுயிற்று.

---

1. "அடிசில் உண்டதும் மழை காத்ததும்" என்பன போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இந்திரனுக்கு இட்டதனைத் தான் உண்ணுதற்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாம்பிறந்து' என்று தொடங்கி. 'எவன்' என்றது, குறிப்புப்பொருள். ஒருவன் இல்லை என்பது கருத்து. கண்டறியாதான் - காணப்படாதவன்.

3. இவன் 'இல்லை' என்று சொன்னால் அவர்கள் கேட்கலாமோ? என்ன, அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'ஆயர்களாகையாலே' என்று தொடங்கியும், 'இனி இவன்தானே' என்று தொடங்கியும்.

4. அவர்கள் இந்திரனுக்கு இடுகிறவதனால் இவனுக்கு வந்தது என்? இவன் என் அதனைத் தடுக்கவேண்டும்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தனக்கேயுரியராய்' என்று தொடங்கி.

5. இந்திரன் என்னுமல், "வானவர்கோன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் தன்' என்று தொடங்கி.

[1] அவன் குரோதத்தாலே மழைபெய்யும்படி செய்தான். வண்ண மால் வரையை எடுத்து மழை காத்ததும் - [2] அடை கொண்டு பாழ்போக்குவான் ஒருவன் அன்றே. "நாம் விரும் பியபொருளைப் பெற்றோமாகில் என்செய்தால் நல்லது" என்று பொகட்டுப் போகாதே, பலவிதமான தாதுக்களையுடைத்தாய், ஒருவரால் கணிசிக்க ஒண்ணாத பெரியமலையை, சுகுமாரமான கையைக்கொண்டு ஏழுநாள் ஒருபடியே தரித்து, ஒருபசுவின் மேலேயாதல் ஓர் ஆயன் மேலேயாதல் ஒருதுளி விழாதபடி காத்தும். [3] அவனைக் கொல்லவேண்டியதா யிருக்கச்செய்தே யும் 'தேவசாதியினனை இவனை நலிகிறது என், பசிக்கோவத் தாலே செய்தானுகில் தானே கை ஒய்ந்து விடுகிறன், அவ்வள வும் நம்முடைய பொருளை நாம் கடகிட்டு நோக்குவோம்' என்று கருணை காரணமாக அவனைக் கொல்லாதேவிட்டான். [4] 'நம் விபூதியை இவன் நோக்கவல்லன், இவன் கண்ணுடையன்;' என்றேயன்றோ இவனைத் தான் இங்குத்தைக்கு இட்டது, இப் படியிருக்கச்செய்தேயும் இவன் கண்ணறையர் செய்வதனைச் செய்தான். மண்ணை முன்படைத்து உண்டு உமிழ்ந்து கடந்து இடந்து மணந்த மாயங்கள் - 'வேண்டா' என்றாலும் வேறு தெய்வங்களை வணங்குதல் தவிராதார் ஓர் ஊரார் அளவன் றிக்கே, இருக்கிற பூலோகத்திலுள்ளார் விஷயத்திற்செய்யும வற்றைச் சொல்லுகிறது. விரும்பாமல் இருக்கவே இவற்றை உண்டாக்கி, பிரளய ஆபத்துக்கள் வர இவை நோவுபடாத படி வயிற்றிலே வைத்து நோக்கி; 'உள்ளே கிடந்து மறைந்து

---

1. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவன் குரோதத் தாலே' என்று தொடங்கி.

2. தன் காரியம் ஆலல், 'பின் பட்டது படுகிறது' என்று இருக்க ஒண்ணுதோ? என்ன, 'அடைகொண்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'அடைகொண்டு பாழ்போக்குவான்' என்றது, 'பாது காக்கிறோம்' என்று கைக்கொண்டு கைவிடுவான் என்றபடி. அன்றிக்கே, ஒருவன் நிலத்தை வாங்கிப் பாழே போக்குவான் என்னுதல். அன்றிக்கே, உண்ணும் பொருளைக்கொண்டு கைவிடுவான் என்னுதல். அடை என்பது, பண்ணிகாரவகையுள் ஒன்று.

3. மலையைத் தூக்கிப் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் அவனைக் கொன்றல் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனைக் கொல்லவேண்டியதாய்' என்று தொடங்கி. கடகிட்டு - பரிசையை இட்டு.

4. அன்பு காரணமாகக் கொல்லாமல் விடுதற்கு இவன் செய்த உபகாரம் ஏது? என்ன, 'நம் விபூதியை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். கண் - கண்ணும், அருளும். கண்ணறையர் - குருடர், அருளற்றவர்.

போகஒண்ணுது' என்று பார்த்து வெளிநாடு காணப் புறப்பட விட்டு, பின்பு மஹாபலிபோல்வார் கவர்ந்துகொள்ள எல்லை நடந்து மீட்டுக்கொடுத்து, பின்பு [1]அவாந்தர பிரளயங் கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்துக்கொண்டு ஏறி, இவை யெல்லாம் பிராட்டிப் படுக்கைப்பற்றுகையாலே அவளுக்குப் பிரயமாகச்செய்து அவளோடே கலந்த ஆச்சரியமான செயல் கனை. மணத்தல் - கலத்தல்.

எண்ணுந்தோறும் என்நெஞ்சு எரிவாய் மெழுகு ஒக்கும் நின்றே[2] அவனுடைய ரக்ஷணத்திலும் பரப்பு உண்டாகாதே இவருடைய பாரிப்பு. [3]எண்ணமாட்டார், எண்ணதிருக்கமாட்டார், ரக்ஷணதீதிற்கு அவன் சமைந்தாற்போலே காணும் அழிகைக்கு இவர் சமைந்தபடி. [4]இதனை நினைத்தே நாட்டார் உண்டு உடுத்துக் காலம் போக்காநின்றார்களாதலின் 'என் நெஞ்சு' என்கிறார். நெருப்பின் அருகில் இருக்கும் மெழுகு போலே உருகாநின்றது என்பார் 'எரிவாய் மெழுகு ஒக்கும்' என்கிறார். அது ஒருகாலே உருகுதல் கரிதல் செய்யுமன்றே, இது உருகினபடியே இராநின்றதாதலின் 'நின்றே' என் கிறார். (5)

## 547.

**நின்ற வாறு மிருந்த வாறும் கிடந்த வாறும் நினைப்பரியன**
**ஒன்றலா உருவாய் அருவாயதின் மாயங்கள்**
**நின்ற நின்று நினைகின் றேன்உனை எங்ஙனம்நினை கிற்பன்? பாவியேற்கு**
**ஒன்று நன்குரையாய் உலகமுண்ட ஒண்சுடரே!**

**பொ-ரை :**—பிரளயகாலத்தில் உலகத்தைப் புசித்த ஒண்சுடரே! நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைத்தற்கு அரியனவாய்

---

1. அவாந்தரபிரளயம் - இடையில் வருகின்ற பிரளயம்.

2. எண்ணும்போது என்னுமல், "எண்ணுந்தோறும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. என்றது, ரக்ஷணத்துக்கு உறுப்பான காரியங்கள் பலவானாற்போன்று, அவற்றைப்பற்றி வருகின்ற இவருடைய பாரிப்பும் பல என்றபடி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'எண்ணமாட்டார்' என்று தொடங்கி. அன்றிக்கே, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் எனக் கோடலுமாம். என்றது, ஈடுபாட்டால் வந்த நிலைவேறுபாட்டாலே அநுசந்திக்கமாட்டார், அநுசந்தியாதபோது தரித்திருக்கமாட்டாமையாலே எண்ணதிருக்கமாட்டார் என்றபடி.

4. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனை நினைத்தே' என்று தொடங்கி.

இருக்கின்றன ; ஒருபடித்தாகாத உருவத்தையுடையையாய் அநுபவித்தற்கு உருத்தெரியாதவனுயிருக்கின்ற உன்னுடைய செயல்களே நின்று நினைக்கின்றேனுகிய நான் உன்னை எப்படி நினைப்பேன் ? பாவத்தைச் செய்த எனக்குச் சிறந்தது ஓர் உபாயத்தைச் சொல்லுவாய்.

**வி - சூ :**—நிற்றல், இருத்தல், கிடத்தல் திவ்வியதேசங்களில். மாயங்கள் - ஆச்சரியமான செயல்கள். நினைகின்றேன் : வினையாலணையும் பெயர். நன்கு ஒன்று உரையாய் என்க.

**ஈடு :**—ஆரும்பாட்டு. [1] உன்னுடைய செயல்கள் எல்லாவற்றையும் காண, விடாய்ப்பட்ட நான் நினைக்கவும் முடியாதவனுக இருக்கிறேன் ; பிரளய ஆபத்தில் உலகத்தைக் காத்தாற் போன்று, நினைக்க வல்லேனும்படி பண்ணி என்னைக் காப்பாற்றவேண்டும் என்கிறார்.

நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரிய நின்மாயங்கள் - [2] இவர் இவ்விஷயத்திற் படுகிற பாடு எல்லாம் நமக்கு இதரவிஷயங்களிலே அநுபவசித்தமன்றே, இவ்விஷயத்தில் இன்றிக்கே ஒழிகிறதித்தனை. [3] போரப் பாடவல்லாராயிருப்பார் ஒருத்தர், வடக்கு நின்றும் 'பெருமாளைத் திருவடி தொழவேண்டும்' என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அறையர் தீர்த்தத்தின் அன்று இருந்து திருமாலையைப் பாடிச்சமைந்து பெருமாளை மத்தகஜங்களை ஏத்துமாறு போலே ஏத்தி வசமாக்கிக் கணிசம் கொண்டு, " நாயன்தே ! தேவர் திருவடிகளுக்குப் போர நல்லான் ஒருத்தன், எழுநூற்றுக்காதம் ஆறு உண்டு தேவரைத் திருவடி தொழவேண்டும் என்று வருகிறது ; இவனை அழைத்துக்கொண்டு சம்பாவனை செய்தருளவேண்டும்" என்ன, பெருமாளும் 'அப்படியே செய்கிறோம்' என்று திருவுள்ளமாய் அருளப்பாடிட்டு, திருப்புனைக் கீழ் நின்றும் அவர் நின்றவிடத்தளவும் செல்ல நாலு

---

1, திருப்பாசுர முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. ஒவ்வொரு நிலையிலும் இவர் படுவது போன்று, நமக்கு இவ்விஷயத்தில் ஈடுபாடு உண்டாகவில்லையே ? என்ன, 'இவர் இவ்விஷயத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. இவர் ஈடுபடுவது அடியார் பொருட்டுச் செய்த செயல்களுக்கு ஆகையாலே, பிரசங்காத், அவன் அடியார்பொருட்டுச் செய்யும் செயலுக்கு ஔதிஷ்யம் காட்டுகிறார் 'போரப் பாடவல்லாராய்' என்று தொடங்கி. தீர்த்தத்தின் அன்று இருந்து - தீர்த்தவாரியின் அன்று இருந்து. திருமாலையை-தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த பிரபந்தத்தை. பாடிச்சமைத்து-பாடி முடித்து. கணிசங்கொண்டு - சபதங்கொண்டு. ஆறு -வழி.

கோல்தறை திருக்கைத்தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பஞ்செய்வார்களை எல்லாம் அருளப்பாடிட்டு, 'வாரீர்கோள், இவன் வந்த தூரத்துக்கெல்லாம் போருமோ நாம் இவனுக்குச் செய்த தரம்' என்று திருவுள்ளமானார். [1] இப்படியேயன்றே நம்மிழவுகளும் திருவுள்ளத்திலே பட்டவையெல்லாம் ஆறும் படிக்கு ஈடாக முகம்தந்தருள வல்ல படியும். [2] ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாக வாட்டி எம்பெருமானார்க்குக் கொண்டு வந்து காட்ட, போரத் திருவுள்ளமுகந்தாராய் இவனையும் கூடக்கொண்டு பெருமாள்பாடே புக்கு, 'நாயன்தே! இவன், திருவரைக்குத் தகுதியாகும்படி இவற்றைத் தொட்டபடி பார்த்தருளவேண்டும்' என்று காட்ட, கண்டு போர உகந்தருளி எம்பெருமானரை அருளப்பாடிட்டு, 'இவனுக்காக, கம்சனுடைய ஈரங் கொல்லி நம்திறத்திற் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவுள்ளமானார்.

நின்ற வாறும் - இலங்கையின் வாசலிலே கையும் வில்லுமாய் நின்றபடியாதல், வாலி வதம்பண்ணிக் கையும் வில்லுமாய் நின்றபடியாதல்; [3] "கம்பீரமான வில்லைப் பிடித்துக் கொண்டு நிற்கின்ற ஸ்ரீராமபிரானையும் இளையபெருமாளையும் தன்கணவனுக்குத் தம்பியாகிய சுக்கிரீவனையும் நல்ல எண்ணமுள்ள தாரை கண்டாள்" வாலிவதம் பண்ணிக் கையும் வில்லுமாய்க்கொண்டு வென்றி புனைந்து நின்ற பெருமாளையும், அவரை இடுவித்துக் கொல்லுவித்த தம்பியாரையும், இருவரை

---

1. 'இப்படியே' என்று தொடங்கும் வாக்கியம், வியாக்கியாதாவின் ஈடுபாடு.

2. அநுகூலரை அங்கீகரிக்குமாறு போன்று, குற்றம்பொருந்திய நம்மை அங்கீகரிக்கக் கூடுமோ? என்ன, புருஷகார பலத்தாலே கூடும் என்கைக்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஒருநாள்' என்று தொடங்கி. தொட்டபடி - வெளுப்பித்தபடி. ஈரங்கொல்லி - வண்ணன்.

3. இரண்டாவதாக அருளிச்செய்த பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கம்பீரமான' என்று தொடங்கி.

"அவஷ்டப்ய ச திஷ்டந்தம் ததர்ச தநுரூர்ஜிதம்
ராமம் ராமாநுஜம் சைவ பர்துஸ்சைவ அநுஜம் ஸுபா"

என்பது, ஸ்ரீராமா. கிஷ்கா. 19: 25.

எடுத்த சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வாலிவதம் பண்ணி' என்று தொடங்கி. 'அவரை இடுவித்துக் கொல்லுவித்த தம்பியாரையும்' என்றது, புருஷகாரமாயிருந்தமையைத் தெரிவித்தபடி. 'சாங்கத்தாலே' என்றது, சிலேடை; அன்பும், வில்லும் என்பது, பொருள்.

மும் தொடர்ந்து பின்பற்றி முடிசூட இருக்கிற மஹாராஜரை யும் கண்ட இவள் 'நமக்குப் பகைவர்கள்' என்றிராமல், நல்ல மனமுடையவளானாள் அவர்பக்கல் சாங்கத்தாலே.[1] இனித் தான், தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே கல்லைக் கட்டிக் கொண்டு விழுந்து முடிந்துபோவாரைப் போலே கொடிய தன் மையனானவாறே முடிந்துபோனான் வாலி; இவர்செய்த குற்ற முண்டோ? என்று இருந்தாள். அவர்தம் உயிர் நிலையிலே நலிந்தாரை விட்டு வைப்பரோ. இருந்தவாறும்-[2] "பர்ணசாலை யில் எழுந்தருளியிருந்த ஸ்ரீராமனை" என்று இருந்த இருப்பும், கிடந்தவாறும்-[3] "ஸ்ரீராமன் கடற்கரையில் கடலை நோக்கிக் கிழக்கு முகமாகக் கையைக் கூப்பிக்கொண்டு படுத்தார்" என் கிறபடியே, கடற்கரையிலே கிடந்த கிடையும். "ப்ரதிஸிஶ்யே-எதிர்நோக்கிப் படுத்தார்" என்கிறதன்றோ, ஒரு கடலோடே ஒருகடல் பொருமைகொண்டு கிடந்தாற்போலே இருக்கை யாலே; "கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி" என்றான் அன்றோ. என்றது, பின்பு விடக்கடவதாகத் தொடுத்த அம்பு முன்பு விடமாட்டாமை இல்லை அன்றோ; அப் படிப்பட்ட அம்பு இருக்க, தம் தோள்வலி கிடக்க, தரம் போரா தார் முகங்காட்டாதே இருக்கப் பொறுத்துக் கிடந்த கிடை யைச் சொல்லுகிறது. 'நின்றும் இருந்தும் கிடந்தும்' என்று திரளச்சொல்ல அமையுமாயிருக்க, 'நின்றவாறும் இருந்தவா றும் கிடந்தவாறும்' என்கிறார் அன்றோ, தனித்தனியே

---

1. கையும் வில்லுமான அழகைக்கண்டு சாங்கத்தாலே நல்லெண்ணம் வாய்ந்த மனமுடையவளானாள் என்று மேலே அருளிச்செய்து, அடியார்க ளிடத்துள்ள பக்ஷபாதமான குணத்தை அநுசந்தித்தலாலும் நல்லெண்ணம் வாய்ந்த மனமுடையவளானாள் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய் கிறார் 'இனித்தான்' என்று தொடங்கி.

2. "உடஜே ராமம் ஆஸீநம் ஜடாமண்டல தாரிணம்"
என்பது, ஸ்ரீராமா. அயோத். 99: 25.

3. "அஞ்சலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிஸிஶ்யே மஹோததேஃ"
என்பது, ஸ்ரீராமா. யுத். 21: 1.

தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருள் நயந்தருன் ஞால்நெறி யடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி.
என்பது, கம்பராமாயணம், வருணனை வழிவேண்டு படலம். 5.

இச்செய்யுளின் 3-ஆம் அடியின் பொருளினை அருளிச்செய்கிறார் 'பின்பு' என்றுதொடங்கி.

[1] உளுக்கின்படி. நின்றூனில் 'நிலையாரநின்றூன்' என்பார்கள், 'நின்றவன், இருத்தல் சாய்தல் செய்யிற் செய்வது என்?' என்று வயிறு பிடிக்கவேண்டும்படியன்றே அது இருப்பது; இருந்தானில், [2]"பிரான் இருந்தமை காட்டினீர்" என்னும்படி இருக்கும்; [3] கிடந்தானில், "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள்.

அங்ஙன் அன்றிக்கே, கோவர்த்தனமலையைத் தூக்கிப் பிடித்துநின்ற நிலையாதல், திருக்குரவைக்கு முற்சாமமாகப் பெண்களோடே [4] கழகம் இருந்த இருப்பாதல், ஒரொருத்தர் மடியிலே சாய்ந்தபடியாதல். அன்றிக்கே, [5] "நிற்பதும் ஓர்வெற்பகத் திருப்பும் விண் கிடப்பதும், நற்பெருந் திரைக்கடலுள்" என்கிறபடியே, திருமலையிலே நின்றபடியும், பரமபதத்திலே இருந்தபடியும், திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளினபடியுமாகவுமாம். அன்றிக்கே, "நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என்நெஞ்சுளே" என்கிறபடியே, இவர் திருவுள்ளத்திலே [6] திகழுமணிக்குன்றம் ஒன்றே ஒத்து நின்றபடி

---

1. உளுக்கினபடி - ஈடுபடுத்தினபடி. தனித்தனியே உளுக்கினபடியைக் காட்டுகிறார் 'நின்றூனில்' என்று தொடங்கி. 'நிலையார' என்பதற்கு இரண்டு பொருள் அருளிச்செய்கிறார் 'நின்றவன்' என்று தொடங்கி. என்றது, நின்றவன் இருந்தாற்செய்வது என்? என்றும், சாய்ந்தருளின் செய்வது என்? என்றும் ஆம்.

"நிலையார நின்றூன்தன் நீள்கழலே அடைநெஞ்சே"
என்பது, பெரியதிருமொழி. 6. 9: 8.

2. குழையும் வாண்முகத் தேழையைத் தொலவில்லி மங்கலம் கொண்டுபுக்கு இழைகொள் சோதிச்செந் தாமரைக் கண்ணபிரான் இருந்தமை காட்டினீர் மழைபெய் தாலொக்கும் கண்ணீரொடு அன்றுதொட்டும் மையார்த்திவள் நுழையும் சிந்தையள் அன்னேமீர் தொழும் அத்திசை யுற்று நோக்கியே.
என்பது, திருவாய். 6. 5: 5.

3. "எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே"
என்பது, திருமாலை. 23.

4. கழகம் - ஓலக்கம்.

5. நிற்பதும் ஓர் வெற்பகத்து இருப்பும் விண் கிடப்பதும்
நற்பெருந் திரைக் கடலுள் நானிலாத முன்னெலாம்
அற்புதன் அனந்த சயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பது மிருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே.
என்பது, திருச்சந்த விருத். 65.

6. "திகழு மணிக்குன்ற மொன்றே ஒத்து நின்றூன்
புகழும் புகழ் மற்றெனக்கும் ஓர் பொருளே"
என்பது, திருவாய். 8. 7. 5.

யும், [1]"செவ்வாய் முறுவலொடு எனதுள்ளத்திருந்த அவ்வாய் அன்றியான் அறியேன்" என்னும்படி இருந்தபடியும், [2]"நின்றும் இருந்தும் கிடந்தும்" என்கிறபடியே, தம் திருவுள்ளத்திலே கிடந்தபடியும் என்னுதல். அன்றிக்கே, [3]திருவூரகத்திலே நின்றபடியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்தபடியும் என்னுதல். 'நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்' என்று [4]ஆழ்வார் பாடாநிற்க, 'இவையெல்லாம் தொட்டிலிலே' என்று அருளிச்செய்தார் எம்பெருமானுர். தொட்டிற் பழுவைப் பிடித்துக்கொண்டு நிற்கும்படியும், தரித்து நிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும், அது தான் பொறுக்கமாட்டாமை சாய்ந்து கிடக்கும்படியும் சொல்லுகிறது. அன்றிக்கே, [5]போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறங்கி, அவள்போனவாறே எழுந்திருந்து நின்றவாறும், அடி ஓசைப்பட்டவாறே வந்து இருந்தபடியும், நிழல் ஆடினவாறே மூன்கிடந்த தானத்தே ஓராதவன்போல் கிடந்தவாறும் என்றுமாம். நினைப்பரியன - அவை ஒருகால் செய்துபோகச்செய்தேயும் இவர்க்கு இன்றுங்கூட நினைக்கவும் அரிதாயிராநின்றன. [6]"இமையோர் தமக்கும்,

---

1. "செவ்வாய் முறுவலொடு எனதுள்ளத் திருந்த
அவ்வா யன்றி யானறியேன் மற்றருளே"

என்பது, திருவாய். 8. 7. 7.

2. "நின்றும் இருந்தும் கிடந்தும் திரிதந்தும்
ஒன்றுமோ ஆற்றுன்என் நெஞ்சகலான்"

என்பது, பெரிய திருவந். 35.

3. ஆடவர்கள் எவ்வாறு அகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றூன் இருந்தான் கிடந்தான் இதுவன்றே
மன்றூர் மதிற்கச்சி மாண்பு.

என்னும் பழம்பாடல் இங்கு நினைவுகூர்தல் தகும்.

4. ஆழ்வார் - திருவரங்கப்பெருமாள் அரையர். பழுவை - தொட்டில் சட்டத்தை.

5. பெரிய திருமடல். கண்ணி. 31.

ஆக, "நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்" என்பதற்கு, எழுங்கையாகக் கருத்து அருளிச்செய்தபடி.

6. நினைக்கவும் அரிதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இமையோர் தமக்கும்' என்று தொடங்கி. இது, திருவிருத்தம். 98-ஆம் பாசுரம்.

செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெய் ஊண் என்னும் ஈனச்சொல்'' என்றூர் அன்றே முன்பே. ஒன்று அலா உருவாய் - இவர்தமக்கு ஒன்றே போருமாகாதே உள்ளதனையும் [1]நோவுபடுகைக்கு. ஒன்று அல்லாத பிரகாரங்களையுடையவாய். அருவாய நின்மாயங்கள்-கண்களால் பார்க்க முடியாமலிருக்கிற உன்னுடைய ஆச்சரியமான செயல்களை. நின்று நின்று நினைகின்றேன் - [2]நினைத்துத் தலைக்கட்டமாட்டார், நினையாதிருக்கமாட்டார். வருந்தி உன்னை நினைக்கப்புகுவன், நினைக்கமாட்டுகின்றிலேன். [3]அன்றிக்கே, நினைக்கைதான் தேட்டமாய் 'நினைக்கலாவதொருவழி ஏதோ'' என்று ஆராயாகின்றேன். உன்னை எங்ஙனம் நினைகிற்பன்-[4]மூற்றறிவினனும் வரம்பில் ஆற்றலையுடையவனுமான நீ, நான் உன்னை நினைக்

---

1. 'நோவுபடுகைக்கு' என்றதன்பின், 'பலவாஞல் சொல்ல வேண்டுமோ' என்பது எஞ்சிநிற்கிறது; கூட்டிப் பொருள் காண்க.

2. ''நின்று நின்று நினைகின்றேன் உன்னை எங்ஙனம் நினைகிற்பன்'' என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். நினைப்பரியன் ஒன்றலா உருவாய் அருவாய நின்மாயங்களான நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமான இவற்றை, தரித்து நின்று நினைக்கலாமோ? என்று வருந்தி நினைப்பன்; அவை என்னை உருக் குலையச் செய்கையாலே உன்னை எங்ஙனே அநுசந்திக்கவல்லேன்; உன் குணங்களைத் தரித்து நின்று என்னால் நினைக்க முடியாது என்பது முதல் வகை. இதனையே அருளிச்செய்கிறார் 'நினைத்துத் தலைக்கட்டமாட்டார்' என்று தொடங்கி நான்கு வாக்கியங்களாலே. 'நினைத்துத் தலைக்கட்டமாட்டார்' என்றது, ''நின்று நின்று நினைகின்றேன்'' என்றதன் பொருள். 'நினையாதிருக்கமாட்டார்' என்றது, ''உன்னை எங்ஙனம் நினைகிற்பன்'' என்றதன் பொருள். இந்தக் குணங்கள் ஈடுபடுத்துகையாலே நினைத்து முடிக்கமாட்டார், இந்தக் குணங்களை ஒழியச் செல்லாமையாலே நினையாதிருக்கமாட்டார் என்பது, மேற்கூறிய இரண்டு வாக்கியங்கட்குக் கருத்தாம். இவற்றையே விளக்குகிறார் 'வருந்தி' என்று தொடங்கி.

3. ஒன்றலா உருவாய் அருவாய நின்மாயங்களான நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் என்னை உருக்குலையச் செய்யுமவை; ஆகையாலே, நினைப்பரியன; 'தரித்து நின்று உன்னை அநுபவிக்கும் உபாயம் யாது' என்று பலகாலும் விசாரியாநின்றேன், அதனை நீயே நிச்சயித்து அருளிச்செய்யுமத்தனை போக்கி, நான் எங்ஙனே நிச்சயிக்கப்போகிறேன் என்பது, இரண்டாவது வகை. இதனை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

4. ''உலகம் உண்ட'' என்றதனாலே, 'மேல் பிரளயம் வரப்போகிறது' என்று முன்னரே விசாரித்து ரக்ஷிக்கையாலே முற்றறிவு தோன்றுகிறது. சிய வயிற்றிலே பெரிய உலகங்களையெல்லாம் அடக்குகையாலே வரம்பில் ஆற்றல் தோன்றுகிறது; இதனைத் திருவுள்ளம்பற்றியே 'மூற்றறிவினனும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

கலாவது ஒருவழியிட்டுத் தர வல்லையே. [1] 'தொண்டு எல்லாம் நின்னடியே தொழுது உய்யுமா கண்டு' - [2] அடியார்கள் அனைவரும் ஐஸ்வர்யார்த்திகள், ஆத்மபிராப்திகாமர், பகவத் பிராப்திகாமர் இவர்கள் முழுவதும் சென்று கிட்டித் தங்கள் தங்கட்குரிய பிரயோஜனங்களைப் பெற்று மீளுகிறபடியைக் கண்டு, 'தான் கணபுரம் தொழப்போயினள்'-தானும்கலந்து பரிமாறி மீளலாம் என்று போனாள்; 'தான்' - விஷயத்தையே பார்க்கு மித்தனையோ, தந்தாமையும் பார்க்கவேண்டாவோ. [3]ஒரு பிரயோஜனத்துக்காகப் போவார்க் கன்றே அதுகொண்டு மீளலாவது, தன்னையே பிரயோஜனமாகப் பற்றிப் போவார்க்கு மீளவிரகு உண்டோ. இப்படியேஅன்றே பகவத் பிராவண்ய முடையார்படி.

பாவியேற்கு - என்னை ஒழிந்தாரடங்கலும் நினைப்பாரும் நினைத்தவற்றைப் பெறுவாருமாய்க் கண்டீர்! செல்லுகிறது. [4] "நினைப்பவர்கட்கு மங்களத்தைக் கொடுக்கிறார்" என்கிறபடியேயன்றே நாடு அடங்கலும். ஒன்று நன்கு உரையாய் - [5]அருச்சுனனுக்குச் சொன்னற்போலே எனக்கும் ஒரு நல்

---

1. உலகத்தார் அவனை நினைத்துக் காரியம் கொள்ளாநிற்க, இவர்க்கு நினைக்கைதான் தேட்டமாவான் என்? என்ன, 'தொண்டு எல்லாம்' என்று தொடங்கி அதற்கு விடை யருளிச்செய்கிறார்.

தொண்டெலாம் நின்னடி யேதொழு துய்யுமா
கண்டுதான் கணபுரம் தொழப் போயினள்
வண்டுலாம் கோதைஎன் பேதை மணிநிறம்
கொண்டுதான் கோயின்மை செய்வது தக்கதே.

என்பது, பெரியதிருமொழி. 8. 2: 8.

2. இத்திருப்பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அடியார்கள்' என்று தொடங்கி. இதனால், வேறு பிரயோஜனங்களை விரும்புகின்றவர்கள் அந்தப் பிரயோஜனத்தின் பொருட்டு நினைக்கலாம், வேறு பிரயோஜனத்தை நினைக்காதவர்கட்கு ஈடுபாட்டுக்கு உடலாகையாலே நினைக்கப் போகாது என்பதனைத் தெரிவித்தபடி.

3. மேலே கூறியதை விவரணம் செய்கிறார் 'ஒரு பிரயோஜனத்துக்காக' என்று தொடங்கி.

4. ஆயாஸஃ ஸ்மரணே கஃ அஸ்ய ஸ்மருதோ யச்சதி ஸோபகம்
பாபக்ஷயஃ ச பவதி ஸ்மரதாம் தம் அஹர்நிஸம்

என்பது, விஷ்ணுபுரா. 1. 17: 78. ஸ்ரீ பிரஹ்லாதாழ்வான் கூறியது.

5. 'அருச்சுனனுக்குச் சொன்னற்போலே' என்றது, அருச்சுன [illegible] "மாஸுச: - துக்கப்படாதே" என்று சொன்னற்போலே என்றபடி.

வார்த்தை சொல்லவல்லீயே. [1] அவ்வளவாகாதே இவர் தம்மதும். [2] இனி, 'பேற்றிற்கும் விரோதி போகைக்கும் கடவேன்காண்' என்றான் அன்றே. [3] அவ்வளவேயன்றே வேண்டுவது, பின்பு வருமது தன்னடையே வருமதன்றே. [4] ஆத்ம ஸ்வரூபத்தின் சித்தியன்றே பேறு ஆகிறது. [5] பேற்றின்பலமான கைங்கரியம் சொல்லவேண்டாவே, [6] பேற்றின் அளவு மன்றே பிரமாணம் சொல்லுவது. அதற்கு அப்பாலுள்ளது பிரமாணத்துக்கு விஷயம்அன்றே. அப்படியே 'உனக்கும் நானே கடவேன்' என்று ஒருவார்த்தை சொல்லவல்லீயே. உலகம் உண்ட ஒண்சுடரே! - [7] உண்டி உடல் காட்டுமே. [8] நினைக்கை

---

1. ஆனால், அருச்சுனனைப்போன்று இவர்க்குச் சோகம் உண்டோ? என்ன, 'அவ்வளவாகாதே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவ்வளவாகாதே' என்றது, அவ்வளவன்றே என்றபடி.

2. அருச்சுனனுக்குச் சொன்னது யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி பேற்றிற்கும்' என்று தொடங்கி, 'இனி' என்றது, அவன் சோகித்த பின்னர் என்றபடி.

3. சரமஸ்லோகத்தில் "மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்கிறேன்" என்று விரோதிபோதல் மாத்திரமன்றே சொல்லிற்று, பேறு சொல்லவில்லீயே? ஆனபின்பு, இவர்க்கும் அவ்வளவு போருமோ? என்ன, அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொன்னால், இஷ்டப்பிராப்தி பொருளாற்றலால் போதருமாகையாலே சொல்லிற்று இல்லை என்கிறார் 'அவ்வளவேயன்றே' என்று தொடங்கி. 'அவ்வளவேயன்றே வேண்டுவது' என்றது, விரோதி போமளவே அன்றே வேண்டுவது என்றபடி.

4. பின்பு வருமது யாது? என்ன, 'ஆத்மஸ்வரூபத்தின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இதனால், சரமஸ்லோகத்தில் பிராப்தியும் (பேறு) பொருளாற்றலால் சொல்லப்பட்டுள்ளது என்பது போதரும்.

5. பேறு மாத்திரம் சொன்னால் போதியதாமோ? கைங்கர்யம் சொல்லவேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பேற்றின் பலமான' என்று தொடங்கி. 'பேற்றின்பலமான' என்றது, ஆத்ம ஸ்வரூபத்தை அடைதலாகிற பேற்றின் காரியமான என்றபடி. ஆசையாலே செய்யக்கூடியது ஆகையாலே அன்பு காரணமாகத் தன்னடையே வரும் என்ற வாறு.

6. அளவிடமுடியாதது ஆகையாலே, பிரமாணங்களைக் கொண்டு சொல்லமுடியாதது என்று வேறும் ஒருகருத்து அருளிச்செய்கிறார் 'பேற்றின் அளவும்' என்று தொடங்கி.

7. "உலகம் உண்ட ஒண்சுடரே" என்பதற்கு, பொருள், உலகத்தை அழுதுசெய்து, அதனுலே பேரொளிப்பிழம்பாய் விளங்குமவனே என்பது. ஆயின், உலகம் உண்டால் ஒண்சுடர் ஆகவேண்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உண்டி உடல் காட்டும்' என்று.

8. "நின்று நின்று நினைகின்றேன்" என்றதற்கு அருளிச்செய்த மூதற் பொருளினைத் திருவுள்ளம்பற்றி, "உலகம்" என்ற அஃறிணைச் சொல்லிற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நினைக்கை குற்றமாய்' என்று

குற்றமாய்விட்டதோ. [1] நினைவுங்கூடத் தேட்டமானால் நீயே செய்து தலைக்கட்டவேண்டாவோ. [2] இவை, ஆபத்துங்கூட அறிவிக்கமாட்டாத சமயத்திலே நீயே அறிந்து வயிற்றிலே வைத்து நோக்கி, இந்த உபகாரத்தை இவை அறியாதொழிய 'இது உன்பேறு' என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றஇருப் பான் ஒருவன் அல்லையோ. 'உன்பேருக ரகஷித்தாய்' என்ப தனை மெய்யேயன்றே சொல்லுகிறது. (6)

## 548.

ஒண்சுட ரோடிரு ளாய்நின்ற வாறும் உண்மை யோ
[டின் மையாய் வந்துஎன்
கண்கொளா வகைநீ கரந்துஎனைச் செய்கின்றன
எண்கொள் சிந்தையுள் நைகின் றேன்என் கரியமா
[ணிக்கமே! என்கண் கட்குத்
திண்கொள ஒருநாள் அருளாய்உன் திருவுருவே.

பொ - ரை :—உண்மையோடு வந்து ஒண்சுடராய் நின்றவாறும், இன்மையோடு வந்து இருளுமாய் நின்றவாறும், என்கண்களால் காண முடியாதவாறு உள்ளேமறைந்து நின்று நீசெய்கின்றவற்றையும் எண்ண வேண்டும் என்று கொண்ட மனத்தோடு வருந்தாநின்றேன்; என்கரிய மாணிக்கமே! உன் திருஉருவினை என்கண்களால் நன்கு காணும்படி ஒருநாள் திருவருள்புரிதல் வேண்டும்.

வி - சு :—உண்மை - மனத்தில்உளதாந்தன்மை. இன்மை - வெளிப்புறத்தில் காணப்படாத தன்மை. நின்றவாற்றையும் செய்கின்ற வாற்றையும் எண்ணுதல்கொள் சிந்தை என்க. என்கண்கட்கு ஒருநாள் திருவுருவைத் திண்கொள்ள அருளவேண்டும் என்கிறார்.

ஈடு :—எழாம்பாட்டு. [3] மானசஅநுசந்தானமேயாய் நிலை குலைந்துபோகாமல், கண்களால் கண்டு அநுபவிக்கவல்லே னும்படி செய்தருளவேண்டும் என்கிறார்.

---

தொடங்கி. என்றது, நினைக்கமாட்டாதே இருக்கிற உலகத்தைக் காத்தாய், சேதனனான வாசிக்கு நினைக்கிற என்னைக் காத்தல் ஆகாதோ என்றபடி.

1. "நின்று நின்று நினைகின்றேன்" என்றதற்கு அருளிச்செய்த இரண் டாவது பொருளுக்குத் தகுதியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'நினைவுங்கூட' என்று தொடங்கி.

2. "உலகமுண்ட ஒண்சுடரே" என்பதற்குப் பொருள் அருளிச்செய் கிறார் 'இவை ஆபத்துங்கூட' என்று தொடங்கி.

'மெய்' என்றது, சிலேடை; சரீரமும், சத்தியமும்.

3. "எண்கொள் சிந்தையுள் நைகின்றேன், என் கண்கட்குத் திண் கொள்ள" என்றதனைக் கடாவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

உண்மையோடு இன்மையாய் வந்து ஒண்சுடரோடு இருளு மாய் நின்றவாறும் - [1]எனக்கு உண்மையோடே ஒண்சுடராய் நிற்கும் மனத்தின்கண்ணே ; இன்மையோடு இருளாய்நிற்கும் புறத்திலே காண்கையில். [2] அன்றிக்கே, அடியார்கட்குத் தன் படிகளில் ஒன்றும் குறையாதபடி காட்டிக் கொடுத்து, அவர் கட்கு 'இவ்வளவு' என்று அளவிட்டு அறியும்படி பிரகாசித்து நின்றபடியும், அடியரல்லாதார்கட்குத் தன்படிகளில் ஒன்றும் தெரியாதபடிசெய்து, அதனுலே அவர்களுக்கு 'இல்லே' என் னும்படி இருளச்செய்து கொண்டு நின்றபடியும் என்னுதல் ; அடியார்கட்கு ஒண்சுடரோடு உண்மையாய் நின்றும், அடிய ரல்லாதார்க்கு இருளோடு இன்மையாய் நின்றும் என்க. வந்து என்கண் கொளாவகை நீ கரந்து என்னைச் செய்கின்றன - [3]இவையெல்லாம் தவிர, என்பக்கல் பரிமாறுகிற வேறுபாடும். [4]ஒண்சுடராதல், இருளாதல் இரண்டத்தில், ஒன்றுகப் பெற்றி லேன்; நடுவேநின்று கிலேசியாநின்றேன். முத்தர்க்குக் கூட்டு அல்லர், சம்சாரிகளுக்குக் கூட்டு அல்லர் ; அந்தரப்பட்டு நிற் கிறரன்றே இவர்தாம். [5]என்நெஞ்சிலே வந்து புகுந்து கண்க ளுக்கு விஷயமாகாமல் மறைய நின்று நீ என்னை நலிகிறவற் றையும். கண்கொளாவகை - கண்பார்க்காதபடி. எண்கொள் சிந்தையுள் நைகின்றேன் - எண்ணப் புக்கு, மனோரத மாத்

---

1. "உண்மையோடு ஒண்சுடராய், இன்மையோடு இருளாய்" என்று கூட்டித் தம் விஷயமாக அருளிச்செய்கிறார் 'எனக்கு' என்று தொடங்கி. இவ்வனம் கூட்டிப் பொருள் கூறுகைக்கு அடி, "என் கண்கொளாவகை நீ கரந்து என்னைச் செய்கின்றன" என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தது.

2. அடியார்கட்கு, உண்மையோடு ஒண்சுடராய், அடியரல்லாதார்க்கு, இன்மையோடு இருளாய் என்று கூட்டி வேறும் ஒரு பொருள் அருளிச் செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'தன்படிகள்' என்றது, சேஷித்வம் முதலானவைகள்.

3. இரண்டாவதாகக் கூறிய பொருளுக்குத் தகுதியாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவையெல்லாம்' என்று தொடங்கி. 'இவையெல்லாம்' என்றது, அடியார்கட்குப் பிரகாசிக்கையையும், அடியரல்லாதார்க்குப் பிரகாசி யாமையையும் குறித்தபடி. அடியார் - முக்தர். அடியாரல்லாதார் - சம்சாரிகள்.

4. அதனை விவரணம் செய்கிறார் 'ஒண்சுடராதல்' என்று தொடங்கி.

5. "வந்து என்.....செய்கின்ற" என்பதற்குப் பொருள் அருளிச் செய்கிறார் 'என் நெஞ்சிலே' என்று தொடங்கி.

நிரத்திலே நையாகின்றேன். [1]பெற்ற அம்சம்கொண்டு காரியம் கொள்ள மாட்டுகின்றிலேன். கைப்புகுந்ததுகொண்டு மேல்உள்ளது பெற விரகு பார்க்க மாட்டுகின்றிலேன்.

என் கரிய மாணிக்கமே - [2]கண்களுக்கு விஷயமாகிற பொருள்களைக்கொண்டு நான் காலம் போக்கமாட்டாதபடி, உன் வடிவின் சுவட்டினை அறிவித்தாயே. [3]இவ்வடிவினைப் பிரிந்தார்க்கு ஜீவிக்கவுமாம்' என்று தோற்றியிருந்ததோ. என் கண்கட்கு- [3]இவற்றின்விடாய் உனக்குத்தெரியுமன்றே; 'நான் பெற்றேன்' என்றும் ஆறியிராதவையன்றே? வேறொன்று இட்டு மறைக்கலாமவை அன்றே நிண்கொள்ள - 'மானசாநுபவத்தை பிரத்யக்ஷசமாநாகாரமாகப் பண்ணினேமே' என்று நீ சொல்லுமது எனக்கு வார்த்தையன்று காண். [4]கனவில் கண்ட காட்சிபோன்று மானசாநுபவம் ஆக ஒண்ணாது; நன்கு கண்கூடாகக் காணவேண்டும். இங்ஙன் செய்யப்போமோ? என்னில், [5]சிலர்க்கு எப்பொழுதும் காணக்கூடியவனாக இருக்கிறாயே. ஒருநாள் அருளாய் - [6]ஒருநாள் அமையும் என்கிறாரல்லர், விடாயின் பெருமை சொல்லுகிறார்; விடாய்கொண்டவன் 'ஒருகால் நாக்கு நனைக்க அமையும்' என்றாற்போலே. 'கிட்டினால் பின்னைவிடும்படி சொல்லுகி

---

1. "நைகின்றேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பெற்ற அம்சம்' என்று தொடங்கி. பெற்ற அம்சமாவது, மானசாநுபவம். 'காரியங் கொள்ளமாட்டுகின்றிலேன்' என்றது, 'இது உண்டாயிற்றே, மேலும் கிரமத்திலே பெறுகிறோம்' என்று அவ்வளவும் ஆறியிருக்கமாட்டுகின்றிலேன் என்றபடி. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'கைப்புகுந்தது' என்று தொடங்கி. 'கைப்புகுந்தது' என்றது, மானசாநுபவத்தை.

2. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கண்களுக்கு' என்று தொடங்கி. "கரிய மாணிக்கமே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவ்வடிவினை' என்று தொடங்கி.

3. "என்கண்கட்கு' என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவற்றின் விடாய்' என்று தொடங்கி. 'தெரியுமன்றே' என்றது, 'ஹ்ருஷீகேசன்' ஆகையாலே தெரியும் அன்றே என்றபடி.

4. "கண்ட கனவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்டகன் வலி கவர்வது வேமெய்"

என்பது, திருவாய்மொழி.

5. சிலர்க்கு - நித்தியசூரிகட்கு.

6. ஆசை அல்பமாய் "ஒருநாள்" என்கிறாரோ? எனின், அதற்கு வீடை அருளிச்செய்கிறார் 'ஒருநாள்' என்று தொடங்கி. விடும்படி - வீட்டுப் போகிறபடி.

ரேம்'என்று. உன்திருஉருவே-[1] இது ஏதேனும் உன்னதோ! நோக்கிக்கொண்டு கிடக்கைக்கு, [2] "உன்திருமேனி உனக்காக அன்று, உன் அடியார்க்கட்காகவே" அன்றே. (7)

## 549.

திருவு ருவுகி டந்த வாறும் கோப்பூழ்ச் செந்தா மரைமேல் திசைமுகன்
கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்
பொருவி லுன்தனி நாய கமவை கேட்குந் தோறும் என்
[நெஞ்சம் நின்றுநெக்கு
அருவிசோருங் கண்ணீர் என்செய்கேன் அடியேனே.

**பொ - ரை:**—அழகிய வடிவத்தோடு மஹாப்பிரளயத்தில் திருக்கண்வளர்ந்தருளினபடியும், திருவுந்தித் தாமரையிலே பிரமனுகிய சரீரத்திலே அந்தராத்மாவாக எழுந்தருளியிருந்து எல்லாவற்றையும் உண்டாக்கின செயல்களுமாகிய, ஒப்பு இல்லாத உன்னுடைய தனித்த தலைமை பொருந்திய செயல்களைக் கேட்குந்தோறும் என்னெஞ்சமானது ஒருபடிப்பட நின்று நிலைகுலைந்து கண்ணீரானது அருவிபோன்று விழாநின்றது; அடியேன் என்னசெய்வேன்?

**வி - சூ:**—கரு - சரீரம். வீற்றிருத்தல் - வேறு ஒன்றற்கில்லாத சிறப்போடு எழுந்தருளியிருத்தல். நாயகம் - தலைமை. நெக்கு - நிலைகுலைந்து.

**ஈடு:**—எட்டாம்பாட்டு. [3]உன்குணங்களையும் செயல்களையும் கேட்ட கேட்ட போதுதோறும் நையாநின்றேன், என்செய்கேன் என்கிறார்.

திருஉருவு கிடந்தவாறும் - காந்திமிக்க வடிவோடே சமுத்திரத்திலே திருக்கண் வளர்ந்தருளினபடியும். [4]காணத்தக்க வடிவத்தோடே சமுத்திரத்திலே திருக்கண் வளர்ந்தருளின படியும். கொப்பூழ்ச் செந்தாமரைமேல் திசைமுகன் கருவுள்

---

1. "திருவுருவே" என்ற ஏகாரத்திற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இது ஏதேனும்' என்று தொடங்கி.

2. ஜிதந்தா.

3. "தனிநாயகமவை கேட்குந்தோறும் என் நெஞ்சம்" என்றதனைக் கடாவித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'காணத்தக்க' என்று தொடங்கி.

வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும் - [1]ஏகார்ணவத்திலே படைத்தலிலே நோக்குள்ளவனுய்த் திருக்கண் வளர்ந்தருளிப் பின்பு அக்காலம் வந்தவாறே எழுந்திருந்து இவற்றை எல்லாம் உண்டாக்கினன், பிரஹ்மசிருஷ்டியளவும் செல்ல அதற்கு மேலே உள்ளனவற்றையெல்லாம் தானேஉண்டாக்கிப் பின்பு திருநாபியிலே உண்டான தாமரைப் பூவில் பிரமனுடைய பிறப்பிற்குத் தான் ஆதாரமாய், பின்பு அவன் தன்னைத் தனக்கு ஆதாரமாகக்கொண்டு இவ்வருகு உண்டான காரிய வர்க்கங்களை யடங்கலும் உண்டாக்கினபடியும். [2]"பிரமனே! உன்னுள் பிரவேசித்து நான் பின்பு, படைப்புத் தொழில் செய்வேன்" என்றும், "இந்தப் பிரமனும் உருத்திரனும் தேவர்களில் சிறந்தவர்கள்" என்றும் வருகிறபடியே, சதுர் முகனுகிற சரீரத்தைப் பெற்றுநின்று செய்கிறன் என்பதாம். 'இன்ன ஆசனத்தையுடையனுய்க் கொண்டு' என்றாற் போலே, '**கருவுள் வீற்றிருந்து**' என்கிறார். வீற்றிருத்தலாவது, தன் ஐஸ்வர்யத்தால் உள்ள மேன்மை தோன்ற இருத்தல். [3]பொற்குப்பியில் மாணிக்கம்போலே. படைத்திட்ட கருமங் களும் - உண்டாக்கின வியாபாரங்களும்.

பொருவில் உன் தனி நாயகம் அவை கேட்குந்தோறும் என்நெஞ்சம் நின்று நெக்கு அருவி சோரும் கண்ணீர் - ஒப் பின்றிக்கே அத்விதீயமாய் ஐஸ்வர்யப் பிரகாசகமான உன் குணங்களையும் செயல்களையும் கேட்குந்தோறும் என் நெஞ்ச மானது மலைநெகிழ்ந்தாற்போன்று நெகிழ்ந்து, கண்ணீர் அருவியாய்ப் பாயாநின்றது. என்செய்கேன் அடியேனே - பர தந்திரனை நான் காரியம் செய்துகொள்ளப் பார்த்திருக்கி

---

1. "கொப்பூழ்ச் செந்தாமரை" என்றதற்குச் சேர 'ஏகார்ணவத்திலே' என்று தொடங்கிப் பொருள் அருளிச்செய்கிறார். மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'பிரஹ்மசிருஷ்டி' என்று தொடங்கி. "கருவுள் வீற்றிருந்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன்தன்னைத் தனக்கு ஆதாரமாகக்கொண்டு' என்கிறார்.

2. ஆதாரமாகக் கொண்டதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பிரமனே!' என்று தொடங்கி.

"ஸ்ருஷ்டிம் ததஃ கரிஷ்யாமி தீவாம் ஆவிஶ்ய"

என்பது, விஷ்ணுதர்மம்.

"ஏதௌ த்வௌ விபுதஶ்ரேஷ்டௌ"

என்பது, நாராயணீயம் நாமகிர்வசன அத்.

3. பரபாகத்தால் வந்த அழகு எனக் கொண்டு பொருள் அருளிச்செய் கிறார் 'பொற்குப்பியில்' என்று தொடங்கி.

ஞாயோ.[1] வேறு ஒன்றிலே போதுபோக்கித் தரித்திருக்கவோ, நான் எதனைச்செய்வேன்? (8)

## 550.

அடியை மூன்றை இரந்த வாறும் அங் கேநின் றுழ்கட
[லும்மண் ணும்விண் ணும்
மூடிய ஈரடியால் முடித்துக்கொண்ட முக்கியமும்
நொடியு மாறவை கேட்குந் தோறும்என் நெஞ்சம் நின்த
[னக்கே கரைந்துகும்
கொடிய வல்வினையேன் உனைஎன்றுகொல் கூடுவதே.

பொ - ரை:—மூன்று அடிகளே யாசித்த விதமும், யாசித்த அவ்விடத்திலேயே நின்றுகொண்டு ஆழ்ந்த கடல்களையும் பூலோகத்தையும் தெய்வலோகத்தையும் இரண்டு அடிகளிலே முடியும்படியாக அளந்து மூடித்துக்கொண்ட முக்கியமும், அவற்றைச் சொல்லும்விதம் கேட்குந் தோறும் என்நெஞ்சமானது உன்னுடைய சிலகுணத்திலேயே கரைந்து உருகாநின்றது; மிகக்கொடிய பாவியேனை யான் தேவரீரைக் கூடுவது என்றுகொல்?

வி - மூ:—மூன்று அடியை இரந்தவாறும் என்க. கொடியுமாறு சொல்லும்வகை. உன்னைக்கூடுவது என்றுகொல் என்க.

ஐடு:— ஒன்பதாம்பாட்டு. [2] திரிவிக்கிரம அவதாரத்திற் செய்த செயலை அநுசந்தித்து அதனாலே உருக்குலைகின்ற நான்தரித்துநின்று உன்னை அநுபவிப்பது என்று என்கிறார்.

அடியை மூன்றை இரந்தவாறும் - [3] இவை அபேக்ஷிக்க மாட்டாத அன்றும் இவற்றின் ஹிதத்தைச் சிந்தனைசெய்யுமவனேயோ, இவை உண்டானாலும் சிறியதைப் பெரியது நலியாதபடி நோக்குவான் அவன் என்கிறது. 'நேராய்ப் போகாமே மூன்று அடியை இரந்தானாதலின் 'அடியை மூன்றை' என்கிறார். [5] இரண்டு அடி இரந்தானாகில் அவனைச் சிறை செய்ய

---

1. "அருவிசோரும் கண்ணீர் என்செய்கேன்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'வேறு ஒன்றிலே' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிதை அருளிச்செய்கிறார்.

3. மேல் திருப்பாசுரத்தோடு இயையுபடுத்திப் பொருள் அருளிச்செய்கிறார் 'இவை' என்று தொடங்கி.

4. நேராய் - சமமாய்.

5. இரண்டு அடி இரந்தாலாகில் நேராகப்போமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இரண்டு அடி' என்று தொடங்கி.

விரகு இல்லையே. அங்கே நின்று-கடக்க நான்கு அடி போனஞகில் 'வஞ்சனை செய்தான்' என்று அவன் வழக்குப் பேசலாமன்றே. ஆழ்கடலும் மண்ணும் விண்ணும் ஈரடியால் முடிய முடித்துக்கொண்ட முக்கியமும் - [1] இவருடைய நெஞ்சினைக் கரைக்க அடி இட்டபடி. பூமி ஆகாசம் முதலியவைகள் அடங்கலும் இரண்டு அடிகளிலே அடங்கும்படிக்குத் தகுதியாக அளந்து தலைக்கட்டிக்கொண்டபடியும். முக்கியம் - வேண்டற்பாடு. அதாவது, அடியார்கட்காகச்செய்த வஞ்சனையால் வந்த வேண்டற்பாடு இருக்கிறபடி. அன்றிக்கே, தன்னினின்றும் வேறுபட்ட எல்லாப்பொருள்களும் தன் திருவடிகளின் கீழே அகப்படுகையாலே வந்த வேண்டற்பாடு என்னலுமாம். நொடியுமாறு அவை கேட்குந்தோறும்-திருவுலகு அளந்தருளின சரிதையை வியாசர் முதலானுர் சொல்லாநிற்பர்கள், அவர்கள் சொல்லும் பிரகாரங்களைக் கேட்குந்தோறும். இதனல், தாம் சொல்லவேண்டா என்றபடி. நொடிதல் - சொல்லுதல். என்நெஞ்சம் நின்தனக்கே கரைந்துருகும் - [2] மஹாபலியைப்போலேஔதார்யம்கொண்டாடுகிறேன் அல்லேன், இந்திரனைப் போலே இராஜ்யம் ஆளுகிறேன் அல்லேன், என்னுடைய மனமானது உன்பக்கலிலே உருக்குலைந்து மங்கா நின்றது.

கொடிய வல்வினையேன்-[3]" எவனுடைய திருநாமங்களைச் சொல்லுதலால் ஒருமனிதன் பெரிய பயத்தில் நின்றும் விடுபடுகிறனே" என்கிறபடியே, திருநாம சங்கீர்த்தனம் மஹாபாதகங்களையும் போக்கும் என்று சொல்லாகிற்க, அதுதானே நிலைகுலைவதற்குக் காரணமாம்படி மஹாபாபத்தைச் செய்தேன். உன்னை என்றுகொல் கூடுவதே - நான் தரித்துநின்று உன்னை அநுபவிப்பது என்றே? அநுபவிப்பதற்கு வந்து கிட்டுவது என்றே? (9)

---

1. ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் 'இவருடைய' என்று தொடங்கி. வேண்டற்பாடு - பெருமை.

2. "நின்தனக்கே" என்ற ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மஹாபலியைப்போலே' என்று தொடங்கி.

3. திருநாமத்தைக் கேட்டு உருகுதல் பாபத்தின் பலமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எவனுடைய' என்று தொடங்கி.

"யத்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி"

என்பது, விஷ்ணுதர்மம்.

## 551.

கூடி நீரைக் கடைந்த வாறும் அமுதம் தேவர் உண்ண அசுரரை
வீடும் வண்ணங்களே செய்துபோன வித்தகமும்
ஊடு புக்கென தாவி யையு ருக்கி உண்டிடு கின்ற நின்தனை
நாடும் வண்ணம்சொல்லாய் நச்சு நா கணையாளனே!

பொ - ரை:—தேவர்கள் என்ன, அசுரர்கள் என்ன, இவர்களோடுகூடித் திருப்பாற்கடலைக் கடைந்தவிதமும், அதினின்றும் தோன்றிய அமுதத்தைத் தேவர்களே உண்ணும்படி, அசுரர்கள் அதனை விடக் கூடிய காரியங்களையே செய்துபோன ஆச்சரியமும் என்சரீரத்திற்குள் நுழைந்து என்உயிரை உருக்கி உண்டிடுகின்றன; நச்சு நாகணையானே! உன்னை அறியும் தன்மையைச் சொல்லாய்.

வி - சூ:—விடு என்பது, வீடு என நீண்டது; நீட்டல் விகாரம். வீடும் வண்ணம் - அழியும்படி என்றுமாம். வித்தகம் - ஆச்சரியம். நச்சு - நஞ்சு.

ஈடு:—பத்தாம்பாட்டு. [1]சமுத்திரத்தைக் கடைந்த ஆச்சரியமான செயலை நினைத்து நிலைகுலையாநின்றேன், தரித்து நின்று உன்னை அநுசந்திக்கவல்லேனும்படி விரகு சொல்ல வேண்டும் என்கிறார்.

கூடி நீரைக் கடைந்தவாறும் - [2]'நாம் சமமாகப் பிரித்துக் கொண்டு உண்ணக்கடவோம்' என்று அசுரர்களோடு கூடிச் சமுத்திரத்தைக் கடைந்தபடியும். [3]கடைந்துபிடித்துக் காணும் இவருடைய ஆவியை உருக்கிற்று. அமுதம் தேவர் உண்ண அசுரரை வீடும்வண்ணங்களே செய்து போன வித்தகமும் - பலவேஷியில் வந்தவாறே பிரயோஜனரூபமான அமுதத்தை அநுகூலவர்க்கமான தேவஜாதியே உண்டு, ஆசுரப் பிரகிருதிகள் 'அமுதத்தை நாய்க்கு இடு' என்று அதனைவிட்டு அவர்கள் பின்தொடரும்படிக்குத் தகுதியாக, காணத்தக்க பெண்வடி

1. திருப்பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பரஸ்பரம் சம்பந்தமில்லாதிருக்க, கூடுகையாவது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாம் சமமாக' என்று தொடங்கி.

3. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'கடைந்து' என்று தொடங்கி. கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்த செயலாலே இவருடைய ஆவியை உருக்கி என்பது நேர்பொருள். கடைந்து வெண்ணெயைப் பிடித்து உருக்க வேண்டும் என்பது வேறும் ஒருபொருள்.

வினைக் கொண்டுபோன ஆச்சரியமான செயலும். [1]"விஷ்ணு வானவர் மாயையினால் அசுரர்களை மயங்கச்செய்து பெண் வடிவைக் கொண்டவராய்" என்கிறபடியே, வானவரைப் பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார் கடைந்தவாற்றலும் வித்தகத் தாலும். ஊடு புக்கு - தோற்புரையே போகாமல் மர்மத்திலே புக்கு. எனது ஆவியை - [2]"சேதிக்கமுடியாதது, தஹிக்கமுடியாதது" என்கிற ஆத்மவஸ்துவை. உருக்கி உண்டிடுகின்ற நின்தன்னை - நீர்ப்பண்டமாக்கி, முடித்துவிடாதே ஒழிகிற உன்னை. [3]'புருஷோத்தமன் இப்படிச் செய்வதே!' என்று இக் குணத்தைச் சொன்னவளவிலே உருக்குலையாநின்றேன். தரித்து அநுபவிக்கும்படி நல்விரகு சொல்லவேண்டும். உம்மைத் தரிப்பிக்கப் போமோ நம்மால் என்ன, 'நச்சு நாகணை யானே' என்கிறார். என்றது, ஒருவன் பரமபோகியாய் நின்று தரித்து உன்னை அநுபவிக்கப் பண்ணிக் கொடுத்திலையோ; அப்படியே நானும் தரித்து உன்னை அநுபவிக்கும்படி செய்தருளவேண்டும் என்றபடி. (10)

## 552.

**நாக ணைமிசை நம்பி ரான்சர ணேசரண் நமக்கு என்று நாடொறும்**
**ஏக சிந்தையனாய்க் குருகூர்ச்சட கோபன்மாறன்**
**ஆக நூற்றந்தாதி ஆயி ரத்துள் இவையுமோர் பத்தும் வல்லார்**
**மாகவை குந்தத்து மகிழ்வெய்துவர் வைகலுமே.**

**பொ - ரை:**—திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே சயனித்திருக்கின்ற நம்பெருமானுடைய திருவடிகளே உபாயம் என்று,

---

1. பெண் வடிவம் கொண்டதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'விஷ்ணு வானவர்' என்று தொடங்கி.

"மாயயா மோஹயித்வா தாந் விஷ்ணுஸ் ஸ்திரீரூபமாஸ்தித:"
என்பது, விஷ்ணுபுரா.

நண்ணுத வாளவுண ரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார் மருவினிய
தண்ணார்ந்த கடன்மல்லைத் தலசயனத் துறைவாரை
எண்ணாதே இருப்பாரை இறைப்பொழுதும் எண்ணேமே.

என்பது, பெரிய திருமொழி. 2. 6 : 1.

2. ஸ்ரீ கீதை.

3. உருக்கும் பிரகாரத்தைக் காட்டுகிறார் 'புருஷோத்தமன்' என்று தொடங்கி. 'இப்படிச் செய்வதே' என்றது, இப்படிப் பெண்வடிவினைத் தொன்வதே என்றபடி.

திருக்குருகூரில் அவதரித்த மாறனை ஸ்ரீ சடகோபர் எப்பொழுதும் ஒரே எண்ணத்தையுடையவராய்த் தாம் உளராதற்பொருட்டு அருளிச் செய்த அந்தாதியாகிய ஆயிரம் திருப்பாசுரங்களுள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களையும் கற்கவல்லவர்கள் பரமாகாசமான ஸ்ரீவைகுண்டத்தையடைந்து எப்பொழுதும் ஆனந்தத்தையுடையவராயிருப்பர்.

வி - கு:—குருகூர்ச் சடகோபன் மாறன் நமக்குப் பிரான் சரணே சரண் என்று ஈடொறும் ஏக சிந்தையனாய் ஆக நூற்ற அந்தாதி என்க. வல்லார் வைகலும் மகிழ்வெய்துவர். மாகம் = ஆகாசம்.

ஈடு:—முடிவில், [1]இப்பத்தும் கற்றூர் பரமபதத்திலே சென்று நித்தியானுபவம் பண்ணப்பெறுவர் என்கிறார்.

நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று - திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய சர்வேசுவரன் திருவடிகளே நமக்கு உபாயம் என்று. ஆதிசேடனைப் படுக்கையாகவுடைத்தாயிருத்தல் அறப்பெரியவனுக்கு லக்ஷணமாகையாலே, சர்வாதிகனே சரண்யன் என்கிறது. [2]இவனுடைய உபாயபாவத்தில் புருஷகாரமாகவல்லார் அவள் பரிகரத்திலுள்ளாராகாதே. [3]படுக்கை கிடப்பது அந்தப் புரத்திலன்றே. அடியார்கள் விஷயத்தில் உபகாரசீலனுதலின் 'நம்பிரான்' என்கிறது. 'சரணேசரண்' என்ற ஏகாரத்தாலே, [4]வேறு உபாயத்தை விரும்பாத உபாயம் என்கிறது. இத்தால் 'ஏக' பதத்தில் அர்த்தம் சொல்லுகிறது. அன்றிக்கே, சம்சார சம்பந்தப்

---

1. "இவையும் ஓர் பத்தும் வல்லார், மாக வைகுந்தத்து மழ்கிவெய்துவர்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சர்வேசுவரனே உபாயமாகப் பற்றும்போது துவயத்திற் கூறியதைப் போன்று புருஷகாரம் முன்னுகப் பற்றவேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவனுடைய' என்று தொடங்கி. இதனால், திருவனந்தாழ்வானே புருஷகாரம் என்பது கருத்து.

3. இவன் பிராட்டி பரிகரமோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'படுக்கை கிடப்பது' என்று தொடங்கி.

4. "சரணே" என்ற ஏகாரத்திற்கு இரண்டு பொருள்: முதற் பொருள், வேறு உபாயங்களை விரும்பாமை. இதனையே அருளிச்செய்கிறார் 'வேறு உபாயத்தை' என்று தொடங்கி. இதனை விவரணம் செய்கிறார் 'இத்தால்' என்று தொடங்கி. 'ஏகபதம்' என்றது, சரம சுலோகத்திலுள்ள "ஏகம்" என்ற பதத்தை. "ஏகம்" என்ற பதம், ஏகாரத்தின் பொருளது; "என்னையே" என்பது பொருளாம். இரண்டாவது பொருள், 'சம்சார சம்பந்தப்பட்ட' என்று தொடங்குவது. இப்பொருள் தன்னையே விவரணம் செய்கிறார் 'இஃதொழிய' என்று தொடங்கி.

பட்ட ஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமே பலியாநின்ரூலும் அப்படி அடிக்கழிவு செய்வார் ஒருவரல்லரே இவர். மஹா விஸ்வாசமாகிறது, இஃது ஒழிய வேரொன்றில் கால்தாழா தொழிகை ஆம். நாடொறும் ஏகசிந்தையனுய் - புறம்பு உண்டான சிந்தனைபோய், இவ்விஷயத்திலே ஒரேதன்மையான எண்ணத்தையுடையராய். [1]பொருள்ஈட்டுதற்குச் செல்வார்ஒருவர் ஒருசிராயை நம்பி நாலாண்டு பதிற்ரூண்டு இழியாநின்ரூர்களன்ரே, பேற்றின் சீர்மையைப் பார்த்தால் அவ்வளவாகிலும்வேண்டாவோ இவ்விஷயத்தில். [2]சம்சாரத்தின் இயல்பால் வியசனங்கள் தொடர்ந்துவந்தாலும் உறுதிகுலையாமே போருமதன்ரே ஸ்வரூபமாவது. குருகூர்ச் சடகோபன் மாறன் - [3]அவையெல்லாவற்றிற்கும் அடியான பிறப்பு இருக்கிறபடி. ஆக நூற்றஅந்தாதி ஆயிரத்துள் இவையும் ஓர் பத்தும் வல்லார் - தாம் உளராகைக்காகச் சொன்ன அந்தாதி ஆயிரத்திலும் இப்பத்தினைக் கற்கவல்லவர்கள். மாக வைகுந்தத்து - மஹாகாசம் என்று பேரையுடைய ஸ்ரீவைகுண்டத்திலே. வைகலும் மகிழ்வு எய்துவர் - காலம் என்னும் ஒருபொருள் உள்ளவரையிலும் நித்தியஅநுபவம் பண்ணப்பெறுவர். [4]'அநுசந்தானத்துக்குத் தடை வாராதபடி பண்ணியருள வேண்டும்' என்று பிரார்த்திக்க வேண்டும்படியான சம்சாரத்தைவிட்டு, பகவானுடைய அநுபவத்துக்கு நழுவுதல் ஒரு நாளும் இல்லாத பரமபதத்திலேபுக்கு அநுபவிக்கப்பெறுவர் என்றபடி. 'மா' என்றது, மஹத் என்னும் தத்துவத்தினை. 'கம்' என்றது ஆகாசம். (11)

---

1. இத்தனை அருமையானால், "மித்ரபாவேந" என்றும், "தொழுது, எழுதும் என்னுமிது முகையாதலின்" என்றும் பிரபத்தியை எளிதாகச் சொல்லுவான் என்? என்னில், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பொருளீட்டுதற்கு' என்று தொடங்கி. சிராய் - மரச்சக்கை; ஈண்டுக் கப்பலைக் காட்டுகிறது.

2. "நாடொறும் ஏக சிந்தையனுய்" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'சம்சாரத்தின் இயல்பால்' என்று தொடங்கி. இதனால், இது ஸ்வரூபமாகையாலே சாதனத்தில் சேராது என்றபடி.

3. "குருகூர்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவை யெல்லாவற்றிற்கும்' என்று தொடங்கி. ஆக - தாம் உளராகைக்காக.

4. இத்திருவாய்மொழியில் சொன்ன பொருளுக்குத் தகுதியாகப் பலம் அருளிச்செய்கிறார் 'அநுசந்தானத்துக்கு' என்று தொடங்கி.

## திருவாய்மொழி நூற்றந்தாதி

பிறந்துலகம் காத்தளிக்கும் பேரருட்கண் ணா! உன்
சிறந்தகுணத் தாலுருகுஞ் சீலத்—திறந்தவிர்ந்து
சேர்ந்தநுப விக்குநிலை செய்யென்ற சீர்மாறன்
வாய்ந்தபதத் தேமனமே! வைகு. (50)

---

ஐந்தாம்பத்து ஈட்டின் தமிழாக்கம்

முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

நம்பிள்ளை நற்றாள் வாழ்க.

வடக்குத் திருவீதிப் பிள்ளை மலரடி வாழ்க.

மாறன் மலரடி வாழ்க.



——(o)——

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

மாறன் மலரடி வாழ்க.

## பிற்சேர்க்கை I

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

——(o)——


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அகற்ற கீவைத்த | 303 | ஊரவர் கவ்வை | 107 |
| அங்குற்றேனல்லேன் | 277 | ஊரெல்லாந்துஞ்சி | 151 |
| அடியை மூன்றை | 452 | ஊர்ந்தசகடம் | 99 |
| அம்மானுழிப்பிரான் | 26 | எங்ஙனேயோ | 202 |
| அரியேறே! | 347 | எம்மானே! என் | 325 |
| அழுவன்தொழுவன் | 342 | எய்தக் கூவுதல் | 292 |
| அறிவரியபிரானை | 234 | என்கொள்வன் உன்னை | 17 |
| அன்னை யென்செய்யில் | 120 | என்செய்யுமூரவர் | 90 |
| ஆராவமுதே! | 318 | என்நான் செய்கேன் | 333 |
| ஆரென்னையாராய்வார் | 168 | என்றுகொல் தோழிமீர் | 374 |
| ஆவாரார் துணை | 31 | என்னெஞ்சிலில் | 207 |
| ஆவிகாப்பாரினியார் | 155 | ஏனமாய் நிலம் | 296 |
| ஆறெனக்கு நின் | 308 | ஒண்சுடரோடு | 447 |
| ஆனைளுடையான் | 34 | கடல்ஞாலம் | 241 |
| இசைவித்தென்னை | 352 | கடியன் கொடியன் | 113 |
| இடங்கொள்சமயம் | 50 | கண்டோம் கண்டோம் | 45 |
| இரைக்குங் கருங்கடல் | 145 | கண்ணபிரானை | 21 |
| இறுக்குமிறை இறுத்து | 59 | கருளப்புட்கொடி | 283 |
| இனவேய்மலை | 253 | கலியுக மொன்றும் | 64 |
| உண்ணவானவர் | 435 | கழல் வினைபூரிப்ப | 401 |
| உரைக்கின்ற முக்கண் | 257 | கழியமிக்கதொர் | 232 |
| உழலை யென்பின் | 357 | கனிவாய் துன்பம் | 350 |
| உள்ளன மற்றுளவா | 14 | கள்ள வேடத்தைக் | 429 |
| உறங்குவான்போல் | 194 | கற்குங்கல்வி | 245 |
| உற்றார்கள் எனக்கு | 255 | காண்கின்ற நிலம் | 247 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| காண்பதெஞ்ஞான்று | 394 |
| காப்பாரார் இவ்விடத்து | 176 |
| கார்வண்ணன் | 37 |
| கூடி நீரைக் கடைந்த | 454 |
| கூந்தல் மலர் மங்கை | 264 |
| கையார் சக்கரத்து | 4 |
| கையுள் நன்முகம் | 227 |
| கொடியவினையாதும் | 260 |
| கொன்றுயிர் உண்ணும் | 54 |
| கோலம் கொள் சுவர்க்கம் | 262 |
| சூடுமலர்க் குழலீர் | 379 |
| சூழ்கண்டாய் என் | 344 |
| செய்கின்ற கிதி | 249 |
| செய்கின்ற தென் | 52 |
| செலக்காண்கிற்பார் | 338 |
| திரியுங் கலியுகம் | 47 |
| திருவுருவு கிடந்தவாறும் | 450 |
| திறம்பாமல் மண் | 251 |
| தெய்வங்காள் | 183 |
| தெய்வநாயகன் | 312 |
| தொல்லருள் நல்வினை | 402 |
| நன்னலத்தோழிமீர்காள் | 390 |
| நாகணைமிசை நம்பிரான் | 455 |
| நாணும் நிறையும் | 134 |
| நாமங்களாயிரம் | 405 |
| நாள்தொறும் வீடின்றியே | 399 |
| நிச்சலும் தோழிமீர்காள் | 385 |
| நிறுத்தினும் உள்ளத்து | 56 |
| நிறைந்த வன்பழி | 220 |
| நின்றவாறும் | 438 |
| நின்றிடும் திசைக்கும் | 211 |
| நின்றுருகுகின்றேனே | 191 |
| நீங்கநில்லாக் கண்ணநீர் | 214 |
| நீயும் பாங்கல்லிகாண் | 158 |
| நோற்ற நோன்பிலேன் | 269 |
| பக்கம் நோக்கி | 216 |
| பாதங்கள் மேலணி | 397 |
| பிறந்தவாறும் | 413 |
| பின்நின்ற காதல் | 172 |
| புள்ளின்வாய் | 305 |
| புறமறக் கட்டி | 23 |
| பெய்யும் பூங்குழல் | 424 |
| பெண்பிறந்தா ரெய்தும் | 164 |
| பேய் முலையுண்டு | 130 |
| பொலிக பொலிக | 42 |
| போனுய் மாமருதின் | 9 |
| மாசறுசோதி | 81 |
| மாறுசேர் படை | 287 |
| மானேய் நோக்கு | 364 |
| மிக்கவுலகுகள் | 63 |
| முன்நின்றுய் என்று | 230 |
| மேலும் வன்பழி | 218 |
| மேலாத் தேவர்களும் | 29 |
| மேவித் தொழுதுய்ம்மின் | 61 |
| ய்ாமடலூர்ந்தும் | 140 |
| வதுவை வார்த்தையுள் | 420 |
| வந்தருளி என்நெஞ்சிடம் | 298 |
| வலையுள் அகப்படுத்து | 126 |
| வாராவருவாய் | 355 |
| வெஞ்சுடரில் தானடும் | 188 |


செய்யுள் அகாதி மூற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானர் சீயர் திருவடிகளே அரண்.

ஸ்ரீஃ

# பிற்சேர்க்கை II

—(o)—

## வியாக்கியானத்தில் வந்துள்ள

# ஐதிஹ்யங்கள்

'மித்ரபாவேந' என்கிற சுலோகத்திலே, எம்பார், 'சர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞானமும் மறதியும், சர்வசக்திக்கு ஒரு அசக்தியும் உண்டு' என்று அருளிச்செய்வர். பக். 8.

இராவணன் மாயாசிரசைக் காட்டினபோது மற்றைய பெண்கள் மனத்தொடு படாமலே அழுமாறுபோன்று, தன் ஆற்றுமையாலே கூப்பிட்டுச் சத்தையோடே இருந்தாள், இவ் வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பான் என்? என்று பட்டரைச் சிலர் கேட்க, 'ஜீவனத்திற்கும் முடிதலுக்கும் நிமித்தம், ஞான அஜ்ஞானங்கள் அல்ல; அத்தலையில் சத்தை யும் அது இல்லாமையுமாயிற்று. அதற்கு அழிவில்லாமை யாலே இருந்தாள்' என்று அருளிச்செய்தார். பக். 78, 79.

ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர், வலியாக அபி நயித்துப் பாடாநிற்க, எம்பெருமானர் திருக்கண்களைக் காட்டி யருளினர். பக். 125.

இத் திருவாய்மொழியை ஆழ்வான், இராஜேந்திர சோழ னில் சந்தியா சதஸ்ஸிலே நிர்வஹித்துக்கொண்டிருக்க, 'ஆம ருவி நிரைமேய்த்தான் நம்பியார்' என்பார் நூறு வயது போந் திருப்பார் ஒருவர், நடுங்க நடுங்க எழுந்துநின்று 'ஆழ்வான்! 'தலைமகள் தலையாலே வணங்கப்பெறுமோ?' என்ன, 'பெறும், சிஷ்டாசாரம் உண்டு காணும்; ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் தலையாலே தொழுதலையும் செய்வாய் என்று அநுஷ்டித் தாள் காணும்' என்று அருளிச்செய்தார். பக். 128, 129.

அனந்தாழ்வான் பணித்தாராக நஞ்சீயர் வந்து பட்டர் இடத்தில் 'வில்லைக் கொண்டு வா, ஆசீவிஷத்திற்கு ஒத்த பாணங்களையும் கொண்டு வா' என்றபோது கடல் கீழ் மண் கொண்டு மேல் மண் எறிந்தாற்போலேயாயிற்று, இவள் 'மடல்ஊர்வன்' என்ற துணிவைக் கேட்டு அவன்தன் சர்வாதி கத்வம் கலங்கினபடி என்று அருளிச்செய்தார். பக். 146.

கூரத்தாழ்வான், ஒரளவிலே நங்கையார் திருவடி சார்ந்த வாறே, "இன்னமும் ஒருவிவாகம் செய்துகொள்ளுவோமோ' என்று ஆராய்ந்து, 'இதுதான் கிரமத்திலே வந்து ஆழ்வானுக்கு விரோதமாகத் தலைக்கட்டும்; இனித்தான், 'பிரஹ்ம சாரியாகவாவது இல்லறத்தானாகவாவது வானப்பிரஸ்தனாகவாவது சந்நியாசியாகவாவது ஒருவன் இருக்கவேண்டும். ஆபத்து இல்லாத சமயத்தில் ஒருநாள்கூட ஓர் ஆச்ரமத்திலும் சேராதவனாக இருக்கக்கூடாது' என்று சாஸ்திரம் சொல்லா நின்றது. இந்தச் சாஸ்திரத்தின் அர்த்தத்தை அநுஷ்டிப் போமோ! பாகவத பரிசர்யையைச் செய்வோமோ! என்று ஆராய்ந்து 'அந்தச் சாமான்ய தர்மத்திற்காட்டில் இந்த விசேஷ தர்மமே பிரபலம்' என்று அதனைத் தவிர்ந்தார். பக். 203, 204.

ஆண்டாள், ஒருநாள் பட்டரையும் சீராமப் பிள்ளையையும் காட்டி, 'இவர்கள் விவாகத்தைச் செய்வதற்குரிய பருவத்தை அடைந்தார்கள், பேசாதே இருக்கிறது என்?' என்ன, 'ஆகில் நாளைப் பெருமாள்பாடே போனவாறே வரக்காட்டு' என்ன, அவர்களையும் கொண்டு திருமுன்பே நிற்கச்செய்தே, பெருமாள் அருளப்பாடிட்டு, 'ஒன்று சொல்லுவாய்போலே இருந்தாயே!' என்று திருவுள்ளமாக, 'இவர்கள் விவாகத்தைச் செய்வதற்குரிய பருவத்தினர் ஆனார்கள் என்று சொல்லா நின்றார்கள்' என்ன, 'நாமே ஒத்ததான இடத்தில் சம்பந்தம் செய்து தருகிறோம்' என்று அருளிச்செய்ய, பிற்றை நாள் மன்னியைக் கொடு வந்து நீர்வார்த்தார்கள். ஆக, அத்தலையாலே வருமதுஒழிய, தாம்தாம் ஒன்றை ஆசைப்படுகையும் கூடப் பழி என்றிருக்கும் குடிகாணும். பக். 221.

ஒருநாள் சீயர் கோயிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு, 'ஈசுவரனுக்கு ஸ்வரூப வியாப்தியேயோ உள்ளது? விக்ரஹ வியாப்தியும் உண்டோ?' என்று கேட்க, "சர்வவிஷயமாக ஸ்வரூப வியாப்தியே உள்ளது. உபாஸக விஷயத்தில் அவர்கள்பக்கல் அநுக்ரஹத்தாலே, அவர்கள் பற்றுக்கோடாகப் பாவித்த விக்ரஹத்தோடே எழுந்தருளியிருக்கும். இனி, ஸ்வரூபவியாப்திக்குப் பிரமாணம் கண்ட இடம் சாமானிய விஷயமாகிறது. விக்ரஹ வியாப்திக்குப் பிரமாணம் கண்ட இடம் விசேஷ விஷயமாகிறது" என்று பணித்தானும். பக். 225, 226.

பட்டர், ஸ்ரீ புஷ்பயாகம் அணித்தானவாறே, நஞ்சீயரைப் பலகாலும் இயல் கேட்டருளுவர். ஒரு கோடையிலே, திருவீதியிலே தீரை விட்டு எழுந்தருளியிருந்து இப்பாட்டை இயல் சொல்லும்,என்று சீயரை அருளிச்செய்து, தாம் இதனை அநுசந்தித்திருந்து, பின்பு தாமும் இப்பாசுரத்தை இயல் சொல்லி, இயமம், நியமம் முதலிய கிரமத்தாலே தியானம் செய்யத்தக்க ஸர்வேசுவரனை மனனம் செய்து புறம்புள்ள பராக்கை அறுத்து, அநுசந்திக்கப் புக்காலும் சுக்கான் பரல் போன்று இருக்கக்கூடிய நெஞ்சுகளைப் பதம் செய்யும்படித் தார்மிகராயிருப்பார் இவை சில ஈரச்சொற்களைப் பொகட்டுப் போவதே! என்று அருளிச்செய்தார்; நஞ்சீயர், இவ்வார்த்தையை உருத்தோறும் அருளிச்செய்வர் என்று அருளிச் செய்வர். பக். 299.

ஆப்பான் திருவழுந்தூர் அறையர் கையிலே தாளத்தை வாங்கி, 'வந்தருளி, வந்தருளி' என்று மேல்போகமாட்டாதே படுவராம். பக். 300.

வடதேசத்திலே லோக சாரங்க மஹாமுனிகள் வசித்துக் கொண்டிருக்க, இங்கேயுள்ள ஒருவன் அங்கு ஏறச்செல்ல, 'பிள்ளாய்! தென்தேசத்தில் விசேஷம் என்?' என்று கேட்க, 'திருவாய்மொழி என்ற ஒரு பிரபந்தம் அவதரிக்க, அதனைச் சிஷ்டர்கள் மேற்கொண்டு போரக் கொண்டாடிக் கொடு போகாநின்றார்கள்' என்ன, 'அதிலே உனக்குப் போவது ஒரு பாசுரத்தைச் சொல்லிக் காணாய்' என்ன, 'ஆராவமுதே! என்கிற இத்தனையே எனக்குப் போம்' என்ன, 'நாராயணன் முதலான நாமங்கள் கிடக்க இங்ஙனேயும் ஒரு பேர் உண்டாவதே!' என்று அதனைக் காண மிக்க ஆவல் உடையவராய், 'இச்சொல் நடையாடுகிற தேசத்து ஏறப் போவோம்' என்று அப்பொழுதே புறப்பட்டுப் போந்தார். பக். 319.

'இதுதான் நான் அநுபவித்தேன்' என்று சீயர் அருளிச் செய்வர். பட்டர் திருவடிகளை ஆஸ்ரயித்துப் பின்பு ஒருகால் மேல்நாட்டுக்கு எழுந்தருளி மீண்டு பெரிய விரைவோடே 'திருநாளுக்கு உத்தவேணும்' என்று வர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே நினைவின்றிக்கே காவிரி பெருகிக் கிடக்க; இராத்திருநாள் எருந்தருளி இங்குண்டான சம்பிரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப்பெறுதொழிவ

தாய்க் கொண்டு போர நோவுபட்டோம் என்று அருளிச் செய்வர். பக். 363.

ஜனகாதப் பிரஹ்மராயர் திருமுடிக் குறையிலே ஒரு மரம் வெட்டப்புக, அதனை எம்பார் கேட்டு 'அல்லாளப் பெருமானே! ஈசுவரவிபூதியை அழிக்கப் பார்த்தாயோ' என்ன, இவர் சொல்லும் வார்த்தையைக் கேட்கைக்காக, 'ஈசுவரவிபூதி அல்லாத இடமுண்டோ' என்ன, 'அவைபோல் அல்ல காண் இவை; சார்வபௌமனை ராஜாவும் தேவியுமாக முற்றூட்டாகக் குடநீர் வார்த்து ஆக்கும் சோலைபோலே; பெருமாளும் பெரிய பிராட்டியாருங்கூடக் கைதொட்டு ஆக்குமவை காண்' என்று அருளிச்செய்தார். பக். 371.

நல்லான், பட்டர் திருவடிகளை ஆஸ்ரயித்து நெடுங்காலம் சேவித்து, பின்பு மரணதசையிலே பட்டர் எழுந்தருளி, 'என் நினைத்திருந்தாய்' என்ன, 'ஒரு சர்வசக்தி உபகரிக்கும் போது இங்ஙனம் கனக்கவாகாதே உபகரிப்பது' என்று நினைத்திருந்தேன் என்ன, 'அது என், உன் தேசத்தைவிட்டு உறவினர்களை விட்டு நெடுந்தூரம் போந்து இங்ஙனம் நோவு பட்டுத் திருவடி சேர்க் கிடந்தாயாகில் இங்கு உபகாரம் என்?' என்ன, 'வேறு தேசத்திலே இருந்து பொருளல்லாதவனுய் விழுந்து போகக்கடவ என்னை இவ்வளவும் அழைப்பித்து, உம்முடைய திருவடிகளை அனுபவச்செய்து ருசியை விளைப்பித்து, இத்தேசத்திலே உம்முடைய கண்வட்டத்திலே சரீரம் நீங்கும்படி செய்தானே' என்ன, 'ஆனாலும், தானுக, அபிமானித்த சரீரம் போகாநிற்க, நீ இங்ஙனம் நினைத்திருந்தது என் கொண்டாடி?' என்ன, 'பிரமாணம்கொண்டு நினைத்திருந்தேன்' என்றான். பக். 372.

ஆழ்வார்கள் கிருஷ்ணவதாரத்திலே போரமண்டியிருப்பதற்குப் பட்டர் அருளிச்செய்த சமாதானம், பக். 411.

பண்டு ஓர் அரசன் 'சிவபிரானே பரம்பொருள்' என்று எழுதி 'எழுத்திட்டுத் தாருங்கோள்' என்ன, அப்படிப் பலரும் எழுதி எழுத்திடாநிற்கச் செய்தே, ஒருவர் "வாராய், நீ இவ்வோலை கெடாமல் நோக்கி வைத்தாலன்றே இவனுடைய பரத்துவம் சாதிக்கலாவது; நீ நினைக்கிற தேவதைக்கு உண்டான உயர்வுகள் 'சர்வேசுவரனுலே' என்று பிரமாணங்கள் சொல்லாநின்றன; ஆனபின்பு, இன்று நீ சொல்ல, நான் எழுத்திட்டுப் போகின்றேன்; நாளை ஒரு விவக்ஷிதன்

தோன்றி 'இவன் அறிவீனனுயிருந்தானே!' என்னக்கேட்பதில் இன்று நீ நினைத்ததைச் செய்துகொள்ளமாட்டாயோ என்றார். பக். 433, 434.

போரப் பாடவல்லாராய் இருப்பார் ஒருத்தர் வடக்கு நின்றும் போந்து 'பெருமாளைத் திருவடி தொழவேணும்' என்று வர, ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் தீர்த்தத்தின் அன்று இருந்து திருமாலையைப் பாடிச் சமைந்து பெருமாளை மத்தகஜங்களை ஏத்துமாறுபோலே ஏத்தி வசமாக்கிக் கணிசம் கொண்டு, 'நாயன்தே, தேவரீர் திருவடிகளுக்குப் போர நல்லான் ஒருத்தன் எழுநூற்றுக்காதம் ஆறு உண்டு தேவரைத் 'திருவடி தொழவேணும்' என்று வருகிறது; இவனை அழைத்துக்கொண்டு சம்பாவனை பண்ணியருள வேணும்' என்ன, பெருமாளும் 'அப்படியே செய்கிறோம்' என்று திருவுள்ளமாய் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக்கீழ் நின்றும் அவர் நின்றவிடத்தளவும் செல்ல நாலுகோல் தறை திருக்கைத் தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பஞ் செய்வார்களை யெல்லாம் அருளப்பாடிட்டு, 'வாரீர்கோள், இவன் வந்த தூரத்துக்கெல்லாம் போருமோ நாம் இவனுக்குச் செய்ததரம்' என்று திருவுள்ளமானார். பக். 439.

ஒருநாள் ஸ்ரீ வைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாக [illegible]ட்டிக்கொண்டு வந்து எம்பெருமானார்க்குக் காட்ட, போரத் திருப்தராய், இவனையும் கூடக்கொண்டு பெருமாள்பாடே புக்கு, 'நாயன்தே! இவன் திருவரைக்கு ஈடாம்படி இவன் தொட்டபடி பார்த்தருளவேணும்' என்று காட்ட, கண்டு போர உகந்தருளி எம்பெருமானரை அருளப்பாடிட்டு, 'இவனுக்காக, கம்சனுடையய[illegible]ங்கொல்லி நம் திறத்திற்செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவுள்ளமானார். பக். 440.

---

ஸ்ரீ:

# பிற்சேர்க்கை III

—:o:—

## பெரியோர்கள் உரைத்த உரைநயங்கள் உள்ள இடங்கள்

1. ஆளவந்தார் :—

"தேவார் கோலத்தொடும் திருச்சக்கரம் சங்கினெடும் ஆஆ வென்றருள் செய்து அடியேனெடு மானனே" பக். 33.

"வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்கநின்றதும்" பக். 434.

2. பிள்ளான் :—

"கொடிய என்நெஞ்சம் அவனென்றே கிடக்கும்" பக். 117.

"ஆறு எனக்கு நின்பாதமே சரணகத் தந்தொழிந்தாய்" பக். 309.

"மானேய் நோக்குநல்லீர்" பக். 364.

"சூடு மலர்க்குழலீர்" பக். 380.

"எம்மை நீர்நலிந்து என்செய்தீரோ" பக். 387.

"பத்தாந்திருவாய்மொழி முன்னுரை" பக். 413.

"அது இது உது என்னலாவனவல்ல" பக். 423.

3. எம்பெருமானர் :—

"தேவார் கோலத்தொடும்...ஆனனே" பக். 33.

"இரண்டாந் திருவாய்மொழி அவதாரிகை" பக். 40.

"வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" பக். 434.

"நின்றவாறு மிருந்தவாறும் கிடந்தவாறும்" பக். 443.

4. கூரத்தாழ்வான் :—

"பத்தாந் திருவாய்மொழி முன்னுரை" பக். 413.

5. எம்பார் :—

"பத்தாந் திருவாய்மொழி முன்னுரை" பக். 413.

6. பட்டர் :—

"என்கொள்வன் உன்னைவிட்டு" பக். 17.

"ஆறெனக்கு நின்பாதமே சரணகத் தந்தொழிந்தாய்" பக். 309.

7. நஞ்சீயர் :—

"பொலிக பொலிக பொலிக" பக். 43.

"நாடகம் செய்கின்றவே" பக். 52.

"கொடிய என்நெஞ்சம் அவனென்றே கிடக்கும்" பக். 118.

"கொடியான்" பக். 261.

"கோலம்கொள் சுவர்க்கமும் யானே" பக். 263.

8. ஆண்டான் :—

"உற்றார்களை அழிப்பேனும் யானே" பக். 256.

"அலப்பாய் ஆகாசத்தை நோக்கி" பக். 341.

9. பிள்ளையமுதனார் :—

"அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர்" பக். 27.

10. ஆப்பான் திருவழுந்தூர் அரையர் :—

"பெரியஇதயுகம் பற்றி" பக். 49.

"ஆறு எனக்கு நின்பாதமே சரணகத்தந்தொழிந்தாய்" பக். 311.

11. உய்ந்த பிள்ளை :—

"பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்" பக். 388.

12. அம்மங்கியம்மாள் :—

"தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல்" பக். 403.

13. மூன்புள்ள முதலிகள் :—

"செழுமா மணிகள்சேரும் திருக்குடந்தை" பக். 355.

ஸ்ரீ:

## பிற்சேர்க்கை IV

—(o)—

## வியாக்கியானத்தில் வந்துள்ள உவமைகள்

இரண்டு கிட்டம் தம்மிலே சேரக் கிடக்க அவற்றிலே ஒன்று பொன்னுய் இருக்குமாறு போலே. பக். 1.

அமுதம் இருக்க விஷத்தை விரும்புவாரைப் போலே. பக். 3.

பெருவிலையனை இரத்தினம்போலே. பக். 15.

பரமைகாந்திகளைப் போலே. பக். 18.

சலகிலே கிடந்த முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கு ஏறின நாள் அறிவார் இல்லாததைப்போலே. பக். 22.

இராஜபுத்திரன் வழியிலே போகாநிற்கச்செய்தே வேடர் கையிலே அகப்பட்டுத் தன்னை வேடனுகவே எண்ணுமாறு போலே. பக். 22.

ஏகாந்த போகத்திற்காகப் போந்த பிராட்டி அசோக வனத்தில் இருந்தாற்போலே. பக். 23.

திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பொருள் போலே. பக். 25.

கரியமேகத்தை நடுவில் உடையதான மின்னற்கொடி போன்று. பக். 26.

மூட்பாய்ந்தவாறே 'அம்மே' என்பாரைப்போலே. பக். 28.

கலியர் சோறு கண்டாற்போலே. பக். 28.

இளையபெருமாளும், இடக்கை வலக்கை யறியாத குரங்கு களும் ஒக்க அடிமை செய்தாற்போலே. பக். 30.

பூவேளைக்காரரைப்போலே. பக். 33.

அப்போது தோன்றிய இளஞ்சந்திரனைப் போன்று. பக். 36.

மலர்ந்த தாமரைத் தடாகம்போலே. பக். 38.

எம்பெருமானரைப்போலே. பக். 39.

தாய்நிழலிலே ஒதுங்குவாரைப்போலே. பக். 39.

சாபத்தாலே பற்றப்பட்டவரைப்போலே. பக். 43.

மருபூமியில் தண்ணீர்போலே. பக். 45.

பயிர் தேயும்படி களைவளருமாறுபோலே. பக். 51.

நெற்செய்யப் புற்றேயுமாபோலே. பக். 51.

எம்பெருமானுடைய நிற்றல் நடத்தல் படுத்தல் முதலிய யவைகளை நாம் கொண்டாடுமாறுபோலே. பக். 52.

ஆளவந்தாருடைய நடையை அரசன் கொண்டாடினாற் போலே. பக். 52.

ஸ்ரீ வானரசேனையின் நடுவே சுக ஸாரணர்கள் புகுந்தாற் போலே. பக். 53.

செய்த பயிருக்குக் கடமை யிறுக்குமாறுபோன்று. பக்.60.

இராஜாக்கள் ஊர்தோறும் கூறுசெய்வார்களை வைக்கு மாறுபோன்று பக். 60.

தொடர்ந்து அடிமை செய்யும் இளையபெருமாளையும் கிடந்த இடத்தே கிடந்து குணநுபவம் செய்யும் ஸ்ரீ பரதாழ் வானையும்போலே. பக். 62.

நாட்டுக்கு இட்ட அஃகம் அந்தப்புரத்துக்கு இல்லையாவது போலே. பக். 65.

போர்சுட்டுப் பொறி கொறிக்கையைப்போலே. பக். 67.

ஒரு சாகசத்தைச்செய்து புறப்பட விடுவித்து முகத்திலே விழிப்பாரைப்போலே. பக். 69.

அலக்குப்போர் போலே. பக். 71.

சிறைக்கூடத்திலே பிறந்து அங்கே வளருமாறுபோலே. பக். 88.

கடலைத் தரைகாணுமாறு செய்வது போன்று. பக். 95.

கடலும் மலையும் குடியிருப்புமான இடமும் எல்லாம் பிர ளய காலத்தில் ஒரேவெள்ளமாய் இருக்குமாறுபோலே. பக்.98.

விஷம் பரந்தாற்போலே. பக். 98.

பாடி காப்பாரே களவு காணுமாறுபோலே. பக். 100.

சன்றோரே நஞ்சிட்டாற்போலே. பக். 101.

இராவணன் வரவிட்ட ஆள் என்று ஐயம் உற்று இருந்தவள், பெருமாள்பக்கல் நின்றும் வந்தவன் என்று அறிந்த பின்பு அவனைக் கொண்டாடினாற்போலே. பக். 105.

சிறியதைப் பெரியது நலியுமாறுபோலே. பக். 111.

என்னுடைய ஆத்மாவும் என் உடைமைகளும் நீ இட்ட வழக்கு என்பாரைப்போலே. பக். 116.

கிண்ணகத்தில் குமிழிக்கீழே சாவி போமாறுபோலே. பக். 129.

வட்டிக்குமேல் வட்டியேறிய கடன்போலே. பக். 138.

சடையினால் தூக்கிட்டுக் கொள்ளுதல் முதலியவைகளிலே ஒருப்பட்டவரைப்போன்று. பக். 150.

திருவடி செல்லுகிற கணத்திலே அரக்கியர் முழுவதும் உறங்கினாற்போலே. பக். 152.

கோரை சாய்ந்தாற்போன்று. பக். 152.

பிரளயம் கோத்தாற்போலே. பக். 152.

உதிக்கின்ற சூரியன் ஆனவன் உலகம் எல்லாவற்றினு முள்ள இருளைப் போக்குவதைப்போன்று. பக். 154.

கருப்பு உடுத்து வருவாரைப்போன்று. பக். 157.

சாத்தன் கூத்தன் என்பனபோன்று சில பெயர்களை யுடையவர்களாய் அவர்கள் தாங்கள் ஜீவிக்கப்புக்கவாறே சிறுபேர் தவிர்ந்து 'சோழக்கோனர்' 'தொண்டைமானர்' என்று பட்டப் பெயர்பெற்று வாழுமாறுபோன்று. பக். 160.

தாபத்தாலே வருந்தினவன் விடாய்ப்பட்டுப் பந்தல் ஏற வரக்கொண்டு தண்ணீர்ச்சால் உருண்டு கிடந்தால் பிழையாதாமாறுபோன்று. பக். 163.

ஒரு நீர்ச்சாவியிலே ஒருபாட்டம் மழைபெய்தாற்போலே. பக். 171.

ஆழ்வாருடைய திருநாமம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் சத்தைக்குக் காரணமாக இருப்பதுபோன்று. பக். 171.

'நான் பின்னிட்டு வருகிறேன், நீ முன்னே தப்பாமல் சூழ்ந்துகொள்' என்று வருவாரைப்போன்று. பக். 173.

எதிரிகள் எளியர் ஆனால் அவர்கள் கைகளில் விற்களைப் பறிப்பது பரிகசிப்பதாய்க்கொண்டு பரிபவம் செய்வார் போலே. பக். 173.

இருளைப்போக்கும்போது சந்திரசூரியர்கள் சேர உதித்தாற்போன்று. சிறை உறவுபோன்று. பக். 180.

தமிழர்க்கு அகத்தியரைப் போன்று. பக். 180.

சௌபரி இன்பத்தை அனுபவிப்பதற்குப் பல வடிவுகள் கொண்டாற்போன்று. பக். 183.

சீற்றமுடையாரைப்போலே. பக். 184.

இராவணன் இடம் பார்த்து வந்தாற்போன்று. பக். 184.

மோர்க்குழம்பு கொடுத்துத் தேற்றி விடுமகம் கட்டி கலி வாரைப்போன்று. பக். 184.

தாம் இருந்த நாளும் நமக்கு வேண்டும் ரக்ஷணங்களைச் செய்து தாம் சென்ற பின்னரும் தண்ணீர்ப் பந்தலை வைப்பாரைப்போன்று. பக். 185.

இராவணன் மாரீசனைத் துணையாகக்கொண்டு வந்து தோற்றிலைப்போலே. பக். 188.

இளையபெருமாள் அகலகின்றாற்போலே. பக். 189.

பிரளயத்தில் சிறிதுதூரம் எஞ்சியிருக்க, நீந்தி, கரையைக் 'கிட்டினேமோ, கிட்டினேமோ' என்று பார்ப்பாரைப்போலே. பக். 189.

சூரியனுடைய வரவுக்கு அருணோதயம்போலே. பக். 190.

புழுக்குறியிட்டது எழுத்தானாற்போன்று. பக். 193.

பெருக்காறு பெருகினாற்போலே. பக். 193.

விஷத்தோடு கூடின அமுதம்போல். பக். 201.

செங்கமல நாண்மலர்மேல் தேன்றுகரும் அன்னம்போல். பக். 205.

சம்சார யாத்திரையை முக்தன் மறக்குமாறுபோலே. பக். 206.

ஒருகலத்தில் ஜீவிப்பாரைப்போலே. பக். 207.

பரந்த மின் ஓரிடத்தில் சுழித்தாற் போலே. பக். 210.

கல்பகதரு பூணித்தாற்போலே. பக். 210, 348.

கங்கையின் அலைகளின் நடுவே வசிப்பாரைப்போலே. பக். 225.

ஸ்ரீராமபிரான் தன்னுடைய திருமேனியின் ஒளியாலே தண்டகாரண்யத்தை விளங்கச் செய்ததுபோல. பக். 228.

'எந்தச் சீதாபிராட்டி முன்பு ஆகாசத்தில் வசிக்கின்ற பூதங்களாலும் பார்ப்பதற்கு முடியாதவளோ' என்று சொல்லப்பட்ட பிராட்டியைப்போலே. பக். 230.

கிண்ணகத்தில் இழிவாரைப்போலே. பக். 234.

ஒவ்வொரு அர்த்தத்தைப்பற்றி உபன்யாசங்கள் செய்ய இருப்பாரைப்போலே. பக். 237.

கீதோபநிடத ஆசாரியனைப் போலே. பக். 237.

பருந்து இரைஞ்சினற்போன்று. பக். 243.

ஒருதாழிக்கு உட்பட்ட தயிரை ஒன்றும் பிரிகதிர்ப்படாத படி கடைவாரைப்போலே. பக். 252.

அணுக்களைக் கவிழ்த்துப் பிடித்தாற்போலே. பக். 254.

முன்பு பிரஹ்மசர்யம் அநுஷ்டித்துப் பின் இல்லறதர்மம் அநுஷ்டிப்பாரைப்போலே. பக். 254.

நாடகம் கட்டி ஆடுவாரைப்போலே. பக். 263.

விபீஷணனவன் தன்னுடைய தாழ்ச்சியை முன்னிட்டுக்கொண்டு பெருமாள் திருவடிகளிலே விழுந்தாற்போலே. பக். 269.

வேர்அற்ற மரம்போலே. பக். 269, 315.

சக்கரவர்த்தி, ஸ்ரீ வசுதேவரைப்போலே. பக். 271.

அணுக்கன் இட்டாற்போலே. பக். 276.

தட்டிபிலிருந்தவன் முடிசூடினற்போலே. பக். 276.

பால்குடிக்கும் குழந்தையை, பால்குடித்து வயிறு நிறையக் கண்டு உகக்கும் தாயைப்போலே. பக். 277.

முக்தர் இந்தச் சம்சாரத்திலே உலாவினற் போன்று. பக். 278.

கைம்முதல் அற்றவன் முன்பு ஈட்டிவைத்த செல்வத்தை வாங்கிப் பார்க்குமாறுபோலே. பக். 280.

விளக்குப் பிணம்போலே. பக். 289,

வலியில்லாதான் ஒருவன் தலையிலே ஒரு மலையை வைத்தாற் போலே. பக். 293.

திரவிய குணங்கள்போலே. பக். 300.

நாலுநாட்கள் மணற்கொட்டகமிட்டு விளையாடுமாறு போலே. பக். 301.

நாய்ச்சிமாருடைய கலவியைப் போன்று. பக். 302.

கலியர் சோறு இட்ட நாட்களை எண்ணுமாறுபோன்று. பக். 306.

தாய்முகமே பார்த்துக் கிடக்கும் குழைந்தையைப் போலே. பக். 307.

ராஜமகேந்திரன் படியை எடுத்து என்னது என்று கொண்டு பெருமாளுக்குக் கொடுப்பாரைப்போன்று. பக்.310.

தமப்பன் இல்லாத இழவு தீரச் சக்கரவர்த்திக்குப் பிள்ளையானைப் போன்று. பக். 313.

தேவசாதிகள் அமுதம்பெற்றுக் கிருதார்த்தராமாறு போலே. பக். 313.

கடலில் அமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப் பெற்றுத் தரிக்குமாறுபோலே. பக். 315.

அம்பு எய்வார் படை திரட்டிக்கொண்டு போமாறு போலே. பக். 317.

பால்குடிக்கும் குழந்தை தாய்பக்கலிலே கிட்ட முகம் பெருவிட்டால் அலமந்து நோவுபடுமாறு போலே. பக். 317.

ஆழங்காலில் இழிவார் ஒரு கொம்பை ஒரு கொடியைப் பிடித்துக்கொண்டு இழியுமாறுபோலே. பக். 319.

கிண்ணகத்தில் இழிவார் அறிந்தவர்களைக் கைப்பிடித்துக் கொண்டு இழியுமாறுபோலே. பக். 320.

'அழிக்கிறவன் ஆபரணங்கள் என்று பாராதே உருக்கி அழிக்குமாறுபோலே. பக். 322.

கருத்து அறிந்து அடிமை செய்வாரைப்போலே. பக். 324.

கர்மம் அடியாக இவன் பிறக்குமாறுபோலே. பக். 378.

நளன் தமயந்திக்கு வழிகாட்டினாற்போலே. பக். 335.

காலன் கொண்டு மோதிரம் இடுமாறுபோலே. பக். 336.

கடல் கடத்தப்பெற இருத்தல், சபித்துப்பெற இருத்தல் செய்யாத பிராட்டியைப்போலே. பக். 336.

ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு வந்து தோன்றினாற்போலே. பக். 341.

இத்தனை சோறுஇடுகிறோம் ஆடவல்லீரோ என்றால் கலியர் ஆடுமாறுபோலே. பக். 343.

கையிலே நிதி உண்டாயிருக்க வறியர்க்கு இடாதாரைப் போலே. பக். 344.

மூலைகொடுத்துச் சிக்கிப்பாரைப்போலே. பக். 349.

பெருங்காற்றில் பூளைபோலே. பக். 354.

பிரமன் முதலியோருடைய அழியாமைபோலே. பக். 354.

காமினிகளுக்குக் காமுகரைப்போலே. பக். 357.

விஷயத்தில் ஈடுபாடுடையவர்கள் அது பாராதே மேல் விழுமாறுபோலே. பக். 359.

ஏகதத்விதத்ரிதர்கள் சுவேதத் தீபத்தைச் சென்று கிட்டி, உள்ளுப்புகுகைக்குத் தகுதியில்லாமையாலே புறம்பே நின்று, அங்குள்ளார் எம்பெருமானைக் கண்டு படுகிற சம்பிரமத்தைச் செவியாலே கேட்டு நிற்பது, கண்ணாலே காணப் போகாதொழிவதாய்க் கொண்டு பட்டாற்போலே. பக். 363.

ஆகாயத்தைக் கண்செறி இட்டாற்போலே. பக். 368.

குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும் தலையார்ந்த இளங்கமுகு என்னுமாறுபோல. பக். 368.

மனத்தினை உள்முகமாக்கி அநுபவிக்கமாட்டாதார்க்கு, தன்னை அவர்கள் கண்களுக்கு இலக்கு ஆக்கிக்கொண்டு உபாயவஸ்து நிற்கிறாப்போலே. பக். 369.

சர்வேசுவரனுடைய உபாய பாவத்தில் நிலைபோலே. பக். 369.

நித்தியப்பிராப்பியனைக் கொண்டு அங்கே நிற்கிறவன், அடியார்கள் உகந்ததொரு பொருளைத் திருமேனியாகக் கொண்டு முகங்கொடுத்துக்கொண்டு நிற்பதுபோலே. பக். 369.

இராமாவதாரத்திலும் ஒரு இலக்குமணன் முதலியோர்கள், வானரங்களின் உருவத்தை அடைந்தார்கள், விபீஷணன் முதலியோர் பற்றிக் கிடந்தார்கள்; அதுபோன்று. பக். 370.

நாராயண சப்தத்திலும் பிரணவத்திலும் போலே. பக். 373.

பிண்டத்வ கடத்வ சூர்ணத்வங்களாகிற கிலே வேறுபாடு களே அடைந்தாலும் மண்ணுன வடிவுக்கு அழிவில்லாதது போன்று. பக். 374.

கலம்பகன் அல்லது சூடப்பொருத சுகுமாரரைப்போலே. பக். 377.

பூவில் பரிமளத்தைத் தேடுவாரைப் போலே. பக். 377.

செருக்கராயிருக்கும் ராஜபுத்திரர்கள் மூல சரிந்தாரைப் போகத்திற்குத் தகுதியுள்ளவரல்லர் என்று கழிக்குமாறு போன்று. பக். 377.

ஒரு படுக்கையிலே இருப்பாரைப் போலே. பக். 378.

மயிர்கழுவிப் பூச்சூட இருப்பாரைப் போலே. பக். 379.

பெரிய திருநாள் சேவித்தார் இரட்டைகள் அழுக்காறு லும் மடிகுலையாமல் வைக்குமாறு போன்று. பக். 380.

பெருமாள் விற்பிடித்தாற்போலே. பக். 381.

நாயகன் பேர்வைத்துப் புணர்த்த புணர்ப்பினைக் கேட் டாற்போலே. பக். 382.

அவதாரம்போலே தீர்த்தம் பிரசாதியாதே. பக். 385, 400.

எனக்கு அவனைக் காணவேண்டும் என்னும் ஆசை எப் பொழுதும் செல்லுகிறப்போலே. பக். 386.

செல்வப் பிள்ளைகளுக்கு அணுக்கன் இட்டாற்போலே. பக். 388.

இளையபெருமாள் கையும் வில்லுமாய் வெளிக்காவல்நிற்க, பெருமாளும் பிராட்டியுமாய்க் காட்டிலே இன்பம் அநுபவித் தாற்போலே. பக். 389.

இன்ன மலையின்கட்டி என்னுமாறுபோலே. பக். 393.

தேவர்களுடைய உப்புச்சாறுபோலே. பக். 393.

நான் பட்டதுபட, குழந்தை ஜீவிக்கப்பெறுவது காண் என்பாரைப்போலே. பக். 393.

அப்போது அலர்ந்த தாமரைபோலே. பக். 397.

மரப்பாவைகளைப்போன்று. எழுதின பாவைபோன்று. பக். 398.

ஆசாரிய உபதேசத்தை நம்பி விரும்புகிற நம்மைப் போலே. பக். 399.

இவளுக்குக் கைங்கர்யத்தில் உகப்புப்போலே. பக். 400.

வெள்வளை என்னுமாறுபோலே. பக். 401.

நாட்டில் இனியவற்றையெல்லாம் சேரக்கேட்டாற் போலே. பக். 402.

செருக்கருமாய்ச் சுகுமாரருமாயிருப்பார், 'மரம்' என்று சந்தனத்தைக் கழித்துப் புழுகு நெய்யை ஏறிட்டுக்கொண்டு திரியுமாறுபோலே. பக். 402.

அவனுடைய திருநாமங்கள்போலே. பக். 406.

அவனுக்குப் பலபிறப்பாய் ஒளிவருமாறுபோலே. பக். 406.

உம்மை நீங்கினால் சீதாபிராட்டி உயிர் வாழாதது போன்று. பக். 409.

திருவடி இராமாவதாரம் ஒன்றிலும் சக்தனாயிருக்குமாறு போன்று. பக். 409.

பகல்கண்ட குழியிலே இரவிலே விழுவாரைப்போன்று. பக். 416.

இங்குள்ளார் அடங்கலும் எதிரம்பு கோக்குமாறுபோலே. பக். 418.

யமன் வாயிலே விழுந்தாற்போலே. பக். 421.

இடியினாலே பிளக்கப்பட்ட மரம்போலே. பக். 422.

பருவம் நிரம்புவதற்கு முன்பு, தான் பிரதிகூலரை அஞ்சப் பண்ணுமாறுபோலே. பக். 427.

காரணநிலையில் சித்து அசித்துக்களைக்கொண்டு காரியங் கொண்டதைப் போன்றது. பக். 433.

ரக்ஷணத்திற்கு அவன் சமைந்தாற்போலே. பக். 438.

நெருப்பின் அருகில் இருக்கும் மெழுகுபோலே. பக். 438.

தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே கல்லைக் கட்டிக் கொண்டு முடிந்துபோவாரைப்போலே. பக். 441.

ஒருகடலோடே ஒருகடல் பொருமைகொண்டு கிடந்தாற் போலே. பக். 441.

அருச்சுனனுக்குச் சொன்னற்போலே. பக். 445.

கனவில் கண்ட காட்சிபோன்று. பக். 449.

விடாய்கொண்டவன் ஒருகால் நாக்கு நனைக்க அமையும் என்னுமாற்போலே. பக். 449.

மலைநெகிழ்ந்தாற்போன்று. பக். 451.

பொற்குப்பியில் மாணிக்கம்போலே. பக். 451.

ஸ்ரீ:

# பிழை திருத்தம்

—: o :—

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 15 | என்றேன்றே | என்றென்றே |
| 12 | 20 | யாசோதை | யசோதை |
| 34 | 6 | குட்டையனகியும் | குட்டையனுமாகியும் |
| 69 | 9 | அவனை | இவனை |
| 106 | 2 | அநுப்பப் | அனுப்பப் |
| 111 | 4 | சொல்ல | சொல்லி |
| 112 | 16 | திருளாய் | திருவாய் |
| 123 | 12 | விஷயம் ” | விஷயம் |
| 130 | 26 | நாமுறுகினறது | நாமுறுகின்றது |
| 134 | 18 | ஊர்ந்தும் | ஊர்தும் |
| 221 | 6 | “ இவர்கள் | “ ‘ இவர்கள் |
| 221 | 8 | நின்ரூர்கள் ’ | நின்ரூர்கள் ” |
| 276 | 18 | மூடி | முடி |
| 277 | 15 | உனை | உன்னை |
| 291 | 2 | செய்வதன் | செய்தவன் |
| 333 | 14 | மரீயது | மரீஇயது |
| 341 | 20 | தோன்ற | தோன்றப் |
| 343 | 18 | முற்று | முற்றுக் |
| 350 | 28 | வேண்டும். | வேண்டும் |
| 354 | 3 | தலைவா | தலைவர் தலைவா |
| 389 | 15 | கூட | கூடப் |
| 390 | 21 | கட்டியைப் | கட்டியை |
| 403 | 16 | இனி தாய் | இனிதாய் |
| ,, | ,, | செல்ல | சொல்ல |
| 405 | 13 | அநுபமாகிற | அநுபவமாகிற |